## என்நாடு

அன்னை பிறந்த நாடு – எங்கள்
அப்பன் பிறந்த நாடு
முன்னையோர் பல்கோடி – வாழ்ந்த
முத்தமிழ் சேர் தென்னாடு!
சான்றோர்களின் பாடு – தனை
சமைத் துயர்ந்த நாடு
ஆன்றோர்களின் அறிவால் – புகழ்
அணிமிகுந்த திந்நாடு!
முத்துக் கடல்சூழ் நாடு – வாழும்
முச்சங் கப்பொன் ஏடு
எத்தி சையும் மணக்கும் – அறிவு
இசைத்திடும் தேன் கூடு!
அருவி மலைகொள் நாடு – வற்றா
ஆறுகள் பாய் காடு!
கருவிருக்கும் வயல்கள் – விளைவு
கணக்கின்றித் தரும் பீடு!
தொழில் மலிந்த நாடு – உழைப்பு
தோள்களின் மேம் பாடு
விழிப்புணர்வி னோடு – எம்மை
வீர ராக்கும் நாடு!

– பாவேந்தர்

2, சிங்காரவேலர் தெரு
தியாகராயர் நகர்
சென்னை - 600 017

புலவர் குழந்தை படைப்புகள் - 16

# புலவர் குழந்தை படைப்புகள் - 16



## வள்ளுவர் தமிழ் இலக்கணம்

வளவன்

நூற்றாண்டு நினைவு வெளியீடு

# புலவர் குழந்தை படைப்புகள் - 16

- தொல்காப்பியர்காலத் தமிழர்
- இன்னூல்

அனைத்து நூல்களும் ஒருசேரத் தொகுத்து, பொருள் வழிப்பிரித்து, கால வரிசையில் ஒரே வீச்சில் வெளிவருகின்றன.

*ஆசிரியர்*

புலவர் **குழந்தை**

**தமிழ்மண் பதிப்பகம்**

## நூற் குறிப்பு

| | |
|---|---|
| நூற்பெயர் | : **புலவர் குழந்தை படைப்புகள் – 16** |
| ஆசிரியர் | : புலவர் குழந்தை |
| பதிப்பாளர் | : கோ. இளவழகன் |
| முதல் பதிப்பு | : 2008 |
| தாள் | : 16 கி வெள்ளைத் தாள் |
| அளவு | : 1/8 தெம்மி |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கம் | : 16+ 320 = 336 |
| நூல் கட்டமைப்பு | : இயல்பு (சாதாரணம்) |
| விலை | : உருபா. **315/-** |
| படிகள் | : 1000 |
| நூலாக்கம் | : பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை வடிவமைப்பு | : வ. மலர் |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்ஸ்<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |
| வெளியீடு | : **தமிழ்மண் பதிப்பகம்**<br>2, சிங்காரவேலர் தெரு,<br>தியாகராயர்நகர், சென்னை - 600 017.<br>தொ.பே. 2433 9030<br>மின்னஞ்சல் : elavazhagantm@gmail.com |

# பதிப்புரை

பகுத்தறிவுப் பகலவன் **தந்தை பெரியாரால்** அடையாளம் காட்டப்பட்டவர். திராவிட இயக்கச் சான்றோர்கள் வரிசையில் முன்னவர். 1906இல் தோன்றி 1973இல் மறைந்தார். 68 ஆண்டுகள் தமிழ் மண்ணில் வாழ்ந்தவர். பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா போன்ற பெருமக்களால் பாராட்டப்பட்டவர்.

தமிழர்கள் ஆரிய சூழ்ச்சியால் பட்ட அவலங்களை எண்ணி யெண்ணி நெஞ்சம் குமுறியவர். தம் நெஞ்சத்து உணர்வுகளை எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்திற்கு பதிவுகளாக எழுதி வைத்துச் சென்றவர். தமிழ் இன எழுச்சி வரலாற்றில் அளப்பரும் தொண்டாற்றியவர். இவர் எழுதிய நூல்கள் 29. இந்நூல்கள் அனைத்தையும் ஒரு சேரத் தொகுத்து, பொருள் வழிப் பிரித்து, கால வரிசைப்படுத்தி 1 முதல் 15 படைப்புகளாக ஒரே வீச்சில் வெளியிடு கின்றோம். பல்வேறு அணிகலன்கள் அடங்கிய முத்து மாலை யாகத் தந்துள்ளோம். இவர் நூல்கள் அனைத்தும் தமிழ்மொழி இன நாட்டின் மேன்மைக்கும், வாழ்வுக்கும், வளத்துக்கும் வித்திடுபவை.

குறிப்பாக **இராவண காவியம்** படைப்பு திராவிட இயக்க வரலாற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய நூல். ஆரிய எதிர்ப்பு உணர்வைக் கட்டியமைத்த இன எழுச்சிக் காவியம். தமிழ் மண்ணில் தன்மானக் கொள்கைகள் நிலைத்து நிற்பதற்கு செயற்கரிய செயல்களைத் தமிழ் இளைஞர்கள் செய்வதற்கு முன் வரவேண்டும் எனும் இன உணர்வோடு எழுதிய படைப்புகள் அனைத்தையும் ஒரே வீச்சில் வெளியிடுகின்றோம். இப்படைப்புகள் வெளிவரப் பல்லாற்றானும் துணை நின்ற தமிழ்ப்பெருமக்களுக்கும், இந்நூல்களுக்கு அறிமுகவுரை தந்துதவிய பெரும்புலவர் இரா. வடிவேலன் அவர்களுக்கும், எம் பதிப்பக ஊழியர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி. தமிழ் ஆய்வாளர்களுக்கும், தமிழ்

ஆர்வலர்களுக்கும் பயன் கொள்ளும் வகையில் பிழையற்ற பதிப்பக வெளிவருகின்றது. வாங்கிப் பயனடையுங்கள்.

(இராவண காவியம் நூலுக்கு மிகச்சிறந்த தெளிவுரை எழுதப்பட்டு வருவதால் இப்படைப்பு வரிசையில் சேர்க்க முடியவில்லை. விரைவில் வெளிவரும்.)

**கோ. இளவழகன்**

# ‘செந்தமிழ்க் குழந்தை’

**ப**ள்ளி சென்று படித்த காலம் 5 ஆண்டு எட்டு மாதம்தான்! ஆனால் திருக்குறளுக்கும், தொல்காப்பியத்துக்கும் உரை எழுதி, பேரிலக்கியம் ஒன்றைப் படைத்து, நாடகக் காப்பியம் உருவாக்கிப் பல இலக்கண நூல்களையும், வரலாற்று நூல்களையும் எழுதியவர் பெரும்புலவர் அ.மு. குழந்தை. ஈரோடு மாவட்டம் அறச்சலூரை அடுத்த ஓல வலசில் 1.7.1906 அன்று முத்துசாமிக் கவுண்டர், சின்னம்மையார் தம்பதியினருக்கு ஒரே மகனாகப் பிறந்தவர் குழந்தைசாமி; பின்பு தன்னைக் ‘குழந்தை’ என்றே குறிப்பிட்டுக் கொண்டார்.

ஈரோடு லண்டன் மிஷன் ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில் “எலிமெண்டரி கிரேடு”, “லோயர் கிரேடு”, ஹையர் கிரேடு” ஆசிரியர் பயிற்சி பெற்ற அவர் திருவையாறு சென்று தேர்வு எழுதி 1934இல் ‘வித்துவான்’ பட்டம் பெற்றார். மொத்தம் 39 ஆண்டுகள் ஆசிரியப் பணிபுரிந்தார். பவானி மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியில் மட்டும் தொடர்ந்து 21 ஆண்டுகள் பணி புரிந்தார்.

தொடக்க காலத்தில் கன்னியம்மன் சிந்து, வீரக்குமாரசாமி காவடிச்சிந்து, ரதோற்சவச் சிந்து போன்ற பக்திப் பாடல்களைப் பாடினாலும் 1925க்குப் பின் பெரியாரின் பெருந் தொண்டராகவே விளங்கினார்.

‘தமிழர் பண்பாட்டுக்குச் சான்றாக விளங்கும் நூல் திருக்குறள்; அது மனித வாழ்வின் சட்ட நூல்’ என்ற கொள்கையுடைய குழந்தை 1943, 1948 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற திருக்குறள் மாநாடுகளில் பெரும் பங்காற்றினார். தான் எழுதிய பள்ளிப்பாட நூல்களுக்கு ‘வள்ளுவர் வாசகம்’ வள்ளுவர் இலக்கணம்’ என்று பெயரிட்டார். வள்ளுவர் பதிப்பகம் வைத்துப் பல நூல்களை வெளியிட்டார். அவற்றுள் பெரியார் நூல்கள் நான்கு.

பள்ளிக்கு வெளியே வந்தவுடன் கருப்புச்சட்டை அணிந்து கடவுள் மறுப்பாளராக விளங்கினாலும் பள்ளிப் பாடங்களில் உள்ள பக்திப் பாடல்களை மிகவும் சுவைபட நடத்துவார். தான் இயற்றிய

'யாப்பதிகாரம்' 'தொடையதிகாரம்' போன்ற நூல்களில் திருஞான சம்பந்தர் தேவாரப் பாடல்கள் பலவற்றை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

அரசியல் அரங்கம், நெருஞ்சிப்பழம், காமஞ்சரி, உலகப் பெரியோன் கென்னடி, திருநணாச் சிலேடை வெண்பா, புலவர் குழந்தை பாடல்கள் போன்றவை கவிதை நூல்கள், 'காமஞ்சரி' பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மனோண்மனியத்திற்குப் பின் வந்த மிகச் சிறப்பான நாடகக் காப்பியம் ஆகும்.

தொல்காப்பியர் காலத் தமிழர், திருக்குறளும் பரிமேலழ கரும், பூவா முல்லை, கொங்கு நாட்டு வரலாறு, தமிழக வரலாறு, தமிழ் வாழ்க, தீரன் சின்னமலை, கொங்குக் குலமணி கள், கொங்கு நாடும் தமிழும், அருந்தமிழ் அமுது, சங்கத் தமிழ்ச் செல்வம், அண்ணல் காந்தி ஆகியவை உரைநடை நூல்கள்.

'தமிழ் வாழ்க' நாடகமாக நடிக்கப்பட்டது. தீரன் சின்னமலை பற்றி முதன்முதலில் நூல் எழுதி அவர் வரலாற்றை வெளிக் கொணர்ந்தவர் புலவர் குழந்தை.

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்குப் புதிய எளிய உரை எழுதினார். திருக்குறளுக்குப் புத்துரை எழுதியதுடன் தமிழில் வெளிவந்த அனைத்து நீதி நூல்களையும் தொகுத்து உரையுடன் "நீதிக் களஞ்சியம்" என்ற பெயரில் பெரு நூலாக வெளியிட்டார்.

தமிழ் அறிந்தவர்கள் அனைவரும் கவிஞராக 'யாப்பதி காரம்', 'தொடையதிகாரம்' என்ற யாப்பு நூல்களை எழுதினார். கும்மி, சிந்து ஆகியவற்றிற்கும் யாப்பிலக்கணம் வகுத்துள்ளார். இலக்கணம் கற்க நன்னூல் போல ஒரு நூல் இயற்றி 'இன்னூல்' என்று பெயரிட்டார். 'வேளாளர்' 'தமிழோசை' போன்ற இதழ்களையும் நடத்தினார்.

வகுப்பில் பாடம் நடத்தும்போது பாடல்களை அதற்குரிய ஓசை நயத்துடன் ஒலிப்பார். உரைநடைபோலத் தமிழாசிரியர்கள் பாடல்களைப் படிக்கக் கூடாது என்பது அவருடைய கருத்தாகும். தமிழைப் பிழையாகப் பேசினாலோ, எழுதினாலோ கண்டிப்பார்.

ஈரோட்டில் வாழ்ந்த மேனாட்டுத் தமிழறிஞர் 'பாப்லி'லியுடன் நெருங்கிப் பழகியவர். அவரைப் பற்றிப் 'பாப்புலி வெண்பா' என்ற நூலே எழுதியுள்ளார்.

அவர் படைப்பில் தலையாயது 'இராவண காவியம்' ஆகும். பெயரே அதன் பொருளை விளக்கும். 5 காண்டங்கள், 57 படலங்கள், 3100 பாடல்கள்.

*இந்நூல் 1946-ல் வெளிவந்தது. பின் அதற்குத் தடை விதிக்கப்பட்டது. தடை நீங்கி 1971-ல் இரண்டாம் பதிப்பும் 1994-ல் மூன்றாம் பதிப்பும் வெளிவந்தது. அண்மையில் நான்காம் பதிப்பை சாரதா பதிப்பகம் (சென்னை - 14) வெளியிட்டுள்ளது.*

*மிகச்சிறந்த நயமுடைய இராவண காவியத்தைக் கம்பனில் முழு ஈடுபாடு கொண்ட அறிஞர்களும் பாராட்டியுள்ளனர். 'கம்பன் கவிதையில் கட்டுண்டு கிடந்தேன். இராவண காவியம் அக்கட்டை அவிழ்த்து விட்டது' என்று ரா.பி.சேதுப்பிள்ளை கூறினார். கம்பர் அன்பர் ஐயன்பெருமாள் கோனார் 'இனியொரு கம்பன் வருவானோ? இப்படியும் கவிதை தருவானோ? ஆம், கம்பனே வந்தான்; கவிதையும் தந்தான்' என்று புலவர் குழந்தையைப் பாராட்டுவார்.*

*அறிவியல் தமிழ் அறிஞர் பெ.நா.அப்புசாமி போன்றோரின் துணையுடன் அரிய செய்திகள் சேகரித்துத் 'திராவிட காவியம்' பாட முயன்றபோது 24.9.1972 அன்று புலவர் குழந்தை மறைந்தார். பாரதிதாசன் 'செந்தமிழ்க் குழந்தை' என்று பாராட்டியது போலத் தமிழாக வாழ்ந்த அவருடைய நூற்றாண்டு நிறைவு நாள் 1.7.2006 ஆகும்.*

**புலவர், முனைவர்**
ஈரோடை இரா. வடிவேலன்
32. தியாகி குமரன் தெரு,
ஈரோடை - 638 004.

# மறைந்தும் வென்றார் புலவர் குழந்தை

பெரும் புலவர் குழந்தை அவர்களின் நூற்றாண்டு நிறைவு நாளன்று தேனினும் இனிய ஆற்றினை நம் காதில் பொழியச் செய்தது மாண்புமிகு கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு.

புலவர் குழந்தை அவர்களால் எழுதப்பட்ட **29** நூல் களையும் அரசுடைமையாக்கிப் பரிவுத் தொகையாக ரூபாய் **10** இலட்சத்தையும் அளித்துள்ளது.

பணம் என்பது ஒரு பொருட்டன்று; அதே நேரத்தில் பெரும் புலவரின் நூல்களை அரசுடைமை ஆக்கியதன் மூலம் அவருக்குச் சிறப்பானதோர் அங்கீகாரத்தை அளித்துள்ளது - அதுதான் குறிப்பிடத்தக்கது.

தந்தை பெரியாரின் கொள்கையால் ஈர்க்கப் பட்டவர்; தன்மான இயக்கத்தில் தன்னை ஒப்படைத்தவர் - திராவிடர் கழகத்தில் கருஞ்சட்டை வீரராக வீர உலா வந்தவர்.

அவர் இயற்றிய "இராவண காவியம்" - இனவரலாற்றில் - இயக்க வரலாற்றில் ஈடு இணையில்லாதது.

**4.9.1971** அன்று விழுப்புரத்தில் பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பில் புலவர் குழந்தை அவர்களுக்கு நடத்தப்பட்ட விழாவில் தந்தை பெரியார் பங்கு கொண்டு புலவர் குழந்தை அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பாராட்டுரையும் புகன்றார்.

அவ்விழாவில் பகுத்தறிவாளர் கழக மாநிலப் புரவலர் என்கிற முறையில் ஆசிரியர் மானமிகு கி.வீரமணி அவர்களும் பங்கேற்றுப் பாராட்டுரை புகன்றார்.

அவ்விழாவில் பங்கேற்றுப் புலவர் குழந்தை அவர்கள் 'இராவண காவியம் எழுதியது ஏன்?" என்பது குறித்துத் தம் கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

"இராமன் கடவுளல்ல என்கின்ற உணர்ச்சியினைத் தமிழக மக்களிடையே ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக இராவண காவியத்தை எழுதினேன். எனக்குத் துணிவினைத் தந்தவர் தந்தை பெரியாரவர்களே ஆவார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார் - (**'விடுதலை' 29.9.1971 பக்கம் 3**).

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆனாலும், புலவர் குழந்தை யானாலும் தொடக்கத்தில் பக்திப் பாட்டெழுதிக் கிடந்தவர்கள் தாம். தந்தை பெரியாரின் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட பின்பே பகுத்தறிவுக் கருவை கவிதையின் மையமாக வைத்துப் பாட்டெழு தினார்கள் என்பது அடிக்கோடிட்டுக் காட்டத் தகுந்ததாகும்.

விழுப்புரம் பாராட்டு விழாவில் தந்தை பெரியார் கூறினார்.

"புலவர் குழந்தையவர்கள் இராவண காவியம் எழுதி இருக்கின்றார், அது ஒரு இராமாயணம் போன்றதே! எத்தனையோ இராமாயணங்கள் இருக்கின்றன என்றாலும் நம் நாட்டிலிருப்பது பார்ப்பன இராமாயணமாகும். இந்த இராமாயணத்தின் தத்துவம் நம்மை இழிவுபடுத்துவதேயாகும். நம்மை அடக்கி ஒடுக்க என்ன செய்ய வேண்டுமோ, அதை வாய்த்தவரை செய்ய வேண்டியது; பார்ப்பான் தர்மத்தை நிலை நிறுத்த தன் மனைவியை விட்டுக் கொடுத்து, அதன் மூலம் அவனை ஒழிக்கலாம் என்பதை உணர்த்து வதற்காக எழுதப்பட்டதேயாகும்.

நமது புலவர்கள் மகா மோசமானவர்கள்; பார்ப்பான் எழுதியதைக் கண்டிக்காது, காது, மூக்கு வைத்துப் பெருமைப் படுகிறார்களே தவிர, அதனைக் கண்டித்து எழுதப் புலவர் குழந்தைபோல் எவரும் முன்வரவில்லை. முதன்முதல் நண்பர் பாரதிதாசன் அவர்கள்தான் துணிந்து பார்ப்பானைக் கண்டித்தார்.

புலவர் குழந்தை அவர்கள் பார்ப்பனர்களின் அயோக் கியத்தனங்களையெல்லாம் காவிய நடையில் எழுதியுள்ளார். அதுவும் இலக்கணப்படி எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்தை நீங்களெல்லாம் வாங்கிப் படித்துப் பயனடைய வேண்டும். பார்ப்பான் தன் இனத்திற்காக பிரச்சாரம் செய்கின்ற காலிகளை யெல்லாம் சாமியாக்குகின்றான். அதுபோல நமக்காகப் பாடுபடு கின்றவர்களை, தொண்டு செய்கிறவர்களை, எழுதுகிறவர்களைப்

பெருமைப் படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் துணிந்து முன்வருவார்கள்'' (விடுதலை 29.9.1971 பக்கம் 3) என்று தந்தை பெரியார் பாராட்டுதலுடன் ஆழமான கருத்தினை எடுத்துரைத்தார்கள்.

**சேலம் பேரணியில் முன்வரிசையில் புலவர் குழந்தை**

1971 (சனவரி 21) அன்று திராவிடர் கழகம் நடத்திய சேலம் மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணியில் கருப்புடை அணிந்து புலவர் குழந்தை அவர்கள் வீறுநடைபோட்ட காட்சி கண் கொள்ளாதது.

1938, 1948 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டங்களிலும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவரும் கூட!

எந்த இடத்திலும் தாம் ஏற்றுக் கொண்ட தன்மான இயக்க பகுத்தறிவுக் கருத்துக்களைக் கம்பீரமாகச் சொல்லத் தயங்காதவர்.

வெள்ளக்கோயில் தீத்தாம்பாளையத்தில் 1930இல், ''ஞானசூரியன்'' நூல் ஆசிரியரான சாமி சிவானந்த சரஸ்வதியுடன் 'கடவுள் இல்லை' என நான்கு நாள் நடத்திய சொற்போரில் புலவர் குழந்தை அவர்கள் வெற்றி பெற்றார் என்பதிலிருந்து, அவரின் விவாதத்திறன் பளிச்சிடுகிறது.

**இரா. பி. சேதுப்பிள்ளையின் பாராட்டு!**

கம்பன் கவிநயத்தை லயித்து, சப்புக் கொட்டிப் பேசும் சொல்லின் செல்வர் என்று போற்றப்பட்ட இரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்கூட புலவர் குழந்தையின் இராவண காவியத்தில் சொக்கிப் போயிருக்கிறார்.

**"தேனினும் இனிய செந்தமிழ்க் குழந்தை!"**

நான் கம்பராமாயணக் கவிச் சுவையில் கட்டுண்டு கிடந்தனன். தங்கள் இராவண காவியம் அக்கட்டை அவிழ்த்து விட்டது. கருத்து மாறுபாடு வேறு'' என்று குறிப்பிட்டதி லிருந்து புலவர் அவர்களின் புலமைத் திறன் குன்றின் மேல் ஒளிர்கிறது.

கம்ப இராமாயண அன்பரான புலவர் அய்யன் பெருமாள் கோனார் ஒருபடி மேலே தாவிப் பாடினார்.

**" இனியொரு கம்பனும் வருவானோ?**
**இப்படி யும்கவி தருவானோ?**
**கம்பனே வந்தான்;**
**அப்படிக் கவிதையும் தந்தான்**
**ஆனால்,**
**கருத்துதான் மாறுபட்டது"**

*என்று கவியால் ஒப்புதல் வாக்குமூலம் தந்தார்.*

*இத்தகைய தமிழ்ப் புலவர் பெருமகனாருக்குத்தான் தமிழக அரசு உரிய சிறப்பினைச் செய்திருக்கிறது.*

*கம்பனைப் போல் காட்டிக் கொடுத்து காவியம் புனைந்திருந்தால் இவருக்கு இமயப்புகழ் கிடைத்திருக்கும். என்றாலும் காலங் கடந்தாவது ஒரு அரசின் அங்கீகாரம் கிடைத்தது என்பது வரவேற்கத் தகுந்ததாகும்.*

*திராவிடர் கழகத்தைப் பொறுத்தவரையில், அதன் துணை அமைப்பான பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் மூலம், மறைக்கப்படும் தமிழினப் பெரு மக்களைத் (இலக்கியவாதிகளை) தம் தோளில் தூக்கிக் கொண்டாடத் தவறவில்லை.*

*தமிழ்நாட்டிலேயே இராவண காவியத் தொடர் சொற் பொழிவை அரங்கேற்றிய பெருமை அதற்குண்டு. சிலம்பொலி செல்லப்பனார் அவர்களைக் கொண்டு **29.9.1978**-ல் தொடங்கி **7.12.1979**வரை **21** சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. அதே போல் பேராசிரியர் அறிவரசன் அவர்கள் **29.9.1998** முதல் **13.11.1999**வரை **15** சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.*

*முனைவர் மறைமலை இலக்குவனார் **1.7.2004** முதல் **15.6.2006** வரை **23** தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.*

## இராவண காவிய மாநாடு

*இரண்டு இராவண காவிய மாநாடுகள் நடத்தப்பட்டன; முதல் மாநாடு **5.7.1986** அன்று காலை முதல் இரவுவரை சென்னைப் பெரியார் திடலில் நடத்தப்பட்டது. இரண்டாவது இராவண காவிய மாநாடு **1.7.1989** அன்று (புலவர் குழந்தை அவர்களின் **83**-ஆம் ஆண்டு பிறந்த நாள் அன்று) சென்னைப் பெரியார் திடலில் நடத்தப்பட்டது.*

இவையன்றி, தனித்தனிச் சிறப்புக் கூட்டங்களும் நடத்தப்பட்டதுண்டு. இத்திசையில் மொத்தம் 77 நிகழ்ச்சிகள் நடத்திய சாதனை பெரியார் நூலக வாசகர் வட்டத்துக்கு உண்டு.

**தீர்மானங்கள்**

28.6.2005 அன்று சென்னை பெரியார் திடலில் பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் சார்பில் புலவர் குழந்தை அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெற்றது. தமிழர் தலைவர் மானமிகு கி. வீரமணி அவர்கள் விழாவில் நிறைவுரையாற்றினார். அவ்விழாவில் முக்கிய பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முதல் தீர்மானம் தமிழக அரசு புலவர் குழந்தையின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டும் என்பதாகும்.

இரண்டாவது தீர்மானம் புலவர் குழந்தை அவர்களின் நூல்களை நாட்டுடமை ஆக்க வேண்டும் என்பதாகும்.

மூன்றாவது தீர்மானம் புலவர் குழந்தை அவர்களைப் போற்றும் வண்ணம் அவர்தம் அஞ்சல்தலை வெளியிட வேண்டும் என்பதாகும்.

இந்தத் தீர்மானங்களை இணைத்து, அவற்றைச் செயல் படுத்துமாறு வேண்டுகோள் விடுத்து அன்றைய தமிழக முதல் அமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கலி. பூங்குன்றன் கடிதம் ஒன்றை எழுதினார். (15.7.2005)

அந்தக் கடிதம் இன்னும் கோப்பில் குறட்டை விட்டுக் கொண்டுதானிருக்கிறது. காரணம் அந்த அரசுக்குத் தமிழ் உணர்வு இல்லாததுதான்.

மத்திய அரசு தொலை தொடர்பு மற்றும் தொழிற் நுட்பத் துறை அமைச்சர் மாண்புமிகு தயாநிதிமாறனுக்குப் பெரியார் நூலக வாசகர் வட்டத்தின் செயலாளர் கி. சத்தியநாராயணன் அவர்கள் கடிதம் ஒன்றை எழுதினார். புலவர் குழந்தை அவர்களை நினைவுகூரும் வகையில் அஞ்சல் தலை வெளியிட வேண்டும் என்று அதில் கேட்டுக் கொள்ளப்பட்டது. (12.8.2005).

தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்குப் பெரியார் நூலக வாசகர் வட்டச் செயலாளர்

24.8.2005 அன்று ஒரு கடிதம் எழுதினார். வாசகர் வட்டம் நிறைவேற்றிய தீர்மானங்களை இணைத்து அவற்றைச் செயலாக்கம் செய்ய அதில் வேண்டுகோள் விடப்பட்டு இருந்தது.

**கலைஞரின் சாதனை!**

இப்படி இடை விடாத தொடர் முயற்சிகளைக் கழகம் மேற்கொண்டதற்கு தி.மு.க. ஆட்சியில், மாண்புமிகு மானமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அய்ந்தாம் முறையாக முதல் அமைச்சர் ஆகியுள்ள நிலையில் வெற்றி கிடைத்திருக்கிறது.

இந்த அரும்செயலைச் செய்த முதல் அமைச்சரைப் பாராட்டி, தமிழக அரசைப் பாராட்டி, சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற புலவர் குழந்தை நூற்றாண்டு நிறைவு விழாவில் (29.6.2006) நன்றியைத் தெரிவித்துப் பாராட்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அஞ்சல்தலை வெளியிடுவது மட்டும் நிலுவையில் உள்ளது. அதனையும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றுவார் என்பதில் அய்யமில்லை. புலவர் குழந்தை அவர்கள் மறைந்தாலும் காலத்தை வென்று நம்மிடையே வாழ்கிறார்.

வாழ்க அப்பெருமகனார்!

***(நன்றி : விடுதலை***
***2.7.2006)***

# நூலாக்கத்திற்குத் துணை நின்றோர்

*நூல் கொடுத்து உதவியோர்*

*ஞானாலயா'* கிருட்டிணமூர்த்தி , பல்லடம் மாணிக்கம், சிலம்பொலி செல்லப்பன், அண்ணாஅறிவாலயம் நூலகம், செந்தமிழ் நூலகம், புலவர் தமிழகன், பிரேம் குமார், மா.கந்தசாமி

*நூல் உருவாக்கம்*

*நூல் வடிவமைப்பு*
செல்வி ச. அனுராதா

*மேலட்டை வடிவமைப்பு*
செல்வி வ.மலர்

*கணினிக்கோப்பு*
குட்வில். செல்வி, கீதா நல்லதம்பி,
சு. நித்தியானந், செல்வி சு. ரேகா

*மெய்ப்பு*
சுப. இராமநாதன், புலவர். இராசவேலு,
கி.குணத்தொகையன், அரு.அபிராமி,

---

*உதவி*
அரங்க. குமரேசன், வே. தனசேகரன்,
மு.ந.இராமசுப்பிரமணிய ராசா,
இல. தர்மராசு, ரெ. விஜயகுமார்,

---

*எதிர்மம் (Negative)*
பிராசசு இந்தியா (Process India)

*அச்சு மற்றும் கட்டமைப்பு*
ஸ்ரீ வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ்

---

இவர்களுக்கு எம் நன்றியும் பாராட்டும் . . .

# பொருளடக்கம்

## தொல்காப்பியர்காலத் தமிழர்


பதிப்புரை ........ iii
செந்தமிழ்க் குழந்தை ........ v
மறைந்தும் வென்றார் புலவர் குழந்தை ........ viii
முகவுரை ........ 3
1. தமிழர் ........ 7
2. தொல்காப்பியம் ........ 19
3. பொருளிலக்கணம் ........ 30
4. அகப்பொருட் சுருக்கம் ........ 37
5. அகத்திணை ........ 46
6. செய்யுள் வழக்கம் ........ 121
7. களவு ........ 123
8. கற்பு ........ 151
9. புறத்திணை ........ 180


## இன்னூல்


1. எழுத்தியல் ........ 221
2. பெயரியல் ........ 234
3. வினைஇயல் ........ 255
4 இடையியல் ........ 268
5. உரி இயல் ........ 272
6. பொதுஇயல் ........ 274
7. புணரியல் ........ 285
8. யாப்பியல் ........ 306
9. அணிஇயல் ........ 313

# தொல்காப்பியர்காலத் தமிழர்

# முகவுரை

உலகம் என்பது, நிலத்தையும் நீரையும் குறிப்பதோடு மட்டும் நில்லாமல், அவற்றின்கண் வாழும் உயிர்ப்பன்மையினையும் குறிக்கும் ஒரு குறிப்புமொழியாகும். ஓரறிவு முதல் ஐயறி வீறாகவுள்ள அவ்வுயிர் களினும் குறிப்பாக ஆறறிவுள்ள மக்களையே குறிக்கும் உலகம் என்னும் அச்சொல். 'உலகத்தோடொட்ட ஒழுகல்' (குறள்), 'உலகம் உவப்ப' (முருகாற்றுப் படை) என, உலகம் என்பது மக்களையே குறித்தலை அறிக, அம்மக்களினும் அறிவறிந்த உயர்மக்களையே குறிக்கும் அச்சொல் என்பது, 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' (திவாகரம்) என்பதால் விளங்குகின்றது.

மக்களல்லாத மற்றை உயிரினங்க ளெல்லாம் இயற்கையை யொட்டி என்றும் ஒரே தன்மையவாய் வாழும் இயல்புடையன வாகும். காலப்போக்கு, முன்னேற்ற முயற்சி, பழக்கவழக்க மாற்றம். சீர்திருத்த நோக்கம், உயர்நிலையெய்தும் உணர்ச்சி முதலியன வெல்லாம் அவ்வுயிரினங்களுக் கில்லை.

வாழ்க்கைச் சட்டதிட்டம், இனக்கட்டுப்பாடு, பழக்க வழக்கப் பண்பாடு, ஒழுக்க முறை என்பன வெல்லாம் நன்மை தீமைகளைப் பகுத்தறியும் பகுத்தறிவாகிய ஆறாவதறிவுள்ள மக்களினத்திற்கே உரிய தனியியல்பாகும். இத்தகைய இயல் புடைமையே மற்றை யுயிர்களினின்றும் மக்கள் ஒருபடி உயர்நிலையில் இருத்தற்குக் காரணமாகும்.

கருத்துப் பரிமாற்றத்திற்காக ஒரு மொழியை யுடைமையும், அம்மொழியைக் கற்றலும், கற்றறிவு பெறுதலும், அவ்வறிவைப் பலர்க்கும் பயன்படச் செய்தலும், முன்னோர் செய்த நூல்களைக் கற்றுத் தம் முன்னோர் வாழ்க்கை முறைகளை அறிந்தின் புறுதலும், அவ்வாறு நடத்தலும், கற்று மேம்பட்ட அப்பட்டறிவால் நாளுக்கு நாள் நாகரிக மேம்பாடுறுதலும் மக்களினத்திற்கே உரிய தனிச்சிறப் பியல்பாகும்.

மேலும், மற்றையுயிர்களைப் போன்று இயற்கை வாழ்வு வாழாமல், செயற்கை வாழ்வு வாழும் இயல்பு மக்களுக்கே உரிய ஒரு தனிச் சிறப்பியல்பாகும். இன்னோரன்ன தனிப் பட்ட இயல்புகளே மற்றையுயிரினும் மக்கள் தனிச்சிறப்புடையராதற்கு ஏதுவாகும்.

இத்தகு தனிச்சிறப்புடைய மக்கள் - வாழும் இடங்கட்கும், ஆங்காங் கமைந்துள்ள தட்பவெப்ப நிலைகட்கும் ஏற்ப வெவ்வேறு இனப்பாகுபாடுடையவர்களாய் அமையலாயினர். உடலமைப்பு, உருவவேறுபாடு. நிறம் குறி குணம் முதலாயின இனவேறுபாட்டின் அடிப்படையாகும். ஒவ்வோரின மக்கட்கும் பழக்க வழக்கம், இயல்பு, பண்பாடு, வாழ்க்கை முறை முதலியன தனித்தனியாக அமையப்பெற்றுள்ளன. இவ்வினவேறுபாட்டுப் பண்புகள் உயிர்க் குணமாகவே அமைந்துள்ளன எனலாம். தத்தம் இனவியல்பினைப் போற்றுதலில், போற்றிக் காத்தலில் ஒவ்வோரின மக்களும் உறுதியுள்ளங் கொண்டவராக இருந்து வருகின்றனர். அவ்வின வியல்பினை உயிரினும் மேம்பட மதித்துக் காத்தோம்பி வருகின்றனர் எனலாம். அத்தகைய இனப்பற்றே அவ்வின முன்னேற்றத்திற்குக் காரணமாகும்.

இத்தைகைய உலக மக்களினங்களுள் தமிழினமும் ஒன்றாகும். தமிழினம் தனிப்பட்ட பழக்க வழக்கமும், பண்பாடும்,. நாகரிகச் சிறப்பும் உடைய ஒரு தனியினம் ஆகும். உலக முதன் மக்களினமும் தமிழினமே என்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

உலகின்கண் உள்ள மற்ற இனமக்களின் நாகரிகச் சிறப்பு வரலாற்றுக் குட்பட்ட காலவரையறையுடைய தொன்றாகும். ஆனால், தமிழினத்தின் நாகரிகச் சிறப்போ வரலாற்றுக் கப்பாற்பட்டது; காலவரையறை யில்லாதது. ‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றி மூத்த இனம்’ ஆகும் தமிழினம்!

இத்தகு பழம்பெருமை வாய்ந்த தமிழர் நாகரிக நல்வாழ்க்கை முறையினைத் தொல்காப்பியம், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத் தொகை முதலிய பழந்தமிழ் நூல்கள் எடுத்தியம்புகின்றன. அப்பழந் தமிழ் நூல்களே தமிழனத்தின் பாதுகாப்பரணாகும்.

தமிழகத்தே தமிழாட்சி நடந்த அக்காலத்தே, தமிழ் மக்கள் அப்பழந்தமிழ் நூல்களைக் கற்று, தம் முன்னோர் வாழ்க்கை முறையினை யறிந்து இன்புற்றுத் தாமும் அத்தகு நல்வாழ்வு வாழ்ந்து வந்தனர். தம் மக்களின் நாகரிக நல்வாழ்வினைக் கண்டு, தமிழ்த்தாய் அகமும் புறமும் உவந்து தகவொடு அரசுவீற்றிருந்தனள்.

ஆனால், இடைக்காலத்தே ஏற்பட்ட அயலாட்சியினால், தமிழரல்லாத - தமிழறியாத - அயலாராட்சியினால், தமிழ் மக்கள் தம் தனித்தகு நிலையினை, தம் இனப் பெருமையை, தம் தாய் மொழிச் சிறப்பினை மறந்தனர்; தமிழராகிய தம் நாகரிக நல்வாழ்க்கை முறை இன்ன வென்பதனையே அறியாதவராயினர்; தம் முன்னோர் வாழ்க்கை முறை எத்தன்மைய வென்பதனை எண்ணிப் பார்க்கும் அத்தகு எண்ணமே இல்லாதவராயினர்.

தமிழ்ச் செல்வர்கள், தாயினும் சிறந்த தம் தாய்மொழியாம் தமிழ்மொழியைப் போற்றி வளர்ப்பது தம் கடமை என்பதை அறியாதவராயினர். தமிழறியா ராட்சியில் தமிழ் கற்றவர்க்கு மதிப்பில்லாது போனதால், தமிழ்ச் செல்வர்கள் தமிழ்ப் புலவர்களைப் போற்றித் தமிழ் வளர்த்தல் தம் கடமை என்பதை அறியாதவரானதால், தமிழை விரும்பிக் கற்போரும் அருகலாயினர். வழிவழியாகத் தமிழ் வளர்த்து வந்த தமிழ்ப் புலவர் மரபே தன் கால்வழியை யிழந்தது. தமிழ் மொழி கேட்பாரற்ற பொருளானது. தொல்காப்பியம் திருக்குறள், புறநானூறு முதலிய பழந்தமிழ் நூல்களெல்லாம் பயன்பாடற்ற பொருள்களாயின. பெரும்பாலான தமிழர்க்கு அப்பழந்தமிழ் நூல்களெல்லாம் அறியாப் பொருள்களாயின.

இஃதொரு காலம்! இனவுணர்ச்சியுள்ள ஒரு தமிழன் நினைக்கினும் நெஞ்சு நெக்குருகும் அத்தகு பொல்லாக்காலம் அது! தமிழினத்தின் இருட்காலமென்றே சொல்லலாம் அக்காலத்தை.

ஆனால், இன்று தமிழ்மக்கள் தம்மையறியத் தலைப்பட்டுள்ளனர்; தம் தாய்மொழியாம் தமிழ்மொழி யிடத்து அளவு கடந்த அன்பு செலுத்த முற்பட்டுள்ளனர்; தமிழ் மொழி தன்னேரிலாத தனிமொழி, உலக முதன்மொழி, உயர்தனிச் செம்மொழி, 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்' என்று பெருமையுடன் கூறிக் கொள்கின்றனர்; அத்தகு உணர்ச்சியால், 'தமிழ் வாழ்க!' என்று முழங்குகின்றனர்; தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்கின்றனர்; 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்வோம்' என முழக்கமிடுகின்றனர்.

தமிழினம் தனக்குவமை யில்லா ஒரு தனியினம், தமிழர் நாகரிகம் தன்னிகரற்ற தனி நாகரிகம், தமிழர் பண்பாடு தகவுடைத் தனிப்பெரும் பண்பாடு - எனத் தலை நிமிர்ந்து கூறிக் கொள்கின்றனர்.

இத்துடன் நின்றனரா! இல்லை; பழந்தமிழ் நூல்களே ஆர்வத் துடனும் அக்கறையுடனும் விரும்பிக் கற்கத் தலைப்பட்டுள்ளனர்; தம் முன்னோரான பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றினை, நாகரிகச் சிறப்பினை அறிந்து கொள்வதில் அவ்வளவு அக்கறை யுடையவர்களாய் முனைப்புடன் முயன்று வருகின்றனர்; தம்மைச் சங்க காலத் தமிழர்களென்றே எண்ணி இன்புறுகின்றனர்.

இத்தகு இனவுணர்ச்சியால், தமிழர் வாழ்க்கைச் சட்ட நூலாகிய, மக்கள் வாழ்க்கை முறையாம் முப்பாலாகிய அறம் பொருள் இன்பக் கூறுபாட்டினைத் திறம்பட வரையறுத்துக் கூறும் உலகப் பொது நூலாகிய திருக்குறள் இன்று தமிழ் மக்களின் உளங்குடி கொண்டு

விட்டது. எங்கும் எப்போதும் 'குறள் ! குறள்!'- என்பதே பேச்சாகி விட்டது! திருக்குறள் இன்று தமிழ் மக்கள் நாவில் நடம்பயில் கின்றது!

வான்புகழ் வள்ளுவன் வாய்மொழியாகிய திருக்குறள் - இலக்கியம். இதன் இலக்கணம், ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியம் ஆகும். எம்மொழியினும் இல்லாத பொருளதிகாரத்தைத் தன்னகத்தே கொண்ட தனிப் பெருஞ் சிறப்பினையுடையது தொல் காப்பியம்! மக்கள் வாழ்க்கை முறையினை - **'பொருள்'** எனக் கொண்ட பெருமை, தொல்காப்பியத்திற்கே உரிய தனிப் பெருமை யாகும்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் - மக்கள் வாழ்க்கை முறையை **'அகம், புறம்'** எனப் பகுத்துக் கூறுகின்றது. இவற்றையே **'அறம் பொருள் இன்பம்'** எனக் கொண்டு திருக்குறளைச் செய்துள்ளார் வள்ளுவர்! 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை' என்னும் தொல்காப்பியர் கூற்றே, வள்ளுவர் அறம் பொருள் இன்பம் எனக் கொண்டு குறள் செய்ததற்கு இலக்கணம் ஆகும்.

தமிழ்மொழி யறிவிற்குத் தமிழ் இலக்கியம் இலக்கணம் ஆகிய இரண்டும் ஏற்ற கருவிகளாகும். இலக்கியமாகிய திருக்குறளைத் தெற்றென அறிதற்கு அதன் இலக்கணமாகிய தொல்காப்பியப் பொருளதிகாரம் ஏற்ற கருவியாகும். தம் முன்னோர் வாழ்க்கை முறையினை அறிந்தின்புற முயலும் தமிழ் மக்கட்கு, **'தொல்காப்பியர் காலத் தமிழர்'** என்னும் இந்நூல், அன்னார் முயற்சியை வெற்றி பெறும்படி செய்து, அவர்தம் ஆவலை முற்றுப்பெறும்படி செய்யும் என்பது எமது நம்பிக்கை.

அன்புள்ள,

குழந்தை

# 1.தமிழர்

"மக்கள் தாமே ஆறறி வுயிரே"[1] என்பது தொல்காப்பியம். அவ்வாறாவ தறிவு பகுத்தறிவு எனப்படும். பொருள்களின் இயல்பினைப் பகுத்தறியப் பயன்படுவதால் அது அப்பெயர் பெற்றது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறி யறிவாகிய ஏனை ஐயறிவினும் வேறுபட்ட தனிச் சிறப்புடையது அவ் வாறாவ தறிவு. அவ் வாறாவ தறிவாகிய பகுத்தறிவே, ஓரறிவுயிராகிய புல் மரம் முதல், ஐயறி வுயிராகிய விலங்கீறாக வுள்ள மற்றை உயிர்களினின்று மக்களை ஒருபடி உயர்த்துவதாகும். மற்றை உயிர்களுக் கில்லாத, மக்கட்கு மட்டுமுள்ள இச்சிறப்பியல்பினை, நாலாயிரம் ஆண்டுகட்கு முன்னரே ***கண்டறிந்து*** கூறியவர் பழந்தமிழ் மகனாகிய தொல்காப்பியரே யாவர்.

உலகின்கண் வாழும் ஒவ்வோர் உயிரினமும் பலவகைப் படுதல் போலவே, மக்களும் - திராவிடர், ஆரியர், நீக்ரோவர், மங்கோலியர் என நான்கு வகைப்படுவர். திராவிடர் - தமிழர். இங்ஙனம் உலக மக்களை நான்கு வகையாகப் பகுத்துள்ளனர் மாந்தர்நூல் வல்லார். இவ்வினப் பிரிவு, நிறத்தையும் உடலமைப்பையும் அடிப்படையாகக் கொண்டு பிரித்த பிரிவாகும். உடலமைப்புக்கேற்ப அமையும் குணவேறுபாடுங் கொள்ளப்படும்

## 1.பழமை

இந்நால்வகை மக்களுள் 'திராவிட இனம்' எனப்படும் தமிழரே மிகப் பழமையானவர் என்பது ஆராய்ச்சி வல்லுநர்கள் கண்டறிந்த உண்மையாகும்.

தமிழர்க்குத் திராவிடர் என்பது பிற்காலத்தினர் இட்டு வழங்கிய பெயரேயாகும். தமிழர் பழம்பெயர் தமிழரே என்பது,

**"தமிழென் கிளவியும் அதனோ ரற்றே"** **(புள்ளி மயங் -90)**

**"செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணி"** **(எச்சவியல் -2)**

என்னும் தொல்காப்பியர் கூற்றால் விளங்கும்

*1. மரபியல் -32*

'ஞாயிறு என்பது ஒரு தீப்பிழம்பு. அது தன்னைத் தானே சுற்று கிறது. உலகம் என்பது ஞாயிற்றிலிருந்து சிதறிய ஒரு தீப்பொறியேயாகும். அப்பொறியின்கண் முதன் முதல் ஆறிய இடம் கடல்கொண்ட தென்பகுதியாகிய குமரிக் கண்டமேயாகும். அப் பகுதியிற்றான் முதன்முதல் உயிர்கள் தோன்றின. எனவே, உலக முதன் மக்கள் தோன்றிய இடம் அத் தென்பகுதியே யாகும். பின்னர் அம்மக்கள் உலகின் பல பாகங்களிலும் பரவினர்.

**"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்"** (குறள் -452)

என, நிலத்தின் இயல்புக்கேற்றவாறு நீரின் இயல்பு - தன்மை - திரிவதுபோல, அதாவது, உப்பு மண்ணின்கட் டங்கிய நீர் உப்புத் தன்மையாதல் போல, நன்னீர் பாயும் நிலத்தில் விளைந்த சோளத் தட்டு. கேழ்வரகுத்தாள் முதலியவை மிக்க இனிப்பாயிருக்க. உவர் நீர் பாயும் நிலத்தில் விளைந்த அவை இனிப்பின்றி யிருத்தல் போல, வெயிலில் வளரும் செடி பசேலென்று செழிப்பாயிருக்க. நிழலில் வளரும் செடி வெளிறிச் செழிப்பின்றி யிருப்பதுபோல, காங்கய நாட்டு மாட்டினைச் சோழநாட்டு மருத நிலத்தில் கொண்டுபோய் வளர்த்தால். அழகும் உருவமுந் திரிந்து அவ்வினமே மாறி விடுவது போல, அவ்வவ் விடங்கட்கும் ஆங்காங்குள்ள தட்ப வெப்ப நிலைக்கும் ஏற்றவாறு ஆரியர் முதலிய இன வேறுபாடு உண்டாயிற்று' என்பது ஞாலநூல், நிலநூல், உயிர்நூல், மாந்தர்நூல் வல்லுநர்கள் ஒருங்கொப்பக் கண்டறிந்த ஆராய்ச்சி முடிவாகும்.

'கடல்கொண்ட அத் தென்னிலம் தென்வடல் 1500 கல்லுக்கு மேற் பரப்புடையது. அப்பெரு நிலப் பரப்பை - குமரிமலை, பன்மலைத்தொடர் முதலிய வளமலிந்த பல மலைகளும். குமரியாறு, பஃறுளியாறு முதலிய வற்றாத பல ஆறுகளும் வளஞ்செய்தன. அதை ***லெமூரியா*** என்றனர் மேனாட்டறிஞர்கள். தமிழில் அது ***குமரிக்கண்டம்*** எனப் பெயர் பெறும். அக் குமரிக்கண்டத்தின் நினைவாக உள்ளதே ***கன்னியாகுமரி*** என்பது.

கடல் கொண்ட அத் தென்னிலத்தின்கண் வாழ்ந்த மக்கள் தமிழ் மக்களே. உலக முதன் மக்கள் தமிழரே. அத் தென்னிலமே பழந்தமிழ்ப் பாண்டி நாடு. அந்நாட்டை வளஞ்செய்த பஃறுளி யாற்றங் கரையிலிருந்த மதுரையே அந்நாட்டின் தலைநகர். அம் மதுரையிற்றான் தலைச்சங்கம் இருந்தது' என்பது ஆராய்ச்சி யுண்மை. அக் குமரிக்கண்டம் நாற்பத் தொன்பது நாடுகளாகப் பாகுபட்டிருந்தது என்பர் அடியார்க்கு நல்லார்.(சிலப்பதிகாரம்.8:1)

**"பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்**
**குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள"** (சிலப்.11:19-20)

என்பது, அத் தென்புலத்தைக் கடல்கொண்ட செய்தி கூறுவது.

**"எங்கோ வாழிய குடுமி, தங்கோ**
**முந்நீர் விழவின் நெடியோன்**
**நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே."** (புறநானூறு-9)

என்பது, கடல்கொள்ளாமுன் அத்தென்னாட்டை யாண்ட முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்டியனை, நெட்டிமையார் என்னும் புலவர் பாடிய பாட்டு.

கடல் கொண்ட அத்தென்னில நாகரிகம் கி.மு. 20000 ஆண்டுகட்கு முற்பட்டதென்ப.[2] அத்தகு பழமையுடையது தமிழர் நாகரிகம்! "கற்றோன்றி மட்டோன்றாக் காலத்தின் முற்றோன்றி மூத்தகுடி" என்னும் கல்லாடர் கூற்று இதற்குச் சான்று பகரும்.

ஒருகால் தமிழர் வடக்கில் பனிமலை காறும் பரவி வாழ்ந்து வந்தனர் என்பது சிந்து வெளி ஆராய்ச்சியால் தெரிகிறது. சிந்து வெளி நாகரிக காலம் கி.மு.3500க்கு முற்பட்டதென்ப. சிந்து வெளியிலுள்ள ஹரப்பா, மோகஞ்சதரோ என்னும் புதை நகரங்களின் ஆராய்ச்சியால், தமிழர் நாகரிகத்தின் பழமையும் பெருமையும் பரப்பும் இனிது விளங்கும்.

தென் கடலில் ஆயிரத் தைந்நூறு கல் தெற்கிலிருந்து, வடக்கில் பனிமலைகாறும் பரவியிருந்த தமிழகத்தோடு, 1-11-1956இன் பின்னர மைந்த இன்றையத் தமிழ் நாட்டினை ஒப்பு நோக்கும் ஒரு தமிழன் உளநிலைக்கு எதனை உவமை கூறுவது! என்னே காலத்தின் போக்கு!

## 2. நாகரிகம்

உயரிய நல்வாழ்க்கையே நாகரிகம் எனப்படும். நல்வாழ்க்கைக்கு வேண்டிய யாவும் ஒருங்கமைய, மக்கட்குரிய நற்பண் பாட்டுடன் வாழ்வதே நாகரிக வாழ்வு ஆகும். அத்தகு நாகரிக நல்வாழ்வுக் கடிப்படை மனமுயற்சியும், மெய்ம்முயற்சியுமே யாகும். இவ் விருவகை முயற்சியின் பயனே தொழிற்றிறம். அத் தொழிற்றிறத்தின் பயனே நாகரிக நல்வாழ்வு எனலாம்.

**"வினையே செய்வது செயப்படு பொருளே**
**நிலனே காலம் கருவி யென்றா"** (வேற்றுமைமயங்கியல் -29)

என, ஒரு தொழிலைச் செய்வோன், அவனால் செய்யப்படும் தொழில், அத்தொழிலாற் பெறப்படும் பொருள், அத்தொழில் செய்யும் இடம், காலம், கருவி எனத் தொழிற்றிறத்தின் இலக்கணம் கூறுவதால், அக்காலத் தமிழ் மக்களின் தொழிற்றிறமும் நாகரிக நல்வாழ்வும் இனிது விளங்கும்.

2. குமரிக்கண்டம் - பக்.36. கா. அ.

*அத்தொழிற்றிறம் - உழவு, கைத்தொழில், வாணிகம் என மூவகைப்படும். அவற்றை முத்தொழில் என இனப் படுத்திக் கூறலாம். பழந்தமிழ் மக்கள் இம் முத்தொழிலினும் முதன்மையுற்று விளங்கினர் என்பது அறிந்து இன்புறற் பாலதாகும். தமிழ் மக்களின் பழந்தமிழ்ச் சரக்கறையாகிய தொல்காப்பியத்தில் இம் முத்தொழில் பற்றிய குறிப்புக்கள் நிரம்பவுள்ளன.*

**"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல**
**தில்லென மொழிப"** **(மரபியல் -8)**

**"எண்வகை உணவின் செய்தி"** **(மரபு -78)**

**"ஏரோர் களவழி"** **(புறத்திணையல் - 21)**

*என, உழவுத் தொழில் பற்றிய குறிப்புக்கள் பல வருகின்றன. உழவுத் தொழிலில் சிறந்தது தமிழ்நாடு. உழவுத்தொழிலைக் கண்டறிந்தவர் தமிழர் என்றுகூடப் பெருமையுடன் கூறிக் கொள்ளலாம்.*

**"எருவும் செருவும் அம்மொடு சிவணித்**
**திரிபிட னுடைய தெரியுங் காலை"** **(உயிர்மயங்கியல் -58)**

*என, 'எரு' என்னும் சொற்கு இலக்கணம் கூறுவதால்,*

**"ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**
**நீரினும் நன்றதன் காப்பு"** **(குறள்)**

*என, உழுதல், எருவிடுதல், களைகட்டல், நீர்பாய்ச்சல், காத்தல் என்னும் பயிர்த்தொழில் முறைகளைத் தொல்காப்பியர்காலத் தமிழர் நன்கு அறிந்திருந்தனர் என்பது தெரிகிறது.*

*உழவுத் தொழில் இடையறாது இனிது நடைபெற நீர் வளம் இன்றியமையாதது.*

**"யாறும் குளமும் காவும் ஆடி"** **(கற்பியல் -50)**

*என்பதால், அக்காலத் தமிழர் மழைநீர் தேங்கி நிற்கக் குளங்கள் வெட்டி யிருந்தமை பெறப்படும்.*

*பருவகாலத்தே மழை பெய்யாவிட்டால், ஏரி குளம் முதலிய நீர் நிலைகள் நீர் வற்றிவிடும். அப்போது உழவுத் தொழில் தடைப்படும். அங்ஙனம் தடை நேராவண்ணம் எப்போதும் உழவுத் தொழீல் இடையறாது இனிது நடைபெறும் வழியைப் பழந்தமிழ் மக்கள் கண்டறிந்தனர். அதாவது, மழை நீர் பள்ளமான இடத்தில் நிறைந்து நிற்கிறது... பின்னர் அந்நீர் நிலத்திற்குட் சென்று விடுகிறது. அதாவது, வற்றி விடுகிறது. எனவே, நிலத்தினுள் ஆழத்தில் நீர் இருக்கும். ஆற்று மணலைத் தோண்டினால் நீர் ஊறுகிறது.*

**“தொட்டனைத் தூறும் மணற்கேணி”** (குறள்.396)

*என்பதால், வள்ளுவர் காலத்திற்கு முன்னரே கேணி - கிணறு தோண்டுந் தொழிலைத் தமிழர் அறிந்திருந்தனர் என்பது தெரிகிறது.*

**“வருவிசைப் புனலைக் கற்சிறை போல”** (புறத் -8)

*என்பதால், ஆற்றின் குறுக்கே அணைகட்டி நீரைத் தேக்கிக் கால்வாய் வழியாய் நிலத்திற்கு நீர்பாய்ச்சி வந்தனர் என்பது தெரிகிறது; சிறை - அணை. கல்சிறை - கல்லணை. ஆற்றின் குறுக்கே அணைகட்டும் அத் தொழிலிலும் தமிழர் அக்காலத்தே தேர்ச்சி பெற்றிருந்தமை அறிந்தின்புறற் பாலது.*

*முல்லை முதலிய நால்வகை நிலங்களுள் (அகத் -5) மருதம் என்பது நெல்விளையும் நன்செய் நிலமாகும். நெல்லுணவு இன்றும் நல்லுணவாக மதிக்கப்படுகிறது. அத்தகு பழங்காலத்தே நெல்லுண வாகிய (புள்ளிம -25) நல்லுணவுண்டு நனிநாகரிகத்துடன் வாழ்ந்து வந்தனர் தம் முன்னையோர் என்பது தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டுஞ் செய்தி யாகுமன்றோ?*

*உணவை அடுத்தது உடை. உடை நாகரிகத்தின் முதற்படியாகும். ‘ஆடையில்லாதவன் அரைமகன்’ அல்லவா? நெய்தற்றொழில் தமிழரின் பழந்தொழில்களில் ஒன்றாகும். பாலாவியன்ன பஞ்சாடையும், பாம்புரி யன்ன பட்டாடையும் நெய்யும் பயிற்சி யுடையவர் பழந்தமிழர். அன்று தமிழ் நாட்டினின்று வெளிநாடுகட்கு ஏற்று மதியான பொருள்களில் ஆடையே முதன்மையானதாகும்.*

**“உடைபெயர்த் துடுத்தல்”** (மெய்ப்பாட்டியல் -14)

**“கொடியும் குடையும்”** (மரபு -71)

**“துணையணை புல்லிய”** (கற்பு -5)

*என்பன, நெய்தற் றொழிலும் தையற் றொழிலுமாகும். கொடியும் குடையும் துணியாலானவை. அணை - தலையணை, பஞ்சணை.*

*ஆடைக்கு அடுத்தது அணி. அணி என்பது பலபொருளொரு சொல். அது அழகுக்காக அணியப்படும் அனைத்தையும் குறிக்கும்.*

*பொன்னாலும் மணியாலும் வகை வகையான அணிகலன்கள் செய்து அணிந்து தம்மை அழகுபடுத்திக் கொண்டனர் பழந்தமிழ் மக்கள். நகை நாகரிகத்தின் அறிகுறியன்றோ?*

**“பொன்னென் கிளவி”** (புள்ளிம -61)

**“நேரின மணியை நிரல்பட வைத்தாங்கு”** (செய்யுளியல் -170)

**"ஊழணி தைவரல்"** (மெய் -14)

**"வண்டே இழையே"** (களவு -14)

**"ஓடாக் கழல்நிலை"** (புறத் -5)

*அணியும் இழையும் அணிகலப் பெயர். இவை பொன்னாலும் மணியாலும் செய்யப்பட்டவை.*

*இனி, மணிப்பொன் கலன்கள் போல். மங்கையர் விரும்பி யணிவது மலர்மாலை. மகளிரே யன்றிப் பண்டு ஆடவரும் மலர்மாலை யணிந்து வந்தனர். வகைவகையாக மலர் தொடுப்பதில் இருபாலாரும் இணையின்றி விளங்கினர்.*

**"கண்ணியும் தாரும்"** (மரபு -79)

**"தாரும் ஆரமும்"** (மரபு -83)

**"மாலை ஏந்திய பெண்டிர்"** (கற்பு -5)

*என்பன மலர் மாலையின் பலவகை.*

*வெட்சி முதலிய புறத்திணைகட்கு அவ்வத் திணைப்பூச் சூடுதலும்,*

**"போந்தை வேம்பே ஆரென வரூஉம்**
**மாபெருந் தானையர் மலைந்த பூவும்"** (புறத் -5)

*என, மறவர்கள் மூவேந்தர் பூக்களைச் சூடிப் பொருதலும் அன்று வழக்கம். போந்தை - பனை. ஆர் - ஆர்த்தி.*

*இனி, பொற்கலனும் பூந்தொடையும் போல் மேனிப் பூச்சும் நாகரிகத்தின்பாற் பட்டதேயாகும்.*

*வள்ளி - தொய்யில் (களவு -4). அதாவது, குங்குமச் சந்தனக் குழம்பால் தோளினும் மார்பினும் எழுதுங் கோலம்.*

*அணிநிலை - அழகுபடுத்தும்வகை (கற்பு -27). அதாவது, தொய்யில் எழுதுதல், கண்ணுக்கு மை யெழுதுதல். இதழுக்கும் நகங்கட்கும் செம்பஞ்சுக் குழம்பு பூசுதல் முதலியன.*

*நாற்றம் - நறுமணம் (களவு-23). அதாவது, முகத்துக்குப் பூசும் பொற்சுண்ணம் (பவுடர்), குங்கும சந்தனக் கலவை உடலுக்குத் தேய்த்துக் குளிக்கும் நறும்பொடி, குழலுக்கு தடவும் நறுநெய், கூந்தலுக் கூட்டும் அகிற்புகை, ஆடைக்குப்போடும் மட்டிப்பால் முதலியன.*

*இனையன பலவகையில் தம்மை அழகுபடுத்திக் கொண்டனர் பழந்தமிழ்ப் பாவையர்.*

**"கொல்லும் செல்லும்"** (புள்ளி -70)

**"ஈமும் கம்மும்"** (புள்ளி -38)

**"கணையும் வேலும்"** (புள்ளி -16)

**"வாள் மங்கலம்"** (புறத் -36)

எனக் கொற்றொழிலும்,

**"மடையமை ஏணி"** (புறத்-13)

**"கட்டில் நீத்த பால்"** (புறத் -21)

**"ஏரோர். தேரோர்"** (புறத் -21)

எனத் தச்சுத் தொழிலும் கூறப்படுகின்றன. கம்-கொற்றொழில். இவ்விரு தொழிலும் ஏனைத் தொழில்களுக்கெல்லாம் அடிப் படையான தொழில்கள். மற்ற தொழில்கள் செய்தற்கும் கருவிகள் செய்யும் தொழில்கள் இவை. இத்தொழில்கள் செய்யத் தெரியாத காலத்திற்றான் மக்கள் கல்லைப் படைக்கலமாகவும், பிற கருவி களாகவும் கொண்டிருந்தனர். அது ***கற்காலம்*** எனப்படுகிறது. ஆனால், அக்காலத்தே தமிழ் மக்கள் கொல்லும் தச்சும் நல்ல முறையில் செய்து நல்வாழ்வு வாழ்ந்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

செம்பு, பித்தனை, வெண்கலம் முதலியவற்றால் செய்த ஏனங்களைப் பயன்படுத்துதல் நன்னாகரிக வாழ்வாகும்.

**"கன்னென் கிளவி"** (புள்ளி -51)

**"நூலே கரகம்"** (மரபு -70)

என்பவற்றால், அக்காலத் தமிழ்மக்கள் அத்தொழிலில் மேம்பட் டிருந்தமை தெரிகிறது. கன் - கன்னார் தொழில் - பாத்திரங்கள் செல்தல். கரகம் - நீர்ச்செம்பு.

கலம், சாடி, பானை, மண்டை, அகல் (தொகை மரபு - 28) என்பன மட்கல வகைகள். மட்கலத் தொழிலில் தமிழர் ஒப்பில்லாதவர். தமிழகத்தில் செய்யப்பட்ட மட்கலங்கள் பண்டு வெளிநாடுகட்கு ஏற்றுமதியாயின என்பது வரலாறு. சிந்துவெளிப் புதைநகரங்களிற் கிடைத்த பொருள்களில் வேலைப்பாடமைந்த அழகிய மட்கலங்களே மிகுதியானவை என்பது குறிப்பிடத் தக்கது.

**"ஆடி நிழலில் அறியத் தோன்றி"** (செய்யு -169)

எனக் கண்ணாடி செய்யுந் தொழிலும், (ஆடி - கண்ணாடி)

**"நெய்யணி மயக்கம்"** (கற்பு -5)

**"காமர் நெய்யணி"** (கற்பு -6)

என, எள்ளிலிருந்து நெய் - எண்ணெய் - எடுக்கும் வகையும் அன்னார் அறிந்திருந்தமை புலனாகிறது.

உணவு, உடை, உறையுள் இம்மூன்றும் நன்கு அமைவதே நாகரிக நல்வாழ்வாகும். மூன்றாவதாகிய உறையுட் சிறப்புக்கு - கட்டிடத் தொழிற்றிறத்திற்கு - "உயர்வகலந் திண்மை பெருமை" (குறள் -743) என்னும் நல்லிலக் கணத்தோடு பொருந்திய புறமதில், இடைமதில், அகமதில் என்னும் மும்மதில் சூழ்ந்த பழந்தமிழ்க் கோட்டை யொன்றே சாலும். இது "முழுமுதல் அரணம்" ***(புறத் -10)*** எனப்படும்.

**"தொல் லெயில்"** (புறத் -12)

**"மதில் குடுமி"** (புறத் -13)

**"இல்லகம், மனையகம்"** (களவு - 40)

என்பன கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டுக்களாகும். (எயில் - மதில்)

இன்னும் நாகரிக நல்வாழ்வுக்கு வேண்டிய எல்லாத் தொழிற் றிறமும் உடையராய் இனிது வாழ்ந்து வந்தனர் அப் பழந்தமிழ் மக்கள். அன்னார் செய்துவந்த எத்தனையோ தொழில்கள் இன்று தமிழ் மக்களிடை அருகிவிட்டன. எடுத்துக் காட்டாக:

பனம்பழத்தின் ஊனை வழித்தெடுத்து, அதைப் பனை யோலையில் இட்டு உலரவைத்தால், அது சிறந்த சிற்றுண்டியாகும். ***பனாட்டு*** எனப்படும். இது இலங்கையில் இன்றும் மிகுதியாகச் செய்யப்படுகிறது. இத் தொழிலைத் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழ் மக்கள் தெரிந்திருந்தனர்; செய்து வந்தனர் என்பது அறிந்து இன்புறற் பாலதாகும்.

**"பனையின் முன்னர் அட்டுவரு காலை**
**நிலையின் றாகும் ஐயென் உயிரே**
**ஆகாரம் வருதல் ஆவயினான"** (உயிர்-82)

பனை என்னும் சொல்லினோடு அட்டு என்னும் சொல்வரின், பனை + அட்டு - பன் + அட்டு - பன் + ஆட்டு - பனாட்டு எனப் புணரும் என்பதாம். இதனால், இலங்கை பழந் தமிழகத்தைச் சேர்ந்த தென்பது பெறப்படும்.

இனி, உழவு முதலிய தொழில்களால் உண்டாக்கப்படும் பொருள்களைக் கொண்டு கொடுத்து, நாட்டு மக்கள் எல்லார்க்கும் எப்போதும் எல்லாப் பொருளும் கிடைக்கும் படி செய்வது

வாணிகமாகும். வாணிகச் சிறப்பே ஒருநாட்டின் செல்வச் சிறப்புக்குக் காரணமாகும். அவ்வாணிகம் - உள்நாட்டு வாணிகம். கடல்கடந்து செய்யும் வெளிநாட்டு வாணிகம் என இருவகைப்படும். இவ்விருவகை வாணிகத்திலும் சிறந்திருந்தது பழந்தமிழ்நாடு. நாற்பாலில் வணிகர் ஒருவராக உள்ளதே இதற்குச் சான்றாகும்.

**“வாணிகன் பெறுமே வாணிக வாழ்க்கை”** (மரபு -77)

**“முந்நீர் வழக்கம் மகடூஉவோ டில்லை”** (அகத் -34)

முந்நீர் - கடல், முந்நீர் வழக்கம் - கடல் கடந்து வெளிநாடு செல்லுதல்.

## 3. மொழி

ஒரு மொழியின் சிறப்பு அம்மொழி பேசும் மக்களின் சிறப்புக்கு ஏதுவாகும். தமிழர் உலக முதன் மக்களாதலால், தமிழர் தாய்மொழி யாகிய தமிழ் உலக முதன் மொழியாகும். தமிழ் எழுத்துக்களின் ஒலி இயல்பாக, எளிமையாக அமைந்திருத்தலே இதற்குச் சான்றாகும். தமிழ் என்பதற்கு இனிமை என்பது பொருள். தமிழ் எழுத்துக்களின் இயல்பும் எளிமையுமே அதன் இனிமைக்குக் காரணமாகும். “யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்” (பாரதியார்) என்பது பொய்யுரை யன்று.

தமிழர் தம் இனிமையான தாய்மொழியாம் தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் (கூத்து) என மூன்றாகப் பகுத்து, அம் முத்தமிழிலும் இலக்கியமும் இலக்கணமும் செய்து, முத்தமிழ் போன்ற பகுப்பு வேறு எந்த ஒரு மொழியினும் இல்லை. இஃது தமிழின் தனிச்சிறப்பாகும்.

**“இசையொடு சிவணிய”** (நூன்மரபு -38)

**“இசைப்பொருட் கிளவி”** (உரியியல் -60)

**“முன்றேர்க் குரவை பின்றேர்க் குரவை”** (புறத் -21)

**“வெறிக்கூத்து வள்ளிக்கூத்து”** (புறத் -5)

**“துறையமை நல்யாழ்”** (களவு -1)

**“மகிழ்ந்து பறைதூங்க”** (புறத் -5)

**“துடிநிலை”** (புறத்-4)

**“கூத்தர் பாணர் பொருநர் விறலியர்”** (புறத்)

என்பன வற்றால், நாகரிக நற்கலைகள் எனப்படும் இசையினும் கூத்தினும் பழந்தமிழ் மக்கள் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பது தெரிகிறது. கூத்தர், பாணர் முதலிய வகுப்பினர் இசை, கூத்து என்னும் தமிழுக்காகவே வாழ்ந்து வந்தவராவர்.

சங்கம் நிறுவித் தாய்மொழி வளர்த்து வந்த பெருமை தமிழர்க்கே யுரிய தனிப் பெருமையாகும். இத்தகு பெருமை வேறு எம்மொழி யினர்க்கும் இல்லை. அத் தமிழச் சங்கம் இடமாற்றத்தால் முதல் இடை கடை என மூவகைப்பட்டு, பல்லாயிரக் கணக்கான ஆண்டுகள் தொடர்ந்து நடந்துவந்த தென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## 4. கலை

நாம் கற்கும் கல்வி - மொழிக்கல்வி, கலைக்கல்வி என இரு வகைப்படும. வானநூல், நிலநூல், பயிர்நூல், உயிர் நூல், உடனூல், உளநூல், இயக்கநூல், இயைபுநூல், கணக்கு நூல், சிற்பம், ஓவியம், அரசியல் முதலியன கலைகள் எனப்படும். இவற்றைக் கற்பதே கலைக் கல்வி யாகும். பழந்தமிழ் மக்கள் இக் கலைகளை யெல்லாம் அறிந் திருந்தனர் எனின் வியப்பாகத்தோன்றும். ஆம், வியத்தகு செய்திதான்!

"ஞாயிறு திங்கள்" (கிளவியாக்கம் -57) என, செவ்வாய் முதலிய ஏனைஐந்துடன் ஏழ்கிழமையும், "ஓரையும் நாளும்"[1] (களவு -44). "நாள்முற் றோன்றும்"[2] (உயிர்ம.45) என, ஞாயிற்றின் வீடாகிய ஓரை பன்னிரண்டும், அசுவினி முதலிய இருபத்தேழு நாட்களும், "திங்கள் முன்வரின்"[3] (உயிர்ம -46) என, சித்திரை முதலிய பன்னிரு மாதங்களும், கார் முதலிய பெரும்பொழு தாறும், மாலை முதலிய சிறு பொழு தைந்தும் (அகத்.6-8) கூறுதல் - **வானநூல்** ஆகும்.

முல்லை முதலாக நிலத்தை நான்காக வகுத்துக் கூறுதலும் (அகத்-5), நானிலத்திற்கும் தனித்தனி உணவு, மா, புள், மரம், தொழில் முதலியன கூறுதலும் (அகத் -18), "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின் நாற்பெயர் எல்லை" (செய்யு -79), "எறிகடல் வரைப்பு" (பொருளி -54) என்பனவும் நிலநூல் ஆகும்.

பயிர் வகையைப் புல் மரம் என இருவகைப் படுத்து, தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை என்பன புல்லின் உறுப்புக்கள் எனவும், இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை என்பன மரத்தின் உறுப்புக்கள் எனவும் (மரபு -85-8) கூறுதல் - **பயிர்நூல்** ஆகும்.

பறவை, விலங்கு, ஊர்வன, நீர்வாழ்வனவற்றின் ஆண், பெண் இளமைப் பெயர் மரபு கூறுதலும், ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயி ரீறாக உயிர்ப்பன்மையை அறுவகைப் படுத்துக்கூறுதலும் (மரபு -1-69)- **உயிர்நூல்** ஆகும்.

---

***1. ஔர - இராசி. நாள் - நட்சத்திரம். 2. நாள் - அசுவினி, பரணி முதலிய இகரவீற்று நாட்கள். 3. திங்கள் - வைகாசி, ஆனி முதலிய இகரவீற்று மாதங்கள்***

*உந்தி, தலை, மிடறு, நெஞ்சு, புல், இதழ், நா, மூக்கு, அண்ணம் (பிறப்பியல் -1), நுனிநா (பிறப் - 13), நாவிளிம்பு, அண்பல் (பிறப் -14), கண், தோள், முலை (கிளவி-61), வெரிந்முதுகு (புள்ளி -5), நுதல் (மெய்-13), கூழை - மயிர் (மெய் -14), அல்குல் (மெய் -15), அகம் (பிறப் -20) உள்ளம் (பொருளி-30) முதலிய புறத்துறுப்பும் அகத்துறுப்பும் கூறுதலும், முதுமை, இளமை (வேற்றுமை -17), முதல் சினை (பெயரி - 30) முதலியன கூறுதலும்* **உடல் நூல்** *ஆகும்.*

*மெய்ப்பாட்டியலில் கூறப்படும் மெய்யப்பாட்டுக் குறிப்புகள் உள்ளத்தின் தன்மையைத் தெள்ளிதின் புலப்படுத்துவன வாகையால் அவை -* **உள நூல்** (Physicology) *ஆகும்.*

*எழுத்துக்களின் ஒலி வேற்றுமை, பிறப்பு வேற்றுமை, வடிவ வேற்றுமை, அளவு முதலியன கூறுதலும், எழுத்துப் புணர்ச்சி கூறுதலும், வண்ணம், வடிவு, அளவு, சுவை (எச்ச -20) முதலிய பொருட்குணங்கள் கூறுதலும், ஓசையை வெண்பா முதல் நான்காக வகுத்தலும் (செய்யு -105), அம்பெய்தல், வாள்வீசல், மதில்மேலிருந்து கவண்கல் வீசல் முதலியனவும்* **இயக்கநூல்** (Physics) *ஆகும்.*

*தொய்யி லெழுதுங் குழம்பு கூட்டுதல் (களவு -4), கண்மை, செம்பஞ்சுக் குழம்பு முதலியன செய்தல் (கற்பு -27), பொற்சுண்ணம், கலவை, நறும்பொடி முதலியன செய்தல் (களவு-23), பொன்னை உருக்கிப் பொடிவைத்தூதி அணிகலன்கள் செய்தல் (மெய்-15), செம்பு முதலியவற்றை உருக்கித் தட்டி ஏனங்கள் செய்தல் (மரபு -70),* ***இரும்பை*** *யுருக்கிக் கட்டியாக்கிக் காய்ச்சித் தட்டிப் படைக்கலங்கள் செய்தல் (புறத் -17) முதலியனவும், நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்னும் ஐம்முதற் பொருள்களின் கலவையே உலகியல் (மரபு -89) என்பதும், "இயையே புணர்ச்சி" (உரியி -11) என, இயைபின் இலக்கணங் கூறுதலும்* **இயைபுநூல்** (Chemistry) *ஆகும்.*

**"அரையளவு குறுகல் மகரம் உடைத்தே"** **(நூன்ம -13)**

*அரையளவிற் குறுகல் - கால்.*

**"ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி"** **(குற். புணரியல் -70)**

**"நூறென் கிளவி"** **(குற்றிய -68)**

**"ஆயிரம் வரினே"** **(குற்றிய -71)**

**"நூறா யிரமுன்"** **(குற்றிய -66)**

*இவை எண்ணுப் பெயர்.*

*தாமரை, குவளை, சங்கம், வெள்ளம், ஆம்பல் (புள்ளிம -98) இவை பேரெண். இவை எண்ண ளளவை.*

*கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, உம்மி (தொகைம -28), கா (தொகை -27) இவை நிறுத்தலளவை.*

*கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு (தொகை -28), தூணி, பதக்கு (உயிர்ம-37), உரி (உயிர்ம -38), பனை (தொகை -27) இவை முகத்தலளவை.*

**"நீட்டம் வேண்டின் அவ்வள புடைய"** **(நூன்ம -6)**

**"அடியின் சிறப்பே"** **(செய்யு -35)**

*இவை நீட்டலளவை.*

*எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும் இவை* ***கணக்கு நூல்*** *ஆகும்.*

*மறவர்க்கு நடும் நடுகல்லில் மறவனின் உருவம் செதுக்குதல் (புறத் -5) சிற்பக்கலையாகும்.*

*மடலூரும் தலைவன் (களவு -11) மடலில் தலைவியின் உருவம் எழுதுதலும், தொய்யிற் கொடிவகை (கள -4) எழுதுதலும் - ஓவியக்கலையாகும்.*

*இத்தகைய மேம்பாடுடைய பழந்தமிழ் மக்களின் அக வாழ்வின் சிறப்பினையும், புறவாழ்வின் சிறப்பினையும் மேல்வரும் பகுதிகளில் அறிந்து இன்புற்றுத் தமிழ் இனவுணர்ச்சி பெறுதல் தமிழ் மக்களின் இன்றியமையாக் கடமையாகும்.*

# 2. தொல்காப்பியம்

இன்று நமக்குக் கிடைத்திருக்கும் பழந்தமிழ் நூல்களில் மிகப் பழமையானது தொல்காலப்பியமே யாகும். இது இற்றைக்கு நாலாயிரம் ஆண்டுகட்கு முன்னர்ச் செய்த அரும்பெருந் தனித்தமிழ் இலக்கண நூலாகும். இது ஆராய்ச்சி அறிஞர்கள் கண்டறிந்த உண்மை முடிவு. பத்துப் பாட்டு, எட்டுத்தொகை. பதினெண் கீழ்க்கணக்கு, நெஞ்சை யள்ளும் சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ் நூல்களெல்லாம் இதன் ஆணைக்குட் பட்டனவேயாகும். திசை யெங்கும் இசைபொங்கும் திருக்குறளும் இதன் இலக்கியமே. இவை மட்டுமா! நமது பயக்குறையால் நமக்குக் கிடைக்காமற் போன **கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை யகவல்** முதலிய இடைச் சங்க நூல்களும் இதன் இலக்கியமே யாகும். அதாவது, இடைச் சங்கத் தார்க்கு இலக்கணம் தொல்காப்பியமே. இடைச்சங்கத் தொடக்கம், கி.மு.இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தென்பது ஆராய்ச்சி வல்லுநர்கள் கண்டறிந்த உண்மை. ஆனால், எவ்வளவு காலம் முற்பட்டதென்பது துணிந்து கூறப்படாத தொன்று. இதனால். தொல்காப்பியத்தின் பழமை எண்ணி இன்புறற் பாலதொன்றாகும்.

தொல்காப்பியம் தோன்றியதிலிருந்து தமிழ் மக்கள் அதன் ஆணைக்குட்பட்டே நூல் செய்து வருகின்றனர். தொல்காப்பியத்தை விடச் சிறந்த நூலொன்று - அத்தகு பழமையும், இளமையும், பரப்பும், சிறப்பும், தெளிவும், திண்மையும், செறிவும், நிறைவும் உடைய நூலொன்று - உலகிலுள்ள வேறு எந்த ஒரு மொழியிலும் இல்லை என்பது ஆராய்ச்சி அறிஞர்கள் முடிவு. எனவே, தொல்காப்பியம் ஓர் ஒப்பிலா உயர்தமிழ் நூலென்பது தெள்ளத் தெளிந்த உண்மையாம்.

### 1. தொல்காப்பியத்தின் பெருமை

கிறித்துப் பிறப்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, இன்று தலைசிறந்த நாகரிக நல்வாழ்வினராய்த் திகழும் நாட்டின ரெல்லாரும் ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிருந்து தகவுடன் வாழும் வகையறியாராய் அங்குமிங்கும் அலைந்து திரிந்த அக்காலத்தே, உழுது பயிர்செய்து உண்டு வாழும் வழியும் அறியாதிருந்த அக்காலத்தே,

உயர்திணைக்குரிய மக்கட் சுட்டின் ஒழுக்க இலக்கண நூல் செய்யும் தகுதியில் இருந்த தமிழ் மக்களின் பெருமையே பெருமை'என, மேனாடறிஞர்கள் வியந்து கூறும் அத்தகு மேம்பாட்டினை யுடையது தொல்காப்பியம்.

அடிநூல், அணியியல், அவிநயம், ஆசிரியமாலை, ஆசிரியமுறி, ஆனந்தவியல், இசைநுணுக்கம், இந்திரகாளியம், இளந்திரையம், ஐந்திரம், ஓவியநூல், கடகண்டு, கணக்கியல், கலியாணகாதை, கவிமயக்கறை, கலைக்கோட்டுத் தண்டு, களரியாவிரை, களவுநூல், காக்கை பாடினியம், காலகேசி, குணநூல், குண்டலகேசி, கூத்து, கோணூல், சங்கயாப்பு, சயந்தம், சச்சபுட வெண்பா, சாதவாகனம், சிந்தம், சிறுகாக்கை பாடினியம், சிறுகுரீஇ யுரை, சிற்பநூல், சிற்றெட்டகம். சிற்றிசை, செயன்முறை, செயிற்றியம், தகடூர் யாத்திரை, தந்திரவாக்கியம், தாளசமுத்திரம், தாளவகையோத்து, தும்பிப்பாட்டு, தேசிகமாலை, நாககுமார காவியம், நீலகேசி, பஞ்சபாரதீபம், பஞ்சமரபு, பதினாறுபடலம். பரதசேனாபதீயம், பரதம், பரிநூல், பல்காயம், பல்காப்பியம், பன்னிரு படலம், பாட்டுமடை, பாவைப்பாட்டு, புணர்ப்பாவை, புதையனூல், புராண சாகரம், பூதபுராணம், பெரிய பம்மம், பெருவல்லம், பேரிசை, போக்கியம், மணியாரம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், மந்திர நூல், மயேச்சுரர் யாப்பு, மாபுராணம், மார்க்கண்டேயர் காஞ்சி, முதுகுருகு, முதுநாரை, முத்தொள்ளாயிரம், முறுவல், மூவடிமுப்பது, மோதிரப் பாட்டு, யசோதரகாவியம், வச்சத் தொள்ளாயிரம், வஞ்சிப்பாட்டு, வரிவளையாபதி, வாய்ப்பியம், விளத்தார் கூத்து முதலிய

எத்தனையோ பழந்தமிழ் நூல்கள் நமக்கு உதவாப் பொருளாய்ப் போயினமை போல, தொல்காப்பியமும் நமக்குக் கொடுத்து வைக்காமல் போயிருக்குமேல், உலக மக்களினத்தில் ஒன்றாகிய தமிழினத்தின் பெருமையை - தம் முன்னோர் பெருமையை - தமிழ் மக்கள் இன்று அறிந்து இன்புற முடியாமற் போயிருப்பர்; 'தமிழினம் ஒரு தனியினம்' எனப் பெருமையோடு தம்மைக் கூறிக் கொள்ளும் தகுதியின்றித் தாழ்ந்து நிற்பர். ஏனைப் பழந்தமிழ் நூல்கள் போல் தொல்காப்பியமும் இறந்துபட்டிருக்குமேல், இன்று தமிழ் நாட்டில் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு வாழ்வோர், பழந்தமிழரின் வழிவந்த இளந்தமிழர் எனத் துணிந்து கூற முடியாத நிலை ஏற்பட்டிருக்கும். தமிழர் பெருமைக்குச் சான்றாக நின்று நிலவும் சொற்றூண் தொல்காப்பியமே.

தொல்காப்பியம், தமிழர் வாழ்வென்னும் தண்டா மரைக் குளத்தின் தகராத் தடங்கரை! ஒப்புயர் வில்லா ஒழுக்கக் களஞ்சியம்! பழந்தமிழ் மக்களின் வரலாற்றுக் கண்ணாடி! நமக்காக நமது

முன்னையோர் ஈட்டி வைத்த எய்ப்பினில் வைப்பு! பழமைக்குப் பழமை, புதுமைக்குப் புதுமை! அறிவியற் சரக்கறை! அரும் பொருட் பெரும்பேழை! இன்பத்தின் இருக்கை! அன்புத்தேன் வருக்கை! செந்தமிழின் செவிலித்தாய்! எந்தமிழர் இனிமைச் சேய்! தமிழர் வாழ்வின் தகையரண்! தமிழரைத் தாழ்த்திக் கூறுவோரைத் தாக்கும் தனித்தொளிர்தரு தகைமிகு படைக்கலம்! இன்னும் கூறிக்கொண்டே போகலாம் இதன் பெருமையை. தம் பெருமையைத் தாமேகூறிக் கொள்ளும் தற்பெருமை யென்னும் குற்றத்திற் காளாகாமல் இத்துடன் நிறுத்திக் கொள்ளுதும்.

இதற்குப் பிற்பட்ட எத்தனையோ தமிழ்நூல்கள் இறந் தொழிந்தும், இஃது அன்றேபோல் இன்றும் உருக்குலையாமல் அப்படியே இருந்து வருவதே இதன் பெருமைக்குத் தக்க சான்றாகும்.

## 2. தொல்காப்பியர்

தொல்காப்பியம் என்னும் இப்பழந்தமிழ்ப் பேரிலக்கண நூலைத் **தொல்காப்பியர்** என்னும் பழந்தமிழ்ப் பெரும்பேராசிரியர் செய்தனர். இவருடைய ஊர், பெற்றோர் முதலிய வரலாறு ஒன்றும் தெரியவில்லை. 'ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியர்' எனப் புலவர் பெருமக்களால் புகழ்ந்து போற்றப்படும் மேம்பாட்டினை யுடையவர் இவர். இவர்தம் உலகிய லறிவுக்கும், செந்தமிழ்ப் புலமைக்கும் தொல்காப்பியமே சான்றாகும். இதனை,

> **"செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு**
> **முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்**
> **புலந்தொகுத் தோனே"**

என்னும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரப் பகுதி வலியுறுத்தும்.

செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம் - செந்தமிழ் வழங்கும் நிலம். நிலத்தொடு - அந்நிலத்தில் வாழும் மக்கள் வாழ்க்கை முறையோடு. இது, உலகிய லறிவு. முந்து நூல் கண்டு - பழைய இலக்கிய இலக்கண நூல்களையும் கற்றுணர்ந்து. முறைப்பட எண்ணி - ஒழுங்குபட ஆராய்ந்து. புலம் - நூல். புலம் தொகுத்தோன் - நூல் செய்தோன். இது, செந்தமிழ்ப்புலமை. தங்காலத்து வாழ்ந்த மக்கள் வாழ்க்கை முறையோடு, முந்து நூலுங் கண்டு, முறைப்பட ஆராய்ந்து நூல் செய்தனர் ஆசிரியர் என்க.

பழந்தமிழ்க் களஞ்சியமான தொல்காப்பியத்தைச் செய்து, தமிழினத்தின் தனிப் பெருமை என்றும் நின்று நிலவுமாறு செய்த ஆசிரியர் தொல்காப்பியனாரின் செய்ந்நன்றி, தமிழ் மக்களால் என்றும் மறவாமற் போற்றற் குரிய தொன்றாகும்.

பழந்தமிழ்ப் பெரியாராகிய தொல்காப்பியரை ஆரியர் என்றும், சமதக்கினி முனிவரின் புதல்வர் என்றும், பரசுராமனின் உடன் பிறந்தவர் என்றும், ***திரணதூமாக்கினி*** என்னும் இயற் பெயரினை உடையவர் என்றும், அகத்தியர் மாணவர் என்றும் கதை கட்டி விட்டனர். வள்ளுவரைப் பற்றிய கட்டுக்கதை போன்றதே இஃதும். இவற்றுக் கெல்லாம் தொல்காப்பியத்தில் யாதொரு குறிப்பும் இல்லை. ஆசிரியர் நூல் செய்த வரலாறு கூறும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தினும் இக்கூற்றுக்கு யாதொரு குறிப்பும் இல்லை. தொல்காப்பியர் அகத்தியர் மாணவராயின், தொல்காப்பியத்தில் எங்கேனுமோரிடத்தில் தம் ஆசிரியர் பெயரைக் குறிப்பிடாமலா இருப்பார்? காலஞ்சென்ற தமிழ்ப் பேராசிரியர், கா.நமச்சிவாய முதலியார் அவர்கள், ***அகத்தியர் ஆராய்ச்சி*** என்னும் நூலில், தொல்காப்பியர் அகத்தியர் மாணவர் அல்லர் என்பதைத் தக்க சான்று காட்டி நிலைநாட்டி யுள்ளார்கள்; ஆங்குக் காண்க.

தொல்காப்பியத்தைச் செய்தவர், 'தொல்காப்பியர்' என்னும் தமிழ்ப்பெரியாரே யாவர். பெரும்பான்மையான தமிழ்ப் பெரியார்களின் இயற்பெயர் - பெற்றோர் இட்ட பெயர் - தெரியாதது போலவே, தொல்காப்பியரது இயற்பெயரும் நமக்குத் தெரியவில்லை. காப்பியாற்றுக் காப்பியனார், பல்காப்பியனார் என்னும் புலவர் பெயர்களை நோக்கின், தொல்காப்பியர் என்பது இயற்பெயர் எனக் கொள்ளவும் இடமுண்டு. தொல்காப்பியர் என்பது இயற்பெயராயின், தொல்காப் பியரால் செய்யப்பட்டதால் தொல்காப்பியம் எனப் பெயர் பெற்றது எனவும், அது சிறப்புப் பெயராயின், தொல்காபியத்தைச் செய்ததால் தொல்காப்பியர் எனப் பெயர் பெற்றனர் எனவும் கொள்ளுதல் வேண்டும். பழைய காப்பியங்கள் முழுமையும் முற்றக் கற்று முடிவு போகியதனால், 'தொல்காப்பியர்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருக்கலாம். அஃதெங்ஙன மாயினும், தொல்காப்பியர் செய்தது தொல்காப்பியம் எனப் பெருமை கொள்வோமாக.

## 3. தொல்காப்பியர் கால நிலை

தொல்காப்பிய நூற்பாக்களுள் ஒருசில, எடுத்துக்காட்டாக,

**"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்"** **(புறத்திணையியல் -20)**

**"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்"** **(களவியல் -1)**

**"ஐயர் யாத்தனர் கரணம் என்ப"** **(கற்பியல் -4)**

**"மறையென மொழிதல் மறையோ ராறே"** **(செய்யுளியல் -188)**

என்பன போன்றவை ஆரியக் கொள்கை போல் தோன்றுதலான், தொல்காப்பியர் காலத்தே தமிழகம் இருந்த நிலையைத் தெரிந்து கொள்வது இன்றியமையாத தாகும்.

நனிமிகு பழங்காலத்தே வடக்கிற் பனிமலை காறும் தமிழர்களே வாழ்ந்து வந்தனர் என்பதற்குப் பழந்தமிழ்ச் செய்யுட்களும், சிந்துவெளி நாகரிகமும் சான்றாக வுள்ளன. பின்னர் **ஆரியர்** என்னும் ஓரின மக்கள், பனிமலையின் புறத்தே யிருந்து வடநாட்டிற் குடியேறி வாழ்ந்து வந்தனர்; நாளடைவில் அவ் வடநாட்டைத் தங்கட் குரிமை யாக்கிக் கொண்டனர். அதனால், அவ் வடநாடு 'ஆரியநாடு' எனப் பெயர் பெற்றது என்கின்றது வரலாறு.

தொல்காப்பியர் காலத்தில் ஒரு சில ஆரிய முனிவர்கள் விந்தியமலையைக் கடந்து தமிழகம் போந்து, காடுகளிலும் எல்லைப் புறங்களிலும் தங்கி வாழ்ந்து வந்தனர். நாளடைவில் ஒரு சிலர் உள்நாட்டினும்குடிபுக்கனர். புதிதாகத் தமிழகம் போந்த அவ்வயல் நாடர், யாதொரு தொழிலும் செய்யாமல் பெரும்பாலும் இரந்துண்டே வாழ்ந்து வந்தனர். இன்றும் இரப்போர்க்கு, அயல்நாடர் எனப் பொருள்படும், ***பரதேசி*** என்னும் பெயரே வழங்கி வருதல் இதற்குச் சான்று பகரும். தன்னூரில் இரந்துண்போனும் இன்றும் தன்னைப் ***பரதேசி*** என்றே கூறிக் கொள்வதனால், அவ்வழக்கம் நெடுங்காலம் நிகழ்ந்து வந்தமை பெறப்படும்.

கற்றுணர்ந்த தமிழ்ப் பெரியார்கள் அருளுள்ள முடையராய், தன்னலஞ் சிறிது மின்றிப் பொதுநலம் புரிந்து வந்தனர். அவர்கள் ***அந்தணர்*** எனப்பட்டனர். அந்தணர் - அருளுள்ள முடையோர். “மற்றெவர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான், அந்தணர் என்போர் அறவோர்” என்கின்றார் வள்ளுவர். செந்தண்மை - அருளுள்ளம். திருக்குறள் 'நீத்தார் பெருமை' என்னும் அதிகாரம் இவ்வந்தணர் பெருமை கூறுவதே. திருக்குறள் 'துறவறவியல்' இவ்வந்தணரது வாழ்க்கைச் சட்டமே. 'காமஞ் சான்ற கடைக்கோட் காலை' என்ற சூத்திரம் (கற் -51) இவ்வந்தணரது தோற்றங் கூறுவதாகும். 'அந்தணர்' என்னும் தலைப்பைப் பார்க்க.

அவ்வடவாரியப் பெரியார்கள் இத்தமிழ் அந்தணர்களுடன் நெருங்கிப் பழகி வந்தனர். அத்தமிழ்ப் பெரியார்கள் அவ்வாரியப் பெரியார்களைத் தம்மவர் போலவே மதித்துப் போற்றி வந்தனர். ஒரு சில வடவர்கள். தமிழ்ப் பேரரசர்களையும் சிற்றரசர்களையும் செல்வர்களையும் அண்டி வாழ்ந்து வந்தனர். அன்னாரும் அவர்களை அன்புடன் பேணிவந்தனர்.

ஒரு சில ஆரிய முனிவர்கள் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தனர். ஆனால், அவர்களிற் பெரும்பாலோர் காடுகளில் வாழ்ந்து வந்தனர். அன்று தமிழகத்தில் காடுகள் அத்தகு நிலையில் இருந்தன. முல்லை குறிஞ்சி நிலங்களின் இயற்கை வளம் அவர்தம் உளத்தைக் கவர்ந்தது போலும். முனிவர்கள் மனைவியருடன் காடுகளில் இலைக்குடிசைகளில்

வாழ்ந்து வந்தனர் என்று வடமொழிப் புராண இதிகாசங்கள் கூறுதல் இவர்களையே யாம்.

தமிழ் அந்தணர்களுடன் நெருங்கிப் பழகி வந்த ஆரிய முனிவர்கள், தமிழ மொழியை ஒருவாறு கற்றும், தமிழ்ப் புலவர்களைப் பின்பற்றி நடந்தும் வந்ததோடு, தங்கள் கொள்கைகளைத் தமிழரிடைப் புகுத்தியும் வந்தனர். இதுவே ***புதுக்குடி யேறிகளின் இயல்பு.*** புதுமையை விரும்புதல் மக்களின் இயல்பாதலின் தமிழ்மக்கள் அவ்வயற் கொள்கைகளைப் பின்பற்றியதில் வியப்பொன்று மில்லை. ஆங்கி லேயர்களின் நடையுடை யனைத்தையும் அப்படியே பின்பற்றி இன்றும் அவ்வாறே இருக்கின்றோமன்றோ? பொது மக்களே யன்றிப் புலவர் முதலிய பெருமக்களும் அவ்வயலார் கொள்கைகளை ஒருவாறு கைக்கொண் டொழுகிவரலாயினர். அது அவ்வடபுலத் தார்க்கு நல்ல செல்வாக்கைத் தந்தது.

'விருந்தோம்பல்' என்னும் உயரிய பண்பாட்டைத தமக்கே உரிமையாக்கிக் கொண்ட, அருளுக்கும் அன்புக்கும் இருப்பிடமான, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரான, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் உயரிய நன்னோக்குடைய பழந்தமிழ் மக்கள் அவ் வட புலத்தாரை அன்புடன் போற்றி வந்தனர். உண்டியும் உடையும் உறையுளும் உதவி அவ்வயல் நாடரைப் போற்றுதலைப் பெரும் பேறெனக் கொண்டு பேணிவந்தனர். கி.பி.17, 18ஆம் நூற்றாண்டுகளில் கிறித்துவ சமயப் பெரியார்கள் தமிழகத்தில் எந்நிலைமையில் இருந்து வந்தனரோ, அந்நிலைமையிலேயே அன்று அவ்வாரியப் பெரியார்களும் இருந்து வந்தனர்.

வீரமாமுனிவர், போப்பையர், தத்துவப்போதகச் சாமியார், கால்டுவெல் ஐயர், சீகன் பால்கு ஐயர், இரேனியுசையர் முதலிய மேனாட்டுக் கிறித்துவப் பெரியார்கள் தமிழைக் கற்றுத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் செய்தது போலவே, அன்று அகத்தியர் முதலிய வடநாட்டுப் பெரியார்களும் தமிழ் கற்றுத் தமிழ்நூல் செய்தனர்.[1]

ஆங்கில ஆட்சி இந்நாட்டில் ஏற்படு முன்னரே மேனாட்டார் சமயத்தைத் தமிழ் மக்கள் தழுவி அன்னார் சார்பினர் ஆனதுபோல, அன்று அவ்வடநாட்டார் சமயத்தைத் தமிழ் மக்கள் தழுவி அவர் சார்பினராகவில்லை; எனினும், கள்ளங்கரவற்ற அப் பழந்தமிழ் மக்கள், அவ் வடவர் கூறிய கற்பனைகளை உண்மை யெனவே நம்பி வந்தனர். எடுத்துக் காட்டாக, மண்ணுலகம் போலவே வானுலகம் என்பதும் உண்டு என்பதை நம்பினர். இதை ஆசிரியர் தொல்காப்பியரே,

***1. அகத்தியர் ஆராய்ச்சி என்னும் நூல் பார்க்க.***

வானாட்டில் வாழ்வோரும் மக்கள் போன்றாரே எனக் கொண்டு, அங்கும் இங்குப் போலவே அறம் பொருள் இன்பங்கள் உண்டு என எண்ணி,

**"இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்**
**அவையல் காலம் இன்மை யான"** **(பொருளியல் -54)**

எனக் கூறுதலான் அறியலாம்.

இமையோர் - வானவர். தேம் - இடம். இமையோர் தேம் - வானுலகம்.[2] எறி கடல் வரைப்பு - கடலை எல்லையாக உடைய மண்ணுலகம். அவை - அறம் பொருள் இன்பம்.

ஆரிய மக்கள் தமிழ்நாட்டில் குடியேறித் தமிழ் மக்களோடு பழகி வந்ததோடு, அன்று தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் போக்குவரவு இருந்து வந்தது. தமிழ்நாட்டு வணிகர்கள் வடநாடு சென்று வாணிகம் செய்து பொருளீட்டி வந்தனர்.

**"வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**
**கங்கை வாரியும்"** **(பட்டினப்பாலை -187,90)**

வடமலை - இமயமலை. வாரி - வருவாய் - பொருள். அவை - யானை, மாணிக்கம், பொன் முதலியன.

இத்தகைய பழக்கத்தினால், மணமுறை முதலிய ஆரியர் பழக்க வழக்கங்களைத் தமிழ்மக்கள் அறிந்திருந்தனர். ஆரிய மக்கள் சொல்லக் கேட்டுத் தெரிந்திருந்தனர். இதனை ஆசிரியரே,

**"மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுள்"** **(களவியல் -1)**

எனக் கூறுதல் காண்க.

மறையோர் - ஆரியர்; வேதியர் என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பு. தேத்து - இடத்து. மன்றல் - திருமணம். ஆரியமணம் எட்டாவன - பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், கந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன.

ஆரிய மணவகை முறைகளைத் தமிழ் மக்கள் ஒருவாறு தெரிந்திருந்தனர் என்பது அச் சூத்திரத்தில் ஆசிரியர் குறிக்கும் பொருளால் தெரிகிறது. இம்மணங்களின் பொருள் பின்னர்க் கூறப்படும்.

தமிழ்ப் பெரியார்கள் ஆரிய முனிவர்கட்குத் தமிழ் கற்பித்தும், ஆரிய மொழியை ஒருவாறு கற்றும், அவ் வடமொழியில் உள்ள சில

2.'தெய்வம்' என்னும் தலைப்பைப் பார்க்க.

*கதைகளையும் கருத்துக்களையும் தமிழ்ச் செய்யுட்களில் அமைத்துப் பாடியும் வந்தனர். ஆனால், அவை தமிழ்ச் சொற்களால், தமிழ் எழுத்துக்களால், தமிழ் இலக்கண முறைப்படி பாடப்பட்டு வந்தன அதாவது, மக்கட் பெயர், இடப்பெயர் முதலிய வடமொழி இயற் சொற்களை - அக்கதைகட்குரிய சொற்களை - வடவெழுத்து நீக்கி, தமிழொலிக் கேற்பத் திரித்துத் தமிழ் எழுத்துக்களால் எழுதி வந்தனர். அயல் மொழிச் சொற்களைத் தமிழ்மொழியின் ஒலியியல்புக் கேற்பத் திரித்து வழங்குதல்* ***தற்பவம்*** *எனப்படும். தக்ஷன் - தக்கன், நிஷதம் - நிடதம் என எழுதுதல் தற்பவம் ஆகும்.*

**"வடசொள் கிளவி வடவெழுத் தொரீஇ**
**எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே." (எச்சவியல் -5)**

*கிளவி - சொல், ஒரீஇ - நீக்கி. எழுத்தொடு புணர்ந்த சொல் - தமிழெழுத்துக்களால் எழுதப்பட்ட தற்பவச்சொல்.*

*அக்கால், ஆரியரே யன்றி, வேறுபல வெளி நாட்டினரும் வாணிகத்தின் பொருட்டும், வாழ்க்கையின் பொருட்டும் தமிழ் நாட்டில் தங்கி வாழ்ந்து வந்தனர். அவர்கள்* ***யவனர்*** *முதலியோர். அன்னார் மொழிச் சொற்கள் சிலவும் தமிழ் மக்கள் அறிந்திருந்தனர். அவை* ***திசைச் சொற்கள்*** *எனப்படும். திசைச் சொல் - வடசொல் அல்லாத வேறு திசையில் வழங்கும் மொழிச் சொல். தொல்காப்பியர் காலத்திலேயே அத்திசைச் சொல், வடசொல் ஆகிய அயற்சொற்கள் தமிழ்ச் செய்யுட்களில் அமைத்துப் பாடப்பட்டு வந்தன. ஆனால், அவை - மக்கட் பெயரும், இடப் பெயருமாகிய பெயர்ச் சொற்களேயாம். 'திசைச் சொல்லுள் ஏனைச் சொல்லும் உளவேனும். செய்யுட் குரித்தாய் வருவது பெயர்ச் சொல்லே. வட சொல்லுள்ளும் பெயரல்லன செய்யுட் குரியவாய் வாரா' (எச்ச -1. சேனா). 'வடசொல் பெயராய் அல்லது வாராது' (எச்ச -5. தெய்வச்). இதனை,*

**"இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்**
**றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே" (எச்ச-1)**

*என்னும் ஆசிரியர் கூற்றானறிக,*

*இதுகாறும் கூறிய வாற்றால் போந்தது, ஆசிரியர் தொல்காப்பியர் காலத்தே, தமிழ் நாட்டில் தமிழரல்லாத பிறமொழி மக்களும் வெளி நாட்டினின்று குடியேறி வாழ்ந்து வந்தனர். அன்னார் மொழிச் சொற்கள் சில தமிழ் மக்களால் கையாளப்பட்டு வந்தன. அவ் வயல் நாடர் கலை. நாகரிகம், கொள்கை, பழக்க வழக்கம் முதலியவற்றைத் தமிழ் மக்கள் ஒருவாறு தெரிந்திருந்தனர். ஒரு சில அயற் கொள்கைகளைத் தமிழ் மக்கள் பின்பற்றியும் வந்தனர். அவ்வயல் நாடரில் ஈங்கு வடவாரியரே மேற்கொள்ளத் தக்கவராவர். அவ்வாரியர் பழக்க*

வழக்கங்களே, கூற்றுக்களே தமிழ் மக்கள் பக்கம் மிகவும் அணுகி வந்தன. பிற அயல் நாடர்கள் அன்று ஆரியர் போல எவ்வகைச் செல்வாக்கும் பெறவில்லை. அவர்கட்கும் தமிழ் மக்கட்கும் வாழ்க்கையில் அணுக்கம் ஏற்படவில்லை.

சமயத் தொண்டரும் கட்சித் தொண்டரும் பிற சமயக் கொள்கைகளையும், கட்சிக் கொள்கைகளையும் எடுத்துக்கூறி மறுத்து, தம் கொள்கைகளைப் பரப்புதல் போலவே, பரப்பி நிலைநாட்டுதல் போலவே, தமிழ் மக்களின் ஒழுக்க முறை பற்றி இலக்கணம் செய்த ஆசிரியர் தொல்காப்பியரும், அக்காலத்தில் தமிழகத்தில் தங்கியிருந்த ஆரியர் கொள்கைகளை எடுத்துக்கூறி மறுத்து, தமிழ் மக்களிடைத் தமிழ்க் கொள்கைகளை நிலைநாட்டினர். இதுவே, 'வழக்கும் செய்யுளும்............. பொருளும் நாடிச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு முந்து நூல் கண்டு, முறைப்பட வெண்ணி நூல் செய்ததன்' நோக்கமாகும். இங்ஙன மன்றி, தொல்காப்பியம் ஆரியக் கொள்கை கூற எழுந்த நூலன்று. தொல்காப்பியத்தில் எந்த ஓர் அயற்கொள்கையும் கூறப்படவில்லை. தொல்காப்பியத்தில் கூறப்படுவன அவ்வளவும் தனித் தமிழ்க் கொள்கைகளே - தமிழர் பழக்க வழக்கங்களே - ஆகும் என்பது இவ்வாராய்ச்சியில் இனிது விளங்கும்.

## 4. தொல்காப்பிய உரை

இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க் கினியர், கல்லாடர், தெய்வச் சிலையார் என்னும் அறுவர் தொல்காப் பியத்திற்கு உரை யெழுதியுள்ளனர். இவர்கள் உரையெழுதுவதில் ஒப்பில்லா உயர் மேம்பாடுடையவர்கள். அன்னார் உரைகள் நூலொடு ஒப்ப மதிக்கப்பெறும் மேம்பாட்டினையுடையன.

ஆனால், வள்ளுவர் உள்ளத்தை உள்ளபடி அறிய முடியாது பரிமேலழகர் முதலிய திருக்குறள் உரையாசிரியர்கள் செய்து விட்டது போலவே, தொல்காப்பியர் உள்ளத்தை உள்ளபடி அறியமுடியாது நச்சினார்க் கினியர் முதலிய தொல்காப்பிய உரை யாசிரியர்கள் செய்து விட்டனர். அவ்வுரைகளினாலேதான் தூண்டா மணி விளக்காகிய தொல்காப்பியம், மாசுபடிந்த மணிபோல் மங்கி மதிப்பற்றுக் கிடக்கிறது. அவ்வுரைகளைத் துணையாகக் கொண்டு தான் தொல்காப்பியத்தை ஒருவாறு கற்று வருகின்றனர் தமிழ் மக்கள். ஆனால், அவ்வுரைகளின் துணைகொண்டு தொல்காப்பியர் உள்ளக் கிடக்கையை - பழந்தமிழர் பழக்க வழக்கங்களை - உள்ளபடி யறிய முடியாது தமிழ்மக்கள் தவிக்கின்றனர். காரணம்,

தொல்காப்பிய உரையாசிரியர்கள் அறுவரும் தமிழ்நாடு சமய வாழ்வின் தலைநின்ற காலமாகிய கி.பி.9ஆம் நூற்றாண்டுக்கும் 13ஆம்

நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தவராவர். நாலாயிரம் ஆண்டுகட்கு முன்னர்ச் செய்யப்பட்ட ஒரு நூலுக்கு மூவாயிரம் ஆண்டுகட்குப் பின்னர் எழுதப்பட்ட உரைகள் தாம் இன்று நமக்கக் கிடைத்திருக்கின்றன. ஆசிரியர் கருத்தறிந்து, தமிழ் மரபுப் படி - உள்ளபடி -எழுதப்பட்ட பழய உரை நமக்குக் கிடைக்க வில்லை. சமயச் சார்பான பிற்காலத்தே இவ்வுரைகளைக் கைக்கொண்டு பழைய உரையைக் கைவிட்டு விட்டனர் போலும்!

இங்ஙனம், பிற்காலத்து உரையாசிரியர்கள் பழைய உரையை அழித்ததோடு நில்லாமல், தங்கள் காலக் கருத்துக்களை வலிந்து புகுத்தி ஆசிரியர் கருத்தை அறிய முடியாது செய்துவிட்டனர். 'இதனால் நச்சினார்க்கினியர் மனுதருமத்தை வலிந்து புகட்டுகிறார்'[3] என்னும் பெரியார் கூற்றை அறிக. அம்மாசை யகற்றித் தொல்காப் பியத்திற்கு நல்லுரை காண்பது தமிழர் முன்னிற்கும் வேலைகளில் முதல் வேலையாகும்.

1941 ஆம் ஆண்டே, தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுமைக்கும் -665 சூத்திரங்கட்கும் - எளிய நடையில், தமிழ் மரபுப்படி, விளக்கமான விரிவுரை யொன்று எழுதி முடித்தேன். தமிழர் பயக்குறையால் - பழந்தமிழ்ச் செல்வர்கள் போன்ற தமிழ்ப் பற்றுள்ள தமிழ்ச் செல்வர்கள் இன்று இன்மையால் - தமிழ் மக்கட்குப் பயன் படாமல் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிவைக்கப் பட்டிருந்த அவ்வுரை இப்பொழுது தான் (1967இல்) வெளிவருகிறது. அவ்வுரையைத் தழுவி யெழுதப்பட்டதே இவ்விளக்கம்.

## 5. தொல்காப்பியப் பாகுபாடு

தமிழ் மக்களின் செல்வக் குவையாய்த் திகழும் தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பெரும்பிரிவை யுடையது. ஒவ்வோர் அதிகாரமும் தனித்தனி ஒன்பதொன்பது இயல்களை யுடையது. எழுத்ததிகாரத்தில் தமிழ் எழுத்துக்களின் இலக்கணமும், சொல்லதிகாரத்தில் தமிழ்ச் சொற்களின் இலக்கணமும், பொருளதிகாரத்தில் பொருள்களின் இலக்கணமும் கூறப்படுகின்றன. பொருளதிகாரச் செய்யுளியலில் யாப்பிலக்கணமும், உவமவியலில் அணி யிலக்கணமும் கூறப்படுவதால், தொல்காப் பியத்தில் - எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணமும் கூறப்படுகின்றன. பொருளை யமைத்துப் பாடுவதே செய்யுள்; பொருளின் அமைப்பே அணி. ஆகையால், யாப்பும் அணியும் பொருளுக்குத் துணையாகவே கொண்டனர் நம் முன்னையோர். யாப்பையும் அணியையும் தனி அதிகாரமாகக் கொண்டது பிற்கால வழக்கே யாகும்.

***3. இயற்றமிழாசிரியர், மன்னார்குடி ம.நா. சோமசுந்தரம் பிள்ளை யவர்கள். புறத் -20 உரை அடிக்குறிப்பு.***

## தொல்காப்பிய நூற்பாத் தொகை:

| | | |
|---|---|---|
| *எழுத்ததிகார நூற்பா* | - | *483* |
| *சொல்லதிகார நூற்பா* | - | *462* |
| *பொருளதிகார நூற்பா* | - | *665* |
| *ஆக மொத்த நூற்பா* | - | *1610* |

## தொல்காப்பியம் பொருளதிகார இயல்கள்:

| | | |
|---|---|---|
| *1. அகத்திணையியல்* | - | *55* |
| *2. புறத்திணையியல்* | - | *36* |
| *3. களவியல்* | - | *50* |
| *4. கற்பியல்* | - | *53* |
| *5. பொருளியல்* | - | *54* |
| *6. மெய்ப்பாட்டியல்* | - | *27* |
| *7. உவமவியல்* | - | *37* |
| *8. செய்யுளியல்* | - | *243* |
| *9. மரபியல்* | - | *110* |
| *ஆகநூற்பா* | - | *665* |

***குறிப்பு:*** *இயல்களின் பின்னுள்ள எண், அவ்வியல்களின் நூற்பாத் தொகை எண்.*

# 3. பொருளிலக்கணம்

*ஒரு நாட்டு மக்களிடை நிகழும் ஒழுக்க முறைகள் - உலக வழக்கு எனப்படும். தீமை கலவாத தனி நற்பொருள் உலகில் ஒன்றும் இல்லாமை போல, மக்களுள் தீய ஒழுக்க முடையோரும் ஒரு சிலர் இருப்பது இயல்பே. எனவே, அந் நெறிதவறினோரைத் திருத்தி, மறுபடியும் அத்தீ நெறிக்கட் செல்லாது நன்னெறிக்கண் நடக்கும்படி செய்யவல்ல தகுதி மிக்க சான்றோர் ஒழுக்க முறைகளை ஏனையோரும் கடைப்பிடித்து ஒழுகும் பொருட்டும், நாட்டின் பல்வேறு இடங்களில் வாழ்வோரும் ஒரே தன்மையாய் ஒழுகும் பொருட்டும், முன்னோர் வாழ்க்கை முறைகளைப் பின்னோரும் அறிந்து கடைப்பிடித்து நடக்கும் பொருட்டும், நன்னெறிக் கண் நடக்கும் சான்றோர் வழக்குகளை மொழியியல்புக்கேற்ப அழகுறச் செய்யுளாகச் செய்வது -* ***செய்யுள் வழக்கு*** *எனப்படும். செய்யுள் வழக்கை ஒட்டியே உலக வழக்கு நடப்பதால், மக்கள் பெரும்பான்மையும் நடக்கவேண்டு மாதலால், அச்செய்யுள் வழக்கு ஒரே தன்மையாய் இருக்கும் பொருட்டு அதை வரையறை செய்வது -* ***பொருளிலக்கணம்*** *எனப்படும். எவ்வளவு ஆன்றமைந்த நுண்ணிய அமைப்பு முறை!*

## 1. பொருளின் பெருமை

*பொருள் என்பது - ஒழுக்க முறை, உலகின்கண் நல்வாழ்வு வாழும் மக்கள் அடையும் பொருள் மூன்று. அவை, அறம், பொருள் இன்பம் என்பன. இனிக் கற்றதனா லாயபயனும் இம்மூன்றுமே என்பது,*

**“அறம்பொரு ளின்பம் அடைதனூற் பயனே”**

*என்பதால் விளங்கும். ‘அறம் பொருள் இன்பம் அடைதல்’ என்பதையே, பிற்காலத்தினர் சமயச் சார்பு பற்றி,*

**“அறம்பொரு ளின்பம்வீ டடைதனூற் பயனே”** **(நன்னூல்)**

*எனத் திரித்துக் கூறிவிட்டனர்.*

**“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்**
**கன்பொடு புணர்ந்த ஐந்திணை”** **(களவு -1)**

*எனத் தொல்காப்பியரும் அம்மூன்றனையே பொருளெனக் கூறுதல் காண்க. திருக்குறள், அறம் பொருள் இன்பம் மட்டுங் கூறி, முப்பால்*

எனப் பெயர் பெறுவதே, வீட்டொடு நூற்பயன் நான்கென்பார் கூற்றுக்குச் சான்றின்மை பெறப்படும்.

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றும் **உறுதிப் பொருள்** எனவும் பெயர் பெறும். உறுதிப் பொருள் - மக்கள் அடையும் பொருள் - மக்களின் வாழ்க்கைக் கூறாக நிற்கும் பொருள். எனவே, பொருள் என்பது - அறம் பொருள் இன்பக் கூறுகளான மக்கள் வாழ்க்கை முறைகளே யாகும். இம்முப்பொருளுமே தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கூறப்படுவதால், அவை நம் முன்னையோர் ஒழுகிய ஒழுக்க முறைகளே யாகும்.

உலக வழக்கை யொட்டிச் செய்யுட் செய்யும் புலவர்கள் நாட்டின் பல்வேறிடங்களிலும் வாழ்வோராதலான், ஓரிடத்துக் கோரிடம் மொழிவழக்கு மாறுபடுதல் கூடும். அவ்வாறு மொழிவழக்கு மாறுபடின், அம்மொழியாற் செய்யப்படும் செய்யுள் வழக்கும் மாறுபடும். செய்யுள் வழக்கு மாறுபடின், அச்செய்யுளைப் பயிலும் மக்கள் வாழ்க்கை முறையில் மாறுபாடு உண்டாவதோடு, அச்செய்யுள் வழக்கையே துணையாகக் கொண்டொழுகும் பிற்கால மக்களின் வாழ்க்கை முறை புதியதோர் நிலைமையினை அடைந்து விடும். ஆதலால், தமிழ்நாடு முழுவதும் மொழிவழக்கு மாறுபடாமல் ஒரே நிலையாய் இருத்தற் பொருட்டுச் ***சொல் வரையறையும்,*** சொன்னிலை மாறுபடா திருத்தற் பொருட்டு ***எழுத்து வரையறையும்*** செய்தல் இன்றியமையாத தாகும்.

ஆகவே, பொருளிலக்கணம் உலக வழக்கை ஒரு நெறியில் நடக்குபடி செய்தலானும், சொல்லிலக்கணமும், எழுத்திலக்கணமும் பொருளிலக்கணத்தை அறிதற்குக் கருவியான மொழியியல்பை ஒரு நெறிப் படுத்துதலானும், எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் என்னும் மூன்றும் மக்களின் வாழ்வியலுக்குக் கட்டாயம் வேண்டியவாயின. இதுவே ஒரு மொழியிலக்கணம் செய்வதன் பயனாகும். ஆசிரியர் தொல்காப்பியரும் இம்முறைப்படியே தொல்காப்பியத்தைச் செய்துள்ளாரென்பது அறிந்து இன்புறத்தக்க தொன்றாகும். இதனை,

**“வடவேங்கடந் தென்குமரி**
**ஆயிடைத் தமிழ்கூறு நல்லுல கத்து**
**வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்**
**எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்**
**செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு**
**முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்**
**புலந்தொகுத் தோனே”**

என்னும் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரப் பகுதியால் அறிக. அ இரு முதலின். முதல் - காரணம். வழக்கும் செய்யுளுமாகிய அந்தப் பெரிய காரணத்தினால் நாடி, நிலத்தொடு, கண்டு, எண்ணிப் புலந் தொகுத்தோன் என்க.

எனவே, எழுத்திற் சொல்லும், சொல்லிற் பொருளும் சிறப்புடைய தாகையால், தமிழ் மக்கள் எல்லாரும் பொன்னே போற் போற்றிப் பயின்று பயன் பெறத் தக்கது பொருளிலக்கணமே யாகும். தமிழ் மொழிக்கே தனியுரிமையுடையதும், எழுத்தினும், சொல்லினும் சிறந்ததும், பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை முறையினை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதுமான பொருளிலக்கணத்தைத் தமிழ் மக்கள் புறக்கணித்து வருவதன் காரணந்தான் நமக்கு விளங்கவில்லை. தமது முன்னையோர் போல் பொருளிலக்கணத்தை இடையறாது தொடர்ந்து பயின்று வந்திருப்பரேல், தமிழ்மக்கள் இன்று இரங்கத் தக்க இவ்விழிநிலையை அடைந்திருக்க மாட்டார்கள்; தமிழ்நாடு தமிழரசை இழந்திருக்காது; தமிழ் மொழி இன்றைய இழிநிலையை எய்தியிருக்காது; தமிழ்ப் புலவர்கள் பாடும் பொருளறியாது எதெதையோ பாடிப் பரியும் நிலை ஏற்பட்டிருக்காது.

'பள்ளி மாணவர்களுக்குப் பொருளிலக்கணம் கற்பிக்கக் கூடாது' என விலக்கி, தமிழ் மாணவர்களைத் தங்கள் முன்னையோர் வாழ்க்கை முறையினை அறிய முடியாதவர்களாக்கி, 'தமிழன்' என்னும் பெயருக்குத் தகுதியற்ற கோழைகளாகச் செய்து, தமிழினத்தைத் தாழ்த்தி விட்டனர் பிற்காலக் கல்வித் துறையினர். சாற்றை விட்டுச் சக்கையைத் தின்பது போல். எதைக் கற்கவேண்டுமோ அதை விட்டுச் சாரமற்ற எதெதையோ கற்கலாயினர் தமிழ் மாணவர்கள். கட்டாயங் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டிய பொருளிலக்கணம் கற்கத் தகாத தொன்றாக்கப்பட்டது. இது, இலக்கணத்தோடு நில்லாமல் இலக்கியத்தையும் பிடித்துக் கொண்டது. தமிழ் மக்களின் வாழ்க்கைச் சட்டமாகிய திருக்குறள் இன்பத்துப் பால் அந்நூலுக்கே குற்ற முடையதெனக் கொள்ளப்பட்டது. இது சிற்றின்பம் என ஒதுக்கித் தள்ளப்பட்டது; தமிழ் மக்கள் அதனை வெறுத்தொதுக்கும்படி செய்யப் பட்டது. 'பொருளிலக்கணம் கற்கத் தகாதது' என்னும் அத்தவற்றை எடுத்துக்காட்டி, தமிழ் மக்களுக்கு அப்பொருளிலக் கணத்தின்மேல் விருப்ப முண்டாக்கி, அதனை முனைந்து கற்றுத் தம் முன்னையோர் வாழ்க்கை முறையை யறிந்து, தமது தாழ்நிலைக் கிரங்கி முன்னேறும் படி தமிழ் மக்களைத் தூண்டுவதே இந்நூலின் முழுநோக்கமாகும். தமிழ் மக்கள் இந்நன்னோக்கத்தை நிறைவேற்று வார்களாக.

## 2. பொருளிலக்கணப் பாகுபாடு

தொல்ககாப்பியப் பொருளதிகாரத்திற் கூறப்படும் பொருள் - அகப்பொருள், புறப்பொருள் என இருவகைப்படும். அவற்றுள்,

அகப்பொருளாவது - ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் காதலுற்று, காதல் முதிர்ந்து, பெற்றோர் அறிய மணஞ் செய்து கொண்டு வாழும் வாழ்க்கை முறையினைக் கூறுவது. புறப்பொருளாவது - அக்காதலரது அக வாழ்க்கைக்குப் பயன்படும் - துணை செய்யும் - கல்வி, செல்வம், அரசியல் முதலிய பொருள்கள் பற்றிக் கூறுவது. அகம் - அகத்திணை-அகப்பொருள்; புறம்- புறத்திணை - புறப்பொருள் என்பன ஒரு பொருட் சொற்கள். திணை - ஒழுக்கம். அகப்பொருள் வாழ்வியலும், புறப்பொருள் உலகியலும் ஆகும். அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றுமே, அகம் புறம் என இரண்டாக வகுக்கக் பட்டன. அம் மூன்றும் இவ்விரண்டினும் விரவி நிற்கும்.

## அகப்பொருள்

புறப்பொருளினும் அகப்பொருளே சிறந்தது. அகவொழுக்கம் புறவொழுக்கம் என்னும் இருவகை ஒழுக்கங்களில், புறவொழுக்கம் வாழ்க்கைத் துணையாவதே யன்றி, அகவொழுக்கம்போல வாழ்க்கையை உண்டாக்குவதன்று. உலகுயிர்த் தோற்றத்திற்கே அகவொழுக்கம் காரணமாயிருப்பதனால் எல்லாப் பொருளினும் அவ் வகப்பொருள் சிறந்த தொன்றாகும். உலகுயிர்த் தோற்றமான உருவை யுண்டாக்குவது கருவேயாகும். அக்கருவை யுண்டாக்குவது காமமே யாகும். காமச் சேர்க்கையால் கருவும், கரு முதிர்ந்து உருவும், உருவில் உயிரும் தோன்றுகின்றன. அக்கருவானது ஆண் பெண் என்னும் இருவகை உருவப் பொருள்களில் அமைந்து, தக்க காலத்தில் அவ்விருபாற் கருவும் ஒன்று சேர்ந்து உருவாகிறது. கருவை யுருவாக்குவதில், ஆண்பால் கருவை யொன்று சேர்க்கும் புணர்ச்சிமட்டுமே யுடையது. பெண்பாலோ புணர்ச்சியோடு, கருவை உருவாக்கி, உயிராக்கி, உலகில் விடுவதால், அகவொழுக்கத்திற்கும் உலக வாழ்க்கைக்கும் ஆண்பாலை விடப் பெண்பாலே சிறப்புடையதாகும். அகவொழுக் கத்தில் தலைவி நிலை உயர்ந்திருப்பது இக்கருத்துப் பற்றியே யாகும். மக்களல்லாத மற்றையுயிர்கள் இந்நிலையிலேயே உள்ளமை அறிக.

எனவே, ஆண் பெண் பால்களின் கரு ஒன்று சேரும் தகுதி யடைந்ததும், ஆண்பாலும் பெண்பாலும் ஒன்று கூடுதற்குக் காரணமான காமம் தோன்றுகிறது. ஆண் பெண் இருபாலையும் ஒன்று சேர்த்து, வாழ்க்கை யின்பத்தைத் தந்து, உலகை இடையறாது நடைபெறச் செய்யும் அக்காமப் பொருள் சிறப்புடைய பொருள்களிற் சிறப்புடைய தொன்றாகும். இதைவிடச் சிறந்தபொருள் உலகில் வேறொன்றும் இல்லை. காமம் - இன்பம் - என்பன ஒருபொருட் சொற்கள். காமம் என்னும் சொல்லுக்கு இழிந்த பொருள் கொண்டவர் அகப் பொருளின் பெருமை யறியாதவரே யாவர். திருக்குறளில்

*காமம் என்னும் சொல்லை வள்ளுவர் 50 இடங்களில் கையாண் டுள்ளார். அங்கெல்லாம் உயரிய பொருளே கொண்டுள்ளார். ஆசிரியர் தொல்காப்பியரும்.*

| | |
|---|---|
| **"காமஞ் சாலா இளமை"** | (அகத் -50) |
| **"காமக் கூட்டம் காணுங் காலை"** | (கள -1) |
| **"காமஞ் சொல்லா நாட்டம் இன்மையின்"** | (கள-18) |
| **"காமக் கிழவன் உள்வழிப் படினும்"** | (கள -22) |
| **"காமக் கூட்டம் தனிமையிற் பொலிதலில்"** | (கற் -28) |
| **"காமக் கிழத்தி மனையோள்"** | (கற் -5) |
| **"காமநிலை யுரைத்தல்"** | (கற் -36) |
| **"காமஞ் சான்ற கடைக்கோட் காலை"** | (கற் -51) |
| **"காமங் கண்ணிய மரபிடை தெரிய"** | (பொரு-2) |
| **"உருவு நிறுத்த காம வாயில்"** | (மெய் -25) |
| **"காமப் புணர்ச்சியும்"** | (செய் -186) |

*என்னும் இடங்களிலெல்லாம் உயரிய பொருளே கொண்டுள்ளமை அறிக. 'தீயகாமம்' என்னாவிடத்துக் காமம் என்பது, 'இன்பம்' என்பது போன்ற உயர் பொருளே குறிக்கும். இன்பக் கூறான அகப்பொருள் ஆண் பெண் என்னும் இருபாலின் கண் நிகழும் என்னும் இக்கருத்தையே ஆசிரியர் தொல்காப்பியர்.*

**"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**
**தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்"** (பொருளி -29)

*என எடுத்துரைத்துள்ளார்.*

*இன்பம் என்பது தான் - இன்பமானது, எல்லா உயிர்க்கும் - மக்களே யன்றி, விலங்கு பறவை முதலிய மற்றை உயிர்களுக்கும், அமர்ந்து வரும் மேவற்றாகும் - ஆண் பெண் என்னும் கூறுபாட்டால் பொருந்தி நிகழும். இதனால் இன்பத்தின் பெருமை விளங்கும்.*

*அறிவர்கள் (விஞ்ஞானிகள்) உலக இயற்கைப் பொருள்களின் சேர்க்கை முறையால் புதுப்புதுப் பொருள்களை யுண்டாக்கி உலகைவாழ்விப்பது போலவே, ஆண்பால் பெண்பால் என்னும் வாழ்வியல் அறிவர்கள், ஆண் பெண் கருவை அவை ஒன்று சேரும் பருவமறிந்து ஒன்று சேர்த்து உருவாக்கி, உயிராக்கி உலகை வாழ்வித்து வருகின்றனர். ஆகவே, கருஉருவாகும் நிலையை அடைந்ததும்*

*தானாக எழும் ஓர் உணர்ச்சியாகிய காமத்தால் தூண்டப்பட்ட ஆணும் பெண்ணும் ஒன்றையொன்று நாடிக் கூடிக் களிக்கும் புணர்ச்சியே உலகுயிர்த் தோற்றத்திற்கும், வாழ்க்கை நலத்திற்கும் இன்றியமையாக் காரணமாய் இருப்பதனாலும், அப்புணர்ச்சி நிகழும் அகவொழுக்கமானது இன்றியமையாப் பொருள்களில் ஒன்றாய் இருப்பதனாலும், அவ்வக வொழுக்கத்தின் பெருமையை ஆண் பெண் இருபாலாரும் உணர்ந்து, அதன் தகுதியறிந்து நுகர்ந்து இன்புற்று இனிது வாழ வேண்டும் என்பதையே பழந்தமிழ் மக்கள் அகப்பொருள் எனச் சிறப்பித்து, அதைப் பலவாறு விரித்தும், இலக்கண வரையறை செய்தும், இலக்கியத்திற் பொதிந்தும் பொன்னே போற் போற்றி வந்தனர்.*

*புணர்ச்சிக்குக் காரணமாகிய காதல் அரும்பவே, ஒருவனும் ஒருத்தியும் தாமாகவே எதிர்ப்பட்டுக் கூடுதல் இயற்கையாதலான், அதைத் தடை செய்வதும், இழித்துக் கூறுவதும், அகப்பொருளின் உண்மையை - இயற்கை யாற்றலை - இன்றியமையாப் பயன் பாட்டை - அறியாக் குறையேயாகும். உலகத்தோற்ற நிகழ்ச்சிக்கும், வாழ்க்கை நலத்திற்கும் காரணமான அகவொழுக்கமென்னும்* ***பேரின்பத்தினைத்*** *தகாத வழியிற் செலுத்தியும், தப்பான பொருள் கொண்டும்* ***சிற்றின்பம்*** *என இழிவு படுத்திவிட்டனர்; மக்கள் விலக்கத் தக்க பொருள்களில் ஒன்றாகச் செய்து விட்டனர். இது சமயச் சார்பால் நேர்ந்த தப்பான எண்ணமே யாகும். உலகுயிர்த் தோற்றமே ஆண் பெண் இரு கூறாய் அமைந்திருக்க, அவற்றின் கூட்டுறவே உலகுயிர்த் தோற்றத்திற்குக் காரணமாய் அமைந்திருக்க, அது எங்ஙனம் சிற்றின்பம் ஆகும்? உயிர்கள் அடையும் இன்பங்களில் பெரும் பேரின்பம் அதுவன்றோ? அதைவிடப் பேரின்பம் ஒன்றிருப் பதாகத் துணிந்து கூறுதற்கில்லை.*

**"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்**
**ஒண்டொடி கண்ணே யுள"** **(குறள்)**

**"தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்**
**தாமரைக் கண்ணான் உலகு"** **(குறள்)**

*என வள்ளுவர் கூறுவதும் இக்கருத்துடனே யாம்.*

*1. கண்ணால் கண்டும் காதால் கேட்டும் வாயால் உண்டும் மூக்கால் மோந்தும் உடம்பால் தீண்டியும்* ***இன்புறும் ஐவகையான*** *இன்பமும் இவளிடத்தே உள்ளன. 2. இவளோடு கூடிவாழும் இன்பத்தைவிட நீ கூறும் கண்ணான் உலகின்கண் மிகுதியான இன்பம் உண்டோ? இல்லை. வீழ்வார் - விரும்பப் படுவோர். மென்தோள் துயில் - புணர்ச்சி. தாமரைக் கண்ணான் - இந்திரன்,*

தாமரைக் கண்ணான் உலகு - வானுலகு. பேரின்பத்திற் குரிய நீ இச் சிற்றின்பத்திற் கிவ்வாறாதல் தகாதென்று பார்ப்பானுக்குச் சொல்லியது. அதாவது, 'மனைவியைத் துறந்து காட்டையடைந்து தவம் செய்து வானுலகை யடைந்து இன்புறுக' என்றாற்கு, மனைவி யோடு கூடி வாழும் இல்லற இன்பத்தை விட வேறு இன்பம் - பேரின்பம் - இல்லை என மறுத்துக் கூறியது.

இருவே றுருவினரான ஓர் ஆணையும் பெண்ணையும் ஒன்றாக்கி, 'இருதலைப் புள்ளின் ஓருயிரும்' என்னும் நிலையை உண்டாக்கி, ஒருவர்க்குண்டான நலக்கேடு இருவர்க்கும் ஒத்த பங்காகக் கொண்டொழுகும்படி செய்வது, இருவரையும் முக்கா லோட்ட விளையாட்டினர் நிலையில் வைப்பது, இருபாலிடத்தும் தோன்றி ஒன்றுபட்ட காதலன்பே யாகும். மக்களின் இன்ப வாழ்க்கைக்கு இக் காதலை விடச் சிறந்த பொருளொன்று உண்டெனக் கூறுதற்கில்லை. ஒரு காதலன் தன் காதலியிடம் கூறுவதைப் பாருங்கள்:

**"யாயும் ஞாயும் யாரா கியரோ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?**
**யானும் நீயும் எவ்வழி யறிதும்?**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே"** **(குறுந்தொகை -40)**

அதாவது, 'எனது தாயும் நினது தாயும் ஒருவருக்கொருவர் எம் முறை யினராவர்? என் தந்தையும் நின் தந்தையும் ஒருவர்க்கொருவர் என்ன முறையை யுடைய சுற்றத்தினர்? ஒரு முறையும் இல்லையே. அப்படி யிருக்கவும், நானும் நீயும் எப்படி ஒருவரை யொருவர் அறிந்தோம்? முன்பின் அறியாதவர் நாம். அப்படியிருந்தும் நம் அன்புடைய நெஞ்சங்களின் பயிர் செய்வதற்குத் தகுதியாக உழுது பண்படுத்தப்பட்ட செம்பாட்டு நிலத்தில் பெய்த மழை நீர் போலக் கலந்து விட்டனவே, என்னே காதலின் பெருமை! இன்னாரென்றறியாத இருவர், நான் நீ என்னும் வேறுபாடின்றி ஒரு மனப்பட்டு ஓருயிர் போல்வதற்குக் காரணமான காதலின் பெருமையை என்னென்பது!' என்று வியக்கின்றான் அவன்.

அத்தலைவன் கூறுவது அப்படியே முழுக்க முழுக்க உண்மை தானே! காளைப் பருவத்தையும் கன்னிப் பருவத்தையும் அடையுமுன் அவர்களிருவரும் ஒருவரை யொருவர் கண்டது மில்லை, கேட்டது மில்லை. திடீரென ஒரு நாள் எதிர்ப்பட்டனர், அன்பராயினர், இதற்குக் காரணமென்ன? இருவரிடத்தும் அமைந்த காதலன்புதானே? இனியேனும் அகப் பொருளின் பெருமையை யுணர்ந்து துய்த்து நன்னலம் பெறுவோமாக.

# 4. அகப்பொருட் சுருக்கம்

## காதற் கலப்பு

***1. உலக வழக்கு :*** *பழந்தமிழ் மக்கள் ஆண் பெண் கூட்டு வாழ்க்கையின் உண்மைப் பொருளை யுணர்ந்து, அதற்கேற்பக் காதல் வாழ்க்கை வாழ்ந்து வந்ததால், பருவ முற்ற ஓர் ஆண்மகனும் பெண்மகளும் தனியே கண்டுபேசிக் காதல் கொள்வது இன்று போல் அன்று குற்றமாகக் கொள்ளப்பட வில்லை. அது வாழ்க்கையின் ஒரு கூறாகவே மதிக்கப்பட்டு வந்தது. அக்காதல் வாழ்க்கை கல்வியின் ஒரு பகுதியாகக் கற்பிக்கப்பட்டு வந்தது. அகப்பொருள் நூல்களை அன்று இளைஞர்கள் படிக்கக்கூடா தென்ற தடையில்லை. எனவே, ஒத்த பருவமுள்ள காளையரும் கன்னியரும் கருவொன்றுபடத் தோன்றும் காதலால் தூண்டப் பட்டுத் தத்தமக் கேற்ற துணைவர்களை நாடிவருவர். அங்ஙனம் நாடி வருகையில், பருவம் உருவம் முதலியன ஒத்த ஒருவனும் ஒருத்தியும் குறிப்பால் தத்தம் காதலை வெளியிடுவர். நாளடைவில் காதல் முதிர்ச்சியால் அடிக்கடி எதிர்ப்பட்டுப் பேசிவருவர். இது பெரும்பாலும் பிறர்க்குத் தெரியாமல் நடைபெறும். பின்னர்ப் பிறர்க்குத் தெரியும் படியும் நடந்து கொள்வர். இதனையறிந்த அன்னார் தோழரும் தோழியரும் அவர்தம் பெற்றோரிடம் கூறுவர். இருவர் பெற்றோரும் கலந்துபேசி அக்காதலர்க்கு மணமுடிப்பர். பெற்றோரே அறிந்து மணமுடிப்பதும் உண்டு. ஒரு சிலர் தெரிந்தவர் வாயிலாய்த் தம் கருத்தைப் பெற்றோர்க்குத் தெரிவிப்பதும் உண்டு.*

*அதாவது, ஒருவனும் ஒருத்தியும் காதற் கலப்புற்று வரும்போது, சிலர்தம் தோழர்களிடம் தமது கருத்தை வெளியிடுவர். சிலர்தம் காதலியிடம் நெருங்கிப் பழகும் பெண்களிடம் தெரிவிப்பர். இது இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. சில பெண்கள் தம் தோழியரின் குறிப்பு வேறுபாட்டை - காதற் குறிப்பா லுணர்ந்து, அவர் பெற்றோரிடம் கூறுவர். சில பெண்கள் தம் தோழியரிடம் தாங் கொண்ட காதலைக் குறிப்பா லுணர்த்துவர். சிலர் தம் பாட்டியரிடம் கூறுவர். அவர் பெற்றோரிடம் கூறுவர். பெற்றோர் மனமுவந்து அக்காதலர்க்கே மணமுடிப்பர்.*

*இரண்டொரு முறை எதிர்ப்பட்டுக் காதல் அரும்பினவர், நாற்று நடுதல், களைகளைதல், நெல்லறுத்தல், கதிர் கொய்தல் முதலிய தொழில்களில் ஈடுபடும்போதும், தனியாக ஆடுமாடு மேய்த்தல், விறகு பொறுக்குதல், கீரை பறித்தல் முதலிய செயல் செய்யும்போதும், காளையரும், கன்னியரும் ஒன்றுகூடி நிலாவெளிச் சத்தில் விளையாடும் போதும், இன்னும் பிற வழிகளிலும் எதிர்ப் பட்டுக் காதல் முதிர்வர். '**கம்புக்குக்களைவெட்டக் கூப்பிட்டுத் தம்பிக்குப் பெண் பார்த்ததுபோல**' என்னும் பழமொழி இதற்குச் சான்றாகும். இன்றும் இத்தகைய காதற் கட்டடங்கள் நடந்துதாம் வருகின்றன. ஆனால் காதல் மணம் நடைமுறையில் இன்மையால் பெரும்பாலும் அக்காதலர்க்கே மணவினை நடப்பதில்லை. இவ்வாறு பலவழியிலும் கண்டு காதல் கொள்வது, செய்யுள் வழக்கில் **வழிநிலைக்காட்சி** எனப்படும். (அகத் -16)*

**"நாற்று நடுகையிலே நான்வீச வேதவறி**
**நாற்று நடுகையிலே நாள்மலர்போல் - நாற்று**
**முடிபடவே தான்வெறுத்த மொய்குழலே"**

**"கன்றின் தலைக்கயிற்றைக் காணாம லேமிதிப்பக்**
**கன்றின் குரலன்று காட்டினையே - அன்றொருநாள்**
**கீரை பறிக்கையிலே கிட்டவர வேயண்ணன்**
**மாரை யழைத்தேங்க வைத்தனையே"**

**"களைகளைய வென்றலையைக் காண்டலுமே முன்கை**
**வளைகளைய மன்றறிய வைத்தாய் - இளைகளைய**
**அவ்வண்ணந் தண்ணிலவில் ஆடையிலே நீசெய்த**
**இவ்வண்ணந் தன்னைமற வேனென்றும்"**

**"பருத்தி பறிக்கையிலே பார்த்துப்பார்த் தென்னை**
**வருத்தி யுடல்நலிய வைத்தாய் - ஒருத்தி**
**பறிக்கையிலே வாவென்று பார்வையிலே குட்டி**
**மறிக்கையிலே சொன்ன மயிலே" (நெருஞ்சிப்பழம். 579-602)**

**புலவர் குழந்தை**

*இது ஒரு தலைவன், முன்னாட் காதற்கலப்பைப் பின்னொரு நாள் தன் காதலியிடம் கூறும் கூற்றாகும். இது உலக வழக்கை உள்ளபடி கூறியது. இத்தகைய உலக வழக்குக் கருத்துக்கள் பழந்தமிழ்ச் செய்யுட்களில் நிரம்ப வுண்டு.*

*பின்னும் சில காதலர், ஓரின மாகையாலும், சுற்ற முறையாலும் அடிக்கடி எதிர்ப்பட்டுக் காதல் கொள்வர். இங்ஙனம் பலவழியினும் ஒருவரையொருவர் எதிர்ப்பட்டுக் காதலித்துக் காதல் முதிர்ந்து, பெற்றோர் உடன்பாடு பெற்று மணம் செய்து கொண்டு இனிது இன்புற்று வாழ்ந்து வந்தனர்.*

ஒரு சில பெண்ணின் பெற்றோர் ஏதாவது காரணத்தால் அக் காதற் கலப்பைத் தடுத்தாலோ, அல்லது அவனுக்குக் கொடுக்க மறுத்தாலோ, காதலியின் விருப்பப்படி காதலன் அவளை ஒருவரும் அறியாமல் தன்னூர்க்கு அழைத்துச் சென்று மணஞ் செய்து கொள்வதும் உண்டு. அவ்வாறு அழைத்துச் செல்லின் பெண்ணின் சுற்றத்தார் தேடிச் சென்று, இருவரையும் அழைத்து வந்து மணம் முடித்தலும் உண்டு. இவ்வுடன் கொண்டு செல்லுதல் மிக மிக அரிதாக ஒரு சிலரிடம் நிகழும்.

இன்றும் கள்ளக் காதல் வெளிப்படவே, ஒருவன் ஒருத்தியைக் காணாமல் கூட்டிக்கொண்டு ஓடுவதும், அவ்வாறு ஒருவன் கூட்டிப் போன - ஒருவன் கூடப்போன - பெண்ணை அவனிடமே வாழவிட்டுப் பெற்றோர் அடிக்கடி போய்ப் பார்த்து வருவதும், இருவரையும் அழைத்துவந்து தம் ஊரிலேயே வைத்துக் கொள்வதும் நடைமுறையில் இருந்து வருகின்றன. ஆனால், இன்று அவ்வாறு தன் காதலனுடன் போவதை '***அவனோடு ஒடிவிட்டாள்***' என இழிவாகப் பேசப்படுகிறது. அன்று அது, '***உடன்போக்கு***' எனப் பெருமையாகப் பேசப்பட்டு வந்தது.

மேலும், இருவர் கொண்ட காதலொழுக்கம் வெளிப்படா முன் (பிறரறியாமுன்) பெண்ணின் காமக் குறிப்பை யறிந்த பெற்றோர், தம் பெண் வாழ்க்கைத் துணைவனை நாடுகிறாள் எனக் கொண்டு, ஒத்த பருவ முதலியனவுள்ள வேறொருவனுக்கு மணம் பேசுவதும், அதையறிந்த அப்பெண், தனது பாட்டி மூலமாவது, வேறு பழகிய பெண்கள் மூலமாவது தனது கருத்தைப் பெற்றோருக்குத் தெரிவிப்பதும், பெற்றோர் அவளை அவள் காதலனுக்கே மண முடிப்பதும் உண்டு.

சில பெண்கள் நாணமிகுதியால் தம் கருத்தை வெளியிடாமல், காமத்தால் உண்ணாமலும், உறங்காமலும் உடல்வாடி வெறிபிடித்தவர் போல் இருப்பர். அது கண்ட பெற்றோர், அதன் காரண மறியாது மதிமயங்கிக் குறத்தியிடம் குறிகேட்டும், வெறியாட்டாளனை (பூசாரி) வினாவியும் நோயின் காரணமறிய முயல்வர். அதுகண்ட அப்பெண்கள் தம் தோழியர் மூலம் உள்ளதை யுரைப்பர். பெற்றோர் அவர் காதலர்க்கே மணமுடிப்பர். அச்சமும், அவாவும் மிகுந்தால் ஊணுறக்க மின்மை, உடல் நலிவு, வெறி முதலியன உண்டாகுமென்பது உளநூற் கொள்கை. இது இன்று பருவப் பெண்கள் பேய் பிடித்த தென்று, உண்ணாமல் உறங்காமல் உளறிக்கொண்டு. படுத்த படுக்கையாகக் கிடப்பது போன்றதே. பெரும்பாலும் பருவப் பெண்களே பேய் பிடித்ததென்றாடுதல். இதனை வலியுறுத்தும். காமநோயே பேயாட்டத்திற்குக் காரணமாகும்.

இவ்வாறு நடக்கும் காதற் கலப்பில் பெரும்பாலும் உள்ளப் புணர்ச்சியே நிகழும். அதாவது, ஒருவனும் ஒருத்தியும் ஒருவரை யொருவர் மனத்தாலேயே காதலித்துப் பேசி வருவர். மெய் தொட்டும் விளையாடுவர். அஃதும் உள்ளப் புணர்ச்சியேயாம். செல்வம், வறுமை, உயர்வு, தாழ்வு, சொந்தம், அயல், சேய்மை, அண்மை கருதாது, ஒத்த பருவ முதலியனவுள்ள ஆண்பாலைப் பெண்பாலும், பெண்பாலை யாண்பாலும் விரும்புதல் மக்கட் பிறப்புக்கே யன்றி மற்றை யுயிர்கட்கும் இயற்கை யாகலானும், தத்தம் வாழ்க்கைக்கு வேண்டிய துணைவர்களைத் தேர்ந்தெடுத்து இனிது இன்புற்று வாழ்தல் அவரவர் உரிமையும் கடமையும் ஆகலானும், 'மெய்யுறு புணர்ச்சி' நடக்கினும் குற்றமில்லை. மணத்தைக் குறிக்கும் 'வரைவு' என்பது - வரைந்து கொள்ளுதல் - தெரிந்தெடுத்துக் கொள்ளுதல் என்னும் பொருளதே. ***மணம்*** என்னும் சொல்லுக்கும் ***கூட்டம்*** என்பதே பொருளாகும். தாமே எதிர்ப்பட்டுக் காதல் கொண்ட காதலர் பின் பிரியாமையும், பிரியின் அவர் வாழ்க்கையே பயனற்ற வாழ்க்கையாய்ப் போவதும் இதற்குத்துணை செய்யும்.

இங்ஙனம் காதல் மணம் செய்து கொண்டவர், நெடு நாளாய் உள்ளத்தூறிய காதல் வெள்ளம் கரைபுரள, ஈருடல் ஒருயிராய்க் கூடிக் கலந்தின்புற்று, இருவரும் வாழ்க்கையின் இன்றியமையா இணையுறுப்புக்கள் என்பதை இருவரும் உணர்ந்து, இணைபிரியாமல் இனிது இன்புற்று வாழ்வர். அதன் பின் அவர்கள் தம் வாழ்க்கையின் போக்கையே கருதுவதல்லது வேறொன்றையும் கருதார். ஏன்? ***உருக்கிய பொன்னே போல் அன்னார் 'நான் நீ என்னும் வேறுபாடின்றி' நாம், நமது'*** என்னும் ஒருமனப்பா டுறுவர் என்க.

இன்றும் ஒரே வகுப்பினரோ, அல்லது வெவ்வேறு வகுப்பு ஆணும் பெண்ணுமோ காதல் கொண்டு ஒன்றுகூடி கிழப்பருவம் உற்றும் இருவரும் இணைபிரியாமல் வாழ்ந்து வருவது இதற்குச் சான்று பகரும். ஊரார், உற்றார் ஏச்சும் பேச்சும் அவர்கள் காதலை அசைக்க முடிவதில்லை. பருவகாலத் துண்டான காதலானது. காதலர் இருவர் உள்ளத்தையும் ஒன்றாக இறுகப் பிணைத்து ஒருமையுறச் செய்து, தான் அவர்களை விட்டுப் பிரியினும் அவர்கள் ஒருவரைவிட் டொருவர் பிரியாமல் இருக்கும்படி - பிரிய முடியாத படி - செய்து விடுகிறது. இவ்வாறு ஒருமனப்பட்ட காதலர், இடையில் ஒருவரைவிட்டொருவர் இறக்க நேரின், அத்துடன் அவர்தம் வாழ்க்கை நடத்தி வருவர். இது ஆண் பெண் இருபாலார்க்கும் பொதுவாகும். இதனை, '***காதலி இழந்த தபுதாரநிலை. காதலன் இழந்த தாபதநிலை***' (புறத் -5) என்பர் ஆசிரியர். மனைவி இறந்தபின் மறுமணம் செய்து கொள்ளாமல், பாரி என்னும் சங்ககால வள்ளல் தபுதார நிலையிலேயே இருந்து வந்தனன்.

*உண்மைக் காதற் கலப்புற்று மணந்து கொண்ட மகளிரிற் சிலர், ஒரு மனப்பட்ட தம் கணவர் இறக்கின் உடனுயிர் விடுவர்; சிலர் உடனெரி புகுவர்; சிலர் தாபத நிலையில் - கைம்மையாக - இருந்து வருந்துவர். இவை முறையே **தலையன்பு, இடையன்பு, கடையன்பு** எனப்படும்.*

**"காதலர் இறப்பின் கனையெரி பொத்தி**
**ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்கா**
**தின்னுயிர் ஈவர்; ஈயா ராயின்**
**நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்;**
**நளியெரி புகாஅ ராயின் அன்பரோ**
**டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்**
**பத்தினிப் பெண்டிர்"** **(மணிமேகலை -2: 427)**

*கனைஎரி - மிக்கதீ. பொத்தி - முடி. உலை - கொல்லன்உலை. குருகு - துருத்தி; தீயூதும் கருவி. உயிர்த்து - மூச்சு விட்டு. நளிஎரி - மிக்க தீ - கொல்லன் உலைத் துருத்தி காற்றை வெளிவிடுவது போல உயிரை விடுவர். குளத்தில் குதிப்பதைப் போலத் தீயில் குதிப்பர். உடம்பு அடுவர் - உடம்பை வருத்துவர். உடம்பு அடுதலாவது, வெள்ளரி விதை போன்ற கொட்டையரிசியாலாகிய பழைய சோற்றைப் பிழிந்து போட்டு, உப்பில்லாத குழம்புடன் ஒரு வேளை யுண்டும், பரற் கற்களைப் பரப்பி அதன்மேல் விருப்பில்லாமல் படுத்தும் உடலை வருத்துதல். (புறம் -246).*

*இராவணன் இறந்ததும் அவன் கோப்பெருந்தேவியாகிய வண்டார் குழலி உடனுயிர் நீத்ததும், கோவலனைக் கொன்றது குற்றமெனக் கண்டதும் பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர் விட்டதும் அவன் கோப்பெருந்தேவி உடனுயிர் விட்டதும் தலையன் பிற்கு எடுத்துக்காட்டுக்களாகும். பூதப் பாண்டியன் இறந்ததும் கோப்பெரும் பெண்டு என்னும் அவனது கோப்பெருந் தேவியார் யார் தடுத்தும் கேளாமல் உடனெரிபுக்கது (புறம் -246) இடையன் பிற்கு எடுத்துக் காட்டாகும். இதனை, '**நல்லோள் கணவனுடன் நளியழற் புகீஇச் சொல்லிடை யிட்ட பாலை நிலை**' (புறத் -24) என்பர் தொல்காப்பியர்.*

*ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வரைத் தமிழ் நாட்டுப் பழந்தமிழ்ப் பெண்டிர்களிடை உடன்கட்டையேறும் வழக்கம் இருந்து வந்தது. பழந்தமிழர் - ஆதி திராவிடர் - (பறையர்). பெரும்பாலான பழந்தமிழ்ப் பெண்கள் உடன்கட்டை ஏறிவந்தனர். உடனெரி புக்க அவ்வீரப் பெண்மணிகளுக்குக் கோயிற் கட்டி வழிபாடு செய்து வந்தனர். பறையர் தெருவிலிருக்கும் **வீரமாத்தி** கோயில், அவ்வீரமா பத்தினிகளின் கோயிலேயாகும். **வீரமா பத்தினி** என்பதே, 'வீரமாத்தி' எனத் திரிந்து வழங்கலானது.*

அன்று காதல் மணம் பழக்கத்திலிருந்து வந்ததால் ஒரு மனப்பட்ட மகளிர், கணவரிறந்தபின் தனித்து வாழ விரும்பாது, கணவருடன் உடனெரிபுக்கு வந்தனர். காதல் மணம் புறக்கணிக்கப் படவே உடன்கட்டையேறுவோர் தொகையும் குறையலாயிற்று. பின்னர்க் கணவனை யிழந்த இளம் பெண்கள் வலுக்கட்டாயமாக உடன்கட்டை யேற்றப்பட்டு வந்தனர். ***இராசாராம் மோகனராய்*** என்னும் வங்க நாட்டுப் பெரியாரால் அக்கொடிய வழக்கம் சட்டமூலம் ஒழிக்கப்பட்டது.

அன்று காதல் மணம் செய்து கொண்ட மகளிர் கணவனிறந் ததும் உண்மையான ***தாபத நோன்பு*** நோற்று வந்தனர்; உடலை வருத்தி உயிர் போகா நிலையில் வாழ்ந்து வந்தனர். இன்றோ, காதலின்றிப் பெரும்பாலும் கட்டாய மணம் செய்யப்படுவதால், கணவனை யிழந்த இளம் பெண் பெயரளவில் கைம்மைக் கோலத்துடன் இருந்து வருகின்றனர். கட்டாயங் கைம்மைகளாக்கி வாழப்பிறந் தோரின் வாழ்வு பாழ்படுத்தப்படுகிறது. இக்கொடுமை உடனடியாகச் சட்ட மூலம் ஒழிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

## 2. செய்யுள் வழக்கு

இவ்வாறு காதற் கலப்புற்று மணஞ் செய்துகொண்டு இல்லறம் நடத்தி வந்த உலக வழக்கினையே, செய்யுள் வழக்கில் பாடுதற் கேற்ப, குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என ஒழுக்கம் நிகழிடத்தை ஐந்தாகவும், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஒழுக்கத்தை ஐந்தாகவும் வகுத்தும்; அவ்வொழுக்கம் ஐந்தையும் களவு, கற்பு என இருவகைக் கைகோளாகவும்; அக்கைக் கோள் ஒவ்வொன்றையும் பல கிளவித் துறைகளாகவும் பகுத்தும், தலைவன், தலைவி, தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன், நற்றாய், தந்தை, தன்னை அறிவர், கண்டோர், இளையர், வாயில் கூற்று, கேட்போர் என அத்துறைகளிற் படியும் மக்களைப் பலபடியாகத் தொகுத்தும் புலனெறி வழக்கப்படி இலக்கணம் செய்தனர் ஆசிரியர் தொல்காப்பியர். காதற் கலப்பாகிய உலக வழக்கு, செய்யுள் வழக்கில் அகப்பொருள் எனப்படும். அவ் வகப்பொருள் களவு, கற்பு என இரு வகைப்படும்.

### 1. களவு

அவற்றுள், களவாவது - ஒத்த பருவம், உருவம் முதலியனவுள்ள ஒருவனும், ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் கூடும் கூட்டம்; தமக்கேற்ற வாழ்க்கைத் துணைவரைத் தாமாகவே தேர்ந்தெடுத்துக் கொள்வது.

*1. வேட்டை யாடுதற் பொருட்டு ஒரு மலைச்சாரலை யடைந்த ஒரு தலைவன், தன் தோழரைப் பிரிந்து தனியாக ஓரிடம் செல்ல, அங்குத் தோழியரோடு தினைப்புனங் காத்து வந்த மலைவாணர் மகளொருத்தி, தோழியரைப் பிரிந்து தனியாக வந்து அத்தலைவனை எதிர்ப்பட, இருவரும் ஒருவரை யொருவர் காதலித்து மகிழும் **இயற்கைப் புணர்ச்சியும்;***

*2. முதல் நாட் போலவே மறுநாளும் அதே இடத்தில் இருவரும் எதிர்ப்படும் **இடந்தலைப்பாடும்;***

*3. அங்ஙனம் தலைவியை எதிர்ப்பட்டுப் பிரிந்து சென்ற தலைவன், தன் உயிர்த் தோழனை யடைதலும், அவன் தன் தோழனது மெய்வேறுபாடு கண்டு அதன் காரணங் கேட்டலும், தலைவன் தன்னை வருத்திய தலைவி தன்மை கூறுதலும், தோழன் சென்று தலைவியை ஒரு தனியிடத்தே கண்டு வந்து கூற, தலைவன் சென்று தலைவியைக் கூடுதலும், அதாவது பாங்கன் உடன்பாடு பெற்றுத் தலைவியைக் கூடுதல் ஆகிய **பாங்கற்கூட்டமும்;***

*4. தோழியரால் எப்பொழுதும் சூழப்பட்டுள்ள தலைவியை அவ்வாறே பலநாளுந் தனியாகக் கண்டு பேசுதல் அரிதாகலின், தலைவன் தலைவியின் உயிர்த்தோழியை அறிந்து, அவளிடம் சென்று குறிப்பாகவும் வெளிப்படையாகவும் தன் கருத்தைக் கூற, அவள் பலவாறு ஆராய்ந்து பார்த்து, இருவர்க்கும் காதலுண்மை யுணர்ந்து தலைவியை உடன்படுத்த, தலைவன் தோழியின் உடன்பாடு பெற்றுத் தலைவியை எதிர்ப்பட்டுக் கூடிவரும் **தோழியிற் கூட்டமும்** என அக் களவொழுக்கம் நான்கு வகைப்படும்.*

*1. அங்ஙனம் அவ்விருவர் கூட்டத்திற்கும் தோழி உடன்படும் **தோழி மதியுடம் பாடும்;***

*2. இங்ஙனம் தோழியின் உடன்பாடு பெற்றுத் தலைவன் தலைவியைக் கூடி வரும்போது இது பிறர்க்குத் தெரியின் இழுக்காகு மெனத் தோழி மறுக்கவே, தலைவன், 'நீ மறுத்தால் நானே அக்கள வொழுக்கத்தை வெளிப்படுத்துவேன்' எனக் கூற, தோழி வேண்டாமென விலக்கும் **மடல் விலக்கும்;***

*3. தோழியின் உடன்பாடு பெற்று, தோழியும் தலைவியுங் காட்டிய குறிவழியே சென்று, தலைவன் தலைவியைக் கூடும் **குறியிடமும்;** பகலிற் சென்று கூடும் இடம் **பகற்குறி** எனவும், இரவிற் சென்று கூடும் இடம் **இரவுக்குறி** எனவும் பெயர் பெறும்.*

*4. இவ் விருவகைக் குறியிடத்தும் சென்று தலைவன் தலைவியைக் கூடி வருதல் அருமையாகலான், தலைவியை மணந்து கொண்டு*

வாழ்க்கை நடத்தும்படி தோழி தலைவனை வேண்டும் ***வரைவு கடாதலும்;*** வரைவு - மணம். கடாதல் - வினாதல்.

5. அக் களவொழுக்கம் முதலிற் சிலர் பலர்க்குத் தெரிந்து, பின்னர் ஊர் முழுதும் தெரியவே, பெற்றோர் தலைமகளை வீட்டை விட்டு வெளிச் செல்லாமல் காவல் செய்வர். இது ***இற்செறித்தல்*** எனப்படும். அதனால், தலைமகனைக் காணப்பெறாமையால் தலைமகள் குணமும், குறியும் வேறுபடக் கண்ட பெற்றோர், தலைமகள் இல்லறம் நடத்த விரும்புகின்றாள் என எண்ணி வேறொருவனுக்கு மணம் பேசக் கேட்ட தலைமகள், தன் கருத்தைத் தோழிமூலம் பெற்றோர்க்குத் தெரிவிக்கும் ***அறத்தொடுநிலையும்;*** குறிவேறுபாடு - உடல் வேறுபாடு.

6. தலைவி கருத்தையறிந்த பெற்றோர், அவள் காதலித் தவனுக்கே மணஞ்செய்து கொடுக்கும் ***வரைவும்;***

7. தலைவி அறத்தொடு நின்றும் ஒரு சில பெற்றோர் மணஞ் செய்யக் காலந் தாழ்த்து வரவே, தலைமகனைக் காணப் பெறாது வருந்திய தலைமகள் விருப்பப்படி, தோழி தலைமகளைத் தலை மகனுடன் அனுப்ப, இருவரும் தலைவனூர்க்குச் செல்லும் - தலைமகள் தலைமகனுடன் போகும் - ***உடன்போக்கும்*** எனத் தோழியிற் கூட்டம் ஏழுவகைப்படும்.

இப்பிரிவுகள் ஒவ்வொன்றும் பல கிளவித் துறைகளை யுடையது, கிளவித் துறை - தலைவன் முதலியோர் பேசும் பகுதி. செயல் நிகழ் பகுதியும் இதனுள் அடங்கும்.

புறத்திணைத் துறைகளைச் செயல் நிகழ்ச்சியாகக் கூறும் ஆசிரியர். இவ்வகத்திணைத் துறைகளைக் கிளவித் துறைகளாகக் கூறியுள்ளமை, இத்துறைகள் பெரும்பாலும் நாடக வியல்பில் அமைந்திருப்பத னாலேயே யாமென்க. நாடக இயல்பு - இருவர் உரையாடும் முறையில் அமைதல்.

## 2. கற்பு

கற்பாவது - அங்ஙனம் களவொழுக்கம் ஒழுகிக் காதலன்பு முதிர்ந்து மணந்துகொண்ட காதலர் ஒருமனப்பட்டு இல்லறம் நடத்துதல்.

1. இல்லற நலத்தாலும், இடையறாத இன்பத்தாலும் தலைவனும் தலைவியும் அகமிக மகிழும் மகிழ்ச்சியாகிய ***மலிவும்;*** (மலிவு - மகிழ்ச்சி)

2. அங்ஙனம் இருவரும் மகிழ்வுற்றுக் கூடிக் கலந்து, அப் புணர்ச்சிப் பயனாகிய மக்களைப் பெற்று இன்புற்று வாழ்ந்து

வருங்கால், நாளாகாகத் தலைவனுக்குப் புணர்ச்சியில் சிறிது வெறுப்புத் தோன்றவே, அதுகண்ட தலைவி தன்னை விட்டுத் தலைவன் வேறு மகளிரை விரும்பினாலும் விரும்பலாமென ஐயங் கொண்டு, தலைவனிடத்துள்ள அன்பில் சிறிது மாறுபட ஒழுகும் ***புலவியும்;*** புலவி - மன வேறுபாடு.

3. அப்புலவி நீட்டிக்கும் ***ஊடலும்;*** புலவி மிக்கது - ஊடல்; ஊடல் மிக்கது - துனி எனப்படும்.

4. தலைவியின் ஊடல் கண்ட தலைவன், தான் தவறிலன் எனக் கூறி வேண்ட, தலைவி அவ்வூடல் தணிந்து அன்புறும் ***உணர்வும்;*** தலைவன் உணர்த்த உணர்தல் உணர்வு உணர்ந்தபின் இருவரும் முன்போலக் கூடி யின்புறுவர்.

5. இங்ஙனம் தலைவனும் தலைவியும்,

**"ஊடுதல் காமத்திற கின்பம் அதற்கின்பம்**
**கூடி முயங்கப் பெறின்."** **(குறள்)**

என்றபடி ஊடியும் உணர்ந்தும் கூடியும் இன்புற்றும் இனிது வாழ்ந்து வருகையில், தலைவன் ஓதல், பகை, தூது, காவல், பொருள் முதலியவற்றின் பொருட்டுத் தலைவியைப் பிரிந்து செல்லும் ***பிரிவும்*** எனக் கற்பொழுக்கம் ஐந்து பிரிவுகளாகவும், ஒவ்வொரு பிரிவும் பல கிளவித் துறைகளாகவும் விரித்துக் கூறப்படுகிறது.

மக்களிடை நிகழும் பழக்க வழக்கங்களாகிய உலக வழக்கினையே அகம், புறம் என இரு திணையாகக் கொண்டு பழந்தமிழ்ப் புலவர்கள் செய்யுள் செய்தனர் என்பது,

**"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம்"** **(அகத் -53)**

என்பதால் விளங்கும். நாடக வழக்கம் - செய்யுள் வழக்கம். பாடல் சான்ற புலனெறி வழக்கம் - உலக வழக்கை அழகுறப் புனைந்து புலவர் பாடும் செய்யுள் வழக்கம். அதாவது உலக வழக்கினையே அழகுறப் புனைந்து செய்யுள் செய்தனர் பழந்தமிழ்ப் புலவர்கள் என்பதாம். அவ்வாறு புனைந்து செய்யப்பட்ட இலக்கணமே தொல்காப்பியம். எனவே, நம் முன்னையோர் உலகியல் வழக்கம் - வாழ்க்கைமுறை - இன்னவென ஆராய்ந்தறிவது தமிழ் மக்களாகிய நமது இன்றியமையாக் கடமைகளில் இன்றியமையாத தொன்றாகும்.

# 5. அகத்திணை

நம் முன்னையோர் மக்களின் வாழ்க்கை முறையினை ***அகத்திணை, புறத்திணை*** என இரண்டாகப் பகுத்துள்ளனர் என்பதை முன்னர்க் கண்டோம். அவற்றுள், ***அகத்திணை*** அல்லது ***அகவொழுக்கம்*** என்பது - ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழும் வாழ்க்கை முறையாகும். திணை - ஒழுக்கம். அது ***கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை*** என ஏழு வகைப்படும்.

***கைக்கிளை*** - ***ஒருதலைக் காமம்;*** தலைவனிடத்து மட்டும் நிகழும் காமம். தலைவியிடத்து நிகழின் உள்ளத்தே நிகழ்ந்தொழியும்; வெளிப்படத் தோன்றாது. கை - பக்கம். கிளை - கிளைத்தல், தோன்றுதல்; ஒரு பக்கத்தே தோன்றுதல். அதாவது, தலைவன் தலைவி என்னும் இருவரிடத்தும் நிகழாமல் ஒருவரிடத்து நிகழ்தல்.

***ஐந்திணை*** - ***ஒத்த காமம்.*** இது தலைவன் தலைவி இருவர் மாட்டும் ஒப்ப நிகழ்வது. இது தலைவன் தலைவி இருவர் உள்ளத் தையும் அன்பென்னும் கயிற்றினால் என்றும் இணை பிரியாமல் பிணித்து, இன்ப வாழ்வு வாழச் செய்தலால் ***அன்பின் ஐந்திணை*** எனவும் வழங்கும்.

***பெருந்திணை*** - ***ஒவ்வாக் காமம்;*** பொருந்தாக் காமம் என்றுமாம். கொடிய குட்ட நோய் - பெருநோய் எனப்பட்டது போல, கொடிய காமம் பெருந்திணை எனப்பட்டது. ஒவ்வாக் காமம் - தகாதகாமம். காமம் - இன்பம்.

எனவே, அவ்வகத்திணை - ***ஒரு தலைக் காமம், ஒத்த காமம், ஒவ்வாக் காமம்*** என மூன்றாகத் தொகை பெறும்.

**"கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை யென்ப."** (அகத் -1)

இறுவாய் - இறுதியாக. முற்படக் கிளந்த - முதன்மையாகச் சொல்லப் பட்ட. கைக்கிளையை முதலிலும், பெருந்திணையை இறுதியிலும் கூறி, 'எழுதிணை' என்று தொகை கூறியதால், இடை நின்றது ஐந்திணை எனப்பட்டது.

## 1. அகப்புறம்.

நம் முன்னையோர், தத்தமக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை வரைத் தாமே தேர்ந்தெடுத்து, அன்பொத்து இன்புற்று இனிது வாழ்ந்து வந்தனரேனும், ஒரு கட்டுப்பாட்டுக் குட்பட்டு, வாழ்க்கை முறைக் கொவ்வாதவற்றை விலக்கி, ஒத்தமுறைகளையே கைக் கொண்டொழுகி வந்தனர். அக்கட்டுப்பாட்டை மீறி எவரும் நடவார். அவ்வாறு கட்டுப்பாட்டை மீறி - ***மனம் போனபடி*** - ***நடப்பவர் கீழ்மக்களாவர்.***

**"தேவ ரனையர் கயவர் அவருந்தாம்**
**மேவன செய்தொழுக லான்."** **(குறள்)**

என்பது வள்ளுவர் வாய்மொழி. மேவன - விரும்புவன. '***தடியெடுத்தவன் தண்டற்காரன்*** என்ற தான்றோன்றி மனப்பான்மை, விலங்குணர்ச்சி அன்னார்க் கிருந்ததில்லை. இளமையிலிருந்தே ஏற்ற வாழ்வின் இலக்கணங்கள் - வாழ்க்கை முறைகள் - அறிவுறுத்தப்பட்டு வந்தன. அவ்விலக்கண வரம்புக் குட்பட்டே காதலர்க்ள நல்வாழ்க்கை நடத்தி வந்தனர். அத்கைய ஒத்த அன்புக்கு மாறாக ஒவ்வாத வழியிலும் ஒரு சிலர் நடக்கவுங் கூடுமாகையால், அவ்வாறு நடக்கத் தகாதவை இன்னவென்று எடுத்துக் காட்டி விலக்கினர் ஆசிரியர். அவைதாம் கைக்கிளை, பெருந்திணை என்பன. இவை யிரண்டும் ஒத்த காமமாகிய அகத்திற்குப் புறம் பானவையாகையால் அகப்புறம் எனப்பட்டன. அகத்திணைத் தலைவர்கள் ஒழுகத் தகாதவை அகப்புற ஒழுக்கங்கள்.

### 1.கைக்கிளை

கைக்கிளையாவது - 1. பூப் பெய்தியும் காமக் குறிப்புத் தோன்றாத ஒருத்தியையேனும், பூப்பெய்தாதவளை, அதாவது பருவமாகாத ஒருத்தியைப் பூப்பெய்தினாளெனக் கொண்டேனும், ஒருவன் காதலித்துக் குறிப்பால் தனது காதலை வெளியிட, காமக் குறிப்புத் தோன்றாத அவள், அவன் குறிப்பையறியாது சும்மா இருக்க, அதனால் அவன் பெருந்துன்பம் அடைவான்.

2. அங்ஙனம் அவளிடமிருந்து எதிர்க் குறிப்பைப் பெறாத அவன், 'நான் சும்மா போகவும் தன்னுடைய பேரழகினால், அவள்தான் என் மனத்தைக் கவர்ந்தவள்'. ஆகையால், நான் குற்றமுடையேனல்லன். அவள்தான் குற்றமுடையவள். என்று, தான் நல்லவனென்றும், அவள் கெட்டவளென்றும் கூறிக்கொள்வான்.

3. அவ்வாறு கூறியும், காமக்குறிப்புத் தோன்றாத அவள், எதிர்மொழி கூறாது செல்லவே, தான் மட்டும் சில கூறி இன்புறுவான். இம்மூன்றும் கைக்கிளைக் குறிப்பு எனப்படும்.

**"காமஞ் சாலா இளமை யோள்வயின்**
**ஏமஞ் சாலா இடும்பை எய்தி**
**நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்**
**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்**
**சொல்லெதிர் பெறாஅன் சொல்லி யின்புறல்**
**புல்லித் தோன்றுங் கைக்கிளைக் குறிப்பே."** **(அகத் -50)**

எனக் காண்க.

காமம் சாலா - காமக்குறிப்பு நிரம்பாத. ஏமம் சாலா - தாங்க முடியாத. இடும்பை - துன்பம். திறம் - வகை. தன்னொடு நன்மையும் அவளொடு தீமையும் புணர்த்து. புல்லித் தோன்றும் - பொருந்தித் தோன்றும்.

ஏமஞ் சாலா இடும்பை எய்தலும், தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்தலும், சொல்லெதிர் பெறான் சொல்லி இன்புறலும் - ஆகிய மூன்றும் கைக்கிளைக் குறிப்புக்களாகும்.

தோளும் மார்பும் பெருத்தல், கண்பிறழ்தல், இதழ் துடித்தல் முதலிய பெண்மைப் பருவக் குறிகள் தோன்றியும், பூத்தற் குரிய ஆண்டு நிரம்பியும் சில பெண்கள் பூக்காமல் இருப்பதுண்டு. பூத்தும் சில பெண்களுக்குக் காமவுணர்ச்சி தோன்றாமல் இருப்பதுண்டு. இவை உடற் கூற்றின் இயல்பாகும். இத்தகைய பெண்ணொருத்தியைக் கண்டு அவள் மேற்காதல் கொண்ட ஒருவன், தனது கருத்தைக் குறிப்பாலுணர்த்த, அக்காமக்குறிப்புக்கு அவள் எதிர்க்குறிப்புத் தராமல் செல்வாளாயின் அதையறியாத அவன், இவள்ஏன் இவ்வாறு செல்கிறாள்? நமது குறிப்பை அறிந்து கொள்ளவில்லையோ? எனப் பலவாறு எண்ணித் தனது காதலுணர்ச்சியை அடக்கமுடியாமல் மிகவும் வருந்துவான். அங்ஙனம் வருந்தியவன் அதோடு நில்லாமல், 'ஏ! அழகிய பூங்கொடியே! நின் மணத்தாலும் நிறத்தாலும் என் மனத்தைக் கவர்ந்து நீ யன்றோ என்னை வருத்தினை? ஆகையால், நீயே குற்றமுடையாய். நான் குற்றமுடையேனல்லேன்' என ஒரு பூங்கொடியைப் பார்த்துக் கூறுவது போல, ***முன்னிலைப்புற மொழியாகத் தன் காதற் பெருக்கைப் புலப்படுத்துவான்***. தலை மகளையே 'பூங்கொடி' என்றான்.

முன்னிலைப் புறமொழியாவது - முன்னிலையாகிய தலைமகள் செயலை வேறொன்றன்மே லேற்றி, அவள் உணருமாறு குறிப்பால் கூறுதல்.

அவள் காமக்குறிப்பு அரும்பாதவ ளாகையால், அவன் கூறிய அம்முன்னிலைப் புறமொழியின் குறிப்பை யறிந்து எதிர்மொழி கூறாதிருக்கவே, தன் காதற்பெருக்கால் ஏதாவது சில இன்ப

மொழிகளைக் கூறித் தானே இன்புறுவான். அதையும் உணராது அவள் செல்வாளாயின், அவள் காமப் பருவத்தினள் அல்லள் என்பதை யுணர்ந்து அவள் மேற்கொண்ட காதலை விட்டுச் செல்வான். **எங்காவது ஒரு சிலரிடம் இவ்வாறு அரிதாக நிகழும்.**

ஒருவன் ஒருத்தியைக் கண்டு அவளைக் காமப்பருவத்தாளென்று காதலிப்பதும், பின்னர் அவள் காமப்பருவத்தினள் அல்லள் என்று அறிந்ததும் அவள்மேற் கொண்ட காதலை விட்டுச் செல்வதும் குற்றமன்று. அவளைப் பருவமங்கையல்லள் என அறியாமலன்றோ காதலித்தான். குற்றமுடைய தொன்றை அறியாமற் செய்வது குற்றமாகாது. ஆனால், அவள் தன் குறிப்புக்கு எதிர்க்குறிப்புத் தராது செல்லவும், அதாவது தன்னை விரும்பாது செல்லவும், தான் அவளை விரும்புவதும், அவளைப் பற்றி ஏதாவது சொல்வதும், அவளைப் பின்றொடர்ந்து செல்வதுமே குற்றமுடையதாகும். அத்தகைய கைக்கிளையே இங்குத் தகாக்காமமென விலக்கத்தக்க தாகும்.

இக்கைக்கிளைக் குறிப்பு மூன்றும் ஒரே நாளிலன்றிப் பல நாட்களிலும் நிகழும். ஒரு நாள் எதிர்மொழி பெறான். நாணத்தால் அவ்வாறு எதிர்மொழி யாடாது சென்றாளென எண்ணி, மற்றொரு நாள் எதிர்ப்பட்டுக் குறிப்புரை யாடுவான். அன்றும் அவ்வாறே அவள் செல்லின், அவள் மேற்கொண்ட காதலை விடுவான். பெரும்பாலும் இவ்வாறே உலக வழக்கில் நிகழும்.

இக்கைக்கிளைக் குறிப்பு மூன்றும் ஒருவன் ஒருத்தியின் ஒருமனப் பாட்டுக்குக் காரணமாகாது ஆண்பாலிடத்து மட்டும் ஏற்பட்ட காமமாகையால், ஒத்த வாழ்க்கை முறைக்கு ஏற்றதன்றென நம் முன்னையோர் விலக்கி வந்தனர். இஃதறியார், 'தமிழ் நாட்டில் சிறுமிகளை விரும்பி மணக்கும் வழக்கம் இருந்து வந்தது' எனக் கூறுவாராயினர். அவர்தம் கூற்றுக்கொள்ளத் தக்கதன்று; சான்றில்லாத அக்கூற்று பொருளற்ற போலிக் கூற்றாகும்.

## 2. பெருந்திணை

இனி, கைக்கிளை போலப் பெருந்திணையும் விலக்கத்தக்க ஒழுக்கமே யாகும். குற்றங்களை எடுத்துக்கூறி விலக்குதல் மரபாகலின், பொருந்தாக் காமமாகிய பெருந் திணைக் குறிப்புக்களை ஆசிரியர் நன்கு ஆராய்ந்து எடுத்துரைத்துள்ளார்.

1. தலைமகள் மனத்துள் இசைந்தும் நாணத்தால் வெளிக்கு இசையாள் போல் காட்டினும், தலைமகளை எதிர்ப்பட்டுக் கூடுதலைத் தோழி மறுக்கினும், பெற்றோர் மணஞ்செய்து கொடுக்க மறுக்கினும், தலைவன், 'நான் மடலேறுவேன்' எனக் கூறுதலேயன்றி, மடலேறுதலும்;

2. தலைவன் தன்னின் மூத்தாளை விரும்புதலும், தலைவனும் தலைவியும் பருவமுதிர்ந்தபின் புணர்ச்சியை விரும்புதலும்;

3. பிரிந்து சென்ற தலைவன் வர நாளானால், காம மிகுதியால் தலைவி மனமுடைந்து வருந்துதலும்;

4. மனைவி விரும்பாமல் கணவன் புணர்ச்சியை விரும்புதலும், வலுக்கட்டாமாய்ப் புணர முயலுதலும்; இஃது இருவர்க்கும் ஒக்கும்.

ஆகிய இந்நான்கு செயலும் பொருந்தாக் காமமாகிய பெருந் திணைக் குறிப்புக்களாகும். ***மூத்தாளை விரும்புதல் வரை களவு; பின்னவை கற்பு.***

**"ஏறிய மடற்றிறம், இளமை தீர்திறம்,**
**தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்,**
**மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்**
**செப்பி நான்கும் பெருந்திணைக் குறிப்பே."** **(அகத் - 51)**

என்பவை அவை.

தேறுதல் - தெளிதல். மிடல் - வலி. தொகைஇ - கூடி.

1. நாணத்தால் உடன்படாதாளை வற்புறுத்தினால் மறுத்து விடுவாள். அங்ஙனம் வற்புறுத்துதல் காதலன்புக்கு ஏற்றதன்று. மடலேறுதல் காதலன்புக்குப் புறம்பான செயலாகும்.

2. மூத்தாள் இளையோனைப் பெரும்பாலும் விரும்பாள். அன்றியும் அது உடல்நலக் கேட்டிற்கும் காரணமாகும். பருவ முதிர்ந்த பின் இருவர்க்கும் ஒரே தன்மையான புணர்ச்சி வேட்கை தோன்றாது.

3. பிரிந்து சென்ற தலைவன் வாராமை கண்டு வருந்துதல் மனச் சோர்வையும், உடல் நலிவையும் உண்டாக்குதலோடு, தற்கொலைக்கும் ஏதுவாகும். மீறிய காமம் ஒழுக்கக்கேட்டையும் தரும்.

4. மனைவிக்கு விருப்பமின்றிக் கணவன் புணர நினைப்பதும், வலிதிற் புணர முயலுவதும் மனைவியின் அன்பைக் கெடுத்து, வெறுப்பை யுண்டாக்கி, இனிது நடக்கும் இல்லற நிகழ்ச்சிக்கு இடையூ றுண்டாக்கும்.

எனவே, இவை நான்கு செயலும் இன்ப வாழ்வுக்கு ஏற்றவல்ல வென்று நம் முன்னையோர் விலக்கி வந்தனர். இவை பெரும்பாலும் ஒரு சில கீழ்மக்களிடம், அதுவும் அருமையாக எங்காவது நிகழ்வன வாகும். மேன்மக்களிடம் இவை ஒரு போதும் நிகழா. ஏதோ ஒரு சிலரிடம் அருகி அருமையாக நிகழ்ந்து வந்தவற்றையே எடுத்துக் கூறி விலக்கினார் ஆசிரியர்; அவற்றைப் புலனெறி வழக்கிற்கேற்ப வகைபடப் புனைந்துரைத்தனர்.

## மடலேறுதல்

மடலேறுதல் என்பது - பெற்றோர் தலைவியின் களவொழுக் கத்தைக் கருதாமலும், தலைவி தன் கருத்தைத் தோழி மூலம் பெற்றோர்க் குரையாமலும் தாழ்த்துவரினும், காவல் மிகுதியால் தலைவியை அடிக்கடி எதிர்ப்பட்டுக் கூட முடியாவிடினும், தலைவன் தலைவியின் களவொழுக்கத்தை - தலைவிக்கும் தனக்கு முள்ள தொடர்பை - பலரும் அறியும்படி செய்வதற்காகத் தலைவியின் உருவத்தையும் பெயரையும் பனையோலையில் எழுதி, அதைக் கையிற் பிடித்துக் கொண்டு குதிரைமே லேறிக் கொண்டு, தன் காதலை வெளியிட்டவாறு தலைவியின் ஊர்த் தெருவிடைச் செல்வான். அது கண்ட ஊரார் கூடிப்பேசுவர், ஊரார் பேசும் அவ் வலருக் கஞ்சிய பெற்றோர், அவனுக்கே தம் மகளை மணஞ்செய்து கொடுப்பர். இவ்வாறு ***தலைவன் செய்வதே மடலேறுதல்*** எனப்படும்.

மடல் ஏறுதல் - மடலை ஏந்திக் குதிரைமே லேறி அலருண் டாக்குதல். அலர் - ஊரார் கூறும் பழிப்புரை. அதாவது, தலைமகளின் களவொழுக்கத்தைப் பற்றிப் பேசுதல். இது, '***மடலூர்தல்***' எனவும் வழங்கும். ஊர்தல் - ஏறுதல், ஏறிச் செல்லுதல்.

**"மடன்மா கூறும் இடனுமா ருண்டே"** **(களவு -11)**

என்பதால் இது, '***மடல்மா***' எனவும் வழங்கப் பெறும். மடல் மா - மடல் தாங்கிச் செல்லும் குதிரை. மடல் - பனையோலை. மா - குதிரை. மடல்மாகூறல் - மடலூர்வேன் எனத் தோழியிடம் கூறுதல். மடலில் தலைவியின் உருவம் எழுதுதல், தமிழரின் ஓவியக் கலைத் திறத்தின் பழமைக்குச் சான்றாகும்.

மணத்திற்குமுன் ஒருவன் ஒருத்தியின் உருவமும் பெயரும் எழுதிய ஓலையுடன் குதிரைமேலெறிக் கொண்டு, அவளுக்கும் தனக்கும் உள்ள தொடர்பைக் கூறிக் கொண்டு, அவளூர்த் தெருவிடைச் செல்லும் அத்தகு உரிமையுடன் அன்று களவொழுக்கம் இருந்துவந்த தென்பது குறிப்பிடத் தக்கது.

இன்றும் கள்ளத் தாலி கட்டுதல், அவளுக்கும் எனக்கும் பழக்கம் உண்டென்று பிறரிடம் கூறுதல், வெளிப்படைக் காதற் கடிதம் எழுதுதல் போன்ற செயல்கள் நிகழ்கின்றன. இவை ***மடன்மா கூறல், மடலூர்தல்*** போன்றவையேயாம். இன்றும் ஒழுக்கத்தை மதியாத கீழ்மக்களே இத்தகைய கீழ்மையான செயல் செய்கின்றனர்.

இனி, எத்தகைய காமமிக்க கையறுநிலையிலும் மகளிர் மடலூர்தல் வழக்கமில்லை. அதாவது, தன் காதலன் பெயரைச் சொல்லி, அவனுக்கும் எனக்கும் தொடர்பு உண்டென்று கூறிக்

கொண்டு தெருவில் செல்லும் வழக்கம் இல்லை. பெண்கட்குரிய உயிரினும் சிறந்த நாணுடைமையே இதற்குக் காரணமாகும். இது, இருவகை வழக்கிற்கும் ஒக்கும்.

இன்றும் எத்தகைய பெண்களும் தம் கணவன் பெயரை வாய் விட்டுச் சொல்லுவதில்லை. கணவன் எத்தகைய கொடியவனாயினும், தெருவில் நின்று எந்தக் குலமகளும் பிறரறிய அவன் கொடுமையை வாய்விட்டுக் கூறத் துணியாள். இதுதான் பெண்டன்மை யென்பது. இதனை,

> **"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்**
> **பொற்புடை நெறிமை இன்மை யான."** **(அகத் -35)**

என்கின்றனர் ஆசிரியர்

எத்திணை மருங்கினும் - பெருந்திணைக் குறிப்பான மிக்க காமத்தின் கண்ணும், மகடூஉ மடல் மேல் - பெண்டிர் மடலேறுதல், பொற்புடை நெறிமை இன்மையான - சிறப்புடைய முறைமை இல்லை.

பெண்கள் தெருவில் நின்று தம் காமமிகுதியை வாய்விட்டுக் கூறும் வழக்க மின்மையால், அவ்வாறு எந்த ஒரு பெண்ணும் கூறாளாகையால், 'தேறுதல் ஒழிந்த காமத்து மிகுத்திறம், மிக்க காமத்து மிடல்' என்னும் இரு பெருந்திணைக் குறிப்புக்களினும் பெண்கள் மடலூர்வதாகச் செய்யுட்செய்யும் வழக்கம் இல்லை.

> **"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்**
> **பெண்ணிற் பெருந்தக்க தில்"** **(குறள்)**

என்றார் வள்ளுவரும். இதிலிருந்து, இயற்கையாகவே ஆண்களை விடப் பெண்கள் அடக்கமும், பொறையும், மானமும், நாணமும், பெருமையும், மக்கட் பண்பும் உடையர் என்பதும். ஆண்களின் அடங்காமாறித் தலைமைத் தன்மையால், அவர்தம் மதிப்பிழந்து பழிப்புக்காளாய் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் விளங்குகிற தன்றோ? அத்தகு மேம்பட்ட நிலையில் இருந்து வந்தனர் பழந்தமிழ் மகளிர் என்பது நம்மனோரால் எண்ணியெண்ணி இறும்பூது கொள்ளத்தக்க தொன்றன்றோ? வாழ்க பெண்ணின் பெருமை!

'கைக்கிளைக் குறிப்பே, பெருந்திணைக் குறிப்பே' என்பதனால், கைக்கிளையும் பெருந்திணையும் சிறிது காலமே நிகழும் காமக் குறிப்பும் செயலும் என்பது பெற்றாம். பழங்காலத்தில் களவின் வழியாகவே கற்பு நிகழ்ந்து வந்தது. அதாவது, களவொழுக்க மொழுகிக் காதல் முதிர்ந்து மணஞ்செய்து கொண்டு இல்லறம் நடத்தி வந்தனர். இன்றோ பெரும்பாலும் பெற்றோரே பெண்ணும்

*மாப்பிள்ளையும் பார்த்து மணமுடிக்கின்றனர். இதில், கணவன் மனைவி என்னும் இருவருள். ஒருவர்க்கே அன்பிருப்பின் கைக் கிளையின் பாற்படும்; இருவர்க்கும் ஒருவர்மேல் ஒருவர்க்கு அன்பில்லா திருப்பின் பெருந்திணையின் பாற்படும. கணவனோடு வாழ விரும்பாத பெண்ணை ஒத்து வாழும்படி வற்புறுத்துவதும் பெருந் திணையின் பாற்படும்.*

**"பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே"** **(புறத் -55)**

**"காஞ்சி தானே பெருந்திணைப் புறனே"** **(புறத் -22)**

*அதாவது, புறத்திணையியலில், அகத்திணை யேழற்கும் ஏழு புறத்திணை கூறுகின்றார் ஆசிரியர். அவற்றுள், கைக்கிளைக்குப் பாடாணும், பெருந்திணைக்குக் காஞ்சியும் புறமாகும் என்பதால், ஒத்த காமத்திற்குப் புறம்பான இக் கைக்கிளை, பெருந்திணை என்னும் ஒவ்வாக் காம வொழுக்கமும் அன்று ஒரு சிலரிடை நிகழ்ந்து வந்த நிகழ்ச்சியே யாகும். தமிழர் ஒழுக்கம்பற்றி இலக்கணம் செய்த ஆசிரியர், அவற்றை எடுத்துக் கூறி விலக்கினார். அங்ஙனமன்றி, கைக்கிளை பெருந்திணைக் குறிப்புக்களை ஒழுக்கமாகக் கொண்டு இலக்கணஞ் செய்தாரல்லர். இதனை,*

**"பாங்கன் நிமித்தம் பன்னிரண் டென்ப."** **(களவு -13)**

*என்னும் ஆசிரியர் கூற்றே வலியுறுத்தும். அதாவது, பாங்கன் நிமித்தம் பன்னிரண்டு வகைப்படும். பாங்கன் - தோழன். நிமித்தம் - காரணம். பன்னிரண்டாவன - கைக்கிளைக் குறிப்பு மூன்று, ஐந்திணை, பெருந்திணைக் குறிப்பு நான்கு எனும் இவை. இது,*

**"முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே,**
**பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே."** **(கள -14)**

*என்பதால் விளங்கும். அப் பன்னிரண்டு - முன்னால் உள்ள கைக்கிளைக் குறிப்பு மூன்று; பின்னால் உள்ள பெருந்திணைக் குறிப்பு நான்கு; எனவே, இடையிலுள்ளவை ஐந்திணை என, "பாங்கன் நிமித்தம் பன்னிரண்டு" என்றதற்கு விளக்கம் கூறினார்.*

## கைக்கிளைக் குறிப்பு மூன்றாவன,

**1. காமஞ் சாலா இளமை யோள்வயின்**
**ஏமஞ் சாலா இடும்பை எய்தல்,**

**2. நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்**
**தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்தல்,**

**3. சொல்லெதிர் பெறான் சொல்லி இன்புறல்** **(அகத் -50)**

என்பன. ஒத்த காமமாகிய பாங்கற் கூட்டத்தில், தலைவன் தலைவியைக் கூடுதற்குப் பாங்கன் நிமித்தம் ஆனதுபோல, இம்மூவகைக் குறிப்பினும் தகாதெனத் தலைவனை விலக்குவானாகலின், பாங்கன் நிமித்த மாயினான்.

தான் முன்னர் அவளை அறிந்திருக்கினும், பின்னர்பார்த்து வந்தேனும் இளையள் எனவும், காமக்குறிப் பில்லாதவளை, விரும்பாதவளை விரும்புதல் தகாதெனவும் பாங்கன் விலக்குவான்.

## பெருந்திணைக் குறிப்பு நான்காவன,

1. **ஏறிய மடற்றிறம்,**
2. **இளமை தீர்திறம்,**
3. **தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்,**
4. **மிக்க காமத்து மிடல்** **(அகம் -51)**

என்பன. மடலேறுதல் முதலிய நான்கினும் பாங்கன் இடை நின்று தகாதென விலக்குவானாகலின் நிமித்தமாயினான். புணர்ச்சிக்கே யன்றி, பிரிதல், ஊடல் முதலியவற்றிற்கும் பாங்கன் நிமித்தமாதலை யறிக.

உலக வழக்கினையே ஆசிரியர் செய்யுள் வழக்காகக் கொண்டு இலக்கணஞ் செய்தாராகலின், கைக்கிளை, பெருந்திணை என்னும் இவ்விருவகைத் தகாவொழுக்கங்களும் நிகழாமல் நன்மக்கள் விலக்கி வந்தமை பெறப்படும். இன்றும் இவ்விருவகை யேழ்திறத் தகாவொழுக்கங்களும் ஒரு சிலரிடை நிகழுதல் அறியத் தக்கதே. இத்தகைய தீய ஒழுக்கங்களின்றி நல்வாழ்வு வாழ்வதே நன்மக்கள் கடமையாகும். அத்தகைய தீய ஒழுக்கங்கள் நாட்டில் நடைபெறாமல் கண்காணித்து வருதல் அறிவுடைய மேன்மக்கள் கடப்பாடாகும்.

## 2. ஐந்திணை

அதாவது, ஐவகையான ஒழுக்கம். அவை - குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்பன. இவ்வைந்துமே - குறிஞ்சி முதலிய இவ் வைந்தொழுக்கங்களுமே களவு, கற்பு என இரண்டாக வகுத்துக் கூறப்படும். குறிஞ்சி முதலிய ஐந்தும் இடத்தையும், ஒழுக்கத்தையும் குறிக்கும் பொதுச் சொற்கள். குறிஞ்சி என்பது - குறிஞ்சி நிலத்தையும், புணர்தல் என்னும் ஒழுக்கத்தையும் குறிக்கும். பிறவும் அன்ன.

1. **தலைவனும் தலைவியும் கூடி மகிழ்தல் - குறிஞ்சி**
2. **தலைவன் தலைவியைப் பிரிதல் - பாலை.**

3. தலைவன் பிரியின் தலைவி ஆற்றியிருத்தல் - முல்லை.

4. தலைவனது பிரிவாற்றாமையால் தலைவி இரங்கல்- நெய்தல்.

5. தலைவனோடு தலைவி ஊடல் ------- மருதம்.

"போக்கெல்லாம் பாலை, புணர்தல் நறுங்குறிஞ்சி,
ஆக்கஞ்சே ரூடல் அணிமருதம், - நோக்குங்கால்
இல்லிருத்தல் முல்லை. இரங்கல் நறுநெய்தல்
சொல்லிருந்த நூலின் றொகை"

என்னும் பழம்பாட்டால் அறிக,

ஒருவனும் ஒருத்தியும் கூடி வாழும் வாழ்க்கை முறையினை அகத்திணை எனவும், ஐந்திணை எனவும், களவெனவும், கற்பெனவும் தொகுத்தும் வகுத்தும் செய்யுள் செய்து சீருஞ் சிறப்புடன் வாழ்ந்து வந்த நம் முன்னையோரின் வாழ்க்கை முறை அறிந்து இன்புறற் பாலதொன்றாகும். இத்தகைய சீரிய வாழ்க்கை முறையாகிய அடிப்படையின் திண்மையினாலேயே எவ்வளவோ சூறாவளியும், பெருமழையும், பேரிடியும், தத்தம் முழுவலி கொண்டு தாக்கியுங் கூடத் தமிழினம் என்னும் தனிப்பெருங் கட்டிடம் இன்னும் அழிந்தொழிந்து சிதையாமல் இருந்து வருகிறது.

## 1. முதல் கரு வுரிப்பொருள்

இன்ப வொழுக்கமாகிய குறிஞ்சி முதலிய ஐந்திணையும் இனிது விளங்குதற் பொருட்டு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று பொருள் வகுத்து வைத்தனர் நம் முன்னையோர். முதல் கரு உரி என்னும் அம் முப்பொருளும் அமையச் செய்யுள் செய்து, மக்கள் வாழ்வைச் செம்மைப் பட நடத்தி வந்தனர் செந்தமிழ்ப் புலவர்கள். அம் முப்பொருளின் வகுப்பு முறையையும் வைப்பு முறையையும் நோக்கின், நம் முன்னை யோராகிய பழந்தமிழரின் அறிவு நுணுக்கமும் ஆராய்ச்சித் திறனும் அறிந்து வியக்கத் தக்கனவாகும்.

### 1. முதற் பொருள்

நிலம், காலம் என்னும் இரண்டும் முதற்பொருள் எனப்படும். இவை, கருப்பொருளும் உரிப்பொருளும் தோன்றுதற்கு முதலாகிய பொருள். கருப்பொருள் இருத்தற்கும், உரிப்பொருள் நிகழ்தற்கும் முதற்பொருள் எனினுமாம். முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என நிலம் ஐந்து வகைப்படும். பெரும்பொழுது, சிறுபொழுது எனக் காலம் இரண்டு வகைப்படும்.

**நில முதற்பொருள்**

*காடும் காடு சார்ந்த இடமும் முல்லை நிலம் எனவும், மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனவும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலம் எனவும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலம் எனவும் பெயர் பெறும். காடு - மரங்களடர்ந்த இடம். காடு சார்ந்த இடம் - புன்செய்க் காடுகள். மலைசார்ந்த இடம் - பக்கமலை, மலைச்சாரல். வயல் சார்ந்த இடம் - தோட்டம். கடல்சார்ந்த இடம் - கடற்கரை.*

*பாலைக்குத் தனியாக நிலமில்லை. முதுவேனிற் காலத்தில், காடும் மலையும் வளம் பிரிந்த வறண்ட நிலையே பாலை எனப்படும். பாலை - பிரிவு. வளம் பிரிந்ததால் அப் பெயர் பெற்றது. அக்கால அந்நிலங்களே பாலைநிலம் எனப்படும்.*

**"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து**
**நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்**
**பாலை என்பதோர் படிவங் கொள்ளும்" (சிலப்.11:64-5)**

*என்னும் இளங்கோவடிகள் வாக்கா னுணர்க. இதனாலே தான் தமிழகம் நானிலம் எனப்பட்டது.*

*முறைமையில் திரிதல் - தன்மை திரிதல்; அதாவது கடுவெயிலால் நிலம் வறண்டு, மரம் செடி கொடிகள் இலை யுதிர்ந்து போதல். நல் இயல்பு - நிழலும் குளிர்ச்சியும். நடுங்கு துயர் உறுத்தல் - அங்குச் செல்வோர் நடுங்கும்படி துன்பம் செய்தல். படிவம் - வடிவம்; வறண்டு காய்ந்து சுடுந்தன்மை.*

*'பொன்போலும் கள்ளிப் பொறிபறக்கும் கானல்' எனவும், 'விழுந்ததுளி அந்தரத்தே வேம்' எனவும் - பாலைநிலத் தன்மை புனைந்துரைக்கப்படும். இப் பாலை நிலத்தின் வழியாகவே தலைவன் தலைவியை உடனழைத்துச் செல்லும்* ***உடன்போக்கு*** *நிகழ்வதாகவும், தலைவன் தலைவியைப் பிரிந்து இப் பாலை நிலத்தைக் கடந்தே செல்வதற்காகவும் செய்யுள் செய்தல் மரபு. இது, சுரம் எனவும் வழங்கும்.*

## கால முதற்பொருள்

*மழை, பனி, வெயில் என்னும் பருவ மாறுபாட்டைக் கொண்டு, நம் முந்தையோர் ஓராண்டை ஆறு பருவங்களாகப் பகுத்துள்ளனர். அவை - கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன. கார் - மழைக்காலம். கூதிர் - குளிர். கூதிர் என்பதே இன்று 'கூதல்' எனத் திரிந்து வழங்குகிறது. 'கூதல் அடிக்கிறது' என்னும் வழக்கை யறிக. முன்பனி - முன்னிரவில் பனிப் பெய்யுங்காலம். பின்பனி - பின்னிரவில் பனிப் பெய்யுங் காலம். வேனில் - வெயில். இவ்வாறு பருவமும் ஆவணி முதல் இவ்விரண்டு மாதங்களாகும்.*

| | |
|---|---|
| 1.ஆவணி புரட்டாசி - கார் | 4. மாசி பங்குனி - பின்பனி |
| 2. ஐப்பசி கார்த்திகை -கூதிர் | 5. சித்திரை வைகாசி - இளவேனில் |
| 3. மார்கழி தை - முன்பனி | 6. ஆனி ஆடி - முதுவேனில் |

பின்பனிக் காலமாகிய பங்குனி மாதம் இன்று கடுவெயிற் காலமாக இருக்கிறது. '**பங்குனி மாதத்து வெயில் போல**' என்பது பழமொழி. பருவமழை தொடங்கும் காலம் இன்று ஆடிமாதம் ஆகும். '**ஆடிப் பட்டம் தேடி விதை**' என்னும் பழமொழி இதற்குச் சான்று பகரும். ஆனி மாதத்திலேயே சில இடங்களில் காட்டுக்கம்பு விதைக்கிறார்கள். இது, 'பருவத்துப் பயிர்' எனப்படுகிறது. இதனால் தெரிவதென்ன? தொல்காப்பியர் காலத்தைவிட இன்று பருவ காலம் ஏறக்குறைய ஒரு மாதம் முன்னர்த் தொடங்குகிறது. இம்மாறுதல் உலகின் சுழற்சி மாற்றத்தால் ஏற்பட்டதாகும்.

ஆஃச்திரேலியா இவ்வுலகுடன் சேர்ந்ததன்று. அது ஒரு தனித் துண்டமாகும். அதாவது, உலகின் இழுப்பு வன்மைக் குட்பட்டு உலகின் மீது வந்து விழுந்த ஒரு விண்வீழ்மீனின் பகுதியே யாகும் அது. அம் மீன் விழுந்த தாக்குதலினாற்றான் அதுவரை செங்குத்தாய்ச் சுற்றிக்கொண்டிருந்த உலகு, இருபத்தாறு பாகை சாய்ந்து, பின் அதற்கு வன்மை குறையக் குறையச் சாய்வும் குறைந்து இன்று இருபத்து மூன்றரைப் பாகை யளவில் சாய்வாக குறைந்து இன்று இருபத்து மூன்றரைப் பாகை யளவில் சாய்வாக ஓடுகிறது என்கின்றனர் வான் ஆராய்ச்சி அறிஞர்கள். இம்மாற்றமே அப்பருவ மாறுபாட்டுக்குக் காரணமாக இருக்கலாம்.

இப்பருவ மாறுபாட்டை நோக்கின், கார்முதலிய ஆறு பருவங்களும் ஆவணி முதல் இவ்விரண்டு மாதங்களில் நடக்கும் எனக் கண்டறிந்த காலத்தின் பழமை எண்ணி இன்புறத்தக்க தொன்றாகும். இத்கைய ஆராய்ச்சித் திறத்தையுடைய தமிழர் நாகரிகத்தின் பழமை அதைவிட அறிந்து இன்புறத்தக்க தொன்றாகு மன்றோ!

ஒரு நாளினை - மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல் என ஐந்தாகப் பகுத்துள்ளனர். வைகறை - கோழி கூவும் நேரம். '**வைகறைத் துயிலெழு**' என்றார் ஔவையார். இது, '**விடியற்காலம்**' எனவும் வழங்கும். '**கோழி கூப்பிடு நேரம்**' என்பது நாட்டு வழக்கு. காலை - பொழுது கிளம்பும் நேரம், ஆசிரியர் இதனை, 'எற்பாடு' என்கின்றார். ஏற்பாடு - ஞாயிறு தோன்றும் நேரம். எல் - ஞாயிறு. பாடு - படுதல் - தோன்றுதல். '**வைகறை விடியல் மருதம், எற்பாடு நெய்தல்**' (அகத் -8) வைகறை விடியல் - வைகறையாகிய விடியல்.

*கார் முதலிய ஆறு பருவமும் பெரும்பொழுது எனவும், மாலை முதலிய ஐந்து வேளையும் சிறுபொழுது எனவும் பெயர் பெறும். பெரும்பொழுது - **பருவம்** எனவும். சிறுபொழுது - **பொழுது** எனவும் வழங்கப் பெறும். இவ் விருவகைப் பொழுதும் புணர்ச்சி முதலிய உரிப் பொருள்கள் நிகழும் காலமாகும்.*

*காலையில் தாமரை மலர்கிறது. மாலையில் மல்லிகை மலர்கிறது. இரவில் குமுதம் மலர்கிறது. சித்திரையில் மாம்பழம் பழுக்கிறது. ஆடியில் பனம்பழம் பழுக்கிறது. இங்ஙனமே, முல்லை முதலிய ஒழுக்கங்களும் ஒவ்வொரு காலத்தே ஒவ்வொன்று நிகழும்.*

*கார் காலத்து மாலையில் முல்லையொழுக்கம் நிகழும். கூதிர், முன்பனிக் காலத்து யாமத்தில் குறிஞ்சி யொழுக்கம் நிகழும். வைகறையில் மருத வொழுக்கமும், காலையில் நெய்த லொழுக்கமும் நிகழும். பின்பனி, இளவேனில், முதுவேனிற் காலத்து நண்பகலில் பாலையொழுக்கம் நிகழும். அம் மூன்று பருவத்து நண்பகலினும் பாலையொழுக்கம் நிகழு மென்பதாம். நண்பகல் - நடுப்பகல். மருதம், நெய்த லொழுக்கங்கள் பெரும்பொழு தாறினும் நிகழும்.*

| **ஒழுக்கம்** | | **பெரும்பொழுது** | **சிறுபொழுது** |
|---|---|---|---|
| *1. முல்லை* | - | *கார்* | *மாலை* |
| *2. குறிஞ்சி* | - | *கூதிர்* | |
| | - | *முன்பனி* | *யாமம்* |
| *3. மருதம்* | - | | *வைகறை* |
| *4. நெய்தல்* | - | | *காலை* |
| *5. பாலை* | - | *பின்பனி*<br>*இளவேனில்*<br>*முதுவேனில்* | *நண்பகல்* |

*இன்ன இன்ன ஒழுக்கம் இன்ன இன்ன காலங்களில் நிகழும் என ஐவகை யொழுக்கத்திற்கும் பெரும்பொழுது, சிறு பொழுதுகளை வரையறை செய்திருக்கும் நம் முன்னையோரின் அறிவியல் நுணுக்கத்தின் நுட்பந்தான் என்னே! இன்றைய அறிவியல் ஆராய்ச்சியாளரும் கண்டறியாத அவ்வளவு நுண்ணிய ஆராய்ச்சித் திறனாகும் இது. இன்ன ஒழுக்கம் இன்ன காலத்தில்தான் நடக்கும் என்னும் வரையறை எளிதில் கண்டறியும் ஒன்றன்று. நெடுங்கால ஆராய்ச்சிக்குப் பின்னர்க் கண்டறிந்த உண்மை முடிவாகும். இக் கண்டு பிடிப்பே தமிழ்மக்களின் பெருமைக்கோர் அகச் சான்றாக நின்று நிலரவுகிறது. அவ்வளவு அறிவுத்திறன். தமிழ்மக்களால் அறிந்து இன்புற முடியாத*

நிலையில், குப்பையில் மறைந்து கிடக்கும் குருமணிபோல் கிடக்கிறது. அம் மணியை யெடுத்து மாசகற்றி மாண்பயன் எய்துவது தமிழ் மக்கள் கடமையாகும்.

**2. கருப்பொருள்**

| | | |
|---|---|---|
| 1. தெய்வம் | 5. மரம் | 9. பறை |
| 2. உணவு | 6.பூ | 10. நீர் |
| 3. விலங்கு | 7. தொழில் | 11. ஊர் |
| 4. பறவை | 8. யாழ் | |

என்பன கருப்பொருள் எனப்படும். உணவு - அவ்வந் நிலத்தில் விளையும் உணவுப் பொருள். நீர் - யாறு, குளம், சுனை, கிணறு முதலியன.

முல்லை முதலிய ஒழுக்கம் பற்றிப் பாடும்போது அவ்வந் நிலத்திற் குரிய தெய்வம், உணவு, விலங்கு, பறவை, மரம் முதலிய கருப் பொருள்கள் அமையும்படி பாட வேண்டும். இது, திணையை உரிப்பொருளை - எளிதில் அறிவதற்கு ஏற்ற கருவி. இதனால், பழந்தமிழ் மக்கள் வாழ்க்கையின் அடிப்படையிலேயே ஒழுக்கங்களை அமைத்து இருந்தனர் என்பது வெளிப்படையாம். யாழ், பறை - மொழி யறிவைக் குறிக்கும். இவை இசைத்தமிழ்க் கருவிகளாதல் அறிக. அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை முதலிய சங்க மருவிய அகப்பொருள் நூல்களெல்லாம் இக் கருப் பொருள்களை அமைத்துப் பாடப்பட்டுள்ளமை ஆண்டுக் கண்டறிக.

**எடுத்துக்காட்டாக, முல்லைக்கு,**

1. தெய்வம் - மாயோன்.
2. உணவு - வரகு, சாமை, பயறு வகைகள்.
3. விலங்கு - ஆடு, மாடு, மான், முயல்.
4. பறவை - காட்டுக்கோழி, காடை.
5. மரம் - கொன்றை, குருத்து.
6. பூ - முல்லை, பிடவு, தோன்றி.
7. தொழில் - ஆடுமாடு மேய்த்தல், உழுதொழில்.
8. யாழ் - முல்லையாழ்.
9. பறை - ஏறுகோட்பறை.
10. நீர் - கான்யாறு.
11. ஊர் - பாடி, சேரி, பள்ளி.

அவ்வந் நிலத்திற் குரிய மக்களும் கருப்பொருளே யாவர். ஈண்டுக் காட்டப்பட் டுள்ளவை போக, வேறு விலங்கு, பறவை, மரம் முதலிய அந்நிலத்தில் இருக்கு மேனும், இவை சிறப்புடையவை எனக்கொள்க. மற்றவையும் கருப்பொருாதற் குரியவையே. ஏறு கோட்பறை - ஏறு தழுவும்போது அறையும்பறை.

இனி, ஒரு நிலத்தைப் பாடும்போது அந்நிலத்திற்குரிய கருப்பொருளை அமைத்துப் பாடுதலேயன்றி வேறு நிலத்திற்குரிய, பூ, புள் முதலிய கருப்பொருள்கள் அமையும்படி பாடினும், அவை பாடப்படும் அந்நிலக் கருப்பொருள்களாகவே கொள்ளப்படும். (அகத் 19).

**தெய்வம்**

முல்லைக்கு மாயோனும், குறிஞ்சிக்குச் சேயோனும், மருதத்திற்கு வேந்தனும், நெய்தற்கு வருணனும் தெய்வங்களாவர். காடும் மலையுமாகிய முல்லையும் குறிஞ்சியும் முதுவேனிற் காலத்தே வளம் பிரிந்து வறண்டு தோன்றும் நிலையே பாலையாதலால், பாலைக்குத் தனியாக நிலமில்லை. எனவே, முல்லை குறிஞ்சித் தெய்வங்களே பாலைக்கும் தெய்வமாகும். இது,

**"மாயோன் மேய காடுறை யுலகமும்,**
**சேயோன் மேய மைவரை யுலகமும்,**
**வேந்தன் மேய தீம்புன லுலகமும்,**
**வருணன் மேய பெருமண லுலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"** **(அகத் -5)**

என்பதனாற் பெறப்படும். மேய - மேவிய - விரும்பிய - விரும்பிக்காத்த. காடுறை உலகம் - முல்லை நிலம். மாயோன் விரும்பிக்காத்த காடுறை யுலகம் முல்லை நிலம் என்று சொல்லப்படும் என்பதாம். இவ்வாறே ஏனை மூன்றும். சொல்லிய முறையால் சொல்லவும் படும் - முல்லை முதலாக, முன்னோர் சொல்லிய முறைப்படியே சொல்லப்படும் என்பதாம். பின்னரும், '***முல்லை முதலாச் சொல்லிய முறையால்*** (அகத் - 28) என்பதால், இவ்வைப்பு முறை என்பது பெறப்படும். '***சொல்லவும்படும்***' என்னும் உம்மையால், இம் முறை மாறியும் சொல்லப்படும் எனக் கொள்க.

கருப்பொருள் களி லொன்றான, மாயோன், முதலிய தெய்வங்களைப் பற்றி ஆராய்ந்து துணியுமுன், அவ் வாராய்ச்சிக்கு உறுதுணையாகப் பழந்தமிழ் மக்களின் கடவுட் கொள்கை இன்னதென ஆராய்ந்து துணிதல் இன்றியமையாததாகும்.

**“மக்கள் தாமே ஆறறி வுயிரே”** **(மரபி -33)**

*என, மற்றை உயிர்கட் கில்லாத ஓர் அறிவு மக்கட்கு உண்டென உரைக்கின்றார் ஆசிரியர். அவ் வாறாவ தறிவாகிய மனவுணர்ச்சி தான் பகுத்தறிவு என்பது. நன்மை தீமைகளைப் பகுத்தறியுங் காரணத்தால் அது அப் பெயர் பெற்றது. மனவுணர்ச்சியாகிய அவ் வாறாவதறி வில்லாதவரை ஆசிரியர்* ***மாக்கள்*** *என்கின்றார்.*

*மா - விலங்கு. மாக்கள் - மனவுணர்ச்சி யில்லாதவர். பகுத்தறி வில்லா மாக்களை '**ஐயறிவின**' என அஃறிணைப் பொருளாகக் கூறியிருத்தலே பகுத்தறிவின் இன்றியமையாச் சிறப்பியல்பு விளங்கும். மாந்தருள் ஒரு சிலரே நன்கு மனவுணர்ச்சி அமையப் பெற்றவராவர். அத்தகையினரே **நன்மக்கள், உயர்மக்கள், மேன்மக்கள், அறிஞர், பெரியார்** என்னும் பெயர்கட் குரியவராவர். அப் பகுத்தறி வுடைய உயர் மக்கள்பாற் பட்டதே உலகியல். “**உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே**” என்பது திவாகரம். உயர்மக்கள் பாற்பட்ட அப்பகுத்தறிவின் ஆராய்ச்சித் திறத்தால் - பகுத்துணர் பான்மையால் - ஏற்பட்டதே கடவுள் நம்பிக்கை. பகுத்தறிவில்லா ஏனை உயிர்கட்கு அந் நம்பிக்கை யில்லாமையே இதற்குச் சான்று பகரும்.*

*மக்கள் என்று பகுத்தறிவுப் பயன் கொண்டனரோ அன்று தொட்டே, '**தம்மினும் மேலானதொன் றுண்டு;** தமது அறிவுக்கு எட்டாத - தமது அறிவுக்கு அப்பாற்பட்டதொன் றுண்டு; தமது ஆற்றலுக்கு மேலான ஆற்றலுடையதொன்றுண்டு; உலகியல் நிகழ்ச்சி, ஞாயிறு திங்களின் தோற்ற மறைவு, காற்று, மழை, மின்னல், இடி முதலிய வற்றிற்குக் காரணமான தொன்று, உலகுயிர்த் தோற்றத்திற்கு, உயிர்கள் கருவாகி உருவாகக் காரணமான தொன்று, எல்லாம் வல்ல தொன்று உண்டு' என்று எண்ணலாயினர். அவ்வெண்ணமே கடவுள் உணர்ச்சிக்கு முதற்காரணமாகும். இது பற்றித் தம் அறிவுக் கெட்டின மட்டும் ஆராய்ச்சியும் செய்து தான் வந்திருக்கிறார்கள்.*

*அத்தகைய ஆற்றலுடைய தொன்றை, எல்லாம் வல்ல தொன்றை வாழ்த்தி வணங்கினால், அது தமக்கு நன்மையை யுண்டாக்கும்; தீமையைப் போக்கும், தாம் விரும்புவதைத் தரும் என்று நம்பினர். அத்தகைய நம்பிக்கையே இன்றுள்ள கடவுள் வேறுபாட்டுக்கும், கடவுட் கொள்கை வேறுபாட்டுக்கும் காரணம் எனலாம். எனவே, பண்டு தொட்டே கடவுள் நம்பிக்கையும் இருந்துதான் வந்திருக்கிறது. தமிழ் மக்களும் அத்தகைய கடவுள் நம்பிக்கை உடையவர்களாகத் தான் இருந்து வந்திருக்கிறார்கள்.*

1. **“தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவி”** **(கிளவி - 4)**
2. **“பால்வரை தெய்வம்”** **(கிளவி -57)**

3. "தெய்வம் உணாவே" (அகத் -18)

4. "உள்ளுறை தெய்வம்" (அகத் -47)

5. "அமரர்கண் முடியும் அறுவகை" (புறத் -26)

6. "கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" (புறத்-38)

7. "காமப் பகுதி கடவுளும் வரையார்" (புறத் -28)

8. "நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்" (அகத் -36)

9. "தெய்வம் அஞ்சல்" (மெய்ப் - 24)

10. "வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப" (செய்யு -110)

11. "தெய்வம் வாழ்த்தல்" (களவு -24)

12. "நாமக் காலத்து ஏமுறு கடவுள்
உண்டெனத் தோழி ஏத்திய மருங்கினும்" (கற் -5)

13. "கிழவோட் சுட்டிய தெய்வக் கடத்தினும்" (கற்-9)

14. "அமரர்ச் சுட்டியும்" (கற் - 5)

15. "தேவர்ப் பராஅய முன்னிலைக்கண்ணே" (செய் -138)

16. "ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோர் அமுதம் புரையுமால் எமக்கு" (கற் -5)

17. "இமையோர் தேஎத்தும் எறிகடல்" (பொரு -54)

*எனத் தொல்காப்பியத்தில் கடவுள் பற்றிய குறிப்புக்கள் பல வருகின்றன.* ***தெய்வம், தேவர், அமரர், வானோர், இமையோர், கடவுள்*** *என்பன ஒரு பொருட் சொற்கள்.*

*1.2. தெய்வம் என்னும் சொல்*

*3,4. 'மாயோன் மேய' (அகத் -5) என்னும் சூத்திரத்தில் கூறும் தெய்வம்.*

*5. அமரர்கண் முடியும் அறுவகை - 'பிறப்பு வகையானன்றிச் சிறப்பு வகையான் தேவர்கண் வந்து முடிதலுடையனவாகிய அறுமுறை வாழ்த்து'*

*'அமரர் கண்ணே வந்து முடியுமெனவே, அமரர் வேறென்பதூஉம், அமரர் கண்ணே வந்து முடிவன வேறென்பதூஉம், பெற்றாம். அவை - முனிவரும் பார்ப்பாரும் ஆனிரையும் மழையும்*

முடியுடை வேந்தரும் உலகுமாம். இவை தத்தம் சிறப்பு வகையான் அமரர் சாதிப் பாலவென்றல் வேதமுடிவு. இதனானே பிறப்பு முறையாற் சிறந்த அமரரை வாழ்த்தலும் சொல்லாமலேயே முடிந்தது' (புறத் -29. நச்)

முனிவர் - நீத்தார் -துறவிகள். ஆனிரை - மாட்டுக் கூட்டம். முடியுடை வேந்தர் - பேரரசர் - சேர சோழ பாண்டியர். பார்ப்பார் என்பது பொருந்தாமை பின்னர்க் கூறுதும். பார்ப்பார்க்குப் பதில் அறங் கொள்க.

6. 'இன்னும் அத்தேவரைப் போல் ஒருவழிப்பிறக்கும் பிறப் பில்லாத தெய்வங்களும் பாடாண்டிணைக் குரியவென்கின்றது.' (புறத் -33-நச்) எனக் கூறி, பிறப்பில்லாத தெய்வங்களாக - ஞாயிறு (கொடி நிலை), திங்களைக் (வள்ளி) குறிப்பிடுகின்றார் நச்சினார்க் கினியர்.

7. காமப் பகுதி கடவுளும் வரையார் - '***புணர்ச்சி வேட்கை, கட்புலனானாகிய கடவுளிடத்தும் நீக்கார்*** (புறத் - 28நச்)

கட்புலன் ஆகிய கடவுள் - கண்ணாற் காணுங் கடவுள். கடவுளை மக்கட் பெண்டிர் விரும்புதற்குக் காட்டப்படும் எடுத்துக்காட்டு,

**"களியானைத் தென்னன் கனவில்வந் தென்னை**
**அளியா னளிப்பானே போன்றான் - தெளியாதோ**
**செங்காந்தள் மெல்விரலால் சேக்கை தடவந்தே**
**என்காண்பேன் என்னல்லால் யான்"** **(முத்தொள்ளாயிரம் -63)**

தென்னன் - பாண்டியன்.

5,6,7. இவற்றால், ஞாயிறும் திங்களும் பிறப்பில்லாத தெய்வம் என்பதூஉம், சேர சோழ பாண்டியர் போன்ற முடியுடை வேந்தர் பிறப்பு முறையாற் சிறந்த கட்புலனாகிய தெய்வம் என்பதூஉம், நீத்தாரும், வானும், ஆனும், அறமும், உலகமும், சிறப்புவகைத் தெய்வம் என்பதூஉம் பெற்றாம். சிறப்பு வகைத் தெய்வம் - தெய்வமாகச் சிறப்பித்துப் பாடப்படும் தெய்வம்.

'செந்துறை யாவது - விகார வகையான் அமரராக்கிச் செய்யும் அறுமுறை வாழ்த்தினைப் போலாது, உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல். இது ***செந்துறைப் பாடாண்பாட்டு எனப்படும்*** (புறத் -27 -நச்).

விகார வகையான் அரராக்குதல் - மக்களை உயர்த்துத் தேவராக்குதல், இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல் - மக்களை மக்களாகவே பாடுதல்.

*இதனால், மக்களை யுயர்த்துத் தேவராக்கியும், உயர்வுடைய பொருள்களைத் தேவராக்கியும் பாடுதல் -* ***தேவர்ப் பாடாண் பாட்டு*** *எனவும் பெயர்பெறும் என்பது பெற்றாம். 'பாடாண்' என்னும் தலைப்பைப் பார்க்க.*

*கொடுப்போரைப் புலவர்கள் சிறப்பித்துப் பாடுதலே பாடாண்டிணை யாகையால், 'கொடுப்போராகிய அரசரைச் சிறப்பித்துப் பாடும்போது, அவ் வரசர் போல உதவுதற் சிறப்புடைய பொருள்களைப் பாடுதலும் பாடாண்டிணையின் இலக்கணமாகும் என்பதாம். எனவே, ஒப்பாரும் மிக்காரும் இல்லாரை அகப்பொருட் டலைவராகக் கொண்டது போலக் கொண்டதே இத் தெய்வப் பகுதி எனக் கொள்க. அதாவது, அரசரும் அரசர் போன்ற செல்வருமாகிய பாட்டுடைத் தலைவர்களே, தேவர்ப் பாடாண், மக்கட் பாடாண் என்னும் இருவகைப் பாடாண் டலைவர்களாவ ரென்பதாம்.'*

*8. நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம் - 'பல்லி முதலிய சொல், நற்சொல், தெய்வம் கட்டினும் கழங்கினும் இட்டுரைக்கும் அத் தெய்வப் பகுதி, (அகத் -36 - நச்)*

*பல்லி முதலிய சொல் -* ***பல்லி சொல்லுதல், காக்கை கரைதல்*** *முதலியன. நற்சொல் - ஏதாவ தொன்றைப் பற்றிப் பேசும்போது, யாராவது, '****ஆகும், நல்லது, செய்யலாம்****' என்பனபோலத் தற்செயலாகப் பேசுவது. இது,* ***விரிச்சி*** *எனப்படும். கட்டு விச்சி கட்டெடுத்தும், வேலன் கழங்கு பார்த்தும் குறிசொல்வர். '****வெறியாட்டு****' என்னும் தலைப்பைப் பார்க்க.*

*பல்லி சொல்லுதல் முதலியன, நற்சொல், கட்டெடுத்தல், கழங்கு பார்த்தல் முதலிய தெய்வப் பகுதியாகும் என்பதாம். இவையெல்லாம் தெய்வச் செயலால் நிகழ்கின்றன என்பது கருத்து. '****தெய்வம் கட்டினும் கழங்கினும் இட்டுரைக்கும்****' என்பது இதனை வலியுறுத்தும். கட்டினும் கழங்கினும் இட்டுரைத்தல் - தெய்வம், அவற்றின் வாயிலாய் நன்மை தீமை சொல்லுதல். இன்னும் வழக்கத்தி லிருக்கும் இந் நம்பிக்கை. தொல்காப்பியர் காலத்திற்கு முன்னிருந்து தொடர்ந்து நிகழ்ந்து வருகிறதென்பது நினைவுகூர்தற் குரியது.*

**காட்டு:**

**"அங்கண் வானத் தகடூர்ந்து திரிதரும்**
**திங்களங் கடவுள் தெரிந்துநீ பெயர்த்தரின்**
**துளங்கிரு ளிரவினு மன்ற**
**விளங்குவை மன்னாலிவ் வியலிடத்தானே"** **(தகடூர்யாத்திரை)**

9. தெய்வம் அஞ்சல் - 'தலைமகற்குத் தொழுகுலமாகிய தெய்வமும், அவற்கு ஆசிரியராகிய **தாபதரும்** இன்னாரென்பது அவனா லுணர்த்தப் பட்டு உணர்ந்த தலைமகள், அத்தெய்வத்தினை அஞ்சியொழுகும் ஒழுக்கம்' (மெய் -24-பேரா).

தாபதர் - தவம் செய்யும் துறவியர். தொழுகுலமாகிய தெய்வம் - குலதெய்வம்.

'தெய்வம் அஞ்சல் என்னும் மெய்ப்பாட்டியற் சூத்திரம் தன் குலதெய்வத்தை வணங்குதற்கு விதியாமாறுணர்க' (சிந்தா -220-நச்)

**காட்டு:**

> **"சினைவாடச் சிறக்குநின் சினந்தணிந் தீகெனக்**
> **கனைகதிர்க் கனலியைக் காமுற லியைவதோ"** (கலிப் 16)

கனலி - சூரியன். 6இல் கூறப்பட்ட திங்களும் ஞாயிறுமே 8,9லும் காட்டப்படுகின்றன. ஞாயிறும் திங்களும் தம் சொற்கேட்டுத் தமக்கு வேண்டுவ செய்குவதாகக் கொண்ட நம்பிக்கை இது.

10. வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப - 'நினக்குத் தொழு குலமாகிய தெய்வம் நின்னைப் புறங்காப்ப' (செய் -110 - பேரா) புறங்காத்தல் - பாதுகாத்தல்.

11. தெய்வம் வாழ்த்தல் - 'களவை யறிந்த பின்னர், தன் மகளொடு தலைமகனிடை நிகழ்ந்த ஒழுக்கம் நன்றாகவெனத் தெய்வத்தைப் பராவுதல்' (களவு - 24 - நச்) பரவினவள் - தாய்.

**காட்டு:**

> **"வல்லே வருக வரைந்த நாளென**
> **நல்லிறை மெல்விரல் கூப்பி**
> **இல்லுறை கடவுட் கோக்குதும் பலியே"** (அகம் 282)

இல்லுறை கடவுள் - இல்லுறைதெய்வம் - குலதெய்வம். இல்லுறை தெய்வம், குலதெய்வம் - ஒருபொருட் சொற்கள். குலதெய்வம் - குலத்தினராகிய தெய்வம். 'குலமாகிய தெய்வம்' (மெய் -24-பேரா) என விரித்துக் கூறுதல் காண்க. குலத்தினராகிய தெய்வம் - குல முன்னோராகிய தெய்வம். அதாவது, காலஞ்சென்ற குலமுன்னோர். அவர் - பாட்டன், பாட்டி முதலியோர்.

## இல்லுறை தெய்வ வழிபாடு

இவ்வழிபாடு அன்று தொட்டு இன்றும் நடந்து வருகிறது. அதாவது, மணவினைக் காலத்தே மணச் சடங்கு தொடங்கு முன், மணமக்களின் புது வேட்டி புடைவைகளை நடுவீட்டில் வைத்து,

படைப்புப் போட்டு வழிபாடு செய்கின்றனர். இதுவே மணவினையின் முதற்சடங்காகும். இது, **நடு வீட்டுத் தெய்வங் கும்பிடல், புடைவைக் காரி கும்பிடல்** என வழங்குகிறது. வழிபாடு செய்தபின், ***காக்கையை முன்னோராகக்*** கொண்டு அப்படைப்புச் சோற்றை வீட்டுக் கூரைமேற் போடுகின்றனர். அதனால் இது ***கூரைமேற் சோறு*** போடுதல் எனவும் வழங்கும். காக்கைகள் கூரைமேற் போட்ட அச்சோற்றைத் தின்னா விட்டால் ஏதோ குறைபாடு உள்ளதாகக் கருதப்படுகிறது. மணவினைக் காலத்தேயன்றி, இறந்தோர்க்கு **இறுதிக்கடன்** (கருமாதி) இயற்றும் போதும், ஆண்டுதோறும் **நாட்கடன்** (சிராத்தம், திதி( கொடுக்கும் போதும் கூரைமேற் சோறு போடுதலும் உண்டு. இது இல்லுறை தெய்வம். அல்லது குலதெய்வ வழிபாடே யாகும்.

இறந்தோர்க்கு இறுதிக்கடன் செய்யும்போது, ஆண் எனில் ***புது வேட்டியும்,*** பெண் எனில் புதுப்புடைவையும் எடுத்து, நடுவீட்டில் வைத்து வழிபாடு செய்தல் பண்டைய வழக்கம். நெருங்கிய சுற்றத் தினரும் வேட்டி புடைவைகளை ஒரு பெரிய மட்பாண்டத்தினுள் வைத்து மூடிவைப்பர். ஆண்டுதோறும் நாட்கடன் கொடுக்கும் போது அவ்வேட்டி புடைவைகளை அப்பாண்டத்திலிருந்து எடுத்து நடுவீட்டில் வைத்து வழிபாடு செய்து, பழையபடி அப்பாண்டத்தினுள் வைத்து மூடிவைப்பர். செட்டி நாட்டாரிடம் இப்பழக்கம் இன்றும் உண்டு.

அம்முன்னோர், தம் வீட்டிலேயே தெய்வமாக இருந்து, தமக்கு வேண்டிய நன்மைகள் செய்வதாகக் கொண்ட நம்பிக்கையே,

**"இல்லுறை கடவுட் கோக்குதும் பலியே"** **(அகம் - 282)**

என்பதற்குக் காரணமாகும்.

853-தொ.5

12. நாமக் காலத்து ஏமுறு கடவுள் உண்டெனத் தோழி ஏத்திய மருங்கினும் - 'களவுக்காலத்தே நாம் வருந்தா திருத்தற்குக் காரண மாயதோர் கடவுள் உண்டு எனக்கூறி, தோழி அதனைப் பெரிதும். ஏத்திய இடத்தும்' (கற் -5 - நச்). இது தோழியின் நம்பிக்கை.

13. கிழவோள் சுட்டிய தெய்வக் கடத்தினும் - 'தலைவியைத் தலைவன் வரைந்துகோடல் குறித்துப் பரவிய தெய்வம் அதனை முடித்தலின், அப் பரவுக் கடன் கொடுக்க வேண்டுமெனத் தலைவற்குக் கூறுமிடத்தும் (கற் -9- நச்).

களவுக் காலத்தே விரைவில் தலைவன் வரைந்து கொள்ள வேண்டுமெனத் தோழி தெய்வத்தைப் பரவினாள். மண முடிந்தபின் அப்பரவிய தெய்வம் அதனை முடித்து வைத்ததாக எண்ணினாள். இதுவும் தோழியின் நம்பிக்கையே.

14. அமரர்ச் சுட்டியும் - '**தேவர்கள் புதல்வனைப் பாதுகாத்தலைக் கருதியும்**' (கற் - 5 - நச்).

15. தேவர்ப் பராஅய முன்னிலைக் கண்ணே - 'முன்னிலை யிடமாகத் தேவரைப் பரவும் பொருண்மைத்து' (செய் - 138 - பேரா). தேவரை முன்னிலையாக்கிப் பரவுதல்.

16. ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது எமக்கு வானோர் அமுதம் புரையும் - '**கைப்புச் சுவை யுடையதை உண்ணினும் நீ கையால் தொட்டது எனக்கு வானோர் அமுதம்போல் இனிப்பாக இருக்கிறது**' (கற் -5).

வானோர் - தேவர். மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலின் உயர்ந்த மேட்டு நிலத்திலிருந்து சேர நாட்டை ஆண்டு வந்த சேர மன்னரை, **வானவர்** (புறநானூறு -36, 126) என்றது போலவே, இமயமலையின் வடபால் உயர்ந்த மேட்டு நிலத்தில் வாழ்ந்து வந்தவரையே தமிழ்மக்கள் **வானவர், வானோர்** என்றனர். வான் - உயர்வு. வானோர் - உயர்ந்த இடத்தில் வாழ்பவர். தேவர்கள் அமுதங் கடைந்தார் என்னும் கதையை ஆசிரியர் கேட்டிருந்ததால், அதனை உவமையாக எடுத்துரைத்தனர்.

17. இமையோர் தேத்தும் எறிகடல் வரைப்பினும் - 'தேவருல கத்தின் கண்ணும் திரையெறியுங் கடல் சூழ்ந்த நிலத்தின் கண்ணும்' (பொரு - 54 - நச்). இமையோர் - வானவர். தேம் - இடம். இமையோர் தேம் - வானுலகம். இமயவர் - இமயமலையில் வாழ்பவர் என்னும் காரணப் பெயர். **அமச்சர், அமைச்சர்** என அகரத்திற்கு ஐகாரம் போலி யானாற் போல, **இமயவர், இமையவர்** என்றாயது. **இமயவர் - தேவர்.**

கோவை திரு. **துடிசைக்கிழார்** அவர்கள் பதித்துள்ள **திருமந்திரம்** முன்னுரை 17ஆம் பக்கத்தில், 'தமிழ் நாட்டின் வட எல்லையாகிய இமயமலையின் சிகரங்களில் சிறந்த கயிலாயத்தின் திருக்கோயிலுக்கு முதற் பெரு நாயகமாகி (நந்தி) இந்திரன், மால், அயன் முதலாம் இமயவர்க்கு' என்றெழுதி, **இமயவர் - இமய மலைவாசிகள்** என்று குறிப்பும் எழுதியுள்ளார்.

எனவே, வானோர், இமயோர் என்பவர் - இமயமலையில் வாழ்ந்தவர்களே யாவர். வானுலகம் என்பது இமயமலையின் ஒரு பகுதியே யாகும். '**காடுறை உலகம்**' (அகத் -5) என, ஒரு நாட்டின் ஒரு பகுதியும் '**உகலம்**' எனப்படுதல் காண்க.

ஆரிய மக்கள், தாங்கள் முன்பு வானுலகிலிருந்து வந்தவர் என்றும், தம்மவர் இன்னும் ஆங்கு வாழ்ந்து வருகின்றனர் என்றும், அவர்கள், 'தேவர்கள்' எனப்படுவர் என்றும் தாங்கள் பூவுலகில் வாழ்வதால் **பூத்தேவர்** ஆவர் என்றும். கூறினர். பூசுரர் - பூத்தேவர்.

சுரர் - தேவர். என்பது காண்பர் அக்கூற்றை நம்பிக் கூறியனவே வானோர், இமயோர் என்பன.

இனி, தொல்காப்பியமோ இடைச் சங்க நூல். அதாவது கி.மு.இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட நூல், தொல்காப்பியக் கருத்துக்களுக்குக் காட்டப்படும் எடுத்துக்காட்டுக்களோ, கி.மு. இரண்டு மூன்று நூற்றாண்டுகட்குட்பட்ட கடைச் சங்கச் செய்யுட்கள். அச் செய்யுட்களை எடுத்துக் காட்டிய உரையாசிரியர்களோ, கிபி10ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர்கள். எனவே, உரையா சிரியர்களின் எடுத்துக் காட்டுக்களைக் கொண்டு, தொல்காப்பியர் காலக் கடவுட் கொள்கை இற்றெனத் துணிந்து கூறுதல் ஏற்புடைத் தாகாது.

## கடவுள் நம்பிக்கை

பெரும்பாலும் நன்மையையே விரும்புதல் மக்களின் இயல் பாகும். அவ்வியல்பே கடவுள் நம்பிக்கைக்கு ஏற்ற காரணம் எனலாம்; நன்மை பயப்பனவற்றை யெல்லாம் வாழ்த்தி வணங்கி வழிபாடு செய்தல் இதற்குச் சான்றாகும்.

நிலம், நீர், தீ, காற்று, கல்வி, செல்வம், வெற்றி முதலியவற்றை முறையே நிலமகள், நீர்மகள் (கங்கா தேவி), தீக்கடவுள், வளிக்கடவுள் (வாயுபகவான்), கலைமகள், திருமகள், கொற்றவை எனத் தெய்வமாகக் கொண்டு வாழ்த்தி வணங்கி வழிபடுதல், அவை நன்மை பயத்தல் கருதியேயாகும்.

வான், ஆன், அறம், உலகு, ஞாயிறு, திங்கள் முதலியவற்றையும், நீத்தார், அரசர், ஆசிரியர் முதலியவர்களையும் தெய்வமாகக் கொண்டு வாழ்த்தி வழிபடுதல், நன்மை பயத்தல் கருதியே யன்றோ?

நெல், கம்பு முதலிய விளைவைத் தெய்வமாகக் கொண்டு, கதிர் அறுக்கும்போது பொங்கல் வைத்து வணங்கி வழிபாடு செய்வதும், உழவுத் தொழிலுக்கு உதவும் மாட்டுக்குப் பொங்கல் வைத்து வழிபாடு செய்வதும், கலப்பையைக் கைகூப்பித் தொழுவதும் நன்மை பயத்தல் கருதியே யாகும்.

கதிரடிக்கும் களத்தைச் சாணநீரால் வழித்து, உருண்டையான வெண்கல் லொன்றைக் களத்தின் நடுவில் வைத்து, அதன்மேற் கதிரைக் கொட்டுவர். அக்கல்லுக்கு ***மல்லாண்டவர்*** என்று பெயர். சில இடங்களில் அதை ***அம்மையனார்*** என்பர். இது கதிரைக் காத்தல் என்னும் நன்மை கருதியேயாகும். மல்லன் - வலியோன். மல்லாண்டவர் - வலிபொருந்திய தெய்வம். காவற் றெய்வமல்லவா, அதற்கு உடல்வலி வேண்டியதாயிற்று. இதை, ***மல்லாண்டப்பிச்சி*** என்பதும் உண்டு. அம்மையனார் ***அம்மையப்பர்*** போலும்!

ஆடு, மாட்டுப் பட்டியை தாழ்த்தப்பட்டவர் தொடக்கூடா தென்பதும், பெண்கள் பட்டிக்குட் புகக்கூடா தென்பதும், பட்டியை - பட்டிமடத்தாய் என்னும் பெண்தெய்வமாகக் கொண்டுள்ள நம்பிக்கையே யாகும்.

படிப்பு வரவேண்டுமென்று கருதியன்றோ சுவடிகளைத் தெய்வமாகக் கொண்டு வணங்கி வழிபாடு செய்யப்படுகிறது. தெரியாமற் சுவடிமேற் கால் பட்டால் அதைத் தொட்டுக் கும்பிடுதலை நோக்குக. எல்லாத் தொழிற் கருவிகளையும் பொட்டிட்டுப் பூச்சூட்டி வழிபாடு செய்தல் இக்கருத்தேயாகும்.

தலைவனும் தலைவியும் அச்சமின்றி வழிச் செல்லும் பொருட்டு இரவில் நன்கு விளங்க வேண்டுமெனத் தாய் திங்களை வேண்டுவதும் (அகத் -36), தலைவன் வருத்தமின்றி இனிது வரக் கடுங்கதிர் காயாதிருக்குமாறு தலைவி ஞாயிற்றை வேண்டுவதும் (மெய் -24), பாம்பு தங்களைக் கடியாமல் இருக்கவேண்டுமென வேண்டி மக்கள் பாம்புக்குப் பொங்கல் வைத்து வழிபாடு செய்யும் நம்பிக்கை போன்றனவே யாகும்.

நாட்டைப் பகைவர் கொள்ளாமல் வீரத்தோடு பொருது உயிர்விட்ட வீரர்க்கு நடுகல் நாட்டி வழிபாடு செய்தலும் (புறத் -5), பெருந்தக்கப் பெண்பாலார்க்கு எடுத்துக் காட்டாக விளங்கிய ***பத்தினிப் பெண்டிர்க்குக் கோயில் எடுத்து*** வழிபாடு செய்தலும் நன்மை கருதியே யாகும். ***மாடன், வீரன், முனியன், கருப்பன்*** முதலிய தெய்வங்கள் பழந்தமிழ் வீரர்களே யாவர். ***காளி, மாரி*** முதலிய ஊர்த் தெய்வங்கள் பழந்தமிழ்ப் பத்தினிப் பெண்டிரே யாவர். பத்தினிப் பெண்டிர்க்குக் கோயிலெடுத்து வழிபாடு செய்தற்குக் கண்ணகி வரலாறு எடுத்துக் காட்டாகும். பழந்தமிழர் சேரியிலுள்ள ***வீரமாத்தி கோயில்*** என்பது, பழந்தமிழ்ப் பத்தினிப் பெண்டிர் கோயிலே யாகும். வீரமா பத்தினி என்பதே, '***வீரமாத்தி*** எனத் திரிந்து வழங்குகிறது. இவ்வீரமா பத்தினி வழி பாட்டை, '***வீரமாத்தி கோயிலுக்குச் சோறு மாத்தினாற் போல***' என்னும் பழமொழி விளக்கிக் காட்டும். கன்னிமார் என்னும் தெய்வ வழிபாடு, வீரக் கன்னிப்பெண்கள் வழிபாடே யாகும்.

நூற்றைம்ப தாண்டுகட்கு முன் கொங்குநாட்டி லிருந்த குன்றுடையாக் கவுண்டர் மக்களான சின்னண்ணன் பெரியண்ணன் என்போர் அண்ணன்மார் எனவும், அவர்கள் தங்கை கன்னிமார் எனவும் தெய்வமாகக் கொண்டு வணங்கி வழிபடப்பட்டு வருகின்றனர். ***அண்ணன்மார் கோயிலும், கன்னிமார் கோயிலும்*** கொங்கு நாடெங்கும் உள்ளன. அவர்கட் குதவிய ***வீரமலை*** என்னும் பழந்தமிழ் மகனும் (பறையன்) அக்கோயில்களில் தெய்வமாக வழிபடப்பட்டு வருகின்றான்.

மற்றும், காத்தவராயன், அப்பிச்சிமார், இராவுத்தமார் முதலிய தெய்வ வழிபாடெல்லாம் முன்னோர் வழிபாடேயாகும்.

நன்மை நாட்டமும், நன்மை செய்யும் என்னும் நன்னம் பிக்கையும், உயர்ந்தோரையும், முன்னோரையும், உயர்பொருளையும், உயர்வாக எண்ணிப் போற்றும் உயர் பண்பாடுமே தெய்வ வழி பாட்டுக்குக் காரணம் என்பது, இது காறும் எடுத்துக்காட்டிய வற்றால் விளங்கும். இதனால். மாயோன் முதலிய நால்வரும் பழந்தமிழ்த் தலைவர்களே என்பது வலியுறும்.

குறிஞ்சி முதலிய அகத்திணை ஏழற்கும் புறம், வெட்சி முதலிய புறத்திணை ஏழும் என்பது, "***வெட்சிதானே குறிஞ்சியது புறனே***" என்பது முதலிய புறத்திணையியற் சூத்திரங்களால் (1,6,9,14, 18,22,25) விளங்குவதால், அகத்திணைத் தலைவர்களே புறத்திணைத் தலைவர்களும் என்பது பெறப்படும். எனவே, மாயோன் முதலிய நால்வரும் சீருஞ் சிறப்புடன் தமிழகத்தை ஆண்ட இருதிணைத் தலைவர்களே என்பது, அகத்திணை யியலில்,

**"மாயோன் மேய காடுறை யுலகமும்"** (அகத் -5)

என்பதையே, புறத்திணை யியலில்,

**"மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்**
**தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்"** (புறத் -5)

என்கின்றார் ஆசிரியர். அதாவது, முல்லை நிலத் தலைவனான மாயோன் விரும்பிக் காத்ததைப் போல, ஒருவன் நிலை பெற்ற மிக்க சிறப்புடன் மக்களைக் காத்து அடைந்த நீங்காத புகழைக் கூறுதல் ***பூவைநிலை*** எனப்படும் என்பதாம். பூவை நிலை - ஒப்பிட்டுக் கூறுதல். இவ்வாறு கூறுதலின் பயன். முன்னோர் காத்தவாறு சீருஞ்சிறப்புடன் காக்கவேண்டுமென அறிவுறுத்துத லாகும். இது, சேயோன் முதலிய மூவர்க்கும் இனவிலக்கணம்.

புணர்தல் முதலிய உரிப்பொருள்களைச் சிறப்பித்துப் பாடும் அகப்பாட்டுக்களில், அவ்வுரிப்பொருள்கள் நன்கு விளங்குதற் பொருட்டு, அவ் வுரிப் பொருட்குத் துணையாக, அது நிகழும் நிலம் பொழுதுகளாகிய முதற் பொருள்களையும், உணவு விலங்கு புள் முதலிய கருப்பொருள்களையும் அமைத்துப் பாடுதல் போல், அவ்வந் நிலமக்கள் தத்தம் நிலத் தலைவர்களை வாழ்த்தி வணங்கு வதாகப் பாடுதலும் உரிப்பொருளறிவுக்கு ஏற்புடையதே யாகும். இக்கருத்துப் பற்றியே தெய்வத்தைக் கருப்பொருள்களி லொன்றாகக் கூறியுள்ளமை யாகும்.

இனி, கருப்பொருள்களி லொன்றான தெய்வத்தைக் கருப் பொருள் கூறுமிடத்துக் (அகத் -18) கூறாது, நிலமுதற் பொருளோடு கூறியிருத்தல் (அகத் -5), மாயோன் முதலிய நால்வரும் முல்லை முதலிய நானிலங்களை யாண்ட தலைவர்களென்பதை அறிவுறுத்தற் கேயாம். அச்சூத்திரத்தில் 'மேய' என்னும் சொல் இதனை நன்கு வலியுறுத்தும்,

நச்சினார்க் கினியர், 'மாயோன் - கடல்வண்ணன், திருமால், சேயோன் - செங்கேழ் முருகன் - செந்நிறமுள்ள முருகன். வேந்தன் - இந்திரன். வருணன் - கருங்கடற் கடவுள்' என்பது ஏற்புடையதாக இல்லை. மாயோன் - மாலும், சேயோன் - முருகனும் எனின், சிவனை - 'முழுமுதற் கடவுள், தென்னாடுடைய சிவன், தலைச்சங்கத் திருந்து தமிழாய்ந்தவன் முருகன் தந்தை, மூவரில் முதல்வன், இடைச்சங்க காலத்திற்கு முற்பட்ட, கடல் கொண்ட தென்னாட்டுத் தமிழ்மக்கள் சிவ வழிபா டுடையவர், ***சிந்துவெளி நகரங்களில் சிவவழிபாட்டுக்குறி உளது'*** என்னும் கூற்றுக்களுக்கு முரண்படுமன்றோ? வேந்தன் - இந்திரன் என்பது, வேந்தனை 'அரசன்' எனக் கொண்டு கூறியதாகும். இந்திரன் - அரசன். நர + இந்திரன் - நரேந்திரன் - மக்களரசன். சுர + இந்திரன் - சுரேந்திரன் - தேவரரசன். மிருக + இந்திரன் - மிருகேந்திரன் - விலங்கரசன் எனக் காண்க.

இனி, தெய்வம் முதலிய சொற்பொருளும் ஆராய்தற்குரியதே. மலையில் மூங்கில் ஒன்றோடொன்று தேய்வதனால் தீயுண்டாகிறது. கற்கள் ஒன்றோடோன்று படும்போது தீப்பொறி உண்டாகிறது. இவற்றிலிருந்தே முதன் மாந்தர் ***தீக்கடைகோலும், சக்கிமுக்கிக் கல்லும்*** கண்டுபிடித்திருக்க வேண்டும். பொருள்கள் ஒண்றோ டொன்று தேய்வதனால் தீயுண்டாவதால், பழங் காலத் தமிழ் மக்கள் அதைத் தேய் என்றனர். தேய் என்பதே நாளடைவில், **தேய் - தே - தீ** எனத் திரிந்தது. தீந்தமிழ் எனக்காண்க. உணவு சமைத்தல், குளிர்நீக்கல் முதலிய பயன்பாடு கருதித் தீயை மேலானது எனப் போற்றி வந்தனர். தெய்வம், தேவர் என்னும் சொற்கள், தேய் என்னும் சொல்லினடியாகப் பிறந்தவையே.

தேய் : தேய் + உ - தேயு, தேய் + வு - தேய்வு. தேயு, தேய்வு - தொழிற் பெயர்கள். 'செலவு, ஆய்வு' என்பவற்றிற் போல, 'உ, வு' - தொழிற் பெயர் விகுதிகள். தேய்வு - தேவு; தேவு + அன் - தேவன் - ஆண்பால். தேவு + இ- தேவி - பெண்பால். தேவு + அர் - தேவர் - பலர்பால். தேய்வு - தெய்வு; தெய்வு + அம் - தெய்வம் - பண்புப் பெயர். 'நலம்' என்பதிற்போல, அம் - பண்புப் பெயர் விகுதி. (ஒப்பியல் மொழி நூல் - பக் 237 பார்க்க)

*தெய்வம் - மேன்மை, சிறப்பு. தெய்வத் தமிழ், தெய்வப் புலமை, தெய்வப் புலவர், தெய்வத் தாமரை எனக் காண்க. தெயவத் தமிழ் - மேலான, சிறந்த தமிழ். எனவே, தெய்வம், தேவர் என்னும் சொற்கள், தேய் என்னும் சொல்லடியாகப் பிறந்த தனித்தமிழ்ச் சொற்களே யாகும். அரசனை - தேவன் என்பதும், அரசியை - தேவி என்பதும், தேவர் என்பது மேன்மை குறிக்கும் சொல் என்பதற்குச் சான்றாகும்.*

*அமரர் - உயர்ந்தோர். அமரம் - உயர்வு. அமர் - விரும்பு. அமரம் - விருப்பம். அமர்தல் - விரும்புதல்.*

**"அகனமர்ந்து செய்யா ளுறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்". (குறள்)**

*என்பதில், அமர்ந்து - விரும்பி எனப் பொருள்படுதல் காண்க. அமரர் - விரும்புதற்குரியர் - உயர்ந்தோர். அறுமுறை வாழ்த்தில் வரும் - வானும் ஆனும் அறனும் சிறப்புடையவை யாகையாலும், உலகு தனிப்பட்டவரினும் உயர்ந்த தாகையாலும், நீத்தாரும் அரசரும் உயர்வுடையோராகையாலும் இவையாறும் 'அமரர்கண் முடியும் அறுவகை' எனப்பட்டன. அமரர்கண் முடிதல் - தெய்வமாதல். புத்தர், அருகர், கிறித்து, நபி முதலானவர்கள் அமரராகப் போற்றப் படுதல் காண்க. நம் காலத்திலிருந்த **காந்தியடிகள்** அமரராகப் போற்றப்படுதல் இதற்குத் தக்க சான்றாகும். மாயோன் முதலிய நால்வரும் இவ்வாறு அமரராகப் போற்றப்பட்டவரே யாவர்.*

*கடவுள் - உயர்வானது, மேன்மையானது. கடவுள் - தொழிற் பெயர். கட + உள். உள் - தொழிற் பெயர் விகுதி. கடவுள் - கடத்தல், அதாவது, பொதுத் தன்மையைக் கடந்தது, சிறந்தது. எனவே, தெய்வம், தேவர், அமரர், கடவுள் என்னும் சொற்களின் பொருள், - உயர்ந்தது, மேலானது என்பதே, வானோர், இமையோர் என்னும் சொற்பொருள் முன்னர்க் கூறப்பட்டது.*

*மாயோன் முதலிய நால்வரும் நனிபழங்காலத்தே முல்லை முதலிய நானிலத்தையும் சீருஞ் சிறப்புடன் ஆண்டு வந்த பழந்தமிழ்த் தலைவர்களே யாவர். செய்ந்நன்றி மறவாத்தமிழ்மக்கள் அன்னாரை வாழ்த்தி வணங்கி வழிபாடுசெய்து வந்தனர். முல்லைநில மக்கள் தங்கள் முன்னோனான மாயோன் சிறப்பினை எடுத்துக்கூறி, அவனை வாழ்த்தி வழிபாடு செய்யும் முகத்தான், தங்காலத் தலைவற்கு அவன் முன்னோன் குணஞ் செயல்களை எடுத்துக்கூறி வற்புறுத்து தலோடு இவனையும் அவ்வாறு நடக்கும்படி தூண்டுதலும் ஆகும். இவ்வாறே மற்ற நிலத் தெய்வ வணக்கமும். வாழ்க மாயோன் முதலியோர் மன்பெருஞ் சிறப்பு!*

### 3. உரிப்பொருள்

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்னும் ஐந்தும் உரிப்பொருள் எனப்படும். இவையே ஐவகை அகவொழுக் கங்கள், அன்பின் ஐந்திணைகள். இவை முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் நிலங்களில் நிகழும். உரிப்பொருள் - அகவொழுக்கத்திற்கு உரிய ஒருவன் ஒருத்தியின் கூட்டு வாழ்வுக்கு உரிய பொருள் என்றுமாம். கருப்பொருள் - நிலமுதற் பொருளில் இருக்கும் பொருள். உணவு, பூ முதலிய சில கருப்பொருள்கள் கால முதற்பொருளில் தோன்றும் பொருளுமாம். உரிப்பொருள் - நில முதற்பொருளிலும் கால முதற்பொருளிலும் நிகழும் பொருள். கருப்பொருள் - உரிப்பொருளறிவுக்குக் கருவாய் அமையும் பொருள்.

புணர்ச்சி, தலைவன் தலைவி இருவர்க்கும் ஒப்ப நிகழ்தலான் அதை முதலிலும், புணர்ந்தபின் அல்லது பிரிவின்மையான் பிரிவை அதன் பின்னும், தலைவன் பிரியின் தலைவி ஆற்றியிருத்தல் - அவன் பிரிவைப் பொறுத்திருத்தல் - முல்லையாதலின் இருத்தலை அதன் பின்னும், அங்ஙனம் ஆற்றியிராது தலைவி இரங்கலை அதன் பின்னும், இரங்கிய தலைவி, தலைவன் வரின் ஊடுவாளாதலின் ஊடலை அதன் பின்னும் வைத்தனர் ஆசிரியர்.

புணர்ச்சி முதலிய ஒழுக்கங்கள் ஐந்தும், முறையே குறிஞ்சி முதலிய நிலங்கள் ஐந்தினும் நிகழும் என்பது செய்யுள் வழக்கு. உலக வழக்கில் இவை ஐந்தும் ஒரு நிலத்தின் கண்ணே நிகழும். அதாவது, குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் அங்கேயே நிலையாய் வாழ்வோரா கையால், புணர்தல் முதலிய ஐவகை ஒழுக்கங்களும் அவர்பால் நிகழுமன்றோ? குறிஞ்சி நிலத்தில் வாழும் ஒருவனும் ஒருத்தியும் புணர்ந்தும், பிரிந்தும், இருந்தும், இரங்கியும், ஊடியும் வாழ்க்கை நடத்துதல் அன்றி, புணர்ச்சியல்லாத மற்றை ஒழுக்கங்களை அவற்றிற் குரிய நிலங்களிற் சென்று நிகழ்த்தி மீள்வர். புணர்ச்சி குறிஞ்சி நிலத்தினும், பிரிவு பாலை நிலத்தினும், இருத்தல் முல்லை நிலத்தினும், இரங்கல் நெய்தல் நிலத்தினும், ஊடல் மருத நிலத்தினும் நிகழும் எனல் செய்யுள் வழக்கம் என்பது,

> **“முதலொடு புணர்ந்த யாழோர் மேன**
> **தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே.”** **(களவி - 15)**

என்பதால் விளங்கும்.

முதலொடு புணர்ந்த - நிலமும் காலமுமாகிய முதற் பொருள் களோடு கூடிய, யாழோர் மேன - புணர்ச்சியானது, தவல் அரும் சிறப்பின் - கெடலருஞ் சிறப்பினையுடைய, ஐந்நிலம் பெறும் - குறிஞ்சி

*முதலிய ஐந்து நிலத்தின் கண்ணும் நிகழும். இது உலக வழக்கு. யாழோர் - தமிழிசையில் வல்ல ஒரு குறிஞ்சி வகுப்பார். யாழ் - இசை. இசை இன்பத்தின் பாலதாகலின், புணர்ச்சியை 'யாழோர் மேன' என்றார். குறிஞ்சி நிலமே யன்றி மற்ற நிலங்களிலும் புணர்ச்சி நிகழுமென்பது.*

*இதனால், மற்ற ஒழுக்கங்களும் ஐந்நிலம் பெறும் என்பது தானே பெறப்படும். வேனிற் காலத்துக் கடுவெயிலால் முல்லையும் குறிஞ்சியும் திரிந்தாகிய பாலைவாழ்வா ரிடையும் புணர்ச்சி நிகழுமென்க. எல்லா நில மக்களிடையும் நிகழும் புணர்ச்சி முதலிய ஐவகை ஒழுக்கங்களையும் சிறப்புப் பற்றி ஒவ்வொன்று ஒவ்வொரு நிலத்தில் நிகழும் என வகைப் படுத்துச் செய்யுள் செய்து சிறப்புடன் போற்றி வாழ்ந்து வந்தனர் பழந்தமிழ் மக்கள். அச்சிறப்பினை அடுத்துவருந் தலைப்பில் காண்க.*

## நிலமும் பொழுதும் ஒழுக்கமும்

*பழந்தமிழ் மக்களாகிய நம் முன்னோர்கள், இன்ன நிலத்தில் இன்ன காலத்தில் இன்ன நேரத்தில் இன்ன ஒழுக்கம் நிகழும் - நடைபெறும் - என்று வகைப்படுத்துக் கூறியிருக்கும் மதிநுட்பம் - நுண் மாண் நுழை புலம் - ஈடுமெடுப்பு மில்லாத தொன்றாகும்.*

### 1. குறிஞ்சி

*குளிர்கால யாமத்தில், குறிஞ்சி நிலத்தில் - மலையில் - புணர்ச்சி நிகழும், கதிரவனின் செங்கதிர்களால் பொன்னிறமாய் விளங்கும் இளநீலமுகில் சூழ்ந்த மலையடுக்குகள், தம் பொன்னிறத்தால், தம்மிடம் வருவாருள்ளத்தை உருக்கி* **நட்புணர்வை** *யுண்டாக்கு கின்றன. ஐப்பசி கார்த்திகை மாதங்களாகிய குளிர் காலமும், அக்கால யாமமும் - நள்ளிரவும் - குறிஞ்சிக்குரியன. களவொழுக் கத்தில் தலைவியைக் காணுதல் அருமையாக இருத்தல் அதற்குச் சிறப்பைத் தரும். விலங்குகளும் பறவைகளும் இணைபிரியாது உடனுறையும் காலமும் அதுவே. குளிர்காலமே உயிர்கள் உடனுறையும் எண்ணமுடைய காலமாகும். '**குளிர்கிறது, அணைத்துப்படு**' என்னும் வழக்கை யுணர்க. வெளிப்போக வொட்டாது தடுப்பதற்குரிய அடர்மழைக்காலம் உடனுறை விருப்பத்தை ஊட்டுதற்கு ஏற்ற காலமாதலை யறிக. இரவு பத்து நாழிகைக்கு மேற்பட்ட இடையாமமே புணர்ச்சிக்கு ஏற்ற பொழுதாகும். '**காதலிமாட் டில்லாக் கழித் இரவும்**' என்றதும் இக்கருத்துப் பற்றியே யாகும். முன்பனிப் பருவமும் குளிரால் வெளியே செல்வதற் கிடையூறாய் உடனுறைவிற்கே பொருந்திய காலமாகும். மலையடுக்கு களின் மறைந்த இடம் களவொழுக்கத்திற்கு ஏற்றதாதல் அறிக. இச்சிறப்புப் பற்றியே புணர்ச்சி குறிஞ்சி நிலத்திற் குரிய தென்றனர்.*

பெரும்பொழுது சிறுபொழுதுகளின் பொருத்தத்தையும் நுனித்தறிக. இக்காலம் களவொழுக்க மொழுக. இயற்கைப் புணர்ச்சியும் அதற்குமுன்னி கழ்ந்த வழிநிலைக் காட்சியும் இருவகை வேனிலிலும் நடக்கு மென்க.

## 2. பாலை

வேனிற் கால நண்பகலில், பாலை நிலத்தில் பிரிவொழுக்கம் நிகழும். பாலை என்பது - முல்லை குறிஞ்சி நிலங்களிலுள்ள மரஞ் செடி கொடிகளின் வளம் வெயிலால் உலர்ந்து, அந்நிலங்களை விட்டுப் பிரிந்த வறண்ட தன்மை. நீர் நிழல் இல்லாமை, பசியால் வாடியலையும் கொடிய விலங்குகள் இருத்தல் முதலியன அவ்வழிச் செல்வோர்க்குத் துன்பந் தருமாகையால், பிரிந்திருக்கும் தலைவிக்கு ***அருளுணர்வு*** பிறத்தற்கு ஏதுவாகிறது. பிரிந்து போகின்றவனைப் பற்றிக் கூறுவனவெல்லாம் பாலையாகும். ***மாசி முதல் ஆடி யீறாக வுள்ள ஆறு மாதமும்*** - பின்பனி, இளவேனில், முதுவேனில் - மழையின்றி யிருக்குமாகையால், இக்காலமே அயலூர்க்குச் செல்வதற்கு ஏற்ற காலமாகும். வேறிடத்திற்கும், வேறு நாட்டிற்கும் செல்வோர் அவ்வறண்ட நிலத்தின் வழியாகவே செல்ல வேண்டியிருத்தலானும், நண்பகலில் - நடுப்பகலில் - வெயிலின் கொடுமை மிகுதியாக இருக்குமாதலானும் இக்காலங்கள் பிரிவுக்கு ஏற்றவையாயின. இச்சிறப்புப் பற்றியே பிரிவு பாலை நிலத்திற் குரிய தென்றதும்.

## 3. முல்லை

கார்கால மாலையில், முல்லை நிலத்தில் இருத்தல் ஒழுக்கம் நிகழும். இருத்தல் - பிரிந்து சென்ற தலைவன் வரும் வரை தலைவி ஆற்றி யிருத்தல். மரம் செடி கொடிகள் தழைத்த காட்டு நிலம், தழைத்த பசுமை நிறத்தால் தன்னிடம் வருவா ருள்ளத்தைக் கிளர்ச்சி பெறச் செய்து **அன்புணர்வை** உண்டாக்குகிறது. ஆவணி புரட்டாசி மாதங்களாகிய கார்காலமே வெளியூர் சென்ற தலைவன் மீளுங் காலமாகும் வெயிற் காலத்திலேயே போன காரியத்தை முடித்துக் கொண்டு மழைக்காலம் வந்ததும் திரும்புவான். தலைவன் வரும் நேரம் மாலையாகும். நாடோறும் வெளிவேலைகளை முடித்துத் தலைவன் வீட்டுக்கு வரும் நேரமும் மாலைக்காலமே. தலைவியும் வீட்டு வேலைகளை முடித்து ஓரிடத்தில் அமைதியாக இருக்கும் காலம் அதுவே, முல்லை நிலமானது, மாலை நேரத்தில் - சாய்ங் காலத்தில் - தங்கிப் பொழுது போக்குதற்கு ஏற்ற புற்றரையும், நறுமணக் காற்றும், மரநிழலும் உள்ள இடமாதலால், இருத்தல் ஒழுக்கத் திற்குச் சிறந்த இடமாதல் அறிக. தற்காலப் பூங்கா போன்றது இது.

## 4. நெய்தல்

காலை நேரத்தில், நெய்தல் நிலத்தில் இரங்கல் ஒழுக்கம் நிகழும். கடலில் நெடிய அலைகள் நொடி தோறும் எழுந்து மறையும். அதனால், கடற்கரையில் மணல்மேடு உண்டாகிச் சிறிது நேரம் நிலைத்துப் பின் அழியும். இக்காட்சி, பிறப்பு வாழ்வு இறப்புக்களையும், அவற்றின் நிலையாமையையும் நினைப்பித்து **இரக்க உணர்வை** உண்டாக்குகிறது. கடல்வழிச் சென்றாரை எதிர்பார்த்திருக்கும் காலம் காலை. இருக்கும் இடம் நெய்தல். அவ்விடத் திருக்கும் காலத்தே கடற் காட்சி இரக்க வுணர்ச்சியை யுண்டாக்குதலின் இருத்தலாகாது, இரக்கமாயிற்று. கடலலை போல உயர்ந்து தாழும் இயல்பு உளத்துக்கு உண்மையான் ஆங்கு இரக்கந் தோன்றும்.

மாலையில் தலைவன் வரின் புணர்ச்சி விருப்பம் உள்ள தாகலின் ஊடல் நிகழாது. யாமப் பொழுது கழிந்தபின் வைகறையில் புணர்ச்சி விருப்பங் குறைபட்டுத் தூக்கந் தெளியா திருக்கு மாகையால் ஊடலுணர்வு உண்டாகும். விடிந்தபின் தலைவன் வரின், அடங்கிய சினத்தொடு வீட்டு வேலைகளில் தலைவி யுள்ளஞ் செல்லும்; வராவிடின், ‘பகற் பொழுது கழிந்தன்றித் தலைவன் வரான். இப் பாழும் பகற் பொழுது எப்பொழுது கழியுமோ’ என்று தலைவிக்கு மிகுந்த இரக்கந் தோன்றும். தலைவன் வராமையை நினைந்து தலைவிக்குச் சின மிகினும், சினஞ் செல்லுதற் குரிய இடமான தலைவன் இன்மையால் அவன் வரவை விரும்பித் தலைவிக்கு இரக்கந் தோன்றும். கடலில் மீன் பிடிக்கச் செல்லும் காலமும் காலையே, காலையில் எழுந்ததும் கடலைப் பார்க்கின் கப்பல் வராவிடின் இரக்கந் தோன்றுதல் இயல்பே. இச் சிறப்புப் பற்றியே நெய்தல் நிலத்தில் இரக்கம் நிகழுமென்றனர்.

## 5. மருதம்

வைகறையில், மருத நிலத்தில் ஊடல் ஒழுக்கம் நிகழும். வெள்ளியை உருக்கி வார்த்தாற் போன்ற பளபளப்பான நீர்வள மிக்க வயல் நிலமானது. தனது வளஞ் சேர்ந்த வெண்ணிறத்தால், வளப் பெருக்கால், தன்னிடம் வருவோருள்ளத்தில் பல அரிய தொழில் முயற்சிகளுக் கிடந்தந்து ***அறிவுணர்வை யுண்டாக்குகிறது.*** மாடமாளிகை களும், பல்வகைச் செல்வங்களும் ஊடலை உண்டாக்கும். செல்வச் செருக்கே ஊடலுணர்ச்சிக்குக் காரணமாகும். பரத்தையரிடத் திலிருந்து தலைவன் வருங்காலம் வைகறையே யாதலான், அது தலைவி ஊடுதற்குரிய காலமாகும். செல்வமும் தலைமையுமே பரத்தைமைக்குக் காரண மாகையால், மருத நிலத்தேதான் தலைவனது

பரத்தைமையும், அதுபற்றித் தலைவிக்கு ஊடலும் நிகழும். இக்காரணங்கள் பற்றியே மருத நிலத்தில் ஊடல் நிகழு மென்றனர்.

இதனால், செல்வர்களே தம் செல்வச் சிறப்பால் ஒழுக்கச் சட்டத்தை மதியாது மீறி, மக்களிடை ஒழுக்க மின்மை என்னும் இழுக்கை யுண்டாக்கி வருகின்றனர் என்பது தெளிவாம். எனவே. எளியரினும் செல்வரே ஒழுக்கங் காத்தற்கு மிகவும் கடப்பா டுடையவராவர். ஒழுக்கச் சட்டத்தை மீறி, தமிழினத்தின் பெருமைக்கு இழுக்கை யுண்டாக்காமல் இருக்கும்படி தமிழ் மக்களை, குறிப்பாகத் தமிழ்ச் செல்வர்களைப் பணிவன்புடன் வேண்டிக் கொள்ளுதும். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமிழினத்தின் இன்றியமையா உறுப்பினர் என்பதைப் பொறுப்புடன் உணர்க.

**திட்டத்தை மீறிச் சிதைக்கினும் நல்லொழுக்கச்**
**சட்டத்தை மீறல் தகவன்றால் -விட்டத்தின்**
**திண்மையழிந் தோரிடத்துச் செல்லேறின் மேற்கூரை**
**உண்மையிலே வீழ்ந்திடுமன் றோ? -புலவர் குழந்தை**

மேலே ஐவகை ஒழுக்கத்திற்கும் கூறிய அத்தகைய இயைபுடைமையை நுணுக்கமாக நன்கு ஆராய்ந்தறிந்து அவ்வாறு செய்யுட் செய்து சுவைத் தின்புற்று வந்த நம் முன்னையோரின் மொழியறிவும், பொருளா ராய்ச்சியும், கருத்துணர்வும், கலைத்திறனும் இற்றென எடுத்தியம்புந் திறத்தவோ! அத்தகு தகுதி தமிழர்க்கு இனி என்று எய்துமோ!

## 3. மக்கள்

நம் முன்னையோர், அகவொழுக்கத்திற்கு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், வகுத்தமை போலவே, இன்ன நிலத்திற் குரியார் இன்னார் எனவும், இன்ன ஒழுக்கத்திற் குரியார் இன்னார் எனவும் ஐவகை நிலத்திற்கும், ஐவகை யொழுக்கத்திற்கும் தனித்தனி மக்களும் வகுத்துள்ளனர். நிலத்துக் குரியார் ***நிலமக்கள்*** எனவும், ஒழுக்கத்திற் குரியார் ***தலைமக்கள்*** எனவும் பெயர் பெறுவர். அப் பெயர்களாவன,

### 1. நிலமக்கள், தலைமக்கள்

| நிலம் | நிலமக்கள் பெயர் | | தலைமக்கள் பெயர் | |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| முல்லை - | ஆயர் | x ஆய்ச்சியர் | அண்ணல் | மனைவி<br>கிழத்தி |
| | கோவலர் | x கோவித்தியர் | தோன்றல் | |
| | இடையர் | x இடைச்சியர் | குறும்பொறை | |
| | பொதுவர் | x பொதுவியர் | நாடன் | |

| | | | | |
|---|---|---|---|---|
| குறிஞ்சி - | வேட்டுவர் | x வேட்டுவிச்சியர் | | |
| | கானவர் | x கானத்தியர் | வெற்பன் | |
| | குறவர் | x குறத்தியர் | சிலம்பன் | கொடிச்சி |
| | இறவுளர் | x இறவுளத்தியர் | பொருப்பன் | |
| | குன்றுவர் | x குன்றுவித்தியர் | | |
| மருதம் - | களமர் | x களத்தியர் | மகிழ்நன் | |
| | உழவர் | x உழத்தியர் | ஊரன் | மனையாள் |
| | கடையர் | x கடைச்சியர் | | |
| நெய்தல் - | நுளையர் | x நுளைச்சியர் | கொண்கன் | |
| | திமிலர் | x திமிலியர் | துறைவன் | பரத்தி |
| | பரதவர் | x பரத்தியர் | சேர்ப்பன் | |
| பாலை - | எயினர் | x எயிற்றியர் | மீளி | |
| | மறவர் | x மறத்தியர் | விடலை | கன்னி |
| | | | காளை | |

நில மக்கள் - முல்லை முதலிய நிலங்களில் வாழும் மக்கள். ஆயர், வேட்டுவர் முதலிய பெயர்கள் நிலத்தாற் பெற்ற மக்களாகக் கொண்டு பாடுதற்குரியவர். அவ்வொழுக்கம் எல்லா மக்களுக்கும் பொதுவாகலான் ஆயர், வேட்டுவர் முதலிய நிலப்பெயராற் பாடாது, அண்ணல், வெற்பன், கிழத்தி, கொடிச்சி என்னும் உரிப்பெயராற் பாடுவது செய்யுள் வழக்கு மரபாகும். உரிப்பெயர் - அகத்திணைக் குரிய பெயர்.

இனி, ஆயர் வேட்டுவர் முதலிய ஐந்நிலப் பெயர்களும் ஒருவரைக் குறியாது அந்நிலத்தில் வாழும் மக்கட்கெல்லாம் பொதுப் பெயராய் உள்ளதால், அப்பெயர்களைக் கொண்டும் சிறுபான்மை அகத்திணையைப் பாடுதல் குற்றமின்று. அதாவது, ஆயர் வேட்டுவர் முதலிய அந்நிலப் பெயர்களை- நிலமக்கள் பெயர்களை - உரிப் பெயராகக் கொண்டும் சிறுபான்மை அகத் திணையைப் பாடலாம் என்பதாம். (அகத் -21-2)

கொங்கர், துளுவர், கோவையார், சென்னையார் என்பன போல, ஆயர் வேட்டுவர் என்போர் இடத்தால் வெவ்வேறு பெயர் பெற்றனரே யன்றி, வெவ்வேறு வகுப்பினர் அல்லர். அவர்கள் எல்லாரும் ஒரே இனம். அவர்கள் 'தமிழர்' என்னும் பெயரில் அடங்குவர்.

இனி, அண்ணல் வெற்பன் என்னும் பெயர்கள், அகத்திணையைப் பாடுதற்குப் படைத்துக் கொண்ட பெயர்களே யல்லாமல், அவை ஆயர் வேட்டுவரில் வேறுபட்ட இனஞ்சுட்டும் பெயர்களல்ல.

குன்றுவர், வெற்பன் என்னும் குறிஞ்சி நிலமக்கள் பெயரும் தலைமக்கள் பெயரும் ஒரே பொருண்மை யுடையவையாகும். அதாவது, குன்றுவர் - குன்றில் வாழ்பவர். வெற்பன் - வெற்பிற் குரியவன்; வெற்பில் நிகழும் ஒழுக்கத்திற் குரியவன். குன்று, வெற்பு - மலை,

## 2. அடியோர், வினைவலர்

இனி, அவ் வைந்நில மக்களைச் செய்யுள் வழக்கிற்குப் பயன்படுதற் பயனை நோக்கி அடியோர், வினைவலர், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என அறுவகையாக வகுத்துள்ளனர் நம் முன்னையோர். அவருள் அடியோரும் வினைவலரும் கைக்கிளை பெருந்திணை என்னும் அகப்புறத் திணைக்குரியவராவர். (அகத் - 23). அந்தணர் முதல் நால்வரும் ஐந்திணைக் குரியவராவர்.

***அடியோர்:*** அவருள் அடியோராவார், தமக்கென நிலையான பொருளோ தொழிலோ இன்றிச் செல்வரிடத்திருந்து அங்கேயே உண்டுடுத்தோ, அல்லது நாட்கூலி பெற்றோ, அச் செல்வர் தொழிலுக்கு அடிப்படையாய் இருப்பவர்; கிளைகளைத் தாங்கும் அடிமரம் போல் நின்று அச் செல்வர் தொழிலைத் தாங்கும் அடிமரம் போல் நின்று அச்செல்வர் தொழிலை முடிப்பவர். சைவம் வைணவம் முதலிய சமயங்களைப் பரப்பினவர்களுக்கு அடியோர், அடியார், அடிகள் எனப் பெயர் வழங்குதலை அறிக. இன்றும் செல்வர்களிடம் ஆண்களும் பெண்களும் குற்றேவல் செய்து வருதல் இதனை நினைப்பூட்டும். குறு + ஏவல் - குற்றேவல். தொடர்ச்சியின்றி அவ்வப்போது ஏவியதைச் செய்தல்.

**வினைவலர் :** வினைவலராவார், ஆண்டுக் கூலிகளாய்ச் செல்வர்களிடம் அமர்ந்து தொழில் செய்வோர். இவர் அடிக்கடி ஏவாமல் தொடர்ந்து தொழில் செய்வோர். ஆண்டுக் கூலிகள் பெரும்பாலும் ஆண்களே. சிறுபான்மை பெண்களும் உண்டு. இவர் கூட்டு வேலை செய்பவர். பண்டு செல்வரிடம் ஆண் பெண் இருபாலாரினும் அடியோர், வினைவலர் இருந்து வந்தனர்.

இவ்வடியோர், வினைவலர் தமக்குரிய ரன்மையால், இவரிடம் கைக்கிளை பெருந்திணை ஒழுக்கங்கள் நிகழினும் குற்றமில்லை என்கிறார் ஆசிரியர்.

> **“அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்**
> **கடிவரை யிலபுறத் தென்மனார் புலவர்”** (அகத் -23)

அதாவது, அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் - அடியோரிடத்தும், வினைவலரிடத்தும், புறத்து கடிவரைஇல - கைக்கிளை பெருந்திணை யொழுக்கங்கள் நிகழுதலை நீக்கும்

நிலைமைஇில், என்று சொல்லுவர் புலவர். பாங்கினும் - இடத்தும் புறம் - ஒத்த காமத்தின் புறத்ததான கைக்கிளை பெருந்திணை. கடிதல் - நீக்குதல். கடிவரை இல - நீக்கும் நிலமையில. தகாவொழுக் கங்களாகிய கைக்கிளை பெருந்திணைக் குறிப்புக்கள் ஒருகால் அடியோர் வினைவலர்பால் நிகழினும் குற்றமில்லை என்பதாம்.

சீருஞ் சிறப்பு மிக்க செல்வக் குடிப் பிறந்த ஒருவன் ஒருத்தியைத் தலைமக்களாகக் கொண்டு செய்யுள் செய்தலே புலனெறி வழக்கம். அத்தகைய செல்வக்குடிப் பிறந்த தலைவர்களாலேதாம் களவொழுக்கம் இனிது ஒழுக முடியும். அகவொழுக்கத்திற்குத் துணைசெய்வோராக - தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன், பாணன், கூத்தன், விறலி, இளையோர் முதலியவர்கள் கூறப்படுவதும் இதனை வலியுறுத்தும். இத்தகைய அகவொழுக்கம் - அன்பினைந்திணை - தன்னுரிமை யின்றிப் பிறரேவல் வழி நிற்கும் அடியோர் வினைவலரால் எங்ஙனம் இனிது ஒழுக முடியும்?

கைக்கிளைக் குறிப்பாகிய காமஞ்சாலா ஒருத்தியை ஒருவன் விரும்பிக் குறிப்புரை யாடின், அவள் அக்குறிப்புக் கெதிர்க் குறிப்பின்றிச் செல்லின் தொடர்ந்து களவொழுக்க மொழுக முடியாது. களவொழுக்க மொழுகத் தகுதியில்லாத அடியோர் வினைவலரில் ஒருவன் விரும்பின், அவள் அவ்வாறு செல்லினும் அதனாற் குற்றமில்லை.

இனி, பெருந்திணைக் குறிப்புக்கள் நான்கனுள் களவொழுக்க மொழுகிய ஒரு தலைவன் மடலூர்ந்து அலரெழுப்பின், தகாத வொழுக்க முடையவனென்று பெற்றோர் வெறுப்புற்றுத் தம் மகளை அவனுக்குக் கொடுக்க மறுக்கவும் கூடும். அதனால், அக் களவொழுக்கம் முற்றுப் பெறாத குற்ற முண்டாம். அடியோர் வினைவலரில் ஒருவன் ஒருத்தியைக் காதலித்து அவ்வாறு மடலூர்ந்து அலரெழுப் பின், பெற்றோர் தம் மகளை அவனுக்குக் கொடுக்க மறுக்கினும், அவன் களவொழுக்கம் ஒழுகாததால் அதனால் வரும் குற்ற மொன்று மில்லை.

இனி, மூத்தாளை விரும்பின், அவள் விரும்பாவிடின் களவொழுக்க மொழுக முடியாத குற்ற முண்டாம். அடியோர், வினைவலர் களவொழுக்க மொழுகாதவ ராகையால், அவள் விரும்பா விடினும் அதனால் குற்றமில்லை.

பிரிந்து சென்ற கணவன் வர நாளானால் அடியோர், வினைவலர் மனைவியர் இரங்கார். இரங்கினும் அதனால் வருங் கேடொன்றும் இல்லை.

விருப்பமில்லாத தலைவியைப் புணர முயலினும், வலிதிற் புணர முயலினும், நாணுடைய தலைவியின் அன்பு கெடும். அடியோர் வினைவலர் மனைவியர் வலிதின் மறுத்து விடுவர். அதனால் கேடொன்று மில்லை.

கைக்கிளையும், பெருந்திணையும் தகாவொழுக்க மாகையால் யாரும் அத்தகைய வொழுக்கம் ஒழுகக்கூடாது. எனினும், அடியோர், வினைவலர் போன்றாரிடம் ஒருகால் நிகழினும் அவ்வளவு குற்ற முடையதல்ல. ஆனால், நன்மக்கள் அவற்றை ஒரு பொழுதும் மேற்கொள்ளக்கூடாது என்பதாம். இது செய்யுள் வழக்கிற்கே யன்றி உலக வழக்கிற்கும் ஒக்கும்.

செல்வர், எளியர் முதலிய எல்லாத் தமிழ் மக்களும் பண்டு ஒருவனும், ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு மணந்து கொண்டே; ஊடியும், உணர்ந்தும், கூடியும் இனிது வாழ்ந்து வந்தனரேனும், செய்யுள் வழக்கில் கூறப்படும் அன்பினைந் திணை யொழுக்கம் ஏழைமக்களால் தொடர்ந்து நடத்த இயலா தாகையால், புலனெறி வழக்கில் ஐந்திணை யொழுக்கத்திற்கு மேன்மக்களே தலைமக்களாகக் கொள்ளப் பட்டனர்.

இது நாடக வழக்குப் பற்றிய பிரிவேயன்றி இனவேற்றுமை யன்று. அடியோரும், வினைவலரும் செல்வராதலும், தலைமக்களாதலுங் கூடும். அப்போது அவர்கள் ஐந்திணைத் தலைவராகக் கொண்டு பாடப் பெறுவர். எல்லாச் சிறப்பு முடையோரைத் தலைவராக்கிப் பாடுதலே செய்யுள் வழக்கென்பதையும், உயர்பொருளைக் கூறி அதையே மற்றவரும், பிற்காலத் தவரும் பின்பற்றி நடக்க வேண்டு மென்ற நன்னோக்குடனேயே சான்றோர் செய்யுள் செய்தன ரென்பதையும் அறிய வேண்டும். கைக்கிளை பெருந்திணை யொழுக் கங்கள் தகாதன வாகையால் விலக்குக வென்பதே ஆசிரியர் கருத் தாகலான், ஒரு சில ஏழை மக்கள்பால் அவை நடக்கினும் குற்றமில்லை என்பதேயாகும்.

ஒருசிலர், அடியோர், வினைவலர் என்னும் பெயர்களைக் கொண்டு, 'ஆசிரியர் தொல்காப்பியர் காலத்தே, தமிழ் நாட்டில் விற்றுக்கொள்ளற்குரிய அடிமை வழக்கம் இருந்துவந்தது. அடியோர் என்பது, **விற்றுக் கொள்ளற் குரிய அடிமைகளையே குறிக்கும்**' என்று பொருள்கூறி, தமிழர் பண்பாட்டை அறிய முடியாது செய்து விட்டனர்.

'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' என்ற தமிழரிடை **அடிமைகள்,** அஃதும் '**விற்றுக்கொள்ளற் குரிய அடிமைவழக்கம்**' எப்படி இருந்திருக்க முடியும்? அப்படி இருந்திருக்கின், 'பிறப் பொக்கும்'

என்றது பொய்யுரையா? 'செய்தொழில் வேற்றுமையால் சிறப்பொவ்வா' என்றபடி, தொழில் பற்றியதே அடியோர், வினைவலர் என்னும் பிரிவு. அவர்தம் கூற்றுக்குத் துணையாகக் காட்டுவன.

1. "குற்றிளை யோரும் அடியோர் பாங்கும்." (சிலப் - 16;84)

2. "மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் ஒன்னார்க்
கடிமை புகுத்தி விடும்." (குறள்)

3. "ஏற்றுக் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து." (குறள்)

4. "ஒப்புரவி னால்வருங் கேடெனில் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து." (குறள்)

என்பன.இப்பாட்டுக்கள் அவர் நினைக்கும் பொருளையுடையவை யல்ல; பொருள் வருமாறு,

1. ஏவியதைச் செய்யும் இளைய மகளிரும், தன்கீழ்த் தொழில் செய்வாரும். இவர்கள் - மகளிர்

2. மடிமை குடிமைக்கண் தங்கின் - சோம்பலானது குடிசெய்யும் அரசனிடம் உண்டானால், தன் ஒன்னார்க்கு அடிமை புகுத்திவிடும் - அது அவனைத் தன் பகைவர்க்கு அடிமையாக்கி விடும். சோம்பலுள்ள அரசன் தோற்றுப் பகைவர்க் கடிமை யாவான்.

3. கயவர்கள் ஒன்று உற்றக்கால் விரைந்து விற்றற்கு உரியர் - கீழ்மக்கள் ஏதேனும் ஒரு குறை உண்டானபோது அது தீர்தற் பொருட்டு விரைந்து தம்மைப் பிறர்க்கு அடிமைப்படுத்தற் குரியர். எற்றிற்கு உரியர் - அஃதன்றி வேறு எதற்குரியர்? ஒன்றுக்கும் உரியரல்லர். கயவர்க்கு மானம் என்னும் நற்குணம் இன்மையால், உணவு உடை ஏதேனும் ஒன்றில்லை யானால் உடனே பிறரையடுத்து, அவர் சொன்னபடி கேட்டு உயிர் வாழ்வர் என்பதாம்.

4. ஒப்புரவினால் கேடு வரும் எனின் - ஒப்புரவு செய்தலினால் பொருட்கேடு வருமென்றால், அஃது ஒருவன் விற்றுக்கோள் தக்கது உடைத்து - அக்கேடு ஒருவன் ஒன்றைவிற்று மற்றொன்றைக் கொள்ளும் தகுதியை யுடையது. ஒன்றைவிற்று ஒன்றைக் கொள்ளுதல் - வாணிகம். ஒப்புரவு செய்வோர் பொருளைக் கொடுத்துப் புகழை யடைவதால், அப்பொருட்கேடு ஒன்றை விற்று மற்றொன்றைக் கொள்ளும் வாணிகம் போன்றது என்பதாம்.

எனவே, இம்மூன்று குறளும் (2,3,4), மடிமைக் குற்றத்தையும், கயமைத் தன்மையையும், ஒப்புரவின் சிறப்பையும் மிகுத்துக் கூறியனவேயன்றி, விற்றற்குரிய அடிமைகள் பண்டு தமிழ் நாட்டில் இருந்ததைக் குறிப்பனவல்ல என்பதை யறிக.

## 3. நாற்பால்

இனிக் கூறப் பெறும் பாலையொழுக்க மாகிய ஓதல் பகை முதலிய பிரிவுகள், அகத்திணைக்குப் பயன்பட்டுப் புறத்திணைக் கண் நிகழ்வதாகலின், புறத்திணைக்கே சிறப்புடையராகக் கூறப்படும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பாலரும் அகத்திணைத் தலைவர்களாகக் கொண்டும் செய்யுள் செய்யப் பெறுவர். இந் நால்வரும் தொடர்புடைய ஒரு தொகுதிக்குட் படுதலின் நாற்பால் என வழங்கப் பெறுவர். 'வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்' (புற - 183). இதனை ஆசிரியர்

**"ஏவல் மரபின் ஏனோரும் உரியர்**
**ஆகிய நிலைமை அவரும் அன்னர்."** **(அகத் -24)**

என்கின்றனர். மரபின் - இலக்கண முறையானே, ஏவல் ஆகிய நிலைமை அவரும் - பிறரை ஏவிக்கொள்ளும் தொழிலைத் தமக்கு உரியராகிய அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வரும், அன்னர் ஏனோரும் - அவர்களைப் போலப் பிறரை ஏவிக்கொள்ளும் உரிமையுடைய குறுநிலமன்னரும், உரியர் - உரிப்பொருட் டலைவராக நாட்டிச் செய்யுள் செய்தற்கு உரியர். வணிகரும் வேளாளருமே குறுநில மன்ன ராயினும் (மரபு - 81,76) அங்ஙனம் குறுநில மன்ன ராயக்கால் தலைமக்களாகக் கொண்டு பாடுதற் குரியரோ? என்னும் ஐயம் நீக்குதற்குக் குறுநில மன்னரை வேறு கூறினார். குறுநில மன்னர் - சிற்றரசர்.

ஆட்சித் தொழில் முட்டின்றி நடத்தற் பொருட்டு மன்னர் பெருநில மன்னர், குறுநில மன்னர் என இருவகைப் பட்டது போலவே, உழுதொழில் முட்டின்றி நடத்தற் பொருட்டு, வேளாளரும் ***உழுதுண்போர், உழுவித்துண்போர்*** என இருவகைப் பட்டனர். உழுதுண்போர் - தாமாக நிலத்தை உழுதுண்டு வாழும் உழவுத் தொழிலாளர். இருவகை வேளாளரில் இவர் பெரும்பாலோர். உழுவித் துண்போர் - உழுதுண்ணும் உழவுத் தொழிலாளர்களைக் கொண்டு தமது நிலத்தை உழுவித்துண்டு வாழ்பவர். இவர் ***பண்ணை யக்காரர், நிலக்கிழார்*** எனப் பெயர் பெறுவர்; செல்வமும் சிறப்பும் உடையவர். இவரே சிற்றரசராதற் குரியர். காரி, ஓரி, அதியன், குமணன் முதலிய சங்ககால வள்ளல்கள் உழுவித் துண்ணும் பெருநிலக் கிழார்களாகவும், சிற்றரசர்களாகவும் இருந்து வந்தனர். இவர் ***வேளிர்*** என்னும் சிறப்புப் பெயருடன் விளங்குவர். "பாரி **வேள்**பாற் பாடினை செலினே" (புறம் -105).

செல்வர், எளியர், தலைவர், ஏவலர் என்பன வன்றி, இவ்விருவகை வேளாளரிடைப் பண்டு குலவேற்றுமையில்லை. அரசியல்

அதிகாரிகளும், அரசியற் பணிமனையில் வேலை செய்யும் எழுத்தாளரும் போன்றவரே இவ்விருவகை வேளாளரும் எனலாம்.

இடம்பற்றி ஆயர், வேட்டுவர் எனவும், அகவொழுக்கம் பற்றி அண்ணல், வெற்பன் எனவும், தொழில்பற்றி அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், அடியோர், வினைவலர் எனவும் மக்கட் டொகுதியை முக்கூறாகப் பகுத்தனர் நம் முன்னையோர். இவர்களில், ஆயர், வேட்டுவர் என்னும் நிலமக்களே அந்தணர், அரசர் முதலிய அறுவருமாவர். அந்தணர் முதலிய நால்வரும் ஐந்திணைத் தலைவர் களாகப் பாடவும், அடியோரும், வினைவலரும், கைக்கிளை, பெருந்திணைத் தலைவர்களாக ஒருவாறு பாடவும் உரியராவர்.

உலகியலுக் கேதுவாகப் பலவகைப்பட்ட தொழில்செய்து வந்த மக்களிடை நிகழும் பழக்க வழக்கங்களைப் புனைந்துரை வகையால் புலவர் பாடப் பயன்படும்படி, அம்மக்களை - நில மக்கள் எனவும், தலைமக்கள் எனவும், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனவும், அடியோர் வினைவலர் எனவும் பெருநில மன்னர், குறுநில மன்னர் எனவும், உழுவித்துண்ணும் வேளாளர், உழுதுண்ணும் வேளாளர் எனவும் வகுத்தும், யாவரையும் '***கிளவித் தலைவர்*** எனத் தொகுத்தும் ஆசிரியர் தொல்காப்பியர் இலக்கணஞ் செய்தாரே யன்றி, - தனித்தனி மக்கட்குத் தனித்தனி ஒழுக்கம் கற்பித்திலர். எனவே, வணிகரும், வேளாளரும் அரசியற் சிறப்புப் பெறுவதும், சிற்றரசராய் இருந்து ஆட்சி புரிவதும் உண்டெனவும், அன்னாரும் தொழில் வேற்றுமையால் பகுதிப்பட்டனரே யன்றிப் பொருளொற் றுமையால் தொகுதிப்பட்டனரேயாவர் என்பதும், ஏனையோரும் அன்னரே என்பதும் விளக்கியே,

**"மக்கள் நுதலிய அகனைந் திணையும்**
**சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்."** **(அகத் -54)**

என்றார் ஆசிரியர். அதாவது, மக்களிடத்து நிகழும் ஐந்திணையையும் பாடும்போது, ஒருவர் இயற்பெயரைச் சுட்டிக் கூறப் பெறார். காரி, பாரி, கண்ணகி என்னும் இயற்பெயர்களை அமைத்து அகத்திணையைப் பாடக்கூடாது என்பதாம். அகத்திணை எல்லார்க்கும் பொதுவாதலால், ஒருவர் இயற்பெயர் சுட்டிப் பாடினால் அப் பொதுத்தன்மையை யிழந்து அதன் தனிப்பெருந் தன்மை குறைந்துவிடும்.

இனி, முல்லை முதலிய ஐந்நில மக்களில், பெரும்பாலார் முன்பு,

**"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல**
**தில்லென மொழிப."** **(மரபி - 80)**

“எண்வகை யுணவின் செய்தியும் வரையார்” (மரபி -78)

“உழுவார் உலகத்தார்க் காணி” (குறள் -1032)

“உழந்தும் உழவே தலை” (குறள் - 1031)
“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்” (குறள் - 1033)

“உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை” (நல்வழி)

என்னும் சிறப்புடைய உழவுத் தொழிலே செய்து வந்தனர். நெய்தல்நில மக்களும் உப்பாகிய உணவுப் பொருள் விளைவித்து வந்தனர். சிலர் அவ்வுழவுக்கு வேண்டிய கைத் தொழில்களும், சிலர் வாழ்க்கைக்கு வேண்டிய பல்வேறு கைத்தொழில்களும் செய்து வந்தனர். சிலர் உணவுப் பொருள்களையும் கைத்தொழிற் பொருள் களையும் உள்ள இடங்களிற் கொண்டு, வேண்டிய இடங்கட்குக் கொடுத்தும், பிற நாடுகட் கனுப்பிப் பொருளீட்டியும் வந்தனர். மேற்கண்ட தொழில்கள் இடையூறின்றி நடைபெறவும், நாட்டில் ஒற்றுமை, அமைதி முதலியன நிலைபெறவும், மக்கள் அச்சமின்றி வாழவும் உடல் வலி மிக்க சிலர் காத்து வந்தனர். கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், பொதுநலம் முதலியன ஒருங்கமையப் பெற்ற பெரியோர்கள், உலகியல், அரசியல், வாழ்வியல், தொழிலியல், முதலிய நடைமுறைகளைக் கற்பித்து மக்களை நன்னெறிக்கண் நடத்தி வந்தனர்.

உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உழவுத் தொழில் செய்து வந்தவரை ***வேளாளர்*** எனவும், வேள் - உதவி. ‘***வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்*** என்பது திரிகடுகம். கொண்டு கொடுத்து வந்தவரை ***வணிகர்*** எனவும். கொண்டு கொடுத்தல் - வாணிகம். நாடுகாத்து வந்தவரை ***அரசர்*** எனவும், அரசு - காவல். ஒழுக்க நெறி கற்பித்து வந்தவரை ***அந்தணர்*** எனவும் வழங்கி வந்தனர். அந்தணர் அருளுள்ள முடையவர். இவை தொழில்பற்றிய பெயர்கள்.

உழவுத் தொழில் மற்றைத் தொழில்களின் முதலும் இன்றிய மையாச் சிறப்புடையது மானதால், தலைமை பற்றி வேளாளர் எனவே, மற்றைத் தொழிலாளரும் அடங்குவர். (கிளவியாக்கம் -490. வள்ளுவரும் ‘***உழவு***’ என்னும் அதிகாரத்தில் மற்றைத் தொழில் களையும் அடக்கியுள்ளமை காண்க. அந்தணர், அரசர், வணிகர், அல்லாத மற்றை யாவரும் வேளாளரே யாவர். வாழ்வியலுக்கு வேண்டிய எல்லாத் தொழிலாளர்களும் வேளாளர் எனப்பட்டனர். அவர்களில் சிலர் வாணிகம் செய்தும், சிலர் நாடு காத்தும், அறிவுடைப் பெரியார்கள் நன்னெறி புகட்டியும் வந்தனர். முல்லை முதலிய நானில மக்களே இவர் என்பது, ஐந்திணைத் தலைவர்களான நானில மக்களையே கூறி, பின் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்பாரும் ஐந்திணைக்குரிய தலைவராவர் எனக் கூறுதலானும்

(அகத் -20-240) அகத்திணைக்கண் ஒருவர் இயற்பெயர் சுட்டிக் கூறக்கூடாது என்பதனாலும் (அகத் -54) விளங்கும்.

எனவே, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பன தொழில் பற்றிச் சிறப்பு வகையால் கூறப்பட்டனவே யன்றிப் பிறப்பு வகையால் கூறப்பட்டனவல்ல. செல்வரும், வறியரும், நல்லரும், பொல்லரும், வலியரும், மெலியரும் இருப்பது மக்களின் இயல் பாகலான், இவற்றாலாகிய வேற்றுமையைத் தவிரப் பண்டைத் தமிழர்க்குள் உண்ணல், உறைதல், கொள்ளல், கொடுத்தல், முதலிய வற்றில் வேற்றுமை இருக்கவில்லை. உழவுத் தொழிலாளர், "***அஃதாற்றாது எழுவாரை யெல்லாம் பொறுத்தலானும்***" (குறள் -1032), பொறுத்தல் - தாங்குதல், உதவுதல். எத்தொழிற்கும் கொண்டு செலுத்தும் அறிவும் ஒழுக்கமும் இன்றியமையாச் சிறப்பின வாகலானும் அந்தணர் முதலினும், வேளாளர் ஈற்றினும் வைக்கப் பட்டனர். முன்னிரு தொழிலும் இடையறாது இனிது நடைபெறவும், அத்தொழில் செய்வோர் அச்சமின்றி வாழவும் அரசர் காத்தலானும், வணிகர், அந்தணர்க்கும் அரசர்க்கும் கொண்டு கொடுத்தலோடு, அரசியற்குப் பொருளீட்டித் தருதலானும், வேளாளர் விளைவிக்கும் பொருள்களைக் கொள்வதோடு அவர்க்கு வேண்டுவன கொண்டு கொடுத்தலானும் அரசர் வணிகரை முறையே இடையில் வைத்து; அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என முறைப்படுத்தினரே யன்றி இவர்கட்குள் ஏற்றத்தாழ்வில்லை.

'மருத நிலத்தில் முதலில் உழவர் என்னும் ஒரு வகுப்பார் இருந்தனர். பின்பு முறையே வாணிகம், அரசியல், துறவு என்பன பற்றி அவ்வகுப்பினின்றும் பிரிந்து போனவர், வணிகர், அரசர், அந்தணர் எனப்பட்டனர். உழவர் முதலிய நாற்பாலும் பிற்காலத்தில் ஏற்றத் தலைமை முறையால் தலைமாற்றிக் கூறப்பட்டன, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என. கொல், நெசவு முதலிய கைத்தொழில் பற்றிப் பின்பு உழவர் குலத்தினின்றே பலர் பிரிந்தனர்.' (ஒப்பியல் மொழி நூல் - பக்கம் -227. தேவநேயப் பாவாணர்.)

பண்டு ஒரே குலமாய் இருந்த தமிழர்கள், ஒவ்வொரு தொழில் செய்வோரும் தமது தொழின்முறைக் கேற்ப அவ்வத் தொழில் செய்வோரிடமே கொண்டு கொடுத்து வந்தமையால், நாளடைவில் வெவ்வேறு குலத்தினராயினர். அதாவது, மட்கலஞ் செய்வார் நெய்தொழில் செய்வார் பெண்ணை மணந்தால் தந்தொழிலுக்கு ஒத்துவராதாகையால் மட்கலஞ் செய்வார் மகளையே மணந்தனர். அவ்வாறே நெய்வோர் அத் தொழிற் பயிற்சி யுடைய நெய்வோர் மகளையே மணந்தனர். இவ்வாறே மற்றைத் தொழிலாளரும் தத்தம் தொழிலாளரிடையே கொண்டு கொடுத்து வந்ததால் குலப் பிரிவினை

யுண்டாயிற்று. நாளடைவில் அது தொடர்பற்ற வெவ்வேறு குலமெனக் கருதும் நிலையை அடைந்துவிட்டது. ஒவ்வொரு குலத்தினரும் தங்கள் குலம் இவ்வாறு தோன்றிற்று எனவும், தாமே சிறந்தவர் எனவும் குலப்புராணம் எழுதிக் கொண்டு தனித்த இயல்புடையவராயினர். என்று தமிழர்க்கு நாம் எல்லோரும் '***ஓரினம், ஒருகுலைக்காய்*** என்னும் இனவுணர்ச்சி யுண்டாகுமோ!

## 1. அந்தணர்

அரசர் முதலிய மற்ற மூன்று வகுப்பாரினும் இல்லறம் இனிது நடத்தி அறிவும், ஆண்டும் முதிர்ந்த பின், குடும்பத்தை மக்களிடம் ஒப்படைத்து விட்டு, உயிர்களிடத்து அருளுள்ள முடையராய்ப் பொதுநலம் புரிந்து வரும் பெரியோரே அந்தணர் எனப்படுவர்.

**"காமஞ் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே. "** **(கற்பு -51)**

இதுவே அந்தணர் தோற்றம். அதாவது, கிழவனும் கிழத்தியும் - தலைவனும் தலைவியும், அறம்புரி சுற்றமொடு - இல்லறத்திற்குத் துணையான தோழி முதலிய சுற்றத்தாரோடும், ஏமம் சான்ற மக்களொடு - காப்பமைந்த மக்களோடும், துவன்றி - கூடியிருந்து இல்லம் நடத்தி, சான்ற காமம் கடைக்கோள் காலை - அமைந்த காமம் தீர்ந்த காலத்து, அதாவது முதுமைப் பருவம் அடைந்ததும், சிறந்தது பயிற்றல் - மக்களிடம் வாழ்க்கையை ஒப்படைத்து விட்டுப் பொதுநலத் தொண்டு செய்தல், இறந்த அதன் பயனே - முன்னர் நடத்திய இல்லறத்தின் பயனாகும்.

சான்ற - அமைந்த, நிறைந்த. கடை - முடிவு. கோள் - கொள். கடைக் கொள்ளுதல் - முடிவுறுதல். சிறந்தது - பொது நலம். இறந்த அது - நடத்திய இல்லறம். தாம் இல்லறம் நடத்திப் பழகியதன் பயன் இல்லறம் நடத்துவோர்க்கு உதவுதலே யாகும். உதவுதல் - அறவழியில் செலுத்துதல் முதலியன. ஏமம் - பாதுகாப்பு. முதுமைப் பருவமுற்ற பெற்றோரைப் பாதுகாத்தல் மக்கள் கடமையாகும். "***தூங்குசிறை வாவலுறை தொன்மரங்க ளென்னத் தாங்குவது மக்கள் கடன்***" என்றார் ஒட்டக்கூத்தர்.

தலைவனும், தலைவியும் தோழி முதலிய சுற்றத்தாரோடும் மக்களோடும் கூடி இல்லறம் இனிது நடத்தி முதுமைப் பருவ முற்ற பின்னர், மக்களிடம் வாழ்க்கையை - குடும்பத்தை - ஒப்படைத்து விட்டுப் பொதுநலத் தொண்டு புரிதலே இல்லறம் நடத்தியதன் பயன்

என்பதாம். பொதுவாகக் கூறினும் சிறப்புப் பற்றி ஆண்களே கொள்க. ஒன்றில் நன்கு பயின்று பழக்க முள்ளவர்கள், அதைப் பயில்வார்க்குப் பயன்பட வாழ்தல் முறையாதல் அறிக.

பொதுப்படக் கூறினும், அறிவும் பொதுநல ஆர்வமும் உடைய இல்லறம் நீத்த பெரியோர்களே அந்தணர் நிலையிப் பொது நலம் புரிந்து வந்தனர். இவர்களில் ஒரு சிலர் தவ வாழ்க்கை நடத்தி வந்தனர். இது,

**"நாலிரு வழக்கில் தாபதர் பக்கமும்"** **(புறத் -20)**

என்பதால் விளங்கும்.

தாபதர் - தவஞ்செய்வோர். இவர்தம் தவநிலை, திருக்குறள் துறவறவியலில், '***தவம்***' என்னும் அதிகாரத்திற் கூறப்படுகிறது. இனி வள்ளுவர்,

**"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்**
**செந்தண்மை பூண்டொழுக லான்."** **(குறள்)**

அதாவது, எல்லா உயிர்களிடத்தும் அருளுடன் நடப்பதால் அந்தணர் எனப்பட்டனர் என, அந்தணர் இலக்கணங் கூறியது மன்றி, அக்குறளைத் துறவிகள் பெருமை கூறும் '***நீத்தார் பெருமை***' என்னும் அதிகாரத்தில் வைத்ததும்,

**"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த**
**மறைமொழி தானே மந்திரம் என்ப."** **(செய்யு - 178)**

அதாவது, பெரியோர் தம் ஆணையாற் சொல்லப்பட்டுப் பிறரறியாமல் மறைத்துச் சொல்லும் சொற்றொடரெல்லாம் மந்திரம் எனப்படும் எனத் தொல்காப்பியர் கூறிய துறவியர் செய்தியையே,

**"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்."** **(குறள்)**

என்று நீத்தார் பெருமையாகக் குறித்ததும், இல்லறம் நீத்துத் துறவறம் புக்குப் பொதுநலம் புரியும் பெரியோரே அந்தணர் என்பதற்குத் தக்க சான்றாகும்.

எனவே, அந்தணர் என்போர், அரசர் முதலிய ஏனைய வகுப்பினரில் இல்லற முற்றிய பெரியோரே யன்றித் தனி வகுப்பினர் அல்லர் என்பது வெளிப்படை. ஆயர் வேட்டுவர் முதலிய நிலமக்களே, அரசர் முதலிய மூன்று வகுப்பினருமாகையால், எல்லாத் தமிழ் வகுப்பினின்றும் - நிலமக்களினின்றும் - துறந்தோரே அந்தணராவர்.

தலைவன், அந்தணரிடத்து இன்னவாறு நடந்து கொள்ள வேண்டும் என்று, '**அந்தணர் திறத்தும்**' (கற்பு -5) எனத் தலைவிக்குக் கூறுதலான், தமிழந்தணர்கள் - துறவிகள் - ஆரிய முனிவர்கள் போலக் காட்டகத்தே சென்று தங்கிக் காலங் கழிக்காமல், மக்களிடையே நெருங்கிய தொடர்புடையராய் நாட்டகத்தே இருந்து வந்த நல்லறிவாளராவர் என்பது பெற்றாம். '**தலைமகற்கு ஆசிரியராகிய தாபதரும் இன்னாரென்பது அவனா லுணர்த்தப்பட்டு உணர்ந்த தலைமகள், அத்தெய்வத்தினை அஞ்சி யொழுகு மொழுக்கம்**' (மெய் -14 - பேரா) என்பதும் இதற்குச் சான்று பகரும்.

தமிழ்த்துறவிகளாகிய அந்தணர், பெரும்பாலும் ஓரிடத்தில் நிலையாகத் தங்கியிராமல் புலவர் பெருமக்கள் போல, ஊர்தோறுஞ் சென்று நாட்டு மக்கட்கு நன்னெறி புகட்டி வந்தனர். ஆகவே, வெயிலுக்காகக் குடையும் செருப்பும், நீர் மொண்டு கொள்ளச் செம்பும், வழிச்செலவுக்குத் துணையாக ஊன்றுகோலும், தங்குமிடத்தில் விரித்துக் கொள்ள விரிப்பும், பழந்தமிழ் நூல்களும் உடையராய் இருதனர் என்பது,

**"நூலே கரகம் முக்கோல் மணையே**
**ஆயுங் காலை அந்தணர்க் குரிய."** **(மரபி -70)**

என்பதால் விளங்கும். நூல் - தமிழ் நூல். கரகம் - சிறுசெம்பு. முக்கோல், முத்தலைக் கவைக் கோல். இன்றும் நாட்டுப்புறப் பெரியவர்கள் கவைக்கோலை ஊன்று கோலாகப் பயன்படுத்தி வருகின்றனர். இருதலைக் கவைக்கோல் போல் முத்தலைக் கவைக் கோலும் சிறுபான்மை உண்டு. சில பெரும் பண்ணையங்களில் மாட்டுக்குக் கழிதட்டுத் தள்ளக் கைவிரல் போன்ற ஐந்தலைக் கவைக் கோலைப் பயன்படுத்துகின்றனர். மணை - விரிப்பு. '**ஆயுங்காலை**' என்றதால், குடையும் செருப்பும் கொள்ளப்பட்டன. இத்தகைய அந்தணர்கள் இன்று நிரம்பத் தேவையாக உள்ளனர் தமிழ் நாட்டிற்கு.

தமிழ்ப் பெரியார்களான அந்தணர்கள் சிறந்த அறிஞராகவும் நல்லொழுக்க முடையவராகவும் உயர்குணக் குன்றினராகவும் இருந்தனர். அரசர்கள் அவர்களை அறிவுரை கூறுதற்குத் துணைக் கொண்டனர். இவர் அரசவகுப்பினின்றும் தோன்றிய அரசியலறிவும் உடையவரல்லரோ? இதனையே வள்ளுவர், '**பெரியாரைத் துணைக் கோடல், பெரியாரைப் பிழையாமை**' என்னும் அதிகாரங்களிற் கூறியுள்ளார்.

அரசர் போர் முதலியவற்றிற்காக நகரை விட்டுச் சென்ற போது, அவர்க்குத் துணையாக இருந்துவந்த அந்தணப் பெரியார்கள் அரசைப் பார்த்து வந்தனர். இது,

**"அந்த ணாளர்க் கரசுவரை வின்றே."** **(மரபி -82)**

என்பதால் விளங்கும். அரசன் போர்க்குச் செல்லும் போது, படைத்தலைமை பெற்ற வணிகரும், வேளாளரும் (மரபு -81,76) உடன் செல்வாராகலின், அரசியலை நடத்த வேண்டிய பொறுப்பு அந்தணப் பெரியார்களுடைய தாயிற்றென்க.

## ஐயர்

தொல்காப்பிய உரையாசிரியர்கள், **அந்தணர், ஐயர் பார்ப்பார்** என்னும் மூன்று பெயரும் ஒருபொருட் கிளவி எனவும், அம் மூன்று பெயரும் ஆரிய முதற் குலத்தினரைக் குறிக்கின்ற தெனவும் பொருளுரைத் துள்ளனர். தமிழர் ஒழுக்கங்கூறும் ஒரு சிறப்புடைய நூலில் ஆரியர்க் கிலக்கணங் கூறாராகையால், இது ஆராய்ச்சிக் குரியது.

அந்தணர் திறத்தும் - '***வேட்பித்த ஆசிரியனும் கற்பித்த, ஆசிரியனு மாகிய பார்ப்பார் கண்ணும்***' (கற் -36- நச்)

ஐயர் பாங்கனும் - '**முனிவர்** மாட்டும்' (கற் -5 - நச்)

அன்னவை பிறவும் பார்ப்பார்க்குரிய - 'அவைபோல்வன பிறவும் **அந்தணர்க்**குரிய' (கற் -36- நச்).

ஈங்கு நச்சினார்க்கினியர், அந்தணர் என்பதற்குப் பார்ப்பார் எனவும், ஐயர் என்பதற்கு முனிவர் (பிராமணர்) எனவும், பார்ப்பார் என்பதற்கு அந்தணர் எனவும் கூறுதல் காண்க.

ஐயர் என்பது - ஐயன் என்னும் ஆண்பாற் பெயரின் பன்மையாகும். ஐ + அன் - ஐயன். அன் - விகுதி. இது 'ஐ' என்னும் சொல்லடியாகப் பிறந்த பெயர். ஐ என்பது - வியப்புப் பொருள் குறிக்கும் ஓர் உரிச்சொல். "ஐ வியப்பாகும்" (உரியி -87) என்பது தொல்காப்பியம். வியக்கத்தக்க ஒன்றைக் கண்ட விடத்து 'ஐ!' என்பது தமிழர்க்கு, சிறப்பாகத் தமிழ்ச் சிறார்க்கு இயல்பு. ஐயன் - வியக்கத்தக்க பெரியோன்.

ஐயன் என்னும் பெயர் நாட்டுப்புறத் தமிழ் மக்களிடைப் பாட்டனுக்கும், சிறுபான்மை தந்தைக்கும் வழங்கி வருகிறது. பெரியப்பனை - '***பெரியையன்***' என்றும் சிற்றப்பனை - '***சின்னையன்***' என்றும் அழைப்பது பெருவழக்கு. என் பெண்கள் இருவரும் என்னை 'ஐயன்' என்றுதான் அழைத்து வருகிறார்கள். இது விளியில் 'ஐயா!ஐயா!' என்றாகும். ***ஐயை*** என்பது பெண்பால். இது, ***ஆயாள், ஆயா*** என மருவி வழங்குகிறது. ***பெரியாயாள், சின்னாயாள்*** என்பது பெருவழக்கு. அன்னை - அன்னாய் என்று விளியேற்பது போல, ஐயை - ஐயாய் என்றாகும் விளியில். இது 'ஐயா' என்னும் ஆண்பால் விளியை ஒருபுடை ஒத்துளது. எனவே, 'ஐயா' என்னும் ஆண்பால் விளியின் வேறுபா டறிய 'ஆயா' எனத் திரிந்து வழங்கினர் போலும். பின்னர், ஆயா என்னும் விளிப்பெயரிலிருந்து 'ஆயாள்' என்னும் பெயர் தோன்றியிருக்கலாம்.

சிறு குழந்தையை 'ஆயா' எனச் செல்லமாக அழைக்கும் வழக்கமும் உள்ளது. பொதுவாக எல்லாப் பாட்டியரையும் 'ஆயாள், ஆயர்' எனவே அழைத்து வருகின்றனர். பல இடங்களில், குயவர், ஒட்டர், கொல்லர். தச்சர் முதலிய வகுப்பினர், வேளாளர்களை 'ஐயா' எனவும், வேளாளப் பெண்களை 'ஆயா' எனவும் அழைத்து வருகின்றனர். தமிழர்களில் பெரும்பாலார் இன்னும் தங்கள் மாமன் மைத்துனர் முதலிய உறவினர் வந்தால், 'வாங்கையா' (வாருங்கள் ஐயா) என்றே வரவேற்கின்றனர். இங்கெல்லாம் 'ஐயா' என்னும் சொல், பெருமை குறித்தே வழங்குதலை யறிக.

**"தந்தையும் தன்னையும்"** **(செய். 191)**

தன் + ஐ - தன்னை - அண்ணன்.

**"என்னைமுன் நில்லன்மின் தெவ்வீர்'** **(குறள்.771)**

என் + ஐ. என்னை - தலைவன்.

**"முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்"** **(பெண்.மா8122)**

என் ஐயர் - என் தமையன்மார்.

இங்கெல்லாம் 'ஐ' பெருமை குறித்தலை அறிக.

முன்னர் ஆசிரியர்களை 'ஐயர்' என்றே அழைத்து வந்தனர். ஆசிரியர் எந்த வகுப்பினரா யிருந்தாலும் அவரை 'ஐயா' என்றுதான் அழைப்பது வழக்கம். இன்றும் நாட்டுப் புற மக்கள் ஆசிரியர்களை 'ஐயர்' என்றே அழைத்து வருகின்றனர். பொதுவாக ஐயர் என்னும் சொல் ஆங்கில 'சார்' (Sir) என்னும் சொல்லின் பொருளுடையதாகும். தன்னிற் பெரியாரெல்லாரும் ஐயர் ஆவர். தொல்காப்பியர், பெரியார் என்னும் பொருளிலேயே ஐயர் என்னும் சொல்லை வழங்குகிறார்.

'ஐயர் யாத்தனர் கரணம்' (கற் -4) - பெரியோர்கள் திரு மணத்தை ஏற்படுத்தினர்.

'ஐயர் பாங்கினும்' (கற் -4)- பெரியோர்களிடத்தும், எனக் காண்க,

இரப்போன் ஒருவரை நோக்கி, '***ஐயா! ஒரு காசு கொடுங்கள்*** என்பது பெருமை குறிப்பதே யாகும். அவர் காசு கொடாமற் போனால் அவன், 'ஐயா ஐயா! சாமி சாமி!' எனப் பின்றொடர்வதும் அப்பொருள் குறிப்பதே.

பிறரால் துன்புறுத்தப் படுவோர், 'ஐயோ! ஐயையோ!' என்று கூவுதல் இயல்பு. ஐயன் என்பதன் அண்மை விளிஐய! சேய்மைவிளி - ஐயா! மாமன் - மாமா - மாமோ என விளியேற்றல் போல, ஐயன்

*என்பதும், ஐயன் - ஐய - ஐயா- ஐயோ என விளியேற்கும். ஐயோ என்பது தம்மைக் காத்தற் பொருட்டுப் பெரியோரை அழைத்தலே யாகும்.*

*பிறர் அடித்தால், எளியர் தம்மைக் காப்பாற்ற வேண்டித் தம்மிற் பெரியாரைக் கூவியழைப்பர். ஒருவரும் வந்து உதவாவிடின் இரங்குவர். அதனால், 'ஐ' என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த ஐயன் என்பதன் சேய்மை விளியான ஐயோ என்பது, பின்னர் இரக்கம் குறிக்கும் இடைச் சொல் ஆயிற்று. சுற்றத்தாரையோ பொருளையோ இழந்தோர், 'ஐயோ' என்று அழுகின்றனர். ஒருவரை யாராவது அடித்துவிட்டால், அது கண்ட பெண்கள், 'ஆயாயா! (ஆயா ஆயா) இப்படியா அடிப்பது?' என்பது இரக்கம் குறிப்பதே யாகும்.*

*எனவே, ஐயர் என்பது, ஐ என்னும் தமிழ் உரிச்சொற் பகுதியடி யாகப் பிறந்த தனித்தமிழ்ச் சொல்லே யென்பது தேற்றம்.*

**பார்ப்பார்**

*பார்ப்பார் என்பது பார்ப்பான் என்னும் சொல்லின் பன்மை. பார்ப்பனர் என்பது மீது. பெண்பால் - பார்ப்பாத்தி, பார்ப்பனத்தி, பார்ப்பினி. இது,* ***பார்ப்பு*** *என்னும் பகுதியடியாகப் பிறந்த தனித் தமிழ்ப் பெயர். பார்ப்பு என்பது இளமை குறிக்கும் ஓர் பண்புப் பெயர். பார்ப்பு + ஆன் - பார்ப்பான். பார்ப்பு + அன் + அன் - பார்ப்பனன். அன் சாரியை.*

*புதிதாக வாழ்க்கை தொடங்கும் இளங் காதலர்களுக்கு நல்வழி காட்டவும், இல்லறம் இனிது நடத்த அன்னார்க்குத் துணை செய்யவும், அவர்கள் இல்லற நெறியினின்றும் வழுவாமற் பார்த்துக் கொள்ளவும் உரியவனே பார்ப்பான் ஆவான். இவன், எப்போதும் தலைவன் கூடவே இருக்கும் பாங்கன் போலாது, வீட்டின்கண் ணிருந்து வேண்டும்போது தலைவனுக்கு ஆவன கூறுபவனாவான் (கற் - 36).* ***'பார்ப்பானாவான் நன்றுந் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவான்'*** *(செய் - 189- பேரா). இவன் சிறந்த கல்வியறிவும் ஒழுக்கமும் உடையவனாவான். இப் பார்ப்பான் கூற்றைத் தலைவன் தலைவி இருவரும் பெரும்பாலும் தட்டாமல் கேட்பர் (செய் 197). அதாவது, பார்ப்பான் வாயிலாகச் சென்றால் தலைவி வாயில் மறாள். உடன் போக்கில் நற்றாய் இரங்கும்போது, இவன் உலகிய லுண்மைகூறி அவளைத் தேற்றுவான் (செய் -197). இவன் களவு, கற்பு என்னும் இருவகைக் கைகோளுக்கும் உரியவன் (செய- 189 -90).*

இளங் காதலர்க்குத் துணை செய்வது பார்ப்பனத் தொழிலாகும். இன்றும் சில செல்வக் குடும்பங்களில் இத் தொழில் நடந்து வருகிறது.

பண்டைக் காலந்தொட்டு உலக வழக்கிற் பயின்றுவரும் பொருள்களின் வழக்கியல் கூறும் **மரபியலில்** ஆசிரியர் தொல்காப்பியர்.

**"பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை."** (மரபு -4)

**"தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன."** (மரபு -5)

**"கோடுவாழ் குரங்குங் குட்டி கூறும்."** (மரபு -13)

**"மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும்**
**அவையு மன்ன அப்பா லான."** (மரபு - 14)

என, எல்லாப் பறவைகளின் இளமைப் பெயரும்; (மரபு.14) ஆமை, உடும்பு, முதலை, ஒந்தி, ஓணான், நண்டு முதலிய தவழ்வன வற்றின் இளமைப் பெயரும்; (மர -5), குரங்கின் இளமைப் பெயரும்; (மர -14) **பார்ப்பு** எனக் கூறுதலானும்,

'புள்ளுக்குலம் பலவாகலான் இச்சூத்திரத்துள் அடங்கிய மரபு எத்துணையும் பலவாதல் நோக்கி, முதற் சூத்திரத்துள் பார்ப்பினை முற்கூறினா னென்பது' (மர-4-பேரா).

'இதுவும் தவழுஞ் சாதிக் கெல்லாம் பொதுவாகிய பரப் புடைமையின் இரண்டாவது வைத்தான் என்பது' (மர-5- பேரா).

'இவை யெல்லாம் இக்காலத்து வழக்கினுள் அரியவாகலின், சான்றோர் செய்யுட்களிற் காணப்படும்' (மர - 4- பேரா).

என்னும் பேராசிரியர் கூற்றானும், தொல்காப்பியர்க்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்னரே **பறப்பன, ஊர்வன** முழுமைக்கும், சில **நீர்வாழ்வன, விலங்கு** கட்கும் **பார்ப்பு** என்னும் பெயர் இளமைப் பொருள் குறித்து வழங்கி வந்திருக்கிறது என்பது வெளிப்படை.

**"மேற்கவட் டிருந்த பார்ப்பினங்கள்"** (அகம் -31)

**"யாமைப் பார்ப்பின் அன்ன"** (குறுந் -152)

**"தன்பார்ப்புத் தின்னும் அன்பின் முதலை"** (ஐங் -41)

**"பார்ப்புடை மந்திய மலையிறந் தோரே"** (குறுந் - 276)

எனச் சங்க நூல்களில் பார்ப்பு என்னும் சொல் பயின்று வருதல் காண்க.

*இளங் குழந்தைகளைப் பாப்பு, பாப்பா என்பது இன்றும் பெருவழக்காக உள்ளது. இவை பார்ப்பு, பார்ப்பா என்பவற்றின் திரிபேயாகும். '**ஓடி விளையாடு பாப்பா**' (பாரதியார்) என அது நூல் வழக்கினும் புகுந்தது. தொல்காப்பியர் காலத்து இது மக்களிள மைக்கு வழங்காமையால் (மர -23), பின்னர்ப் புதியன புகுதலாகும். அல்லது அவர் காலத்தில் வழக்கு வீழ்ந்தமையான் கூறாது விட்டனர் போலும். மரபு மாறும் இயல்புடையது தானே?*

*பெரும்பாலும் இளம் பெண்களை - சிறுமிகளை - 'பாப்பு, பாப்பா, பாப்பாயா' என்றழைக்கும் வழக்கும், 'பாப்பம்மை, பாப்பம்மாள், பாப்பாத்தி' எனப் பெண்களுக்குப் பெயர் வைக்கும் வழக்கும் இன்றும் நாட்டுப் புறங்களில் மிகுதியாக உண்டு. நகரங் களிலும் இல்லாமலில்லை. பேர்த்தி என்பது - பேத்தி என மரீஇ வழங்குவது போலவே இப் பெயர்களும் மரீ இ வழங்குகின்றன.*

*எனவே, பார்ப்பான் என்பது, பார்ப்பு என்னும் இளமை குறிக்கும் தமிழ்ப் பெயரி னடியாகப் பிறந்த பெயரேயாகும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. பார்ப்பு என்னும் சொல் உரையாசிரியர்கள் காலத்தே - (கி.பி. 10-13 - நூற்றாண்டு) வழக்கொழிந்து விட்டது என்பது, 'இவையெல்லாம் இக்காலத்து வழக்கினுள் அரியவாகலின் சான்றோர் செய்யுட்களிற் காணப்படும்' (மர - 4-பேரா) என்னும் பேராசிரியர் கூற்றால் விளங்குகிறது. சங்கச் செய்யுட்களிற் காணப்படும் அச்சொல், 'பாப்பு' எனத் திரிந்து பின்னர் புதியன புகுதலாய் வழக்குடைய தாயிற்றுப் போலும்!*

*பார்ப்பு என்பது வடசொல்லாயின் தமிழ் மக்களால் உயிர் வகைகளுக்கு இட்டு வழங்கியிருக்க முடியாது. அவ்வாறு வழங்கி யிருப்பினும் பின்னர் மேலும் பயின்று வழங்கி வந்திருக்குமே யன்றி, அருகி யொழிந்திருக்கக் காரணமில்லை. அதுவும் உரையாசிரியர்கள் காலத்தே வழக்கு வீழ்ந்திருக்காது. அக்காலத்தி லிருந்துதானே தமிழில் வடசொற்களை வேண்டிய மட்டும் கலந்து வந்தனர்? மேலும், தொல்காப்பியர் காலத்தே அவ்வளவு வழக்குடைய அச்சொல், தொல்காப்பியர் காலத்திற்குப் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன்னரே வழங்கப்பட்டு இருக்க வேண்டும். அக்காலத்தே வடமொழி இந்நாட்டினுட் புகவில்லை. ஆகவே,*

*மன்னர் மனையிலும், மன்னர் போன்ற செல்வர் மனையிலும் இளைஞர்களுக்கு உதவித்தொழில் புரிந்து வந்த தமிழர்களே பார்ப்பார் எனப்படுவர். அவர் வேளாளர் முதலிய பல வகுப்பினரே யாவர். பார்ப்பனர் என்பது வகுப்புப் பெயரன்று; அமைச்சர், ஒற்றர்,*

தானைத் தலைவர் என்னும் அரசியல் அலுவற்பெயர் போன்ற தொரு குடும்பத் தொழிற் பெயரே யாகும். ஆசிரியன், ஆசிரியை, மருத்துவன், மருத்துவி என்பன காண்க.

முதன் முதல் தமிழகம் போந்த வடவர்கள் தவக் கோலத்தினராய் வந்தனர். அவர்கள் தமிழந்தணர்களையடுத்துத் தமிழ் கற்றும், அவர்களோடு நெருங்கிப் பழகியும் வந்தனர். நாளடைவில் அன்னார் தொகை பெருகி, அவகட்கும் ***அந்தணர்*** என்னும் தமிழ்ப் பெயர் வழங்கலானது. ***வீரமாமுனிவர்*** என்னும் வெள்ளையர் பெயரைக் காண்க. முடிவில் அவர்கள் ஆசிரியராகவும், அமைச்சராகவும், புரோகி தராகவும் அமர்ந்து அந்தணர் என்னும் பெயரை நிலையாகப் பெற்றனர். வரவரத் தமிழ்த் துறவிகளுக்கு அந்தணர் என்னும் பெயர் வழங்குதல் ஒழிந்தது. ***தாயுமானவர், இராமலிங்கர்*** போன்ற தமிழ் அந்தணர்கள் அந்தணராக முடியவில்லை; அவர்கட்கு அந்தணர் என்னும் பெயர் வழங்கவில்லை.

இனி, ஆரியக் குடும்பத்து ஆடவர், செந்நிற முடையராய் இருந்ததனாலும், புதியவராகையால் மிகப் பணிவாக நடந்து கொண்டதனாலும் தமிழ் அரசர்களும் செல்வர்களும் அவர்களைப் பார்ப்பனத் தொழிலில் அமர்த்தினர். நாளடைவில் அவர்களே அத்தொழிலைக் கைக்கொண்டனர். பின்னர், தமிழ் மக்கள் பார்ப்பனத் தொழிலுக்குத் தகுதியற்றவராயினர்; அத்தொழில் தமிழர்க்குக் கிடைப்ப தரிதாயிற்று. இன்று தமிழ் நாட்டில் வாயிலோன் வேலை கூர்க்கரின் தனியுடைமை யானது போல ஆயிற்று பார்ப்பனத் தொழில் அவ் வடபுலத்தார்க்கு. அவ்வடவரின் பணிவுத்தன்மை தமிழர்க்கின்மையே அதற்குக் காரணமாகும். இன்றும் தமிழ் நாட்டுப் பார்ப்பனர்களைக் கணக்குப் பிள்ளையாக வைத்திருக்கும் தமிழ்ச் செவ்வர்கள் இக்காரணத்தையே கூறுதல் இதற்குச் சான்றாகும்.

அவ்வடவர் தழிழந்தணர்களோடு கூடிவாழ்ந்து வந்ததனாலும், ஆசிரியர் தொழிலை மேற் கொண்டதனாலும், ***ஐயர்,*** என்னும் பெயரும் அவர்கட்கு வழங்கலாயிற்று. அந்தணர் திறத்தும் - 'வேட்பித்த ஆசிரியனும் கற்பித்த ஆசிரியனும் ஆகிய பார்ப்பார் கண்ணும்' (கற் -5-நச்) என்பது காண்க. ***போப்பையர், சீகன் பல்குயைர், கால்டு வெல் ஐயர்*** எனக் கிறித்துவத் துறவிகட்கு ஐயர் என்னும் பெயர் வழங்கினமை இதற்குத் துணை செய்யும். முடிவில் ***அந்தணர், ஐயர், பார்ப்பார்*** என்னும் மூன்று தமிழ்ப் பெயர்களும் ஆரியர்க்குரிமை யாயின.

அவற்றுள், அந்தணர், பார்ப்பார் என்னும் இரு பெயர்களும் தமிழர்களை விட்டே நீங்கின. அவை தமிழ்ப் பெயர்கள், தமிழர் பெயர்கள் என்பதே தமிழர்க்குத் தெரியா நிலையை அடைந்தன. அந்தணர் என்னும் தமிழ்ச் சொல் பிராமணர் என்னும் வடசொல்லின் மொழி பெயர்ப்பெனக் கொள்ளப்பட்டது. அது பார்ப்பனர் பெருமை குறிக்கும் பெயரானது. ஐயர் என்பது பலவகைப் பார்ப்பன ருக்கும் பொதுப் பெயரானது. முதலில் தமிழகம் போந்த ஆரியக் குடும்பத்து ஆடவர்களில் பெரும்பாலோர் பார்ப்பனத் தொழிலே செய்து வந்ததனால், அது அவர்தம் குலப் பெயராயிற்று.

இன்றும் சில தமிழ்ப் பெருஞ்செல்வக் குடும்பங்களில் பார்ப்பனர் ஒருவாறு பார்ப்பனத் தொழில் செய்து வருகின்றனர். ஆனால், இன்று தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள், பழவாரிய வழிவந்தவரா என்பது ஆராய்ச்சிக்குரிய தொன்றாகும்.

### 2. அரசர்

தமிழகத்தில் ஆட்சிமுறை என்று ஏற்பட்டதோ அன்று தொட்டுத் தமிழகம் முடியுடை மூவேந்தர் என்று சிறப்பித்துக் கூறப்படும் சேர, சோழ, பாண்டியர் என்னும் செந்தமிழ் வேந்தர் களால் ஆளப்பட்டு வந்தது. சேர, சோழ, பாண்டியர் என்போர், பழந்தமிழ்ப் பெருங்குடி மக்களில் மூத்த முதற் குடியினராவர். இது,

> **"பெருநில முழுதாளும் பெருமகன் தலைவைத்த**
> **ஒருதனிக் குடி"** **(சிலப்.1:31-2)**

என்னும் இளங்கோவடிகள் வாக்கால் விளங்கும். இவரை, '***வண்புகழ் மூவர்***' *(செய் -79)* என்பர் தொல்காப்பியர். 'தமிழ்நாட்டு மூவேந்தர்' என்றால் இம் மூவரையே குறிக்கும்; அத்தகு பழைமையும் பெருமையும் உடையவர். இப்பெருநில மன்னரும் இவர்கட் குட்பட்ட குறுநில மன்னரும் அரசர் ஆவர். பேரரசரால் சிறப்புப் பெற்ற வணிகரும் வேளாளருமே சிற்றரசராவர். (மர- 81,76). இவருள் வேளாளர் பெரும்பான்மையினராவர். சங்க காலச் சிற்றரசர்களிற் பெரும்பாலோர் வேளாளராக இருத்தலே இதனை வலியுறுத்தும், சிறு நாட்டுத் தலைவரும் அரசரே யாவர். அரசு - காவல். அரசர் - காவலர். இதனால், அரசர் என்று ஒரு தனிக்குலம் இல்லை யென்பது தேற்றம்.

> **"ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே**
> **வேந்தமை வில்லாத நாடு."** **(குறள்)**

அதாவது, எல்லாச் சிறப்பும் பொருந்தி யிருந்தபோதிலும் அரசன் இல்லாத நாடு ஒரு நாடகாது என, அரசனது தலைமையை அவ்வளவு பெருமையாகக் கொண்டிருந்தனர் நம் முன்னையோர்.

*படை, குதிரை, யானை, தேர், கொடி, குடை, முரசு, முடி, தார், கவரி அரியணை என்பன அரசர்க்குரிய சிறப்பாகும். (மர-71). தார் - போர்ப்பூவும், அடையாளப் பூவும். போர்ப்பூ - வெட்சி, வஞ்சி, உழிஞை தும்பை முதலிய புறத்திணைக்குரிய பூக்கள். அடையாளப்பூ -* ***பனை ஆத்தி வேம்பு*** *என்னும் மூவரசர் பூ.*

*இனி, வில், வேல், வாள், தேர், கழல், கண்ணி, தார், மாலை, என்பன சிற்றரசர்க் குரிய சிறப்பாகும். (மர - 83). இவை பேரரசர்க்கும் உரியவாகும், தேர்எனவே நாற்படையும் அடங்கின. கண்ணி - குடிப்பூ. ஆய் என்னும் வள்ளல் சுர புன்னை மாலையும், அதியமான் வேங்கைப் பூவும், எழினி என்பான் கூவிளங் கண்ணியும் அணிந்திருந்தமை அறிக. தார் - போர்ப் பூ. மாலை - அடையாளப்பூ. மூவரசரில் இன்னார்க் குரியர் என்பது தெரிய அன்னார் பூச்சூடுதல்.*

**"வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்ப்**
**போந்தை வேம்பே ஆரென வரூஉம்**
**மாபெருந்தானையர் மலைந்த பூவும்"** **(புறத் -5)**

*என்பது காண்க. போந்தை - பனை. ஆர் - ஆத்தி. மலைதல் - சூடுதல்.*

*சிற்றரசர்களை முடியுடையோராகப் பாடுதல் மரபன்று. அரசராற் சிறப்புப் பெறாதவர், சிற்றரசர் போன்ற பெருஞ்செல்வ முடையராயினும், வில், வேல் முதலிய சிறப்புடையராகப் பாடுதல் முறையன்று (மர -84) என்கின்றனர் ஆசிரியர். இதனால், அன்று தடி யெடுத்தவன் தண்டத் தலைவனாக இல்லாமல் சரியான கட்டுப் பாட்டுடன் ஆட்சிபுரிந்துவந்தமை பெறப்படும்.*

*மேலும், தொல்காப்பியர், '****தெளிவுகொள் செங்கோலரசர்*** *(மர - 71) என்று சிறப்பிப்பதால், பழந்தமி ழரசர்கள் முறை பிறழாது செங்கோற் செலுத்தி வந்த பெருமை விளங்குகிறது. மற்றும், இவர்கள் வீரம் கொண்ட பெருமை முதலியவற்றைப் புறத்திணை யியலில் பரக்கக் காணலாம்.*

## 3. வணிகர்

*பழந்தமிழ் வணிகர்கள், '****கொள்வதூஉம் மிகைகொளாது கொடுப்பதூஉம் குறை கொடாது'*** *(பட்டினப் -210-11) நேர்மையுடன் வாணிகம் செய்யும் கடப்பாட்டினராவர்;*

**"வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்**
**பிறவுந் தமபோற் செயின்"** **(குறள்)**

*என்னும் அறத்தை நன்கு கடைப்பிடித் தொழுகியவர். இவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செய்யும் பெருவாணிகமும் (மர-77), எண்வகைக் கூலவாணிகமும் (மர -78) செய்து பொருளீட்டி*

வந்தனர். கடல் கடந்த வாணிகம் இவர் கையில்தான் இருந்து வந்தது. (அகத் -34). பெருஞ்செல்வர்கள் பெரு வாணிகமும், ஏனையோர் கூலவாணிகம் போன்ற சிறு வாணிகமும் செய்தனராவர்.

எண்வகைக் கூலமாவன - நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, தினை, சாமை, வரகு என்னும் எண்வகைத் தவசமும்; உழுந்து, கடலை, அவரை, துவரை, தட்டை, பச்சை, கொள்ளு, எள்ளு, என்னும் எண்வகைப் பயறுமாம். இன்னும் ஏனை எல்லாப் பொருள் வாணிகமும் செய்து, எங்கும் ஒரு நிகரான வாழ்வு நடக்கும்படி செய்து வந்த பெருமை வணிகர் பெருமக்களையே சாரும்.

பெரு வணிகர்கள் அரசரால் படை கண்ணி முதலிய சிறப்புப் பெற்றுச் (மர -79) சிற்றரசர்களாய்த் திகழ்ந்து வந்தனர். (மர -76).

## 4. வேளாளர்

இவர், பெரும்பாலும் உழவுத் தொழிலே செய்து மக்களை வாழ்வித்து வரும் பெருந்தகையாளர்கள். '***வேளாண்மாந்தர்க்கு உழுதூண் அல்லது இல்லை***' (மர -80) என்கின்றனர் ஆசிரியர். பல்வகைத் தொழிலாளர்களும் வேளாளரே யாவர். தலைமை பற்றி உழவொன்றே கூறப்பட்டது.

'வேளாண் மாந்தர் பலவகைப்பட்ட தொழிலரேனும் உழுந் தொழிலே பெரும்பான்மை யாதலின், அதனையே சிறப்பித்துச் சொல்லுதல் மரபு' (மர -80 - பேரா) என்னும் பேராசிரியர் கூற்றினைத் தெளிக.

உழுதுண்ணும் வேளாளர், உழுவித்துண்ணும் வேளாளர் என வேளாளர் இருவகைப் படுவரென்பது முன்னர்க் கூறப்பட்டது. அவருள் உழுதுண்ணும் வேளாளர் உழவுத்தொழில் ஒன்றே உடைய வராவர். '***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே***' (புறநா -18) என்னும் அத்தகு சிறப்புடையவர் இவர்.

உழுவித்துண்ணும் வேளாளர் உழவோடு, அரசரால் படை கண்ணி முதலிய சிறப்புக்கள் பெற்றுப் படைத்தலைவராகவும், சிற்றரசராகவும் மேம்பாடுற வாழ்பவராவர். (மர -81). இவர் ***வேள், அரசு, காவிதி, ஏனாதி*** முதலிய பட்டங்கள் பெற்றுச் சீருஞ் சிறப்புடன் திகழ்வர்.

உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியின் கோப்பெருந்தேவி - அழுந்தூர் வேளின் மகள். அவன் மகன் கரிகாற் பெருவளத்தான் கோப்பெருந்தேவி - நாங்கூர் வேளின் மகள். சேரன் செங்குட்டுவன் கோப்பெருந் தேவியான இளங்கோ வேண்மாள் ஒரு கொங்கு வேளின் மகள். இதனால், இவர் பேரரசர் பெண்கொள்ளும் அத்தகு சிறப்பினை யுடையவர் என்பது விளங்கும்.

வாழ்வியல், அரசியல், பொருளியல், என்னும் உலகியல் முட்டின்றி இனிது நடைபெறப்பலவகைத் தொழில் செய்து வந்த மக்களை, அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என வகுத்துச் செய்யுள் செய்து சீருஞ் சிறப்புடன் வாழ்ந்து வந்த நம் முன்னையோரின் அறிவின் திறனே திறன்!

## தொழில்

புறத்திணை ஏழனுள் ஒன்றான **வாகை** என்பது, ஒவ்வொரு வரும் தத்தம் தொழிலைச் சிறப்பித்துக் கூறுவது. (புறத் -19). அதில்

**"அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்**
**ஐவகை மரபின் அரசர் பக்கமும்**
**இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்**
**மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்**
**நாலிரு வழக்கிற் றாபதர் பக்கமும்**
**பாலறி மரபிற் பொருநர் கண்ணும்**
**அனைநிலை வகையோ டாங்கெழு வகையில்**
**தொகைநிலை பெற்ற தென்மனார் புலவர்,"** (புறத் -20)

எனப் பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர், அறிவர், அந்தணர், மறவர் என்னும் எழுவர் தொழில்களும் அவ் வெழுவர் கீழிருந்து அவர்கள் தொழில்களைப் பயில்வார் தொழில்களும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன. இரு மூன்று மரபின் - அறு வகைப்பட்ட. ஏனோர் - வணிகர் வேளாளர்.

1. பார்ப்பனர் அறுவகைத் தொழிலும், 2. அரசர் ஐவகைத் தொழிலும், 3. வணிகர் அறுவகைத் தொழிலும், 4. வேளாளர் அறுவகைத் தொழிலும்.

### 5. அறிவர்

***மூவகைக் காலமும் மறு இல் செய்தி*** - முக்காலத்தினும் தவறில்லாத ஒழுகலாற்றினை, நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும் - முறையோடு செய்யும் அறிவரது சிறப்பும்.

முக்காலத்திற்கும் ஒத்த நன்மை தீமைகளை ஆராய்ந்தறிந்து, அவற்றை எடுத்துக் கூறி மக்களை நன்னெறிக்கண் நிறுத்துதல் அறிவர் தொழில் ஆகும். (கற் -12).

மருத்துவ நூல்களும் வாகட நூல்களும் செய்து மக்களை வாழ்வித்த தமிழ்ச் சித்தர்கள் என்போரே அறிவராவர். சித்தர் - அறிவர். சித்து - அறிவு. அவர் பெயர் மாறினதுபோல, நாளடைவில் அவ்வறிவர் தொழிலும் அவ்வாறு மாறிற்றுப் போலும்!

## 6. தாபதர்

***நாலிரு வழக்கில் தாபதர் பக்கமும்*** - எண்வகைப்பட்ட மனவொழுக்கம் புரியும் தவத்தினர் சிறப்பும். தாபதர் - தவத்தோர். தாபதம் - நோன்பு. தாபதர் - நோன்பு நோற்பவர். நோன்பாவது - புலனடக்கம், ஊறு செய்யும் பிறவுயிர்க்குத் துன்பஞ் செய்யாமற் பொறுத்தல் முதலியன. திருக்குறள் 'தவம்' என்னும் அதிகாரம் பார்க்க. ஒருபக்கம் - யோகம். இவரே நாற்பாலரில் முதற்பாலராய ***அந்தணர்.*** பொதுநலம் செய்வோரும், தவஞ் செய்வோரும் என அந்தணர் இரு வகையினர். தாபதர் பொதுநலமும் செய்வர்; பொதுநலஞ் செய்வோர் தவமும் செய்வர். இவ்விரண்டுமுடையர் அந்தணர் எனக் கொள்க.

எண்வகை ஒழுக்கமாவன - அடக்கம், நோன்பு, இருக்கை, வளிநிலை, தொகைநிலை, பொறைநிலை, நினைத்தல், கலத்தல் என்பன. இவற்றின் விளக்கத்தை ஒழுக்க நூலிற் காண்க.

## 7. பொருநர்

மரபின் பால் அறி பொருநர் கண்ணும் - முறையோடு போர்த்தொழிலின் கூறுபாட்டை யறிந்த மறவர் சிறப்பும். பொருநர் - மறவர் - வீரர்.

***அனைநிலைவகை*** - அவ்வறே அவ்வெழுவர் கீழிருந்து அவர்கள் தொழில்களைப் பயில்வோர் சிறப்பும்.

பார்ப்பாரை அரசர் முதலிய இல்லறத்தாரோடும், அந்தணரை அறிவராகிய துறவறத்தாரோடும் வைத்து எண்ணப் பட்டதே பார்ப்பாரும் அந்தணரும் வேறென்பதற்குச் சான்றாகும்.

செய்யுளில் அமைத்துப் பாடும் அத்தகு சிறப்புறும்படி. ஒவ்வொருவரும் தத்தம் தொழிலை மிகுத்துக் கூறிப் போட்டி போட்டுக்கொண்டு பல்வகைத் தொழிலையும் முன்னேற்ற முறச் செய்து முதன்மையாக வாழ்ந்து வந்த நம் முன்னையோரின் மனமுயற்சியையும் மெய்ம்முயற்சியையும் என்னென்பது!

உரையாசிரியர்கள், பார்ப்பனர் முதலிய நால்வரையும் நாற்பாலாகக் கொண்டு,

அந்தணர்க்கு: ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் எனவும்,

வணிகர்க்கு : ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வணிகம் எனவும்

அரசர்க்கு : ஓதல், வேட்டல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம் எனவும்,

வேளாளர்க்கு: வேதம் ஒழிந்தன ஓதல், ஈதல், உழவு, நிரையோம்பல், வாணிகம், வழிபாடு எனவும் உரைக்கின்றனர்.

ஈங்குக் கூறிய பார்ப்பனர் முதலிய நால்வரும் தமிழராகையால் அவ்வுரை பொருந்தாது.

தமிழரசர்கள் வேள்வி செய்யத் தொடங்கியது கடைச்சங்க காலத்தேயாகும். தொல்காப்பியர் காலத் தமிழரசர்கள் வேள்வி செய்ய வில்லை. தொல்காப்பியத்தில் வேள்வி பற்றிய குறிப்பொன்று மில்லை.

உழவு வணிகர்க்கும், வாணிகம் வேளாளர்க்கும் உரிய தொழிலல்ல. (மர-77,80). வேளாளர்க்கு '**வேதமொழிந்தன ஓதல்**' என்பதால், அரசரும், வணிகரும் வேதமோதற் குரியரென்பது பெறப்படும். அரசர்க்கு வேதமோத உரிமை யிருக்கும் போது, பேரரசர்க்குப் பெண் கொடுக்கும் உரிமையுடைய, அன்னார்க்கு மாமனாரும் மைத்துனருமாகிய வேளாளர்க்கு ஏன் வேதமோதும் உரிமை யில்லை? சிற்றரசராயிருந்து செங்கோற் செலுத்தும் சிறப்புடை யார்க்கு, மற்றெல்லாரும் தொழுதுண்டு பின்செல்ல, உழுதுண்டு உரிமையுடன் வாழும் வேளாளர்க்கு வழிபாடு எங்ஙனம் இன்றிய மையாக் கடமையி லொன்றாகும்? எனவே, அவ்வுரை சிறிதும் பொருந்தாது.

இனி, பார்ப்பனர் முதலிய நால்வர் தொழில்களாவன,

கற்பியலில் (36) பார்ப்பார் கூற்றாகக் கூறிய அறுவகைத் தொழிலையே இங்குச் சிறப்பித்துக் கூறுகின்றார் என்பது,

**"கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள**
**நல்லவை யுரைத்தலும் அல்லவை கடிதலும்"** (கற்பு -12)

எனக் கற்பியலில் அறிவர் கூற்றாகக் கூறியதையே இங்கு,

**"மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியின் ஆற்றிய அறிவின் தேயமும்"** (புறத் -20)

எனக் கூறுதலால் விளங்கும்.

பார்ப்பனர் அறுதொழில்:

**"காமநிலை யுரைத்தலும், தேர்நிலை யுரைத்தலும்**
**கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதலும்**
**ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்**
**செலவுறு கிளவியும், செலவழுங்கு கிளவியும்**
**அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய."** (கற்பு -36)

1. காமநிலை யுரைத்தல்

2. தேர்நிலை யுரைத்தல்

3. கிழவோன் குறிப்பெடுத் துரைத்தல்

4. ஆவொடுபட்ட நிமித்தங் கூறல்

5. செலவுறு வித்தல்

6. செலவழுங்கு வித்தல் - என்பன.

1. காமநிலை உரைத்தல் - தலைவனது காமமிகுதி கண்டு அது தகாதெனக் கூறுதல். களவில் மிகுதல் தீதெனவும் கற்பில் காதலுடன் இல்லறம் நடத்துதல் நன்றெனவும், மிக்க காமம் கற்பினும் தீதெனவும் உரைத்தல். அதாவது, ஒழுக வேண்டியவாறு ஒழுகுமாறு எடுத்துரைத்தல்.

2. தேர்நிலை உரைத்தல் - அங்ஙனங் கூறி, அவன் தெளியுமாறு காரணமும் எடுத்துக் காட்டுங் கூறுதல். தேர்நிலை - தேரும்நிலை. தேர்தல் - தெளிதல். அதாவது, வற்புறுத்திக் கூறாது, தலைவன் தெளிவு கொள்ளுமாறு விளக்கிக் கூறுதல்.

3. ஆவொடு பட்ட நிமித்தம் கூறல் - கற்றா கலநிறையப் பால் சுரத்தலானும், கரத்தலானும் உளதாய நிமித்தம் பற்றி நன்மை தீமை கூறுதல். நிமித்தம் - குறி. இந்நிமித்தம் இன்று வழக்கு வீழ்ந்தது. மாடு சாணம் போடுதல், சிறுநீர் பெய்தலைக் கொண்டு நன்மை தீமை கூறுதல் இன்று வழக்கில் உள்ளது. இது தலைவன் போர், பொருள் முதலியவற்றின் பொருட்டுப் புறப்படும் போது பார்த்துச் சொல்வது.

4. செலவுறு கிளவி - இப்போது செல்லுதல் நன்றெனக் கூறுதல். காலவியல்பையும், தலைவியின் பிரிவாற்று நிலையையும் அறிந்து தலைவனைச் செல்லவிடுதல்.

5. செலவு அழுங்கு கிளவி - இப்போது செல்லுதல் தகாதெனக் கூறித் தலைவனைச் செலவழுங்கு வித்தல். அழுங்குதல் - தவிர்தல். அழுங்குவித்தல் - தவிர்த்தல். கால வியல்பையும், தலைவியின் ஆற்றாமையினையும் அறிந்து தலைவனைச் செல்லாமல் தடுத்தல். இவை யாறும் சிறப்புடைய தொழில்கள்.

அன்னபிறவும் - அவைபோல்வன பிறவும். அவை சிறப்பில்லா தவை. சிறப்புடைய இவ்வாறு தொழிலினையே வாகைத் திணையில் மிகுத்துக் கூறினார்.

'இவை யெல்லாம் தலைச் சங்கத்தாரும் இடைச் சங்கத் தாரும் செய்த பாடலுட் பயின்ற போலும்; இக்காலத்தில் இலக்கிய மின்று' (கற்-36-நச்) என்பதால், கடைச் சங்க காலத்திற்கு முன்னரே

பார்ப்பனத் தொழிலைச் சிறப்பித்துப் பாடும் வழக்கமும் ஒழிந்து விட்டது போலும்.

***கண்ணகிக்குத் தேவந்தி*** என்னும் பார்ப்பனத் தோழியும், ***மாதவிக்குச் சுதமதி*** என்னும் பார்ப்பனத் தோழியும் இருந்தமையை நோக்க, கடைச் சங்க காலத்தே தோழியர் தொழிலும் தமிழ்ப் பெண்டிர் கைம்மாறி விட்டது போலும்!

2. ***அரசர் ஐந்தொழில் :*** **ஓதல், ஈதல், படைக்கலம் பயிறல், குடிகாத்தல், செங்கோன்மை என்பன.**

3. ***வணிகர் அறுதொழில்:*** **ஓதல், ஈதல், உதவி, விருந்தோம்பல், நிரைகாத்தல், வாணிகம் என்பன.**

4. ***வேளாளர் அறுதொழில்:*** **ஓதல், ஈதல், உதவி, விருந்தோம்பல், நிரைகாத்தல், உழவு என்பன.**

பொதுவாக மக்கட் பிறப்பினர் எல்லோர்க்கும் கல்வி இன்றி யமையாத தொன்றாகையால், **ஓதல்** யாவர்க்கும் பொதுவானதாகும். எளியர்க்கு ஒன்றை ***ஈதலும்,*** எடுத்த காரியத்தை முடிக்க இயலாதவர்க்கு உதவுதலும் எல்லார்க்கும் ஒத்த கடமையாகும். எனவே, சொல்லாலும் பொருளாலும், உடலாலும் பிறர்க்கு உதவுதலும், இல்லோர்க் கீதலும், கற்க வேண்டியவற்றைக் கற்றலும் எல்லோருக்கும் ஒப்ப முடிந்த பொதுத் தொழில்களாகும். அரசர் காவலில் உதவி யடங்கும். குற்றஞ் செய்தோரை ஒறுத்தே மக்களைக்காக்க வேண்டியிருத்தலின், ஒறுத்தலும் காவலில் அடங்கும். ஆடுமாட்டு வாணிகம் செய்தலால் நிரைகாத்தல் வணிகர்க் குரியதாயிற்று. நிரை - ஆடுமாடுகள். எருமையும் சேர்ந்து மூவினம் எனப்படும்.

### 4. பரத்தையர்

பரத்தைமை - அயன்மை. பரத்தையர் - அயலார்; களவொழுக்கம் ஒழுகி மணஞ்செய்து கொண்டு கற்பொழுக்கம் ஒழுகும் - இல்லறம் நடத்தும் - தலைவியரல்லாத பிற மகளிர். அதாவது, களவொழுக்கம் ஒழுகாமலும், மணஞ்செய்து கொள்ளாமலும் காமத்திற்காக ஆடவருடன் கூடி வாழும் பெண்டிர். இவர் ***1. காமக்கிழத்தியர், 2. காதற் பரத்தையர், 3. சேரிப்பரத்தையர்*** என மூன்று வகைப்படுவர்.

இன்று சமயக் கன்னிப் பெண்கள் இருப்பது போல, ஆனால், இன்பத்தை வெறுக்காமல், அதற்காகவே பண்டுமணஞ்செய்து கொள்ளாது சில பெண்கள் இருந்து வந்தனர். அவர்கள் தன்னுரிமை யுடனேயே வாழ்ந்து வந்தனர். அவர்களே இம் மூவகையினரும்.

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப." (கற்பு -4)

என்பதால், தமிழரிடை, களவொழுக்கம் ஒழுகி, கரணம் இன்றி - பலரறிய மணம் செய்து கொள்ளாது- கற்பொழுக்கம் ஒழுகிய - இல்லறம் நடத்தி வந்த - காலமும் ஒன்று இருந்து வந்தது. அதாவது, ஒருவனும் ஒருத்தியும் காதல் கொண்டு வாழ்க்கை நடத்திவந்தனர். திருமணம் என்பதே அன்றில்லை. பின்னர்த்தான் திருமணம் குலப் பெரியார்களால் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இப்பரத்தையர் களவொழுக்க மொழுகாது காம நுகர்பவர். எனவே, முன்னது தூய ஒழுக்கமாகும். பின்னது தீய ஒழுக்கமாகும்.

## 1. காமக் கிழத்தியர் (இற்பரத்தையர்)

இவர் தலைவனது செல்வநிலை யறிந்து வாழ்க்கை நடத்தும் குணமுடையராகி, தலைவன் மீது அன்பு பூண்டு வாழ்க்கை நடத்தும் அயல் மகளிர். இவர் மனைவியர் போன்றவரே. இன்றும் சில பெண்கள் மணஞ்செய்து கொள்ளாது தமக்கு விருப்ப மானவரோ டிருந்து, மனைவியர் போலவே இல்லறம் நடத்தி வருதல் - குடும்பம் நடத்துதல் - இதனை வலியுறுத்தும். தக்க பருவத்தே காதலுற்று முறையாகக் களவொழுக்கமொழுகி மணஞ்செய்து கொள்ளாமல், களவொழுக்க மொழுகாமலும், மணஞ்செய்து கொள்ளாமலும் காமத்திற்காக மனைவியர் போல் இருந்து வருபவர். கிழத்தி - தலைவி - மனைவி. காமக் கிழத்தி - காமத்திற்காகக் கொண்ட மனைவி; காமத்திற்காக மனைவி நிலையில் இருப்பவள் என்றுமாம். இவர் இற்பரத்தையர் எனவும் படுவர். இல் - இல்லறம், குடும்பம். இல் பரத்தையர் - ஒருவனோடு கூடி மனைவியர் போலக் குடும்பம் நடத்தும் அயல் மகளிர்.

## 2. காதற்பரத்தையர்

இவர் தலைவனிடம் அன்பு கொண்டு இன்பந்துய்ப்பவர். ஆனால், காமக்கிழத்தியர் போலத் தலைவனோடு உடனிருந்து வாழ்க்கை நடத்தாமல் தனிவாழ்க்கை வாழ்பவர். தலைவன் குடும்பத் திற்கும் இவர்க்கும் யாதொரு தொடர்பும் இல்லை. 'பரத்தையர்' என்பதே இதற்குச் சான்றாகும். கிழத்தி - உரியவள், குடும்பத்திற்கு உரியவள். பரத்தை - குடும்பத்திற்கு அயலவள். இன்று ஏதாவது ஒரு வேலையில் இருக்கும் ஒரு சில பெண்கள், தமக்குப் பிடித்த ஒரு ஆடவரை வரப்போக வைத்துக்கொண்டிருப்பது போன்றது இது. இவர் தலைவனை நம்பி வாழாமல் தாம் தேடும் பொருளால் தன்னுரிமையுடன் வாழ்பவர்.

## 3. சேரிப் பரத்தையர்

இவர் தமக்கென ஒருவரை வைத்துக் கொள்ளாமல் விருப்ப முள்ள போது விரும்பியவரைக் கூடி வாழ்பவர். இவர் தலைவன் மீது அன்பின்றித் தலைவன் கொடுக்கும் பொருள் மீது அன்புடையவர். இவர்தாம் வள்ளுவர் கூறும் **வரைவில் மகளிர்** ஆவர். இவர்கள் ஒரு சில பெருஞ்செல்வரால் உண்டாக்கப் பட்டு, நாளடைவில் தாமாகவே உண்டாகி ஒரு தனிக்கூட்டம் ஆனவர் போலும்! ஆடவரிற் சிலரும் முறையாக மணஞ்செய்து கொள்ளாமல் இம் மூவகை மகளிர் போலவே வாழ்க்கை நடத்தி வருதல் பண்டு தொட்டு இன்றளவும் உண்டு.

**"கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்"** (புறத் -21)

**"ஒழுக்கங் காட்டிய குறிப்பினும்"** (கற்பு -5)

**"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்."** (குறள்)

**"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்."** (குறள்)

**"ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்**
**ஏதம் படுபாக் கறிந்து."** (குறள்)

என, உயிரினும் ஒழுக்கமே பெரிதெனக் கொண்ட நம் முன்னை யோர்க்கு இஃதொரு பேரிழுக்கே யாகும். ஒரு சில அடங்கா மாறிகளால் - ஒழுக்கத்தை மதியாதவர்களால் - உண்டான இத்தீமை, தமிழினத்திற்கே ஒரு களங்கமாக விளங்கி வருகிறது. இது பண்டு ஆண் பெண் இரு பாலாரிடத்தும் ஒப்ப நடந்து வந்து, வரவர ஆண்கள் தலைவர்களாக, பெண்கள் அடிமைகளாயினர். இது,

**"பெண்ணியலாரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்**
**நண்ணேன் பரத்தநின் மார்பு."** (குறள்)

என்னும் தலைவி கூற்றால் விளங்கும். பின்னர் அது, ஆடவர் தம் காதலை - காமத்தை - கழித்துக் கொள்ளும் கருவியாக ஒரு வகுப்பினரையே உண்டாக்கி விட்டது. அத்தீமை, ***சென்னைத் திருவாட்டி, டாக்டர். முத்துலட்சுமி அம்மையார் அவர்களால்*** சட்டமூலம் ஒழிக்கப்பட்டது; எனினும், இன்னும் அது வேறுவடிவில் நடைமுறையில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆடவர்கள் அனைவரும் ஒழுக்கக் கட்டுப்பா டுடையவர்க ளானாலன்றி அத்தீமை ஒரு நாளும் ஒழியாது. என்று ஆண் மக்களுக்கு ஒழுக்கக் கடப்பாட் டுணர்ச்சி யுண்டாகுமோ!

*இனி, 'ஊடலைச் சிறப்பிக்கவே ஆசிரியர் பரத்தைமை கூறினார்; தலைவனது தலைமைச் சிறப்பினால் தலைவி அவ்வாறு எண்ணுவாள்' எனின், இல்லாத ஒன்றை உண்டென எண்ணுவது பொய்யின் பாற்பட்டு, '**கற்பெனுந் திண்மை**'யுடைய தலைவியின் கற்பொழுக்கத்துக்கே அது மாறுபட்ட செயலாகி விடும். ஆசிரியர்,*

**"கண்ணிய காமக் கிழத்தி மேன"** (கற்-10)

*எனக் காமக் கிழத்திக்குத் தனியாகக் கூற்றுக் கூறியிருப் பதனாலும்*

**"காமக் கிழத்தி மனையோள் என்றிவர்**
**ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்"** (கற்-5)

**"காமக் கிழத்தி தன்மகத் தழீஇ"** (கற்-5)

**"காமக் கிழத்தியர் நலம்பா ராட்டிய"** (கற் - 6)

**"தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை**
**மாயப் பரத்தை யுள்ளிய வழியும்"** (கற்-6)

**"புதுவோர் சாயற் ககன்ற கிழவனை"** (கற் -6)

**"பரத்தை மறுத்தல் வேண்டியும்"** (கற்-17)

**"பரத்தையிற் பிரிந்த காலை"** (கற் - 46)

**"பரத்தை வாயில் நால்வர்க்கு முரித்தே"** (பொரு -30)

**"கற்புவழிப் பட்டவள் பரத்தை ஏத்தினும்"** (பொரு -36)

**"தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்"** (பொரு - 41)

*என்பவற்றாலும்,*

**"பாணன் கூத்தன் விறலி பரத்தை"** (செய் - 190)

*எனக் கற்பிற் கூற்றிற் குரியராகக் கூறியிருப்பதனாலும், இவை யெல்லாம் பொய்யெனப் பட்டு, சிறப்புப்பாயிரத்தில், '**வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்**' என்பதற்கு மாறாய், தொல்காப்பியம் பழந்தமிழர் ஒழுக்கங்கூறும் நூல் அன்றெனப் படுவதோடு, வள்ளுவர், **வரைவின் மகளிர்** என ஓர் அதிகாரங் கூறியிருப்பதற்கு இலக்கணமும் இன்றாய் முடியும். இப் பரத்தைமைச் செயல் தமிழின ஒளிமணியிற் படிந்துள்ள மாசேயாகும். அது கட்டாயங் களையத்தக்க தொன்றாகும்.*

## 5. கூற்று, வாயில், கேட்போர்

*இம் மூவகையினரும் அகவொழுக்கம் இனிது நிகழ்தற் குரியவராவர், இம் மூவகைக்கும் உரியராகப் பதினைந்து (15) பேர் கூறப்படுகின்றனர்.*

**அகத்திணை**

அவர்,

| | | |
|---|---|---|
| 1.கிழவன் | 6.செவிலி | 11.பரத்தை |
| 2.கிழத்தி | 7. பாணன் | 12. அறிவர் |
| 3. பார்ப்பான் | 8. கூத்தன் | 13. கண்டோர் |
| 4. பாங்கன் | 9.பாடினி | 14. இளையர் |
| 5. தோழி | 10. விறலி | 15. விருந்தினர் |

**களவிற் குரிய கூற்று**

| | |
|---|---|
| 1. பார்ப்பான் | 4. செவிலி |
| 2. பாங்கன் | 5. கிழவன் |
| 3. தோழி | 6. கிழத்தி |

**கற்பிற் குரிய கூற்று**

| | | |
|---|---|---|
| 1. பார்ப்பான் | 5. கிழவன் | 9. விறலி |
| 2. பாங்கன் | 6. கிழத்தி | 10. பரத்தை |
| 3. தோழி | 7. பாணன் | 11.அறிவர் |
| 4. செவிலி | 8. கூத்தன் | 12. கண்டோர் |

**வாயில்**

| | | |
|---|---|---|
| 1. தோழி | 5. பாணன் | 9. இளையர் |
| 2. செவிலி | 6. கூத்தன் | 10. விருந்தினர் |
| 3. பார்ப்பான் | 7. பாடினி | 11. அறிவர் |
| 4. பாங்கன் | 8. விறலி | 12. கண்டோர் |

இவருள் பாங்கன் - தலைவனது தோழன். தோழி - தலைவியின் உடலுயிர் போன்றவள்; செவிலி மகள். செவிலி - தலைவியின் வளர்ப்புத் தாய். பாடினி - பாணன் மனைவி., விறலி - கூத்தன் மனைவி, கண்டோர் - வழிப்போக்கர். இளையர் - பருவ முறாதவர்; தலைவனுடனிருந்து, அவ்வப்போது ஏவுந் தொழிலைச் செய்து கொண்டு, தலைவனுக்கு மெய்காப்பாளராக இருப்பவர். விருந்தினர் - புதியவர்.

***கூற்று :*** அகவொழுக்கத்திற் கூறுதற் குரியோர்.

***வாயில் :*** துணை, தூது., தலைவன், தலைவி இருவர் சொல்லையும் கேட்டும், அவர்க்குக் கூறியும், இருவரையும் கூட்டியும், பிரித்தும் அகவொழுக்கம் நிகழ்தற்கு வாயில் போறலின் வாயில் எனப்பட்டனர்.

## கண்டோர் கூற்று

இவர் கற்பிற்குரிய கூற்றாகக் கூறப்படினும், களவிற்கும் உரியராவர். உடன் போக்கில், தலைவன் தலைவியர்க்கும், தேடிச் சென்ற செவிலிக்கும் கூறுதற்குரியர். (அகத் - 40)

### கூத்தர் கூற்று

கூத்தர் கூற்று, பார்ப்பார் கூற்றுப் போன்றே அறிவொடு பட்டதாக உள்ளமை அறிந்து இன்புறற் பாலதாகும். அதில், தலைவிக்குக் கூறுவன தலைவற்குக் கூறுவன எனத் தனித் தனி பிரித்துக் கூறும் ஆசிரியரின் அறிவுத்திறன் அதினும் அறிந்தின்புறற் பால தொன்றாகும்.

| தலைவிக்கு | தலைவற்கு |
|---|---|
| 1. தொல்லவை உரைத்தல் | 5. அறிவு மெய் நிறுத்தல் |
| 2. நுகர்ச்சி ஏற்றல் | 6. ஏதுவின் உணர்த்தல் |
| 3. ஊடலில் தணித்தல் | 7. துணிவு காட்டல் |
| 4. உறுதி காட்டல் | 8. அணிநிலை உரைத்தல் (கற் -27) |

1. தொல்லவை உரைத்தல் - முன்பு அன்பு மிக்கார் இருவர் இன்பம் நுகர்ந்தவாறு இதுவெனத் தலைவிக்குக் கூறுதல். தொல்லவை - முன்னிகழ்ந்தவை.

2. நுகர்ச்சி ஏற்றல் - நுமது இன்ப நுகர்ச்சி அம்முன்னோர் இன்ப நுகர்ச்சியினும் சிறந்தது எனக் கூறுதல்.

3. ஊடலில் தணித்தல் - தலைவியிடம் வாயிலாகச் சென்று இவ்வூடல் இல்லற வொழுக்கத்திற்கு ஏற்றதன்று என்றாயினும், இது அன்பின்மையாம் என்றாயினும் கூறித் தலைவியின் ஊடல் தணித்தல்.

4. உறுதி காட்டல் - இனிது இல்வாழ்க்கை நடத்தி இடைவிடாது இன்ப நுகர்தலே மக்கட் பயன் என்று கூறுதல். இத்தகைய அறிவுரைகள்!

5. அறிவு மெய் நிறுத்தல் - புறத் தொழுக்கம் ஒழுகும் தலைவற்கு, நீ கற்றறிந்த அறிவு மெய்யாக வேண்டும் என அவனை மெய்யறி வின்கண் நிறுத்தல்; அதாவது, புறத் தொழுக்கத்து நின்று நீக்கி,

*நல்லொழுக்கத்தின் கண் நிலை பெறச் செய்தல். கற்றறிந்த அறிவு மெய்யாதல் - கற்றபின் அதற்குத்தக நிற்றல்.*

*6. ஏதுவின் உணர்த்தல் - தலைவனது காம மிகுதி கண்ட விடத்து, இம் மிக்க காமத்தால் பழியுண்டாகு மென்று காரணங் காட்டி, அஃதொழியுமாறு செய்தல். ஏது - காரணம்.*

*7. துணிவு காட்டல் - கழிகாமத்தால் கெட்டாரை எடுத்துக் காட்டல்; எடுத்துக் காட்டி, நீ அங்ஙனம் கெடக் கூடாதெனத் திருத்துதல்.*

*8. அணி நிலை உரைத்தல் - புணர்ச்சியின் போது, தலைவியின் மார்பினும் தோளினும் முகத்தினும் எழுதும் தொய்யிலின் வகை கூறுதல். அதாவது, புணர்ச்சிக்கு முன் தலைவியின் மார்பு முதலிய உறுப்புக்களில் குங்கும சந்தனக் குழம் பால் கொடி முதலியன எழுதுதல் மரபு. ஓரிரவிற் புணரும் ஒவ்வொரு புணர்ச்சியினும் வெவ்வேறு வகையாக எழுதுவர். அங்ஙனம் எழுதும் வகையைக் கூத்தர் தலைவற்குக் கற்பிப்பர். தொய்யில் - கோலம். இஃதொரு நுண்ணிய கைத்திறனும் கலைத் திறனுமன்றோ? இஃது அன்பை மிகுவிக்கும்.*

***கூத்தர்*** *- கூத்தாடுவோர்.* ***கூத்து*** *- நாடகம். பழந்தமிழ்க் கூத்தர்கள் முத்தமிழும் உணர்ந்த மூதறிவாளர்களாவர்; மக்கள் கடைப்பிடித் தொழுகவேண்டிய நல்லன வற்றையும், விலக்க வேண்டிய தீயன வற்றையும் அப்படியே மனத்தில் பதியுமாறு நடித்துக் காட்டி, மக்களை நல்வாழ்வு வாழ்வித்து வந்த நல்லோர்கள். அதனாலேயே கூத்தர் தலைமகட்கு இங்ஙனம் அறிவு கொளுத்தும் தகுதியுடைய ராயினர்; நாடகத்தில் பல்வகையான கோலமிட்டு நடித்துப் பழகிய வராதலால் தொய்யிலெழுதும் வகையைத் தலைவற்குக் கற்பிக்கலாயினர். இதனால், நம் முன்னோர் தமிழை மூன்றாகப் பகுத்துப் போற்றி வந்த பெருமை விளங்குகிறதன்றோ?*

*இத்தகைய மேம்பாடுடைய - தலைமக்கட்கு அறிவுரை கூறி நல்வாழ்வு வாழச் செய்யும் தகுதியுடைய கூத்தர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்பது எங்ஙனம் பொருந்தும்? தமிழரிடைக் குலவேற்றுமை புகுந்த பிற்காலத்தே இவர்கள் தாழ்த்தப்பட்டனர் போலும்!*

## கொண்டு கூறுங் கூற்று

| | |
|---|---|
| *1. ஊரார்* | *4. நோய்மருங் கறிஞர்* |
| *2. அயலார்* | *5. தந்தை* |
| *3. சேரியார்* | *6. தன்னை* |

இவர்கள் களவு, கற்பு இரண்டிற்கும் உரியர். ஆனால், இவர்கள் கூறுவதாக, முன் இருவகைக் கைகோளின் கூற்றிற்கும் உரியராகக் கூறிய பன்னிருவருங் கூறுவதல்லது, இவ்வறுவருங் கூறுவதாகச் செய்யுள் செய்தல் மரபன்று. ஊரார் - ஊர்மகளிர். அயலார் - பக்கத்து வீட்டுப் பெண்டிர். சேரியார் - அத் தெரு மகளிர். இம் மூவரும் தலைவியின் கள வொழுக்கத்தைப் பற்றி அலர் கூறுவர். '**ஊரவர் கௌவை எருவாக**' (குறள் - 1147) எனக் காண்க. நோய் மருங்கறிஞர் - தலைவன் தலைவியர் வேட்கைப் பெருக்கை யறிந்து ஆவன செய்பவர்; பாட்டனும் பாட்டியும் ஆயமும். தன்னை - தலைவியின் அண்ணன்.

***நற்றாய்*** : தலைவியைப் பெற்ற தாய். இவள் தலைவன் தலைவியோடு ஒன்றுங் கூறப் பெறாள். இது அவள் தலைவியின் இல்வாழ்விற் கொண்டுள்ள அக்கறையைக் குறிக்கும்.

***கேட்போர் :*** ஒருவர் கூறுவதைக் கேட்பவர் - கேட்போர் எனப்படுவர். தலைவன் தலைவி கூற்றை எல்லோரும் கேட்பர். பார்ப்பார், அறிவர் கூற்றைத் தலைவன் முதலிய அனைவரும் கேட்பர். ஆனால், களவில் தலைவியிடம் பார்ப்பான் கூறப்பெறான்; கற்பில் வாயிலாகச் சென்று கூறுவான்.

அகவொழுக்கத்திற்குப் பயன்படுமாறு மக்களை, ஆயர் வேட்டுவர் என நிலமக்கள் எனவும், அண்ணல் வெற்பன் எனத் தலை மக்கள் எனவும், அடியோர் வினைவலர் எனவும், அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் எனவும், கூற்று வாயில் கேட்போர் எனவும், இவ்வகையில் வகுத்தும், தொகுத்தும், பகுத்தும், புனைந்துரை வகையால் செய்யுள் செய்து, அகவாழ்வைப் பாதுகாத்து வந்தனர் நம் முன்னையோர். அகவாழ்வின் சிறப்பிற்காகச் செல்வாக்குள்ள தலைவன் தலைவியைக் கற்பித்துக் கொண்டனரே யன்றி, மற்றவர்க் கெல்லாம் அகவொழுக்கம் விலக்கன்று. உலக வழக்கில் ஏழை பணக்காரர் எல்லோரும் ஏற்றப்பெற்றி அகவொழுக்கம் ஒழுகியே வந்தனர். எல்லோரும் இனிது இன்புற்று உயரிய வாழ்வு வாழ வேண்டும் என்னும் பெருநோக்குடன் செய்வதே செய்யுள் வழக்கமாகும்.

உலகப் பெருநாட்டு மக்களெல்லாரும் நாகரிகம் என்பது இன்னதென்றே அறியாத அக்காலத்தே, நம் முன்னோராகிய பழந்தமிழ்ப் பெருமக்கள் தம் வாழ்க்கையை அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாக வகுத்து, அகவாழ்வையும் களவு, கற்பு என இரண்டாகப் பகுத்து, அவற்றிற்கு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள், மக்கள் என்னும் உறுப்புக்கள் அமைத்து, இவ்வளவு சீரிய முறையில் நனி நாகரிகத்துடன் வாழ்ந்து வந்தனர் என்பதை

*ஒவ்வொரு தமிழரும் எண்ணி யெண்ணி இறும்பூ தெய்தவேண்டிய தொன்றன்றோ! வாழ்க அன்னார் வழி முறை!*

## 4. பிரிவு

*பிரிவாவது - களவுக்காலத்தும் கற்புக்காலத்தும் யாதேனும் ஒன்றன் பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்லுதல், பாலையொழுக்க மாகிய அப்பிரிவு,*

### அகத்திணை

| | |
|---|---|
| *1. ஓதற் பிரிவு* | *6. பொருட் பிரிவு* |
| *2. பகைப் பிரிவு* | *7. வரைவிடைப் பொருட் பிரிவு* |
| *3. துணைப் பிரிவு* | *8. இட்டுப் பிரிவு* |
| *5. காவற் பிரிவு* | *9. பரத்தையிற் பிரிவு* |

*என ஒன்பது வகைப்படும். ஓதற்பிரிவு, பகைப்பிரிவு, தூதிற் பிரிவு, பரத்தையிற் பிரிவு என்னும் நான்கும் கற்புக் காலத்து நிகழும். அதாவது, இல்லறம் நடத்தும்போது நிகழும். பரத்தையிற் பிரிவு - மருத வொழுக்கமாகிய ஊடலைச் சிறப்பிக்க நிகழும் பிரிவாகும். வரைவிடைப் பிரிவும், இட்டுப் பிரிவும், களவுக் காலத்து நிகழும். துணைப் பிரிவும், காவற் பிரிவும், பொருட்பிரிவும், களவு கற்பு ஆகிய இரு காலத்தும் நிகழும். எனவே, துணைப்பிரிவு, காவற் பிரிவு, பொருட் பிரிவு, வரைவிடைப் பிரிவு, இட்டுப் பிரிவு ஆகிய ஐந்தும் களவுக் காலத்தும், வரைவிடைப் பிரிவும், இட்டுப் பிரிவு மல்லாத ஏனை ஏழு பிரிவுகளும் கற்புக் காலத்தும் நிகழுமென்பதாயிற்று.*

| | |
|---|---|
| *7. வரைவிடைப் பிரிவு*<br>*8. இட்டுப் பிரிவு* | *களவிற்கே உரியவை.* |
| *1. ஓதற் பிரிவு*<br>*2. பகைப் பிரிவு*<br>*4. தூதிற் பிரிவு*<br>*9. பரத்தையிற் பிரிவு* | *கற்பிற்கே உரியவை.* |
| *3. துணைப் பிரிவு*<br>*5. காவற் பிரிவு*<br>*6. பொருட் பிரிவு* | *களவு கற்பு இரண்டற்கும் உரியவை.* |

*வரைவிடைப் பிரிவு பொருட்பிரிவிலும், துணைப் பிரிவு பகைப் பிரிவிலும் அடங்கும். தலைவன் அரசனும் சிற்றரசனுமானால் களவில் காவற் பிரிவு நிகழும். துணைப் பிரிவும் பொருட் பிரிவும் எல்லோர்க்கும் நிகழும். களவொழுக்க மொழுகும் போது,*

கைச்செலவுக்கு வேண்டிய பொருளுக்காகத் தலைவன் தலைவியைப் பிரிந்து தன்னூர்க்குச் செல்வதும் பொருளுக்காகப் பிரிவதால் பொருட்பிரி வெனவேபடும். இட்டுப் பிரிவில் அடங்காது. வாணி கத்தின் பொருட்டு உள்நாட்டிற் பிரிதலும் பொருட் பிரிவேயாம்.

## 1. ஓதற் பிரிவு

அவற்றுள், ஓதற் பிரிவாவது - அயல் நாடுகளுக்கு - வெளிநாடு - சென்று, அந்நாட்டுப் பழக்க வழக்கங்களைக் கற்று வரத் தலைவன் தலைவியைப் பிரிதல். அதாவது, பழந்தமிழ் மக்கள் இளமை யிலிருந்து தாய்மொழி மூலம் வாழ்க்கைக்கு இன்றியமையாத அறம் பொருளின்பம் திறம்படக் கூறும் நூல்களைக் கற்றுத் தெளிவர். ஆளானதும் - மணஞ் செய்து கொண்ட பின் - வேற்று நாட்டுக்குச் சென்று அந்நாட்டு மொழியை ஒருவாறு பேசப்பழகி, அந்நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும், கலை நுட்பங்களையும், தொழில் நுணுக்கங்களையும், வாணிக வியல்பையும், அரசியல் முறையையும், நாகரிக நல்வாழ்வையும் கற்றுத் தெரிந்து வருவர்.

இன்று செல்வரும் அறிஞரும் அரசியற் றலைவரும் ஐரோப்பா, அமெரிக்கா, உரசை (ரஷ்யா), சீனா முதலிய வெளிநாடுகளிற் சுற்றுப் பயணஞ் செய்து, அந்நாட்டுக் கலை, தொழில், நாகரிகம் முதலியவற்றின் நுட்பங்களைக் கற்றறிந்து வருவது போலவே, அன்றும் கடல் கடந்து மேல்நாடு கீழ் நாடுகட்குச் சென்று, அந் நாடுகளிற் சுற்றுப் பயணம் செய்து அந்நாட்டுக் கலை முதலியவற்றைக் கற்றுத் தெரிந்து வந்தனர் நம் முன்னையோர். இதுவே ஓதற்பிரிவாகும். அக்கால் அரேபியர், கிரேக்கம், எகிப்து, உரோம் முதலிய மேனாடு களுடனும், சீனம், கடாரம், சாவகம் முதலிய கீழ்நாடுகளுடனும், தமிழ் நாடு நடத்திவந்த கடல் வாணிகமே (அகத் -34) இதற்குச் சான்றாகும். வெளிநாட்டுச் சுற்றுப் பயணத்தை ஓதற்பிரி வென்ற நம் முன்னோரின் மதி நுட்பமே நுட்பம்!

இனி, ஓதற் பிரிவின் கால அளவு மூன்றாண்டைக் கடந்து செல்லக் கூடாது (கற் - 47); மூன்றாண்டுக்குட்பட்டே நிகழும். ஏனைப் பிரிவுகளெல்லாம் ஓராண்டிற் குட்பட்டே நிகழும் (கற் - 18-9); ஓராண்டுக்கு மேல் நீடிக்கக் கூடாது. வெளிநாடுகட்குக் கடல் கடந்து சென்று, அந்நாடுகளைச் சுற்றிப் பார்த்து, அந்நாட்டு நாகரிகச் சிறப்பினைத் தெரிந்து கொண்டு வரவேண்டுமாகையால், ஓதற் பிரிவுக்கு ஓராண்டிற்குமேல் வேண்டியதாயிற்று.

வெளிநாடுகட்குக் கடல் கடந்து கப்பலிற் செல்லவேண்டும். இன்று போல் அன்று நீராவிக் கப்பல் இல்லை. காற்றின் உதவியால் தான் அன்று கப்பலோட்டி வந்தனர். ஓராண்டில் வீசும் கீழ்காற்று,

*மேல்காற்று ஆகிய இரு பருவக் காற்றில், ஒரு பருவக்காற்றின் போது திரும்பினால், அவ்வயல் நாட்டு நாகரிக நலத்தை முற்றுந் தெரிந்து கொள்ள முடியாதல்லவா? எனவே, அதற்கடுத்த அப் பருவக்காற்று, அங்கு சென்ற இரண்டாவதாண்டின் இடையில் தொடங்குவதால், அப் பருவக் காற்றின் போது திரும்பினால் இடையேயுள்ள ஒன்றரையாண்டுக் காலம் நாடு சுற்றிப் பார்க்கலாம். அல்லது அதற்கடுத்த அப்பருவக் காற்றின்போது திரும்பினால் இரண்டரை யாண்டுக் காலம் நாடு சுற்றிப் பார்க்கலாம்.*

*அதாவது, பிரிவொழுக்கமாகிய பாலைக்குரிய காலம் மாசி முதல் ஆடி முடியவுள்ள ஆறு மாதங்களாகும். அதாவது, பின்பனியும் இருவேனிலும் ஆகும். இம் மூன்று காலமும் பாலைக்குரியவாதல் அறிக. கீழ்காற்றுத் தொடங்கும் மாசியில் மேல் நாடுகட்குப் புறப்பட்டால், மேல் காற்று வீசும் ஆனி யல்லது ஆடி மாதத்தில் திரும்ப வேண்டும். போய்ச் சேரக் குறைந்தது ஒரு மாதமாகும். இடையில் நான்கு மாதங்களே இருக்கின்றன. அந்நான்கு மாதங்களில் எங்ஙனம் நாடு சுற்றிப் பார்க்க முடியும்? எனவே, அடுத்த மேல் காற்றின் போது - ஆனி ஆடியில் - திரும்பினால் இடையிலுள்ள காலம் ஏறக்குறைய ஒன்றரை யாண்டாகிறது. ஆவணி பிறந்தால் மழைக்காலந் தொடங்கும். அது பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வந்து சேருங்காலமாதலால் ஆடி முடிவுக்குள் வந்து சேர்ந்து விட வேண்டும். அந்த ஆடியில் வர முடியாவிட்டால், அடுத்த ஆடியில் கட்டாயம் வந்து விடவேண்டும். அப்போது ஊரிலிருந்து புறப்பட்ட மாசி முதல் மூன்றாவது மாசி வரை இரண்டாண்டும், மாசியிலிருந்து ஆடிவரை ஆறு மாதமும், ஆக இரண்டரை யாண்டுகள் ஆகின்றன. அதற்குமேல் தலைவன் தலைவியைப் பிரிந்து வெளி நாட்டில் இருக்கக் கூடாது.*

**"வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது."** **(கற்பு -47)**

*என்பதை அறிக.*

*இறவாது - கடாவது. கீழ் காற்றும் மேல் காற்றும் ஆண்டுக் கொருமுறை மாறி வீசுவது இதற்கு ஏற்றதாக இருந்தது. இப் பருவக் காற்றுக்களைக் கொண்டுதான் வெளிநாட்டுப் பிரிவின் காலத்தை வரையறை செய்தனர் போலும்!*

*இனி, ஏனைப் பிரிவுகள் ஓராண்டுக் குட்பட்டே நிகழும். வேனிற் காலத் தொடக்க மாகிய சித்திரை முதல் ஆடியீறாகவுள்ள நான்கு மாதங்கள், அல்லது பின்பனித் தொடக்கமாகிய மாசி முதல் ஆடி யீறாகவுள்ள ஆறு மாதங்களே பகைப் பிரிவுக் குரிய காலமாகும். மழைக் காலத்தில் போர் நடவாது. மதில் முற்றினோர் மட்டும்*

அப்போது பாசறைக்கண் இருப்பர் (புறத் -21). பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வருங்காலம் ஆவணி புரட்டாசி மாதங்களாகிய கார்காலமேயாகலான், அதற்கு மேல் தலைவியைப் பிரிந்திருத்தல் கூடாது. ஆவணி முதல் கார்த்திகை யீறாகவுள்ள நான்கு மாதமும் - காரும் கூதிரும் - உயிர்கள் உடனுறைதற் கேற்ற காலமாதலால், அது தலைவியைப் பிரியப் பெறாத - வீட்டிலிருக்கும் - காலமாகும். அக் காலத்தே தலைவன் பாசறையில் இருக்கினும் அதைப் **பாசறை வென்றி** (புறத் -21) என்பதும், பாசறைக்கண் இருக்கும் போது கார்ப்பருவம் வரின் அதுகண்டு தலைவன் தலைவியின் தனிமையை எண்ணிப் **பாசறைப் புலம்பலும்** (அகத் -41) இதற்குச் சான்றாகும். தூதிற் பிரிவு, பொருட் பிரிவுகட்கும் இக்காலமே யாகும்.

இனி, வாணிகத்தின் பொருட்டுக் கடல் கடந்து வெளிநாடுகட்குச் செல்லினும், மாசிக்கும் ஆடிக்கும் இடைப்பட்ட நான்கு மாதங்களில், கொண்டுபோன சரக்குகளை விற்று வாங்க வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு திரும்பிவிடலாம். இது, பொருட் பிரிவு. ***பரத்தையிற் பிரிவு நாடோறும் நிகழ்வதாகும்.***

## 2. பகைவயிற் பிரிவு

அதாவது, அரசு என்னும் பெயர்க்கு முரணாக, பொது நன்மையின் மாறுபட்டு, நாட்டின் அமைதி குலைய மக்கள் அச்சங்கொள்ளப் போர் தொடங்கினாரை அடக்கப் பிரிதல். இது, ***பகைதணிவினைப் பிரிவு*** எனவும் வழங்கும். தன் மீது பகை கொண்டு பொர வந்தானொடு - தன் நாட்டின் மீது படையெடுத்து வந்தானோடு - தான் சென்று பொருவதன்றி, மன்னர் இருவர் தம்முட் பகை கொண்டு போர் தொடுக்கின் அவர்களில் ஒருவற்குப் படைத்துணையாகச் செல்லுதல் ***வேந்தர்க் குற்றுழிப் பிரிவு.*** அல்லது ***துணைவயிற் பிரிவு*** எனப்படும். இத்துணைப் பிரிவும் பகைப்பிரிவே யாகும். எனவே, தன் பகைக்கும் பிறர் பகைக்கும் பிரிதலான், பகைப் பிரிவு இருவகை யாயிற்று. பெரும்பாலும் ஆற்றார்க்கே படைத்துணையாவர்.

## 3. தூதிற் பிரிவு

பகை கொண்ட இருவரை, அப்பகை நீக்கி ஒன்று கூட்டப் பிரிதல். இது ***சந்து செய்தல்*** எனப்படும். சந்து - உடன்பாடு, தூது. தூதிற் பிரிவு - அந்தணர் அரசர்க்குப் பெரும்பான்மையும், வணிகர் வேளாளர்க்குச் சிறுபான்மையும் உரித்தாகும். இப்பிரிவால், பழந்தமி ழரசர்கள் போர் வென்றியே புகழ் வென்றியெனக் கருதாமல், போர் உண்டாகாமல் எவ்வளவு வரை தடுக்க முடியுமோ அவ்வளவு வரை தடுத்து, நாட்டில் அமைதி நிலவச் செய்து வந்தனரென்பது விளங்குகிறது.

ஓதல், பகை, **தூது** என்னும் இம்மூன்று பிரிவும் நாட்டு மக்களின் நலவுரிமையைப் பாதுகாக்கும் பொதுநலப் பிரிவாகும். வெளிநாடுகளிற் சென்று கற்றறிந்தவற்றைத் தந்நாட்டினர்க்குப் பயன்படச் செய்தலின், ஓதற் பிரிவும் பொது நலத்தொண் டாயிற்று.

எளியரும் அறிவிலரும் வெளிநாடுகட்குச் செல்லுதலும், அறிவிலார் தூது சென்று உடன்பாடு செய்தலும் முடியாதாகையால், செல்வமும், அறிவுமுள்ள **உயர்ந்தோரே** ஓதல், தூது என்னும் இது பிரிவுக்கும் உரியராவர்.

**"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன."** (அகத்-28)

என்பது சூத்திரம்

உயர்ந்தோர் - செல்வமும் அறிவும் உள்ளவர். உயர்ந்தோர் என்பது - பெரியோர் என்பதுபோலப் பெயர் குறித்து நின்றது. இனி, உயர்ந்தோர் - அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்றுமாம். அடியோரும் வினைவலரும் தனக்குரிய ரன்மையான் ஓதற்கும் தூதிற்கும் பிரிதற் குரியரல்லர்.

அரசர் முதலிய மூவரும் முறையே அரசியல் முறை, வணிகமுறை, பயிர்த்தொழில் முறை இவற்றைக் கற்கவும், அந்தணர் இம் மூன்றையும் ஒருங்கு கற்கவும் பிரிவரென்க. வணிகர் வேளாளருக்கு அரசியலுரிமை யுண்மையால் அவர்கள் அரசியல் முறையுங் கற்றுவருவர்.

## 4,5. காவல், பொருட் பிரிவுகள்

ஒரு நாட்டில் எப்போதும் நல்லரும், பொல்லரும் இருப்பது இயல்பே. இவ்வேறுபாடு இன்றி எல்லோரும் நன்மக்களாகவே இருக்கின் அரசு தேவையில்லை. இவ்வேறு பாட்டால் நாட்டு மக்களிடை யுண்டாகும் சீர்கேட்டைத் திருத்தியமைத்து, பின்னர் அத்தகைய சீர்கேடுண்டாகாமலும், அரசியல் அலுவலாளர்களால் நாட்டுமக்கட்கு இடையூறுண்டாகாமலும் காத்தற் பொருட்டும், தன்னால் ஏற்படுத்தப்பட்டுள்ள வரியை ஒழுங்காக வாங்குதற் பொருட்டும் அரசர்க்குப் பிரிவு ஏற்படும். இவை காவற் பிரிவும், பொருட் பிரிவும் ஆகும்.

**"மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய**
**முல்லை முதலாச் சொல்லிய முறையால்**
**பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்**
**இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே."** (அகத்-28)

மேவிய சிறப்பின் ஏனோர் - பொருந்திய சிறப்பினையுடைய அரசியல் அதிகாரிகள், படிமைய - வடிவமைந்த, முல்லை முதலாச்

சொல்லிய முறையால் - முல்லை முதல் நெய்தலீறாகச் சொல்லிய முறையையுடைய நானிலத்தும் (அகத் -5), பிழைத்தது பிழையாது ஆகல் வேண்டியும் - மக்களிடை உண்டான சீர்கேட்டைத் திருத்திப் பின்னர் அத்தகைய சீர்கேடுண்டாகாமல் காத்தற் பொருட்டும், இழைத்த ஒண்பொருள் முடியவும் - அரசிறையாக ஏற்படுத்தப்பட்ட சிறந்த பொருளை வாங்குதற் பொருட்டும், பிரிவே - அரசனுக்குப் பிரிவு ஏற்படும்.

மேவிய - பொருந்திய. ஏனோர் - அரசியல் அதிகாரிகள். அதாவது அரசியற்றுறைத் தலைவர்கள். படிமை - வடிவு; இங்கே நீர்வளம் நிலவளம் முதலியன. வளம் பொருந்திய நானிலத்தும் என்க. அதாவது நாட்டில். பிழை - தவறு. பிழைத்தல் - தவறுதல். இழைத்தல் - ஏற்படுத்தல். ஒண் பொருள் - வரிப்பணம்.

மக்கள் மனவேறு பாட்டாலும், அலுவலாளர்களின் முறை கேட்டாலும் நாட்டில் ஒழுக்கக் கேடுகள் ஏற்படும். அங்ஙனம் ஏற்படாமல் இருத்தற் பொருட்டும், ஒழுங்காக வரி வாங்குதற் பொருட்டும் நாட்டை மேற்பார்வையிட அரசனுக்குப் பிரிவு ஏற்படும்.

ஊரில் செல்வாக்குள்ள இருவர், தங்கள் தலைமையின் கீழ் ஊர் மக்களை இரண்டாகப் பிரித்து வைத்துத் தாங்கள் செல்வாக்குடன் வாழ்ந்து வருவர். இவை ஊர்க்கட்சிகள் எனப்படும். இத்தகைய கட்சி வேறுபாட்டால் ஊரில் ஒற்றுமை குலைந்து ஊர் நலம் கெடும். ஊர்ப் பொதுக் காரியங்கள் ஒழுங்காக நடைபெறா; '***ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது***' என்றபடி, ஊர்க்கட்டுப்பாடு ஒழியும். அக்கட்சிப் பூசலால் ஊர்ப் பொதுமக்கள் பெருந் தொல்லைக் குள்ளாவர். இத்தகைய கட்சி வேற்றுமை இல்லாத ஊரே நல்லூராகும். அத்தகைய நல்லூர்களை யுடைய நாடே நல்ல நாடாகும். இதனையே வள்ளுவர், '***பல்குழுவும் இல்லது நாடு***' (குறள் - 735) என்கிறார். பல்குழு - ஊர்க்கட்சிகள். ஊர்களில் ஏற்பட்டுள்ள இத்தகைய கட்சி வேற்றுமைகளைப் போக்கி, மறுபடியும் அவை தோன்றாமற் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இனி, அரசியல் அலுவலாளர்கள், நாட்டு மக்களிடை ஓரவஞ் சனையாக நட்புப் பகை பாராட்டுதலும், கைக்கூலி வாங்கிக் கொண்டு காரியம் செய்தலும், முறை பிறழ வரி வாங்குதலும், குடிகளை வருத்தி வரி வாங்குதலும் ஆகிய முறை கேடுகள் உண்டாகும். நாட்டில் அத்தகைய முறை கேடுகள் நேராமலிருக்கவும், ஒரு சில இடங்களில் நேரின் மறுபடியும் அங்ஙனம் நேராமலிருக்கவும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இனி, வரி வாங்குந் தொழில் ஒழுங்காக நடைபெறும் படியும் பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது, ஏற்படுத்தப்பட்டுள்ளபடி ஒழுங்காக வரி வாங்கும்படி பார்த்துக் கொள்ளல்.

இம் முத்திறத்தனவும் ஒழுங்காக நடைபெறும்படி அதிகாரிகள் திறம்பட அதிகாரம் செலுத்தி வருகின்றனரா என்பதை அறியும் பொருட்டு, திறம்பட அதிகாரம் செலுத்தும் பொருட்டு அரசன் அடிக்கடி நாட்டைச் சுற்றிப் பார்த்து வர வேண்டும். இதற்காக அரசனுக்குப் பிரிவு நேரும். ஏனோர் (அதிகாரிகள்), பிழைத்தது பிழையாது காத்தற் பொருட்டும், இழைத்த ஒண்பொருள் ஒழுங்காக வாங்குதற் பொருட்டும் மேற்பார்வையிட அரசன் பிரிவானென்க. நாட்டை மேற்பார்வையிட அதிகாரிகள் பிரிவதும் அரசனுக்காகவே பிரிவதால் அஃதும் அரசன் பிரிவில் அடங்கும்.

இன்றும் மாநிலத் தலைவரும் (கவர்னர்), மாவட்டத் தலைவரும் (கலைக்டர்), நாட்டைச் சுற்றிப் பார்த்தலும், நில வரிப் பார்வையாளர் (R.I.) ஒழுங்காக நடத்தற் பொருட்டும், ஊராளர் வரி வாங்குதல் முதலிய அலுவல்களை ஒழுங்காகச் செய்தற் பொருட்டும் கூற்றத் தலைவரும் (தாசில்தார்) பல்கூற்றத் தலைவரும் (R.D.O.) மேற்பார்வை யிட்டு வருதலும் இப்பிரிவை நினைப்பூட்டும்.

பிழைத்தது பிழையாதாகல் வேண்டிப் பிரிதல் - ***காவற் பிரிவு.*** இழைத்த ஒண் பொருள் முடியப் பிரிதல் - ***பொருட் பிரிவு.***

இது, பழந்தமிழரசர்களின் முறை பிறழா முதன்மையான செங்கோன்மைத் திறத்தை இனிது விளக்கும். இன்று நாடாள்வோர் இம்முறையை மேற்கொள்ளுதல் முறையன்றோ? இக் காவற்பிரிவும் பொருட்பிரிவும் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வர்க்கும் உரியனவாகும். அரசரல்லாத ஏனை மூவரும் அரசன் சார்பாளராகச் செல்வர். சார்பு - பதில்.

இன்று பெரும்பாலும் கட்சி வேற்றுமை யில்லாத ஊர்களே இல்லை யெனலாம். பல்குழு நாட்டைப் பாழ்படுத்தி வருகின்றது. அதனால், நாட்டு மக்கள் படும்பாடு கொஞ்சநஞ்ச மல்ல. இன்று அரசியல் அலுவலாளரிடை முறைபிற ழாட்சியும் கைக்கூலித் தன்மையும் இல்லாமலில்லை. இக்குறை களைந்து மக்களை வாழ்விப்பது ஆள்வோரின் முன்னிற்கும் முதற் கடமையாகும்.

அரசன் தனக்கு ஈடாகத் தன் தொழில் முடிக்க வணிகரையும், வேளாளரையும் ஏற்படுத்துவான். அவர்கள் அரசன் சார்பினராக - ஆணையாளராக - தலைமை தாங்கிச் சென்று, அரசன் தொழிலான பகைவெல்லல், நாடு காத்தல், பொருளீட்டல், சந்து செய்தல் ஆகியவற்றைச் செய்வர். அந்தணர் துறவிகளாதலால் தலைமை

தாங்கிச் செல்லார். அடியோர், வினைவலர், எல்லோரும் அரச காரியம் பார்ப்பதற்குரியரேனும், வணிகரும், வேளாளருமே அரசனாற் சிறப்புப் பெற்று அரசனுக் கீடாக அவன் தொழிலின்மேற் செல்லற் குரியராவர். (அகத் -30). பிற்காலத்தே, சிறுத்தொண்டன், கருணாகரத் தொண்டைமான் முதலியோர் தலைமை தாங்கிப் பகைமேற் சென்றிருத்தலை யறிக.

அரசன் கட்டளை பெற்றே அன்று வெளி நாடுகளிற் சென்று பொருளீட்டும் உரிமை யிருந்து வந்தது. அரசன் கட்டளையின்றி - உடன்பாடு பெறாமல் - வணிகரும் அயல்நாடுகட்குச் செல்லுதல் கூடாது, அவ்வளவு கட்டுப்பாடான ஆட்சிமுறை யிருந்து வந்தது அன்று. அங்ஙனமே உழுவித்துண்ணும் வேளாளர் செல்வர்; சென்று, அறந்தலைப் பிரியாமல் - நல்ல வழியில் - பொருளீட்டுவர். (அகத் -33)

நம் முன்னையோரின் நேர்மையே நேர்மை! இவ்வாறு நேர்மைக்கு உறைவிடமாய் இருந்த தமிழகந்தான் இன்று கைக்கூலிக்கும் கள்ளத்தனத்திற்கும் உறைவிடமாய் இருந்து வருகிறது. என்று தமிழ்நாடு தன் பழம்பெருமையை யடைந்து பழி துடைத்து வாழுமோ!

இனி, இவ்வாறு ஒழுக்க நூல்களிற் கூறியபடி பிரிவு நிகழ்த்துதல் பிறரை ஏவல் கொள்வோரான அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நால்வர்க்குமே உரியதாகும். அடியோர், வினைவலர், தமக்குரிய ரன்மையால் முறைப்படி பிரிவு நிகழ்த்தல் முடியாது. (அகத் -31).

***வாழ்க்கை*** ஏழை பணக்காரர் எல்லோர்க்கும் பொதுவானதால், இன்னார் இதற்குரியர் என வரையறுத்துக் கூறலாயினர்.

> **"இதனை யிதனான் இவன்முடிக்கு மென்றாய்ந்**
> **ததனை யவன்கண் விடல்."** (குறள்)

என்றதும் இக்கருத்துப் பற்றியே, செய்யுந் தகுதியறிந்து வினையாடல் தகுதியன்றோ?

அந்தணர் துறவிக ளாதலான், '***தலைவியைப் பிரிந்து செல்வதே பிரிவு***' என்னும் பிரிவிலக்கணம் அவர்க்குப் பொருந்தாது. நாற்பால் என்னும் ஒற்றுமை பற்றி இல்லறத்தாராகிய ஏனை மூவருடன் அந்தணர் உடன் கூறப்பட்டனர். ஓதல், தூது, முதலிய பிரிவுகள், அகத்திணைக்குப் பயன்பட்டுப் புறத்திணைக்கண் நிகழ்வதாகலின், அந்தணர் ஓதல் தூது முதலிய புறத்திணைச் செயல் நிகழ்த்தற் குரியரெனக்கொள்க. பிரிவில், தலைவியைப் பிரிதல் அகத்திணை; பிரிந்து சென்று செய்யுந் தொழில் புறத்திணை. பகைப் பிரிவின்

செயலாகிய போர் புறத்திணை யாதல் அறிக. மரபியலில் அரசர் முதலிய மூவருடன் அந்தணர் இலக்கணம் கூறியதும் புறத்திணைக்குப் பயன்படுதல் பற்றியேயாம். ***இட்டுப் பிரிவு, வரைவிடைப் பொருட்பிரிவு, பரத்தையிற் பிரிவு*** என்பன அந்தணர்க்கில்லை.

தமிழ்த் துறவியரான அந்தணரிற் சிலர் தவ வாழ்வு வாழ்ந்து வந்தனர். **"*நாலிரு வழக்கிற் றாபதற் பக்கமும்*"** (புறத் -20) எனக் காண்க. அவர்களல்லாத பொதுநலம் புரிந்து வந்த அந்தணர்களே ஈங்குக் கூறப்பட்டவர் என அறிக. சிறுபான்மை தாபதரும் உரியர்.

பொருட் பிரிவு - காலிற் பிரிவு, கலத்திற் பிரிவு என இருவகைப் படும். காலிற் பிரிவு - உள்நாட்டிற் பிரிதல். கலம் - கப்பல். கலத்திற் பிரிவு - கப்பலேறிக் கடல் கடந்து வெளிநாட்டில் பிரிதல். '***திரைகடல் ஓடியும் திரவியம் தேடு***' என்றது பெண்பாலான ஔவையாரே யெனினும், மனைவியைக் கூட்டிக் கொண்டு கடல் கடந்து வெளிநாட்டுக்குச் செல்லும் வழக்கம் பண்டில்லை. (அகத் - 34). இது, உலக வழக்கு, செய்யுள் வழக்கு இரண்டற்கும் பொது. இன்றும் தமிழ்த் தன வணிகரும் பிற வணிக மக்களும் வாணிகத்தின் பொருட்டு வெளிநாடுகளில் தங்க நேரிடினுங் கூட மனைவியை யழைத்துச் செல்லாமல் தனித்தே ஆங்கிருத்தல் இதனை நினைப்பூட்டும். கடல் கடந்து வெளி நாடுகட்கு மனைவியுடன் செல்லும் வழக்கம் இல்லையே யன்றி, உள் நாட்டில் மனைவியுடன் செல்லும் வழக்கம் உண்டு. கோவலன் கண்ணகியுடன் பொருளீட்டும் பொருட்டு மதுரைக்குச் சென்றது இதற்கு எடுத்துக் காட்டாகும்.

***அல்லி, மீனாட்சி, மங்கம்மாள், முத்துநாச்சி*** முதலிய எத்தனையோ தமிழ்ப் பெண்மணிகள் நாடு காத்தும், போர் புரிந்தும் புகழுடன் வாழ்ந்திருப்பதால், காவற்பிரிவும், பகைப் பிரிவும் பெண்களுக்கு விலக்கல்ல. இங்கு பிரிவு என்பது வீடு அல்லது ஊரைப் பிரிந்து செல்லுதல். அதியமானுக்காகத் தொண்டைமானிடம் ஔவையார் தூது சென்றிருப்பதால், தூதும் பெண்களுக்கு விலக்கன்று. ***ஔவையார், காக்கை பாடினியார், நப்பசலையார்*** முதலிய எத்தனையோ பெண் புலவர் பெருமக்கள் தமிழக மெங்கணுஞ் சுற்றிப் பொருளீட்டி வந்தது பொருட்பிரி வாகுமன்றோ? ஔவையார் முதலியோர் தமிழ்நாடு முழுதுஞ் சுற்றியது ஓதலின் பாற்படும். எனினும், பிரிவென்பதே தலைவியைப் பிரிந்து தலைவன் செல்லுதல் என்னும் அகத்திணை மரபுப்படி பெண்கள் தூது முதலியவற்றிற்குப் பிரிவதாகச் செய்யுள் செய்தல் இல்லை.

இப்பிரிவென்னும் பகுதியால் நம் முன்னையோர் தொழிற்றிறம் இனிது விளங்குகின்றது. பல்வகையான தொழில்களையும் ஓதல்

பகை, தூது, காவல் பொருள் என ஐவகைப் படுத்தி, அவற்றுள் இன்ன இன்ன தொழிலுக்கு உரியார் இன்ன இன்னாரெனப் பாகுபாடு செய்து, அவை ஒவ்வொன்றுக்குமுள்ள காலம் இவ்வள வெனக் காலவரையறை செய்து அத்தொழில்களை அகப்பொருளுக் குரிய சிறந்த உறுப்புக்களிலொன்றான பிரிவு என்பதில் அடக்கி, நூல் செய்து போற்றி வாழ்ந்து வந்த பெருமை நம் முன்னோர்க்கே யுரிய தனிப் பெருமையாகும். இஃதொன்றே நமது பழம்பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டுதற்கு ஏற்ற சான்றாகும்

பிற இன மக்கள் தமக்கென நிலையான தொழிலின்றி, நாகரிக மிலராய் நலிந்திருந்த அக்காலத்தே, இவ்வளவு நுண்ணிதான தொழிற் பாகுபாடு கண்டு, அதை அகவாழ்வின் ஒரு கூறாக்கி இனிது இன்புற்று வாழ்ந்து வந்த நம் முன்னையோரின் பெருமையை நினைக்க நினைக்க நம் உள்ளம் உவகையால் உப்பி உடைந்துவிடும் போல் இருக்கிறது. என்னே அன்னாரின் ஆன்றமைந்த அறிவுடைமை! இதைத்தான் வள்ளுவர், '**துண் மாண் நுழை புலம்**' என்றனர் போலும்!

மக்களிடை நிகழும் ஒரு நிகழ்ச்சி நூல்வழக் காவதற்கு, அதுவும் ஒரு முதன்மைப் பொருளின் உறுப்பாவதற்கு நீண்ட காலமாகு மன்றோ? ஆதலால், தொல்காப்பியருக்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்னரே இவ்வளவு நுட்பமான தொழிற் பாகு பாட்டைக் கண்டு சீரிய வாழ்வு வாழ்ந்து வந்த நம் முன்னையோரின் வாழ்க்கை முறையை, வரலாற்றுப் பெருமையை, நாகரிக நற்பண்பாட்டை இக்காலத் தமிழ் மக்கள் அறியாமலிருப்பது எவ்வளவு அறியாமை! தமிழ்ச் சிறுவர்க்குப் பள்ளிப்பாடமாக வைத்துப் படிக்கும்படி செய்யும் முதன்மைப் பொருளன்றோ இது? வாழ்க அத் தொழிற்றிறம்!

# 6. செய்யுள் வழக்கம்

மக்கள் வாழும் வாழ்க்கை முறை உலக வழக்கு, செய்யுள் வழக்கு என இருவகைப்படும். மக்கள் வாழ்க்கையில் இயல்பாகக் காணப்படும் ஒழுக்கம் - நடக்கை முறை - உலக வழக்கு எனப்படும். அவ்வுலக வழக்கில் - நடக்கை முறையில் - சிறந்தனவா யுள்ளவற்றை அறிஞர்கள் தேர்ந்தெடுத்து, பிற்கால மக்களின் உலக வழக்குத் திருத்தமுறச் செவ்வையாக நடைபெறுதற் பொருட்டுப் பாடல் களாகப் பாடிவைப்பர். அப்பாடல்கள் உலக வாழ்க்கை உயர்வு தோன்றப் பலபடப் புனைந்து செய்யப்படும். அப்பாடல்களாகிய 'நூல் வழக்கு', 'நாடக வழக்கு' எனப்படும். உலக வழக்கும் நாடக வழக்கும் சேர்ந்ததே அகப்பொருட் '**புலனெறி வழக்கம்**' அல்லது 'செய்யுள் வழக்கம்' ஆகும். எனவே, பழந்தமிழ் நூல்களெல்லாம் உலக வழக்கைத் தழுவிச் செய்ய பட்டவையே யாகும். வழிவழியாக வரும் தமிழர் வாழ்க்கை முறையினைப் பழந்தமிழ் நூல்களாற்றாம் அறிய முடியும். அவ்வறிவின்றேல் தமிழர் வாழ்க்கை முறையே மாறுபட்டுப் போய்விடும்.

ஆகவே, பழந்தமிழ் நூல்களை நன்கு கற்றுத் தமிழ் மரபு கெடாமல் நடந்து கொள்வது ஒவ்வொரு தமிழனுக்கும் நீங்காக் கடமையாகும். கல்லாத் தமிழ் மக்களுக்குப் பழந்தமிழ் நூற் கருத்துக்களை எடுத்துரைத்துத் தமிழர் வாழ்க்கை மரபைக் கெடாமல் கொண்டு செலுத்துதல் தமிழறிஞர்களின் இன்றியமையாக் கடமைகளி லொன்றாகும்.

பிறநாட்டு மக்களும், பிற இன மக்களும் தங்கள் பெயர் நாட்டிற் பரவ, மக்கள் நாவில் நடமாடவேண்டு மென்பதற்காக அரும்பாடு பட்டிருக்கிறார்கள். பழந்தமிழ் மக்களோ தங்கள் பெயர் பிறருக்குத் தெரியாமலிருக்க வேண்டுமென்பதற்காக அரும்பாடு பட்டிருக்கின்றனர். பெயர் தெரியாமலே பொது நலம் புரிவதில் தமிழர்கள் முதன்மையானவராவர். இவ்வுயரிய கொள்கையே சங்கப் புலவர் பலரின் பெயர் நமக்குத் தெரியாமற் போனதற்குக் காரணமாகும். பிற இன மக்களிலிருந்து தமிழ் மக்களைத் தனியாகப் பிரித்து ஒருபடி உயர்த்து வைக்கும் அரும் பெருங் குணமன்றோ இது?

இப்பெருங் குணத்தைக் கொண்டு அகப் பொருளின் பொதுத் தன்மையைப் புலப்படுத்தும் மதி நுட்பம் போற்றுதற் குரியதாகும்.

***இயற்பெயர் :*** *அகவொழுக்கம் தமிழ் மக்கள் எல்லோரிடத்தும் நிகழும் பொதுத்தன்மை யுடையதாகையால், அகப் பொருட் பாட்டுக்களில் ஒருவர் இயற்பெயரைச் சுட்டிப் பாடுதல் பொருந்தாது. எனவே, அகப்பாட்டுக்களில் செல்வர், எளியர், நிலமக்கள், தலைமக்கள், அடியோர், வினைவலர் முதலிய எல்லா மக்களையும் குறிக்கும் - எல்லார்க்கும் பொதுவான -* ***கிழவன், கிழத்தி*** *என்னும் திணைப் பெயர்களையும்,* ***வெற்பன், கொடிச்சி*** *என்னும் உரிப்பெயர்களையும் அமைத்துப் பாடலாமே யன்றிக்* ***காரி, பாரி, கண்ணகி, மாதவி*** *போன்ற ஒருவர் இயற் பெயர் சுட்டிப் பாடக்கூடாது.(அகத் -54).* ***கிழவன், வெற்பன்*** *என்பன அகத்திணைக்குரிய பொதுப் பெயர்கள். அவை ஒருவரைக் குறிக்கும் பெயரல்ல.*

*இதனால், நம் முன்னையோர், ஒருவனும், ஒருத்தியும் தாமாகவே எதிர்ப்பட்டுக் காதல் கொள்ளும் அகவாழ்வை எவ்வளவு உயர் வுடையதாகக் கருதிப் போற்றி வந்துள்ளனர் என்பது புலனாகும். இவ்வளவு உயர்வுடையதாக மதித்துப் போற்றப்பட்டு வந்த அகவொழுக்கம், பிற்காலத் தமிழ் மக்களின் ஏமாளித்தனத்தால் புறம்போக்குப் பொருளென ஒதுக்கித் தள்ளப்பட்டுவிட்டது.*

*இனி,* ***பாரி, காரி, ஔவை, வள்ளி*** *முதலிய இயற்பெயர்கள் புறத்திணைப் பாடல்களில் அமைத்துப் பாடலாம் (புறத் -32). அப் புறத்திணை கருப்பொருளாகவும், உவமமாகவும் அகத்திணைக்கண் வரும். அப்போது - அவ்வாறு வருமிடங்களில் - அப்புறத்திணைப் பகுதிகளில் - இயற்பெயர் சுட்டிக் கூறலாம். புறத்திணை கருப் பொருளாகவும், உவமமாகவும் கலவாது அகப்பொருள் தனித்துவரின்,* ***கிழவன், கிழத்தி, வெற்பன், கொடிச்சி*** *என்னும் உரிப்பெயர்களால் தாம் பாடவேண்டும்; இயற்பெயர் சுட்டிப் பாடக் கூடாது. (அகத் -55). எவ்வளவு வரையறை! இதனால், புறப்பொருளினும் அகப்பொருள் சிறந்தது; அகப்பொருளுக்குத் துணை செய்வதே புறப்பொருள் என்பது பெறப்படும். இத்தகு சிறப்புடைய அகப் பொருளா கொள்ளத் தகாதது!*

# 7. களவு

'அகப் பொருட் சுருக்கம்' என்னும் தலைப்பில், களவு, கற்பு என்பன இன்னவென்பதூஉம், அவற்றின் வகையும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இனி, களவின் இலக்கணம் - களவொழுக்கத்தின் வகையும், விரியும் - இன்னவென்று விளக்கமுறக் கூறுதும். அக் களவொழுக்கம்,

| | |
|---|---|
| 1. இயற்கைப் புணர்ச்சி | 3. பாங்கற் கூட்டம் |
| 2. இடந்தலைப்பாடு | 4. தோழியிற் கூட்டம் |

என நான்கு வகைப்படும் (செய் -186). இயற்கைப்புணர்ச்சி - கூட்டுவாரின்றித் தாமாகவே இயல்பாகக் கூடுதல். தலைப்பாடு - தலைப்படுதல் - கூடுதல்.

## 1. இயற்கைப் புணர்ச்சி

இயற்கைப் புணர்ச்சியாவது - ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டு, ஒருவரையொருவர் காதலிப்பது. புணர்தல் - கூடுதல் - எதிர்ப்படுதல். இது, **ஆரிய மணம் எட்டனுள் ஒன்றான கந்தருவ மணம் போன்றது.** அதாவது கந்தருவ மணத்தை ஒருபுடை ஒப்புமை யுடையது என்கின்றார் ஆசிரியர்.

கந்தருவ மணம் என்பது, இயற்கைப் புணர்ச்சி போலவே, ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் கூடிப் பிரிவது; பின்னர் அவ்விருவரும் ஒன்று கூடுவதில்லை; அதாவது, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் முதலியவற்றில் எதிர்ப்பட்டுக் காதல் முதிர்ந்து மணம் செய்து கொள்வதில்லை; கண்டவர் கண்டவிடத்துக் கூடிப் பிரிந்து செல்வர். ஆனால், தமிழ் மக்கள் இயற்கைப் புணர்சிக்குப் பின் களவொழுக்கம் ஒழுகி மணஞ் செய்து கொண்டு வாழ்க்கை நடத்துவர். இயற்கைப் புணர்ச்சியில் உள்ளப் புணர்ச்சி மட்டும் நிகழும். உள்ளப் புணர்ச்சி - மனத்தால் ஒருவரையொருவர் காதலித்து அன்பு கொள்ளுதல், மனவொருமையடைதல். கந்தருவமோ மெய்யுற்றுப் புணர்வதாகும். இயற்கைப் புணர்ச்சி களவொழுக் கத்தின் முதற்படி. கந்தருவம் முதலும் முடிவும் அதுவே. இயற்கைப் புணர்ச்சி ஒழுக்கம். கந்தருவம் மணம். எனினும், இயற்கைப் புணர்ச்சியும், கந்தருவமும் ஒருவனும்

ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுப் பிரிதல் என்னும் ஒருகூறொத்தலான், அவ்விரண்டும் ஒரு புடை ஒப்புமையுடைய வென்பதாம்.

**“இன்பமும் பொருளும் அறனு மென்றாங்**
**கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டம் காணுங் காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்லயாழ்த் துணைமையோ ரியல்பே.”** **(கள-1)**

இன்பமும், பொருளும், அறனும், என்றாங்கு - இன்பமும் பொருளும் அறனும் என்ற இம்மூவகைப் பொருள்களுள், அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் - இன்பத்தின் பாலவாகிய புணர்தல் முதலிய ஐவகை ஒழுக்கத்தினுள், காமக் கூட்டம் காணும் காலை - இயற்கைப் புணர்ச்சியை ஆராயுங் காலத்து, மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள் - ஆரியரிடத்து நிகழும் எண்வகை மணங்களுள் ஒன்றாகிய, துறை அமை நல்யாழ் துணைமையோர் இயல்பே - கந்தருவர் ஒழுக்கத்தைப் போன்றதே.

காமக்கூட்டம் - இயற்கைப் புணர்ச்சி. மறையோர் - ஆரியர். ‘வேதியர்’ என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பு. தேயத்து - இடத்து. மன்றல் - மணம். துறை அமை நல்யாழ் - பண்ணமைந்த நல்ல யாழ். யாழோர் -கந்தருவர். இவர் இசையில் வல்லதொரு தேவ சாதி என்பர். துணைமையோர் - ஒருவனும் ஒருத்தியும். இயல்பு - ஒழுக்கம்.

ஆசிரியர் தொல்காப்பியர் நூல் செய்த காலத்தே தமிழ் மக்கள் ஆரியர் பழக்க வழக்கங்கள் சிலவற்றைத் தெரிந்திருந்தனர். எனவே, இயற்கைப் புணர்ச்சியோ டொருபுடை யொப்புமையுடைய கந்தருவ மணத்தை, இயற்கைப் புணர்ச்சிக்கு உவமையாக எடுத்துக் காட்டினார் ஆசிரியர்.

உரையாசிரியர்கள், ‘காமக் கூட்டம்’ என்பதைக் களவொழுக்கம் எனக் கொண்டு, ‘களவொழுக்கம் கந்தருவர் ஒழுக்கம் போன்றது’ எனப் பிழைபடக் கூறினர். கந்தருவம் ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் கூடிப்பிரிவது. களவொழுக்கம் பாங்கன் தோழி முதலியோரால் கூட்டக் கூடுவது. எனவே, அவ்வுரை பெருந்தாது.

மேலும், கந்தருவம் போன்றது இயற்கைப் புணர்ச்சி என முழுதுஞ் சேறலாக ஒப்பிட்டுக் கூறினாருமல்லர் ஆசிரியர். அங்ஙனம் கூறின், கந்தருவம் ஒருகா லெதிர்ப்பாடுடையதே. இயற்கைப் புணர்ச்சி, பலகால் எதிர்ப்பட்டுக் கூடி வாழ்தலின் கால்கோளாகும். அது மணம்; இது ஒழுக்கம். எனவே, உவமை வழுவாம்.

### ஆரிய மணம் எட்டாவன:

பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், கந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன.

**1. பிரமம்**

ஒத்த கோத்திரத்தனாய், 48 யாண்டு பிரமசரியங் காத்தானுக்கு, 12 யாண்டுப் பருவமுள்ள பூப்பெய்தியாளை, இரண்டாம் பூப் பெய்து முன்னர் அணிகலனணிந்து கொடையாகக் கொடுப்பது. பிரமசரியம் - மணமின்றிக் கற்கும் நிலை.

**2. பிரசாபத்தியம்**

மணமகன் பெற்றோர் கொடுத்த பரிசத்தைப்போல் இரு மடங்கு கொடுத்துப் பெண்ணைக்கொடுப்பது. இன்று தமிழ் வகுப்பினரிடை நடைபெறும் திருமணங்கள் இப் பிரசாபத்தியத்தின் இனமேயாகும். பரிசம் - பரியம். மாப்பிள்ளை வீட்டாரிடம் பரியம் வாங்குதலும், பெண்ணுக்குச் சீர் கொடுத்தலும் இன்று எல்லாத் தமிழ் வகுப்பாரிடையும் நடைபெறுகின்றன.

**3. ஆரிடம்**

ஆண் பெண் மாடுகளிரண்டின் கொம்புகளுக்கும் குளம்பு களுக்கும் பொற்பூ ணணிந்து, அவற்றின் நடுவில் மணமக்களை நிறுத்திப் பொன் பூட்டி, '***நீவிரும் இவைபோல் பொலிந்து வாழ்வீராக***' என நீர்வார்த்துப் பெண்ணைக் கொடுப்பது.

**4. தெய்வம்**

வேள்வி வேட்பிக்கும் ஆசிரியனுக்கு, வேள்வித்தீ முன்னர்ப் பெண்ணைக் காணிக்கையாகக் கொடுப்பது. இவை நான்கும் ஆரியப் பிராமணர்க்கே உரியவாம். அசுரமும், இரக்கதமும் பெரும்பாலும் அரசர்க்கே உரியன. பைசாசம் சூத்திரர்க்குரியதாம். கந்தருவம் எல்லார்க்கும் பொது.

**5. கந்தருவம்**

ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்ட இடத்தில் கூடிப்பிரிவது. பராசரர் மச்சகந்தியைக் கூடிப் பிரிந்ததும், துஷ்யந்தன் சகுந்தலையைக் கூடிப் பிரிந்ததும் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

**6. அசுரம்**

1. கொல்லேறு கோடல், 2. வில்லேற்றுதல், 3. திரிபன்றி எய்தல் போன்றன செய்து பெண் கொள்ளல்.

1. இது வலியகாளை யொன்றை அடக்குதல். நப்பின்னை என்பவள் வளர்த்த முரட்டுக் காளையை அடக்கிக் கண்ணன் அவளை மணந்தனன் என்கின்றது பாகவதம். முல்லைக்கலியில்

வரும், '**ஏறுதழுவல்**' என்பது அயற் கொள்கைத் தழுவலேயாம். மேலும், ஏறுதழுவல் ஒருதலைக் காமமாகிய கைக்கிளை யாதலால், அது தள்ளத் தக்கதே யன்றிக் கொள்ளத் தக்க தன்று. 2. தசரத ராமன் சீதையையும், அர்ச்சுனன் துரோபதையையும் வில்லேற்றி மணந்தனர். 3. மூன்று பன்றிகளை ஒரே அம்பால் எய்தல். காட்டுப் பன்றியைக் கொன்று கொடுத்து மணக்கும் வழக்கம் இன்றும் அஃச்சாமியரிடையுள்ளதாம். அர்ச்சுனன் மீன்பொறி வீழ்த்தியது திரிபன்றி எய்தலோ டொக்கும்.

## 7. இராக்கதம்

பெண் விரும்பாமலும், பெற்றோர் கொடாமலும் வலிதிற் கொள்வது. வீடுமன் அம்பை முதலிய பெண்களை வலிதிற் கொண்டு வந்து தன் தம்பியர்க்கு மணமுடித்தது இதன் பாற்படும்.

## 8. பைசாசம்

1. மூத்தாளையும், 2. கள்ளுண்டு களித்தாளையும், 3. துயின் றாளையும் புணர்தலும், 4. இழிந்தாளை மணத்தலும், 5.ஆடை மாற்றுதலும் ஆம்.

1. இராமனைவிடச் சீதை மூத்தவள் என்ப. 2. பைரவி சக்ர பூசனையில் கள்ளுண்டு மயங்கினவளைப் புணர்தல் உண்டு. 3. அர்ச்சுனன் துயின்ற அல்லியைப் புணர்ந்ததாகக் கதை. 4. ஆரியப் பிராமணர் மற்ற மூன்று குலப் பெண்களை மணந்தது இழிந்தாள் மணமாகும. 5. ஒருத்திக்குப் புத்தாடை கொடுத்துக் கூடுதல். இவற்றில் ஒன்றும் தமிழர்க் கேலாமை யறிக. இவை எதிலுமே ஒத்த அன்பிருப் பதாகத் தெரியவில்லை.

## தலைவனும் தலைவியும்

இனி, களவொழுக்கம் ஒழுகும் ஒருவனும் ஒருத்தியும் ஒப்புயர் வில்லா உயர்மக்க ளாவர். அவர்கள் இருவர்க்கும்,

**"பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ**
**டுருவு நிறுத்த காம வாயில்**
**நிறையே அருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே."** **(மெய் -25)**

என்ற பத்தும் ஒத்திருக்க வேண்டும். அப்போதுதான் இருவர்க்கும் காதலன்பு தோன்றும்.

பிறப்பு - நற்குடிப் பிறப்பு; அதாவது, வழிவழியாக நல்லொழுக்க முள்ள குடியில் பிறத்தல். குடிமை - ஒழுக்கம். ஆண்மை - தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஒன்றை ஆளும் ஒருவகை முதன்மைத் தன்மை.

இது ஆண் பெண் இருபாற்கும் உண்டு. ஆண்டு - பருவம். தலைவியை விடத் தலைவன் நாலைந் தாண்டு மூத்திருத்தல் ஒத்த பருவமாகும். பெண்ணுக்கு இருபதுக்கு மேலும், ஆணுக்கு இருபத்தைந்துக்கு மேலும் இருத்தல் நலம். '***உருவு நிறுத்த காம வாயில்***' என்பது - வடிவழகும், அன்பும். அதாவது, பெண்மை வடிவும் ஆண்மை வடிவும் நன்கு அமைந்த வழி - இருவரும் வடிவழகுடைய ராய விடத்து - அவற்றின்கண் நிகழும் இன்பத்திற்கு அன்பு வாயில் போறலின், அன்பு - காமவாயில் எனப்பட்டது. காமம் - இன்பம். உருவின்கண் உள்ள இன்பத்திற்கு வாயில் போன்ற அன்பு. அன்பின் வழியே வடிவழகின் இன்பம் நுகரப்படுதலை அறிக. வடிவழகின்மேற் கொள்ளும் அன்பே அவ்வடிவை விரும்புதற்குக் காரணமாகும். அன்பு உருவு பற்றி யல்லது தோன்றாமையின், உருவும் அதன்கட் டோன்றும் அன்பும் என இரண்டாகக் கொள்ளப்பட்டன. இது ஆசிரியரின் சொல்லாட்சித் திறத்தைக் குறிக்கும். நிறை - அடக்கம். உணர்வு - அறிவு. திரு - செல்வம். இருவரும் எதிர்ப்பட்டதும் இப்பத்துப் பொருத்தமும் இருவராலும் ஒத்துப் பார்க்கப்படும். தலைமகனின் பிறப்பு முதலியன தன் பிறப்பு முதலியவற்றோடு ஒத்ததாயின் தலைமகட்குக் காமக் குறிப்புத் தோன்றும்.

ஒருவனும் ஒருத்தியும் என்றும் இணைபிரியாமல் ஒரு மனப்பட்டு இனிது இன்புற்று வாழ்வதற்கு இப்பத்துமே ஏற்ற பொருத்தமாதலை யறிக. மணமக்களுக்கு யாதொரு தொடர்பும் இல்லாத இன்று பார்க்கும் நாட்பொருத்த முதலிய பத்தும் பேருக்கு பொருத்தமே யன்றி, மணமக்களின் உள்ளத்தை ஒன்று படுத்தும் காதற் பொருத்தம் ஆகா. பிறப்பு முதலிய பத்துப் பொருத்தமும் ஒத்துள்ள ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்படவேண்டும் என்பதே, அத்தகைய பொருத்த முடைய இருவர் கூடி இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்பதே, எல்லாத் தமிழ்க் குடும்பங்களும் அவ்வாறு அமைய வேண்டும் என்பதே பழந்தமிழ்ப் பெரியார்களின் பேராவல். அவ்வாவலின் பிழம்புதான் செய்யுள் வழக்கம்.

இஃதோடு அக்காதலர்களை விடவில்லை நம் பழந்தமிழ்ச் சான்றோர்கள். உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி எனப் புணர்ச்சி இருவகைப்படும். களவொழுக்கத்திற்கு மெய்யுறு புணர்ச் சியினும் உள்ளப் புணர்ச்சியே சிறந்ததாகும். அஃதே இருவரன் பையும் விரைவில் வளர்த்து ஒருமையாக்க வல்லது. மெய்யுறு புணர்ச்சியின்றி உள்ளப் புணர்ச்சியே நிகழ்த்தி, அதாவது, உளங்கலந்த காதலன்பு முதிர்ந்து மணஞ் செய்து கொள்ள வேண்டுமானால் அதற்குத் தகுந்த மனவாற்றல் அவர்கட்கு வேண்டும். ஆம், அப்பேர்ப் பட்டவர்களையேதாம் தலைமக்களாகத் தேர்ந்தெடுத்துள்ளனர் நம் முன்னையோர். தலைவற்கு நிறைந்த ஆண்டன்மையும் தலைவிக்கு

நிறைந்த பெண்டன்மையும் அமைந்திருக்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் காதல் வாழ்க்கைக்குத் தகுதியுடையவராவர்.

## தலைவன்

தலைவன் பெருமையும் வலியும் உடையவனாக இருக்க வேண்டும். அவைதாம் அவன் ஆண்டன்மை.

**"பெருமையும் உரனும்ஆடூஉ மேன."** **(கள-7)**

என்பது சூத்திரம்.

பெருமையாவது - அறிவு ஆற்றல் ஆராய்ச்சி கொடைபுகழ் பண்பு பழிபாவங்களுக் கஞ்சுதல் முதலிய வற்றில் மேம்படுதல். உரம் - வலி. வலியாவது - கடைப்பிடி அடக்கம் மேற்கொண்டதை விடாமற் செய்து முடிக்கும் இயல்பு. இத்தகு பெருமையாலும் வலியாலும் அவன் மேம்பட்டிருக்க வேண்டும். அதாவது, நிறைந்த பெருமையும் வலியும் உடைய தலைவனே களவொழுக்கம் ஒழுகத் தகுதி யுடையவனாவான்.

## தலைவி

***நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு*** என்னும் நாற்குணங் களையும் உடையவளாக இருத்தல் வேண்டும் தலைவி (கள.8). இந்நாற்குணங் களினும் மேம்படுதலே பெண்டன்மை யாகும். '***நாற்குணமும் நாற்படையா***' என்றார் புகழேந்தியார்.

நாணம் - காமக்குறிப்புத் தோன்றியபோது உண்டாகும் வெட்கம். மடம் - கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. அதாவது, சொல்வதை உடனே தெரிந்து அதை வெளிக்குக் காட்டாமல் இருக்கும் குணம். அச்சம் - அன்பு காரணமாகத் தோன்றும் அச்சம். அதாவது, தலைவனிடம் தான் கொள்ளும் அன்பை யாராவது கண்டுகொள்வார்களா என அஞ்சுதல். இதற்கு முன் நடவாத புதுவழியாதலால் தலைவி அஞ்சுவது இயல்பு. பயிர்ப்பு - புதிதாக ஒன்றைக் கண்டவிடத்து மனங்கொள்ளாமை; அதை ஏற்றுக்கொள்ளத் துணியாமை. இன்னும், காமவேட்கையாற் செய்யத்தகுவன அறியாத பேதைமை என்னும் குணம் ஒன்றுண்டு. அது நாணில் அடங்கும். இப்பெண்மைக் குணங்கள் நான்கும் களவொழுக்க மொழுகும் தலைவிக்குரிய குணங்களாகும். அதாவது, பருவமுற்ற பெண்ணுக்கமையும் குணங்களாகும்.

இத்தகைய ஆண்டன்மையும் - பெண்டன்மையும் உடைய தலைவனும் தலைவியுமே தங்கள் காதற் குதிரைகளைச் சரியானபடி செலுத்தி, களவு என்னும் அரிய வழியைக் கடந்து, கற்பு என்னும் நல்லிடத்தை இனிதின் அடையத் தகுதியுடையவராவர்.

## எதிர்ப்பாடு

*தலைவனும் தலைவியும் முதன் முதல் ஒருவரை யொருவர் காணும், கண்டு காதல் கொள்ளும் இயற்கைப் புணர்ச்சி - எதிர்ப்பாடு எனப்படும். அவ்வெதிர்ப்பாடு அல்லது இயற்கைப் புணர்ச்சி - **காட்சி, ஐயம், தெளிதல், தேறல்** என நான்கு வகைப்படும்*

## 1.காட்சியாவது,

*குறைவின்றி நிறைந்த ஆண்டன்மையும், பெண்டன்மையும் தூண்டுதலினால், ஒப்புயர் வில்லாத் தலைவனும், தலைவியும் ஒருவரை யொருவர் காணுதல்.*

**"ஒன்றி யுயர்ந்த பால தாணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப."** (களவு-2)

*என்கின்றார் ஆசிரியர்.*

*அதாவது, குறைவின்றி அமைந்துயர்ந்த ஆண் பெண்பாற் கூற்றின் கட்டளையினால், பிறப்பு முதலிய பத்தும் (மெய் -25) ஒத்த தலைவனும் தலைவியும் காண்பர். இருவரும் காண்பாராயினும், தலைவன் தலைவியைக் காணுத லென்பதே புலனெறி வழக்கம். தலைவன் சற்று ஆண்டில் மூத்தவனாயினும் குற்றமில்லை.*

*இனி, தலைவனும் தலைவியும் ஓரிடத்தினராகவோ, வெவ்வே றிடத்தின ராகவோ இருந்து, முல்லை முதலிய எந்த நிலத்தில் காணினும், குறிஞ்சி நிலத்தில் கண்டனர் என்பதே புலனெறி வழக்கமாகும்.*

## 2. ஐயமாவது,

*எவ்விடத்தினளோ, யார் மகளோ, பருவமுற்றனளோ, நம்மீது காதலுள்ளனளோ, இன்று ஒருவாறு இசையினும் நாளையும் இங்கு வருவாளோ எனத் தலைவன் ஐயுறுதல்.*

*தலைவன் கண்ட தலைவி, காமப் பருவம் அடையாதிருந்தால், தலைவன் குறிப்புக்கு எதிர்க்குறிப்பு நிகழ்த்தாளாகையால், அது ஒருதலைக்காமமாகிய கைக்கிளைக் குறிப்பின் பாற்படும் (அகத் - 50). அதனால், தலைவன் கொண்ட ஐயத்தினால் யாதொரு பயனும் இல்லை. எனவே, தலைமகள் காமப் பருவத்தளாகிய காலையே தலைவன் குறிப்புக்கு எதிர்க்குறிப்பு நிகழ்த்துவா ளாகையால், தலைவன் மாட்டு நிகழும் ஐயம் சிறந்து தோன்றும் (கள-3).*

## 3. தெளிதலாவாவது,

*ஐயுற்ற தலைவன், பழகிய இடத்திலல்லது வண்டு செல்லா தென்பதை அறிவானாதலால், தலைவியின் கூந்தலிற் சூடியுள்ள பூவில்*

வண்டுகள் மொய்ப்பதால் பக்கத்தாள் எனவும், நிறையப் பொன்னணி யணிந்திருப்பதால் செல்வக் குடியினள் எனவும், தோளில் எழுதியுள்ள குங்கும சந்தனக் கோலத்தால் காமப் பருவ முற்றனள் எனவும், கையிலுள்ள பூவைக் கண்ணுக்கு ஒப்பிடுதல், கண்கள் காமப்பார்வை பார்த்தல், காமக்குறிப்பால் உண்டான உடல் நடுக்கம், தானோக்குங்கால் நிலநோக்குதல், தன்னையொத்த ஆண்மகனைத் தனியிடத்தில் கண்டதனா லுண்டாகிய அச்சம் ஆகிய இவற்றால் தன் மீது காதல் உள்ளனள் எனவும் தெளிவான். இதனை,

> **“வண்டே இழையே வள்ளி பூவே**
> **கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்**
> **றன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ**
> **நின்றவை களையுங் கருவி யென்ப.”** **(கள-4)**

என்பர் ஆசிரியர்.

வண்டு முதலிய எட்டும் தெளிதற் கருவிகளாகும். இழை - நகை. வள்ளி - தோட்கோலம். அலமரல் - நடுங்குதல். ஆங்கு அவண் - எதிர்ப்பட்ட இடத்தில். நிகழநின்றவை - ஐயம்., பலவாறு ஐயுற்றதால், ‘நின்றவை’ எனப் பன்மை கூறினார். தகுந்த ஆராய்ச்சி யன்றோ?

## 4. தேறலாவது,

அவ்வாறு தெளிந்த தலைவன், அவளிடம் தன் காதலை யுணர்த்தத் துணிந்து, தன் கண்களால் தன் காதற் குறிப்பை யுணர்த்துவான். அவ்வாறே தலைவியும் தன் குறிப்பை யுணர்த்துவாள். பெண்டன் மையில் நிறைந்துள்ள தலைவி, வெளிப்படையாகத் தன் குறிப்பை யுணர்த்தாள்; தலைவன் குறித்துணரும்படி குறிப்பாக உணர்த்துவாள். தெளிதல் - உண்மையுணர்தல். தேறல் - உணர்ந்ததில் உறுதி கொள்ளுதல்.

இவை நான்கும் பெரும்பாலும் தலைவன் மாட்டே நிகழ்தலின் ஒருதலைக் காமமாகிய கைக்கிளையின் பாற்படும் (அக-52). ஆனால், இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் இருவரும் எதிர்ப்பட்டுக் களவொழுக்கம் ஒழுகுதலான் அக்கைக்கிளைக் குறிப்புக்கள் போல் (அகத்-50) இவை நான்கும் தள்ளத் தக்கவை யல்ல.

பருவமுற்ற ஒருவனும் ஒருத்தியும் புதிதாகத் தனியிடத்தில் எதிர்ப்பட்டபோது, தலைவி பெருநாணின ளாகலின் தான் தலைவனைப் பார்க்க நாணி, அவன் தன்னைப் பார்க்க வேண்டுமென விரும்புவாள். இதனை,

> **“நானோக்கும் காலை நிலனோக்கும் நோக்காக்கால்**
> **தானோக்கி மெல்ல நகும்.”** **(குறள்)**

என்றான் தலைவன்,

*அவ்வாறே தலைவன் பார்த்தபோது, அச்சத்தினாலும் நாணத்தினாலும் தலைவிக்கு நெற்றி வியர்க்கும்; அது கண்ட தலைவன், தன்னை யவள் விரும்புகிறாள் என்பதை யுணர்ந்து, அருகிற்சென்று நன்கு நோக்குவான். அதனால், தலைவிக்கு நகை தோன்றும்; தோன்றினும், நகையாது அடக்கினவிடத்தும் மனமுடைதலால் மெய்வேறுபாடு தோன்றும். அவ் வேறுபாட்டைத் தலைவன் அறியாதபடி தலைவி மறுபக்கந் திரும்பிக் கொள்வாள். இவை நான்கும் **மடமை** என்னும் பெண்மைக் குணத்தால் நிகழ்வன.*

*இருவரும் புதிதாக எதிர்ப்பட்டதும் தலைவியின் உள்ள உணர்ச்சியால் தோன்றும் இம் மெய்ப்பாட்டுக்குறிப்பு நான்கையும்,*

**"புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்,**
**நகுநய மறைத்தல், சிதைவுபிறர்க் கின்மை"** **(மெ-13)**

*என, ஆசிரியர் மிக அழகாகக் கூறுகின்றார். மெய்ப்பாட்டியல் பழந்தமிழ் மக்களின் **உளநூல்** அறிவின் நுட்பத்தைக் காட்டுவதொன்றாகும்.*

*தலைவிபால், '**புகுமுகம் புரிதல்**' முதலிய மெய்ப்பாடுகள் நான்கும் நிகழக்கண்ட தலைவன், தலைவியின் உள்ளக்குறிப்பையறிய வேண்டி, தலைவியின் கூந்தல் மலரில் ஒட்டும் வண்டுகளை ஓட்டுவான் போலத் தலைவியின் தோளைத் தொடுவான். தலைவன் தொடுதலைத் தலைவி ஏற்றுக் கொள்வாளாயின், தலைவியின் கூந்தலையும் நெற்றியையும் நீவி, '**கூந்தல் கலைந்தது ஒதுக்கிவிடுகிறேன்; நெற்றி வியர்த்தது துடைத்துவிடுகிறேன்**' எனப் பொய்யை மெய்யாகக் கூறுவான்.*

*இவ்வாறு தலைவன் மெய்யைத் தொடவும் **பயிர்ப்பு** என்னும் பெண்மைக் குணத்தினால், தலைவியின் உடல் முழுதும் மெலிவுறும். அதனால், மயிர்முடி தானாகவே அவிழ்ந்துவிடும். உள்ள நெகிழ்ச்சியால் உடல் நெகிழுமாகையால் காதில் அணியப்பட்டுள்ள தோடு கழன்று விடும். வளையலும் மோதிரமும் கழலும். தலைவி அவற்றை மேலே தள்ளுவாள்; உடையினை அடிக்கடி அவிழ்த்தவிழ்த் துடுத்துவாள். அது உடுத்த உடுத்த அவிழ்ந்துவிடும். இங்ஙனம் தலைவி தன் உள உடல் மெலிவால் தன் அணியாடைகளுடன் போராடிக் கொண்டிருப்பாள். இந் நான்கு மெய்ப்பாடுகளையும் ஆசிரியர்,*

**"கூழை விரித்தல், காதொன்று களைதல்,**
**ஊழணி தைவரல், உடைபெயர்த் துடுத்தல்."** **(மெய் -14)**

*என்பர். கூழை - மயிர். ஊழ் - முறை. தைவரல் - மேலே தள்ளுதல்.*

*தலைவி இவ்வாறு தன் அணி யாடைகளுடன் மல்லுக் கட்டிக் கொண்டே தலைவனைப் பார்ப்பாள். அவன் நின்பார்வை என்னை*

வருத்துகின்றது என்பான். அதனால், அவள் கண்களை மூடிக் கொண்டும், செடிமறைவிற் போய் நின்று கொண்டும் தலைவனைப் பாராமல், தலைவன் பார்க்கமுடியாமல் இடையூறு செய்வாள். அது கண்ட தலைவன் தன் ஆன்றமைந்த அறிவுத்திறனால் தலைவிக்கு இரக்கந் தோன்றும் படி செய்வான். தலைவி நாண் நீங்கி ஒருவாறு இசைவாள்.

அதனால், தலைவியின் உடை இடுப்பில் நில்லாமல் அவிழத் தொடங்கும். அதனால் தலைவி அரையின் கீழ்ப்பக்கத்தைத் விடவிக்கொண்டே அரைஞாண், தோளாடை, மேலாடை முதலிய வற்றைத் திருத்துவான்; பின் மனத்தால் ஒருவாறிசைந்தும் நீங்கா நாணத்தினால் வெளிக்கு இசையாள் போல் காட்டுவாள்; அங்ஙனம் செய்தும் அடக்கமுடியாததால் தன்னை யறியாமல் இரு கைகளையும் தூக்குவாள். இதனை,

> **“அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல்,**
> **இல்வலி யுறுத்தல், இருகையு மெடுத்தல்”** (மெய் -15)

என்பர். இம் மெய்ப்பாட்டுக் குறிப்புக்கள் நான்கும் ***நாணம், அச்சம்*** என்னும் பெண்மைக் குணங்களால் நிகழ்வன.

***அல்குல்*** - தொடைக்கு மேலும், இடைக்குக் கீழுமுள்ள பாகம். (கலி-85:3 உரைபார்க்க). அதன் மேற்பகுதி சுருங்குதலின் - சிறுத்தலின் - ‘அல்குல்’ எனப்பட்டது. அல்குதல் - சுருங்குதல். தொடைக்கும் இடைக்கும் நடுவிலுள்ள பகுதியின் பின்பக்கமே - முதுகுக்குக்கீழ் - அல்குல் எனப்படும். பெண்களின் அப் பின்பக்கமே ஆண்களின் கண்ணையும் கருத்தையும் கவரும் இயல்பினதாகும். அல்குலுக்குத் தேர்த்தட்டையும், பாம்பின் படத்தையும் உவமை கூறுவர் புலவர் பெருமக்கள். தேர்த்தட்டும் பாம்பின் படமும் அப் பின்பக்கத்திற்கே உவமையாதலை இரண்டையும் ஒப்பிட்டறிக. அல்குல் - பெண்குறி என்றது பிற்கால வழக்கு. இது அறியாமையால் நேர்ந்த தவறாகும். பெண்குறி காணற்கரிய மறைவிடத்துள்ளதால் கண்ணைக்கவர்தல் எங்ஙனங் கூடும்? அதை அங்ஙனம் புலவர் பெருமக்கள் உவமித்துக் கூறார். ‘***பணைத்தேந் தகலல்குல்.***’ பணைத்து ஏந்து அகல் அல்குல் - பெருத்து உயர்ந்து அகன்ற அல்குல். உயர்தல் - பின்பக்கம் உயர்ந் திருத்தல். அரசிலை போன்ற வடிவுள்ள அல்குல், வடிவத்தில் பாம்பின் படத்தையும், பணைத்தேந்தகறலில் தேர்த்தட்டையும் ஒக்கும். தைவருதல் - தடவுதல். உடை உளதோ நழுவி விட்டதோ என்று தடவலானாள்.

அணிந்தவை திருத்தல் - ‘***கடிசூத்திரம் முதலியன திருத்தல்***’ (மெய் -150பேரா). சூத்திரம் - கயிறு. கடி - காப்பு - காவல். உடைக்குக் காப்பு. கடிசூத்திரம் - அரைஞாண். இதனால், அக்கால் பெண்டிரும் அரைஞாண் அணிந்திருந்தமை பெறப்படும்.

*அதன்பின் தலைவி இசைய, இருவரும் காதலொருமை பட்டுக் காதலராவர். இத்துடன் அன்றைய. எதிர்ப்பாடு முடிவுறும். பின்னர்த் தலைவன், '**இனி என்றும் உன்னைப் பிரியேன்**' என்று உறுதி கூறித் தலைவியைப் பிரிந்துசெல்வான். இவ்வளவும் இயற்கைப் புணர்ச்சியாகும். எப்படிக் காதலர் எதிர்ப்பாடு! வாழ்க நம் காதலர் காதல்!*

*உலக மொழிகளிற் பல, எழுத்து, இலக்கியம், இலக்கணம், என்றால் இன்னவென்றே அறியாதிருந்த அக்காலத்தே, உலக மக்களிற் பல இனத்தார்க்கு வாழ்க்கை என்றால் என்ன? அதை எப்படி நடத்தவேண்டும்? அவ் வாழ்க்கைத்தேரின் இடம் பூணி, வலம் பூணிகளான ஆணும், பெண்ணும் எத்தகைய தகுதியுடையராய் இருக்கவேண்டும்? அவர்கள் வாழ்க்கையை எவ்வாறு தொடங்க வேண்டும்? எனக் கனவு கூடக் கண்டிராத அக்காலத்தே, இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, வாழ்க்கைத் தொடக்கத்தை இவ்வளவு நுட்பமாக ஆராய்ந்து வகைசெய்து, அதற்கு இலக்கியமும், இலக்கணமும் செய்து போற்றி வாழ்ந்து வந்த பழந்தமிழர்களின் வழிவந்தோர் தாமா இன்றுள்ள தமிழ் மக்கள்? தமிழா! பொய் சொல்லாதே; நெஞ்சில் கையை வைத்து நினைத்துப் பார்த்து உண்மையாகச் சொல்; நீ அப்பழந்தமிழர் வழி வந்தவன்தானா? பின் ஏன் நீ இந்நிலையை அடைந்தனை? நன்கு எண்ணிப்பார்! என்னே பழந்தமிழர் பண்பாடு! பகுத்தறிவின் பரப்பு!*

## 2. இடந்தலைப்பாடு

*முதனாட்போலவே மறுநாளும் தலைவன் அங்கு சென்று அதே இடத்தில் தலைவியை எதிர்ப்படுவான். முதனாட்போலவே '**மெய்தொடல்**' முதலியன செய்து தலைவியின் உடன்பாட்டைப் பெறுவான். ஒருநாளில், ஒருமுறையில் நாணம் நீங்காமையே இதற்குக் காரணமாகும். இன்று தலைவன் பிரியும்போது, பிரிவஞ்சிய தலைவியை, '**நான் இருக்குமிடம் பக்கத்தேதான் உள்ளது; உன்னைப் பிரியேன், பிரியின் ஆற்றேன்**' எனத் தேற்றிப் பிரிவான். அவ்வாறு பிரியும் போது முன்னாட்போலன்றி, தலைவிக்குப் பூச்சூட்டி, தோழிகளுடன் விளையாடுகென விட்டு, தலைவி சென்று தோழியரைக் கூடுமளவும் பார்த்துவிட்டுச் செல்வான். தலைப்பாடு - தலைப்படுதல் - கூடுதல். இடம் தலைப்பாடு - அதே இடத்தில் மறுநாளும் இருவரும் எதிர்ப்படுதல். இஃது, இரண்டொருநாட் கழித்து நடக்கினும் மறுநாளே நடப்பதாகக் கூறுதல் புலனெறி வழக்கம்.*

## 3. பாங்கற் கூட்டம்

*தலைவன் இவ்வாறு தலைவியை எதிர்ப்பட்டு வரும்போது தலைவனது நடத்தையில் ஐயங்கொண்ட பாங்கன், தலைவனை*

வினாவி நடந்ததை அறிவான். அதன்பின் பாங்கனது உடன்பாடு பெற்றுத் தலைவன் சென்று தலைவியைக் கூடிவருவான். கூடுதல் - எதிர்ப்படுதல்.

அல்லது, தலைவனது மெய்வேறுபாடு கண்ட பாங்கன் தலைவனை வினாவ, தலைவன் ஒருத்தியால் இந்நிலைமை யடைந் தேனெனத் தலைவியின் தன்மை கூற, '***பகைவருடைய வாளுக்கும் வேலுக்கும் உடையாத உன்மனம் ஒரு பெண் மணிக்கா உடைந்தது?*** என்று பாங்கன் நகையாட, பின் தலைவன் சொற்படி சென்று தலைவியைக் கண்டு வந்து பாங்கன் உடன்படத் தலைவன் சென்று தலைவியைக் கூடுவான். இவ்வாறு ஒரு சிலரிடம் நிகழும்.

இதனால், இக்களவொழுக்கம் இன்று பெற்றோரும் உற்றோரும் பெண்ணுக்கும் பையனுக்கும் மணம் பேசுவது போலவே, அன்று பலரும் ஒப்ப நடந்து வந்திருக்கின்றது என்பது வெளிப்படை. இன்று, 'ஒருத்தி என்னை வருத்தினாள்; நான் அவளைக் காதலித்தேன்; நீ வேண்டுமானால் சென்று பார் அவளை; அதன்பின் இவ்வாறு சொல்லமாட்டாய்' என்பவனெல்லாம் தகாப்பேச்சாகி விட்டன.

## 4. தோழியிற் கூட்டம்

தோழியால் தலைவனும் தலைவியும் கூடும் கூட்டம். இதுதான் களவொழுக்கத்தில் பெரும்பகுதி. அது,

| | |
|---|---|
| 1. பாங்கி மதியுடம்பாடு | 4. அறத்தொடுநிலை |
| 2. குறியிடம் | 5. வரைதல் |
| 3. வரைவு கடாதல் | 6. உடன்போக்கு |

என அறுவகைப்படும். பாங்கி - தோழி. இவள், தலைவியைத் தானாகவே கொள்ளும் உயிர்த்தோழி. தலைவிக்கு இன்னும் தோழியர் பலருண்டு. அவர்கள் விளையாட்டு மகளிரும் வேலைக்காரிகளு மாவர். ***விளையாட்டு மகளிர் - ஆயம் எனப் படுவர்.***

## 1. பாங்கி மதியுடம்பாடு

இயற்கைப் புணர்ச்சியினும் இடந்தலைப் பாட்டினும் பாங்கற் கூட்டத்தினும் தலைவியைக் கூடிய தலைவன், இனி என்றும் இடையூறின்றிக் கூடக் கருதினான்; பாங்கற்கூட்டம் புணர்ந்த தலைவியை ஆயத்துய்த்து மறைந்து நின்று பார்த்த போது, தலைவியின் உயிர்த்தோழி இன்னாள் என்பதை அறிந்த தலைவன், அவளது உடம்பாடு பெற எண்ணினான். எண்ணியவாறே மறுநாள் தலைவியும் தோழியுமாக இருக்கும் போது சென்று, 'நீங்கள் எவ்வூர்? உங்கள் பெயர் என்ன? நான் எய்த அம்புடன் இங்கு வந்த மானைப் பார்த்தீர்களா? நான் இங்கு சற்றுநேரம் தங்கியிருக்கலாமா?' என்பன

போலக் கேட்பான். அன்றோ மறுநாளோ, அழகிய மலர் மாலை, கண்ணி, செண்டு, தழையுடை முதலிய **கையுறையுடன்** (காணிக்கை) சென்று, தலைவிக்குக் கொடுக்கும்படி தோழியிடம் கொடுப்பான். தோழி அக் கையுறையைத் தலைவியிடம் கொடுப்பாள். தலைவி அக் கையுறை ஏற்றலே தோழியிற் கூட்டத் தொடக்கமாகும். இதன் பின்னர்த் தோழிக்குத் தெரியத் தலைவனும் தலைவியும் பழகிவருவர்.

இன்றும் ஒருவன் தன்னால் விரும்பப்படும் ஒருத்தி, வேறு பெண்ணுடனோ, தன் பாட்டி முதலியவருடனோ இருக்கும்போது சென்று, 'ஏம்மா! இங்கு ஒரு காரிமாடும் கன்றும் வந்தனவா? கொஞ்சம் வெற்றிலையிருந்தாத் தருகிறீர்களா? இந்தா பாட்டி, உங்கள் பேத்திக்குக் கொடுங்கள் இந்தப் பூவை' என்று தங்கள் காதலைப் பிறரறியும்படி குறிப்பால் கூறுவதுண்டு. ஆனால், இன்று அது தகாத வொழுக்கமாய்க் கருதப்படுகிறது.

மேற்கண்டவாறு தலைவன் தோழியிடம் பேசும்போது, தோழி தலைவி குறிப்பினை நோக்கி, இருவர்க்கும் முன்னமே கூட்ட முண்மையை உய்த்துணர்வாள். அதாவது, தலைவன் கூட்டத்தால் தலைவியிடம் சந்தனம் முதலியன மணத்தல், தலைவி கண்கள் காமக் குறிப்புடைய வாதல், தோளும் மார்பும் பெருத்துக்காட்டுதல், விளையாட்டு மகளிரோடு சேராமல் தனித்திருத்தல், தனித்துண்ணல், பெரிய பெண்போல் நடத்தல், செவிலியுடன் படுக்காமை முதலிய வற்றால் இருவர்க்கும் முன்னமே கூட்டம் உண்மையை அறிவாள் (கள-23). இன்றும் இவ்வகை வேறுபாடுகளால் அறிவதுண்டு.

இவ்வாறு தலைவியின் வேறுபாட்டால் தலைவனுடன் அவட்குப் பழக்கமுண்மையை ஆராய்ந்தறிந்த தோழி, அதை ஐயமறத் தெரிவதற்காகத் தலைவியை நோக்கி, 'அன்னாய்! சற்றுமுன் இவ்வழியே அம்புபட்ட யானையொன்று செல்லக் கண்டேன்' என்பாள். தலைவன்தான் எய்திருக்க வேண்டுமென எண்ணித் தலைவி நாணுவாள். 'உன் கண் ஏன் இவ்வண்ணம் சிவந்திருக்கிறது?' என்பாள். அதற்குத் தலைவி, சுனையாடியதால் சிவந்தது என்பாள். இவ்வாறு நாடுதல் - ***நாண நாட்டம்*** எனப்படும். நாட்டம் - ஆராய்ச்சி. ***நாண நாட்டம்*** தலைவி நாணும்படி ஆராய்தல். இவ்வாறன்றி, குருதி தோய்ந்த கொம்புகளையுடைய யானை யொன்றைக் கண்டேன் எனில், அது தலைவற்கு ஊறு செய்யுமெனத் தலைவி நடுங்குவாள். இது, ***நடுங்க நாட்டம்*** எனப்படும்! பெரும் பாலும், தோழி நடுங்க நாட்டம் நாடாள் (கள-23) களவொழுக் கத்தை யறிய எவ்வளவு நுணுகிய ஆராய்ச்சி! அறிவு சான்ற அக்காலப் பெண்ணுலகத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றனளன்றோ நம் தோழி!

இவ்வாறு தோழி ஆராய்ந்து இருவர்க்கும் கூட்ட முண்மையை உணர்ந்த பின்னர், தலைவன் தலைவியைத் தன்னோடு கூட்டுவிக்குமாறு தோழியை வேண்டினால், அவள் அவர்கள் களவினை அறியாதவள் போல, தலைவனது பெருமையை எடுத்துக்காட்டி அக்குறிப்பினை மாற்றுவாள். மறுநாளும் தலைவன் வரின், இப்போது அவளைப் பார்க்க முடியாது என்பாள். பின்னும் தலைவன் செல்லாது நின்றால், உன் காதலிக்கு நீயே சென்று சொல்லிப் பின் என்னிடம் வா என்பாள். தலைவன் பலவாறு வேண்டியும் தோழி மறுத்துரைக்கின், தலைவன், '**நீ உடன்படாவிடின் உன் தலைவியின் உருவமும் பெயரும் எழுதிய மடலுடன் குதிரை மேலேறி, உங்களூர்த் தெரு விடைச் சென்று, எங்காதலைப் பலருமறியச் செய்வேன்**' என்பான். அவ்வாறு தலைவன் **மடலூர்தலை, 'மடலேறுதல்**' என்னும் தலைப்பிற் காண்க.

தோழி, தலைவன் கருத்துக் குடன்படாது இவ்வளவு தூரம் மறுத்து வந்தது தலைவிமீது தலைவற்குள்ள அன்பை அறிவதற்கே யன்றித் தலைவியைக் கூடவிடாமல் செய்வதற்கல்ல. அவ்வளவு மறுத்தும் செல்லாமல் மடலூர்வேன் என்ற தலைவனது உறுதிப் பாட்டைக் கண்ட பிறகே, உள்ள படியே இவன் அவளைக் காதலிக் கிறான்; பல நாள் இருவரும் எதிர்ப்பட்டுக் காதல் கொண்டிருக்கின்றனர்; இனி நாம் மறுப்பது சரியன்று எனத் தோழி உடன் படுவாள். இதன் பிறகு தோழிக்குத் தெரியத் தலைவனும் தலைவியும் கூடிக் காதல் முதிர்வர்.

## 2. குறியிடம்

அவ்வாறு மதியுடம்பாடு பெற்றபின், தோழியும் தலைவியும் குறிப்பிட்ட இடத்தில் சென்று தலைவன் தலைவியைக் கூடி வருவான். இது **குறியிடம் எனப்படும்.** குறி இடம் - குறித்த இடம். இக் குறியிடத்துக் கூட்டம் பகலிலும் இரவிலும் நடக்கும். அவை முறையே **பகற்குறி, இரவுக்குறி** எனப்படும். பகற்குறி - சோலை யினிடத்தும், மனையின் புறத்தும் நடைபெறும். இரவுக்குறி - புறத்திண்ணை, கொட்டகை, சாவடி முதலிய இடங்களில் நடை பெறும். இன்றும் சுற்றுத் திண்ணை, கொட்டகை முதலிய இடங்களிற் காதலர் கூடுதலையறிக. இரவுக்குறி சிலநாள் நடந்தபின் தலைவன் அச்சமின்றி அகமனையுள் - வீட்டினுள் - சென்று கூடுவான்.

இதனால், பண்டு களவொழுக்கத்தைப் பெற்றோரும் விரும் பினமை புலப்படும். பெற்றோர் அறியினும் இழுக்கின்றென்பதே தலைவன் வீட்டுக்குள் செல்லும் கருத்தாகும். அகமனை என்பது வீட்டு மதிலின் உட்புறமாகும். இவ்விருவகைக் குறியினும் தலைவன் வருகையைப் பெரும்பாலும் தோழி தலைவிக்குக் கூறுவாள். என்னே தோழியின் பொறுப்பு!

இங்ஙனம் தலைவன் இருவகைக் குறியிடத்துஞ் சென்று தலைவியைக் கூடிவருதல் தீய ஓரையின் கண்ணும் தீயநாளின்

கண்ணுங்கூடத் தலைவற்கு விலக்கில்லை (கள -44). ஓரை - இராசி. நாள் - நட்சத்திரம். இவற்றின் தீமை நன்மை இன்னவென விளங்க வில்லை. தலைவனது நாளும் ஓரையும் பொருந்தாத் தீமை போலும்.

பூப்பு நிகழும் மூன்றுநா ளல்லாத மற்றை நாட்களில் தலைவி குறியிடம் சென்று தலைவனைக் கூடப் பெறுவாள் (கள-31). அம் மூன்று நாளும் தலைவி குறியிடஞ் செல்லாள். எவ்வளவு நுண்ணிய ஆராய்ச்சி! இன்றும் பூப்புக்கு - வீட்டுக்கு விலக்கு, வீட்டுக்குத் தூரம், வெளியிருக்கிறாள் என்னும் பெயர்கள் அக்கருத்துடன் அமைந்தவையேயாம். கற்புக்காலத்தும் இம்மூன்று நாளும் விலக் கேயாகும் (கற்-46).

## அல்ல குறிப்படுதல்

இரவுக் குறியிடத்துக் கூடவருந் தலைவன், நீர்க்குட் கல்லைப் போடுதல், நீரைத் தடியாலடித்தல் முதலியன செய்து ***புனலொலி*** யுண்டாக்கியும், பறவைகளை எழுப்பிப் ***புள்ளொலி*** யுண்டாக்கியும், காய் கனிகளை அடித்துதிர்த்து ஒலியுண்டாக்கியும் தன் வருகையைத் தலைமகட் குணர்த்துவான். இக்குறிப் பறிந்து தலைவி குறியிடஞ் செல்வாள். இயற்கையாகவே காய் கனி விழுவதால் புனலொலி யுண்டாதலும், புட்கள் தாமாகவே எழுதலுங் கூடுமாகையால், அவற்றைத் தலைவன் செய்த குறியெனக் கொண்டு தலைவி சென்று பார்த்துத் தலைவனைக் காணாமையால் புற்கென்று திரும்பிச் செல்வாள். இது ***குறிபிழைத்தல்*** அல்லது ***அல்ல குறிப்படுதல்*** எனப்படும். இவ்வாறு அல்ல குறிப்பட்டுச் செல்லுந் தலைவி, தான் வந்து சென்றதைத் தலைவன் உணரும் பொருட்டு இலை, பூ முதலிய வற்றைப் பறித்து அடையாளமாகப் போட்டுச் செல்வாள்.

இயற்கையாக நிகழ்ந்த ***புனலொலி, புள்ளொலி*** கேட்டுத் தலைவி வந்து பார்த்துச் செல்லவே, பின்னர்த் தலைவன் வந்து பார்த்து வருந்திச் செல்வான். அவ்வாறு திரும்பிச் செல்லும் போது, தான் வந்துபோனது தலைவிக்குத் தெரியும் பொருட்டுத் தலைவி செய்தது போலவே தலைவனும் ஏதாவது அடையாளம் செல்வான்.

தலைவனைக் குறியிடத்துக் காணாது வறுங்களங்கண்டு வீணே திரும்பிச் சென்ற தலைவிக்குத் தலைவன் குறியிடத்திற்கு வாராமல் இருக்கமாட்டான் என்பது தெரியும். எனவே, தலைவன் அங்கு வந்து போனதற்கு அறிகுறியாக இட்டுச் சென்ற அடையாளம் காணும் விருப்பால் மறுநாள் விடியற் காலையில் சென்று அங்கு தலைவன் இட்டுச் சென்ற அடையாளத்தைக் கண்டு மனங் கலங்கித் திரும்புவாள். இருவர்க்கு முள்ள காதற் பிணிப்பைப் பார்த்தீர்களா? அல்ல குறிப்படுதல் என்பது அவ்விருவர் அன்பு என்னும் பயிரை வளர்க்கும் ஆன்ற நன்னீர் போலும்!

குறிபிழைத்துச் சென்ற தலைவற்குத் தான் குறித்த நேரத்தில் தலைவி வரவில்லை யென்று புலவி - சிறிது மனவேறுபாடு - தோன்றும். நடந்தது கூறித் தோழி தலைவன் புலவியைத் தீர்ப்பாள்.

இனி, தலைவி இரவுக் குறியிடம் செல்ல முடியாதபடி தாய் துஞ்சாமலிருப்பாள்; தாய்துஞ்சின் ஊர் துஞ்சாது; ஊர் துஞ்சின் காவல் மிகுதியாக இருக்கும்; அதாவது, காவலர் வழி யெங்கும் நின்று காவல் காத்து வருவர்; காவலர் துஞ்சின் நிலாக் கிளம்பி விடும்; நாய்கள் தூங்காமல் குரைத்துக் கொண்டே யிருக்கும்; கூகை குழறல், கோழி கூவல் முதலிய ஏதாவது இடையூறு இருந்து கொண்டே இருக்கும். இவற்றை யெல்லாம் கடந்தால் தூக்கம் வந்து விடும். எனவே, இத்தகைய இடையூறுகளால் தலைவனைச் சென்று காணப் பெறாது தலைவி வருந்துவாள்.

**"தாயோ துஞ்சாள், நோயறியாவத் தாய்துஞ்சின்,**
**நாயோ துஞ்சா, நிலவொடு பொல்லா நாய்துஞ்சின்**
**வாயோ துஞ்சாக் காவலர் துஞ்சின் மலர்துஞ்சும்"**

**-இராவண காவியம்**

எனக் காண்க.

தலைவன் குறியிடம் செல்லும் போது காலால் நடந்து, யாருங் காணாது கள்வனைப் போற் செல்வானல்லன்; மாமியார் வீட்டுக்குப் போவது போல, தேர் யானை குதிரை முதலியன ஊர்ந்து செல்வான் (பொரு -18). அத்தகைய உரிமைச் சிறப்புடன் நடந்து வந்தது அன்று களவொழுக்கம். நண்பகலில் தலைவன் வரின் தலைவி சுற்றத்தார் தலைவனுக்கு விருந்திடுவர். தலைவியின் கட்டளைப்படி தோழியும் தலைவற்கு விருந்திடுவாள்.

இதனால், அன்று நிகழ்ந்த களவொழுக்க மென்பது, இல்வாழ்க் கையின் உறுப்பினர்களான தலைவனும் தலைவியும், அவ் வாழ்க்கைக்குத் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ளும் ஒரு பயிற்சியே யென்பது, அதற்குத் தலைவியின் சுற்றத் தாரும் துணைபுரிந்து வந்தனர் என்பதும், தலைவன் மாமியார் வீட்டுக்குப் போவது போலவே தேர் முதலியன ஊர்ந்து கொண்டு, களவொழுக்கத்தின் சிறந்த பகுதியான குறியிடத்திற்குப் போயிருக்கிறான் என்பதும் வெளிப்படை.

இத்துணைச் சிறப்புடைய வழக்கம் எப்படி ஒழிந்துபட்ட தென்பது நமக்கு விளங்கவில்லை. இம்முறை இன்னும் நடைமுறையில் இருந்திருக்குமானால், பெண் மக்களது இன்றைய இரங்கத் தக்க நிலையும், தமிழர் தம் வாழ்க்கையின் சீர்கெட்ட நிலையும் ஏற்பட்டிருக்கா. ஒழுக்கத்திற்குப் பேர்களவு. அதற்குச் செல்வது தேர் யானை குதிரை! எவ்வளவு பொருத்தம்!

களவொழுக்கம் என்பது உயரிய நல்வாழ்க்கைக் கட்டிடத்தின் அடிப்படை என்பதை யறியாது, 'களவு' என்னும் பெயரைக் கண்டு மருளும் அறிஞர் என்போர் இன்றும் தமிழ்நாட்டில் இல்லாமல் இல்லை. என்று பழந்தமிழ்க் களவு முறை தமிழ்மக்களிடை நடைமுறைக்கு வருமோ!

## அலர்

இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒழுகிவரும் காதற் கலப்பான களவொழுக்கம் எத்தனை நாளைக்கு வெளிப்படாமல் இருக்கும்? அதனை ஊர்மகளிர் அறிந்து ஒருத்திக் கொருத்தி வாய்க்குள் முணுமுணுத்துக் கொள்வர். இது ***அம்பல்*** எனப்படும். பின்னர் அன்னார் வாய்விட்டே பேசத் தலைப்படுவர். இது ***அலர்*** எனப்படும் (கள-48). அலர் - களவொழுக்கத்தைப் பற்றி ஊர் மகளிர் பேசும் பேச்சு. அதைப் பழித்துப் பேசுவாராதலால், இது '***பழிச்சொல்***' எனப்படும். '***ஊர்வாயை மூட உலைமூடி யுண்டோ?***' ஒன்றைக் கண்டால் அதை ஊரறியச் செய்வதும், கூடிக் கூடிப் பேசுவதும் மகளிர் இயல்பு. அஃதும் இஃதென்றால் அன்னார்க்குக் கரும்பன்றோ!

இவ்வாறு தலைவி நடத்தையைப் பற்றி ஊர் மகளிர் ஒருவர்க் கொருவர் பேசிக் கொள்வதைச் செவிலி மறுத்துரைப்பாள்; ஊர்மகளிர் உன்னைப்பற்றி என்னென்னவோ பேசிக் கொள்கிறார்களே என்று தலைவியைக் கடிந்து கொள்வாள். '***தாயெனப் படுவோள் செவிலி யாகும்***' (கள-33) என அத்தகு உரிமை யுடையவ ளல்லளோ தலைமகட்குச் செவிலி! கடிந்து கொள்ளாமலா இருப்பாள்? ஆனால், தலைவியைப் பெற்ற தாயாகிய நற்றாய், தன்மகள் நடத்தைபற்றி ஊர்மகளிர் கூறும் அலரை யறியினும், அது பற்றி அவள் கூறுவதாகப் புலனெறி வழக்கம் இல்லை.

ஊரார் கூறும் அலரால் தலைமகள் பெரிதும் வருந்துவாள்; விரைவில் வரைந்து கொண்டு ஊர்மகளிர் வாயை அடக்க விரும்புவாள்.

> **"ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்**
> **நீராக நீளுமிந் நோய்."** **(குறள்)**

ஊர்மகளிர் கூறும் அலர் எருவாகவும், செவிலி கூறும் கடுஞ் சொல் நீராகவும் காமநோய் என்னும் பயிர் வளர்கிறது எனத் தலைவி அலருக்கு நாணி, வரைவை விரும்பிக் கூறுதலை அறிக. நாணுடைய தலைவி அலருக்கு நாணுவதில் வியப்பென்ன!

ஆனால், இவ் வலருக்குக் காரணமான தலைவனோ (கள-48),

> **"கவ்வையால் கவ்விது காமம். அதுவின்றேல்**
> **தவ்வென்னும் தன்மை யிழந்து."** **(குறள்)**

என் காமம் இவ்வூரார் கூறும் அலரினால் அலர்தலையுடையது. அவ்வலர் இல்லையானால் தன் இயல்பை யிழந்து சுருங்கிவிடும் என்கின்றான். ஒருதலைப்பட்ட காமத்தையுடைய இருவர்க்கும் அக்காமத்தா லுண்டாகிய அலர் இருதலைப்பட்டன்றோ உளது! இது தான் ஆண்டன்மைக்கும் பெண்டன்மைக்கும் உள்ள வேறுபாடு போலும்!

## முன்னிலைப் புறமொழி

இருவகைக் குறியிடத்தும் வரும் தலைவனிடம் தவறு கண்டவழி, தலைவி அவனைச் சுட்டி நேராகக் கூறாது பிறரைக் கூறவது போலவே கூறுவாள். அதாவது, படர்க்கையா னொருவனைப் பற்றிப் பேசுவது போலவே கூறுவாள். அங்ஙனம் கூறுதல் ***முன்னிலைப் புறமொழி*** எனப்படும். தோழியும் தலைவனிடம் முன்னிலைப் புறமொழி கூறுவதுண்டு. முன் கைக்கிளைக் குறிப்பில் (அகத் -50) தலைவன் முன்னிலைப் புறமொழி கூறினான். இது இன்று சாடை பேசுதல் என்று வழங்குகிறது. கணவனைக் கடிந்து கூறவேண்டிய போது மனைவி, '***அறிவு கெட்ட கோழி, தின்பதற்கு விட்டுவிடுங்கள்*** எனக் கோழிமேல் வைத்துச் சாடை பேசுவாள்.

## சிறைப்புறமாகக் கூறல்

அல்ல குறிப்பட்டுத் தலைவியைக் காணாது வறங்களங் கண்டு சென்ற தலைவன், மறுபடி வந்துஅகமனையில் மறைவான ஓரிடத்தில் இருக்கும்போது, தலைவனுக்குக் கேட்குமாறு மனைக்குள் இருந்து குறிபிழைத்தமையைத் தோழி கூறுவாள். இது, ***சிறைப்புறமாகக் கூறல்*** எனப்படும். சிறை - மறைவு.

தலைவனிடம் நேரில் கூறமுடியாத மறைபொருள்களை யெல்லாம் - தலைவி யெதிரில் தலைவனிடம் கூற முடியாதவற்றை யெல்லாம் - தோழி, தலைவன் மறைவி லிருக்கும்போது அவனுக்குக் கேட்கும்படி சிறைப்புற மாகவேதான் கூறுவாள்.

## தலைவி களவு புலப்படாமல் ஒழுகுதல்

தலைவன் மீது அளவு கடந்த காதல் உடையவளேனும், தலைவனை அரை நொடி பிரிந்து தனித்திருக்க முடியாத நிலைமையை யுடையவளேனும், அடக்கம், மனத்திண்மை, மனக்கோட்டமின்மை, களவின்கட் செய்யத்தகுவன கூறல், நன்மை தீமையை அறியும் அறிவு, உள்ளக்கருத் தறிதலருமை என்னும் பெண்பாற் குணங்களால் தலைவி தன்களவை வெளிக்குக் காட்டாமல் நடந்து கொள்வாள். (பொரு -15). பெண்ணின் பெருமையே பெருமை! இது கொண்டே வள்ளுவர்,

**"கடலன்ன காம முழந்தும் மடலேறாப்**
**பெண்ணிற் பெருந்தக்க தில்."** **(குறள்)**

*என்று பெண்மையின் மேம்பாட்டை நுணுக்கமாக எடுத்துரைத்தார்.*

## இட்டுப் பிரிவு

*இடைவிடாது பாற்சோறும், தேம்பாகும், பாலும், தேனும் உண்டால் தெவிட்டுமல்லவா? அதற்காக இடையிடையே கைப்புச் சுவையும், புளிப்புச்சுவையும், காரமுடைய பொருள்களை யுண்பது போல, இருவகைக் குறியிடத்தும் இடையறாது புணர்ந்துவருந் தலைவன், அக்கூட்டம் தெவிட்டாமல் இருத்தற் பொருட்டுச் சிலநாள் குறியிடம் செல்லாமல் பிரிந்திருப்பான். இது,* ***இட்டுப்பிரிவு*** *எனப்படும். இட்டுப் பிரிவு - சிறுபிரிவு. இது,* ***ஒருவழித்தணத்தல்*** *எனவும்படும். ஒரு வழி - சிலநாள். தணத்தல் - பிரிதல். இப்பிரிவு அடிக்கடி நிகழும். அவ்வொருவழித் தணத்தலாகிய* ***இட்டுப்பிரிவுக்*** *காலத்தையும் தலைமகள் ஆற்றாது வருந்துவாள். தோழி தலைவியை ஆற்றுவிப்பாள். எவ்வளவு அன்பு? இவ்வாறு அன்புற்று - அன்புக் கலப்புற்று - மணந்து கொண்ட தலைவர்கள் வாழ்க்கையன்றோ உண்மையான உயரிய வாழ்க்கையாகும்!*

## தாமே தூதுவராதல்

*இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் என்னும் நான்கும் களவொழுக்கத்தின் உறுப்புக்கள் எனப்படினும், எல்லாக் காதலர்களும் இந்நான்கும் முறையாக ஒழுகி மணஞ் செய்து கொள்வதில்லை. சிலர், இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் நிகழ்ந்து மணந்து கொள்வதும் உண்டு. இன்றும் இத்தகைய மணங்கள் ஒரு சில நடந்து வருகின்றன. சில தடுக்கப்பட்டு விடுகின்றன. தடுப்பாரில்லாத அக்காலத்தே இவ்வகை மணமே பெரும்பான்மை நடந்திருக்கலாம். காதலர் தாமே அன்புற்று மணந்து கொள்வதால் இது,* ***தாமே தூதுவராதல்*** *எனப்படும். (கள-28)*

*இயற்கைப் புணர்ச்சி முதலிய நான்கும் நிகழ்த்தி மணந்து கொள்வ தென்பது ஒரு சிலரிடம் நடந்து வந்த வழக்கமே யாகும். எல்லோராலும் அந்நான்கையும் முறையாக நிகழ்த்த முடியாது. ஒரு சிலரிடம் நடந்துவந்த வழக்கத்தையே புலவர் பெருமக்கள் இவ்வாறு பலபடப் புனைந்து புலனெறி வழக்கம் செய்தனரென்க. முதலிரண்டும் நிகழ்ந்து மணந்து கொள்வதே எல்லோரும் ஏற்று நடத்தக்கூடிய தொன்றாகும். அம் முறையையேனும் இக்காலத் தமிழ் மக்கள் மேற்கொண் டொழுகினாற்றான் தமிழ் மரபு நின்று நிலவும்.*

### 3. வரைவு கடாதல்

இருவகைக் குறியினும் பல காலும் வந்து தலைவன் தலைவியைக் கூடிச் செல்லும் களவு வெளிப்படின், ஊரார் அலருக்கஞ்சிய சுற்றத்தார், வெளியில் சென்று வர விடாமல் தலைவியை இற்செறிப்பர் எனவும், இருள் நிறைந்த இரவு நேரங்களிலெல்லாம் கொடிய விலங்குகளும், பாம்பு முதலிய நச்சுயிர்களும் உள்ள அரிய வழியில் வருவதால் தலைவனுக்கு ஏதாவது இடையூறு நேர்ந்தாலும் நேரக்கூடும் எனவும் தோழி அச்சமுற்று, '***இக் களவொழுக்கம் நமது குடிப்பிறப் புக்கும் பெருமைக்கும் ஏற்றதன்று; இனி நீர் இவளை மணந்து கொள்வதே தகுதியாகும்***' என்று தலைவனிடம் கூறுவாள். இது, ***வரைவு கடாதல்*** எனப்படும். வரைவு - மணம். கடாதல் - வினாதல். மணந்து கொள்ளுதலைப் பற்றித் தலைவனிடம் கேட்டல்.

இவ்வாறு தோழி தலைவனை வினாதல் தலைவியின் குறிப் புணர்ந்தேயாகும். தலைவன்மாட் டன்பு முதிர்ந்த தலைவிமிக்க இருளிலும், கொடிய வழியிலும் தலைவன் இரவுக் குறிக்கண் வருதல் தீதெனவும், மிகுந்த காவலுடைய தெனவும், இவ்வாறு தலைவன் வருவதற்குத் தானே காரணமெனவும், வழியில் தலைவற்கு ஏதாவது இடையூறு நேரினும் நேருமெனவும் அஞ்சுதலே யாகும். முடிவாகத் தலைவி வெளிப் போக முடியாமல் சுற்றத்தார் காப்புச் செய்தனராயின் தோழி, '***இவளை இனி மணந்து கொள்க***' என்றே தலைவனிடம் கூறுவாள்.

வெளிச் செல்ல முடியாத இற்செறிப்பினால், தலைவி தலைவன் மாட்டுக் கொண்டுள்ள அன்பும், குடிப்பிறப்புக் கேற்ற ஒழுக்கமும், தன் இன்பமும், நாணும் நீங்க ஒழுகுவாள். இவ்வாறு தலைவி காக்கப்பட்டு வந்தபோது வந்த தலைவன் பிரியக் கருதின், தோழியும் தலைவியும், '***நீர் போகின்ற வழி கொடியது***' எனக் கூறித் தலைவன் செல்வதை விலக்குவர். தலைவி தோழி வாயிலாகவே கூறுவாள். அவ்வாறு அவர்கள் கூறியுங் கேளாமல் தலைவன் தன் ஆற்றல் கூறிச் செல்லத் துணிந்தால், தலைவியும் உடன் வரக் கருதுவதாகும், அவளையும் அழைத்துக் கொண்டு போகும் படியும் தோழி தலைவனிடம் கூறுவாள். அதற்குத் தலைவன் முன் தோழியும் தலைவியும் சொன்னதையே திருப்பிச் சொல்வான். அதாவது, '***நான் செல்லும் வழி கொடியது, நீ வரத்தகாது***' எனக் கூறி விலக்குவான்.

இவ்வாறு தலைவன் வந்துபோய்க் கொண்டிருக்கையில் தலைவி பிரிவாற்றாது மிகவும் வருந்துவாள். அதுகண்ட தோழி, 'இனித் தலைவி பகலில் வெளிவரவே முடியாது; புனங்காவலும் ஒழிந்தது; இரவிலோ காவல் மிகுதி; அவள் உன் மீது அளவு கடந்த காதல் உடையவளாய் இருக்கின்றாள். ஆகவே, இனி அவளை

*மணந்து கொள்வதே ஏற்றதாகும். மேலும், வளம் பொருந்திய உமது நாட்டையும், ஊரையும், வீட்டையும், காண எங்களுக்கு அளவற்ற ஆவல். உமது நற்குடிக்கும், நற்குடிப் பிறப்பிற்கும், ஆண்மைச் சிறப்பிற்கும் இனிக் காலந் தாழ்த்துதல் ஏற்றதல்ல' எனத் தந்நிலை மையைத் தெளிவாக எடுத்துரைப்பாள். நாணமும், மானமும் கெடாமல் வற்புறுத்தும் தோழியின் மதிநுட்பம் வியக்கற் பால தொன்றன்றோ? தம் பெண்ணை வாழ்க்கைத் துணைவியாக்குவதிற் பெற்றோர்க்குள்ள பொறுப்பு எத்தகையது பார்த்தீர்களா? பெற்றோரின் ஆணையாளி யாகவன்றோ இங்கு தோழி பணியாற்றுகிறாள்!*

## நொதுமலர் வரையக் கருதுதல்

*இனி, இவ்வாறு தலைவி களவொழுக்க மொழுகி வருகையில், வேறு சிலர் வந்து தலைவியைப் பெண் கேட்பர், அவர்களி லொருவர்க்குத் தம் மகளைத் தரப் பெற்றோர் உடன்படுவர். இது, தலைவியின் களவு வெளிப்படாத காலத்தே நிகழ்வதாகும். இத்தகைய மணமும் அன்று சிறுபான்மை நடந்து வந்தது. அவ்வாறு பிறர் வரையக் கருதினால், அதைத் தலைவற்குக் கூறி, பிறர்க்குக் கொடுப்பது உறுதியானால், இவள் இறந்து படுவது உறுதி. ஆகையால், நீர் உடனடியாக மணந்து கொள்ளெனத் தோழி தலைவனை வற்புறுத்துவாள். நொதுமலர் - அயலார். குடும்பத் தேர்தலில் எவ்வளவு இடையூறு? புதுவாழ்வு தொடங்குவது என்பது என்ன அங்காடிப் பொருளா!*

## பிரிவு

*இவ்வாறு தலைவியும் தோழியும் வரைதல் வேட்கையுடைய வர்களாய், வரைந்து கொள்ளும்படி தலைவனை வற்புறுத்திக் கொண்டிருக்கும்போது, தலைவன் **வேந்தற் குற்றுழிப் பிரிவான்.** அதாவது, தன் நட்பரசனுக்குப் படைத்துணையாகப் பிரிதல். அப் பிரிவாற்றாது தலைவி வருந்துவாள். தோழி ஆற்றுவிப்பாள். இவ்வாறே காவற் பிரிவும் நிகழும். இப்பிரிவுகளின் விரிவைப் '**பிரிவு**' என்னும் தலைப்பிற் காண்க. ஒவ்வொரு தலைவர்க்கும் இப்பிரிவுகள் நேராவெனினும், தலைவனது பொதுநலச் சிறப்பையும், ஆண்டன் மையையும், தலைவியின் பெண்டன்மையையும், தலைவன்மீது அவளுக்குள்ள காதலன்பையும் சிறப்பிப்பதற்காக இப்பிரிவுகள் நிகழ்வதாகக் கூறுதல் புலனெறி வழக்கமாகும்.*

## செவிலி செயல்

*இஃதிங்ஙனமாக, தலைவியிடத் தையங் கொண்ட செவிலி, ஒரு நாள் தோழியைப் பார்த்து, '**தலைவியின் கண்கள் ஏன் இப்படிக் கோவைப்பழம் போற் சிவந்திருக்கின்றன?**' என்றாள். அதற்குத் தோழி,*

'அன்னாய்! நாங்கள் இன்றொரு நன்னீர்ச் சுனையில் நீராடினோம். நான் சொல்லியுங்கேளாது தலைவி நெடுநேரம் குடைந்து குடைந்து ஆடிக் கொண்டிருந்தாள். அதனால், அவள் கண்கள் அவ்வாறு சிவந்தன' எனக் கூறித் தாயின் ஐயத்தை அகற்றினாள்.

தலைவன் பிரிவை ஆற்றாத் தலைவியைத் தோழி சில நாள் ஆற்றுவித்தாள். அதன் மேல் ஆற்றாமை மிக்க தலைவி வேளைக்கு வேளை சரியாக உண்ணுவதில்லை; ஆடையணிகளால் சரியாகத் தன்னை அணி செய்து கொள்வதில்லை; யாரிடமும் சரியாகப் பேசுவதில்லை; தனக்குள்ளாக என்னென்னவோ பித்திபோல் பேசிக் கொள்வாள்; தோழியரோடு சேர்ந்து விளையாடாமல் தனியாக ஓரிடத்தில் இருந்து நிலத்தைக் கீறிக் கொண்டிருப்பாள்; அன்போடு அருமையாக வளர்க்கும் பூவையையும், கிளியையும் கண்ணெடுத்தும் பாராள். அவள் உடம்பு இளைத்துத் துரும்புபோல் ஆகிவிட்டது; முகம் கருவழிந்து போய்விட்டது; ஓடியாடி விளையாடும் ஆற்றலிழந்து படுத்த படுக்கையானாள்; இரவில் தூங்கும் போது என்னென்னவோ தாறுமாறும் உளறலானாள்; வெறிகொண்டவள் போலானாள்; போலென்ன? வெறியே கொண்டாள்.

## வெறியாட்டு

அது கண்ட செவிலி அஞ்சினாள்; கட்டுவிச்சியையும் வேலனையும் வரவழைத்துக் கட்டும், கழங்கும் பார்த்தாள். அவர்கள் கட்டும், கழங்கும் பார்த்து, தலைவி வெறி கொண்டாள் எனக் கூறினர். கூறவே, ***வெறியாடு களம்*** அமைத்து, வேலனை வெறியாடித் தலைவிக்கு உற்ற நோய் இன்னதெனச் சொல்லும்படி கேட்டாள். அவன் வெறியாடித் தலைவி வெறிகொண்டாள் எனவே கூறினான்.

இவ்வேலன் ஆடும் வெறியை ***முருகு*** எனவும், வேலனை ***முருகன்*** எனவும் கூறுதலும் உண்டு. அதன்பின் இன்ன செய்வதென்று தோன்றாத செவிலி தோழியை வினாவினாள். தோழி நிகழ்ந்ததைச் சொன்னாள். தலைவியின் களவையறிந்த செவிலி, '***இவர்கள் ஒழுக்கம் நன்றாவதாக***' எனத் தெய்வத்தை வாழ்த்தினாள். வளர்த்த வளுக்கன்றோ தெரியும் மகளின் அருமை!

***வெறி*** என்பது - இன்று பருவமகளிர் பேய்பிடித்ததென்று ஆடுவதும், அதனால், ஊணுறக்கமின்றி உடல் நலிவதும் போன்ற தொரு மன நோய். இது, பெரும்பாலும் காதல் தடையினால் ஏற்படும் அச்சத்தினாலும், அவாவினாலும் உண்டாகும் ஒருவகை மன நோயே யாகும். தன் காதலனை அடைய வேண்டும் என்ற அவாவும், அடைய முடியுமோ என்ற அச்சமுமே இந்நோய்க்குக் காரணமாகும். எனவே, ***வெறி*** அல்லது ***பேய்*** என்பது **காம நோயே**யாகும்.

இந்நோய் பெரும்பாலும் நடுத்தரக் குடும்பப் பெண்களுக்கே உண்டாகும். ஏழைகள் பக்கம் இந்நோய்க்கு என்ன வேலை?

***வேலன்:*** வேலைக் கையிற் கொண்டு வெறியாடுதலால் பெற்ற பெயர். வேலர் - குறிஞ்சி நில மக்களிற் குறிசொல்லும் ஒரு வகுப்பார். ***கட்டுவிச்சியர்*** - வேலர் மகளிர். வேலன் கழங்கு பார்த்தும், கட்டுவிச்சி கட்டெடுத்தும் குறிஞ்சிநில மக்ககளுக்குக் குறி சொல்லுவர். ***கழங்கு பார்த்தல்*** - கழற்சிக் காய்களைக் கொண்டு குறிபார்த்துப் பலன் சொல்லுதல். கழங்கு - கழற்சிக்காய். இன்று தொட்டியர் என்னும் வகுப்பார் 12 கழற்சிக் காய்களைக் கொண்டு குறிபார்ப்பது போன்ற தாகும் இது. ***கட்டெடுத்தல்*** - முறத்தில் கொஞ்சம் நெல்லையிட்டு, முக்கூறு செய்து, அவற்றினுள் ஒரு கூற்றைக் கொண்டு ஒற்றை இரட்டை பார்த்து அதற்குத் தகப் பலன் சொல்லுதல். கழங்கு பார்த்தலும் இவ்வாறேதான்.

***வேலன் வெறியாடுதல்*** - இன்று பூசாரிகள் - சாமியாடிகள் - சாமியாடி வாக்குச் சொல்லுவது போன்றதே. வெறியாடுதல் - வேலைக் கையிற் கொண்டு வெறிகொண்டாடுதல். வெறி - ஆவேசம். கட்டும் கழங்கும் பார்த்துக் குறிசொல்லுதல். வெறியாடிப் பலன் சொல்லுதல் இன்றும் அவ்வாறே நடந்து வருகின்றன. இவையெல்லாம் நன்மை வேட்கையாற் கொண்ட நம்பிக்கையே யாகும்.

புறத்திணையிலும் வெறியாட்டு உண்டு. அது கூத்து வகையில் ஒன்று. அது ***வெறிக்கூத்து*** எனப்படும். அது ***காந்தள்*** என வழங்கும் (புறத் -5). இவ்வளவும் வரைவு கடாதல் எனப்படும். ஒரு பெண்ணை ஒருவனுக்கு வாழ்க்கைப் படுத்துவதென்பது எளிதான காரியமா? இதனாலன்றோ இதனை '***ஆயிரங் காலத்துப் பயிர்*** என்கின்றனர்.

## 4. அறத்தொடு நிலை

தன்னைப் பிறர்க்குக் கொடுக்கக் கருதினும், கட்டுவிச்சியும் வேலனும் கட்டெடுத்தும், கழங்கு பார்த்தும், வெறியாடியும் வெறியெனக் கூறினும், தலைவி தன் கருத்தைச் செவிலிக்குக் கூறும்படி தோழியிடம் கூறுவாள். இது, ***அறத்தொடு நிலை*** எனப்படும். அறம் - ஒழுக்கம். அறத்தோடு நிற்றல் - தான் கொண்ட ஒழுக்கத்தின் கண் நிற்றல். அதாவது - களவு முதிர்ந்து கற்பொழுக்கத்தின் கண் நிற்றலை வெளியிடுதல் - வரைந்து கொள்ளுதலை வெளியிடுதல். தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்பாள். செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு நிற்பாள். தந்தை - தலைமகள் தந்தை. தன்னை - தலைமகள் அண்ணன்.

தோழி செவிலிக் கறத்தொடு நிற்கும்போது, 'அன்னாய்! நாங்கள் அன்றொரு நாள் தினைப்புனத்தின்கண் குருவி முடுக்கிக்

கொண்டிருந்தோம். ஓர் ஆண் யானை வெறிகொண்டு எங்களை நோக்கி வந்தது. அது கண்டு நாங்கள் அஞ்சியலறினோம். அதுபோது ஓர் ஆடவன் வில்லுங்கையுமாக வந்து அக்களிற்றை யோட்டி எம்மைக் காத்தான்; மற்றொரு நாள் ஒரு புலியை யோட்டிக் காத்தான்; பின்னொரு நாள் கடிக்கவந்த ஒரு செந்நாயை ஓட்டிக் காத்தான்.'

அன்னாய்! மற்றொரு நாள் சுனையாடினோம். நீண்ட நேரம் விளையாடினதால் தலைவி களைத்துவிட்டாள்; கைகால் களை வாங்க முடியாமல் தண்ணீரைக் குடித்துக்கொண்டு உள்ளே போனாள். அவ்வேளை அன்று வந்த அன்னான் போந்து தலைவியை எடுத்துக் கரையில் விட்டு உயிரைக் காத்துச் சென்றான்.

பின்னொரு நாள் எட்டாத கிளையிலிருந்த பூக்களைப் பறித்துக் கொடுத்தான். அழகிய தழையுடை கட்டிக் கொடுத்துத் தலைவியை மகிழ்வித்தான். அம் முதல் நாளிலிருந்து தலைவி அவன்மீது காதல் கொண்டனள்' எனக் கூறுவாள். எப்படித் தோழியின் சொல்வன்மை!

இவை முறையே ***களிறுதரு புணர்ச்சி, புலிதரு புணர்ச்சி, நாய்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, பூத்தரு புணர்ச்சி, தழைதரு புணர்ச்சி*** எனப்படும். களிறுதரு புணர்ச்சி - களிற்றை ஓட்டிக் காத்ததால் அன்புற்றுக் கூடினோம் எனல். பிறவு மன்ன. இவற்றுள் ஏதாவது இரண்டொன்று கூறுவாள். அல்லது இருவரும் தாமே எதிர்ப்பட்டனர். யான் அறிந்திலேன் எனக் கூறுவாள். நற்றாய் தந்தை தன்னைக்குக் குறிப்பால் கூறுவாள். எல்லோரும் தலைவியின் கருத்துக்குடன் பட்டபின், செவிலியும் நற்றாயும் அறிவரைக் கேட்டுத் தலைவன் வரலாற்றை அறிவர்.

இவ்வறத்தொடு நிற்கும் செய்தியால் நம் முன்னையோர் களவொழுக்கத்தை எவ்வளவு இன்றியமையாத தொன்றாகக் கருதி வந்தனர் என்பது அறிந்து இறும்பூ தெய்த வேண்டிய தொன்றாகு மன்றோ? பெண் மக்களுக்கு அக்கால் இருந்து வந்த சரிநிகர் உரிமைக்கு இச்செயல் ஒன்றே போதுமானதாகும். அவள் விரும்பிய வனுக்கே கொடுக்கும், அவள் விரும்பியவனையே மணந்துகொள்ளும் உரிமையை விடப் பெண்களுக்கு வேறு என்ன உரிமை வேண்டும்? தன் துணைவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தனக்கே உள்ள ஒரு பெண்ணைவிடப் பெரும் பேறு பெற்றவர் யார்? எல்லோரும் உடன் பட்ட பின்னரே செவிலியும், நற்றாயும், அறிவரைக் கேட்டுத் தலைவன் தகுதியைத் தெரிந்து கொள்கிறார்களென்றால், பெண்களுக்கு அன்று வாழ்க்கையொப்பந்தத்தில் எவ்வளவு உரிமை இருந்திருக்கிறது! என்று நம் தண்டமிழ்ப் பெண்டிர் குலம் அப்பண்டைய உரிமையைக் கண்டின்புறுமோ!

## 5. வரைதல்

***வரைதல்*** - மணத்தல். அது, ***களவு*** வெளிப்பட்ட பின் வரைதல், களவு வெளிப்படா முன்வரைதல் என இருவகைப்படும். தலைவி அறத்தொடு நின்றதை எல்லோரும் ஒத்துக் கொண்டபின் மணந்து கொள்ளுதல் - களவு வெளிப்பட்ட பின் வரைதல் ஆகும். தலைமகள் அறத்தொடு நில்லாமுன் தலைவன் தலைவியை உடன் கொண்டு சென்று தன்னூரில் மணந்து கொள்ளுதல் - களவு வெளிப்படா முன் வரைதல் ஆகும். இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாட்டுடன் மணந்து கொள்வதும் களவு வெளிப்படா முன் வரைதலின் பாற்படும்.

## வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்

மணம் உறுதியான பிறகு, அத்திருமணச் செலவுக்கு வேண்டிய பொருள் கொண்டுவரத் தலைவன் தன்னூர்க்குச் செல்வான். இது, வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனப்படும். வரைவு - மணம். இடைவைத்து - மணத்தின் முன். பொருளுக்காகத் தலைவியைப் பிரிந்து செல்வதெல்லாம் பொருட்பிரிவெனவேபடும். தலைவன் பொருள் கொண்டு வந்ததும் திருமணம் நடைபெறும். அம்மணமுறை கற்பு என்னும் தலைப்பில் கூறப்படும்.

## 6. உடன்போக்கு

தலைவி தலைவனுடன் போதல். தலைவன் தலைவியை உடன் கொண்டு செல்லுதல். இது, ***கொண்டுதலைக் கழிதல்*** எனவும்படும். தலைவனும் தலைவியும் ஒருவரை யொருவர் காதலித்துக் களவொழுக்க மொழுகி இருவரும் மணஞ்செய்து கொள்ள விரும்புவதைத் தலைவி பெற்றோர் தலைவியால் அறிந்து, அவள் கருத்துக் கிசைந்து அவனுக்கே அவளைக் கொடுப்பார். ஒருசில பெற்றோர், களவொழுக் கத்தை யறியாதும் அறிந்தும் அதற்கு உடன்படாதும், தலைவியை வெளிப் போகாது வீட்டினுள் வைத்துக் காவல் காத்து வருவர். அவ்விற் செறிப்பால், தலைவனைக் காணப்பெறாத தலைவி பிரிவாற்றாது வருந்துவாள். அது கண்ட தோழி, ஒருவருமறியாது தலைவியைத் தலைவனுடன் அவனூர் செல்ல அனுப்புவாள். தலைவியின் விருப்பத்தின்படியே தோழி தலைவியைத் தலைவனுடன் அனுப்புவாள்.

தலைவனுடன் தலைவி சென்றதை யறிந்த செவிலி அவளைத் தேடிச் செல்வாள். செவிலியே யன்றித் தலைவி சுற்றத்தாரும் தலைவியைத் தேடிச் செல்வர். தலைவியைக் கண்டதும் அவர்கள் தலைவியைத் திட்டிக்கொண்டே செல்வர். சுற்றத்தார் வருவதைக் கண்ட தலைவி, அவரிடம் செல்லாமல் அவர்கள் தலைவனுக்குத்

தீங்கு செய்வார்கள் என அஞ்சி, தலைவனைத் தழுவிக் கட்டிக் கொள்வாள். இது, ***கற்பொடு புணர்ந்த கௌவை*** எனப்படும். கௌவை - பழிச்சொல். கற்பொடு புணர்ந்த கௌவை யாவது - இல்லறம் நடத்த விரும்பிய தலைவி, சுற்றத்தார் கூறிய பழிச் சொல்லைப் பொருட் படுத்தாது தலைவனைத் தழுவிக்கொண்டனள் என்பதாம். நானே அவனோடு வந்தேன். அவனை ஒன்றும் செய்யாதீர் என்பது குறிப்பு.

தலைவியின் செயல் கண்ட சுற்றத்தார், தாம் எண்ணியது தவறென வுணர்ந்து, இருவரையும் அழைத்துக்கொண்டு வந்து மணமுடிப்பர். அல்லது தலைவியை அவனோடு செல்ல விட்டு மீள்வர். தலைவனும் சுற்றத்தாரும் கைகலப்பதும் உண்டு. இருவரையும் அழைத்துவந்து மணமுடிப்பதே பெரும்பான்மை. தேடிச் சென்றவர்க்குத் தென்படாமல் இருவரும் அவனூர் செல்லுவதும் உண்டு.

உடன்போக்கில் தலைவன் தேர், யானை, குதிரை முதலியன ஊர்ந்து செல்வான். தலைவியூர் வரும்போது அவ்வாறுதானே வந்தான்? செல்லும்போது தலைவியிடம், '***உன்னைக் கைவிடேன். கைவிடுதல் எனக்கு அறனன்று***' எனத் தன் கடமையைக் கூறிக்கொண்டு செல்வான். சுற்றத்தாரைக் கண்டு தலைவி அஞ்சின போதே அவ்வாறு வற்புறுத்திக் கூறுவான்.

இடைவிடாது இன்பம் நுகர்ந்து இல்லறம் நடத்த வேண்டும் என்ற விருப்பத்தினாலும், பொருள் தேடுங் கடமையுள்ள தலைவன் தன்னைப் பிரிய நேரும் என்ற அச்சத்தினாலும், ஊரவர் கூறும் அம்பலும் அலரும் களவை வெளிப்படுத்து மென்ற அச்சத்தினாலும், பிறர் தன்னை உற்றுப் பார்த்ததனால் தலைவனைக் கூடுதற்கு இடையூறு நேர்வதனாலும் தலைவி தலைவனுடன் செல்லத் துணிந்தாள். வரைய உடன்பட்டதும் இக்காரணங்களாலேதான். உடன் செல்லும் போது தலைவி, தாய்க்கும் தோழியர்க்கும் உரையெனத் தோழியிடம் கூறிச் செல்வாள்.

தோழி, தலைவனோடு தலைவியை அனுப்பும்போது '***இவள் இக்கட்டிளமைப் பருவம் ஒழிந்து நரை திரை வரினும் இன்றேபோற் பாதுகாப்பீராக***' எனத் தலைவனிடம் கூறி விடுப்பாள். தேடிச் செல்ல வெண்ணும் செவிலியைப் பார்த்து '***இருவரும் இனிதே செல்வதாக வழியில் கண்டோர் கூறினர்; ஆகையால், நீ சென்று இருவரையும் அழைத்துவா***' என்பாள்.

தேடிச் செல்லும் செவிலி, மரங்களையும் விலங்குகளையும் பார்த்து, 'என்மகள் செல்வதைக் கண்டீர்களா? செல்லும் வழியை எனக்குக் காட்டுங்கள்' என்று கேட்டுக் கொண்டே செல்வாள். தாயன்பின் தன்மைதான் என்னே!

***நற்றாய் :*** *மகள் மருமகனுடன் சென்ற பின், தலைமகளைப் பெற்ற நற்றாயின் செயல் பெற்ற தாயன்பை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதொன்றாகும் (அகத் - 36). மகள் தன் காதலனுடன் சென்று விட்டாள் என்பதைக் கேட்டதும் நற்றாய் வேறு யாரையும் குறைகூறவில்லை; யான் இதைக் கவனியாதிருந்தேனே யென்று முதலில் தன்னை நொந்து கொள்கிறாள்; பின்னர் காணாமல் தன் மகளை அழைத்துச் சென்றமைக்காகத் தலைவனையும், அதன் பின் சொல்லாமல் அவனுடன் சென்றமைக்காகத் தன் மகளையும் நொந்து கொள்கிறாள். அவ்வாறு நடந்து கொண்டவள், எப்படியோ கெட்டுத் தொலைந்து போகிறார்கள்; நமக்கென்ன? என்று வெறுப்புடனா இருந்தாள்? இல்லை; பின் என் செய்தாள்?*

*'தலைவி சென்ற இடம் மழை பெய்து மரங்கள் தழைத்து நிழலும் நீரும் உடையதாக இருக்க வேண்டும்; இப்போது அவள் இடையூறின்றிச் செல்ல வேண்டும்; தலைவன் என்றும் அவளை அன்போடு நடத்த வேண்டும்' என வேண்டுகிறாள். 'சென்ற இடம் இருக்க வேண்டுமாம்'. என்னே தாயுள்ளத்தின் தன்மை! 'அன்போடு நடத்த வேண்டும்' 'பெற்றமனம் பித்து, பிள்ளைமனம் கல்லு' என்பது எவ்வளவு பொருள் பொதிந்த பொன்னுரை? அதோடு, நன்றாக வாழட்டும் என்று எண்ணிக்கொண்டே சும்மா இருந்தாளா? அது தான் இல்லை.*

*தான் முன்னர் எச்சரிக்கை யில்லாதிருந்த குற்றத்தையும், மழையின்மையால் செல்லும் வழி கொடிதாக இருந்திருக்கும் என்பதையும், இப்போது இடையூறு நிகழும் என்பதையும், பின்பு தலைவன் அன்பின்றி நடத்துவான் என்பதையும் தானே கற்பனை செய்து கொண்டு அவற்றை வெறுத்தனள். தலைவன் தன்மையை யறியாமையானும், மகள் செல்லுமிடத்தை யறியாமையானும் அவ்வாறு ஐயங் கொண்டு வெறுத்தனள். முன்னர் நன்மையுண்டாக வேண்டுமென்றெண்ணினாள்; பின்னர் அதற்கு மாறாகத் தீமை யுண்டாகா திருக்க வேண்டு மென்றும் எண்ணினாள். செல்லும் வழியில் கொடிய விலங்குகளையும், ஆறலைப்போரையும் கண்டு தலைவி அஞ்சுவாளென அஞ்சினாள்; தேடிச் சென்றவர் தலைவனுக்கும் தலைவிக்கும் தீங்கு செய்வரோ என்றும் அஞ்சினாள்.*

*மேலும், தலைவி இங்கு வந்து சேருவாளோ என வேலனைக் கேட்பாள்; 'காக்கை கரைந்தால்' வந்துவிடுவாள் என எண்ணுவாள்; 'ஆகும்' என்று யாராவது சொல்வார்களா என நற்சொல்லை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள்; கட்டும், கழங்கும் பார்ப்பாள்; தோழியின் ஆற்றாமை கண்டு வருந்துவாள்; தேடிச் சென்றவர் தலைவியைக் காணாது மீண்டு வரக்கண்டு வருந்துவாள்;*

இனி, தலைமகள் தலைமகனுடன் அவனூரை யடைந்தனள் எனக் கேட்டு மகிழ்வாள்; தேடிச் சென்றவர் இருவரையும் அழைத்து வரக்கண்டு மகிழ்வாள்; தலைவியைச் சுற்றத்தார்க்குக் காட்டி மகிழ்வாள்.

இத்தாயன்பைப் பருவமடைந்த ஒவ்வொரு காளையருங் கன்னியருங் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டும். அதன் மேல் அவர்கள் தங்கள் கருத்தை முடிவு செய்ய வேண்டும்.

**கண்டோர்**

உடன் போகும் காதலர்களை வழியிற் கண்டவர் (அகத்-40). தலைவனும் தலைவியும் செல்லும்போது வழியிற் கண்டவர்கள், காதலர்களைப் பார்த்து, ‘பொழுது சென்றது; இருள் வந்தது; கொடிய விலங்குகளும் ஆறலைக் கள்வரும் உள்ள அரிய வழி; ஆகையால், நீங்கள் இருவரும் இந்நேரத்தில் தனியாகச் செல்லுதல் தகாது; எங்கள் ஊர் அதோ பக்கத்தில்தான் இருக்கிறது; நீங்கள் செல்ல விருக்கும் ஊரோ மிகுந்த தொலைவில் இருக்கிறது; ஆகையால், இன்றிரவு எங்களூரில் தங்கிச் செல்லுங்கள்’ என்று அன்போடு வேண்டுவர். தமிழ் உள்ளம் படைத்தவர் அல்லவா அவர்! காதலர்களிடத்து அன்புடைய நெஞ்சினராகி, மனமிரங்கி, இனி இதற்கு மேற் செல்ல முடியாது; எம்மூர்க்கு வாருங்கள் என அழைத்துச் செல்வர். விருந்தோம்பல் தமிழரின் தனிப் பெருங்குண மல்லவா? இவரிங்ஙனமாக.

தேடிச் சென்ற செவிலியின் நிலை கண்டு, ‘அன்னாய்! நீ வருந்த வேண்டா; அவர்கள் அன்பால் ஒன்று பட்டனர்; நீ அவர்கள் சேர்க்கையைச் சிதைத்தல் வேண்டா’ எனத் தடுப்பர். சிலர், நாங்கள் அவர்களை இன்ன இடத்துக் கண்டோம்; போய்ப் பார்த்து, அவளை அவனுக்கே கொடுங்கள் எனக் கூறிப்போக விடுவர்.

காதலர்கள் தலைவனூருக்குச் செல்லும்போதும், செவிலியோ, தமரோ மீட்டுக் கொண்டு வரும் போதும், அல்லது மணம் செய்து கொண்டு பின்னொரு நாள் வரும்போதும் அன்பு பாராட்டுவர். கண்டோர் ஓரிடத்தில் உள்ளவரல்லர். வழியில் கண்டோரெல்லாம் கண்டோரே யாவர். அப்பலருமே உடன்போக்கிற்கு உதவி செய்தோராவர். இதனால், பழந்தமிழ் மக்கள்பால் களவொழுக்கம் பெற்றிருந்த மதிப்பின் அளவு பெறப்படும். இக்காலக் கண்டோரெனின், அக்காதலர் காதல் என்னவாயிருக்கும்?

# ௬. கற்பு

***கற்பாவது*** - களவு முற்றிய தலைவனும் தலைவியும், கொடுக்கும் முறைமையையுடைய தலைமகள் பெற்றோர் உடன்பட்டுக் கொடுப்ப மணஞ் செய்துகொண்டு இல்லறம் நடத்துதல். கற்பு - இல்லறம்.

***கற்பு*** - களவொழுக்கத்தின் கனி. அதாவது, அன்பின் வெற்றி, தலைவனும் தலைவியும் எதிர்ப்பட்டுக் கொண்ட காதலன்பு கெடாமல் இருவரும் மணந்து கொண்டு இல்லறம் நடத்துதலும், தலைவன் பிரியின் தலைவி அன்பு வழுவாமல் ஆற்றியிருந்து வெற்றி பெறுதலும் உடைமையின் இது, கற்பு எனப்பட்டது. ***"மறைவெளிப் படுதல் கற்பு"*** (செய் -187) எனல் காண்க. கணவன் மனைவி இருவரையும் ஒன்றுபடப் பிணித்து நிற்கும் மனங்கலந்த அன்பின் பயனே கற்பாகும். அவ்வன்பு காதலாகும்.

நனிமிகு பழங்காலத்தே யாதொரு சடங்கும் இன்றி, இயற்கையை ஒட்டியே மணவினை நடந்து வந்தது. அது **வரைவுடன் பட்ட காதலர்களின் பெற்றோரும் வரைவுடன் படுதலே யாகும்.** அதாவது, மணஞ் செய்து கொள்ள முடிவு செய்த காதலர்களின் பெற்றோரும் அதற்கு உடன்படுதல். பெண்ணின் பெற்றோர் உடன்பாடு கொள்ளுதலே மரபு. பிற்காலத்தே சில சடங்குகள் உண்டாக்கப்பட்டன. அச் சடங்குகளுடன் கூடிய மணமுறையே 88, 136 அகநானூற்றுப் பாடல்களிற் குறிக்கப்படுவது. அது வருமாறு,

### 1. சடங்கு

இருவர் பெற்றோரும் காதலர் கருத்துக் குடன்படுவர். பின்னர் மணமகன் பெற்றோர் சுற்றஞ் சூழ மணமகள் வீடு சென்று விருந்துண்டு, மணவினை நாளைக் குறித்துக் கொண்டு மீள்வர். பின்பு இரு பெற்றோரும் சுற்றத்தார்க்கும், நட்பினருக்கும் அழைப்பு விடுவர். குறித்த நாள் வந்ததும் பந்தலிடுவர். பந்தலின் கீழ் மணலைப் பரப்பி, மாலை தொங்க விட்டு, விளக்கேற்றி வைப்பர். நட்பும் சுற்றமும் வந்து அத்திருமணப் பந்தலில் அமர்வர். பல்லியம் முழங்க இல்லுறை தெய்வ வழிபாடு செய்வர்.

பின்னர் மூன்று அல்லது ஐந்து மங்கல மகளிர் சென்று புதுக்குடங்களில் நீர் கொண்டு வந்துபுதுத்தாழியில் ஊற்றி, அந்நீருள் பூவையும் நெல்லையும் இடுவர்.

*பின்பு மணமகளை ஒரு மணையிலிருத்தி, மக்களைப் பெற்ற நான்கு மகளிர் மணமகளைச் சுற்றி நின்று, மூதாட்டியர் சிலர் தாழியிலுள்ள நீரை மொண்டு தரத்தர வாங்கி, 'ஏ நங்காய்! கற்பினின்றும் வழுவாது, இல்லற நிகழ்ச்சிக்கு வேண்டுவன உதவி, நின் கணவனைப் பேணும் துணைவியாவாயாக' என வாழ்த்தி நீராட்டுவர். இது,* ***வதுவை மணம்*** *எனப்படும். வதுவை மணம் - நீராட்டுதல்.*

*நீராட்டிய பின், வாகை இலையும் அறுகம் புல்லும் சேர்த்து வெண்ணூலினால் கையில் காப்புக் கட்டி மணையில் இருத்துவர். பெண்ணின் பெற்றோர் வந்து, 'குழந்தாய்! உன் விருப்பப்படியே,நீ விரும்பியவனுக்கே கொடுக்கிறோம். நீ அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாகி இணை பிரியாது இன்புற்று வாழ்வாயாக' என வாழ்த்திக் கொடுப்பர். யாவரும் வாழ்த்துவர். இதுவே கடைச் சங்க கால மணமுறை.*

*மணமகன் பெற்றோர் மணமகள் வீடு சென்று விருந்துண்டு மணவுறுதி செய்துவருதல் இன்றும் வழக்கிலுள்ளது. பண்டு போலவே இன்றும் அது.* ***பருப்புஞ்சோ றுண்ணல்*** *என்றே வழங்கி வருகிறது.*

## 2. மணவினைக் காலம்

*மழை, மிகுகுளிர், மிகுபனி இல்லாததும், நிலவொளியுள்ளதுமான காலமே மணவினைக் கேற்ற காலமாகும். தை முதல் ஆவணி வரையுள்ள காலமே பிரிவிற்குரிய காலமாதலாலும், மனைவியைப் பிரிந்தும், உடன் போயும் மணஞ் செய்து கொள்வதாலும் அக்காலமே மணவினைக் கேற்ற காலமாதலை அறிக.*

*மேலும், ஆவணி முதற் றொடங்கும் கார் காலத்தே செய்த பயிர் தை மாதத்தே அறுவடையான பின், தை முதல் ஆவணி வரை ஓய்வுக் காலமாதலால், அக்காலமே மணவினை முதலியன செய்வதற்கு ஏற்றதாதல் காண்க.*

**"கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்**
**கோள்கால் நீங்கிய கொடுவெண் திங்கள்**
**கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென"** **(அகம் -86)**

**"அங்கண் இருவிசும்பு விளங்கத் திங்கள்**
**சகடம் வேண்டிய துகள்தீர் கூட்டத்து"** **(அகம் -136)**

*எனக் காண்க. கனைஇருள் அகன்ற கவின் பெறு காலை -வளர் பிறைக்காலம். நாள், நட்சத்திரம். சகடம் - உரோகணி நாள்; வளர் பிறையிலேயே திங்கள் உரோகணியைக் கூடும். வளர்பிறையாகிய முன்பனிக் காலமே மணவினைக்கு ஏற்ற காலமாகும்.* '***மனை***

***விளக்குறுத்து'*** *(அகநா -86) என்பதால், இராக்காலமே அக்கால மணக்காலமாகக் கொண்டமை பெறப்படும். இன்றும் பெரும்பாலும் தை முதலும், இராக்காலத்தினுமே மணவினை நடந்து வருகிறது.*

## 3. மணவகை

*1. களவு வெளிப்படாமுன் - தலைவி அறத்தொடு நில்லா முன் - தலைவன் பிறரறியாமல் தலைவியைத் தன்னூர்க்கு அழைத்துக் கொண்டு போய் மணஞ் செய்து கொள்ளுதல். இம்மணம், கொடைக்குரி மரபினரான தலைமகள் பெற்றோர் கொடாமல் நிகழும்; பெற்றோர் இன்றி நிகழும்.*

*2. களவு அலராக - ஊரார் அறிய - தலைவியை உடன் கொண்டு போய்த் தலைவனூரில் மணஞ் செய்து கொள்ளுதல். இதுவும் கொடைக்குரி மரபினர் இன்றி நிகழும்.*

*3. அவ்வாறு உடன் கொண்டு செல்லும்போது, செவிலி அல்லது தலைவியின் சுற்றத்தார் சென்று, இருவரையும் அழைத்து வந்து மணஞ்செய்தல்.*

*4. உடன் போன தலைவியின் பெற்றோர் தலைவனூரிற் சென்று மண முடித்தல்.*

*5. களவு வெளிப்பட, தலைவி அறத்தொடு நிற்க, பெற்றோர் உடன்பட்டு மண முடித்தல் எனக் களவின் வழிவந்த மணம் ஐந்து வகைப்படும்.*

*6. இவ்வாறன்றி, களவொழுக்க மொழுகாது மணஞ் செய்து கொள்ளுதலும் உண்டு. இது சிறுபான்மை. அதாவது ஒரு சிலரிடை நிகழ்ந்து வந்தது. இது களவின் வழி வாராத மணம் எனப்படும். களவின் வழி வாரா மணத்திலும், மணமக்களை எதிர்ப்படச் செய்து, அவர் உடன்பாடு பெற்றே மணஞ் செய்வர். பெரும்பாலும் எல்லாப் பெற்றோரும் களவொழுக்க மொழுகி மணந்து கொண்டவர்களே யாதலால், களவின் வரிவாரா மணத்தினும் பிறப்பு முதலிய பத்துப் பொருத்தமும் (மெய் -24) உடையவர்களையே வாழ்க்கைத் துணைவர்களாக்குவரென்க.*

*இவ்வறுவகை மணத்துள், முன்னைய ஐவகை மணமும் செய்து கொண்டு இல்லறம் நடத்துதல் -* ***களவின் வழி வந்த கற்பு*** *எனவும், ஆறாவது மணஞ் செய்து கொண்டு இல்லறம் நடத்துதல் -* ***களவின் வழி வாராக் கற்பு*** *எனவும் பெயர் பெறும்.*

## 4. கட்டுப்பாடு

*நனிமிகு பழங்காலத்தே, பிறப்பு முதலிய பத்தும் ஒத்த ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு*

*களவொழுக்க மொழுகிக் காதல் முதிர்ந்தபின் - களவு முற்றிய பின் - பலரறிய வெளிப்படையாய் வாழ்க்கை நடத்தி வந்தனர் (கற் -4). இதுவே பகுத்தறிவுள்ள மக்களின் (மர-33) இயற்கை வாழ்வியலாகும். தத்தம் வாழ்க்கைத் துணைவரைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையுடையவர், அவ்வாறு தேர்ந்தெடுத்துக் கொண்டபின், எதற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்களோ அதற்கு - வாழ்க்கை நடத்தும் உரிமைக்கு - பிறர் கையை எதிர்பார்த்து நிற்பதென்பது இயற்கைச் சட்டத்திற்கு மாறுபட்டதன்றோ? எனவே, பிற உயிர்கள் அவ்வாறே வாழ்க்கை நடத்திவர, அவற்றினும் ஒருபடி உயர்ந்த, ஆறாவ தறிவொன்றுடைய மக்கள், தத்தம் வாழ்க்கைத் துணைவர்களைத் தேர்ந்தெடுத்துத்தாமே தொடங்கி வாழ்க்கை நடத்துதலே இயல்பும் ஏற்புடைத்து மாகும்.*

*அவ்வாறு தமது வாழ்க்கைத் துணைவரைத் தாமே தேர்ந் தெடுத்துத் தாமே தொடங்கி வாழ்க்கை நடத்தி வருகையில், காலக்கடப்பில், ஒரு சில தலைவர், களவொழுக்க மொழுகிக் களவு வெளிப்பட்ட பின்,* ***'நான் இவளைக் காதலிக்கவில்லை'*** *எனப் பொய் பேசியும், ஒரு சிலர், களவொழுக்க மொழுகிப் பலரறிய வாழ்க்கை நடத்தி வந்து பின்னர் அவளைக் கைவிட்டும் வந்தனர்.*

*அது கண்ட குலப் பெரியார்கள், ஒரு சிலரிடை நடை பெற்று வரும் இக் கெட்ட பழக்கம் பலரிடைப் பரவக் கூடுமென அஞ்சி, இனி, களவொழுக்கம் ஒழுகிக் களவு வெளிப்பட்டபின் இல்லை யென்று பொய் சொல்லக்கூடாது; பலரறிய ஏற்றுக்கொண்ட ஒருத்தியை என்றும் கைவிடக்கூடாது. அவ்வாறு களவொழுக்கம் ஒழுகி இல்லறம் நடத்தத் தொடங்குவோர் இனிப் பலர் முன்னிலையில், பெற்றோர் உடன்பட்டுக் கொடுக்கப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர். இதையே ஆசிரியர்* ***"கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வது"*** *(கற் -1) என்றார். அக் கட்டுப்பாட்டின் படியே பின் எல்லாத் தமிழ் மக்களும் ஒழுகி வந்தனர். இதையே,*

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப."** **(கற் -4)**

*பொய் - ஒருவன் ஒருத்தியோடு களவொழுக்கம் ஒழுகி விட்டு நான் ஒழுகவில்லை என்று பொய் பேசுவது.*

*வழு - அவ்வாறு சொல்லுதலே யன்றி, ஒருத்தியோடு களவொழுக்கம் ஒழுகிச் சில நாள் வெளிப்படையாக வாழ்க்கை நடத்திவிட்டு அவளைக் கைவிட்டுவிடுவது. வழு - தவறு. கரணம் - மணவினை. ஐயர் - குலப்பெரியோர்.*

குலப்பெரியோர்கள் ஒன்று கூடி 'மணவினை' என்னும் ஒரு கட்டுப் பாட்டை ஏற்படுத்தினர். அதுதான் தலைமகள் பெற்றோர் கொடுப்பக் கொள்வது. ஆசிரியர், 'என்ப' என்று பிறர்வாய்க் கேள்வியாக, அல்லது நூலறிவாகக் குறிப்பது தமிழரது மணவினையின் தொன்முது பழமையைக் காட்டும். இக் கட்டுப்பாடு தொல்காப் பியருக்கு நெடுங்காலத்திற்கு முன்னர் ஏற்பட்டதாகும். இம் மணவினையில் எவ்வகைச் சடங்கும் இல்லை. மணமகள் பெற்றோர் உடன்பட வெளிப்படையாகக் குடும்பம் நடத்துதலேயாகும். இம்முறையே கடைச் சங்க காலம் வரை நடந்து வந்தது, அதன் பின் முன்பு காட்டிய கடைச் சங்க கால மணமுறை ஏற்பட்டிருக்கிறது.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே பொய்யும் வழுவுந் தோன்றி ஐயர் கரணம் யாத்திருப்பதால் 'பொய்யும் வழுவுந் தோன்றுதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே களவுங் கற்புமாகிய வாழ்க்கை முறை நடந்து வந்திருக்கு மாகையால், ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு களவொழுக்க மொழுகிக் காதல் முதிர்ந்து வெளிப்படையாக வாழ்க்கை நடத்தி வந்த தமிழர் நாகரிகத்தின் நனிமிகு பழமை அறிந்து இன்புறற் பாலதாகும்.'

### 4. மண வேற்றுமை

இவ்வாறு குலப் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட கட்டுப் பாட்டின்படி, எல்லாத் தமிழ்மக்களும் ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு மணஞ்செய்து கொண்டு வாழ்ந்து வருகையில், '***நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல்***' தமிழ் மக்களுக்குள் மணவேற்றுமை உண்டாகத் தலைப்பட்டது. இக்காலந்தான் தமிழ் மக்கள் வெவ்வேறாகப் பிரிவுபட்டதன், பிரிக்கப்பட்டதன் தொடக்க காலமாகும். அவ்வேற்றுமைதான் நாளடைவில் வளர்ந்து வந்து, இன்று '***கலப்புமணம் கலப்புமணம்***' என்று கதறும் நிலைமையை உண்டாக்கி விட்டது. பொய்யும் வழுவும் போக்கிய குலப் பெரியோர்களின் சொல் இப்போது செல்ல வில்லைப் போலும்!

இதுநாள் வரையிலும் - ஐயர் கரணம் யாத்த காலம் தொட்டு - அதற்கு முன்னிருந்தே, அரசர், வணிகர், உழுவித் துண்ணும் வேளாளர், உழுதுண்ணும் வேளாளர், என்னும் நால்வகைப் பட்ட தமிழ் வகுப்பினருக்கும் ஒன்றாக நடந்து வந்த மணவினை - அந்நால்வரும் கொண்டு கொடுத்து வந்த முறை - இதிலிருந்து உழுதுண்ணும் வேளாளர்க்கு வேறானது. மேல் மூவரும் உழுதுண்ணும் வேளாளருடன் கொண்டு கொடுப்பதை நிறுத்திக்கொண்டனர். அரசர் முதலிய மூவரும் ஒன்றாகக் கொண்டு கொடுத்தும், உழுதுண்ணும் வேளாளர் தங்களுக்குட் கொண்டு கொடுத்தும் வரலாயினர். உழுதுண்ணும் வேளாளர் என்பது, மற்றெல்லாத் தொழிலாளர்களையுங் குறிக்கும். 'நாற்பால்' என்னும் தலைப்பிற் காண்க. இதனையே ஆசிரியர்,

**"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்**
**கீழோர்க் காகிய காலமும் உண்டே."** (கற் -4)

என்றனர்.

'மேலோர் கீழோர்' என்பன - முன்னவர், பின்னவர் என்ற அளவில் நின்றன. '***காலமும் உண்டே***' என்பது, ஆசிரியர் காலத்திற்கு முன் நெடுங்காலங் குறித்து நின்றது.

இடைச்சங்க காலத்திற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே, அரசர் முதலிய மூவர்க்கும் மற்றவர்க்கும் மணவேற்றுமை உண்டாயிற்று. அதற்கு நெடுங்காலத்திற்கு முன்னர் ஐயர் கரணம் யாத்தனர். அதற்கு நெடுங்காலத்திற்கு முன்னிருந்தே ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தனர் எனின், தமிழர் நாகரிகத்தின் தொடக்க காலம் எத்தனை ஆயிர ஆண்டுகட்கு அப்பாற்பட்டதோ!

மேலோர் மூவர்க்கும் கீழோர்க்கும் மணமேற்றுமை ஏற்படாமுன், எல்லாத் தமிழ் மக்களும் ஒன்றாக மணந்துகொண்டு வாழ்ந்து வந்தனர். அந்த நனி நற்காலம் இனித் தமிழர்க்கு வாய்க்கப் பெறுமோ!

## 5. கற்பும் கரணமும்

கற்பு என்பது-இல்லொழுக்கம், அதாவது, களவொழுக்கம் ஒழுகி மணஞ் செய்து கொண்டு ஊடியும், கூடியும் வாழ்வதே கற்பு எனப்படும். அவ் வில்லொழுக்கத்தின் பாற் கொண்ட மனவுறுதியும் கற்பு எனப்படும். 'கற்பென்னும் திண்மை' (குறள் -54) என்றார் வள்ளுவர். திண்மை - மனவுறுதி. கரணம் என்பது - மணவினை. கரணம் - காரணம். அதாவது, கற்பொழுக்கத்திற்குக் காரணம்.

இங்ஙனமன்றி, கணவனைத் தெய்வமெனக் கொண்டு வழிபட்டு, அவனுக்காக வாழ்வதே - ***அவன்வாழத் தான் வாழ்வதே - கற்பு எனவும், கரணம் - சடங்கு எனவும் கூறப்படுகின்றன.*** 'அது கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும், அவனை இன்னவாறே வழிபடுக எனவும் இருமுது குரவர் கற்பித்தலானும்..... கற்பாயிற்று' கரணமொடு புணர - 'வேள்விச் சடங்கோடே கூட' (கற் -1- நச்சி) என உரையாசிரியர்கள் காலத்தே இம்மாற்றம் உண்டாகி விட்டது. கற்பு, கரணம் என்பன பற்றி ஆசிரியர் ஆட்சியைக் காண்பாம்.

**"மறைவெளிப் படுதலும் தமரிற் பெறுதலும்**
**இவைமுத லாகிய இயல்நெறி பிழையாது**
**மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்**
**பிரிவொடு புணர்ந்து கற்பெனப் படுமே."** (செய் - 187)

மறை வெளிப்படுதலும் - களவொழுக்கம் வெளிப்படுதலும், தமரின் பெறுதலும் - சுற்றத்தார் கொடுப்பக் கொள்ளுதலும், இவை

முதலாகிய இயல் நெறி பிழையாது - என்பனவற்றை முதலில் உடையதாய் மணவினை முடிந்தபின், மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும் பிரிவொடு புணர்ந்தது கற்பு எனப்படும் - மலிவு முதலிய ஐந்துடன் கூடியது கற்பு எனப்படும்.

இயல் நெறி - இயங்கும் வழி - மணவினை களவு வெளிப்படுதலும், தமர் கொடுப்பக் கொள்ளுதலும் இயங்கும் நெறி. எனவே, மண வினையாயிற்று. இவை - அவ்விரண்டும். பிழையாது - தவறாது - முடிந்தபின்.

களவு வெளிப்பட்டு, தமர் கொடுப்பக் கொள்ளும் மணவினை முடிந்த பின், மலிவு முதலிய ஐந்தும் நிகழ்வது கற்பு எனப்படும் என்பதாம். எனவே, இல்லறவொழுக்கமே - இல்லறமே - கற்பு என்பது வெளிப்படை.

மலிவு முதலிய ஐந்தையும் கூறும் இயலுக்கு ஆசிரியர் **கற்பியல்** எனப்பெயரிட்டிருப்பதும், அகத்திணையைக் ***களவு கற்பு*** என இரு கூறாக வகுத்திருப்பதும் இதனை வலியுறுத்தும். களவு - மணவினைக்கு முன் நிகழும் ஒழுக்கம். கற்பு - மணவினைக்குப் பின்னிகழும் ஒழுக்கம்.

2. **"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே."** (கற் -2)

கற்பென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது, மணவினையொடு பொருந்த, கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைவன், தலைவியை, கொடுத்தற்குரிய முறைமையினையுடைய தலைவி பெற்றோர் கொடுப்பக் கொள்ளுதலாகும்.

கொள்ளுமுறைமையை யுடைய தலைவன், அம்முறைமை யையுடைய தலைவியை, கொடுக்கும் முறைமையையுடைய பெற்றோர் கொடுப்பக் கொள்வது - கரணம் எனப்படும்; அவ்வாறு கொண்டு இல்லறம் நடத்துவது - கற்பு எனப்படும்.

3. **"இடைச்சுர மருங்கின் அவள்தமர் எய்திக்**
**கடைக்கொண்டு பெயர்த்தலிற் கலங்கஞர் எய்திக்**
**கற்பொடு புணர்ந்த கௌவை"** (அகத் -41)

தலைவன் தலைவியை உடனழைத்துச் செல்லும்போது, செல்லும் வழியில், தலைவி சுற்றத்தார் தேடிச் சென்று அவளை அழைத்துச் செல்ல முயலுகையில், தலைவி மிக்க வருத்த முற்று, அவர்கள் பாற் செல்ல விரும்பாது, அப்போது சுற்றத்தார் சொல்லுங் கடுஞ்சொல் கற்பொழுக்கத் தோடே கூடியதாகையால், அதைப் பொருட்படுத்தாது தலைவனைத் தழுவிக் கொள்வாள்.

கௌவை - பழிச்சொல். அதாவது, '***எங்களை விட்டு விட்டு அவனோடு கூடி வாழத் துணிந்து விட்டனை*** என்று அவர்கள் திட்டியது, இல்லறத்தைப் பற்றிய தாகையால், அகற்காகவே அவனுடன் செல்லத் துணிந்த தலைவி அதைப் பொருட்படுத்த வில்லை. இதனால், அக்கடுஞ்சொல், '***கற்பொடு புணர்ந்த கௌவை*** எனப்பட்டது.

**4. "பாணன் கூத்தன் விறலி பரத்தை**
**தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்."** **(செய் - 190)**

பாணன் முதலிய பன்னிருவரும் கற்பிற் குரிய கூற்றுக்களாவர். அதாவது, தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்தும் போது கூறும் கூற்றுக்கள்.

**5. "கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்"** **(கற் -11)**

கற்பும் - இல்வாழ்க்கைச் சிறப்பும்.

**6. "களவும் கற்பும் அலர்வரை வின்றே."** **(கற்-21)**

களவொழுக்கத்தின் கண்ணும் கற்பொழுக்கத்தின் கண்ணும் அலர் எழுகின்ற தென்று கூறுதல் நீக்கும் நிலைமை யின்று. கற்பொழுக்கம் - இல்லறவொழுக்கம். அலர் - ஊர்மகளிர் கூறும் பழிச்சொல்.

**7. "உயிரினுஞ் சிறந்தன்று நாணே, நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று"** **(களவு -22)**

எல்லாவற்றினும் சிறந்த உயிரினும் மகளிர்க்கு நாண் சிறந்தது. அந் நாணினும், செயீர்தீர் கற்புக் காட்சி சிறந்தன்று - குற்றந் தீர்ந்த இல்லறம் நடத்துதல் நன்றென்று எண்ணுதல் சிறந்தது.

**8. "வெளிப்படை தானே கற்பினோ டொப்பினும்."** **(கள -50)**

களவு வெளிப்பட்ட பின் வரைதலானது கற்பினோ டொத்ததாயினும். கற்பினோ டொத்தலாவது - இல்லறத்தில் தலைவி உரிமை சிறந்து தலைமை யெய்தி நிற்பதுபோல, களவு வெளிப்பட்டபின் - அறத்தொடு நின்றபின் - தலைமை யெய்தி நிற்றல். இல்லாள்- மனையாள் என்னும் பெயர்ப் பொருளையறிக.

**9. "நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியிற்**
**புகழ்தகை வரையார் கற்பின் உள்ளே"** **(பொருள் -3)**

கற்பினுள் - கற்பொழுக்கத்தின் கண், தகை நிகழ் மருங்கின் - புலவி நிகழுமிடத்து, வேட்கை மிகுதியால் தலைவனும் தலைவியும் ஒருவரை யொருவர் புகழ்தலை நீக்கார். இல்லறம் நடத்தும்போது புலவி யுண்டானால், கூடல் விருப்பத்தால் ஒருவரை யொருவர் புகழ்ந்து கொள்வர் என்பதாம்.

10. **"கற்புவழிப் பட்டவள் பரத்தை ஏத்தினும்"** (பொரு - 39)

*இல்லறம் நடத்தும் தலைவி பரத்தையைப் புகழினும்.*

11. **"கற்பும் ஏரும்"** (பொரு.53)

*கற்பு - இல்லறத்தின்மேலுள்ள அன்புணர்ச்சி. இது இல்லறத் திற்குத் துணைசெய்யும் கணவனிடத்தும் கொள்ளப்படும்.*

*இங்ஙனம் எடுத்துக் காட்டப்பட்டவற்று ளெல்லாம் '**கற்பு**' என்னும் சொல் '**இல்லறம்**' என்னும் பொருளே குறித்தல் காண்க. இனி, கரணம் என்பது,*

1. **"கற்பெனப் படுவது கரணமொடு புணர"** (கற் - 4)

*கரணமொடு புணர - மணவினையொடு பொருந்த. விளக்கம் முன்னர்க் கூறப்பட்டது.*

2. **"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே**
**புணர்ந்துடன் போகிய காலை யான."** (கற்-2)

*தலைவி, தலைவனுடன் அவனூர்க்குச் சென்றபோது அங்கு கொடுப்போர் இல்லாமலும், கரணம் உண்டு - மணவினை நடத்தல் உண்டு. கொடுப்போர் - கொடைக்குரி மரபினரான தலைமகள் பெற்றோர்.*

3. **"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்"** (கற் -3)

*அரசர் முதலிய மூவர்க்கும் ஒன்றாகச் செய்யப்பட்ட மணவினை.*

4. **"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப."** (கற் -4)

*ஐயர் கரணம் யாத்தனர் - குலப் பெரியோர்கள் ஒன்று கூடி மணவினை என்னும் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர். இதன் விளக்கம் முன்னர்க் கூறப்பட்டது.*

5. **"கரணத்தின் அமைந்து முடிந்த காலை"** (கற் -5)

*அமைந்து கரணத்தின் முடிந்த காலை - களவொழுக்கம் ஒழுகி முதிர்ந்து, மணவினை முடிந்தபின். அமைந்து - களவு முற்றி.*

*ஈங்குக் காட்டியவற்றால், 'கரணம்' என்பது 'மணவினை' என்னும் பொருளே குறித்தல் காண்க.*

## 6. கற்பின் வகை

*கற்பின் இலக்கணம், முன் 'அகப்பொட்சுருக்கம்' என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ளது. கற்பு எனப்படும் இல்வாழ்க்கை யானது,*

1. மலிவு 4. உணர்வு
2.புலவி 5. பிரிவு
3. ஊடல்

என ஐந்து வகைப்படும் . (செய் -187)

### 1. மலிவு

அவற்றுள், மலிவாவது -களவு முற்றி மணந்து கொண்ட காதலர், மனக்குறைதீரக் கூடிக்கலந் தின்புற்று வாழ்தல். மலிவு - மகிழ்ச்சி. இம் மலிவுக் காலத்தே தலைவனும் தலைவியும் களவுக் காலத்தே நிகழ்ந்தவற்றைக் கூறி இன்புறுவர்.

நீ கை தொட்ட வேம்பும் எனக்குக் கரும்புபோல் இனிக்கின்றதே, அதன் காரணம் என்னெனத் தலைவன் தலைவியைக் கேட்பதும், அன்று களவுக் காலத்தே தங்களைப் பார்க்கவும் தொடவும் பெருநாண் அடைந்தேனே அதன் காரணம் என்னெனத் தலைவி தலைவனைக் கேட்பதும், அவர்கட்கே விளங்கா வியப்பைத் தருவ தொன்றாகும்.

பிற பெண்டிர் அஞ்சும்படி, தலைவி சிக்கனமாக இனிது இல்லறம் நடத்தும் திறத்தைக் கண்டு தலைவன் மகிழ்ந்து, தலைவியைப் பலபடப் பாராட்டுவான்; அதாவது,'என் அன்பே! நமது களவொழுக்க மன்றோ இக் கற்பொழுக்கத்திற்குக் காரணமாயிற்று! அக்களவின் சிறப்பே சிறப்பு' எனக் களவொழுக்கத்தைப் புகழ்வான் போலத் தலைவியைக் குறிப்பால் புகழ்வான்.

துறவியர், பெரியோர், பெற்றோர், சுற்றம் முதலியோரிடம் இன்னவாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தலைவன் தலைவிக்குக் கூறுவான். அன்னார் தலைவிக்குப் புதியவர்களாகையால், அவர்தம் இயல்புக் கேற்றவாறு தலைவி நடந்து கொள்ள வேண்டு மல்லவா? ஆகையால், அன்னார் இயல்புகளையே தலைவன் கூறுவான். குடும்பத் தலைமைப் பொறுப் பேற்றுக்கொண்டுள்ள அவள், அக்குடும்பத் தொடர்புடையார் இயல்பறிந்து கொள்ளுதல் இன்றியமையாத தன்றோ? என்னே நம் முன்னையோர் வாழ்க்கைத்திறன்!

தலைவி கருப்ப முற்றால் சுற்ற முதலியோர்க்கு விருந்திட்டு மகிழும் வழக்கம் இன்றுபோல் அன்றும் இருந்து வந்தது குறிப்பிடத் தக்கது. குழந்தை பிறந்தபின் தாய் எண்ணெய் தேய்த்துக் குளித்தலும், பாட்டன் பாட்டியர் குழந்தைக்குப் பெயரிடுதலும் இன்றுபோல் அன்றும் உண்டு. குழந்தையைக் காக்க வென இல்லுறை தெய்வ வழிபாடு செய்தலும் அன்று உண்டு.

பிள்ளை பெற்ற தலைவி, தலைவனைத் தழுவப் பெறாமையால், தழுவல் விருப்பந்தீரத் தலையணையைத் தழுவிக் கிடந்தாள்;

*தலைவன் வரவே, அவனைத் தழுவாது ஊடியிருக்கவே பிள்ளை பெற்ற பருவ மானதால் ஊடல் நீடிக்குமென அஞ்சிய தலைவன், தன்னைத்தழுவும்படி தலைவியின் மெல்லிய சீறடியைத் தொட்டுக் கேட்டான் (கற் -5). தலைவி என்ன செய்திருப்பாள் என்பதை நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள். அடுத்து முளைக்கும் புலவி ஊடல்களுக்கு இங்கே விதை போட்டாகிவிட்டது.*

*இது, காதற் கட்டடத்தில் ஒரு கருத்தமைந்த பகுதி! இல்வாழ்க் கையில் ஓர் இன்பக் கட்டம்! நாட்டு நடப்பில் ஓர் நகைச்சுவைப் பகுதி! அன்பு வாழ்க்கையின் அடிப்படைத் திட்டம்! ஆண் பெண் கூட்டு வாழ்க்கைத்தேரின் அச்சாணி! ஆனால், வெளியுலகுக்கு இஃதோர் அடிபணி படலம்! கால மறிந்து நடந்து கொள்ளும் நம் தலைவனது கூர்ந்த மதியே மதி!*

## 2—4. புலவி, ஊடல், உணர்வு

*இவை மூன்றும் ஒன்றை யொன்று பிரிக்க முடியாத பொருள்கள். கற்பில் இவையே சிறந்த பகுதியாகும். புலவி ஊடல்களால் காமம் சிறக்குமென்பது,* **"*ஊடுதல் காமத்திற்கின்பம்*"** *(குறள் - 1330) என்னும் வள்ளுவர் வாய்மொழியால் விளங்கும். காதலர்கள் உள்ளக் கிடக்கையை அப்படியே படம் பிடித்துக்காட்டும் பகுதி இதுவே யாகும். தலைமக்கள் இருவர்க்கும் ஒருவர்பால் ஒருவர்க்குள்ள அன்பு எத்தகைய தென்பதைக் காட்டவே நம் முன்னையோர் இப்பகுதியை அவ்வளவு மிகைபட விரித்துக் கூறியிருக்கிறார்களென்று தெரிகிறது.*

**"துனியும் புலவியும் இல்லாயிற் காமம்**
**கனியும் கருக்காயும் அற்று."** **(குறள்0**

*என்றார் வள்ளுவர். கனி - மிக முதிர்ந்த பழம் - அழுகிய பழம். கருக்காய் - இளங்காய். புலவி - மனவேறுபாடு. அதாவது, பொய்சினம். ஊடல் - புலவி நீட்டம். துனி - ஊடல் நீட்டம், அதாவது, புலவியின் முதிர்ச்சி - ஊடல். ஊடலின் முதிர்ச்சி - துனி.*

*இப்புலவி ஊடலுக்குக் காரணமானது தலைவனின் பரத் தைமையே யாகும். பரத்தைமை - அயன்மை. பரத்தையர் - அயல் மகளிர்; மனைவியல்லாத பிற மகளிர். பரத்தையர் உறவு - பரத்தைமை. பரத்தையரைப்பற்றி, 'பரத்தையர்' என்னும் தலைப்பில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அதை ஒரு முறை திருப்பிப் பாருங்கள்.*

*தாமே எதிர்ப்பட்டுக் களவொழுக்கம் ஒழுகி அன்பு முதிர்ந்து மணந்துகொண்ட தன் ஆருயிர்த் தலைவி யிருக்க, புணர்ச்சி யின்பத்தின் பொருட்டு வேறொருத்தியை விரும்புதல் ஆண்டன்மையில் மிக்க (கள-7) தலைவனுக்குத் தகுமோ வெனின், ஒருக்காலும் தகாது.*

ஒரு சிலரிடம் நடந்துவந்த அத்தீய ஒழுக்கத்தை விலக்குதற்கே இவ்வளவு மிகைபடக் கூறியதாமெனக் கொள்க.

இப் புலவியும், ஊடலும், தலைவற்கும் உண்டேனும், தலைவன் பரத்தைமையால் தலைவி மாட்டே நிகழ்வதாகக் கூறல் புலனெறி வழக்கம்.

## 1. தலைவன் ஊடல்

தலைவி ஊடிய வழி, தலைவன் தேற்றத் தலைவி தேறாளாயின் - உணர்த்த உணராளாயின் - தலைவனுக்கும் புலவியும் ஊடலும் உண்டாகும் (கற் - 15). அங்ஙனம் தலைவற்குப் புலவியும் ஊடலும் உண்டான போது, தலைவனது பரத்தைமையைப் போக்குதற்காக, தலைவன் கூறியதை உண்மையெனக் கொள்ளும் மடமைக் குணமுள்ள தலைவிக் கேற்றவா றறிந்து, 'உனக்கு தலைவி மாட்டுச் சிறிதும் அன்பில்லை. நீ மிகவும் கொடியை' என்றும் கூறித் தோழி தலைவனது ஊடலைத் தணிப்பாள் (கற் -17) அது தோழியின் கடமையாகும். தலைவிக் கேற்றவாறு கூறுதலாவது- தலைவி வருந்தா வண்ணம் கூறுதல்.

தோழி, 'அன்பிலை கொடியை' எனக் கடிந்து கூறியதைக் கேட்ட தலைவன் சினங்கொண்டானோ என ஐயுற்று, அவனது குறிப்பை யறிதற்கும், தான் கொண்ட துனி தலைவற்கு என்னாகுமோ என அஞ்சியும் தலைவி, 'நான் இறந்துபட்டாலும் சரி, அவரை அவ்வாறு கூறாதே' எனத் தலைவனை அயலான் போலக் கூறுவாள். (கற் -18). என்னே தலைவியின் கடமையுணர்ச்சி! தலைவி என்னும் பெயர் இவளுக்கன்றோதகும்!

தலைவியின் அப்பண்புரையைக்கேட்ட தலைவன், தலைவி ஊடல் தணிந்து கூட விரும்புகிறாள் என்பதை யுணர்ந்து ஊடல் தணிவான். இவன் தலைவிக்கேற்ற தலைவனாகவன்றோ இருக்கிறான்! இவ்வாறு தோழியும் தலைவியும் தன்னை அயலானாகக் கொண்டு கூறியவரி, தனக்குக் காம மிக்கவிடத்துத் தலைவன் தாழ்ந்து பணிமொழி கூறுவான். தலைவன் தன் தவறு சிறிதாய வழிப் புலப்பான், பெரிதாய வழிப் பணிவான் (கற் -19). இது இயல்புதானே! வாழ்வியல் எவ்வளவு நுணுக்கமானது பார்த்தீர்களா!

## 2. தலைவன் பணிதல்

புலவிக் காலத்துத் தலைவன் தலைவியைப் பணிதலும் தலைவி நாணாது அதை ஏற்றுக்கொள்ளுதலும் (பொரு -330) உண்டு. தோழியிடம் தலைவன் பணிமொழி கூறுதலும், அதை அவள் ஏற்றுக்கொள்ளுதலும் உண்டு. தலைவன் பணிதலும், தலைவியும் தோழியும் அப்பணிவை ஏற்றுக் கொள்ளுதலும் முறையன்றேனும்,

அன்னார் கூட்டுறவிற்குப் பயன்படுவதால் அகவாழ்வில் அது முறையாகக் கொள்ளப்படும். ஏன்? அவளும் தலைவிதானே! இன்றும் இம்முறை நடைமுறையில் உள்ளது அறிதற்பாலது.

அவ்வாறு பணிமொழிகூறி, பணிந்து தன்னைக் கூட எண்ணிய தலைவனை, அவனது முயக்கம் வேண்டிய தலைவி, மகனைத் தேற்றித் தழுவிக் கொள்ளுந் தாய்போல, ‘இதற்காகவா இவ்வாறு கலங்கினீர்? தங்களுக்கு உரிமையில்லையா?’ எனத்தேற்றித் தழுவிக் கொள்வாள் (கற் -32). இதற்காகத்தானே ஊடினாள்!

கடமை யுணர்ந்த தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்து தலின் இயல்பினைப் பார்த்தீர்களா? இவர்களன்றோ வாழ்க்கைத் துணை வர்கள்! எவ்வளவு பொறுப்புணர்ச்சி! இத்தகைய தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் கட்டாயம் கற்றுணர்ந்து கடைப்பிடித்தொழுகத் தக்க தொன்றன்றோ?

### 3. தலைவி ஊடல்

ஒரு சில பரத்தையர் தலைவன் வீட்டுக்கு வந்து, தலைவனால் தாமுற்ற, வருத்தத்தைத் தலைவியிடம் கூறுவர். அது கேட்ட தலைவி, அவர்கள் துயருற இரக்க மின்றி நீங்கினானென மகிழ்தலும், அவன் பிரிவிற்கு இவர் இரங்கினாரென ஊடுதலும் செய்வாள் (பொரு -41). பின்னர்த் தலைனிடம், ‘அவரை வருந்த விட்டு இங்கு எதற்காக வந்தீர்? எங்கையரை இவ்வாறு வருத்துதல் தகுமோ?’ எனக் கூறி ஊடுவாள். இவர் காதற் பரத்தையராவர். இன்றும் இப்பழக்கம் சில இடங்களில் உண்டு. பரத்தை யொழிப்புச் சட்டம் வருவதற்குமுன் பெரும்பான்மை உண்டு.

### 4. தலைவன் பழிகூறல்

தலைவனிடமிருந்து வந்த வாயில்களிடம் தலைவியும் தோழியும் தலைவன் பழிகளை வெளிப்படையாகக் கூறுவர் (பொரு -47). பழி - குற்றம் - பரத்தைமை. வாயில் - தூது. தோழி வரின் தலைவியும், தலைவன் ஆற்றாமையே வாயிலாக வரின் இருவரும் கூறுவர். ஆற்றாமையே வாயில் - தலைவன்தானே வருதல். இன்றும் இது பெருவழக்கு. இதனால், வாழ்க்கை நலத்தில் தலைவிக்குள்ள அக்கறை இவ்வளவென விளங்குகிற தல்லவா? ஒழுக்கத்தைப் பாதுகாப்பதில் பெண்டிரைப் போல ஆடவரும் அக்கறை கொண்டி ருந்தால், தீய ஒழுக்கம் என்னும் பெயரே ஏற்பட்டிருக்காதன்றோ? தலைவன் குற்றத்தை நேரில் கூறியாயினும் அவனைத் திருத்த முயலும் பெண்ணிற் பெருந்தக்க யாவுள!

## 5. புகழ்தல்

புலவிக் காலத்து வேட்கை மிகுதியால், தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் புகழ்ந்து கொள்ளுதலும் (பொரு -34), தலைவி தன் ஊடற் குறிப்புத் தோன்றத் தலைவன் முன் பரத்தையைப் புகழ்ந்து கூறுதலும் (பொரு-39), அது கொண்டு தலைவன் தலைவியின் ஊடற் குறிப்பறிதலும் உண்டு. தலைவி, வேறொரு தலைவியின் குணங்கள் இத்தன்மைய வெனக் கூறித்தலைவன் குறிப்பினையறிதலும் உண்டு ( பொரு - 40). தலைவன் குறிப்பு - பரத்தன்மை. எவ்வளவு நுண்ணிய ஆராய்ச்சி! இவையெல்லாம் கல்லாமல் கற்ற இயற்கைக் கலைத்திறன் போலும்! இதுதான் இன்று ‘சாடை பேசுதல்’ என வழங்குகிறது. சாடை பேசுதலிற் பெண்கள் தனித்திறமை வாய்ந்த வராவர்.

## 6. தலைவன் பரத்தைமை நீங்கல்

தலைவனது புறத்தொழுக்கம், தலைவியிடத்துள்ள அன்பைக் குறைப்பதோடு, நல்வாழ்வுக்கு இடையூறா யிருத்தலையும் உணர்ந்த தோழி, கடிந்து கூறியும், நயந்து கூறியும் அதை மாற்றப் பலவாறு முயன்று ஒன்றும் பயன்படாமையால், மேலும் மேலும் முயன்று முடிவாக ஒரு நல்வழி கண்டு பிடித்தாள்.

இல்வாழ்க்கை நடத்துதற் சிறப்பும். தலைவன் மாட்டு நீங்காத அன்புடைமையும், நல்லொழுக்கமும், மென்மைத் தன்மையான பொறையும், அடக்கமும், வறுமையும் செல்வமும் குறையாது எப்பொதும் ஒரே தன்மையாய் இயன்ற அளவில் விருந்தோம்பலும், சுற்றம் பேணலும், அட்டிற்றொழில் வன்மையும் தலைவியின் தனிப்பட்ட குணங்களாகும். தலைவியின் அத்தகு குணங்களை ஒரு நாள் தோழி தலைவனிடம் எடுத்துக் கூறி, இக்குணங்களில் ஒன்றும் பரத்தையரிடம் இல்லை யென்பதைக் குறிப்பா லுணர்த்தினாள். தலைவியின் அக் குணச் சிறப்பினைக் கேட்ட தலைவன், தலைவிபால் அன்புற்றுப் பரத்தைமை நீங்கினான் (கற் -11).

தோழி முடிவாகக் கண்டுபிடித்த நல்வழி நல்வழி தானே? என்னே தோழியின் மதிநுட்பம்! இத்தகைய மதி நுட்பம் வாய்ந்த தோழி யாலன்றோ தலைவன் தலைவியை அடைந்தான்? தோழியால் இருவரும் வாழ்க்கைத் துணைவர்களாயினர். தன்னால் உண்டாகிய அவ் வாழ்க்கையை இனிது நடைபெறச் செய்தல் அவள் கடமையன்றோ?

இத்தகைய உயர்குணங்கள் அமையப் பெற்ற தலைவியிருக்க, அக்குணங்களில் ஒன்றும் இல்லாத வேறொருத்தியை விரும்பும் தலைவனது செயல் வெறுக்கத்தக்கதேயாகும்.

தலைவன் பரத்தையிற் பிரிதலும், அதனால் தலைவி ஊடுதலும், அவ்வூடலை யுணர்த்தத் தலைவன் தோழி முதலிய வாயில் (கற் - 52) விடுதலும், தானே சென்று பணிமொழி கூறியும் பணிந்தும் உணர்த்தலும் முல்லை முதலிய நானிலத்தினும் நடைபெறு மெனினும், மருதநிலத்தில் நடைபெறுதலாகக் கூறுதலே புலனெறி வழக்கமாகும் (பொரு - 30). '**ஆக்கஞ்சே ருடல் அணி மருதம்**' எனல் காண்க.

## 7. கருத்தரிக்குங் காலம்

இன்று கருத்தடை பற்றிப் பலபடப் பேசப்படுகிறது. செயற்கை முறையன்றி, இயற்கைக் கருத்தடை முறை இன்னும் திட்டவட்ட மாகக் கண்டு பிடிக்கப்படவில்லை. ஆனால், தொல்காப்பியர் காலத் தமிழர் இயற்கைக் கருத்தடை முறையைக் கண்டறிந்து, வேண்டும் போது கருப்பெற்றும், வேண்டாத போது கருத்தடை செய்தும் வாழ்ந்து வந்தனர் என்பது வியத்தகு செயலேயாகும்.

**"பூப்பின் புறப்பா டீராறு நாளும்**
**நீத்தகன் றுரையார் என்மனார் புலவர்**
**பரத்தையிற் பிரிந்த காலை யான."** **(கற் - 46)**

பரத்தையில் பிரிந்த காலையான - தலைவன் பரத்தையிற் பிரிவின் கண் தலைவிக்குப் பூப்புண்டானால், பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும் - பூப்பு நிகழ்ந்த மூன்று நாளைக்குப் புறம்பான பன்னிரு நாளும், நீத்து அகன்று உறையார் என்மனார் புலவர். இருவரும் பிரிந்துறையார் என்று சொல்லுவர் புலவர்.

பூப்புப் புறப்பட்ட நாளிலிருந்து மூன்று நாட் போக நாலாவது நாளிலிருந்து பதினைந்து நாள் முடியவுள்ள பன்னிரு நாளும் கருத்தரிக்கும் காலமாகும். எனவே, ஒழிந்த பதினைந்து நாளும் கருத்தரியா தென்பது பெற்றாம். கருத்தரிக்கும் அப் பன்னிரண்டு நாளிலும் தலைவன் தலைவியைப் பிரியான். பிரியாதிருக்க வேண்டும். பூப்புப் புறப்பட்ட நாளும் மறுநாளும் கருத்தங்கின் அது உடனே அழியும். மூன்றா நாள் தங்கின அக் குழந்தை நீடு வாழாது. எனவே அம்மூன்று நாளும் புணரக்கூடாது. அம்மூன்று நாளும் கூட்டமில்லாதிருக்கினும், தலைவன் பரத்தையிடம் செல்லாமல் வீட்டிலேயே இருத்தலான், தலைவியின் புலவி நீங்கும். நீங்கவே, மகிழ்ச்சியுண்டாகும். அப்போது தரிக்கும் கருமாட்சிமைப்படும்.

நற்பிள்ளைப் பேற்றை விரும்புவோர், பூப்புப் புறப்பட்ட முதல் மூன்று நாளும் கூடாதிருந்து, நாலாநாள் மன மகிழ்ச்சியோடு கூடுதல் வேண்டும். அப்போது அமையுங் கரு, நல்ல அழகும்

குணமும் உடைய நற்பிள்ளையாகப் பிறக்கும். முதல் முந்நாட் கூட்டம் நோய்க்கும் இடமாகும்.

**"தீண்டாநாள் முந்நாளும் நோக்கார்நீ ராடியபின்**
**ஈராறு நாளும் இகவற்க என்பதே**
**பேரறி வாளர் துணிவு."** (ஆசாரக்கோவை - 42)

முதல் மூன்று நாளும் கருவமையாமையானும், நோய் தருதலானும், அம்மூன்று நாளையும் 'தீண்டா நாள்' என்றார். இது பற்றியே பூப்பு - 'தீட்டு' என வழங்கலானது. நோக்கார் - நினையார். இகவற்க - பிரியற்க - அகலற்க - கூடுக.

**"பூத்த காலைப் புனையிழை மனைவியை**
**நீரா டியபின் ஈராறு நாளும்**
**கருவயிற் றுறூஉம் கால மாதலின்**
**பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்."** (இல.அகத்-87)

என, இலக்கண விளக்க ஆசிரியர் இதற்கு ஒரு சிறு விளக்க முந் தந்துள்ளனர்.

ஆனால், பன்னி நாளும் கருத்தரிக்கு மெனவே, பதினாறாம் நாளிலிருந்து அடுத்த பூப்பு வரையிலும் கருத்தரிக்காது என்று உறுதிகூற முடியாது. காரணம், சில பெண்கட்கு மூன்று நாளைக்குப் பின்னரும் பூப்பு நிகழ்வதுண்டு. அது என்று அறவே நிற்கின்ற தென்பது அவர்களுக்கே தெரியாது. அது நிற்பதைப் பழந்தமிழர் தெரிந்திருக்கலாம். கருத்தடை பற்றிய ஆராய்ச்சி இன்னும் முடி வடையவில்லை. இது ஆராய்ச்சிக்குரியது.

## 8. இரண்டாம் தாரம்

இனி, களவொழுக்க மொழுகி மணந்து கொண்ட மனைவி யிருக்க ஒரு சிலர் இரண்டாந்தாரமாகப் பின்னுமொருத்தியை மணந்து கொள்ளும் வழக்கமும் அன்று இருந்திருக்கிறது. '***மின்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்***' *(க-31)* முதல் மனைவி தன் மகனைக் கோலஞ் செய்து பின்முறை மனைவியிடம் கொண்டு சொல்லினும் என்பதால், முதல் மனைவிக்குப் பிள்ளையில்லா மையால் இரண்டாவது ஒருத்தியை மணந்து கொண்ட தாகவும் தெரியவில்லை. இது பரத்தைமை போலச் சில செல்வரிடம், அடங்காமாறிகளிடம் நிகழ்ந்து வந்த தகாவொழுக்கமேயாகும். தொல்காப்பியம் ஒழுக்க நூலானதால், அதை மிகைப்படுத்தி வாழ்க்கையின் உறுப்புக்களிலொன்றாக்கிக் கூறப்பட்டது.

அப்பின்முறை மனைவியை - இரண்டாந்தாரத்தை - முன் முறை மனைவியாகிய தலைவி, விளக்கு முதலிய மங்கலப் பொருள்கள்

கொண்டு எதிரேற்றுக் கொள்ளுதலும், அவ்விரண்டாந்தாரம் தலைவனொடு புலந்தால், முதல் தாரம் - தலைவி - தன் மகனைக் கோலஞ் செய்து, அக்கோலத்தைக் காட்டச் செல்வாள் போல அவளிடம் வாயிலாகச் சென்று அப்புலவி நீக்குதலும், அது கண்ட தலைவன், அங்ஙனமாய இரு தலைவியரையும் விட்டுப் பரத்தைமை செய்து ஒழுகியதை நினைத்து வருந்தி அப்பரத்தையர் பால் வைத்த பற்று நீங்குதலும் உண்டு (கற் - 31)

இன்றும் இத்தகைய குடும்பங்கள் சில உள்ளன. இது ஆண்களின் அடங்காப்பிடாரித் தனத்திற்கும் பெண்ணடிமைக்குங் காரணமான தகாவொழுக்கமேயாகும். '**இரு தாரம் ஒருநாளும் கொள்ள வேண்டா**' என்ற மூதுரை இத்தகாவொழுக்கத்தைக் கண்டிக்க எழுந்ததேயாகும். தலைவி இரண்டாந்தாரத்தினிடம், வாழ்க்கைப் பொறுப்பிற்கும் சிறந்த எடுத்துக்காட்டாகுமன்றோ?

## 9. தலைவன் (கற் – 5)

இனி, இப்புலவி ஊடற்காலத்துத் தலைவன், தலைவி, தோழி, காமக்கிழத்தி என்போர் செயல்களாக ஆசிரியர் கூறும்பகுதி, பழந்தமிழ் மக்களின் வாழ்க்கை முறையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றது. அஃதாவது,

தலைவனது மார்புச் சந்தனத்தில் பிற பெண்டிர் செய்த நகக்குறி கண்ட தலைவி ஊடினாள். அதுகண்ட தலைவன். அன்பே! தலைவரோடு கூடி ஆறும், குளமும், காவும், ஆடி இனிது இல்லறம் நடத்தும் உலகத்துத் தலைவியர் போல நீயும் ஒழுகாது, இவ்வாறு மாறுபட்டு ஒழுகுதல் முறையோ? என அறவுரை கூறித் தலைவியின் ஊடலைத் தீர்த்தான். தலைவி ஒருவாறு ஊடல் தணிந்தாள். அறிவறிந்த தலைவியல்லவா!

தலைவன் ஒருநாள் பரத்தையிடத் திருந்து வந்தான். தலைவி பேசவில்லை. பேசாமல் மட்டும் இருக்கவில்லை. தனியாக ஓரிடத்திற் போய் உட்கார்ந்து கொண்டாள். தலைவனும் ஓரிடத்தில் தனியாக இருந்தான். தலைவனும் தலைவியும் தனித்தனியிருத்தலைக் கண்ட தோழி, தலைவியின் ஊடலைத் தணித்தாள். அதுகண்ட தலைவன் இருவரையும் புகழ்ந்தான். உதவி செய்தவரைப் புகழ்வது இயல்பு தானே!

வெளியூர் சென்ற தலைவன், தான் கூறிச் சென்ற நாள் கடந்து வந்தான். அதனால், தலைவிக்குண்டான பிரிவாற்றாமைத் துன்பத் திற்காக மிகவும் வருந்தினான். அவ்வாறு வருந்துதற்குக் காரணம் தலைவியின் புலவியேயாகும். பிரிவாற்றாமைத் துன்பங் காரணமாகத்

தான் தலைவி ஊடுகிறாளெனக் கொண்டே தலைவன் வருந்தினான். காதலின் பெருமைதானென்ன! இதனால், அக்காலத் தமிழ் மக்கள், சொற்றவறாமை என்பதை எவ்வாறு கடைப்பிடித் தொழுகி வந்தனர் என்பதும், காலவாட்சியும் இனிது விளங்கும்.

ஒரு நாள் தலைவி ஊடினாள்; ஊடல் துனியாக மாறிற்று. தலைவன் அத்துனி தீர்த்தற்குத் தலைவியை அணுக அணுக அவள் நீக்கி நிறுத்தவே, மீட்டும் மீட்டும் அணுகித் துனியைத் தீர்க்க முயன்றான். அவள் மேலும் துனி தீராது விலகி விலகிச் செல்லவே, 'என் அன்பே! என் ஆருயிரே! உன்னைச் சேராவிடின் நான் ஆற்றேன் ஆற்றேன்' என அவள் பின் தொடர்ந்து சென்றான். மேலும் மேலும் தலைவி நீங்கிச் செல்லவே, அதாவது, உணர்த்த உணராது ஊடவே, தான் தலைவியைத் தனியாக விட்டுச் சென்றால், அவள் இறந்து பட்டாலும் படுவாள் என ஐயங் கொண்டு, தலைவியைத் தனியாக விட்டுச் செல்லுதற்கு அஞ்சி அங்கேயே இருந்தான். தலைவன் பரத்தைமையே இதற்குக் காரணமாகும். தலைவிக்கு இவ்வளவு வெறுப்புண்டாக ஏன் நடந்து கொள்ள வேண்டும்? பின்னர் இவ்வளவு பாடேன் பட வேண்டும்? இத்தகைய பொறுப்புணர்ச்சி யுள்ள தலைவன் தலைவியிருக்கப் பரத்தையை நாடியது தான் நமக்கு விளங்கவில்லை.

## 10. தலைவி [கற் — 6]

இப்புலவியூடற் காலத்தே தலைவி பாடுதான் பெரும்பாடு. இவளுக்குத் தானே அவை சொந்தம்?

ஒரு நாள் புதிய பரத்தைபாற் சென்று வந்த தலைவனிடம் தலைவி தன் தனிமையைக் கூறி, தன் விருப்பத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு, 'நான் தான் இப்படியிருக்கிறேன். இது என் பாக்கியம். என் போல் ஏன் அவளுந் தனித்திருக்க வேண்டும்? ஊரெங்கும் தங்களைத் தேடுவாள். போதும் எழுந்து போங்கள்' என. வேறொருத்தியைக் கண்டது போல் கூறி வாயில் மறுத்தாள். தலைவன் மேலும் மேலும் பணிமொழி கூறி வேண்டினான். தலைவி மேலும் புலந்து, 'என்னைச் சும்மா தொந்தரவு செய்யாதீர். என் தங்கையராகிய பரத்தையரிடம் போய்ப் பேசுங்கள்' என வெறுப்போடு கூறினாள். மேலும் தலைவன் வேண்டவே, தலைவன் பரத்தையிடம் செல்லான் என்பதை அறிந்த தலைவி ஊடிய உளத்தளாய் 'போவது தானே, இங்கேன் இருந்து கொண்டு' என்று எழுந்து போய்த் தனியாக ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டாள். தலைவன் இதற்கு மேல் என் செய்வான் பாவம்! குற்றத்திற்குத் தகுந்த தண்டனைதானே!

தலைவி மகன் ஒரு நாள் தெருவில் விளையாடிக் கொண்டி ருந்தான். காமக்கிழத்தி அவனைத் தன் வீட்டுக்கு எடுத்துக் கொண்டு

போய் அவனோடு விளையாடினாள். பின் அவனைப் பார்த்து, 'குழந்தாய்! நீ பெரியவனானால் என்னைப் பாதுகாப்பாயா?' என்றாள். அவன், 'ஊஉ, காப்பேன்' என்றான். இதையெல்லாம் மறைந்திருந்து கண்ட தலைவி, அதைத் தலைவனிடம் கூறிப் புலந்தாள். பெண்களைப் போல் உளவறிவதில் வல்லவர் யாருளர்? காமக் கிழத்தி அச்சிறுவனிடம் தாய் முறை பாராட்டியது போலவே இன்றும் நடப்பிலுண்டு.

மற்றொரு நாள், தலைவி தன் மகனைத் தழுவி விளையாடிக் கொண்டிருந்தாள். தோழியர் முன்னால் நின்று கொண்டிருந்தனர். தலைவன் - தலைவிக்குத் தெரியாமல் பின்புறமாக வந்து நின்று, தோழியரைச் சும்மா இருக்கும்படி கையாற் பணித்து, அவ்விளை யாட்டைப் பார்த்துக் கொண்டு நின்றான். தந்தையைக் கண்ட மைந்தன், 'அத்தா அத்தா!' எனவே, தலைவன் தன் பின்னே நிற்பதை யறியாத தலைவி, 'அத்தா இருக்கிற இடத்தில் இருப்பார். நீயும் வேண்டுமானால் அங்கு போ!' எனக் கடிந்து கூறினாள். மறுபடியும் அச்சிறுவன் 'அத்தா அத்தா' எனவே, தலைவி பின்புறம் திரும்பிப் பார்த்து, தலைவன் நிற்பதைக் கண்டு, 'ஏன் இப்படி வந்து நிற்க வேண்டும்? யார் என்ன சொன்னார்கள்?' என்று எழுந்து, பிள்ளையை அங்கேயே விட்டுவிட்டு வீட்டுக்குட் சென்றாள். இது ஒரு நல்ல காதற் கட்டமல்லவா?

பின்னொருநாள், பிள்ளை தெருவில் விளையாடிக் கொண்டி ருந்தான். தலைவனும் அங்கிருந்தான். தாய் மகனைக் கூப்பிட்டாள். அவன் போகவில்லை. தலைவி தன் பிள்ளையைப் பார்த்து, '***தந்தையர் ஒப்பர் மைந்தர்*' என்றபடி, '*நீயும் உங்கப்பனைப் போலத்தானே இருப்பாய்?*' என்று தலைவனது பரத்தைமையைப் பழித்தாள். இன்றும் கணவனிடம் மனம் வேறுபட்டிருக்கும் பெண்கள், குறும்பு செய்யும் தன் பிள்ளையைப் பார்த்து இப்படிக் கூறுவதுண்டல்லவா?

ஒருநாள் தலைவி, தூது வந்த பாணனை வாயில் மறுத்து அனுப்பிவிட்டு, தலைவன் பரத்தை வீட்டுள்ளானென்பதையறிந்து சினமூண்டிருக்கும் போது தலைவன் அங்கு வந்தான். 'நீர் எங்கு சென்று இவ்வலங்கோலத்துடன் இங்கு வந்தீர்!' என்று வெட்டிறுப் பாகக் கேட்டாள் தலைவி. தலைவன், குதிரையேறி வந்ததால் இவ்வாறாயிற் றென்றான். 'தெரியும் நீர் ஏறின குதிரை' என்று மேலும் ஊடினாள் தலைவி. தலைவன் தான் செய்த கொடுமையைப் பொறுத்துக் கொள்ளும்படி தலைவி காலில் வீழ்ந்தான். அதுகண்ட தலைவி மிகவும் வெகுண்டு. 'பரத்தையர் இதைக் கண்டால் நன்றாக இருக்கும்' என்று ஊடல் தணிந்தாள். காலில் வீழ்ந்தது இது எத்தனையாவது முறையோ! குடும்பம் நடத்துவது பின்னெப்படி?

*இது கைகுறைத்த பாண்டியன் போலத் தன் குற்றத்திற்குத் தானே தண்டனை செலுத்திக் கொள்வது போலும்!*

*மற்றொரு நாள், பரத்தையர் விரும்பி யணிந்த நல்ல அணி கலன்களுடன் வந்த புதல்வனைப் பார்த்து, 'ஏது உனக்கு இந்த மோதிரம்? உன் தந்தையன் முன்கைக் காப்பை உனக்கு அணிந்தவர் யார்? நீ அவள் வீட்டிற்கு எதற்காகப் போனாய்? யார் கூட்டிப் போனார்?' எனச் சினந்து, அப்புறவணிகளைக் கழற்றி யெறிந்தாள்; அது முதல் தன் மகனைத் தந்தையோடு விடாமல் தடுத்துவந்தாள். அணியணிந்தவள் காதற் பரத்தையாவள். அவள் வீட்டுக்குத்தான் உரிமையுடன் மகனைக் கூட்டிக் கொண்டு போவான் தலைவன். இது இன்னும் நடைமுறையில் உள்ளது.*

*இவையெல்லாம் பலநாள் நிகழும் வாழ்க்கை நிகழ்ச்சிகளாகும். குடும்ப வாழ்க்கையென்பது என்ன கிள்ளுக் கீரையா? வாழ்க்கை வழியில் எத்தனையோ மேடு பள்ளங்கள், கரடு முரடுகள், கல்லு முள்ளுகள். அவற்றையெல்லாம் கடந்தால் தான் வாழ்க்கையின் பத்தையடைய முடியும். அதிலும் பெண் பிறப்போ குடும்ப வாழ்க்கையின் இடும்பைக் கொள்கலமாகும். அதன் மிச்சந்தான் இன்பம்!*

## 11. தோழி [கற் — 9]

*தோழியின் பெறுப்போ இப்புலவியூடற் காலத்து அளவி லடங்காததாகும். தலைவனது புறத்தொழுக்கங் காரணமாகத் தலைவனை நோகுந் தலைவியை, தலைவனது புறத்தொழுக்கத்தைத் தெரிந்திருந்தும், அவன் அத்தகையன் அல்லன் எனக் கூறித் தேற்றினாள். பொறுப்புள்ள தோழி பொய் பேசலாமோ? தலைவியின் வருத்தத்தை மாற்றுவதற்காகவே அவ்வாறு பொய் பேசினாள். '**புரை தீர்ந்த நன்மை பயக்கும்' எனில், பொய்ம்மையும் வாய்மையிடத்த வல்லவா?***

*தலைவன் பரத்தையர் மனையிலிருந்து வந்து புறமனையி லிருக்க, தோழி தலைவியிடம் சென்று தலைவனைக் குறை கூறித் தலைவியின் ஊடலைத் தீர்த்தாள். தலைவனைப் பிறர் குறை கூறுதலைத் தலைவி பொறாள் போலும்! அத்தகைய தலைவி குணத்தையறிந்து, அதற்குத் தகப் பேசி ஊடல் தீர்க்கும் தோழியின் மதிநுட்பமே நுட்பம்!*

*மதிநுட்பமுடைய தோழி, 'பரத்தையிற் பிரிவு கூடாது; நும்போன்ற குடிப்பிறந்தார்க்கு அது ஏற்றதன்று' எனத் தலைவனிடம் பணிவாகக் கேட்டுக் கொண்டாள். தலைவன் இல்லையென்றான். 'நீர் பரத்தையரோடு கூடி ஆறுங் குளமுங்காவும் ஆடினது எனக்குத் தெரியும். அதனால் அலரானது; இனி அவ்வாறு செய்தல் தகாது' என வேண்டிக் கொண்டாள். அவளிடமா செல்லும் ஏமாற்று!*

ஒருநாள் ஊடியிருந்த தலைவியிடம், தலைவன் தன் புதல்வனை வாயிலாகக் கொண்டு வந்தான். அதுகண்ட தலைவி மேலும் ஊடினாள். தலைவன் ஆற்றாது வருந்தியதைக் கண்ட தோழி, தலைவன் நிலையைத் தலைவிக்கு எடுத்துரைத்து ஊடல் தீர்த்தாள். பின்னர்த் தலைவன் பரத்தையரிடம் செல்லக் கருதின போது, 'நீ பிரிந்தால் தலைவி தனது எழில் நலத்தையிழப்பாள். அப்படி நீ போவதாய் இருந்தால் அவள் அதை இழக்காமற் செய்து விட்டுப் போகவும்' எனத் தடுத்தாள். தோழியின் சொல்வன்மையைப் பார்த்தீர்களா? அதை இழக்காமல் செய்து விட்டுப் போவதெப்படி? போனால் தான் அதுவும் கூடவே போகிறது! போகவேண்டா என்பது தானே பொருள்?

ஒரு நாள் ஒரு பரத்தை தலைவி வீட்டுக்கு வந்து, 'யான் நினக்குத் தங்கையாவேன்' என உரிமை கொண்டாடி, தலைவியின் நெற்றியையும் கூந்தலையும் நீவினாள். இது உரிமையின் அறிகுறி போலும்! தலைவியைச் சிறிதும் மதியாத அப்பரத்தையின் தீச் செயலுக்குத் தலைவி நாணியதைத் தோழி தலைவனிடங் கூறி, அவ்வொழுக்கத்தை விட்டு விடும்படி அன்போடு கேட்டுக் கொண்டாள். செவ்வியறிந்து செயலாற்றுந் தோழியின் திறனே திறன்!

'இனி நான் கட்டாயம் பரத்தையிடம் செல்லேன்' எனக் கூறிய சூள் - உறுதிமொழி - தப்பித் தலைவன் பரத்தையிடம் சென்றது கண்ட தலைவி வருந்துவதை எடுத்துக்காட்டி, நன்மக்கள் பலரும் புறத்தொழுக்க மில்லாக் குணத்துடன் இருந்து இனிது இல்லறம் நடத்திவர, தாங்கள் அதற்கு மாறாக நடத்தல், தங்கள் பெருமைக்குத் தகாதெனத் தலைவனது பரத்தைமையைக் கடிந்து கூறினாள். அங்ஙனம் தலைவன் சூள் தப்பியதால் தலைவி புலக்கவே, தலைவியை அடைய முடியாது வருந்திய தலைவன் நிலை கண்டு இரங்கி, தலைவியிடம் சென்று தலைவன் நிலையைக் கூறிப் புலவி தீர்த்தாள். தோழி இல்லாதிருந்தால் அவர்கள் எப்படிக் குடும்பம் நடத்துவார்களோ பாவம்! என்னே தோழியின் பொறுப்பு! கழிப்போடும் இரு மாடுகளைப் பூட்டி ஏரோட்டும் உழவன் நிலையி லன்றோ உள்ளனள்!

ஒருநாள் தலைவன் உணர்த்த உணராது தலைவி ஊடியிருந்த போது, ஊடல் தீர்க்க விரும்பிய தலைவனோடு சேர்ந்து கொண்டு தலைவியை வெகுண்டு கூறி ஊடல் தீர்த்தாள். அவ்வுரிமை தோழிக் குண்டல்லவா? தலைவியோடு சேர்ந்து கொண்டு தலைவனை வெகுள்கிறாள்; தலைவனோடு சேர்ந்து கொண்டு தலைவியை வெகுள்கிறாள். தலைவிக்காகத் தலைவன் பால் தூது. தலைவற்காகத் தலைவிபால் தூது. இத்தகைய நடுவு நிலைமையுடைய நல்லறிவாளர் அன்னாருக்கு வேறுயாருளர்!

ஒருநாள் தனது கூற்றை மதியாத தலைவனை வெகுண்டு, அரிதாக அடைய முடிந்த களவுக் காலத்தே தலைவியை மிகவும் மதித்து நடந்த நீ, எளிதாக அடைய முடியும் இக்கற்புக்காலத்தே அவளை மதியாது நடத்தல் நின் குடிப்பிறப்புக்குத் தகாது; அரிதிற் கிடைத்தாற் கரும்பு, எளிதிற்கிடைத்தால் வேம்பு போலும் எனத் தலைவனது பரத்தைமையைப் பழித்துக் கூறினாள். எத்தகைய ஏதுவும் எடுத்துக் காட்டும்!

பரத்தையினிடத்திலேயிருந்து கொண்டு, நெடுநாள் தலைவியை மறந்திருந்த தலைவன் ஒரு நாள் வரவே, அப்புறத் தொழுக்கின் பயனின்மையை ஏதுவுடன் எடுத்துக் காட்டித் தலைவனைக் கண்ணோட்டமின்றிக் கடிந்து கூறினாள் தோழி. அவனுடைய நன்மையின் பொருட்டே அவ்வாறு கூறினாளா கையால், தலைவன் ஒன்றும் பேசாமல் குற்றவாளிக் கூண்டில் நிற்பது போல் நின்றான்.

தலைவற்காக, பாணன், கூத்தன், விறலி, முதலியோர் வந்து வாயில் வேண்டும் போது, தலைவியின் நிலைமையறிந்து அவளைக் கேளாமலே வாயில் மறுக்கவும், வாயில் நேரவும் தோழிக்கேயுள்ள தனியுரிமையாகும்.

இப்புலவி யூடல் உணர்வுக் காலத்தே தோழியின் பொறுப்பு மலையினும் மாணப் பெரிதாகும். தலைவன் தலைவி இருவர்க்கும் வேண்டியவள் தோழி; இருவரையும் தானாகவே கொண்டவள்; இரண்டு கண்ணுக்கு மூக்குப் போன்றவள். தலைவன் தலைவிக்குத் தோழி எனல் சுருக்கமும் விளக்கமுமாகும். அவர்கட்கு அத்தகு உரிமையுடையவள் தோழி. அவ்விருவரும் ஊடியிருக்கும் போது, '**உரலுக்கு ஒருபுறம் இடி, மத்தளத்துக்கு இருபுறம் இடி**' என்பது போல, தோழிக்கு இரட்டைப்பாடு. இடம் பூணி வலம் பூணிகளான தலைவனையும் தலைவியையும் ஒழுங்குபடுத்தி, வாழ்க்கை வண்டியை இனிது நடத்திச் செல்லும் வண்டிக்காரி தோழியே யாவாள், வாழ்க நம் தோழியின் பொது நலம்!

## 12. காமக் கிழத்தி [கற் — 10]

தலைவன், தலைவியிடத்துச் சில நாளும், தன்னிடத்துச் சில நாளும் தங்குதலான், தலைவி புலப்பதையறிந்த காமக் கிழத்தியும் தலைவனோடு புலந்தாள். ஒரு நாள் தலைவன் வரவே, அவன் சேரிப்பரத்தையரிடம் சென்று தங்கி வந்தானென அவனோடு புலந்தாள். அவளும் கிழத்திதானே புலக்காமலா இருப்பாள்? அதுவும் காமக்கிழத்தி! தலைவியிடமும் பரத்தையரிடமும் செல்லாமல் தலைவன் தன்னிடமே இருக்க வேண்டு மென்பது அவள் விருப்பம். அவ்வாறு விரும்புவது பெண்ணியல்பு.

தலைவியும் தலைவனும் ஊடியும் உணர்ந்தும் கூடியும் மகிழ்வதைக்கேட்ட இவள் தலைவனை இகழ்ந்தாள். தலைவன் தன்னிடம் அவ்வாறு இருப்பதை விட்டு அயலாள் ஒருத்தியிடம் அங்ஙனம் இருப்பது கண்டு இவளுக்குப் பொறாமை போலும். இவளுக்கு அயலாள் தானே தலைவி? ஆகையால், இவள் பொறாமை கொள்வது இயல்பே. மேலும், தலைவன் தலைவியோடு கூடி ஆறுங் குளமுங்காவும் ஆடுதல் கண்டு அகமிக நொந்தாள். தலைவனைத் தலைவனாக நம்பியிருக்கும் அவள் வருந்துவதில் குற்றம் என்ன? இதற்கெல்லாம் காரணம் தலைவனது புறத்தொழுக்க மன்றோ? ஒருவனால் எத்தனை பேர்க்குப் பொறாமையும் துன்பமும்!

ஒரு நாள் தலைவி புதல்வன், ஊர்ச்சிறுவர் பலரோடு தெருவில் விளையாடுவதைக் கண்ட காமக்கிழத்தி மகிழ்ந்து, அவன் வடிவழகைப் பாராட்டினாள். அவளும் அவனுக்குத் தாய் தானே, மகிழாமலா இருப்பாள்! தலைவனது மறுபதிப்பான அப்புதல்வனைக் கண்டதும், தான் அவனுக்குத் தாய் என்னும் எண்ணந்தான் அவளுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

தலைவன் பரத்தைமையால் ஒரு நாள் தலைவிக்குத் துனியுண்டான போது, காமக்கிழத்தி அங்கு வந்து, தன்னைச் செவிலியாகவும் தலைவியை மகளாகவும் கொண்டு, நீ அவனது இளமை நலத்தை யெல்லாம் நுகர்ந்து பிள்ளை பெற்ற பின்னர், உழுமாடு எச்சிலைத் தின்றாற் போலப் பிறர் அவனை நுகர்ந்தமை உனக்கு இழுக்கன்று என்று இன்மொழி கூறித் தலைவியைத் துனி நீங்குமாறு வேண்டினதோடு, 'பழைய இறைக்கூடை போலப் பருவஞ் சென்ற என்னைப் போலாது, மலர்ந்து முதிராது மலருமுன் உதிரும் பூவைப் போல, இவ்விளமைப் பருவத்தே இவள் பயனின்றித் தனித்திருக்கத் தக்களோ?' எனத் தலைவனையும் கடிந்து கூறித் தலைவியின் துனி தீர்த்தாள். எவ்வளவு பொருத்தமான உவமைகள்! எச்சில் - வைக்கோல், தட்டு முதலியன.

இவள் முதிர்ந்த காமக் கிழத்தி. தலைவிக்கு முன்னரே தலைவற்குக் காமக்கிழத்தியானவள். இவள் தன்னைத் தலைவி போலவே கருதி, தலைவனோடு ஆறும் குளமும் காவும் ஆடி இன்பம் நுகர்ந்தவள். ஒருத்தியைக் காமக் கிழத்தியாகக் கொண்டு இன்பம் நுகர்ந்திருந்து, பின் மற்றொருத்தியோடு களவொழுக்கம் ஒழுகி மணஞ் செய்து கொள்ளும் ஆடவர் செயல் வெறுக்கத் தக்கதோடு, கண்டிக்கத் தக்கதுமாகும், என்று தொலையுமோ ஆடவரின் இவ்வடாச் செயல்.

இப்புலவியூடற் பகுதி, தலைவனின் புறத்தொழுக்கத்தையும் தலைவியின் பொறுப்புணர்ச்சியையும் அப்படியே படம் பிடித்துக்

காட்டுவதால், இல்லறத்திற் புகவிருக்கும் காளையருங் கன்னியரும், இளங் காதலர்களும் கட்டாயம் படித்தறிய வேண்டிய பகுதியாகும்.

## 5. பிரிவு

பிரிவு பற்றி முன்னர்ப் '***பிரிவு***' என்னும் தலைப்பில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதை ஒரு முறை திருப்பிப் பாருங்கள்.

## 1. ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பால்

இது பொருட் பிரிவின் சிறப்பிலக்கணமாகும். இப்பகுதி ஆசிரியர் தொல்காப்பியரின் உலகியற் பேரறிவிற்கு எடுத்துக் காட்டாக நின்று நிலவுவதோடு, அக்காலத் தமிழ் மக்களின் மானமிக்க வளம் பொலி வாழ்க்கையின் படப்பிடிப்பாகவுந் திகழ்கின்றது. அப்பகுதியையறிந்து, அவ்வாறு வாழ்வதே தமிழ்ப் பண்பாட்டோடு வாழ்வதாகும். ஒரு தலைவன் தலைவியிடை நிகழும் பொருட் பிரிவைப் பாருங்கள்.

1. மக்களுக்கு வாழ்நாள் சிறிதாகையால், அதாவது வாழ்க்கைப் பருவமடைந்த சில பத்தாண்டுகளில் முதுமைப் பருவம் வந்து விடுவதால், கைகால் வலுவாகவுள்ள கட்டிளமைப் பருவத்திலேயே பொருள் தேடிக் கொள்ள வேண்டும் என எண்ணித் தலைவன் தலைவியைப் பிரிய முற்படுகிறான். உடனே இவர்களது இளமைப் பருவ மானது இன்பவுணர்ச்சியை மிகுவித்து அப்பிரிவைத் தடுத்து விடுகிறது. அதாவது அவ்விளமைப் பருவத்தில் இன்பம் நுகர்வதை விட்டுப் பிரிந்திருக்க முடியாதவராகினர். இன்ப நுகர்தற்கேற்ற இளமைப் பருவம் அவர்களது பிரிவைத் தடுத்து விடுகிறது. இது இயல்பு தானே! இன்புற்றிருக்கும் இளமைப் பருவத்தைத் தனித்திருந்து வறிதே கழிக்க யார் தான் விரும்புவர்? அப்படிச் செய்வது முறையு மன்றே. எனவே, நம் காதலர் செய்தது சரியே.

2. பின்னர் மிகுந்த ஊக்கத்தோடு இருவரும் தம் பிரிவாற்றா மையைப் பொறுத்துக் கொண்டு பிரிந்து பொருள் தேட விரும்பு கின்றனர். ஆனால், அவரவர் நிலமைக்கேற்பப் பொருள் தேட வேண்டும் என்றும் தகுதியுணர்ச்சி தோன்றி அவ்வூக்கத்தைத் தடுத்து விடுகிற. அதாவது பெரு முயற்சியால் பிறரை வஞ்சித்தும், பிறர்க்கு இடையூறு செய்தும் பொருள் தேடவும் நேருமாகையால், அவ்வாறு செய்தல் நம் தகுதிக்கு ஏற்ற தன்றெனும் எண்ணந் தோன்றி அம் முயற்சியைத் தடுத்து விடுகிறது. பிறரை வஞ்சிப்பதும் பிறர்க்கு இடையூறு செய்வதும் தமிழர் வழக்கமும் பழக்கமும் அல்ல. எனினும், பொருளீட்ட முயலும் பெருமுயற்சியால் அவை நேர்தலுங் கூடுமாகையால், அவ்வாறு முயன்று பொருளீட்டுதல் நம் தகுதிக்கு ஏற்றதன்றென அம்முயற்சியைக் கைவிடுதலாம். நம் முன்னோரின் தகுதியுணர்ச்சியே யுணர்ச்சி!

*3. அதன் பின், இன்ன இன்ன பொருள்கள் நமக்கின்மையால், இன்ன இன்ன இழிவுகள் உண்டாகின்றன என்று எண்ணிப் பொருள் தேடப் பிரிய முயலுவர். அப்போது, இல்லாதன போக உள்ள செல்வத்திற்கேற்ற உயர்ச்சியுணர்ச்சி தோன்றி அம்முயற்சியைத் தடுத்து விடுகிறது. அதாவது, ஏதேனும் ஒரு பொருள் வேண்டுமென்று எண்ணி அதைப் பெற முயலும் போது, இதற்காக நாம் வெளியிற் சென்று பொருள் தேடுதல் நமது செல்வவுயர்ச்சிக்குத் தக்கது அன்றென்றும் எண்ணத் தோன்றி அம்முயற்சியைத் தடுத்து விடுகிறது.*

*4. முடிவாக, பொருள் தேடும் பொருட்டுத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வதால், தலைவி தலைவனைப் பிரிந்து ஆற்றியிருப் பதால், பொருள் பெருகுவதோடு, இருவர் அன்பும் இன்னும் பெருகும் எண்றெண்ணிப் பிரியத் துணிவர். எவ்வளவு அறிவறிந்த காதலர்கள்! ஆனால், இருவரும் ஒருவரையொருவர் பிரிந்திருக்க முடியாத ஆற்றாமை தோன்றி அப்பிரிவைத் தடுத்து விடுகிறது. என் செய்வர் பாவம்! ஏறவும் முடியவில்லை. இறங்கவும் முடியவில்லை!*

*இவ்வாறு தலைவனும் தலைவியும் பொருள் தேடுதற்குப் பிரிய எண்ணும் போது பல இடையூறுகள் தோன்றும். தலைவனும் தலைவியும் மதி நுட்பம் நூலோடுடையவராகலானும். வாழ்க்கை நலனுக்குப் பொருள் மிகமிக இன்றியமையாதது. 'பொருளில்லார்க் கிவ்வுலகில்லை' என்பதை நன்குணர்ந்தவராகலானும் ஒரு முடிவுக்கு வந்தனர். அதாவது, எப்படியேனும் ஆற்றியிருந்து பொருள் தேடுவதே சிறந்தது எனத் துணிந்தனர். பின்னர்த் தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் சென்றான்.*

**"நாளது சின்மையும் இளமைய தருமையும்**
**தாளாண் பக்கமும் தகுதிய தமைதியும்,**
**இன்மைய திளிவும் உடைமைய துயர்ச்சியும்,**
**அன்பின தகலமும் அகற்சிய தருமையும்**
**ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினும்"** **(அகத். 41)**

*என்பது தான் அச்சூத்திரம். ஒவ்வொரு தமிழரும் ஊன்றிப் படித்தறிய வேண்டிய பகுதியாகும் இது. பிறர் உழைப்பினால் உண்டுடுத்து வாழாது தன் முயற்சியால் பொருளீட்டித் தாமுண்டு வாழ வேண்டும் என்னும் பழந் தமிழர் கொள்கைக்கு இப்பொருட் பிரிவுப் பகுதி ஆன்ற சான்றாகும். இதை விட நம் முன்னையோர் பெருமைக்கு வேறு என்ன வேண்டும்? எவ்வளவு நுணுக்கமான ஆராய்ச்சித் திறன்! இது தமிழ் மக்களால் பொன்னேபோற் போற்றக் கூடிய பழஞ் செல்வங்களுள் முதன்மையான தொன்றாகும்.*

ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பால்-இவ்வாறு ஒன்று ஒன்றனோடு ஒன்றாது வரும் பொருள் தேடுதற்கண் பிரிய இருவரும் முயற்சிக்கும் பகுதி. ஒன்றாது - பொருந்தாது. வயின்- இடம். பால்-பகுதி. ***ஒன்றாப் பொருள் வயின் ஊக்கிய பால்*** - எவ்வளவு அழகான சொற்றொடர்!

| **பொருள் செயல் வகை** | **இன்பவகை** |
|---|---|
| 1. நாளது சின்மை | இளமையது அருமை |
| 2. தாளாண் பக்கம் | தகுதியது அமைதி |
| 3. இன்மையது இளிவு | உடைமையது உயர்ச்சி |
| 4. அன்பினது அகலம் | அகற்சியது அருமை |

வாழ்நாள் சிறிதென்றுணர்ந்து, அதற்குள்ளே பொருள் தேடி அறமும் இன்பமும் செய்வதற்கு எண்ணிய வழி அதற்கு முயற்சியும், இன்மையால் வரும் இழிவும் துணை செய்தலானும், பொருள் பின்னர் அன்பைப் பெருக்குதலானும் ***நாளது சின்மை. தளாண் பக்கம், இன்மைய திளிவு, அன்பின தகலம் என்னும் நான்கும் பொருள் செயல் வகை*** ஆயின. தாளாண்மை - முயற்சி. இளிவு - இழிவு - தாழ்வு. அகலம் - பெருக்கம்.

காதலின்பம் நுகரும் இளமைப் பருவம் பிரிவை விரும்பா மையானும், அவ்விளமைப் பருவத்தில் இருவரும் பிரிதல் தகுதியன்மை யானும், செல்வம் செலவை விலக்கி இன்பத்திற்கு ஆக்கந் தருதலானும், ஆற்றாமையே பிரிவை விலக்கி இன்பத்தை முதிர் விப்பதனாலும், ***இளமையதருமை, தகுதிய தமைதி, உடைமைய துயர்ச்சி, அகற்சிய தருமை*** என்னும் நான்கும் ***இன்பத்தின் வகை*** ஆயின. அருமை - இளமையிற் பிரிய முடியாமை. அமைதி- பொருத்தம். உடைமை - செல்வம். அகற்சி - பிரிவு.

எவ்வளவு காரண காரியப் பொருத்தம்! பொருள் செயல் வகை, இன்பத்தின் வகை என்பன ஒன்றையொன்று ஒன்றாதிருந்துங் கூட, இரண்டையும் ஒருங்காராய்ந்து, பொருளின் இன்றியமையாச் சிறப்பினையுணர்ந்து, இன்பத்தின் இயல்பைப் பொறுத்துக் கொண்டு பொருள் செய்யப் பிரிதற் கொருப்படும் இளங் காதலர்களின் கடமையுணர்ச்சிதானென்ன! இத்தகைய வாழ்க்கைத் துணைவர் களையுடையதன்றோ வாழ்க்கை!

## 2. தலைவன்

தலைவன் ஒரு நாள் வேலையெடுக்கவே, தலைவன் தன்னை விட்டுப் பிரியப் போகிறானென்று தலைவி முகம் வேறுபடுதலும், தலைவன் வேலின் நுனியைப் பார்க்கவே, தலைவி கண்ணீர்

விடுதலும் ஆகிய **உடன்சேறல்** செய்கையைத் தலைவியிடம் கண்ட தோழி "**இவளையும் உடன் கொண்டு செல்லுக**" எனத் தலைவனைச் செலவழுங்கும்படி சொன்னாள். அதனால் தலைவன் தலைவியைப் பிரிய முடியாது, '**போவேமோ தவிர்வேமோ**' என வருந்தினான். இரவில் தூங்கும் போது கனவில் அரற்றினான்; நாம் பிரியின் அவள் அழகு நலன் திரியும் என அஞ்சினான். அன்பால் கட்டப்பட்ட அவனால் எங்ஙனம் பிரிந்து செல்ல இயலும்?

ஒருநாள் தலைவன் பிரியக் கருதியது கண்டு தலைவி ஆற்றாது வருந்தினாள். அது கண்ட தலைவன், 'என் ஆருயிரே! தோழியும் ஆயமும் துணையாக உள்ளனர். நாணம் மடம் அச்சம் முதலிய பெண்மைக் குணங்களிற் சிறந்துள்ள நீ சில நாள் ஆற்றியிரு. நான் விரைவில் வந்து விடுகிறேன்' என வற்புறுத்தினான். மேலும் தலைவியைத் தேற்றிச் செல்வதற்காகச் சில நாள் செலவைத் தவிர்த்திருந்தான்; அக்கால், தான் செய்யப் போகும் பொருட் பிரிவுக்குத் தலைவி இடையூறாக இருப்பாளோ எனத் தான் அஞ்சிய அச்சத்தையும், பொருள் செய்யத் துணிந்ததையும் தலைவியிடம் எடுத்துரைத்தான். எவ்வளவு பொறுப்புடைமை! இத்தகைய பெருந்தக்க தலைவனைப் பெற்றவளன்றோ தலையாய தலைவியாவாள்!

தலைவியின் உடன்பாடு பெற விரும்பிய தலைவன் ஒரு நாள், 'நான் அயல் நாட்டுக்குச் சென்று அந்நாட்டார் பழக்க வழக்கங்களைக் கற்று வருவேன்; பொருளீட்டி வந்து இரவலர்க்கு ஈவேன்; நல்லறம் பல செய்வேன்; முற்றகப் பட்டோனை முற்றுவிடு விப்பேன்' எனத் தலைவியிடம் தன்னைப் புகழ்ந்து கூறினான்.

எப்பிரிவிற்கும் தலைவியின் உடன்பாடு பெற்றே தலைவன் பிரிவான். தலைவன் தான் பிரிந்து சென்று இன்னின்ன செய்வேன் எனத் தன்னைப் புகழ்வதும், சுற்றத்தார் துணையையும், தலைவி குணங்களையும் சிறப்பித்துக் கூறுவதும், சில நாள் செலவு தவிர்வதும், தலைவியைப் பாராட்டிக் குறிப்பால் பிரிவையுணர்த்துவதும் தலைவியை ஆற்றுவித்துப் பிரிதற்கேயாம்.

இன்று போல் பெண்களை அடிமையெனக் கொண்டு ஆண்கள் தம் மனம் போனவாறு செலவுவரவுடைமை அன்றில்லை. பழந்தமிழரசர்கள் தம் மனைவியருடன் கொலு வீற்றிருந்து அரசு செலுத்தி வந்தமையே இதற்குச் சான்றாகும். பாண்டியன் நெடுஞ் செழியனோடு கண்ணகி வழக்குரைத்த போது, அவன் கோப்பெருந் தேவி உடனிருந்தமையும், பாண்டிமாதேவி, கண்ணகி இவர்களில் யாருக்கு வழிபாடு செய்யலாமெனச் செங்குட்டுவன் இளங்கோ வேண்மாளின் கருத்தைக் கேட்டறிந்தமையும் அறிக.

இவ்வாறு தலைவியின் உடன்பாடு பெற்றுச் செல்லும் தலைவன், அவள் நினைவாகவே சென்றதால், வழியில் தலைவியின் உருவெளிப்பாடு தோன்றிற்று. அதற்குமேற் செல்ல அவன் மனம் இடந்தரவில்லை. ஊர்க்கே திரும்பி விடலாமா என்று இளை யோரைக் கேட்டான்; தலைவியின் குணங்களை நினைந்து வருந்தினான். என்னே! தலைவன் தலை விபாற் கொண்டுள்ள அன்பின் பெருக்கு! பெருமையும் உரனு முடைய அவன் (கள-7) ஒருவாறு தேறிச் சென்றான். கடமையுணர்ச்சி அவனைக் கைப்பிடித் தழைத்துச் சென்றது. தலைவி பாற் கொண்ட அன்பினும் அவளோடு கூடி நடத்தும் இல்லறம் சிறந்ததல்லவா?

பகைவயிற் பிரிந்த தலைவன், பாசறைக்கண் இருந்து தலைவியின் பிரிவாற்றாமையை நினைந்து வருந்தினான். தலைவியோடு பாசறைக் கண் தங்கும் வழக்கம் இல்லை. போர் வென்று மீளுந் தலைவன், விரைந்து தேரைச் செலுத்தும் படி பாகனுக்குக் கட்டளையிட்டு, தலைவியை நினைந்தவாறே வந்தான். இது கொண்டு தான், 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என வள்ளுவர் அன்புக்கு இலக்கணம் கூறினார் போலும்! இவனே இங்ஙனம் எனில், தனித்திருக்கும் தலைவியின் நிலைமையைச் சொல்லவா வேண்டும்!

### 3. தலைவி

இப்பிரிவுக் காலத்தே தலைவன் தலைவி இருவருமே ஒரு வரைவிட்டொருவர் பிரிவரேனும், பரத்தையிற் பிரிவில் தலைவன் இன்ப நுகர்வதால் அவனுக்குப் பிரிவுத் துன்பம் இல்லை. ஏனைப் பிரிவுகளிலும் அவன் வினையிற் கருத்துடைமையால் பிரிவுத் துன்பம் அவனை அவ்வளவாக வருத்துவதில்லை. தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் தலைவியே பிரிவுத் துன்பத்தால் மிகவும் வருந்துபவளாவாள்.

தலைவன் பிரிந்து செல்லக் கருதினால், பிரிவாற்ற முடியாத தலைவி அச்செலவைத் தவிர்க்கும்படி தலைவனை வேண்டுவாள்; தலைவன் செலவுக் குறிப்பினைத் தோழியிடங் கூறுவாள்; தானும் தலைவனை வினவுவாள்; தலைவன் செல்லும் வழியினது அருமை கேட்டு வருந்துவாள்; பிரிவைத் தவிர்க்கும்படி தலைவன்பால் பாணன் முதலியவர்களைத் தூது விடுவாள்; இன்னும் பலவாறு பிரிவாற்றாது வருந்துவாள் பாவம்! பிரிவுத் துன்பத்தின் பெருமை அவளுக்கன்றோ தெரியும்! தலைவி இவ்வாறு பிரிவாற்றாது வருந்தும் போது, ஏதுவும் எடுத்துக் காட்டும் கூறி, ஆற்றியிருக்கும் படி தோழி தலைவியை வற்புறுத்துவாள்.

தலைவன் பிரியத் தனித்திருந்த தலைவி ஒருநாள், வீட்டிறப் பில் வாழும் சிட்டுக் குருவிகள் ஆணும் பெண்ணும் கூடிக் களிப்பதைக்

கண்டு, இவை தலைவர் செல்லும்வழியில் இருந்தால், அவற்றைத் தலைவன் காணின் நம்மை நினைந்து வருந்துவார் என எண்ணி வருந்தினாள். மாலைக் காலத்து முகிலைக் கண்டும், வாடைக் காற்றின் வரவையறிந்தும், தலைவன் இன்னும் வரவில்லை யேயெனத் தலைவி வருந்தினாள். அன்பின் பெருமையே பெருமை! அன்பை இங்ஙனம் முன்புற வளர்க்கும் பிரிவின் பெருமையோ பேசரும் பெருமை!

தலைவனைப் பிரிந்து தனித்திருந்த தலைவி, உடன் போக்கில் தானும் தலைவனும் வந்த போது, வழியில் ஓர் ஆண்யானை தன் பெண் யானைக்கு ஆச்சா மரத்தின் கிளையை வளைத்து, இலையை உருவிக் கொடுத்துக் கொண்டிருந்ததையும், ஓர் ஆண் புறாத் தன் பெடையை அன்போடு அழைத்ததையும் நினைந்து, தலைவன் செல்லும் வழியில் அத்தகைய செயல்களைக் கண்டால்,நம்மை நினைந்து வினை முடியாது திரும்பி வந்து விடுவானோ என்று அஞ்சி வருந்தினாள். என்னே கடப்பாட்டுணர்ச்சி!

இதனால், களவொழுக்க மொழுகி மணந்து கொண்டு காதல் வாழ்க்கை வாழ்ந்து வந்த அக்காலக் காதலர்களின் உற்றதறியும் ஒருமை வாழ்வின் பெருமை, இக்காலத் தமிழ் மக்களால் அறிந்து இன்புறத்தக்க தொன்றாகுமன்றோ? தலைவன் பிரிவை ஆற்ற முடியாது தலைவி பிரிவை வெறுத்தாளேயன்றி, தலைவன் செய்யும் அறச் செயலினும் பொருட் செயலினும் விருப்ப மில்லாதவளல்லள். வாழ்க தலைவியின் ஆவதறியும் அருந்தமிழறிவு!

தலைவன் பால் தலைவி விடுத்த தோழி முதலிய வாயில்களும், 'நீ செல்லும் வழியில், யானை பிடிக்கு யாவினை அருத்துவது போன்ற **அன்புறுதக்கன** கண்டு, வினை முடியாமல் மீள நேரும்' எனக்கூறிச் செலவழுங்கு விப்பர்.

இன்று நம் ஊர்க்கு வரும் தலைவர்களை நாம் அன்போடு வரவேற்பது போலவே, அன்றும் வினை முடித்து மீளும் தலைவனை, சுற்றஞ் சூழ மாலை முதலிய மங்கலப் பொருள்களுடன் எதிர் சென்று தலைவி வரவேற்பாள். என்னே தமிழர் நாகரிகத்தின் பழமை!

இத்தகைய மேம்பட்ட உயரிய நிலையில் சீருஞ் சிறப்புடன் செம்மையாக நடந்து வந்தது நம் முன்னையோராகிய பழந்தமிழ் மக்களின் அகவாழ்வு. வாழ்க. வண்டமிழ்க் காதல் வாழ்வு வாழ்க!

# 9. புறத்திணை

முற்கூறிய அகத்திணையாகிய வாழ்வியலுக்குத் துணை செய்யும் கல்வி, பொருள், அரசியல் முதலியன புறத்திணை எனப்படும். ***புறத்திணை - புறவொழுக்கம்.*** அது வெட்சி, வஞ்சி, உழிநை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என எழுவகைப்படும். அகத்திணை எழுவகைப்பட்டது போல அகத்திற்குப் புறமான புறத்திணையும் எழுவகைப்பட்டது. அவற்றுள்.

வெட்சி - நிரை கவர்தலும் நிரை மீட்டலும் ஆகும். நிரை - மாட்டுக் கூட்டம். வஞ்சி - பகைவர் நாட்டின் மேற் படையெடுத்துச் செல்லுதல். உழிஞை - மதில் முற்றுதலும் மதில் காத்தலும். தும்பை - போர் செய்தல். வாகை - வெற்றி ; அதாவது ஒவ்வொருவரும் தத்தம் குணம் செயல்களைச் சிறப்பித்துக் கூறுதல். காஞ்சி - நிலையாமை கூறுதல். பாடாண் - பாடப்படுவோன். பாடாண் திணை - பாடப்படு வோன் ஒழுக்கங் கூறுதல். பாடுவோன் - புலவன் - பாடப் படுவோன் - புரவலன்.

### 1. அகமும் புறமும்

குறிஞ்சி முதலிய அகத்திணை ஏழற்கும் முறையே வெட்சி முதலிய புறத்திணை ஏழும் புறனாகும்.

| அகம் | புறம் | அகம் | புறம் |
|---|---|---|---|
| 1. குறிஞ்சி | வெட்சி | 5. பாலை | வாகை |
| 2. முல்லை | வஞ்சி | 6. பெருந்திணை | காஞ்சி |
| 3. மருதம் | உழிஞை | 7. கைக்கிளை | பாடாண் |
| 4. நெய்தல் | தும்பை | | |

### 1. குறிஞ்சி – வெட்சி

குறிஞ்சிப் பொருளாகிய களவொழுக்கம் பெரும்பாலும் இரவில் பிறர் காணாது நடப்பது போல, வெட்சிப் பொருளாகிய நிரை கோடலும் மீட்டலும் இரவில் பிறர் காணாது நடப்பதனாலும்;

களவில் தலைவனும் தலைவியும் கட்டுக் காவலை மீறித் தாம் கருதிய காதலின்பந் துய்த்து மீளுதல் போல, வெட்சி மறவரும் எதிர்க்கும் மறவரை மதியாது சென்று நிரை கவர்ந்து மீளுதலினாலும் குறிஞ்சிக்கு வெட்சி புறனாயிற்று. இராக்காலமாகிய முதற் பொருளும், தலைவன் தலைவியைக் கூடல், மறவர் நிரையைக் கூடல் ஆகிய உரிப் பொருளும் ஒத்தன. கூடல் - அடைதல்.

## 2. முல்லை — வஞ்சி

முல்லைக்கு நிலம் காடு; வஞ்சி நிலமும் காடேயாகும். தலைவனைப் பிரிந்த தலைவிமுல்லை நிலமான காட்டில் தங்கியிருத்தல் போல, பிறர் மண் வேண்டிச் சென்ற வஞ்சி வேந்தனும் யானை முதலிய படையுடன் காட்டில் மர நிழலில் தங்கியிருப்பன். தலைவன் பாசறைக்கண் தலைவியைப் பிரிந்திருக்க, தலைவி அவனைப் பிரிந்து மனையில் இருத்தல் இரண்டிற்கும் ஒக்கும். 'கூதிர்ப் பாசறை' கூறுவதால் (புறத் - 21) முல்லைக்குரிய கார்காலத்தும் சிறுபான்மை வஞ்சிப்போர் நடத்தல் கூடும். எனவே, முதல், கரு, உரிப் பொருள், மூன்றும் ஒத்தலின் முல்லைக்கு வஞ்சி புறனாயிற்று.

## 3. மருதம் — உழிஞை

மருதம் வயல்சூழ் நிலம். கோட்டை (மதில்) மருத நிலத்தின் கண் உள்ளதே. தலைவன் வாயில் வேண்டத் தலைவி ஊடிக் கதவடைத்திருப்பது போல, பகைவன் முற்றுகையிடக் கதவடைத் திருக்கும் அகத்துழிஞையானும் ஒருவன் வாயில் வேண்டத் திறவா திருத்தலானும்; தலைவி பின்னர் உணர்ந்து ஊடல் தணிந்து கதவு திறந்து கூட விரும்புதல் போல, உள்ளிருப்பவனும் போர் செய்ய வேண்டி வெளிப்பட விரும்புதலானும் மருதத்திற்கு உழிஞை புறனாயிற்று. முதல் கரு, உரி, மூன்றும் ஒத்தன.

## 4. நெய்தல் — தும்பை

கடலும், கடல் சார்ந்த மணல் வெளியும், உப்பங்கழியும் நெய்தல் நிலம். களரும் மணற் பாங்கான இடமுமே போர் செய்தற்கு உரிய இடமாகும். நெய்தலுக்குரிய காலைப் பொழுதே போர் தொடங்கும் காலமாகும். தலைவன் பிரிவால் தலைவி யிரங்குதல் போல, போரில் கணவனையிழந்த மகளிர் இரங்குதலும், தலைவிக்காகத் தோழி முதலிய சுற்றத்தார் இரங்குதல் போல, இறந்தோரின் சுற்றத்தார் இரங்குதலும், வீரக்குறிப்பின் அருள் பற்றி வீரர்கள் இரங்குதலும், ஒருவரு மொழியாத் தொகைநிலைக்கண் (புறத் - 17) பகை வேந்தர் இருவரும் படையொடு ஒருங்கு மடிந்த போது - கண்டோர் இரங்குதலும் ஆகிய முதல், கரு, உரி, என்னும் மூன்று பொருளும் ஒத்தலான் நெய்தற்குத் தும்பை புறனாயிற்று.

### 5. பாலை — வாகை

*பாலை தனக்கென நிலமின்றி நானிலத்தும் நடப்பது போல, வாகையும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்னும் புறத்திணை நான்கன் இடமாக நடத்தலானும், பாலை இன்பத்தை நீங்கி, இல்லறம் நடத்திப் புகழெய்துதற்குப் பிரிதல் போல, வாகையும் சுற்றத் தொடர்ச்சியின் நீங்கி அறப்போர் செய்து வெற்றி பெறவும், நிறையாலும், பொறையாலும், வெற்றி பெறவும்; பிரிதலானும் பாலைக்கு வாகை புறனாயிற்று. முதலும் உரியும் ஒத்தன.*

### 6. பெருந்திணை — காஞ்சி

*ஏறிய மடற்றிறம் முதலிய நான்கும் (அகத் - 51) தீய காமம் என விலக்கப்படுதல்போல, அறம் பொருள் இன்பங்களின் நிலையின் மையும் உலகியலை நோக்க நற்பொருள் அன்றென விலக்கப்படு தலானும், ஐந்திணைக்குரிய நிலத்தின் கண் நிகழ்தலன்றித் (அகத் - 13) தனக்கென நிலமில்லாத பெருந்திணை போல, அறம் பொருளின் பங்கள் பற்றியன்றி வேறு நிலையாமையென்ப தின்மையானும் பெருந்திணைக்குக் காஞ்சி புறனாயிற்று.*

### 7. கைக்கிளை — பாடாண்

*கைக்கிளையாகிய ஒருதலைக் காமம் போல, ஒரு தலைவன் பரவலும் புகழ்ச்சியும் வேண்ட, ஒரு புலவன் பரிசில் வேண்டிப் பாடுதலான் பாடாண்டிணை கைக்கிளைக்குப் புறனாயிற்று.*

*வாழ்வியலாகிய அகத்திணை ஏழற்கும் ஒத்த புறத்திணை யேழ்கண்டு உயரிய நாகரிக நல்வாழ்வு வாழ்ந்து வந்த நமது முன்னையோர் மதி நுட்பமே நுட்பம்! இத்தகைய சிறந்த பொருள் களெலாம் இன்று தமிழ் மக்களின் கல்வித் திட்டத்தில் இடம் பெறாமல் புறம்போக்குப் பொருளாகத் தள்ளுபட்டுக் கிடக்கின்றன. தமிழ் மாணவர்கள் தங்கள் முன்னோர் வாழ்க்கை முறைகளை அறிந்து கொள்ள முடியாமல் செய்யப் பட்டுள்ளனர்; அறிந்தின் புறும் நற்காலம் என்று எய்துமோ!?*

## 2. வெட்சி (புறத் — 2)

*பழங்காலத் தமிழகத்தே இருநாட்டிற்கும் இடையே, அவ்விரு நாடுகட்கும் எல்லையாகப் பெரிய நிலப்பரப்பு இருந்து வந்தது. அந்நிலம், மரம் செடி கொடிகளடர்ந்த பெருங்காடாக இருக்கும். அவ்வெல்லைக் காட்டின் இரு புறங்களிலும் இருநாட்டு மறவரும் குடியிருந்து காவல் காத்து வருவர். அம்மறவர் தலைவருக்குத்* ***தண்டலைத் தலைவர்*** *என்பது பெயர். தண்டலை - காடு. அக்காவற்*

படைஞர் ஏராளமாக ஆடுமாடுகள் வளர்த்து வருவர். ஆடும் இருப்பினும் தலைமை பற்றி அவ்வாடு மாட்டுக் கூட்டம் - ***ஆநிரை*** எனப்படும். ஆ-மாடு. நிரை - கூட்டம். நிரை என்பதும் மாட்டுக் கூட்டத்தைக் குறிக்கும். அவ்வாநிரையே அம்மறவர்களின் செல்வம். ஒரு நாட்டின் நாற்புற எல்லைக் காட்டினும் காவற்படையிருக்கும்.

இரு பெருவேந்தர் போர் செய்யக் கருதினால், பகைவர் நாட்டின் எல்லைப்புறத்திலுள்ள நிரையை, அம்மறவர்களை ஏவிக் காணாமல் களவாக ஓட்டிக்கொண்டு வந்து பாதுகாத்துப் பின் போருக்குச் செல்வர். இதை, '***ஆதந்தோம் பல்***' என்கிறார் ஆசிரியர். தந்து ஓம்பல் - ***ஓட்டிக் கொண்டு வந்து பாதுகாத்தல்.*** இதுவே பழந்தமிழர் போர் முறையும் போருண்டாகக் காரணமுமாகும். நிரை கவர்ந்து வரும் போது அந்நிரைக் குடையார் தடுத்து, நிரையை மீட்டுச் செல்லுதலும் வெட்சியேயாகும். போர் நடக்கும் போது அவ்வாக் களுக்குத் தீங்கு நேருமென்றே இவ்வாறு செய்வதாகும். நாட்டின் செல்வத்தைப் பாதுகாப்பதில் நம் முன்னையோர்க்கிருந்த அக்கறைக்கு இது தக்க சான்றாகும். 'ஆதந்தோம்பல்' என்பது இதனை வலியுறுத்தும்.

ஆவொடு, பார்ப்பனர், பெண்டிர், நோயாளர், மலடர், மூத்தோர், சிறுவர் ஆகியோர்க்கும் தீங்கு நேரா வண்ணம், போர் நடக்கும் இடத்தினின்று அன்னாரை அகற்றிப் போர் புரிவர் என்கிறது புறநானூறு (9). இளங்கோவடிகளும்,

> **"பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்**
> **மூத்தோர் குழவி யெனுமிவ ரைக் கைவிட்டுத்"**

தீத்தொழிலாளரையே எரியுண்ணட்டும் என்கின்றார்.

பழந்தமிழரசர்கள் மண்ணுக்காக மட்டும் போர் செய்ய வில்லை. அங்ஙனம் செய்திருப்பின் சேர, சோழ, பாண்டியர், என்னும் செந்தமிழ் வேந்தர்கள் தொடர்ச்சியாய் நனி நெடுங்காலம் அவ்வப் பகுதியையே ஆண்டு வந்திருக்க முடியாது. ஒரு சிலர் மண்ணாசையாலும் போர் செய்தல் உண்டு. ஆனால், பெரும்பாலான போர்கள் பொதுநலத்தின் பொருட்டே நிகழும்.

ஒரு நாட்டரசன் நேர்மையின்றி மிகுவரி, கடுந்தண்டம் முதலியவற்றால் குடிமக்களை வருத்தினால், வெகுவந்த செய்தால், அந்நாட்டு மேன்மக்களின் வேண்டுகோட்கிணங்கி, அந்நாட்டுக் குடிமக்களை அக்கொடுமையினின்றுங் காப்பதற்காக, அடுத்த நாட்டரசன் அந்நாட்டின் மேற் படையெடுத்துச் சென்று, அக் கொடுங்கோலனை வென்றடிப் படுத்தி நல்லாட்சியை ஏற்படுத்தி அந்நாட்டு மக்களின் நலிவைப் போக்குவான். '***ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடு***' (கலி - 5) என்பது காண்க. அத்தோற்ற வேந்தன்

மற்றொரு வேந்தனைத் துணைக் கொண்டு வென்ற வேந்தன் நாட்டின் மேற் படையெடுப்பான். இதுவே பெரும்பாலும் போருண் டாதற்குக் காரணமாகும். மேலும், பேரரசின் கீழ் உள்ள சிற்றரசர் களாலும் நாட்டில் போருண்டாகும். '**வேந்தலைக்கும் கொல்குறும்பு**' (குறள் - 735) என்கின்றார் வள்ளுவர்.

## 1. வெட்சி மறவர் செயல் (புறத் – 3)

நிரை கோடற்கு எழுந்த வெட்சி மறவர் ஆரவாரத்தோடு சென்று, தற்செயலாக ஒருவர், '**ஆகும், வெற்றி**' எனக் கூறும் நற்சொல்லைக் கேட்பர். அது **விரிச்சி** எனப்படும். அவ்வாறு நற்சொற் கேட்டுச் சென்று பகைப் புலத்தையடைவர். அங்கிருந்து ஒற்றர் சிலரை அனுப்பிப் பகைப் புலத்து ஒற்றர் உணராமல் நிரை காவலர் இருக்கும் நிலையை அறிந்து வருவர். அவ்வாறு ஒற்றர் அறிந்து வந்து சொல்லும் சொல் **வேய்** எனப்படும். வேயுரைத்த அன்னார்க்கு வேண்டியதைக் கொடுத்து, அங்கிருந்து சென்று, ஊரினுள்ளேயுள்ள காவலர் வெளிச் செல்லாமல் வளைத்துக் கொண்டு நிரையை ஓட்டிக் கொண்டு வருவர். வரும்போது பின்றொடர்ந்து வந்து வழி மறிக்கும் நிரை காவலரைப் பொரு தோட்டிக் கொண்டே நிரையை ஓட்டி வருவர்.

தம்மவர் நிரை கவர்ந்து வருதலைக் கண்டு பாடியிலுள்ளோர் மகிழ்ந்து வாழ்த்துவர். ஓட்டிக்கொண்டுவந்த ஆக்களை ஊர் மந்தையில் நிறுத்தி, அரசன் கட்டளை பெற்று எல்லோரும் அவற்றைப் பங்கிட்டுக் கொள்வர். நிரை கொண்ட மகிழ்ச்சியால் விருந்துண்டும், இரவலர்க்கு ஆக்கொடை கொடுத்தும் இன்புறுவர். நிரைக்குடையோர் வழி மறித்துப் பொருது வென்று நிரையை மீட்டுச் செல்வதும் உண்டு.

இவ்விருவகை வெட்சி மறவரும் வெட்சிப்பூவைச் சூடுவர். இவ்வாறே ஏனை வஞ்சி, உழிஞை, தும்பை மறவரும் அவ்வப் பூக்களைச் சூடுவர். தோற்ற மறவர் வேந்தன் போர் தொடங்குவான். நிரைக் குடையோர் எச்சரிக்கையின்றி யிருப்பாராகையால், அதற் காகவே சென்ற நிரைகவர் மறவரே பெரும்பாலும் வெற்றியுடன் நிரை கவர்ந்து மீள்வரென்க. யார் வெல்லினும் போருண்டாதல் ஒருதலை.

## 2. கொற்றவை நிலை (4 – 4)

போர்வரின், மறவர்கள் மறமிகுவதற்காக வாளை நாட்டி, அதற்கு மாலை சூட்டி, துடியடித்துக் கொண்டு அவ்வாளைச் சுற்றி யாடுவர். அத்துடியோசையே அவர்கள் மறத்தை மிகுவிப்பதால்,

ஆடும்போது அத்துடியைப் புகழ்ந்து கொண்டு ஆடுவர். அது ***துடிநிலை*** எனப்படும். துடி - துடுமம் என்னும் ஒருகட்பறை. இன்று அரசியற் செய்திகளை ஊர் மக்கட் கறிவிக்கும் போது தோட்டி யடிக்கும் ***துடுமமே*** அது.

அவ்வாறு மறவர்கள் வாளை நாட்டியாடுதல் - ***கொற்றவை நிலை*** எனப்படும். கொற்றவை - வெற்றிமடந்தை. கல்வி, செல்வம், நிலம், ஆறு முதலியவற்றைப் பெண்பாலாகக் கூறுவது போல. இது வெற்றியைப் பெண்பாலாகக் கூறியது. இவ்வாறு கூறுவது ***நூன்மரபு*** எனப்படும்.[1]

அங்ஙனம் வாளைச் சுற்றியாடும் போது ஒரு மறவன் வாள் முனையில் வீழ்ந்து உயிர்விடுவான். இது ***மறச்சாவு*** எனப்படும். ஒருவன் வாள் கொண்டு உடம்பில் புண்ணுண்டாக்கிக் கொள்வான். இது ***மறக்குறிப்பு*** எனப்படும். இவையும் கொற்றவை நிலையே யாகும். வழிவழி வந்த மறக்குடியினரல்லரோ அம்மறவர்! இங்ஙனம் பலர் செய்வரென்க.

### 3. வஞ்சி [9—7]

தன்னாட்டுக்கும் அடுத்த நாட்டுக்கும் இடையிலுள்ள பொது நிலத்தைத் தனதாக்க எண்ணி, அடுத்த நாட்டரசனை வெல்லுதற்குப் படையெடுத்துச் செல்லுதல் வஞ்சித்திணை எனப்படும். ஒருவன் மண்ணாசையால் படையெடுத்துச் செல்லின், அவனும் அம்மண்ணை யிழக்காமற் காத்தற்கு எதிரே வருதலின் - எதிர்த்தலின் - அவ்விருவரும் மண்ணாசையால் மேற்செல்லும் வஞ்சி வேந்தர் எனப்படுவர். வஞ்சி - படையெடுத்துச் செல்லுதல். நசை - விருப்பம்.

வஞ்சித்திணை வெட்சித்திணைத் தொடர்பேயாதலால், வெட்சிப் பொதுவாகிய அவ்விடை நிலத்தைத் தனதாக்கிக் கொள்ளப் படையெடுத்துச் செல்வானென்க. இங்ஙனம் அன்றிப் படையெடுத் தலுங் கொள்க.

### வஞ்சிமறவர் செயல் [புற — 8]

நால்வகைப் படையும் பகைவர் அஞ்சும்படி ஆரவாரித்துக் கொண்டு செல்லும். அங்ஙனம் செல்லும்போது, பகைவர் நாட்டில் எங்கும் தீப்பரவும்படி மறவர்கள் நெருப்பை எடுத்துப் பகைவர் ஊர்களைச் சுடுவர். இது எளிதில் பகைவரை வெல்லுதற்குக் கையாளும் செயல் என்றாலும் கொடுமையேயாகும். இன்றும் ***இவ்வூர் சுடுங் கொடுமை போர் முறையிலிருந்து ஒழிந்தபாடில்லை.***

1. திருக்குறள் குழந்தையுரை - முகவுரை பார்க்க.

பகைவேந்தர் இருவர்க்கும் பலர் படைத்துணையாவர். அதனால், இருவரும் பெருமை யெய்துவர். வஞ்சிவேந்தர் இருவரும் தம் படையாளர்கட்குப் படைக்கலங்கள் கொடுத்துப் பெருமைப் படுத்துவர். ***ஏனாதி, காவிதி*** முதலிய பட்டங்களும்; நாடு, ஊர் முதலியனவுங் கொடுத்துச் சிலரைப் பெருமைப் படுத்திப் படைத் தலைவராக்குவர். அப்படைத் தலைவர்கள் பகை வேந்தரை ஒரு பொருளாக மதியாது படையைச் செலுத்துவர். அன்னார் படை செலுத்தும் பேராண்மையைக் கண்டோர் புகழ்ந்து கூறுவர்.

விரைந்து வரும் ஆற்று வெள்ளத்தைக் கல்லணை தாங்குவது போல, வீரனொருவன் தன் மேல் முனைந்து வரும் பெரும்படை யினைத் தானொருவனே தடுத்து நின்று பெருமை யெய்துவான். இவன் முன்னர்ப் பட்டங்கொடுத்துப் படைத் தலைவராக்கப் பட்டவருள் ஒருவனாவான்.

அரசன் போர் செய்யத் துணிந்த பின், படையாளர்க்கு ஒரு பெருவிருந்து செய்வான். அவ்விருந்தில் தானும் உடனிருந்துண்டு படைஞரை ஊக்குவிப்பான். போரில் வென்ற வேந்தன் தோற்ற வேந்தனுக்கே அவன் நாட்டைக் கொடுத்துத் திறை தரும்படி செய்து மீள்வான். அதனால், பழந்தமிழ்வேந்தர்கள் மண்ணாசை யொன்றே காரணமாகப் போர்புரியவில்லையென்பது விளங்குகின்ற தன்றோ? வென்ற வேந்தன் விளக்கத்தையும், தோற்றுத் திறை தரு நிலையை யடைந்தோன் குறையையும், கண்டோர் கூறுவர். இக்கண்டோரே வரலாற்றுச் சோலையை இடையறாது வளர்த்து வருவோராவர்.

வென்ற வேந்தனது வெற்றிச் சிறப்பினால் தோற்றோன் நாடு அழிதற் கிரங்கி, தோற்ற வேந்தன் சிறப்பின்மையை வென்ற வேந்தன் நாட்டு மகளிர் பாடுவர். இது ***வள்ளைப்பாட்டு*** அல்லது ***கொற்ற வள்ளை*** எனப்படும். வள்ளை உரற்பாட்டு. அதாவது, வென்ற வேந்தன் நாட்டு மகளிர் நெல் முதலியன குற்றும் போது, தம் மரசனது வெற்றியைச் சிறப்பித்துப் பாடிக் கொண்டு குற்றுவரென்க. நம்மரசனோடு பகைத்ததனால் அவன் நாடு இந்நிலைமையானது என்னும் கருத்தமையப் பாடுவர் என்க. அழிதல் - கெடுதல்.

இஃது அக்காலப் பெண்மக்களின் அரசியலறிவையும், மறக் குறிப்பையும், நாட்டுப் பற்றையும் புலப்படுத்தும். இன்று பெண் மணிகள் நாட்டு நடப்புக் கேற்றவாறு அழுகிற பாட்டுப் (ஒப்பாரி) புனைந்து கொள்வது போலப் புனைந்து பாடுவதாகும் இவ்வள்ளைப் பாட்டு.

இங்ஙனம் பகைவர் நாடழிதற் கிரங்கிப் புலவர் பாடுதலும் உண்டு. அது ***பாடாண் கொற்றவள்ளை*** யாகும் (புற - 34)

போர் முடிந்தபின் புண்பட்ட வீரர்களை அரசன் தனித் தனியே தழுவி மகிழ்விப்பான். இது பழந்தமிழரசர்கள் மக்களிடம் வைத்திருந்தஅன்பையும், செய்ந்நன்றியறிதலையும், கடப்பாட்டு ணர்ச்சியையும் காட்டுவதாகும்.

## 4. உழிஞை [புற — 10]

ஒருவன் ஒரு நாட்டின் மீது படையெடுத்துச் சென்றால், எதிர்நிற்கலாற்றாத அந்நாட்டு வேந்தன் கோட்டைக் கதவுகளை யடைத்து, அதனுள்பாதுகாப்பாக இருந்து கொள்வான். படை எடுத்துச் சென்ற வேந்தன் அம்மதிலை - கோட்டையை - முற்றுகையிடுவான். மதிலை வளைத்தலும், காத்தலும், உழிஞை எனப்படும். முற்றுகை யிடுவோன் - புறத்துழிஞை யோன், ***புறத்தோன்*** எனவும், மதிலடைத் திருப்போன் - அகத்துழிஞையோன், ***அகத்தோன்*** எனவும் பெயர் பெறுவர். ***மதில், கோட்டை, அரண், எயில்*** - ஒரு பொருட் சொற்கள்.

### 1. கோட்டை

பழந்தமிழ் மக்கள் கற்றச்சு - சிற்பம், ஓவியக் கலைகளிற் போலவே கட்டிடக் கலையிலும் ஒப்புயர்வற்று விளங்கினர் என்பதற்கு, பழந்தமிழ் வேந்தர்களின் கோட்டைகளே சான்றாகும். பழந்தமிழ் நாட்டுக் கோட்டையின் அமைப்பு அறிந்து வியக்கத்தக்க தொன்றாகும்.

அக்கோட்டை புறமதில், இடைமதில், அகமதில் என்னும் மும்மதில்களை யுடையதாயிருக்கும். ஒவ்வொரு மதிலின் புறத்தேயும் ஆழ்ந்தகன்று அகழும், புறமதிலின் அகழுக்குப் புறத்தே பெரிய தொரு காவற்காடும் பொருந்தியிருக்கும். இது ***முழுமுதல் அரணம்*** (புற - 10) எனப்படும்.

காவற்காட்டில் முள்ளுள்ள மரம் செடி கொடிகள் அடர்ந் திருக்கும், விரைந்தோடும் பகைவர் கால்களிற் றைப்பதற்காக நெருஞ்சிமுட்போன்ற ***இருப்புமுட்கள்*** அக்காடெங்கும் பரப்பப் பட்டிருக்கும். ஓடுவோர் காலில் மாட்டியிழுத்துத் தள்ளுவதற்காகத் ***தோட்டி*** என்னும் இரும்புக் கொக்கிகள் அக்காவற் காடெங்கும் முளையடித்துக் கட்டப்பட்டிருக்கும். காட்டைச் சுற்றிப்பெரும் படை காவலிருக்கும். யானைக் காவலும் உண்டு.

இக்காவற் காட்டுக்கும், கிடங்குக்கும் இடையே பகைவர் மதிலை யணுகாமல் பார்த்துக்கொள்ள, மரஞ்செடி கொடிகள் இல்லாத ***மருநிலம்*** என்னும் வெட்ட ***வெளிநிலம்*** இருக்கும்.

மதில்களின் புறத்தேயுள்ள கிடங்குகளில் கொடிய பெரிய முதலைகள் நிறைய இருக்கும். கோட்டைக்குட்புக நாற்புறமும் வாயில்கள் அமைந்திருக்கும். அகழியைத் தாண்டிக் கோட்டைக்குட்

செல்வதற்கு வாயில் வழியில் பலகை போடப்பட்டிருக்கும். இப்பல கையைப் போக்குவரவு இல்லாதபோது உள்ளிழுத்துக் கொள்வர்.

சில கோட்டைகள் மலைகட்கிடையினும் கட்டப்பட்டிருக்கும். எனவே, கோட்டை - ***நீரரன், நிலவரண், காட்டரண், மலையரண்*** என்னும் நால்வகையரண்களால் சூழப்பட்டிருக்கு மென்பது பெறப்படும். இதனை,

> **"மணிநீரும் மண்ணும் மலையும்அணிநிழற்**
> **காடும் உடைய தரண்."** **(குறள்)**

என்றார் வள்ளுவர்.

கோட்டை வாயில்களுக்குப் பெரிய இரும்புக் கதவுகள் போடப்பட்டிருக்கும். மரக்கதவுகளும் மிகப் பெரியதாக இருக்கும். கதவின் நிலவுகால் மிக்க வலி பொருந்திய பல மரங்களிணைத்துச் செய்யப்பட்டிருக்கும். கதவின் உட்புறத்தில், வெளியிலிருந்து கதவை எளிதில் திறக்க முடியாதபடி, நிலவுகாலையடுத்து இருபுறமும் எழு என்னும் பெரிய மரங்கள் நாட்டப்பட்டு, அவ்விரு எழுவினுக்கும் இடையே ***சீப்பு*** என்னும் குறுக்கு மரம், எழுக்களில் உள்ள ***ஐயவி*** என்னும் தாங்கு கட்டையின் மேல் போடப்பட்டிருக்கும். ஐயவி - துலாக்கட்டை. இது ***ஐயவித்துலாம்*** எனவும் பெயர் பெறும்.

பெரிய கல்லுரல்களையும், பெரிய மரங்களையும் தூக்கிக் கட்டி, யானைகளைக் கொண்டு அடித்தாலும் அக்கதவை உடைக்கவோ, திறக்கவோ முடியாது. வெளியிலிருந்து யானைகளைக் கொண்டு தள்ளினாலும் திறக்க முடியாமல் உள்ளிருந்து தள்ளிப் பிடிப்பதற்கு எப்போதும் வலிபொருந்திய மல்லர் பலர் அங்கு காவலிருப்பர். உள்ளிருந்து யானைகளும் தள்ளிப் பிடிக்கும்.

நிலவுகளுக் கருகே உட்புறம் மதிற் சுவரில் உள்ள அறைக்குள் போர்க் கருவிகளுடன் மறவர்கள் தங்கியிருந்து வாயில் வழியாக உட்புக முயலும் பகைவரைத் தாக்குவர். இவ்வறை இரு நிலவுப் பக்கமும் இருக்கும். பெரிய கோயில்களின் முதற் கோபுர வாயிலில் இத்தகைய அறைகள் இருத்தலையறிக.

மதில் முகட்டில், மதிலைச் சுற்றிலும் ***பதணம்*** என்னும் மேடை அமைந்திருக்கும். இம்மேடைக்கு வெளியே வலி பொருந்திய சுற்றுச் சுவர் அமைந்திருப்பதினால் இம்மேடை ***மதிலுள்மேடை*** எனப்படும். அம்மேடையில், பகைவர் மதின் மேல் ஏறாமல் தடுக்கவும், தாக்கவும் பலவகைப் போர்க் கருவிகளும் பொறிகளும் வைக்கப்பட்டிருக்கும். ***கருவி*** - நாம் பிடித்து இயக்குவது. பொறி - தானாகவே இயங்குவது.

அம்மதிலுள்மேடையாகிய பதணத்தின் கீழ் உள்ளேயிருந்து பகைவர் மேல் அம்பெய்யும் துளைகள் பொருந்திய **ஏப்புழை ஞாயில்** என்னும் அறையொன்று மதிலைச் சுற்றிலும் அமைந்திருக்கும். அவ்வறைக்குள் மறவர்கள் இருந்து காவல் காத்துவருவர். ஏ-அம்பு. புழை - துளை. ஞாயில்-அறை. இது **ஏவறை** எனப்படும். பதணத்திலும் ஏவறையிலுமுள்ள மறவர்கள். பகைவர்கள் மதில் மேல் ஏற முடியாத படி தாக்குவர். இம்மதில் முடியுறுப்புக்கள் இரண்டும் - பதணமும், ஏவறையும் - மூன்று மதில்களிலும் அமைந்திருக்கும்.

மதிலின் மேல் நான்கு மூலையிலும், தூண்போல் மிகவும் உயர்ந்தகன்ற கட்டிடம் அமைந்திருக்கும். அது ***கொத்தளம்*** எனப்படும். அக்கொத்தளத்தின் மேல் இரவு பகல் எந்நேரமும் மறவர்களிருந்து, நெடுந்தொலைவில் வரும் பகை வரையறிந்து சொல்வர். இது, '***கோட்டை கொத்தளம்***' எனக்கோட்டையோடு சேர்த்து வழங்கப்படும் கோட்டைமதில்.

## 2. கருவிகளும் பொறிகளும்

மதிலுள் மேடையில் உள்ள கருவிகளும் பொறிகளுமாவன :

**"மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்**
**கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்**
**பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்**
**காய்பொன் னுலையும் கல்லிடு கூடையும்**
**தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்**
**கவையும் கழுவும் புதையும் புழையும்**
**ஐயவித் துலாமும் கைபெய ருசியும்**
**சென்றெறி சிரலும் பன்றியும் பணையும்**
**எழுவும் சீப்பும் முழுவிறற் கணையமும்**
**கோலும் குந்தமும் வேலும் பிறவும்**
**ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்**
**வாயில்"**

**(சிலப்பதிகாரம் - 15 207 - 18)**

மிளை - காவற்காடு. கிடங்கு - அகழ். 1. வளை வில் பொறி - வளைந்து தானே அம்பெய்யும் விற்பொறி. 2. கருவிரல் ஊகம் - கரிய விரல்களையுடைய குரங்குபோன்ற கடிக்கும் பொறி. இது குரங்குப் பொறி. 3. கல் உமிழ் கவண் - கல்லெறியும் கவண். 4. பரிவுறு வெந்நெய் - மதில்மீ தேற முயலும் பகைவர்மீது காய்ச்சி ஊற்றும் நெய். 5. பாகு அடு குழிசி - எண்ணெய் காய்ச்சவும், செம்புருக்கவும் கரைத்த சாணங் காய்ச்சவும், அதை ஊற்றி வைக்கவும் ஆன

*மிடாக்கள். குழுசி - இது கூசி என மரீஇ வழங்குகிறது. 6. காய் பொன் உலை - இரும்புக் கம்பிகளைக் காய்ச்சும் உலை. பொன் - இரும்பு. 7. கல் இடு கூடை - கவணில் வைத்தெறியும் கற்கள் போட்டுவைக்கும் கூடை. 8. தூண்டில் - மதில் மீது ஏறுவோரை மாட்டி இழுக்கும் தூண்டில். 9. தொடக்கு - கழுத்தில் மாட்டி முறுக்கும் சங்கிலி. 10. ஆண்டலை அடுப்பு - மதில்மேலேறுவோர் தலையைக் கொத்தி மூளையைக் கடிக்கும் ஆண்டலைப் பொறி. ஆண்டலை - ஆண் மகன் தலைபோன்ற ஒருவகைப்பறவை; இது ஆண்டலைப்புள் எனப்படும். அடுப்புக்கல் போல் மூன்று ஒன்றாக இருப்பதால், ஆண்டலை அடுப்பு எனப்பட்டது. 11. கவை - மதில்மேலேறுவோர் கழுத்தில் கொடுத்துக் கீழே தள்ளுதற்கான இரும்புக் கவை. 12. கழு - இருப்புலக்கை. 13. புதை - அம்புக்கட்டு. 14. புழை - வெந்நீரை ஊற்றி மதில் மேலேறுவோர் முகத்தில் அடிக்கும் குழாய்; தீ வீசுங் குழாயுமாம். 15. கைபெயர் ஊசி - மதில் முடியிலேறும் பகைவர் கையைக் குத்தும் ஊசி. 16. சென்றெறி சிரல் - மதில்மே லேறுவோரைக் கொத்தும் மீன்கொத்திப் பறவை போன்ற பொறி. 17. பன்றிப் பொறி. 18. பணை - மூங்கில் போன்ற இரும்புக் கம்பிகள். 19. கணையம் - வளைதடி. 20 - 22 ஈட்டி, வாள், வேல்.*

*பிற - 23. அரிநூற் பொறி - மதில்மேலேறும் பகைவர் உடலை அறுக்கும் நூல்போன்ற பொறி. 24. நூற்றுவரைக் கொல்லி - ஒரே எடுப்பில் நூறு பேரைக் கொல்லும் பொறி. 25. தள்ளி வெட்டி. 26. களிற்றுப் பொறி. 27. புலிப்பொறி. 28. தகர்ப்பொறி. 29. கழுகுப் பொறி. 30. விழுங்கு பாம்பு. 31. குடப்பாம்பு. 32. வண்டிப்பொறி முதலியன.*

*இவற்றுள் : 1, 2, 10, 15, 16, 17, 23, 24, 26, 27, 28, 29, 30, 31, 32 இப்பதினைந்தும் பொறிகள். மற்றவை கருவிகள். பொறி - மின்சாரம் போன்ற யாதோ ஓர் ஆற்றலினால் தானே இயங்குவது.*

*கடலுள் மூழ்கிய குமரிக் கண்டத்தில் வாழ்ந்த பழந்தமிழ் மக்கள், தண்ணீரைத் தள்ளும் ஒருவகைக் கல்லைக் கப்பலின் பின்புறம் அமைத்து, அதனால் கப்பலை இயக்கி வந்தனராம். நெடுந் தொலைவில் ஒளிவீசும் ஒரு பொருளைப் பயன்படுத்தி வந்தனராம். அத்தகைய ஏதாவதொன்று அப்பொறிகளை இயக்கியிருக்கலாம்.*

*பொறிகளை இயக்கும் விசை மதிற் சுவரில் பொருத்தப் பட்டு, மதில்மேலேறுவோர் கைகால்கள் அவ்விசையிற் பட்டதும் அப் பொறிகள் தாமே சென்று அன்னாரைத் தாக்கின போலும். அதாவது, பகைவர் மதின்மேலேறத் தொடங்கினதும் அப்பொறிகள் சென்று அவரைத் தாக்கும்படி அவை அமைக்கப் பட்டிருக்கும். இளங்கோவடிகள் அரசகுமரர் ஆகையால், தமது அரண்மனை*

மதிலில் இருந்த அப்பொறிகளை, அவற்றின் தொழிற்றிறத்தை அறிந்தவரேயாவர்.

சீவகன் தாயாகிய விசயை என்பாள், ஒரு மயிற்பொறி மீதேறி, அமரண்மனைக்குள்ளிருந்து பறந்து வெளியே சென்றதாகச் சிந்தாமணி கூறுகிறது (238). அவந்திநாட்டரசனான பிரச்சோதனன் என்பான், உதயணனைப் பிடித்துவரச் செய்தனுப்பிய யானைப் பொறி முகில் போல் பிளிறிக்கொண்டு காட்டின் கண் உலாவியது எனப் பெருங்கதை கூறுகிறது. அதே பெருங்கதையில், உதயணன் அமைச்சனான யூகி என்பான், யவனத்தச்சரால் செய்த பூணியின்றிப் பொறியின் இயங்கும் ஒரு வானூர்தியை ஊர்ந்து கொண்டு வான்வழியாகச் சயந்திநகர் சென்றனன் என்கின்றது. தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் சோழ மன்னன் வானூர்தியொன்றை மண்ணில் வீழ்த்தினான் என்கின்றது மணிமேகலை. சிவன் முப்புரமெரித்த கதையொன்றுண்டு.

ஏழாண்டுகளுக்கு முன் (1952இல்) மேனாட்டு அறிவர் (விஞ்ஞானி) ஒருவர் ஓர் ஆமைப் பொறியைக் கண்டுபிடித்துள்ள தாகச் செய்தித் தாள்களில் வெளிவந்தது. அது மின்சார மூளையுடன் அமைந்தது; தானாகவே நடத்தல், உணவுண்ணல், அவர் சொன்ன படி கேட்டல் முதலிய செயல்கள் செய்கின்றதாம் அப்பொறி, இத்தகையதே பிரச்சோதனனால் அமைக்கப்பட்ட வேழப்பொறி.

யூகி அவ்வூர்தியிலுள்ள '***வித்தக ஆணி வேண்டுவயின் முறுக்கி விண்ணகத் திழிந்தனன்***' (பெருங் 2: 193 - 4) என்பதால், இன்றைய வானூர்தி போலவே இயக்காணியால் பொறியை இயக்கி அவ்வூர்தியும் ஊரப்பட்டது என்று தெரிகிறது.

இவற்றால், இன்றுள்ள ஊரி (கார்), வானூர்தி போன்றவை அன்றும் இருந்திருக்கின்றன என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இன்று வானொலி மூலம் உலக நிகழ்ச்சிகளைக் கேட்பது போலவே, அன்றும் ***வானொலி*** என்பதன் மூலம் வெளிப்பேச்சைக் கேட்டு வந்தனர். ஆனால், அது இன்றுபோலன்றி அன்று அரசிய லார்க்கு மட்டும் தெரிந்ததாக, உரியதாக இருந்து வந்ததாகத் தெரிகிறது.

எனவே, இம்மதிலுள்மேடையில் அமைக்கப்பட்டிருந்த பொறிகளும் அத்தகையினவேயாகும். எதனால் இயங்கின என்பதே துணிந்து கூற முடியவில்லை. இது ஆராய்ச்சிக்குரியது. இக்கோட்டை யொன்றே பழந்தமிழர் நாகரிகத்தின் நனிமிகு சிறப்பைக் காட்டு தற்குப் போதுமானதாகும்.

## 3. மதிலகம்

இவ்வாறு அமைந்துள்ள கோட்டையில், அகமதிற்குள்ளே யுள்ள கோயிலில் அரசகுடும்பத்தினர் இருப்பர். கோ + இல் - கோவில், கோயில். கோ - அரசன், இல் - வீடு. அகமதிற்கும், இடைமதிற்கும், இடைப்பட்டது ***ஊர்*** எனப்படும். ஊரில் அமைச்சர், படைத்தலைவர், வணிகர், உழுவித் துண்ணும் வேளாளர் முதலிய செல்வர்களிருப்பர். இடைமதிற்கும், புறமதிற்கும் இடைப் பட்டது ***புறஞ்சேரி*** எனப்படும். சேரி - சேர்ந்து இருக்கும் இடம். புறஞ்சேரியில் எல்லாக் குடிமக்களும் இருப்பர். இங்கே மிகுந்த பரப்புடைய விளை நிலமும், வற்றா நீர்க்கிணறுகளும் இருக்கும். கோட்டைக்குள் இருப்போர்க்குப் பல ஆண்டுகட்கு வேண்டிய உணவுப் பொருள் சேர்த்து வைக்கும் பல பெரிய ***களஞ்சியங்கள்*** கோட்டைக்குள் இருக்கும். எனவே, பகைவர் பலவாண்டுகள் மதிலை முற்றுகையிட்ட போதிலும் உள்ளிருப்போர்க்கு உணவுத் தட்டுதல் உண்டாகாது. சேலம் மாவட்டத்து ***ஆற்றூர்க்*** (ஆத்தூர்) ***கோட்டைக்குள்*** உள்ள களஞ்சியங்கள் இன்றும் அப்பழங் கோட்டைகளுக்குச் சான்றாக நின்று நிலவுகின்றன.

இம்மூன்று மதில்களிலும் போர் நடக்கும். அகமதிலைக் கடந்து கோயில் கைக்கொண்டால்தான் கோட்டையைப் பிடித்த தாகும். 'கோட்டை விட்டுவிட்டான்' என்னும் பழமொழியால், பழந்தமிழ்க் கோட்டைகளின் சிறப்பு விளங்கும்.

## 4. புறத்தோனும் அகத்தோனும் [புற — 12]

மதில் முற்றும் புறத்துழிஞையோன் சிறப்பும், அடைத் திருக்கும் அகத்துழிஞையோன் சிறப்பும் பழந்தமிழ் வேந்தர்களின் மறச் செயலுக்கு விளக்கந்தருவது போல் அமைந்துள்ளன.

### புறத்தோன்

தான் முற்றியுள்ள மதிலைக் கொள்வதற்கு முன்னரே அம் மதிலுக் குடையவன் நாட்டை வேண்டியோர்க்குக் கொடுக்கும் ஆண்மைக்கப்பாற்பட்ட மறக்குறிப்பு அறிந்து இன்புறற் பால தொன்றாகும். இது, '***கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்***' எனப்படும். உறுதியாக வெல்வோம் என்னும் மனவெழுச்சியே இதற்குக் காரண மாகும். நினைத்ததை முடிக்க வல்ல அப்புறத்தோன் சிறப்பினை அகத்தோன் பாற் சென்ற தூதுவர் எடுத்துரைத்து, அவனைப் பணிதலே நன்றெனக் கூறுவர். அகத்தோன் பணிய மறுக்கின், பழமையாகிய இக்கோட்டையை இன்றே அழித்து விடுகிறேன் என்று கூறி, அதை அழிக்கத் தொடங்குவான். அங்ஙனம் அழிக்கத்

தொடங்கிய அவன், பகைவர் வாளும் வேலுங் கொண்டு தாக்கினால் அவற்றைத் தடுப்பதற்காக மிகுதியான கிடுகுப் படையைக் கொண்டு செல்வான். கிடுகு - கேடயம். இது முதல் மதிற்போர் தொடங்கும்.

## அகத்தோன்

அக்கோட்டையுள் வற்றாத நீர்க்கிணறுகளும், குறையாத நெற்களஞ்சியங்களும் பதணத்திலும், உள்ளும் தீராத படைக்கலங் களும் உண்மையை அகத்தோன் தூதர் வந்து புறத்தோனிடம் கூறி, எவ்வளவு காலம் முற்றினும் பயனில்லை, முற்றுவிட்டுச் செல்க வெனத் தெரிவிப்பர். பாரி பறம்பை முற்றுகையிட்ட வேந்தரை நோக்கிக் கபிலர் கூறியது (புறநா - 109) இதன்பாற்படும். அது கேட்டும் புறத்தோன் முற்றுகை விட்டுச் செல்லானெனின், அகத்தோன் புறம்போந்து கடும்போர் செய்து புறத்தோனைக் கலங்கச் செய்வான். புறத்தோர் கோட்டையைக் கைப்பற்றினும், ஒருசில அகத்தோர் மனங்கலங்காமலும், பணியாமலும் களம் வகுத்துப் போர் செய்வர்.

> **“உயர் வகலந் திண்மை அருமையிந் நான்கின்**
> **அமைவரண் என்றுரைக்கும் நூல்.” (குறள்)**

என்ற மதிலிலக்கணப்படி, தன் மதில் ஏணிக்கு எட்டாத உயரமும், பகைவரால் வெளியிலிருந்து துளை செய்ய முடியாத அடியகலமும், தம்மவர் (அகத்தோர்) நின்று போர் செய்தற்கேற்ற முடியகலமும், கருங்கல்லாலும், வன்சுண்ணத்தாலும் கட்டப்பட்டதால் எளிதில் இடிக்க முடியாத திண்மையும், பொறிகளும், கருவிகளும், மறஞ் சான்ற மறவரும் உடைமையால், அகத்தோன் புறத்தோனை மதியாமல் இருப்பான்.

## 5. மதிற்போர் (புற — 13)

புறத்தோன் கோட்டைக்குட் புகத்தொடங்கும் நாளில் குடையையுயர்த்தியும், வாளை நாட்டியும் அவன் மறவர்கள் தொடக்க விழாக் கொண்டாடுவர். இவை ***குடைநாட்கோள் வாணாட்கோள்*** எனப்படும். வேலை நடுதலும் கொள்க. இது இன்று கொண்டாடும் கொடியேற்று விழாப் போன்றது. குடை - குடிகாத்தற்கும், வாள் - எதிரி கேட்டிற்கும் அறிகுறியாகும். அகத்தோனும் தனக்கோர் வேந்தன் துணைவந்தால், வெளிப் போந்து போர் செய்தற்காக நாட்கொள்வான். ***நாட்கோடல்*** - போர்த் தொடக்கத்தை அறிவிக்கும் அறிகுறியாகும். மறவர்க்கு மறஞ்சிறத்தற்கும் இந்நாட்கோடல் ஏதுவாகும்.

அகழின் மீது - நீர்மேல் - வைக்கின்ற பலகையோடு சேர்த்துச் செய்யப்பட்ட ஏணிமேல் நின்று அகத்தோருடன் புறத்தோர் போர்

செய்வர். மதிலோரத்தில் அகழியிருப்பதால் அகழ்நீரின் மேல் மிதக்கும் பலகையோடு சேர்த்தே மதில் மேல் சார்த்தும் ஏணி செய்யப்படும். இது ***மடையமை ஏணி*** எனப்படும். இது நம் முன்னையோர் வினைசெயல் வகையின் மதிநுட்பத்தைக் காட்டும். புறத்தோர் ஏணிமேல் ஏறும் போதுதான் பதணத்திலுள்ள அகத்தோர் ஆங்குள்ள கருவிகளைக் கொண்டு மதில்மேலேறவிடாமல் தாக்குவர். ஆங்குள்ள பொறிகள் ஏணிமேலேறுவோரைத் தாக்கும். ஏவறையின்கண் உள்ள மறவர்கள் அவர் மீது அம்புமாரி பொழிவர். இது மிகமிகக் கொடுமையான போர். மேலேறற வெட்டித்தள்ளும் மறவர் தலைகள் பனங்காய் போல் அகழிக்குள் விழும். அகழிக்குள் வாயைத் திறந்து கொண்டிருக்கும் முதலைகள் அத்தலைகளை அப்படியே விழுங்கிவிடும். நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடும் போராகும் இது. அப்படியிருந்தும் புறத்தோர் மதில்மேலேறிப் பதணத்துள் குதித்து விடுவர். மதில் முடியிலும் போர் நடக்கும்.

பின்னர் அப்புறத்துழிஞையோர் அப்புறமதிலைக் கைக்கொண்டு இடைமதிலை அடைய முயல்வர். அகத்தோர் விடாமல் எதிர்த்துத் தாக்குவர். அவ்வூர்ச் செருவில் அகத்தோர் வெல்வதும் உண்டு. ஊர்ச் செருவை வென்று புறத்தோர் இடைமதிலை அடைவர். இருவகை மறவரும் அவ்விடைமதிற் கிடங்கின் இருபுறத்திலும் நின்று நீர்ப்பாசிபோல் நீங்காது பொருவர். இது பாசி எனப்படும். முன்னர் நடந்த ஊர்ச்செரு ***பாசிமறம்*** எனப்படும். புறத்தோர் இவ்வகழ்ப்போரில் வெற்றி பெறின், இடைமதிலிற் போர் நடக்கும். இவ்வாறே அகமதிலின் கண்ணும் போர் நடக்கும்.

புறமதிற் கிடங்கு, புறமதில், புறமதிற்கும் இடைமதிற்கும் இடையிலுள்ள ஊர், இடைமதிற் கிடங்கு, இடைமதில், அகமதில் ஆகிய இடங்களில் நடந்த போர்களில் வென்ற வேந்தன், தோற்ற வேந்தன் முடியைப் புனைந்து நீராடுவான். இது ***மண்ணுமங்கலம்*** எனப்படும். பின்னர் வென்ற வாளினை நிறுத்தி நீராட்டுவர். இது ***வாள்மங்கலம்*** எனப்படும். பின்னர் அவ்வெற்றிக்குக் காரணமான மறவர்க்குச் சிறப்புச் செய்வான்.

## 5. தும்பை (புற — 15)

தனது வலியினை உலகம் புகழ்தலே தான் பெறுபொருளாக எண்ணி வந்த வேந்தனை, மாற்று வேந்தனும் அவ்வாறே எண்ணி எதிர்த்துப் பொருவது தும்பைத் திணை எனப்படும். தும்பை - போர்.

சோம்பனையும், மலடனையும், மயிர் அவிழ்ந்தோனையும், பின்வாங்கினோனையும், படையிழந்தோனையும், ஒத்த படையெடாதோனையும் கொல்லார். இஃது ***அறப்போர்*** எனப்படும்.

## 1. போர் [புற — 16]

இரு பெரு வேந்தரும் களம் வகுத்தனர். போர்ப்பறை முழங்கின. பாடியிலிருந்து மறவர்கள் போர்க்கோலம் பூண்டனர். போர் தொடங்கிற்று. ஒரு பெரு வீரன் களத்தில் குதித்தான். பகை மறவர்கள் அவனை அணுகுதற் கஞ்சி எட்ட நின்று அவன் மேல் விட்ட அம்பும், வேலும், அவன் மேல் நிறையத் தைத்தன. உயிர் உடம்பை விட்டுச் சென்று விட்டது. ஆனால், அவன் உடல் நிலத்தில் விழவில்லை. காரணம், அம்பும் வேலும் தேருருளின் ஆரக்கால்கள் போன்று உடலில் தைத்ததனால், உடல் உருளின் குடம்போல் நிலத்தில் படாது நின்றது. தேர் - வண்டி, உருள் - சக்கரம், குடம் - கும்பம், என்னே மறத்தின் மாண்பு! அத்துணை நேரம் கீழ் வீழாமல் பொருத அம்மறவனது மறத்தின் பெருக்கு எத்துணையோ! மற்றொரு பெருவீரன்; மாற்றான் மறவரை மண்ணிடைப் படுத்துப் பொருதான்; முடிவில், தலை கைகால்கள் அறுக்கப்பட்டு வீழ்ந்தான். அறுபட்ட தலையும், உடலும், கையும், காலும், அட்டையாடுதல் போல ஆடிக்கொண்டே இருந்தன. அத்தகு சிறப்புடையது மறம்!

## 2. போர் வகை [புற — 17]

மறவர்கள் பகைவர் மேல் சினங் கொண்டு பொருவதேயன்றி, யானையும், குதிரையும், தாமே சினங்கொண்டு பொரும். இது ***யானை மறம், குதிரை மறம்*** எனப்படும். தானை - மறவர். மறவர் வீரத்தை, மறவர் தாயர் கூறுதல் - ***மூதின் முல்லை,*** மனைவியர் கூறுதல் - இல்லாள் முல்லை, கண்டோர் கூறுதல் - ***வல்லாண் முல்லை*** எனப்படும். அவ் யானையும், குதிரையும், தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்து தமிழுரை கேட்டு, தமிழருடன் பழகினவையல்லவா! வீரத்துக்கென்ன குறைச்சல்!

பொருநரும், பொருநரும், புலிபோலப் புகன்று பொருதனர். ஒரு படைவேந்தன் முன்னணியிற் சென்று வேற்போர் புரிந்தனன். அவனை எதிரிகள் சூழ்ந்து கொண்டனர். அது கண்ட தானைத் தலைவன் ஒருவன், விரைந்து சென்று எதிரிகளைத் தாக்கிப் புறங்கண்டு தம்மரசனைக் காத்தனன். இதுவன்றோ வீரர்க்கழகு! இது ***தார்நிலை*** எனப்படும்.

ஓரிடத்தே தானைத் தலைவர் இருவர் தனி நின்று பொருதனர்; அவ்விருவரும் தன்னிகரில்லாத் தனிமறமிக்கோர்; முனைப்புடன் இருவம் அரியேறுபோல் முனைந்து பொருதனர். முடிவில் இருவரும் கண்டோர் கண் கலுழும்படி ஒருங்கு மடிந்தனர். வெற்றி தோல்வி என்பன அன்னார் தம் மறத்தின் பெருமை கண்டு அணுக அஞ்சின போலும்!

மற்றொரு புறம்; ஒரு படை ஒரு படைக்கு எதிர் நிற்க லாற்றாது பின் வாங்கிச் சென்றது. தன் படை பின் வாங்கிச் செல்வதைக் கண்ட ஒரு படைத்தலைவன், தன் படைக்கு முன் சென்று, தன் படையைத் தாக்கிய எதிரி படையைத் தாக்கி எருமைக்கடாப் போல் முன்னின்று, தன் படை ஓடாமற் காத்தான். இவனன்றோ தகுதியான தானைத் தலைவன்!

ஒரு மறவன் எதிரிகளை முனைந்து தாக்கினான்; நெடுநேரம் எதிரிகளை வெட்டித் தள்ளினான். குத்திக் குவித்தான். அதனால், அவன் வாளும் வேலும் முனைமழுங்கிப் பயனற்றுப் போயின. அம்பறாத் தூணியும் காலியாயிற்று. படைக்கலம் கிடைக்கும் வரையிலும் உடல் வலியைத் துணயாகக் கொண்டு எதிரிகள் தாக்குதலினின்றும் தன்னைக் காத்து வந்தான். அவனது மறச் சிறப்பினை அவ்வெதிரிகளே பாராட்டினரெனில், தம்மவர் பாராட்டு தலைச் சொல்லவா வேண்டும்! இது மறத்தின் உச்சாணி போலும்!

ஒரு புறம் யானைப் போர் நடந்தது. பகை வேந்தன் தன் களிற்றின்மிசையேறிக் கறுத்து மேல் வந்தான். களிற்றொடு அவனையும் கொன்று களித்தான் அவன் இகல் வேந்தன். அக் கொன்ற வேந்தன் மறவர்கள், அக் கொல்லப்பட்ட வேந்தனைச் சூழ்ந்து நின்று ஆடினர். இஃதோர் மறக்குறிப்பாகும். நம் போன்றார்க்கு இஃதோர் நகைச்சுவையாகத் தோன்றும். அன்னாரும் நகைச்சுவை தோன்றத்தான் அவ்வாறு செய்தனர் போலும்!

தன் வேந்தன் பகைவர்களால் கொல்லப்பட்டதுகண்டு ஒரு பெரும் படைத்தலைவன், பெருஞ்சினங் கொண்டு அப்பகைவரைத் தாக்கினான். அவன் அவ்வாறு தாக்குதலைக் கண்ட எதிரி படைத் தலைவன் ஒருவன் ஆங்குற்று, அவனையும் அவன் படையையும் நூழிலாட்டினான். **நூழில் ஆட்டல் கொன்று குவித்தல்.** இவ்விரு படைத்தலைவரில் யார் சிறந்தவர்? பொறுப்புணர்ச்சி, கடமை யுணர்ச்சி, நன்னம்பிக்கை என்ற முக்குணங்களும் அவ்விருவரையும் புகலடைந்தன போலும்!

ஒரு பக்கம் வாட்போர் நடந்தது. அதுதான் அப்பெரும் போரின் இறுதிக் கட்டம் எனத்தகும் அத்தகு கடும்போர் அது. போர் தொடர்ந்து நடந்தது. அவ்வாட்போரில் இரு பெரு வேந்தரும் எதிர் நின்று பொருதொழிந்தனர். அவ்விவர்க்குந் துணைவந்த வேந்தரும் அவ்வாறே பொருதொழிந்தனர். முடிவில் இருபெரும் படையும் பொருது அவ்வாறே இறந்தொழிந்தன. என்னே போரின் கொடுமை! இதைப் போரின் கொடுமை என்பதா? வீரத்தின் நெடுமை என்பதா? யாதென்பது! இதனை,

**"இருபெரு வேந்தரும் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலை"**

என்கின்றார் ஆசிரியர்.

புறத்திணை ஏழனுள் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை என்னும் நான்கும் போர் முறையும்; வாகை, காஞ்சி இரண்டும் வாழ்க்கை முறையும்; பாடாண் அவ்விருவகையும் கூறுவதாகும்.

நிரைகொண்டோனும் நிரைக்குடையோனும் களங்குறித்துப் பொருதல் - வெட்சிப் புறத்துத் தும்பை எனப்படும் மண் வேண்டிச் சென்றோனும் எதிர்த்தோனும் பொருதல் - வஞ்சிப்புறத்துத் தும்பை எனப்படும். அகத்துழிஞையோனுக்கு வேறோர் வேந்தன் துணை வந்த விடத்து, அவன் புறம்போந்து களங்குறித்துப் பொருதல் - உழிஞைப்புறத்துத் தும்பை எனப்படும். இருவர் எங்கு பொரினும் அது தும்பை எனப்படும்.

## 6. வாகை [புற — 19]

குறையாத முயற்சியையுடைய ஒவ்வொருவரும் தத்தம் தொழிலையும் ஒழுக்கத்தையும் பலபடியாகச் சிறப்பித்துக் கூறுதல் - ***வாகை*** எனப்படும். வாகை - வெற்றி. ஒவ்வொரு வரும் அவரவர் தொழில் முதலியவற்றில் பெறும் வெற்றியைச் சிறப்பித்துக் கூறுதல். போர் வெற்றியும் அடங்கும்.

பார்ப்பார், அரசர், வணிகர், வெளாளர், அறிவர், அந்தணர், வீரர் என்னும் எழுவர் தொழிற் சிறப்பும், பார்ப்பனர் முதலிய அவ்வெழுவர் கீழிருந்து, அன்னார் தொழில்களைப் பயில்வோர் தொழிற் சிறப்பும் முன்னர், (புற - 20) 'தொழில்' என்னும் தலைப்பில் கூறப்பட்டுள்ளன. இது நம் முன்னோர்கள் தொழில் முன்னேற்றத்தில், தொழில் பயில்வதில் எவ்வளவு கண்ணுங் கருத்துமாக இருந்து வந்திருக்கின்றனர் என்பதற்குத் தக்க எடுத்துக்காட்டாகும்.

## மறமும் அறமும் [புற — 21]

இனி, வாகைத் திணைப் பொதுவாக மறத்தைச் சிறப்பித்தும், அறத்தைச் சிறப்பித்தும் கூறும் பகுதி, பழந்தமிழ் மக்களின் உட்கோளை அப்படியே நமக்குப் படம் பிடித்துக் காட்டுவதொன்றாகும். நம் முன்னையோர் மறவாழ்வையும், அறவாழ்வையும் நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் பகுதி இதுவே. மறம் - வீரம். இதில் மறவென்றி ஒன்பதும் அறவென்றி ஒன்பதும் கூறப்படுகின்றன. அவற்றுள் மக்கள் வாழ்க்கை முறை அனைத்தும் ஒருவாறு தொகுத்துக் கூறப்படுதல் போற்றற்குரியதாகும்.

***1. மறம் :*** போர் செய்யச் சென்ற - பகைவயிற் பிரிந்த - தலைவன், ***கூதிர்ப்பாசறை, வேனிற்பாசறை*** என்னும் இரு வகைப் பாசறைக் கண்ணும் தங்கியிருக்கும் போது, தட்பவெட்ப மிகுந்த அக்காலங் களில், அதாவது புணர்ச்சிக் காலமாகிய கூதிரினும், ஆறு, குளம் ஆடல், காவாடல் முதலியவற்றால் இன்புறும் காலமாகிய வேனிலினும் தலைவன் தலைவிமேற் காதலின்றிப் போர்விருப்ப முடையவனாகவே இருப்பான். இது ***பாசறை வென்றி*** எனப்படும். இவன் எத்துணைப் பொறுப்புடைத் தலைவன்!

***களவழி :*** தேரேறி வந்த பொருநர் முதலியோர் வேளாளர் நெல்லடிக்கும் களத்தே செய்யும் செய்கைகளைப் பாடுதலல்லாமல், அரசர் ஆளடிக்கும் களத்தே செய்யும் செய்கைகளைத் தேரேறி வந்த புலவர் பாடுவர். வேளாளர் களத்தில் நெல்லையடித்துப் பரிசிலர்க்குக் கொடுப்பதுபோல அரசர் போரை முடித்து எஞ்சிய பகைவர், யானை குதிரை முதலியவற்றைப் பரிசிலர்க்குக் கொடுப்பர்.

***ஏர்க்களம்*** பாடுதல், ***போர்க்களம்*** பாடுதல் எனக் களம் பாடுதல் இருவகைப்படும். ஏர்க்களத்தைப் பொருநர், பாணர், முதலியோர் பாடுவர். போர்க்களத்தைப் புலவர் பாடுவர். ஏர்க்கள வழியை உவமித்துப் போர்க்களவழியைச் சிறப்பித்து, நம் முன்னையோர் போர் வென்றிக்கு ஏர் வென்றியே காரணம் என்பதை உணர்ந்து உழவுத் தொழிலைக் கண்போற் கருதிப் போற்றி வந்தமை பெறப்படும். இது ***களவென்றி*** எனப்படும். பொய்கையார் பாடியுள்ள ***களவழி நாற்பது*** இதற்கு இலக்கியமாகும். பொருநரும் பாணரும் தேரேறிச் சென்று களம்பாடியிருத்தலான், அவர்கள் அன்று மற்றவர்களோடு ஒப்பாகவே மதிக்கப்பட்டு வந்தமை பெறப்படும்.

தேர்வேந்தர் பலரையும் வென்ற வேந்தன், அவ்வெற்றிக் களிப்பால், படைத்தலைவரோடு கைகோத்துக் கொண்டு தேர்த் தட்டின்கண் குரவையாடுவான். இது ***முன்றேர்க் குரவை*** எனப்படும். தேரின் பின்னே மறவர்கள் குரவையாடுவர். இது ***பின்றேர்க் குரவை*** எனப்படும். குரவை பலர் கைகோத்தாடுதல். இது பெண்கள் ஆடும் கூத்துவகையுள் ஒன்று. மகளிர் ஆடும் குரவைக் கூத்தை வெற்றிக் களிப்பால் மன்னனும் மற்றவரும் ஆடுதலான் இது வென்றியாயிற்று.

பகைவர் பலரும் அணுக அஞ்சி அகலும்படி ஒருவன் வேற் றொழிலில் தேர்ச்சி பெறுவது வேல்வென்றி எனப்படும். வாள் வென்றியும், வில் வென்றியும் இதில் அடங்குமாகை யால் இது ***படைவென்றி*** எனப்படும். இதனால், அன்று ஒவ்வொரு தொழிலினும் தனிப்பயிற்சி பெற்ற **வல்லுநர்கள்** (Expert) இருந்து, அவ்வத்தொழிலை மேன்மேலும் முன்னேற்ற முறச் செய்து வந்தனர் என்பது விளங்குகிறது.

இனி, ஒருவன் ஒருவர் இருவரோடு எதிர்ப்பது இயற்கை. ஒருவன் சிறிதும் அஞ்சாது, ஒரு பெரும்படை முன் தனியாகச் சென்று எதிர்த்துப பொருவது, அப்பெரும்படையைத் தோற்றோடும் படி செய்வது இயற்கைக்கு அப்பாற்பட்ட செயலாகும். அத்தகைய வல்லுநரும் அன்றிருந்தனர். இது ***மறவென்றி*** எனப்படும். பொருத்த மான பெயர்!

நிலையில்லாத உயிர்வாழ்க்கையை விரும்பாது, நிலையான மறப்புகழை விரும்புதலும் மறவென்றியேயாகும். இத்தகைய மறத்தன்மையே அன்று தமிழ்நாடு வீரத்தின் உறைவிடமாக இருந்தமைக்குக் காரணமாகும்.

ஒரு மறவன், 'நான் இன்ன நேரத்திற்குள் இப்படையை வெல்லேனெனில், தீயில் வீழ்ந்திறப்பேன்' என வஞ்சினங் கூறிப் பொருதான். அவ்வாறு வஞ்சினங் கூறிப் பொருத அவன். அந்நேரத் திற்குள் அப்படையை வெல்ல முடியாது போகவே. தான் கூறிய வஞ்சினந் தப்பாது; பகைவர் நாண, பெரியோர்கள் பாராட்ட, தீ வளர்த்து அதில் வீழ்ந்து உயிர் துறந்தான். என்னே அவ்வீரனின் சொற்றவறாமை! இது ***சொல்வென்றி*** எனப்படும். மறவரின் இத்தகைய வஞ்சினமே மறத்தை வளர்த்து, வன்கண்மையைத் தந்து, ஊக்கமும், ஆள்வினையும் ஒருங்கமையச் செய்து அன்னார்க்கு வெற்றிப் புகழைத் தந்ததென்க.

பகைவரேனும், அவர் சுற்றத்தாரேனும் வேண்டும் உதவியை மறுக்காமற் செய்தலும் மறச்செயலேயாகும். அதாவது, போர் நடக்கும் போது சிறந்த படையேவாமை, போரைச் சற்றுநேரம் நிறுத்திவைத்தல் போன்ற உதவியை வேண்டின் பகைவரின் அவ் வேண்டுகோட்கு இசைதல். இது பகைவர்க்கு ஆக்கந்தருவ தெனினும் மறத்தன்மையால் இசைதலாகும். இது ***துணைவென்றி*** எனப்படும்.

**"பேராண்மை யென்ப தறுகணொன் றுற்றக்கால்**
**ஊராண்மை மற்றத னெஃகு." (குறள்)**

என்ற குறள் இக்கருத்துடையதே.

ஊராண்மை - உதவி. இவ்வொன்பதும் போர் பற்றியனவே யாகலான் மறச்செயல்களாயின.

## 2. அறம்

உழவர்கள் எருத்தையும், எருமையையும் கொண்டு உழவஞ் சாமல் உழுதொழில் செய்து நாட்டுமக்களைக் காத்து வருகின்றனர். மறவர்கள் யானையையும், குதிரையையும் கொண்டு போரஞ்சாது போர்த்தொழில் செய்து நாட்டுமக்களைக் காத்து வருகின்றனர்.

முனைவர் பசி வருத்தாமலும், பின்னவர் பகை வருத்தாமலும் காக்கின்றனர். இவ்விரு தொழிலிலும் வெற்றி பெற்ற வழியே நாட்டுமக்களை நன்கினிது காக்க முடியுமாகையால், இது ***தொழில் வென்றியாகும்.*** பசியும் பகையும் மக்களை வருத்திக் கொல்லும் பான்மைய வாகலின், அவ்விரண்டு முறாமல் மக்களைக் காப்பன உழவும் போருமேயாகும். போர், வீரச் செயலைக் குறிக்கும். இத்தகைய கருத்தமைய அவ்விரு தொழிலையும் இணைத்துக் கூறிய ஆசிரியரின் மதிநுட்பம் வியத்தற்குரிய தொன்றாகும்.

முறையாக அரசு புரிந்து வந்த ஓர் அரசன், நிலையாமையை எண்ணி, அரசை இளவரசுக் கீந்து அமைதியுடன் இருப்பான். அரச நிலையைத் துறப்பது அரிதாகலின், இது அரசவென்றி எனப்படும். அரசை நீத்த இவன் பொதுநலஞ் செய்யப்புகின், ***அந்தணன்*** ஆவான். இவன் அரசமரபிலிருந்து தோன்றிய அந்தணன், '***அந்தணர்***' என்னும் தலைப்பைப் பார்க்க.

***அறங்கூறவையம்*** என்பது, இன்றுள்ள உயர்முறை மன்றம் (Highcourt) போன்றதாகும். நடுவர், அமைச்சர் முதலியோர் அவ்வ வையத்தின் உறுப்பினராவர். ***குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுநிலைமை, அழுக்காறின்மை, அவாவின்மை*** என்னும் எண் குணங்களும் அமையப் பெற்ற சான்றோர்களே அவ்வவையத் தாராகத் தகுதியுடையவராவர். அன்னார் அறங் கூறுவதில் - வழக்குத் தீர்ப்பதில் - சிறந்து விளங்குவர். அது ***அவையவென்றி*** எனப்படும். கரிகாலன் நரைமுடித்து அறங்கூறிய செய்தியை அறிக. எண் குணங்கட்கும் இலக்கியம் திருக்குறளிற் காண்க.

மக்கள் இல்லற வொழுக்கங்களில் தவறாது நடத்தல், சிறந்த கொடைக்குணமுடையராய் இருத்தல். மிக்க பொறுமைக்குண முடையராதல், பொருளில்லார்க் கிவ்வுலக இன்பம் இல்லையாத லால் (குறள் - 247). பொருளீட்டுவதில் பெருமுயற்சியுடையராதல் ஆகிய இந்நான்கும் முறையே ***ஒழுக்கவென்றி, கொடை வென்றி, பொறை வென்றி, பொருள் வென்றி*** எனப்படும். இவற்றிற்கு இலக்கியம் திருக்குறளிற் காண்க. இவ்வறச் செயல்கள் நான்கும் இல்லறத்தார்க் குரியவை. அடுத்த இரண்டும் துறவறத்தார்க்குரியவை.

இல்லறத்தை நீத்தார் மிக்க அருளுள்ளமுடையராகவும், பொருட் பற்றில்லாதவராகவும் இருத்தல் வேண்டும். அருளுடை மையினும், பற்றின்மையினும் சிறந்திருத்தல் ***துறவுவென்றி*** யாகும். இலக்கியம் திருக்குறளிற் காண்க.

பல்லாயிர ஆண்டுகட்கு முன்னரே இங்ஙனம் வாழ்க்கை முறைகளை வரையறை செய்து,அவற்றில் சிறந்து - வெற்றியுடன் -

வாழவேண்டுமென இலக்கணம் செய்து வாழ்ந்த பெருமை தமிழர்க்கே யுரிய தனிப்பெருமையாகும்.

## 7. காஞ்சி [புற – 23]

காஞ்சி என்பது - நிலையாமை. ***செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை*** என நிலையாமை மூன்று வகைப்படும். உலகியற் பொருளான அறம், பொருள், இன்பங்களை நுகர முடியாமற் செய்வன இந்நிலையாமைகளே யாகலான், அந்நிலையாமையை யுணர்ந்தால் தான் அறம் பொருள் இன்பங்களின் பயனைச் சரியானபடி அடைய முடியும். நிலையாமையினை யுணராதார் அறம் பொருளின்பங்களைச் சரியான படி நுகர முடியாது. அறம் பொருளின்பங்களை அளவறிந்து நுகரும் பொருட்டு அந்நிலை யாமைகளைச் சான்றோர் கூறுவது காஞ்சித் திணையாகும்.

அதை ***ஆண்பாற் காஞ்சி, பெண்பாற் காஞ்சி*** என இரு கூறு செய்து கூறும் ஆசிரியரின் உலகியலறிவு அறிந்து இன்புறற்பால தொன்றாகும். அவ்விரு கூறும் ஆண்பெண் இருபாலுக்கும் பொது வேனும், சிறப்புடைமை நோக்கி இரு கூறாகப் பகுத்துக் கூறியுள்ளார். பொதுவையும், சிறப்பையும் அறிந்து அதற்கேற்பக் கொள்வது நமது கடமையாகும். ஆண்பாற் காஞ்சி - ஆடவரின் நிலையாமை. பெண்பாற் காஞ்சி - பெண்டிரின் நிலையாமை.

## 1. ஆண்பாற் காஞ்சி [புற – 24]

பிறரால் தடுத்தற்கரிய கூற்றம் வருமெனப் பெரியோர் கூறுவது - ***பெருங் காஞ்சி*** எனப்படும். உடலும், உயிரும் கூறுபடும் காலத்தை - சாவினை - ***கூற்று, கூற்றம், கூற்றுவன்*** என்பது **நூன்மரபு.** வெற்றியை - கொற்றவை என்பது போல (புற - 4. 1.6)

இது யாக்கை நிலையாமை. யாக்கை நிலையாமையுணர்ந்தால் தான், யாக்கையின் பயனான அறம் பொருள் இன்பங் கோடலில் ஆர்வமும், பயன் கொண்ட யாக்கையின் அழிவுக்கு அஞ்சாமையும் உண்டாகும். இதற்கு இலக்கியம் நாலடியார். யாக்கை நிலையாமை என்னும் அதிகாரத்திற் காண்க.

இளமை கழிந்த முதியோர், அவ்விளமை கழியாதார்க்கு - இளையோர்க்கு - அவ்விளமை நிலையாமையைக் கூறுவது - ***முதுகாஞ்சி*** எனப்படும். இது இளமை நிலையாமை. இளமை நிலையாமை யுணர்ந்தாற்றான், அவ்விளமைப் பருவத்திற் செய்ய விரும்பும் ஒழுக்கக் கேடான செயல்களைச் செய்யாமற் செய்யும். இதற்கும் இலக்கியம் நாலடியார். இளமை நிலையாமை என்னும் அதிகாரத்திற் காண்க.

1. திருக்குறள் குழந்தையுரை - முகவுரை பார்க்க

*உயிர் வாழ்க்கை நிலையாமையுடைய தென்பதை ஆராய்ந் தறிந்து, போரில் பட்டபுண்ணைக் கிழித்துக் கொண்டு உயிர் விட்டுப் புகழ் கொள்ளுதல் - **மறக்காஞ்சி** எனப்படும். அப்புண்ணை ஆற்றிக் கொண்டு வாழினும் ஒரு நாளைக்கு இறந்தே தீரவேண்டு மாகையால், அதுகாறும் காத்திராமல் அப்புண்ணைக் கிழித்துக் கொண்டு உயிர்விடுவர் என்பதாம். இது யாக்கை நிலையாமை. என்னே நம் முன்னையோரின் உண்மையுணர்ச்சியின் ஊற்றம்!*

*போர்க்களத்தில் காப்போரின்றிப் புண்பட்டு இறந்து கிடப் பவனை உயிருள்ளவனாக எண்ணி, அச்சத்தினால் நள்ளிரவில் நரி முதலிய உயிர்கள் அவனை அணுகா தகல்வது -**பேய்க்காஞ்சி** எனப்படும். பேய் - அச்சம். நாய் நரி தின்னாமற் கிடந்தது அவன் பிணம். சுற்றத்தாரின்மையால், இது செல்வநிலையாமையாயிற்று, **நரிவெரூஉத்தலையார்** என்னும் புலவரின் பெயர்க்குறிப்பால், நாற் நரி கண்டஞ்சும் அத்தகு நிலையிற் கிடந்தானென்றுமாம்.*

*ஒருவன் இறந்தபோது, 'அவன் இத்தன்மையன்' எனக் கூறிப் பலரும் இரங்குவர். இது பெரும்பாலும் அவன் செய்த நன்மைகளை எடுத்துக் கூறி, இனி அத்தகைய நன்மைகள் செய்தல் கழிந்ததே - தவிர்ந்ததே - என இரங்குவதால், இது **மன்னைக் காஞ்சி** எனப்படும். மன்-கழிவுப்பொருள் குறிக்கும் இடைச்சொல், அதியமான் இறந்த போது ஔவையார் இரங்கிப் பாடிய புறப்பாட்டு (235) இதற்கு இலக்கியமாகும். இது யாக்கை நிலையாமை. இதனால் பழந்தமிழ் மக்களின் பொதுநலப் பண்பாடு இனிது விளங்கும்.*

*'இன்னது செய்யத் தவறினால் இன்னது ஆவேன்' எனக் கூறிய வஞ்சினத்தில் தப்பாதது - **வஞ்சினக்காஞ்சி** எனப்படும். முன் வாகைத் திணையில் (புற- 22) மறவன் கூறிய வஞ்சினம் வீரம் பற்றியது. இது நிலையாமை பற்றியது. 'சினங்கெழு வேந்தரைத் தாக்கி முரசங் கொள்ளேனாயின், குடிபழி தூற்றுங் கோலேனாகுக, புலவர் பாடாது வரைக வென் நிலவரை' எனத் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் கூறிய வஞ்சினம் (புறம் - 72) இதற்கு இலக்கியமாகும். '**உன்னை முந்தாவிட்டால் உன் பெயரை எனக்கு வை.**' '**இந்தத் தடவை தவறினால் ஒரு பக்கத்து மீசையை எடுத்துக் கொள்கிறேன்**' என்பனவும் இதன் பாற்படும்.*

*பகைவர் படைக்கலஞ் செய்த பைம்புண்ணை அணி கலனாகப் பெற்று இறந்து கிடக்கும் தன் கணவனது உடலைத் தொடுவதற் கஞ்சி, நள்ளிரவில் மனைவி தொடாது காத்து வருவது - **தொடாக் காஞ்சி** எனப்படும். உளங்கலந்த அன்புடைக் காதலியே தொடாத*

*நிலைமை எய்தியதனால், இது ஆண்பாற் காயிற்று. இதனால், பழந்தமிழ் மகளிர் போர்க்களஞ் சென்று, ஆடவர் செய்யும் போர்ச் செயலை நேரில் கண்டு களித்த மறக்குணமுடையர் என்பது பெறப்படும். அம்மறக்குடி மகளிர் பெற்ற மறவர்களல்லரோ பழந்தமிழகத்தைப் பாதுகாத்து வந்தனர்!*

*உயிர் நீத்த கணவனது உடம்பின் கண் உள்ள வேலுண் டாக்கிய புண்களைக் கண்டு மனைவி அஞ்சுவது - **ஆஞ்சிக் காஞ்சி** எனப்படும். '**வளியிடை போழப் படாது முயங்கிய**' (குறள் - 1108) மனைவியே அம் மார்பினைக்கண்டஞ்சும்படி அத்தகு புண்ணுறப் பொருத அவன் மறமே மறம்! இவ்விரண்டும் யாக்கை நிலையாமை; இன்ப நிலையாமையும் கொள்க.*

*தன் மகளைக் கொடுக்க மறுத்தமையால், வலிதிற் கொள்ள வந்த மன்னனுக்கு அவளைக் கொடுக்க இசையாது, அவனோடு போர் செய்யத் துணிதல் - **மகட்பாற் காஞ்சி** எனப்படும். இது, காதலின்றி வலிதிற் கோடல் தகாதென்னும் மறக் குறிப்பு. இது இளமை நிலையாமை. இதனால், பழந்தமிழ் மக்கள் களவொழுக்கத் தை - காதற் கலப்பை - எத்தகைய மேம்பாடுடையதாக மதித்துப் போற்றி வந்தனர் என்பது விளங்குகிறதல்லவா? இது, பிற்காலத்தே கலம்பகத்தின் உறுப்புக்களுள் ஒன்றான **மறம்** எனக் கொள்ளப் பட்டது.*

*இறந்த கணவன் தலையைத் தழுவியபடியே மனைவி உடனுயிர் நீத்தல் - **தலையொடு முடிதல்** எனப்படும். இது அன்பும், யாக்கையும், ஒருங்கு நிலையாமை. இராவணன் இறந்ததும் வண்டார் குழலி உடனுயிர் நீத்ததும், பாண்டியன் நெடுஞ்செழியன் அரசு கட்டிலில் துஞ்சியதும் அவன் கோப்பெருந்தேவி உடனுயிர் விட்டதும் இதற்கு இலக்கியமாகும்.*

*இளமைப் பருவத்தே ஆண்பெண் இருபாலார்க்கும் இந்நிலை யாமைகளையெல்லாம் விளக்கமாக எடுத்துரைத்து வந்தால், இளைஞர்கள் தீய ஒழுக்கங்களைக் கனவிலேனுங் கருதுவார்களா? ஈயாத்தன்மை அவர்களை எக்காரணங் கொண்டும் அணுக முடியுமா? பிறரை ஏமாற்றுதல், கள்ளத்தனம், இன்னா செய்தல் முதலிய கெட்ட குணங்கள் கிட்டுமா? மாறாக, மக்களினம் நல்லொழுக்கம் என்னும் எல்லைக் கோட்டுக்குள் இனிது செல்லுமன்றோ? ஆனால், இதையெல்லாம் யார் எண்ணிப் பார்க்கிறார்கள்? வாழ்க்கைக்குப் புறம்பானதும் கெட்டவழிக்கு இட்டுச் செல்வதுமான செய்திகள் தாமே இன்று மக்கட்கு வழங்கப்படுகின்றன. என்று தமிழ்ப் பெருமக்கட்குத் தமிழுணர்ச்சியுண்டாகுமோ!*

## 2. பெண்பாற் காஞ்சி

*பெரும் புகழொடு இறந்தா னொருவனைப் பெண்டிர் பலர் சூழ்ந்து நின்று ஆரவாரத்துடன் அழுதல் - **பூசல் மயக்கம்** எனப்படும். இன்று இறந்தாரைச் சூழ்ந்து ஒப்பாரி பாடிப் பெண்கள் அழும் வழக்கம் பண்டைய வழக்கமே என்பது அறிந்து இன்புறற் பால தொன்றன்றோ? பெண்கள் பாடியழும் அழுகிற பாட்டுக்களை யெல்லாம் தொகுத்து, அவற்றிலுள்ள கருத்துக்களைப் பிழிந்தெடுத் தால், அது மக்கள் வாழ்க்கையின் வரன்முறைப் படப்பிடிப்பாக இருக்கும். அத்தகு பொருள் பொதிந்தவை அப்பாடல்கள். அவை பெண் மக்களின் உளக்கோளுணர்ச்சியால் உருப்பெற்றவையாகும். பழந் தமிழ்ப் பெண்டிர்களின் பூசல்மயக்கப் பாடல்கள் எத்தகையனவோ!*

*கண்டோர் பொறுத்தற் கரிய பெருந்துன்பங் கொள்ளும் படி, சுற்றத்தாரின்றி, மனைவி தனியாக இறந்த கணவனிடத்திருந்தழுவது - **தாங்கரும்பையுள்** எனப்படும். பையுள் - துன்பம். அத்தனி நிலையை எங்ஙனம் தாங்க முடியும்!*

*கணவன் இறந்ததும், மனைவியும் உடனுயிர் நீத்ததைக் கண்டோர் பிறருக்குக் கூறுதல் - **முதானந்தம்** எனப்படும். ஆனந்தம் - சாக்காடு. முன் தனித்திருந்தழுதவளே இறந்தனள் போலும்!*

*கொடிய சுரத்தின் கண் கணவனை இழந்த ஒருத்தி, தன் தனிமையைக் கூறியழுதல் - **முதுபாலை** எனப்படும். பாலை - பிரிவு. முதுபாலை - பெரும் பிரிவு. சுரம் - அரியவழி. கணவனும் மனைவியும் வெளியூர் செல்லும் போது நேர்வது இது. உடன் போக்கில் நேர்தலும் கூடும். இவை நான்கும் இன்பமும், செல்வமும், ஒருங்கு நிலையாமை.*

*கணவனோடு மனைவியும் உடனுயிர் நீத்த விடத்து, அவர்கள் முன் புனலாடியும், பொழிலாடியும் இன்புற்ற நிலையை ஆயத்தாரும் பிறரும் பிறர்க்குக் கூறுதல் - **கையறுநிலை** எனப்படும். இது செல்வ நிலையாமை.*

*உலகம் எவ்வளவு பிணிப்புக்குட் பட்டுக் கிடக்கின்றது! இப்பிணிப்பு இல்லையேல், இன்று இவ்வுலகம் மண்ணுலகமாகத் தான் இருக்கும். ஒருவர்க் கொருவர்க்குள்ள தொடர்பு தான் என்ன! காதல், அன்பு, நட்பு, பற்று, பாசம் என்னும் சொற்பொருளின் பெருமைதானென்னவோ!*

> **"பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்**
> **மண்புக்கு மாய்வது மன்." (குறள்)**

*என்பது வள்ளுவர் வாய்மொழி.*

இன்று கைம்மைகள் மட்டும் இருப்பது போலன்றி அன்று கைம்மரும் இருந்தனர். ஆசிரியர், கைம்மை நிலையை - காதலன் இழந்த ***தாபத நிலை*** எனவும், கைம்மன் நிலையை - காதலி இழந்த ***தபுதார நிலை*** எனவும் கூறுகின்றார். இத்தாபத நிலையும், தபுதார நிலையும் யாக்கையும், இன்பமும் ஒருங்கு நிலையாமையாகும். மனைவியிறந்த பின் இரண்டாந்தாரம் கொள்ளக் கருதின் காஞ்சியாகாது.

இதனால், நம் முன்னையோர் இன்றுபோல் இன்பந் துய்க்கவும், பிள்ளை பெறவும், சோறாக்கவும் தம்மை மங்கலனாக்கவும் பல தாரங் கொள்ளும் வழக்கத்தைக் கைக்கொண்டிருக்க வில்லையென்பது விளங்குகிறது. ஒரு சில அடங்காமாறிகளைத் தவிர மற்றெல்லோரும் களவொழுக்க மொழுகி மணந்து கொண்ட மனைவியிறக்கின், தபுதார நிலையிலேயே இருந்துவந்திருக்கின்றனர்.

ஆண்களுக்கு அன்று தபுதார நிலையை நீக்கிக் கொள்ளும் - மறுமணஞ் செய்து கொள்ளும் - உரிமை இருந்திருக்கும் போது, பெண்களுக்கும் அன்று தாபத நிலையை நீக்கிக் கொள்ளும் உரிமை இருந்திருக்கலாம். ஆனால், அதைப் பற்றிய குறிப்பொன்றும் காணவில்லை. தாபதநிலைக்கு - '***கைம்மை***' என்னும் உலக வழக்குச் சொல் இருப்பதுபோல, தபுதார நிலைக்கு உலக வழக்குச் சொல் இன்மையால் - '***கைம்மன்***' என்னும் சொல் வழக்கில் இன்மையால் - பிற்காலத்தே ஆண்மக்கள், பெண்மக்கள் பிறப்புரிமையைப் பறித்து விட்டமை பெறப்படும். பழந்தமிழ் ஒழுக்கமாகிய தபுதார நிலையை ஆண்மக்கள் இயன்ற மட்டிலும் கடைப்பிடிப்பது. ஆண் பெண் ஒருமை வாழ்வுக்கும், நல்லொழுக்க நிகழ்வுக்கும் ஏற்றதாகும்.

கணவனுடன் உடனெரிபுகச் செல்வதை விலக்குவதை மறுத்துப் பெண்கள் உடனெரிபுகுதலும் உண்டு. இது ***பாலைநிலை*** எனப்படும். பூதப்பாண்டியன் தேவியாரான பெருங்கோப்பெண்டு என்னும் பெண்ணரசியார், அவ்வாறு தடுத்தோரை இகழ்ந்து கூறி மறுத்துச் சென்று உடனெரிபுக்கமை 246 புறப்பாட்டால் தெரிகிறது.

கணவனிறந்ததும் உடனுயிர் விடுதல் - ***தலையன்பு*** எனவும், உடனெரி புகுதல் - ***இடையன்பு*** எனவும், தாபதநிலை - ***கடையன்பு*** எனவும் படும். தாமே எதிர்ப்பட்டுக் களவொழுக்க மொழுகிக் காதல் முதிர்ந்து மணஞ்செய்து கொண்ட அக்காலப் பெண்கட்குத் தலையன்பும், இடையன்பும் உண்மையாகவே இருந்திருக்கலாம். ஆனால், கட்டாய மணம் புரியும் இக்காலப் பெண்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்களுக்குக் கடையன்பு கூட இருக்கக் காரண மில்லை. மேலும், ஆடவரை விடப் பெண்டிர் மிகவும் இளகிய உள்ளமுடையவராவர். அதுவே அவர்கள் எளிதில் உயிரை மாய்த்துக் கொள்வதற்குக் காரணமாகும்.

*இவ்வாறு ஆண்களுக்காக உயிர்விடும் பெண்ணுலகத் தைத் தான் ஆண்கள் ஒரு விலைப்பண்டம் போல எண்ணி, அவ்வாறே நடத்தியும் வருகின்றனர். வாழ்க்கையின் சரி பங்காளிகளான பெண்களின் பிறப்புரிமையை வழங்க மறுப்பது ஆண்களின் தன்னலமே காரணமாகும்.*

*தம் மறக்குடிப்புகழ் கெடுதலுக் கேதுவாகத் தம் மகன் போரில் புறங்கொடுத்தான் எனக் கேட்ட தாயர் அம்மானக் கேட்டைப் பொறாது உயிர்விடுவர். மகனைப் போருக்கனுப்பி விட்டு, அவன் பெருமையை அறியக் காத்திருந்த தாயர், அவன் வெற்றியுடன் மாண்டான் என்பதைக் கேட்டதும் மகிழ்ச்சியுடன் உயிர்விடுவர். இவ்விரண்டும் **தலைப்பெயல் நிலை** எனப்படும். இத்தகைய மறக்குடி மகளிர் இருந்தால் இன்று தமிழ்நாடு இந் நிலையிலா இருக்கும்? என்று தமிழ்நாடு அத்தகைய மறக்குடி மகளிரையும், மைந்தரையும் பெற்று மாண்புடன் விளங்குமோ!*

*முடிவாக உலகில் பிறந்தோரெல்லாம் இறந்து போகவும், என்றும் நிலையாகவுள்ள புறங்காட்டை வாழ்த்தி அமைதியுறுவர். இது **காடு வாழ்த்து** எனப்படும்.*

*வாழ்க்கையில் நேரும் பலவகைத் துன்பங்களையும் விரி வாகவும், விளக்கமாகவும் எடுத்துக் கூறுமுகத்தான், நிலையாமை என்னும் உண்மையை யுள்ளபடி யுணர்ந்து, வாழ்க்கையில் வெறுப்புக் கொள்ளாமல் அமைந்து வாழவேண்டும் என்பதே காஞ்சித் திணையின் கருத்தாகும்.*

### 8. பாடாண்

*பாடாண் திணையாவது - கொடையாளரைப் புலவர்கள் புகழ்ந்து பாடுவது. பாடு ஆண் திணை - பாடப்படும் ஆண் மகனது ஒழுக்கம். அதாவது, பாட்டுடைத் தலைவனின் வீரம், கொடை புகழ் முதலிய ஒழுக்கத்தைச் சிறப்பித்துப் பாடுதல் பாடாண்டிணை எனப்படும். பாடுதலையும், பாடப்படுதலையும் ஒரு திணையாக அமைத்த நம் முன்னையோர் மதிநுட்பமே நுட்பம்!*

*அது, வெட்சி முதலிய ஏனை ஆறுதிணைகளையும் பாடுதல், தனக்கே உரிய பொருளைப் பாடுதல் என இருவகைப்படும். வெட்சி முதலிய திணைகளைப் பாடுதல் - பாடாண்டலைவன் வெட்சி முதலிய திணைச்செயல்கள் நிகழ்த்தியதாகப் பாடுதல். தனக்கே உரிய பொருளைப் பாடுதல் - பாடாண்டிணைக்கே உரிய பொருளைப் பாடுதல். அது, **தேவர்ப்பாடாண், மக்கட்பாடாண்** என இரு வகைப்படும். எனவே,*

1. வெட்சிப் பாடாண்
2. வஞ்சிப்பாடாண்
3. உழிஞைப் பாடாண்
4. தும்பைப் பாடாண்
5. வாகைப் பாடாண்
6. காஞ்சிப் பாடாண்
7. தேவர்ப் பாடாண்
8. மக்கட் பாடாண்

என, அப்பாடாண் எட்டு வகைப்படும் (புற - 22). வெட்சிப் பாடாண் - பாடாண்டிணைப் பொருளோடு வெட்சித் திணைப் பொருளும் அமையப் பாடுதல். ஏனையவும் இவ்வாறே.

மக்களை உயர்த்தித் தேவராக்கிப் பாடுதலும், உயர் பொருள் களை உயர்த்துப் பாடுதலும் - தேவர்ப்பாடாண் ஆகும். மக்களை மக்களாகவே பாடுதல் - மக்கட் பாடாண் ஆகும். தேவரைப் பாடுதல் - தேவர்ப் பாடாண்பாட்டு எனவும், மக்களைப் பாடுதல் - செந் துறைப் பாடாண்பாட்டு எனவும் வழங்கும் (புற - 27). பாடப்படும் பொருளை இவ்வாறு இயல்பாகவும் உயர்வுடையதாகவும் படைத்துக் கொண்டு பாடும் பழந்தமிழ்ச் சான்றோர்களின் மாண்பே மாண்பு!

பாடாண் பொருள் - பரவல், புகழ்ச்சி, காமம் என மூன்று வகைப்படும். பரவல் - வாழ்த்தல். காமம் - புணர்ச்சி வேட்கை.

தெய்வப் பகுதி - வாழ்த்தல், புணர்ச்சி வேட்கை என இரு பொருள் பெறும்.

மக்கட்பகுதி - வாழ்த்தல், புகழ்தல், புணர்ச்சி வேட்கை என முப்பொருள் பெறும்.

### 1. தேவர்ப் பாடாண்

அமர்கண் முடியும் அறுவகையானும் - தேவர்கட் பொருந்தும் அறுமுறை வாழ்த்தும், அமரர்கண் முடியும், புரைதீர் காமம் புல்லிய வகையினும் - குற்றந் தீர்ந்த புணர்ச்சி வேட்கையும் - தேவர்ப் பகுதியாகும் (புற - 26)

### 1. வாழ்த்தல்

வாழ்த்தலாவது - ஒன்றன் சிறப்பினை எடுத்துக் கூறுதல். அவ்வாழ்த்து - அறுமுறை வாழ்த்து, ஏனைவாழ்த்து என இரு வகைப்படும்.

அறுமுறை வாழ்த்தாவன - வான், நீத்தார், அறம், ஆன், அரசன், உலகு என்னும் ஆறையும் வாழ்த்துதல். இவையாறும் சிறந்த பொருள்களாகையால் தெய்வங்களாயின. முதல் மூன்று வாழ்த்தும் திருக்குறளில் வந்துள்ளமை காண்க. பாட்டுடைத் தலைவனை

வாழ்த்தும் போது, உயர்ந்த பொருள்களையும் உடன் வாழ்த்துதல் பாடாண்டிணை மரபாகும். இப்பாடாண்டிணைத் தெய்வ விளக் கத்தைத் '**தெய்வம்**' என்னும் தலைப்பிற் காண்க.

இவ்வறுமுறை வாழ்த்தைப் போல, ஞாயிறு, திங்கள், உயர் குணம் ஆகிய மூன்றையும் வாழ்த்துதலும் உண்டு. இவை முறையே **கொடிநிலை, வள்ளி, கந்தழி** எனப்படும் (புற - 33). கொடிநிலை - கீழ்த்திசைக் கண்ணே தோன்றும் ஞாயிறு. கொடி - கீழ்த்திசை. நிலை - இடம். வள்ளி - வண்மையுடையது - திங்கள். வெங்கதிர் போல் காயாமல், தண்கதிர் தந்து மகிழ்விப்பதால் திங்கள் - வள்ளி எனப்பட்டது. கந்தழி குணம். கந்து - குறி. அழி - அழிந்தது - அற்ற. கந்தழி குறியற்றது. குறி - குணி - பொருள். குறியற்றது - குணம் செந்தாமரை என்பதில், செம்மை - குணம். தாமரை - குணி குணத்தையுடையது - குணி. நிறம் சுவை வடிவு அளவு தன்மை என்னும் ஐவகைப் பண்பும் (எச்ச - 20) பொருளோடு உடன்றோன்றி, பொருள் அழியும் போது உடனழிவதால், குணம் - கந்தழி எனப் பட்டது. பண்பு - குணம். வாளா 'செய்கை' என்றால், 'நற்செய்கை' எனப் பொருள் படுதல் போல, குணம் என்பது உயர்குணத்தைக் குறிக்கும். உயர் குணம், வான், நீத்தார், அறம் என்னும் நான்கும் திருக்குறளில் முதல் நான்கு அதிகாரங்களில் வாழ்த்தப்படுதல் காண்க. ஞாயிறும் திங்களும் சிலப்பதிகார முதற்பாட்டில்[3] வாழ்த்தப்படுகின்றன.

## 2. புணர்ச்சி வேட்கை

கடவுள் மக்கட் பெண்டிரை நயத்தல், கடவுளை மக்கட் பெண்டிர் நயத்தல் எனப் புணர்ச்சி வேட்கை இருவகைப்படும் (புற - 28). நயத்தல் - விரும்புதல். அரசர்களே பாடாண்டிணையில் தெய்வ மாக உயர்த்திப் பாடப்படுவதால், ஓர் அரசனை ஒருத்தி விரும்புவ தாகவும், ஓர் அரசன் ஒருத்தியை விரும்புவதாகவும் பாடுதலே புணர்ச்சி வேட்கை எனப்படும். ஓர் அரசனை ஒரு பெண் விரும்பு வதாகப் பாடுதல் - கடவுளை மக்கட் பெண்டிர் நயத்தல் எனப்படும். ஓர் அரசன் ஒருத்தியை விரும்புவதாகப் பாடுதல் - கடவுள் மக்கட் பெண்டிரை நயத்தல் எனப்படும். அரச கன்னியர் முடிமன்னருக்கு மனைவியரான பின்னரே தெய்வமாக உயர்ச்சி பெறுவாராகையால், கடவுட் பெண்டிரை மக்கள் நயத்தலாகப் பாடுதல் இல்லை. இதனானும், பண்டு தமிழ் மக்களுக்குள் பிறவி வேற்றுமை இல்லா திருந்தமை பெறப்படும். இப்பகுதி மக்கட் கலப்புடைய தெய்வப் பகுதியாகுமாம்.

---
3. திருக்குறள் குழந்தையுரை பார்க்க.

## 2. மக்கட் பாடாண்

மக்களை வாழ்த்தியும் புகழ்ந்தும் பாடுதலும், அறம் பொருளின்பம் பற்றிப் பாடுதலும் - ***செந்துறைப் பாடாண் பாட்டு*** எனப்படும் (புற - 27). செந்துறையாவது - மக்களை மக்களாகவே பாடுதல். பதிற்றுப் பத்தும், புறநானூற்றில் வரும் பாடாண்டிணைப் பாட்டுக்களும் மக்களைப் புகழ்ந்து பாடும் செந்துறைப் பாடாண் பாட்டுக்கு இலக்கியமாகும். திருக்குறள், அறம் பொருளின்பம் பற்றி பாடும் செந்துறைப் பாடாண் பாட்டுக்கு இலக்கியமாகும்.

## 1. பிள்ளைப் பாட்டு

பெற்றோர்க்குப் பிள்ளையின்பால் உள்ள அன்பை விட அன்புக்கு எடுத்துக் காட்டு வேறொன்றும் இல்லை. அத்தகைய அன்பு அவ்வன்பு! இத்தகைய அன்புக்குரிய பிள்ளையைச் சிறப்பித்துப் பாடிப் பெற்றோரை மகிழ்வித்துப் பரிசு பெற்று வந்த பழந்தமிழ்ப் புலவர்களின் புலமைத் திறன் அறிந்து இன்புறற் பால தொன்றாகும். ஒரு தலைவனிடம் பரிசு பெறச் சென்ற புலவன், அத்தலைவனது பிள்ளையைச் சிறப்பித்துப் பாடுதல். ***பிள்ளைப் பாட்டு*** எனப்படும் (புற - 29). அப்பிள்ளை அந்தந்தப் பருவங்களிற் செய்யும் செயலைச் சிறப்பித்து. அதன் முன்னோரின் புகழுடன் சேர்த்துப் பாடப்படும் (புற - 35). முன்னோரின் வீரம், கொடை, புகழ் முதலியவை அப்பிள் ளையினவாகப் பாடுதல். இதில் ஆண் பெண் இருபாற் குழவியும் அடங்கும். பிள்ளையைச் சிறப்பித்துப் பாடிப் பெற்றோரை மகிழ்வித்துப் பரிசு பெறும் வழக்கம் அருகி, பிற்காலத்தே தலைவர் களையே பிள்ளைப்பருவத்தினராக்கிப் பாடும் வழக்கம் ஏற்பட்டது. இது, ***பிள்ளைத்தமிழ்*** என 96 வகைப் பனுவல்களில் ஒன்றானது.

இனி, ஒரு பிள்ளை தெருவில் விளையாடும் போது, ஊர் மகளிர் அப்பிள்ளையின் நடை, வடிவு, அழகு, குதலை முதலிய வற்றை வியந்து, அதன் முன்னோர் செயலுடன் சேர்த்துப் புகழ்வ தாகப் பாடுதலும் உண்டு (புற - 30). இதுவும் பிள்ளைப் பாட்டே யாகும். இதுவே பிற்காலேத்தே, ஓர் அரசன் ஊர் வலம் வரும் போது, பேதை, பெதும்பை, முதலிய ஏழ்பருவப் பெண்டிரும் விரும்புவதாகப் பாடும் உலாச்செய்யுளாயிற்று. இம்மாற்றம், பிற்காலத் தலைவர்களின் தற்பெருமைத் தன்மையால் உண்டானதாகும்.

## 2. வாழ்த்தல் [புற — 35]

கொடுப்போரை வாழ்த்திக் கொடாரைத் தாழ்த்திக் கூறுதல் பழந்தமிழ்ப் புலவர்களின் இயல்பு. 'இல்லோர் இரப்பதும் இயல்பே; இயல்பே இரப்போர்க் கீவதும் உடையோர் கடனே' என, உள்ளோர் கடமையை விளங்கக் கூறி, '***செல்வத்துப் பயனே ஈதல்***' என்னும்

செல்வத்தின் பயன்பாட்டைச் செல்வர்கள் அறியும்படி செய்து, நாட்டில் ஒப்புரவுண்டாக்குதலைக் கடமையாகக் கொண்டிருந்தனர் பழந்தமிழ்ப் புலவர்கள். அன்னாரின் பெருமைக்கு இஃதோர் எடுத்துக் காட்டாகும். இத்தகைய மேம்பாடுடைய புலவர் பெரு மக்களால் தான் பழந்தமிழ் நாடு நன்னெறிக்கண் இனிது நடந்து வந்தது.

## இயன்மொழி வாழ்த்து

பாட்டுடைத் தலைவன் செய்தியோடு, அவன் முன்னோர் செய்திகளையும் அவன் மேலேற்றிக் கூறுவது - ***இயன்மொழி வாழ்த்து*** எனப்படும். செய்தி - வீரம், கொடை, புகழ் முதலியன. இதன் பயன், இவனும் அத்தகைய செயல் செய்ய வேண்டும் என்பதே யாகும். இயல் - இயல்பு.

### கடைநிலை

ஒரு தலைவனிடம் பரிசில் நாடிச் சென்ற புலவர், தம்வரவைத் தலைவற்குத் தெரிவிக்கும்படி வாயிலோனிடம் கூறிவிட்டு, அவன் தலைவனிடம் சென்று கூறிவரும் வரை, வழிநடந்து வந்த வருத்தந் தீர வெளித் திண்ணையில் உட்கார்ந்திருப்பர். இது ***கடைநிலை*** எனப்படும். தலைவன் வந்து புலவரை அழைத்துச் செல்வான். கடை - வாயில். இது, புலவர் பெருமக்களின் செவ்வியறிந்து நடக்கும் திறப் பாட்டையும், பழந்தமிழ்ச் செல்வர்கள் புலவரிடத்தும், தமிழ் மொழி யிடத்தும் வைத்திருந்த அன்பையும் படம்பிடித்துக் காட்டுவதாகும்.

### கண்படை நிலை

அரசர் அரசியல் அலுவல் பார்த்துக் கொண்டு இரவில் நெடு நேரம் தூங்காதிருப்பின், மருத்துவர் அவரைப்படுத்துத் தூங்கும்படி கூறுவர். இது, ***கண்படை நிலை*** எனப்படும். கண்படை - கண்படுதல் - தூங்குதல். இதனால், பழந்தமிழரசர்கள் தம் மெய்வருத்தம் பாராது குடிமக்கள் நலத்திலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்து வந்தமையும், அரசர் உடல் நலத்துடன் இருந்து நாட்டை நன்கு காக்க வேண்டும் என்பதே இவ்வாறு கூறுதற்குக் காரணமாகையால், குடி விளங்கும். இன்று அரண்மனை மருத்துவர் இருப்பது போலவே, அன்றும் இருந்துவந்தமை தமிழர்க்கு ஏக்கழுத்தம் தருவதொன்றாகும். பழந்தமிழர்கள் மருத்துவ நூற் புலமை மிக்கிருந்தமையும் பெறப்படும்.

## வேள்வி நிலை

கற்றா பால்சுரந்து கொடுத்தலைப் போல அரசர் வரையாது கொடுத்தலைக் கூறுதல் - ***வேள்விநிலை*** எனப்படும். வேள்வி - கொடை.

**"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையனாம் வேந்தர்க் கொளி."** (குறள்)

என வள்ளுவரும் கொடையை முற்கூறுதல் காண்க. கொடுத்தல் - தளர்ந்த குடிகட்கு வேண்டுவன கொடுத்தல்.

## விளக்கு நிலை

வேலும், வேற்றலையும் ஒன்றுபட்டு நேராக அமைந்துள்ளமை போல, செங்கோலும், விளக்கும் ஒன்றுபட்டு நேராக அமைக வெனப் புலவர் வாழ்த்துதல் - ***விளக்குநிலை*** எனப்படும். அதாவது, கொழுந்து விட்டெரியும் விளக்குப் போலச் செங்கோல் ஓங்குக வென வாழ்த்துதலாம். வேல்தலை - வேலின் படம். வேல் - உவமை. விளக்கு அசையாமல் நேராகக் கொழுந்துவிட்டெரிதல் போல, செங்கோலும் வளையாமல் நேராக நிலைத்திருக்க வேண்டுமென்பது; முறை தவறாமல் ஆள வேண்டு மென்பது. இதனால், புலவர் பெருமக்கள் நாட்டுமக்கள் நலத்தில் கொண்டிருந்த ஆர்வமும் அக்கறையும் இனிது விளங்கும்.

## வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, புறநிலை வாழ்த்து

இம்மூன்றும் புலவர் பெருமக்கட்குத் தலைவர் மாட்டுள்ள அன்பின் அறிகுறியாகும். முன்பு கைத்துப் பின்பு இன்பந்தரும் வேம்பும், கடுவும் போல, முன்பு கடுமையாய்ப் பின்பு நன்மை பயக்கும் வெய்ய சொற்களைக் கூறி உண்மையை அறிவுறுத்துவது - ***வாயுறை வாழ்த்து*** எனப்படும். கடு-நச்சு மருந்து. உறை - மருந்து. வேம்பினாலாய மருந்தும், நச்சு மருந்தும் முன்பு கசந்து பின்பு நோய் தீர்த்து நன்மை செய்தல் போல, நன்மை கருதிச் சொல்லுங் கடுஞ் சொல்லும் அத்தகையவாதல் காண்க.

செருக்குக் கொள்ளாமற் பெரியோர்களிடம் அடங்கி நடத்தல் கடமை என அறிவுறுத்துவது - ***செவியறிவுறூஉ*** எனப்படும். செவியில் அறிவுறுத்தல்.

வழிபடு தெய்வம் நின்னைப் பாதுகாக்க, குறையாத செல்வ முடன் என்றும் பொலிவுற்று வாழ்க வென வாழ்த்துவது - ***புறநிலை வாழ்த்து*** எனப்படும். உலகம் புலவர்கட் பட்டதாகலின், உலகைக் காக்கும் அரசை வாழ்த்தி உலகை வாழ்வித்தல் புலவர் கடமை யாயிற்று.

## கைக்கிளை

*கைக்கிளை - ஒருதலைக் காமம். இது, காமஞ்சாலா இளமை யோள் வயின் ஒருவன் கொண்ட கைக்கிளையும் (அகத் - 50), இயற்கைப் புணர்ச்சியின்கண் தலைவன் மாட்டு நிகழும் காட்சி, ஐயம், தெளிதல், தேறல் ஆகிய, 'முன்னைய நான்கும் முன்னதற்கு' என்ற கைக்கிளையும் (அகத் - 52), கடவுளை மக்களும், மக்களைக் கடவுளும் விரும்பும் கைக்கிளையும் (புறத் - 28) போலாது, ஒருவனும் ஒருத்தியும் களவொழுக்க மொழுகி மணந்து கொண்டு இனிது இல்லறம் நடத்தி இன்புற்று வாழ்ந்து வரும் போது, கணவன் மனைவியைத் துறந்த விடத்து, அவளை ஏற்றுக் கொள்ளும்படி புலவர்கள் அவனை வேண்டுதலாம். இது, பெண்மக்களின் உரிமைப் பாதுகாப்புத் தொண்டாகும். ஆண்மக்களின் ஆதிக்க உரிமையே இதற்குக் காரணமாகும்.*

*கண்ணகி என்னும் தன் மனைவியைத் துறந்த வையாவிக் கோப்பெரும் பேகனிடம், அவளை ஏற்றுக் கொள்ளும்படி கபிலர், பரணர், அரிசிற்கிழார், பெருங்குன்றூர்க் கிழார் என்னும் புலவர் பெருமக்கள் வேண்டினமை (புறம் 143 - 7) இதற்கு இலக்கியமாகும். ஒரு சிறு தவறும் நடைபெறாமல் தமிழ் மக்களின் வாழ்க்கை என்னும் வண்டியை இனிது நடத்திச் செல்லும் பொறுப்புப் புலவர் பெருமக்களையன்றோ சார்ந்துள்ளது? அன்னார் பொறுப்பு மலையினும் மாணப் பெரிதாக வன்றோ உளது! வாழ்க அன்னார் பொதுநலம்!*

## 3. புகழ்தல் [புற — 36]

*இதில் தலைவரின் பெருமை பலபடப் புகழப்படுகிறது.* ***துயிலெடை நிலை :*** *பாசறைக்கண் மனவருத்த மின்றித் துயிலும் அரசரைச் சூதர் என்போர் துயிலெழுப்புதல் - துயிலெடை நிலை எனப்படும். எடுத்தல் - எழுப்புதல். வெற்றிச் சிறப்பால் மனவருத்த மில்லை. அன்னாரின் வீரத்தை, வெற்றிச் சிறப்பினைப் புகழ்ந்து பாடித் துயிலெழுப்புவர். சூதர் - அத் தொழிலுடையார்.*

## வெள்ளணி

*அரசன் தான் பிறந்த நாளில் ஆண்டுதோறும் போர் செய்தல், சிறை செய்தல், கொலை செய்தல் முதலியனவின்றி, செருவொழிதல் - சிறை விடுதல், கொலை யொழிதல் இறை தவிர்தல், வேண்டுவன கொடுத்தல் முதலியன செய்து, வெள்ளுடையணிந்து, அருளுள்ள முடையவனாய் இருப்பான். இது* ***வெள்ளணி*** *எனப்படும். இது* ***பெருமங்கலம்*** *என்றும் வழங்கும். பிறந்தநாட் கொண்டாட்டம் இன்றும் நடந்து வருதல் குறிப்பிடத்தக்கது.*

**மண்ணுமங்கலம்**

*அரசன் தான் முடிபுனைந்த நாளை ஆண்டுதோறும் கொண் டாடுவான். முடிபுனைந்து நீராடுவதால் இது **மண்ணு மங்கலம்** எனப்பட்டது. மண்ணுதல் - நீராடுதல்.*

*உலகை நிழல் செய்து காப்பதாகக் கொற்றக் குடையைப் புகழ்தல் - **குடைமங்கலம்** எனப்படும். பகையைப் பொருது வென்ற வெற்றி வாளைப் புகழ்தல் - **வாள்மங்கலம்** எனப்படும். பகைவர் மதிலையழித்து மங்கல மல்லாதன செய்தான், மங்கலமாக நீராடுதல் - **மன்னெயில் அழித்த மண்ணுமங்கலம்** எனப்படும்.*

*இவையெல்லாம் வெற்றித் திருநாளாகக் கொண்டாடப்படும். தமது வெற்றியைக் கொண்டாடுதல் மக்களின் இயல்பு தானே!*

**புலவர்செயல்**

*புலவரிடத்திலுள்ள அன்பால், அவரைப் பிரிய மனமில்லாது தலைவர்கள் பரிசு கொடுக்கக் காலந் தாழ்த்துவர். அது கண்ட புலவர், '**நான் போகவேண்டும்; இன்னபரிசில் வேண்டும்**' என்று கேட்பர். இது, **பரிசில் கடைஇய நிலை** எனப்படும். கடை இய - கேட்ட, உடனே தலைவர் தாம் காலந் தாழ்த்த தன் கருத்தைக் கூறிப் பரிசில் கொடுத்துப் பிரியாவிடை கொடுப்பர். பறம்பிற் கோமான் பாரியும், பழையனூர்க் காரியும் ஔவையார்க்குக் கொடுத்துப் பறித்தும், களைக் கொட்டுக் கொடுத்தும் காலந் தாழ்த்தாமை இதற்கு இலக்கியமாகும்.*

*புலவர் தமக்கு வேண்டியதை வாயிலோனிடம் சொல்லி யனுப்பி, அவ்வாயிலிடத்தே பரிசில் பெறுதலும் உண்டு. இது **கடைக்கூட்டு நிலை** எனப்படும். கடை - வாயில், கடைக்கூட்டுதல் - வாயிலின் கண் பரிசு பெறுதல். வாயிலினின்றும் பரிசு பெறுவதால், இது **கடைநிலை** எனவும் வழங்கும். இது தலைவரிடம் நேரில் இன்ன வேண்டுமென்று கேட்க முடியாத நாணத்தால் இவ்வாறு சொல்லிய னுப்பிப் பெற்று வந்தனர் போலும்.*

*பரிசில் பெற்றபின் தலைவன் தானே விடை கொடுத்தலும் உண்டு; புலவர் கேட்க விடை கொடுத்தலும் உண்டு. இன்னும் பலவகையிற் பரிசு பெற்று வந்தமையைப் புறநானூற்றில் காண்க. இப்பரிசில் வாழ்க்கையே தன்னேரிலாத தமிழை இனிது போற்றி வளர்த்துவந்த தென்க.*

## ஆற்றுப்படை

இயல், இசை, நாடகம், என்னும் முத்தமிழில், இயற்றமிழைப் புலவர் பெருமக்கள் வளர்த்து வந்தது போலவே, இசை, நாடகத் தமிழைக் கூத்தரும், பாணரும், பொருநரும், விறலியரும், வளர்த்து வந்தனர். இவர்கள் செந்தமிழ்ப் பாக்களைப் பாடியும் ஆடியும் தமிழ்த் தலைவர்களிடம் பரிசு பெற்று வாழ்ந்து வந்தனர். அங்ஙனமே பரிசு பெற்று வரும் வழியில் பரிசில் பெறாது வருந்திய நிலையில் உள்ள கூத்தர் முதலியவர்களைக் காணின், தாம் பெற்ற பரிசிலை அன்னார்க்குக் கூறி, அவர்களை அத்தலைவரிடம் அனுப்புவர். இது, ***ஆற்றுப்படை*** எனப்படும். ஆறு-வழி. ஆற்றுப்படுத்தல் - வழிப் படுத்தல், அவரை அத்தலைவரிடம் அனுப்புதல். அங்ஙனம் அனுப்பும் போது, தாம் பெற்ற பரிசிலோடு, தலைவன் பெருமை யையும் விரித்துக் கூறுவர். இது அவரவர் பெயரானே ***கூத்தராற்றுப் படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை*** என வழங்கும். ***புலவராற்றுப்படையுங்***கொள்க. கூத்தரை ஆற்றுப்படுத்தல் - கூத்தராற்றுப்படையாகும். என்னே புலவர் பெருமக்களின் பெருந் தன்மை! தம் போலவே பிறரும் வாழ வேண்டும் என்னும் அன்னாரது பெருந்தன்மையே பழந்தமிழ் மக்களை இனிதியக்கி வந்தது. பத்துப்பாட்டிலுள்ள பெரும் பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப் படை, பொருநராற்றுப் படை இவற்றிற்கு எடுத்துக் காட்டாகும்.

## புலவரன்பு

நாள்நிமித்தம், புள்நிமித்தம், பிற நிமித்தங்களால் பாடாண் டலைவனுக்குத் தீங்குண்டாகுமென அஞ்சி, அத்தலைவனுக்கு அவற்றால் யாதொரு தீங்கும் நேராமல் இருக்கவேண்டுமெனப் புலவர்கள் வாழ்த்துவர். இது, ***ஓம்படை*** எனப்படும். ஓம்படை - பாதுகாப்பு, நிமித்தம் - குறி.

நாட்குறியாவது - ஒருவன் பிறந்த நாளொடு கோள்பொருந் தாமை. நாள் - நட்சத்திரம். கோள் - கிரகம். வான மண்டலத்தில் நாளும் கோளும் நிற்கும் நிலைகண்டு, அதனால் அந்நாளுடை யானுக்குத் தீதுண்டாகுமென அஞ்சி அவ்வாறு தீதுண்டாக்காமல் இருக்க வேண்டுமென வாழ்த்துவரென்க. இதனால், அன்று வானூலறிவுண்மையும், அந்நம்பிக்கையுண்மையும் பெறப்படும்.

புட்குறியாவது - புதுப்பறவை காணுதல், கூகை முதலிய பறவைகள் கத்துதல் முதலியன. பிறகுறி - நற்சொற்கு மாறாகத் தீச்சொற் கேட்டல், நரி ஊளையிடுதல் முதலியன. தலைவர்கள்பால் புலவர்கள் கொண்டிருந்த அன்பின் பெருக்கே பெருக்கு! இது பற்றித்தான் போலும் வள்ளுவர், 'அன்புக்கு முண்டோ அடைக்குந் தாழ்' என்றது!

*நாள்நிமித்தம், புள்நிமித்தம், பிற நிமித்தங்களெல்லாம் தெய்வ நம்பிக்கையின்பாற் பட்டனவாகும். தெய்வம் என்னும் தலைப்பில், '**நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்**' என்பதைப் பார்க்க.*

## 9. எழுதிணைப்பொது (புற – 5)

*இப்பகுதியில், வெட்சி முதலிய புறத்திணை ஏழற்கும் பொது வான சில செய்திகள் கூறப்படுகின்றன. அஃதொவ்வொன்றும் பழந்தமிழர் வாழ்வியலின் படப்பிடிப்பாகும்.*

## வெறியாட்டு

*இஃதொரு வகைக் கூத்து; வேலன் வெறிகொண்டாடுதலின் இப்பெயர் பெற்றது. வேலைக் கையிலேந்தியாடுதலின் - வேலன் எனப்பட்டான். அவ்வேலன் காந்தட்பூவைச் சூடியாடுதலின் இது **காந்தள்** எனவும்படும். இது அகத்திற்குச் சிறந்தது; புறத்திற்குச் சிறுபான்மை வரும். எனவே, இது அகம், புறம் இரண்டற்கும் பொதுவாயிற்று. இது அகத்திணைக்கண் **வெறியாட்டெனவும்,** புறத்திணைக் கண் **வெறிக்கூத்தெனவும்** பெயர் பெறும். புறத்தில் வெறி கொண்டாடுதல் மட்டுமே. அகத்தில் வேலன் வெறியாடிக் குறிசொல்வான். வேலன் - ஒரு குறிஞ்சி வகுப்பினன். இதன் விளக்கத்தை '**வெறியாட்டு**' என்னும் தலைப்பில் காண்க.*

### வள்ளிக்கூத்து

*வள்ளி என்பது - மகளிர் ஆடும் கூத்துள் ஒருவகை. வள்ளி - குறிஞ்சிநிலப் பெண் - குறத்தி; வேலன் மகளிர். வள்ளிக் கூத்து - குறத்தி போலக் கோலங்கொண்டாடுவது. ஆண்கள் அவ்வாறு கோலஞ்செய்தாடுதலும் உண்டு. இது அகத்திணைக்கண் வாராது. மறக்குடி மகளிர் போர்க்களத்தில் வள்ளிக்கூத்தாடி, மறவர்க்கு ஊக்க மூட்டுவர். இதனால், பழந்தமிழ்ப் பெண்களின் மறப்பண்பும், நாட்டன்பும், கடப்பாட்டுணர்ச்சியும் விளங்குகின்றன வல்லவா? இன்றும் நாடகங்களில் குறவன், குறத்திக் கோலமிட்டாடுவதால், வள்ளிக்கூத்தின் பழமையும், இளமையும் அறிந்தின்புறற்குரியனவாகும்.*

### அடையாளப் பூ

*போர்க்களத்தே பொரும்போது, இன்ன வேந்தன் படை யாளர் என்று தெரிவதற்காக, மறவர்கள் **பனம்பூ, ஆத்திப்பூ, வேப்பம்பூ** ஆகிய சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தர் பூக்களில் ஒன்றைச் சூடிக்கொள்வர். அதாவது, ஒரு களத்தில் இருபெருவேந்தர் பொருவழி, இருபெரும் படையும் தலைமயங்கிப் பொரும்போது, யார் வென்றார் எனக் காண்போர் அறிதற்கும், மறவர்கள் தம்மவரை அறிதற்கும் அன்னார் தத்தம்*

அரசர் பூவைச் சூடிக் கொள்வரென்க. தும்பை முதலிய திணைப் பூக்கள் இருபடை யாளரும் சூடுதலான் இன்னாரென எளிதில் அறிய முடியாது. சிற்றரசர் இருவர் பகை கொண்டு பொரினும் அன்னார் மறவர்கள் தத்தம் பேரரசர் பூக்களைச் சூடிக் கொள்வரென்க. இதனால், தமிழகம் முடியுடை மூவேந்தர் ஆட்சிக்கீழ் நிலவிய கட்டுப் பாட்டுடன் என்றும் இடையறாது இருந்து வந்ததென்பது பெறப்படும். இஃதொன்றே தமிழர் அரசியலின் பழமைக்கும் பெருமைக்கும் தக்க சான்றாகும்.

## கழல்நிலை

ஓர் இளைஞன், பெரும் படையைக் கண்டு அஞ்சி ஓடாது எதிர் நின்று பொருதமை கண்ட மறவர்கள், அவன் காலின்கண் வீரக்கழல் புனைந்து, அவனைச் சூழ்ந்தாடுவர். இது, ***கழல்நிலை*** எனப்படும்; ***கழல்நிலைக் கூத்து*** எனவும் வழங்கும். மறவரேயன்றி. மறக்குடி மகளிர் ஆடுதலும் உண்டு. இதனால், ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்ந்து வந்தமை பெறப்படும். அத்தகைய நிலை இனி என்று ஏற்படுங் கொல்!

## உன்னநிலை

பின்வாங்காமல் பொரும் வேந்தனுக்கு வெற்றியுண்டாக இந்த உன்னமரம் தளிர்க்கவென மறவர்கள் பரவுவது ***உன்ன நிலை*** எனப்படும். உன்னம் - ஒருவகைக் காட்டுமரம். இது, சிறந்த நாட்டன் பினால் உண்டாகும் ஒரு வகை நம்பிக்கையாகும். விரிச்சி (புற -3) போன்றதே இது. இஃதும் தெய்வப் பகுதியேயாகும். ***பூவைநிலை*** - '***தெய்வம்***' என்னும் தலைப்பிற் காண்க.

## குறுநில மன்னர்

சேர சோழ பாண்டியர் என்னும் பெருநில மன்னரின் கீழ்ப் பல குறுநில மன்னர்களிருந்து பழந்தமிழகத்தை இனிது ஆண்டு வந்தனர். குறுநில மன்னர் பெருநில மன்னரை வெல்லுதலும் சிறுபான்மை உண்டு. இது தகாச்செயலெனினும், ஒரு சிலர் செய்த அக்குற்றத்தை எடுத்துக் காட்டினார். இதனையே, '***வேந்தலைக்கும் கொல்குறும்பு***' (குறள் - 735) என்றார் வள்ளுவர். குறும்பு - சிற்றரசர். குறுநிலமன்னர் தம் ஆண்மையினால் பெருநில மன்னரை வெல்வதாக வஞ்சினங் கூறுதலும் இதன்பாற்படும். வெட்சி மறவர் கொண்ட நிரையைக் குறுநில மன்னர் மீட்டுத்தருதலும் உண்டு. இவர் நிரைக் குடையோன் சிற்றரசராவர். முன்னது வாகையையும், பின்னது வெட்சியையும் சேரும். குறுநில மன்னரைப் பெருநில மன்னரைப் போலப் புகழ்ந்து கூறுதலும் உண்டு. பெருநில மன்னருக்குரிய எல்லாச் சிறப்பும் (மரபு - 71) குறுநில மன்னர்க்கும் உரியதாகப்

பாடுதல். இது பாடாணைச் சாரும். இதனால், பழந்தமிழ்ப் பேரரசர்கள், 'தான்' என்னும் செருக்கின்றி ஒத்த மனப்பான்மை யுடையராய் இருந்தமையும், புலவர் பெருமக்களின் பொது நோக்கும் பெறப்படும்.

### பிள்ளைநிலை

தன்மேல் வரும் கொடிப்படையைத் தானொருவனே தாங்குதல்; வாட்போரில் பகைவரைக் கொன்று தானும் இறத்தல் என்னும் இவ்விரண்டும் ***பிள்ளைநிலை*** எனப்படும். பிள்ளை - போர்க்களஞ் சென்றறியாத வீர இளைஞன். அத்தகைய இளைஞர் போர்க்களஞ் சென்று செய்யும் அஞ்சாமையே பிள்ளைநிலை எனப்படும். தந்தை போரில் இறந்ததனால் இளமைந்தன் போர்க் களஞ் சென்று பொருதானென்க. தமிழர் வீரத்தின் தனிச் சிறப்பிற்கு இஃதோர் எடுத்துக்காட்டாகும். இத்தகை யவீர இளஞரைப் பெற்று விழுத்தக வொடு விளங்கிற்றுப் பண்டைத் தமிழகம். இது தும்பையைச் சாரும்.

### பிள்ளையாட்டு

வாட்போரில் வெற்றி பெற்ற பிள்ளையைக் கண்டு நாட்டு மக்கள் மகிழ்ந்து, முடிசூட்டித் தங்கள் அரசனாக்கிக் கொள்ளுதல் - ***பிள்ளையாட்டு*** எனப்படும். இவன் வாட்போரில் இறவாது வெற்றி பெற்ற அரசிளங் குமரன். அரசன் இறந்ததனால், அரசிளங்குமரனை நாட்டு மக்கள் அரசனாக்கிக் கொண்டனர். இதனால், நாட்டு மக்களே அரசனுககு முடிசூட்டித் தங்கட்கு அரசனாக்கிக் கொள்ளு தலாகிய பொதுமக்களுடன்பாடு பெற்ற முடியாட்சியே பழந் தமிழகத்தில் நடந்துவந்தமை பெறப்படும். ஒன்றையொன் றடக்கி யாள்வதும். தம் கட்சிக் கொள்கைக்காக ஆட்சி செய்வதுமான கட்சியாட்சியை விட இத்தகைய முடியாட்சியே சாலச் சிறந்ததாகும்.

### நடுகல்

போரில் புறங்கொடாது வீரத்தோடு போர் புரிந்து புகழை நிறுத்திப் போர்க்களத் தொழிந்த வீரர்க்கு நினைவுக்கல் நாட்டி விழாக் கொண்டாடிவந்தனர் நம் முன்னையோர். அக்கல்லில் மறவனது பேரும், புகழும், உருவமும், பொறிக்கப்படும். அது நடுகல் எனப்படும். இன்றுள்ள காட்டுக் ***கறுப்பணன், முனியப்பன்*** முதலிய நாட்டுப்புறத் தெய்வங்களெல்லாம் அந்நடுகற்களின் மறுபடைப்பே யாகும். பழந்தமிழ் மறவர்கள் இன்றுபோல் கூலிப்படையா யிராது, நாட்டுப்பற்றும், இனப்பற்றும், பொறுப்புணர்ச்சியும் உடையராய், நாட்டைக்காப்பதே தமது நீங்காக் கடமையென்னும் உறுதி பூண்டு, தந்தாயகமாகிய தமிழகத்தை உயிரினும் பெரிதாக எண்ணி, வீரப்போர் புரிந்து வெற்றியுடன் காத்துவந்தனர். நாட்டுக்காக உயிர்விட்ட

அப்பழந்தமிழ் மறவரின் நடுகற்கள் தமிழ் இளைஞர்களின் மனக்கண்முன் காட்சியளிப்பதாக.

**முடிவுரை**

தொல்காப்பியப் பொருளதிகாரம் கடல் போன்றது. அதில் வேண்டுவது, வேண்டாதது என்னும் பொருளே இல்லை; எல்லாம் இன்றியமையாச் சிறப்புடையவை. தமிழர் வாழ்க்கைக் களஞ்சிய மாகிய பொருளதிகாரம் தமிழர்களால் திறந்து பார்க்க முடியாமல் மூலையிற்போட்டு மூடிவைக்கப்பட்டிருக்கிறது. தமிழ்ப் பொது மக்கள் படித்தறியக் கூடிய நிலையில் அது வைக்கப்படவில்லை. இவ்விளக்க நூல் பொருளதிகாரம் என்பது இன்னவென்பதைத் தமிழ் மக்கட்கு ஒருவாறு அறிமுகப்படுத்தி வைக்குமென்பது எமது நம்பிக்கை.

அந்நம்பிக்கை உண்மையாகவே நன்னம்பிக்கையாகும் படியான நற்பயன்பாடொன்று கைவரப் பெற்றுள்ளது. அது தமிழ் மக்களின் நற்பயனாகும். அதாவது,

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் ஒன்பது இயல்களில், முதல் ஆறு இயல்களின் கருத்து விளக்கமே, 'தொல்காப்பியர் காலத் தமிழர்' என்னும் இவ்விளக்க நூல் ஆகும்.

| | |
|---|---|
| 1. அகத்திணையியல் | 4. கற்பியல் |
| 2. பொதுவியல் | 5. மெய்ப்பாட்டியல் |
| 3. களவியல் | 6. புறத்திணையியல் |

என்னும் இவ்வாறு இயல்களுக்கும் விளக்கமான விரிவுரை எழுதப் பெற்று, 'தொல்காப்பியப் பொருளதிகாரம் குழந்தையுரை' என்னும் அந்நூல் வெளிவந்து விட்டது. அவ்வுரையைப் பயின்று, பொருளதி காரத்தின் உண்மைப் பொருளையுணர்ந்து, தம் முன்னோர் வாழ்க்கை முறையை அறிந்து தமிழ் மக்கள் இன்புறு வார்களாக.

★ ★ ★

# இன்னூல்

# இன்னூல்

புலவர் குழந்தை அவர்கள் இயற்றிய இலக்கண நூல்களுள் ஒன்று இன்னூல். இன்னூல் (இன்நூல்) என்பது இனிய இலக்கணம் என்பதே, நூல் என்றே ஓர் இலக்கணம் இருந்தது. இலக்கணம் கூற ஏற்றபா, அகவற் சீரால் அமைந்த நூற்பா எனப்பட்டது.

தொல்காப்பியப் பேரிலக்கணத்தின் பின்னர் நேமிநாதம் என்றொரு நூல் குணவீர பண்டிதரால் இயற்றப்பட்டது. தொல்காப் பியத்தை நோக்க அது சிறியதாக இருந்தமை கொண்டு சின்னூல் எனவும் வழங்கினர். அதன்பின் வந்த நூல் பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட நன்னூல்.

சின்னூல் நன்னூல் என்னும் பெயரீடுகள் தொன்னூல் என்றும் பெயரீட்டைத் தோற்றுவித்தது. அதனைச் செய்தவர் வீரமா முனிவர். சின்னூர், நன்னூல் தொன்னூல் என்பவற்றின் பின்னே வந்தது இன்னூல். இதன்பின்னே பாவலர் பாலசுந்தரம் அவர்கள் தென்னூல் இயற்றினர்.

ஒரு நூல் பெயரீடு, பின்னவர்கள் உள்ளத்தில் பதிந்து வளரும் நிலையை விளக்க ஈதொரு சான்றாம்.

தொல்காப்பிய இலக்கணம் எழுத்து, சொல், பொருள் என்னும் முப்பகுப்புக் கொண்டது. பொருள் என்னும் பகுப்பிலேயே யாப்பும் அணியும் சேரப் பெற்றது. பொருள் என்பதிலேயே அகப் பொருள் புறப் பொருள் என்பனவும் கொண்டது.

நன்னூலில் எழுத்தும் சொல்லுமே கிட்டுகின்றன. இறையனார் அகப் பொருள் நம்பியகப் பொருள் மாறன் அகப்பொருள் எனப் பொருள் நூல் தனியே உருவாயின. புறப் பொருள் கூறப் புறப் பொருள் வெண்பாமாலை உண்டாயது. யாப்பியல் கூற, யாப்பருங்

கலம், யாப்பருங்கலக் காரிகை என்பன உண்டாயின. அணி இலக்கணம் கூறத் தண்டியலங் காரம் உண்டாயது. மாறன் அலங்காரம் என்பதும் தோன்றியது.

ஐந்திலக்கணங்களும் கூறும் வகையில் இலக்கண விளக்கம் முதலாகச் சில நூல்கள் உண்டாயின. புலவர் குழந்தை இயற்றிய இன்னூல் எழுத்து, சொல், யாப்பு, அணி என்பவற்றைக் கூறுவது ஆயிற்று. பொருள் இலக்கணம் இதில் இல்லை. இந்நூற் பொருள்களும் இருநூற்றுப்பத்து நூற்பாக்களில் கூறப்பட்டுள்ள.

நூலின் உட்பிரிவு இயல் ஆகும், இன்னூலில் ஒன்பது இயல்கள் உள்ளன. பெரிதும் நன்னூலைத் தழுவி எளிமையும் இனிமையும் அமைய இயற்றப்பட்ட நூல் இஃதாம்.

நூற் செறிவு கருதிச் சில நூற்பாக்கள் எளிமையைப் புறந்தள்ளிக் கடுமை கொண்டும் பெருக்கமின்றிச் சுருக்கம் காணச் செறிவு கொண்டும் நூல் செய்யப்பட்டமை இந்நூலில் காணலாம் ஆதலால், முற்றாக எளியது எனக் கொள்ளற்கு இல்லை.

தாம் விரும்பும் அமைவுக்குத் தக நன்னூல் நூற்பாக்களைச் சொற்கள் தொடர்கள் மாற்றி அமைத்துக் கொண்டமை போற்றக் கூடியதன்று. முன்னோர் மொழி பொருளைக் கூறல், முன்னோர் மொழியை அவ்வாறே கூறல் என இருமரபும் இருக்கவும் இடைப் பாடு செய்தல் மூலநூலுக்கு இடர்ப் பாடும் ஆக்குவதாம். ஆசிரியர் செய்த பெயரீடு, இந்நூன் முறை இன்முறை என்பதேயாம். ஆசிரியர் தம் மூல முதற் பதிப்புக் காண வாய்த்திலது. புலவர் வடிவேலனார் உரைப்பதிப்பின் மூலம் கொண்டே உரை எழுத வாய்த்தது. ஒப்பிட்டுப் பார்க்க அம்மூலம் இல்லாமையால் மூலத்தில் சில குறைகள் தோன்றி, உரை காணும் இடரைச் சில நூற்பாக்கள் ஆக்குகின்றன.

இரா. இளங்குமரன்

# எழுத்தியல்

## 1. எழுத்தும் அதன் வகைகளும்

மொழிமுதற் காரண ஒலியே எழுத்தாம்;

**அது, முதல் சார்வு என இருவகைப் படுமே.**

*(உரைவிளக்கம்) மொழிக்கு மூலமாக இருப்பது ஒலியாம்; அவ் வொலியாலேயே எழுத்து ஆகும். அவ்வெழுத்து முதல் எழுத்து என்றும் சார்வு எழுத்து என்றும் இருவகைப்படும்.*

*ஒலிக்கு முற்பட்டது ஓசை என்பது. அது பொருட் குறிப்புத் தாராதது; இடி, சங்க, அலைமுழக்கு, இரு முதல் போல்வன. ஓசை வேறு ஒலி வேறு என்பதை,*

“ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே”

*என்னும் அப்பரடிகள் வாக்கால் அறியலாம்*

## 2. முதல் எழுத்து

உயிரும் உடம்பும் ஆம் முப்பதும் முதலே.

***(உ-ம்)*** *முதல் எழுத்து என்பவை, உயிர் எழுத்து என்னும் பன்னிரண்டும், மெய் எழுத்து என்னும் பதினெட்டும் கூடிய முப்பது எழுத்துகளுமாம்.*

***உயிர்எழுத்து*** : *அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ,*

***மெய்யெழுத்து*** : *க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.*

*மொழிக்கு அடிப்படையாய் அமைந்த எழுத்து முதல் எழுத்து.*

*முதல் எழுத்தைச் சார்ந்து வரும் எழுத்து சார்பு எழுத்து.*

## 3. உயிர் எழுத்தின் இருவகை

அ இ உ எ ஒக் குறில் ஐந்தே:

ஏனை ஏழும் நெட்டெழுத்து ஆமே.

***(உ-ம்)*** *உயிர் எழுத்துப் பன்னிரண்டும் தம் ஒலி சுவையால் (மாத்திரையால்) குறில் என்றும் நெடில் என்றும் இரண்டாகப் பகுக்கப்படும்.*

*குறில் எழுத்து ஒரு மாத்திரை அளவினது. அவை : அ, இ, உ, எ, ஒ. குற்றெழுத்து என்பதும் இது.*

*நெட்டெழுத்து இரண்டு மாத்திரை அளவினது. அவை: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ. நெட்டெழுத்து நெடில் எனவும்படும்.*

## 4. சுட்டு எழுத்து

***அ இ உம் முதல் அகத்தும் புறத்தும்***
***தனியே நின்று பொருள் சுட் டும்மே.***

***(உ-ம்)*** *அ, இ, உ என்பன சுட்டெழுத்துகள். இம்மூன்றும் சொல்லோடு நின்றும், சொல்லுக்கு முன்னே தனித்து நின்றும் குறித்துக் காட்டும் எழுத்துக்களாம். சொல்லோடு நின்று சுட்டுவது அகச்சுட்டு. எ-டு. அவன், அவள், அவர், அது, அவை; இவன், இவள், இவர், இது, இவை; உவன், உவள், உவர், உது, உவை என்னும் உகர அகச் சுட்டுச் சொற்கள் முற்காலத்துப் பெருக வழங்கி, இக்காலத்து அருகிப்போயின.*

*அம் மாடு, இக் குதிரை, உக்கரை*

*அ, இ, உ ஆகிய சுட்டெழுத்துகள் மாடு, குதிரை, கரை என்பவற்றின் முன் தனியாய் (புறத்தே) நின்று சுட்டின.*

*அ - சேய்மை (தொலைவு) ச் சுட்டு.*

*இ - அண்மை (நெருக்க) ச் சுட்டு.*

*உ - சேய்மையும் ஆகாமல் அண்மையும் ஆகாமல் இடையே புறம் காட்டி நிற்கும் சுட்டு. எ-டு. உப்பக்கம்.*

### 5. வினா எழுத்து

*எ யா முதலில் அகத்தும்*
*புறத்தும் ஆ ஓ ஈற்றில் புறத்தும், ஏ முதல்*
*அகத்தும் ஈற்றில் புறத்தும் வினாவே.*

***(உ-ம்)*** எ, யா, ஆ, ஓ,ஏ என்பவை வினா எழுத்துகள். சுட்டெழுத்துப் போலவே வினா எழுத்தும் சொல்லோடு நின்றும் (அகத்தும்) சொல்லுக்குப் புறத்தே நின்றும் (புறத்தும்) வினாவாக அமையும்.

எ, யா என்பன சொல்லின் முதலில் அகத்தும் புறத்தும் நிற்கும்.

எ-டு : எது,எவ்வீடு,யாவன், யாங்ஙனம்

ஆ, ஓ என்பன சொல்லின் இறுதியில் புறத்தே வரும்.

எ-டு : நண்பனா, நண்பனோ.

ஏ என்பது முதற்கண் அகத்தும், இறுதிக்கண் புறத்தும் வரும்.

எ-டு : ஏது, என்னே

### 6. மூவின மெய்கள்

*க ச ட த பற வலி; ஙஞணந மன மெலி;*
*யரல வ ழள இடை யாம்; மூ வினமே*

***(உ-ம்)*** க் முதல் ன் முடிய உள்ள மெய்யெழுத்துகள் பதினெட்டும் மூன்று இனமாகப் பிரிக்கப்படும். அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பன.

| | | |
|---|---|---|
| வல்லினம் | : | க், ச், ட், த், ப், ற். |
| மெல்லினம் | : | ங், ஞ், ண், ந், ம், ன். |
| இடையினம் | : | ய், ர், ல், வ், ழ், ள் |

புள்ளி பெறும் எழுத்து மெய்யெழுத்து. அது, ஒற்றெழுத்து, உடலெழுத்து எனவும்படும்.

### 7. இன எழுத்து

*குறிலுக்கு நெடிலும் ஐ ஔக்கு இ உவும்*
*வலிக்கு மெலியும் இனம்ஆ கும்மே.*

*(உ-ம்)* ஒன்றன் இயல்பை ஒன்றி வருவது இனம் ஆகும். அவ்வகையில் குற்றெழுத்துகளுக்கு நெட்டெழுத்து இனமாம்.

***அஆ; இஈ; உ,ஊ; எ,ஏ; ஒ,ஓ; ஐ என்னும் எழுத்துக்கும் ஔஎன்னும் எழுத்துக்கும் இனமாகிய***

குற்றெழுத்து இல்லை. ஆதலால் அவை தம் ஒலியால் ஒத்த இ என்பதையும் உ என்பதையும் இனமாகக் கொண்டு வரும்: ஐ ஈ : ஔ உ.

வல்லின எழுத்துக்கு மெல்லினம் இனமாம்.

கங; சஞ; டண; தந; பம; றன.

(இடையின் எழுத்துகள் ஆறும் ஓரினமாம்)

பிறப்பிடம், முயற்சி அளவு, பொருள், வடிவம் முதலியவற்றில் சில ஒப்புமைகளையுடையது இனம் என்பார். நன்னூலார் (72).

## 8. சார்பு எழுத்து

***உயிர்மெய், ஆய்தம் உயிர்ஒற்று அளபெடை***
***குற்றியல் உகரம் குற்றியல் இகரம்***
***எனும் இவை ஆறும் சார்பெழுத்து ஆமே.***

*(உ-ம்)* உயிர்மெய்யெழுத்து, ஆய்த எழுத்து, உயிர் அளபெடை, ஒற்றள பெடை,குற்றியலுகரம், குற்றியலிகரம் என்னும் ஆறும் சார்பு எழுத்துகள். நன்னூலார் இவ்வாறொடும் ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்னும் நான்கையும் கூட்டிச் சார்பெழுத்து பத்து என்பார்.

## 9. உயிர் மெய்யெழுத்து

உடல்மேல் உயிர்ஊர்ந்து ஒன்றுவது உயிர்மெய்

*(உ-ம்)* மெய்யெழுத்தின்மேல் உயிர் எழுத்து ஏறிய எழுத்து உயிர்மெய் எழுத்து எனப்படும். எ-டு. க்+அ=க. க்+ஆ = கா.

மெய்யெழுத்து முன்னும் உயிர் எழுத்து பின்னும் நிற்பதால் ‘மெய் உயிர்’ எனல் வேண்டும் எனின், உயிர் இல்லாமல் மெய் இயங்காது ஆதலால் ‘உயிர்மெய்’ எனப்பட்டது.

க் முதலிய மெய்கள் இகரம் சேராமல் ஒலிக்கமாட்டா! 'இக்' என்றே சொல்லப்படுதல் அறிக. க என்பதில் க்+அ என உயிர் பின்னே வருதலால் 'இ' முன்னே வரவேண்டியது இல்லாது ஆயிற்று.

உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டின் மேலும் கூடிவரு வதால் உயிர் மெய்யெழுத்து இருநூற்றுப் பதினாறு ஆகும். இவை சார்பு எழுத்துகள். முதல் எழுத்துகள் அல்ல. முதல் எழுத்துகள் முப்பதே.

## 10. ஆய்த எழுத்து

குறில் வல் உயிர் மெய் இடைவரும் ஆய்தம்

**(உ-ம்)** குற்றெழுத்தின் முன்னதாக உயிரொடு கூடிய வல்லெழுத்து ஆறனுள் ஒன்றன் மேலதாக இடையே ஆய்தம் வரும்.

**எ-டு:** எஃகு,; கஃசு; அஃது; பஃறி

ஆய்தத்தின் முன்னும் பின்னும் குற்றெழுத்து இருத்தல் அறிக. இரண்டு சிறகுகள் அடித்து எழுப்ப எழும்பும் பறவையின் உடல் போல ஆய்தம் இயங்கும் என்பர். சொல்லின் முதலாகவோ, நெட்டெழுத்தை அடுத்தோ ஆய்தம் வாராமை அறிக.

# உயிர் அளபெடை

## 11. இசை நிறை அளபெடை

இசைகெடின் நெடில் அளபு எழும்; குறில் குறியே.

*(உ-ம்)* செய்யுளில் ஓசை குறையுமிடத்து நெட்டெழுத்து தன் அளவில் கூடி ஒலித்து ஓசையை நிரப்பும். அளபெடுக்கும் நெட்டெழுத்தின் இனமாகிய குறிலே அதன் அடையாளமாக நிற்கும்.

உயிர் எழுத்து தன் அளவில் மிகுதலால் உயிர் அளபெடை ஆயது. சொல்லின் முதல் இடை கடை ஆகிய : மூவிடங்களிலும் இவ் அளபெடை வரும்.

எ-டு : "ஓஒதல்வேண்டும்"

"உறாஅர்க்கு உறு நோய்"

"படா அ பறை"

## 12. இன்னிசை அளபெடை

குறில்நெடில் ஆகி அளபு எழல் இன்னிசை.

*(உ-ம்)* இனிய ஓசை உண்டாக்குதல் பொருட்டுக் குற்றெழுத்து நெட்டெழுத்து ஆகி அளபெடுத்தால் அதற்கு இன்னிசை அளபெடை என்பது பெயர்.

எ-டு: கொடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்பாய்மற் றாங்கே
எடுப்ப தூஉம் எல்லாம் மழை

இப்பாடலில், கெடுப்பதும், எடுப்பதும் என வரினும் யாப்புக் குற்றம் இல்லை. எனினும், இனிய ஓசை கருதிக் குற்றெழுத்து நெட்டெழுத்தாகி அளபெடையும் கொண்டமை காண்க.

### 13. சொல்லிசை அளபெடை

சொல்திரிந்து அளபுஎழல் சொல் இசை யாமே

*(உ-ம்)* நிற்கும் சொல் தன் வடிவம் மாறி அளபெடையும் கொண்டால் சொல்லிசை அளபெடை எனப்படும்.

பெயர்ச்சொல் வினைஎச்சச் சொல்லின் இசையை நிறைத்தற்கு அளபெடுப்பது அது.

*எ-டு.* உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரன் நசைஇ இன்னும் உளேன்.

உரன் நசை, வரன் நசை என்று நின்றாலும் செய்யுளோசை குறையாது. விருப்பம் என்னும் பொருள் நசை என்னும் சொல், விரும்பி என்னும் வினை எச்சப் பொருள் தருமாறு அளபெடுத்ததால் சொல்லிசை அளபெடை ஆயிற்று. உயிரளபெடை இலக்கணத்தை,

"இசைகெடின் மொழிமுதல் இடை கடை நிலை நெடில்
அளபு எழும் அவற்று அவற்று இனக்குறில் குறியே"

என்றே ஆசிரியர் தொல்காப்பியர் கூறினார் (மொழிமரபு 5) அதனையே முன்னோர் மொழியாக நன்னூலாரும் கொண்டார். (91) உரையாசிரியர்கள் அளபெடைப் பாடல்களை ஆய்ந்து பார்த்து இம் மூவகைப்படும் எனக்கூறினர். அதனை நூற்பாவாகப் படைத்தார் புலவர் குழந்தை.

### 14. ஒற்றள பெடை

ங ஞ ண நமன வயலள ஆய்தம்
அளபு எழும்: அவைமிகல் அதன் குறி யாமே.

*(உ-ம்)* செய்யுளில் ஓசை குறையுமிடத்து இவண் கூறப்பட்ட பதினோர் எழுத்துகளும் தம் அளவில் மிகும். அவ் வெழுத்தே மீண்டும் அதன் அடையாளமாக வரும்.

இவ் வொற்றளபெடை சொல்லில் குறில் இணைக்கீழும், குறிற்கீழும் வரும். சொல்லின இடை, கடை ஆகிய ஈரிடங்களி லும் வரும்.

*எ-டு:* "இலங்ங்கு வெண்பிறை"- குறில் இணைக்கீழ் இடை.

| | | |
|---|---|---|
| "எங்ங்குஇறைவன்" | - | குறிற் கீழ் இடை. |
| "மடங்ங் கலந்த" | - | குறில் இணைக் கீழ்க் கடை |
| "நங்ங் களங்கறுப்பாம்" | - | குறில் கீழ்க் கடை. |
| "விலஃஃகி வீங்கிருள்" | - | ஆய்தம் குறிலிணைக்கீழ்இடை. |
| "எஃஃ கிலங்கிய" | - | ஆய்தம் குறிற் கீழ்க் கடை. |

## 15. குற்றியல் உகரம்

நெடிலோடு ஆய்தம் உயிர்வலி மெலி இடைத்
தொடர் மொழி இறுதிவல் உகரம் குறுகும்.

***(உ-ம்)*** *நெடில், ஆய்தம், உயிர், வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய தொடர் மொழியின் இறுதியில் நிற்கும் வல்லின உகரம் தன் அளவாகிய ஒரு மாத்திரையில் குறைந்து அரைமாத் திரையாய்க் குற்றியல் உகரம் என்னும் பெயரைப் பெறும்.*

*இறுதியில் நிற்கும் உகரத்தின் முன்நிற்கும் எழுத்தைக் கொண்டே நெடில், ஆய்தம், உயிர் முதலியவாகப் பெயர் பெறும். அவ்வகையால்.*

| | |
|---|---|
| *நெடில் தொடர்க் குற்றியலுகரம்* | *(நாகு, காசு)* |
| *ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்* | *(எஃகு, கஃசு)* |
| *உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்* | *(வரகு, பலாசு)* |
| *வன்தொடர்க் குற்றியலுகரம்* | *(கொக்கு, கச்சு)* |
| *மென்தொடர்க் குற்றியலுகரம்* | *(கங்கு, பஞ்சு)* |
| *இடைத் தொடர்க் குற்றியலுகரம்* | *(வெய்து, சால்பு)* |

*எனப் பெயர் பெறும்.*

## 16. முற்றியல் உகரம்

தனிக்குறில் அடுத்த வல்லின உகரமும்
மெல்லின இடையின உகரமும் குறுகா.

***(உ-ம்)*** *தன் ஓசை குறையாத உகரம் முற்றியல் உகரமாகும்.*

| | | |
|---|---|---|
| ***எ-டு.*** | *கொடு* | *(தனிக்குறிலை அடுத்த வல்லின உகரம்)* |
| | *கணு* | *(தனிக்குறிலை அடுத்த மெல்லின உகரம்)* |
| | *குரு* | *(தனிக்குறிலை அடுத்த இடையின உகரம்)* |

*இவை ஒலிகுறையாத உகரங்கள் ஆதலால் முற்றியலுகரமாம்.*

"அஞ்சொல் மடவார்க்கு அருளு"
"கண்ணாரக் காணக் கதவு"

*குற்றியலுகரமாக வரவேண்டிய வெண்பாவின் ஈறு, இவ் வாறு முற்றியலுகரமாக அருகி வந்ததையும் ஏற்றுக் கொண்ட னர்.*

## 17. குற்றியல் இகரம்

***(உ-ம்)*** *யவ்வர உ க்குறள் திரிந்த இக் குறுகும்.*

*குற்றியலுகரம் நின்று வருமொழி முதலில் யகர முதன் மொழி வந்தால் நின்ற உகரம் இகரமாகத் திரியும். அது குற்றிய லிகரம் எனப்படும்.*

| | | | | |
|---|---|---|---|---|
| ***எ-டு*** | *:* | *நாகு+யாது* | *=* | *நாகியாது* |
| | | *எஃகு+யாது* | *=* | *எஃகியாது* |
| | | *வரகு+யாது* | *=* | *வரகியாது* |
| | | *கொக்கு+யாது=* | | *கொக்கியாது.* |

*'மியா' என்பதோர் அசைச்சொல். அது கேள், செல் என்னு மிடங்களில் கேண்மியா, சென்மியா எனவரும். அவ்விடங்களில் வரும் இகரமும் குற்றியலிகரம் ஆகும்.*

## 18. மாத்திரை

மூன்று உயிர் அளபு; இரண் டாம் நெடில், ஒன்றே
குறில், ஒற்றளபெடை; அரை குற் றுகரம்
இகரம் ஒற்றோடு ஆய்தம் மாத்திரை.

***(உ-ம்)***

*உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று.*

*நெடிலுக்கு மாத்திரை இரண்டு;*
*குறிலுக்கும் ஒற்றள பெடைக்கும் மாத்திரை ஒன்று;*
*குற்றியலுகரம் குற்றியலிகரம் ஒற்று ஆய்தம் ஆயவற்றுக்கு மாத்திரைஅரை.*

*மேலும் மகரக் குறுக்கம் ஆய்தக் குறுக்கம் என்பவை கால்மாத் திரை கொள்ளும் என்பது அறிக.*

*கொண்ம் சென்ம் வாழும் வகை (மகரக் குறுக்கம்)*

*கல்தீது கஃறீது*
*முள்தீது முஃடீது* } *(இவை ஆய்தக் குறுக்கம்)*

## 19. மாத்திரை விளக்கம்

"இயல்பெழு மாந்தர் இமைநொடி மாத்திரை."

***(நன்னூல்:100)***

***(உ-ம்)*** *இயல்பாக மாந்தர் கண்ணிமைக்கும் பொழுதும், கைந்நொடிக்கும் பொழுதும் ஒரு மாத்திரையாகும்.*

கண் இமைக்கும் பொழுது கணம்.
கைந் நொடிக்கும் பொழுது நொடி.

*'கணப் பொழுது,' 'நொடிப்பொழுது'- என்பது மக்கள் வழக்கு.*
*இமைப்பொழுது, நிமைப்பொழுது என்பதும் கணம்.*
*நிமிட்டுதல் நிமிடம் என்பதும் நொடிப்பின் வழியதே.*

## 20. மாத்திரைக் கூறு

உன்னல் காலே; உறுத்தல் அரையே;
முறுக்கல் முக்கால்; விடுத்தல் ஒன்றே.

***(உ-ம்)*** *கை நொடிக்க வேண்டும் என்று நினைத்தல் கால் மாத்திரை; நடுவிரலைப் பெருவிரலோடு ஊன்றுதல் அரை மாத்திரை; விரல்கள். இரண்டையும் முறுக்குவது முக்கால்; முறுக்கிய ஒலி வெளிப்பட்டு விட்டால் ஒரு மாத்திரை.*

*ஒரு மாத்திரையை ஏன் நாற்கூறு ஆக்கிக் காட்டவேண்டும் என்றால் கால் மாத்திரை, அரைமாத்திரை ஒலியுடைய எழுத்துகளும் இருப்பதால் என்க.*

## 21. எழுத்துகளின் பொதுப் பிறப்பு

உள் எழும் ஒலி உரம் கண்டம் உச்சி
மூக்குஉற்று, இதழ்நா பல் அணத் தொழிலின்
வெவ்வேறு எழுத்துஒலி யாய்வரல் பிறப்பே

***(உ-ம்)*** *உள்ளே இருந்து எழும் ஒலியானது மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய நான்கு இடங்களையும் பொருந்தி, உதடு, நாக்கு, பல் மேல் வாய் ஆகியவற்றின் முயற்சிகளால் வெவ் வேறு எழுத்தொலி களாகத் தோன்றுதல் எழுத்துகளின் பிறப்பாகும்.*

*உரம் - மார்பு; கண்டம் - கழுத்து; அணம் - மேல்வாய்.*

## 22. எழுத்துகளின் இடப் பிறப்பு

வலிமார்பு உறும்; இடை யோடு உயிர் மிடலு உறும்;
மெலிமூக்கு இடம் பெறும்; தலை உறும் ஆய்தம்.

***(உ-ம்)***

*வல்லெழுத் தொலி, மார்பை இடமாகக் கொண்டுபிறக்கும் இடையெழுத்தும்உயிர்எழுத்தும், கழுத்தை இடமாகக் கொண்டுபிறக்கும் மெல்லெழுத்து, மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கும் ஆய்த எழுத்து, தலையை இடமாகக் கொண்டு பிறக்கும்*

*மார்பு, கழுத்து, மூக்கு, தலை என்பவை முறையே ஏறு வரிசையில் அமைந்தனம் அறிக.*

## 23. மொழி முதல் நிலை

பன்னீர் உயிரும் கசதப ஙஞநம
யவ ஈர் ஐந்து உயிர் மெய்யும் மொழிமுதல்.

***(உ-ம்)*** *பன்னிரண்டு உயிர் எழுத்துகளும், க, ச, த, ப, ங, ஞ, ந, ம, ய, வ என்னும் பத்து உயிர் மெய் எழுத்துகளும் சொல்லின் முதலாக வரும்.*

***எ-டு:*** *அன்பு, ஆர்வம், இரக்கம், ஈகை, உண்மை, ஊர்தி, எண், ஏர், ஐந்து, ஒன்று, ஓடம், ஔவை.*

*கலை, சங்கு, தங்கம், பழம், ஙனம், ஞெண்டு, நன்று, மனம், யவனர், வளவன்.*

## 24. மொழி இறுதி நிலை

ஆவி ஞண நமன யரல வழள மெய்
குற்றியல் உகரம் மூ எட்டும் ஈறே.

***(உ-ம்)*** தனித்தும் மெய்யோடும் வரும் பன்னிரண்டு உயிர்களும், ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள ஆகிய பதினொரு மெய்யெழுத்து களும், குற்றியலுகரம் ஆகிய இருபத்து நான்கும் சொல்லின் இறுதி எழுத்துகளாம்.

***எ-டு:*** *ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ எனவும்,*

*விள, பலா, கரி, தீ, கடு, பூ, சேஎ, தே, தை, நொ, போ, கௌ எனவும்,*

*உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வாள் அஃகு எனவும் வரும்.*

## 25. போலி

ஓர்எழுத்து உள் இடத்து ஓர் எழுத்து உற்றுப்
பொருள்வேறு படாதது போலி ஆகும்.

***(உ-ம்)*** ஓர் எழுத்து இருக்கும் இடத்தில் வேறோர் எழுத்து வந்து, பொருள் வேறுபாடு இல்லாமல் அதே பொருள் தருவது போலி ஆகும். ஒன்றைப் போல வருவது போலி.

மொழி முதல் இடை கடை ஆகிய மூவிடங்களிலும் போலி வரும்.முற்றும் வருவதும் உண்டு.

***எ-டு:*** *மயல்-மையல் (முதல்)*
*கலையம்-கலயம் (இடை)*
*பந்தல்-பந்தர் (கடை)*
*ஐந்து-அஞ்சு (முற்றும்)*

## 26. முதற்போலியும் இடைப்போலியும்

அகரம் ச ஞ ய முன் முதல் இடை ஐயாம்.

***(உ-ம்)*** சொல்லுக்கு முதலாகவும் இடையாகவும் வரும் ச, ஞ, ய எழுத்துகளின் முன் அகரமும் ஐகாரமும் வேறுபாடு இல்லாமல் ஒப்ப நடக்கும்.

*எ-டு:* *பசல்-பைசல்*
*மஞ்சு-மைஞ்சு*
*மயல்-மையல்.*

## 27. இடைப்போலி

ஐகான் யவ்வழி நஃகான் ஞவ்வே.

***(உ-ம்)*** *சொல்லின் இடையே வரும் ஐகாரத்தின் பின்னும், யகர மெய்யின் பின்னும் இயல்பாக வரும் நகர மெய்யினோடு ஞகரமெய் ஒத்து நடக்கும்.*

***எ-டு:*** *ஐந்நூறு-ஐஞ்ஞூறு; செய்ந்நின்ற-செய்ஞ்ஞின்ற*

## 28. கடைப்போலி

குறில் இணை மகரம் னகர மாம்; பிற
மூவிடப் போலி மொழிகளும் உளவே.

***(உ-ம்)*** *குறில் இணைந்த மகர ஒற்றுச் சொல் வந்தால் மகர ஒற்று னகர ஒற்றாக மாறும். மேலும் சொல்லின் மூன்றிடங்களிலும் போலி வரும்.*

*எ-டு: நிலம்-நிலன்; புலம்-புலன்*

*நூற்பா 25-இன் உரைகாண்க.*

# 2. பெயரியல்

## 29. சொல்லின் இலக்கணம்

ஓர்எழுத் தானும் பலஎழுத் தானும்
இயன்று பொருள் குறித்து இயல்வது சொல்லே.

***(உ-ம்)*** *ஓர் எழுத்தாவது, பல எழுத்துகள் சேர்ந்தாவது பொருள் குறித்து வருமானால் அது சொல் எனப்படும்.*

| | | | |
|---|---|---|---|
| *எ-டு:* | *ஆ (பசு)* | - | *ஓரெழுத்து* |
| | *ஆடு* | - | *ஈரெழுத்து* |
| | *ஆடல்* | - | *மூவெழுத்து* |

## 30. சொல்லின் தன்மை

ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யாகி
இருதிணை ஐம்பால் ஈர்எண் மூ இடத்து
இயல்பு தகுதி வழக்கொடு செய்யுளின்
வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே.

***(உ-ம்)*** *மொழியாவது சொல். ஒரு மொழியாகவும், தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் சொல் வரும். உயர்திணை அஃறிணை ஆகிய இருதிணைகளையும், ஆண்பால் பெண்பால் பலர்பால் ஒன்றன்பால் பலவின்பால் ஆகிய ஐம்பால்களை, ஒருமை பன்மையாகிய இரண்டு எண்களையும், தன்மை முன்னிலை படர்க்கையாகிய மூவிடங்களையும் கொண்டு வரும். இயல்பு வழக்கு தகுதி வழக்கு என்பவற்றை உடையதாகவும் இருக்கும். செய்யுளில் வெளிப்படையும் குறிப்பும் ஆகிய பொருளொடும் நிற்கும்.*

*இவற்றை முறையாக மேலே சொல்கிறார் நூலாசிரியர்.*

### 31. மூவகை மொழி

ஒருமொழி ஒருபொருள்; தொடர்மொழி பலபொருள்;
பொதுமொழி இருமையும் ஏற்கும் என்ப.

*(உ-ம்)*

*ஒருமொழி, ஒருபொருளைத் தரும்.*
*தொடர்மொழி, பல பொருள்களைத் தரும்.*
*பொதுமொழி, தனிமொழிபோல் ஒரு பொருளையும்,*
*தொடர் மொழிபோல் பல பொருள்களையும் தரும்.*

**எ-டு:** *தாமரை-ஒருமொழி ஒருபொருள்.*
*தாமரை மலர். தொடர்மொழி பலபொருள்.*
*தாமரை: தா+மரை = தாவும் மான். } பொதுமொழி.*
*தாம்+அரை= தம்முடைய அரை. }*

### 32. இருதிணை

மக்கள் உயர்திணை; மற்றவை அஃறிணை;
தெய்வப் பெயரும் உயர்திணை என்ப.

***(உ-ம்)*** *மக்களைக் குறிப்பது உயர்திணை. மக்கள் தவிர்ந்த மற்றவற்றைக் குறிப்பது அஃறிணை; (அல்+திணை) உயர்வு அல்லாத திணை; தெய்வப் பெயரையும் உயர்திணை என்று கூறுவர்.*

**எ-டு:** *அவன், அவள்; மரம் கல்; முருகன்.*

### 33. உயர்திணைப்பால்

ஆண் பெண் பலர் எனும் முப்பால் உயர்திணை

***(உ-ம்)*** *ஆண்பால், பெண்பால், பலர்பால் என்னும் மூன்று பால்களும் உயர்திணைப் பால்களாம்.*

**எ-டு:** *நம்பி; நங்கை; சான்றோர்.*

### 34. அஃறிணைப்பால்

ஒன்றே பலஎனும் இருபால் அஃறிணை.

***(உ-ம்)*** *ஒன்றன்பால், பலவின்பால் என இருவகைப் பால்களை யுடையது அஃறிணை. பால் = பகுப்பு.*

*எ-டு:* *மாடு; மாடுகள்*

*மலை; மலைகள்*

## 35.எண்

ஒன்றே ஒருமை, ஒன்று அல பன்மை.

***(உ-ம்)*** *ஒன்றைக் குறிப்பது ஒருமை; ஒன்றற்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை. எண்ணிக்கை பற்றியது ஆதலால் எண் எனப்பட்டது.*

## 36. இடம்

பேசுவோன் தன்மை; கேட்போன் முன்னிலை;
பேசப் படுவோன் படர்க்கை இடமே.

***(உ-ம்)*** *பேசுபவன் இடம் தன்மை; கேட்பவன் இடம் முன்னிலை; பேசப்படுபவன் இடம் படர்க்கை.*

| | | | |
|---|---|---|---|
| *எ-டு:* | *யான், நான்* | - | *தன்மை* |
| | *நீ, நீவிர்* | - | *முன்னிலை* |
| | *அவன், அவர்* | - | *படர்க்கை.* |

## 37. வழக்கு

இலக்கணம் உடையது, இலக்கணப் போலி,
மரூஉ என் றாகும் மூவகை இயல்பும்;
இடக்கர் அடக்கல், மங்கலம், குழூஉக்குறி
எனும்முத் தகுதியொடு ஆறாம் வழக்கியல்.

*(நன்னூல்: 267)*

***(உ-ம்)*** *வழக்குகள் இருவகைப்படும். அவை இயல்பு வழக்கு, தகுதிவழக்கு என்பன. இவ்வழக்குகள் ஒவ்வொன்றும் மூவகைப்படும்.*

| | |
|---|---|
| *இலக்கணம் உடையது<br>இலக்கணப்போலி<br>மரூஉ* | *இயல்பு வழக்கு.* |
| *இடக்கர் அடக்கல்<br>மங்கலம்<br>குழூஉக்குறி* | *தகுதி வழக்கு.* |

வாழ்க்கையில் இயல்பாக அமைந்தது **இயல்பு** வழக்கு. இது தக்கது என அறிவர்களால் அமைத்துக் கொள்ளப் பட்டது **தகுதி** வழக்கு.

*எ-டு:*

| | | |
|---|---|---|
| இலக்கணம் உடையது | : | மண், விண் |
| இலக்கணப் போலி | : | இல்முன்-முன்றில்<br>இல்வாய்-வாயில் |
| மரூஉ | : | உறந்தை-உறையூர்<br>புதுவை-புதுச்சேரி<br>புதுகை-புதுக்கோட்டை. |
| இடக்கர் அடக்கல் | : | ஒன்றுக்கு, இரண்டுக்கு, கால் கழுவுதல். |
| மங்கலம் | : | விளக்கை வளரவை.<br>ஓலை-திருமுகம். |
| குழூஉக்குறி | : | வெள்ளைக் குதிரை-கள்<br>பறி-பொன். |

இலக்கணச் சொல் முன்பின் மாறிநிற்பது இலக்கணப் போலி. சொல் சுருங்கி மாறி வருவது மரூஉ. மருவு - தழுவு. தக்கோர் அவையில் கூறக் கூடாத சொல் இடக்கர்அடக்கு.

மங்கலம் அல்லதை மங்கலமாகக் கூறுவது மங்கலம். ஒரு குழுவினர் தங்களுக்குள் வழங்கும் குறிப்புச் சொல் குழூஉக்குறி.

## 38. செய்யுள்

பல்வகைப் பொருளின் உயிர்க்குஉடல் போல்பல
சொல்லால் பொருட்கு இடம் ஆக அறிவினில்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்

*(நன். 268: தழுவல்)*

***(உ-ம்)*** அறிவுமிக்கோரால் செம்மையாகவும் அழகாகவும் செய்யப்படுகிறது செய்யுள் ஆகும். அது பல்வகைப் பொருள் களுக்கு இடமாக இருக்கும். அது, உடலை இயக்கும் உயிரைப் போல் சொல்லும் பொருளும் அமைந்து இயக்கமுடைய தாய் விளங்கும்.

"தாமரை புரையும் காமர் சேவடிப்
பவழத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் எய்தின்றால் உலகே"

இக் குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துச் செய்யுள், *"இஃது எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுள் என்று பாராட்டப்படு கின்றது, யாப்பருங் கலக்காரிகை உரை"* ***(ஒழியியல்.9).***

## 39. வெளிப்படை குறிப்பு

ஒன்றுஒழி பொதுச்சொல் விகாரம் தகுதி
ஆகு பெயரொடு அன்மொழி என்றா,
முதற்குறிப் போடு தொகைக்குறிப் பென்றா,
குறிப்பு வினையோடு இன்ன பிறவும்
குறிப்பில் தருமொழி; அவ்வன வெளிப்படை.

***(நன்னூல் 269 தழுவல்)***

***(உ-ம்)*** *உயர்திணை அஃறிணையாகிய இருதிணை ஆண்பால் பெண்பால் என்னும் பால்களுள் ஒரு பாலை விலக்கிச் சொல்லும் சொல்லும், வலித்தல் மெலித்தல் முதலிய விகாரச் சொல்லும், மூவகைத் தகுதி வழக்குச் சொல்லும், முதற்குறிப்புச் சொல்லும், தொகைக் குறிப்புச் சொல்லும், குறிப்பு வினைச் சொல்லும், இத்தகைய பிறவும் குறிப்பால் இருதிணை ஐம்பால் பொருள்களைத் தரும் சொற்களாகும், மற்றவை வெளிப்படையாய் அப்பொருள் தரும் சொற்களாகும்.*

மகவு ஈன்றார் ஐயர் - ஆண்களை விலக்கிய பெண்கள்
ஆயிரவர் களம் சென்றார் - மகளிரை விலக்கிய ஆடவர்.
ஒன்றொழிபொதுச்சொல்
மரை மலர் - தாமரை மலர் (விகாரம்)
கால்கழுவி வரல் - மங்கல வழக்கு (தகுதி)
புளி தின்றான் - ஆகுபெயர்.
பொற்றொடி வந்தாள் - அன்மொழி

"உலகெலாம்" - சொல்லுக - முதற்குறிப்பு
மூவர் - தொகைக் குறிப்புச் சொல்.
அவர் பெரியர் - குறிப்பு வினைச்சொல்.

*உடல், உயிர், அன்பு இன்னவை வெளிப்படைச் சொற்கள்.*

## 40. செய்யுட் சொல்

பெயர்வினை அடுத்த இடை உரி யாகிய
இயற்சொல் திரிசொல் எனும் தமிழ்ச் சொல்லொடு
திசைவட சொற்களும் செய்யுளில் வருமே

***(உ-ம்)*** *செய்யுளில் பெயர் வினை இடை உரியாகிய தமிழ் இயற்சொற்களும் திரிசொற்களும் திசைச் சொற்களும் வட சொற்களும் வரும், இச் சொற்களை மேலே விளக்கிச் சொல்கிறார்.*

## 41. இயற்சொல், திரிசொல்

எவர்க்கும் விளங்கும் இயல்பினது இயற்சொல்;
செய்யுள் சொல்லாம் செம்மொழி திரிசொல்.

***(உ-ம்)*** *எவர்க்கும் எளிதில் விளங்கும் சொல் இயற்சொல். அரிதில் பொருள் விளங்குவதாய்ச் செய்யுளில் வருவதாய் அமைந்தது திரி சொல். (திரிதல் -வெளிப்பட விளங்காமை)*

***எ-டு:*** *யானை, புலி (இயற்சொல்)*
*வேழம், வரிமா (திரிசொல்)*

## 42. திசைச் சொல்

வடசொல் அல்லா அயற்சொல் திசைச்சொல்

*(உ-ம்) வடசொல் அல்லாத மற்றை அயற் சொற்களெல் லாம் திசைச் சொல். பல்வேறு திசைகளில் இருந்து வந்து வழங்கும் சொல். செந்தமிழ்ச் சொல்லும் வடமொழிச் சொல் லும் அல்லாமல் வழங்கும் சொற்கள் எல்லாமும் திசைச்சொல் எனக் கொண்டார் ஆசிரியர். தமிழில் கலந்த வேற்றுச் சொல் வடசொல் ஆதலால், ஆசிரியர் அச் சொல்லை அவ்வாறே சொல்லுதலை விலக்கி, அரிதில் அச்சொல்லைச் சொல்ல நேரின் தமிழ் மரபு கெடாமல் அச்சொல்லைச் சொல்லுக என்று ஆணையிட்டார் என்பது எண்ணத் தக்கது.*

## 43 வடசொல்

பொது எழுத் தாலும் சிறப்புஎழுத் தாலும்
ஈரெழுத் தாலும் இயைந்துறும் வடசொல்.

(உ-ம்) *தமிழிற்கும் வடமொழிக்கும் உரிய பொது எழுத்து களாலும், வடமொழிக்கு அமைந்த சிறப்பு எழுத்துகளாலும், பொது, சிறப்பு ஆகிய இருவகை எழுத்துகளாலும் அமைந்தவை வடசொற்களாம்.*

# பெயர்

## 44. பெயரின் வகையும் இலக்கணமும்

இடுகுறி முதலாப் பொருள் முதல் ஆறொடு
வினைகுலம் கிளை அளவு இடப்பொதுப் பெயரின்
வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்தொன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே.

***(உ-ம்)*** *இடுகுறிப்பெயர், காரணப் பெயர், காரண இடு குறிப்பெயர், பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப் பெயர், தொழிற்பெயர், வினையால் அணையும் பெயர், கிளைப் பெயர், எண்ணுப் பெயர், எடுத்தல் பெயர், முகத்தல் பெயர் நீட்டல் பெயர் ஊர் முதலாம் இடப் பெயர் பொதுப் பெயர் ஆகியவை எட்டு வேற்றுமையும் சார் தற்கு இடமாகித் திணை பால் இடம் ஆகியவற்றில் ஒன்றனை ஏற்பனவும் பலவற்றை ஏற்பனவும் ஆகி வருவன பெயர்கள் ஆகும்.*

*இவற்றுள் வினையால் அணையும் பெயர் ஒன்றும் காலம் காட்டும்! காலம் மற்றவைகாட்டா!*

*இவற்றின் விளக்கம் மேல் வருமாறு:*

## 45. இடுகுறி முதலிய பெயர்கள்

இடுகுறி காரணம் காரண இடுகுறிப்
பெயர் பொதுச் சிறப்பின ஈறலங் கடையே

***(உ-ம்)*** *இடுகுறிப்பெயர், காரணப்பெயர், காரண இடுகுறிப் பெயர் என்பன பொதுப் பெயர், சிறப்புப் பெயர் என வரும் இறுதி ஒன்று அல்லாத இடத்து, வருவன.*

*எ-டு: மரம் - இடுகுறிப் பொதுப்பெயர்*
*பனை - இடுகுறிச் சிறப்புப் பெயர்*

*அணி - காரணப் பொதுப்பெயர்*
*முடி - காரணச் சிறப்புப் பெயர்*

***( நன்.62. சங்கர).***

*ஒரு காரண இடுகுறிப்பெயர் பலவற்றுக்குப் பொருந்தும் ஆயினும் ஒன்றற்கே இடுகுறிப்பெயர்போல வருவது.*

*எ-டு:*

*முக்கண்ணன் - முக்கண்ணையுடைய இறைவர் பலருள் சிவனுக்கே பெயராவது.*

*முள்ளி - முட்செடிகள் பலவற்றுள் ஓரினச் செடிக்கே பெயராவது.*

***(நன். 62 இராமா).***

## 46. பொருள் முதலிய பெயர்கள்

பொருள் இடம் காலம் சினை குணம் தொழிலின்
அடியாப் பிறக்கும் பெயரும் அஃதே.

***(உ-ம்)*** *பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர், சினை* ***(உறுப்பு)****ப் பெயர் குண* ***(பண்பு)****ப் பெயர், தொழிற் பெயர் எனப் பெயர் ஆறாம். இவற்றின் அடியாகப் பிறக்கும் பெயர்களும் ஆறாம்.*

*எ-டு:*

*பொருட்பெயர்-வேல்; பொருளடிப் பெயர்-வேலன்.*
*இடப்பெயர்-ஊர்; இடவடிப்பெயர்-ஊரன்.*
*காலப்பெயர்-சித்திரை; கால அடிப்பெயர்-சித்திரா.*
*சினைப்பெயர்-கண்; சினை அடிப்பெயர்-கண்ணன்.*
*குணப்பெயர்-வெள்ளை; குண அடிப்பெயர்-வெள்ளையன்*
*தொழிற்பெயர்-கணித்தல்; தொழிலடிப்பெயர்-கணியன்.*

## 47. பண்பு

வடிவு நிறம் சுவை அளவே தன்மை
எனும் இவை யைந்தும் பொருளுடைக் குணமே.

***(உ-ம்)*** *ஒரு பொருளின் பண்பு, என்பன வடிவம், நிறம், சுவை, அளவு, தன்மை என்னும் ஐந்தும் ஆகும்.*

***எ-டு:*** *வட்டம், சிவப்பு, இனிப்பு, நீளம், பெருமை.*

## 48. தொழிற்பெயர்

தல் அல் அம்ஐ கைவை ஆணை
திசி வியுள் காடு பாடு அரவு இகு புதுமை
உ தை கல் மதி அன விகுதி பெற்றும்
முதல்நிலை யாயும் முதல்நிலை திரிந்தும்
ஐம்பால் படர்க்கை யாம் தொழிற் பெயரே.

***(உ-ம்)*** *தல்அல் முதலியவை தொழிற்பெயர் இறுதிகள் (விகுதிகள்). முதல்நிலை திரிந்தும் திரியாமலும் இவை வரும். ஐம்பாலுக்கும் படர்க்கையில் வரும்.*

***எ-டு:*** *பாடுதல், உண்ணல், ஓட்டம், செய்கை, பார்வை, படிப்பனை, உறுதி, முயற்சி, கேள்வி, செய்யுள், போக்காடு, சாப்பாடு, தோற்றரவு, உருளி தரகு, ஏற்பு, எடுத்தது, செய்தமை, வரவு, நடத்தை, வாங்கல், ஏற்றுமதி.*

*முதல்நிலை திரிதல்-வருதல், வா; தருதல், தா.*

## 49. வினையால் அணையும் பெயர்

வினைமுற்றுஅவ்வினை செய்வோற்கு ஆகித்
திணைபால் எண் இடம் பாலம் வேற்றுமை
அணையும் வினையால் அணையும் பெயரே.

***(உ-ம்)*** *வினைமுற்றுச் சொல்லே அவ் வினை செய்வோனுக்கு ஆகித் திணை பால் எண் இடம் காலம் வேற்றுமை என்பவற்றைத் தழுவி (அணைந்து) வருவது வினையால் அணையும் பெயராகும்.*

| | | |
|---|---|---|
| *திணை<br>பால்<br>எண்<br>இடம்<br>வேற்றுமை* | *செய்கின்றவனைக் கண்டான்* | *உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை, நிகழ்காலம், இரண்டாம் வேற்றுமை.* |

## 50. இடப்பெயர்களும் பொதுப் பெயர்களும்

யான் நான் யாம் நாம் நாங்கள் தன்மை;
நீ நீர் நீவிர் நீயிர் நீங்கல்
எல்லீர் முன்னிலை; அல்லன படர்க்கை;
எல்லாம் தான்தாம் இருதிணைப் பொதுப்பெயர்.
குறைப்பெயர் ஆண்பெண் இனையவும் பொதுவே.

***(உ-ம்)***

*யான் நான் யாம் நாம் நாங்கள் என்பவை தன்மை ஒருமை, பன்மைப்பெயர்கள்.*

*நீ நீர் நீவிர் நீயிர் நீங்கள் எல்லீர் என்பவை முன்னிலை ஒருமை பன்மைப் பெயர்கள்.*

*இவையல்லாத பெயர்கள் படர்க்கைப் பெயர்கள். தான் தாம் என்பவை இருதிணை ஒருமை பன்மைப் பொதுப் பெயர்கள்.*

*முறைப் பெயராக வழங்குவனவும் ஆண் பெண் முதலியனவும் இருதிணைப் பொதுப் பெயர்களே.*

## 51. படர்க்கைப் பெயர்

அவன் அவள் அவர் அது அவை இடப் படர்க்கைப்
பெயர்; இவை ஐம்பால் பெயரினுக்கு ஈடாம்.

***(உ-ம்)*** *ஐம்பால்; ஆண், பெண், பலர், ஒன்று, பல என்பன.*

*தன்மை முன்னிலை இடங்களில் பால் அறிதல் சொல்வழிவாராது. சொல்வாரையும் கேட்பாரையும் அறிந்தே சொல்ல முடியும். படர்க்கை இடத்தில் திணை பால் தெளிவாக அறியலாம்.*

## 52.அஃறிணைப் பொதுப்பெயர்

‘கள்’ ளொடு பொருந்தும் அஃறிணைப் பொதுப் பெயர்;
வினைப்பய னிலையால் பால் விளங் கும்மே.

***(உ-ம்)***

*அஃறிணைப் பொதுப் பெயர்கள் ‘கள்’ளொடு பொருந்தும். ஆடு-ஆடுகள்; மலை-மலைகள்.*

*வந்தது-ஒன்றன்பால்; வந்தன-பலவின்பால்.*

## 53. பெயர் விகுதி

அன் ஆன் மன் மான் பவ்வி என்றா,
அள் ஆள் இதிசி கை யொடுதை அல்லே
அர் ஆர் கள்மார் என்றா, துவ்வொடு
அவைகள் ஐம்பாற் பெயர் ஈறு ஆமே.

***(உ-ம்)*** *அன் ஆன் மன் மான் பி முதலாக வருவன வெல்லாமும் பிறவும் ஐம்பால் காட்டும் பெயர் இறுதிகள் ஆகும். இறுதி ஈறு, விகுதி, குழையன், வானத்தான், வடமன், கோமான், எம்பி, குழையள், வானத்தார், கோக்கள் மாமன் மார் பறப்பது பறப்பவை பறவைகள் எனக் காண்க.*

*நடந்தனன் நடந்தான் முதலியவாகவும் அறிக.*

## 54. ஆகுபெயர்

பொருள் முதல் ஆறோடு அளவைசொல்தானி
கருவி காரியம் கருத்தன் ஒப்புக் குணி
பன்மையின் ஒரு பெயர் அதற்குரிய பிறிதினைத்
தொன்முறை உரைப்பான் ஆகு பெயரே.

***(உ-ம்)*** *பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறனுடன், எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்னும் நால்வகை அளவையும் சொல்லும் இடமும் காரணமும் காரியமும் கருத்தனும் ஒப்புக்குணமுடைய பலவற்றுள் ஒரு பெயர், அப்பெயர்க்குத் தொடர்புடைய பிறிதொரு பொருளைப் பழமை முதலாகக் கொண்டு வருவன ஆகுபெயர்கள் எனப்படும்.*

*தாமரை புரையும் காமர் சேவடி -*

*தாமரை என்னும் முதற்பொருள் அதன் மலராகிய சினைக்கு ஆகியது.*

*அகன்அமர்ந்து செய்யாள் உறையும்-*

*அகம் என்னும் உள்ளிடம் மனத்திற்கும் ஆகியது கார் அறுத்தது - கார் என்னும் காலப் பெயர் அக்காலப் பயிருக்கு ஆகியது.*

*வெற்றிலை நட்டான் - வெற்றிலை என்னும் சினைப்பெயர் கொடி என்னும் முதலுக்கு ஆகியது.*

நீலம் சூடினாள் - நீலம் என்னும் நிறப் பெயர் அந்நிறப் பூவுக்குஆகியது.

வற்றலோடு உண்டான் - வற்றல் என்னும் தொழிற்பெயர் வற்றிய பொருளுக்கு ஆகியது.

காலாலே நடந்தான் - கால் என்னும் எண்ணலளவைப் பெயர் உறுப்பிற்குஆகியது.

இரண்டு 'கிலோ' தந்தான் - 'கிலோ' என்னும் எடுத்தலளவைப் பெயர் அவ்வளவுடைய பொருளுக்கு ஆகியது.

நான்கு 'லிட்டர்'கொடு - 'லிட்டர்' என்னும் முகத்தலளவைப் பெயர் அவ்வளவுடைய பொருளுக்கு ஆகியது.

ஐந்து வேலி விளைந்தது - வேலி என்னும் நீட்டல் அளவைப் பெயர் அவ்வளவுடையவிளைவுக்கு ஆகியது. இந்நூலுக்கு உரைசெய்தார் - உரைசொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆகியது.

விளக்கு அணைந்தது - விளக்கு என்னும் இடத்தின் பொருட் பெயர் அதற்கு இடமாகிய திரிக்கு ஆகியது.

இந்நூல் அணி - அணி என்னும் காரியத்தின் பெயர் அதன் கருவியாகிய நூலுக்கு ஆகியது.

இந்நூல் தொல்காப்பியர் - தொல்காப்பியர் என்னும் கருத்தாவின் பெயர், அவர் செய்த நூலுக்கு ஆகியது.

இவ்வாகு பெயர் இன்னும் விரிவும் உரைவிளக்கமும் உடையது. ஆகு பெயரும் அன்மொழித் தொகையும் எனத் தடை விடைகளாய் மறுப்பும் மறுப்புக்கு மறுப்புமாய்ப் புலவர்களால் கடந்த நூற்றாண்டு (20)த் தொடக்கத்தில் எழுதப்பட்டது.

அதனைக் கண்ட பாரதியார், "அன்மொழித் தொகை ஆராய்ச்சியும் வேண்டும்; அரிசி ஆராய்ச்சியும் வேண்டும். அன்மொழித் தொகை ஆராய்ச்சி சிலரை வாழவைக்கும். அரிசி ஆராய்ச்சியோ பலரையும் வாழவைக்கும். ஆதலால் இப்போது அரிசி ஆராய்ச்சியை வைத்துக் கொள்வோம்" என்று எழுதினார்.

# வேற்றுமை

## 55. எண்வகை வேற்றுமை

பெயரே ஐ ஆல் கு இன் அது கண்
விளிஎனும் எட்டும் வேற்றுமை ஆகும். (நன் 292 தழுவல்)

*(உ-ம்)* *வேற்றுமை என்பது தம்மை ஏற்றுக் கொள்ளுதற் குரிய எவ்வகைப் பட்ட பெயர்களுக்கும் இறுதியாய் அப் பெயரின் பொருளை வேற்றுமை செய்வதாய் அமைந்தது வேற்றுமை ஆகும்.*

*அவ்வேற்றுமை, தன் உருபுகளால் வேற்றுமைப் படுத்து தலால் பெயர் விளி (1,8) என்னும் இரண்டும் நீங்கிய மற்றை ஆறும் உருபாலேயே பெயர் பெறும்.*

*ஐ-இரண்டாம் வேற்றுமை;*

*ஆல்-மூன்றாம் வேற்றுமை;*

*கு - நான்காம் வேற்றுமை;*

*இன் - ஐந்தாம் வேற்றுமை;*

*அது - ஆறாம் வேற்றுமை;*

*கண் - ஏழாம் வேற்றுமை.*

*முதல் வேற்றுமை, பெயர் வேற்றுமை.*
*எட்டாம் வேற்றுமை, விளி வேற்றுமை.*
*பெயராவது எழுவாய்; விளியாவது அழைப்பு.*

*எடுத்துக் காட்டு மேல் வரும்.*

## 56.எடுத்துக் காட்டு

கபிலன் பூவைக் கையால் பறித்துப்
பாவைக்குக் கொடுத்துப் பகையின் நீங்கித்

தனதுடை பெற்று மனைக்கட் செல்வாம்
பாவாய் வா எனக் கூவினன்; இவற்றுள்
வேற்றுமை எட்டும் வெளிப்படல் காண்க.

*(உ-ம்)*

*கபிலர்-பெயர்; முதலாம் வேற்றுமை*
*பூவை-ஐ-இரண்டாம் வேற்றுமை*
*கையால்-ஆல்-மூன்றாம் வேற்றுமை*
*பாவைக்கு-கு-நான்காம் வேற்றுமை*
*பகையின்-இன்-ஐந்தாம் வேற்றுமை*
*தனது-அது-ஆறாம் வேற்றுமை*
*மனைக்கண்-கண்-ஏழாம் வேற்றுமை*
*பாவாய்!-விளி- எட்டாம் வேற்றுமை*

## 57. முதல் வேற்றுமை

எழுவாய் உருபு திரிபில் பெயரே;
வினை பெயர் வினா நிலைகொளும் அதுவே.

***(உ-ம்)*** *வேறுபடுதல் இல்லாத பெயரே முதல் வேற்றுமை உருவாகும். வினை பெயர் வினா என்பவை அதன் பயனிலை யாக அமையும்.*

***எ-டு:*** *எழிலன் வந்தான்*
*அவன் எழிலன்*
*அவன் எவன்?*

## 58. இரண்டாம் வேற்றுமை

இரண்டா வதன் உருபு ஐயே; அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமைச் செயப்படு பொருளே.

***(உ-ம்)*** *இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ, அது, ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல் (அகல்தல்), ஒத்தல், உடைமை ஆகிய செயப்படு பொருள்களில் வரும்.*

***எ-டு:*** *நூலை இயற்றினான் - ஆக்கல்*
*கல்லை உடைத்தான் - அழித்தல்*

| | | |
|---|---|---|
| *ஊரைச் சேர்ந்தான்* | - | *அடைதல்* |
| *நகரை நீங்கினான்* | - | *நீத்தல்* |
| *புலியைப் போன்றான்* | - | *ஒத்தல்* |
| *புகழை உடையான்* | - | *உடைமை.* |

## 59. மூன்றாம் வேற்றுமை

மூன்றா வதன் உருபு ஆல் ஆன் ஒடு ஓடு;
கருவி கருத்தா உடன்நிகழ் பொருளே.

***(உ-ம்)*** *மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஆல் ஆன் ஒடு ஓடு முதலியவை கருவி கருத்தா உடனிகழ்வு ஆகிய பொருள்களில் அவை வரும்.*

| | | |
|---|---|---|
| ***எ-டு:*** *கல்லால் ஆய சுவர்* | | |
| *கல்லான் ஆய சுவர்* | } | *கருவி* |
| *உழவனால் ஆகிய உணவு* | | |
| *உழவனான் ஆகிய உணவு* | } | *கருத்தா* |
| *ஆசிரியரொடு மாணவர் வந்தார்* | | |
| *ஆசிரியரோடு மாணவர் வந்தார்* | } | *உடன் நிகழ்வு* |

## 60. கருவி கருத்தா

முதற்கா ரணம்துணைக் காரணம் எனவும்
ஏவுதல் இயற்றுதல் கருத்தா எனவும்
கருவி கருத்தா இருவகைப் படுமே.

***(உ-ம்)*** *கருவி முதற்கருவி துணைக்கருவி எனவும், கருத்தா ஏவுதல் கருத்தா இயற்றுதல் கருத்தா எனவும் கருவியும் கருத்தாவும் இருவகையாம்.*

*துணிநெய்தல்: தறி:நூல்*
*ஏவுவான்: ஏவலன்*

## 61. நான்காம் வேற்றுமை

நான்கோ வதற்குஉருபு ஆகும் குவ்வே;
கொடை பகை நட்புத் தகவு அது வாதல்
பொருட்டு முறை எல்லைப் பொருள் கொள் வோனே.

***(உ-ம்)*** *நான்காம் வேற்றுமைக்கு உருபு 'கு' ஆகும். அது கொடை, பகை, நட்பு, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை, எல்லை என்னும் பொருள்களில் வரும்.*

*எ-டு:*

*முல்லைக்குத் தேர் தந்தான் பாரி*
*பாம்புக்குப் பகை கீரி*
*கோப்பெருஞ்சோழர்க்கு நண்பர் பிசிராந்தையார்*
*தலைவர்க்கு ஏற்ற இருக்கை*
*தலைக்குத் தக்க முடி.*
*செங்குட்டுவனுக்குத் தம்பி இளங்கோ.*
*ஊருக்கு வடக்கே ஆறு.*

## 62. ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாவதன் உருபு கில்லும் இன்னும்
நீங்கல் ஒப்பு எல்லை ஏதுப் பொருளே...

***(உ-ம்)*** *ஐந்தாம் வேற்றுமை உருபு கில்லும் இன்னும் ஆகும். இவை நீங்கல் ஒப்பு எல்லை ஏது (கதணை)ப் பொருள்களில் வரும்.*

*எ-டு: மலையின் வீழ் அருவி*
*காக்கையில் கரியது களாம்பழம்*
*மதுரையில் வடக்கு அழகர்மலை*
*கல்வியில் பெரியவர் கம்பர்.*

## 63. ஆறாம் வேற்றுமை

ஆறன் ஒருமைக்கு அதுவும், பன்மைக்கு
அவ்வும், பொதுமைக்கு உடையஸவம் உருபுஆம்.
சினை குணம் தொழில் ஒன்று ஒரு பல கூட்டம்
திரிபின் ஆக்கம் ஆம் தற்கிழமையும்
பிறிதின் கிழமையும் ஆம் தன் பொருளே.

***(நன். 300 தழுவல்)***

***(உ-ம்)*** *ஆறாம் வேற்றுமை உருபுகள் அது, அ, உடைய என்பன. ஒருமைக்கு 'அது' உருபு; பன்மைக்கு 'அ' உருபு பொதுமைக்கு 'உடைய'உருபு.*

உறுப்பு, பண்பு, தொழில் ஒரு பொருள் கூட்டம் பல பொருள். கூட்டம், ஒன்று மாறி ஒன்றாதல் ஆகிய தற்கிழமை, பிறிதின் கிழமை ஆகிய பொருள்களில் வரும். கிழமை - உரிமை.

தன்னொடு பிரியா உரிமையது தற்கிழமை.
தன்னொடு பிரியும் உரிமையது பிறிதின் கிழமை.

சாத்தனது வரவு - பண்புத்தற்கிழமை
சாத்தனது கை - உறுப்புத் தற்கிழமை
நெல்லது குவியல் - ஒன்றன் கூட்டத் தற்கிழமை
பறவைகளது கூட்டம் - பலவின் கூட்டத் தற்கிழமை
மஞ்சளதுபொடி - திரிபின் ஆக்கத் தற்கிழமை
சாத்தனது பசு - பொருட்பிறிதின் கிழமை
சாத்தனது வீடு - இடப் பிறிதின் கிழமை
சாத்தனது நாள் - காலப் பிறிதின் கிழமை
சாத்தன கை - 'அ' உருபு
சாத்தனுடைய - 'உடைய' உருபு

## 64 ஏழாம் வேற்றுமை

ஏழன் உருபு கண்முதல் ஆகும்
பொருள் முதல் ஆறும் அவ்விரு கிழமையின்
இடனாய் நிற்றல் இதன்பொருள் ஆமே.

***(உ-ம்)*** ஏழாம் வேற்றுமை உருபு கண். முதலியவாம். இல், உள், இடம் முதலியவை பிற. இது பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்பவற்றுள் இடமாய்த் தற்கிழமை பிறிதின் கிழமை ஆகியவற்றில் வரும்.

***எ-டு:***

| | | | |
|---|---|---|---|
| மணியின் கண் ஒளி | - | தற்கிழமை | பொருள் |
| மரத்தின் கண் பறவை | - | பிறிதின் கிழமை | |
| ஊரின்கண் வீடு | - | தற்கிழமை | இடம் |
| வானத்தின் கண் புறா | - | பிறிதின் கிழமை | |
| நாளின் கண் மணி | - | தற்கிழமை | காலம் |
| காரின் கண் நெல் | - | பிறிதின் கிழமை | |

| | | | |
|---|---|---|---|
| *கையின் கண் விரல்* | - | *தற்கிழமை* | *சினை (உறுப்பு)* |
| *கையின் கண் கடிகையாரம்* | - | *பிறிதின் கிழமை* | |
| *கருமையின் கண் அழகு* | - | *தற்கிழமை* | *குணம்* |
| *இளமையின் கண் செல்வம்* | - | *பிறிதின் கிழமை* | |
| *ஆடற்கண் மெய்ப்பாடு* | - | *தற்கிழமை* | *தொழில்* |
| *ஆடற்கண் பந்து* | - | *பிறிதின் கிழமை* | |

## 65. ஏழாம் வேற்றுமை உருபுகள்

கண்கால் தலைவாய் கடையிடை புடைமுதல்
முன் சார் வலம்இடம் மேல்கீழ் திசைவயின்
பின்பாடு அளைமாடு உழைவழி உழிஉளி
உள் அகம் புறம் இல் இடப்பொருள் உருபே.

***(நன். 302 தழுவல்)***

***(உ-ம்)*** *கண் முதலாக இல் ஈறாகச் சொல்லப் பட்டவை எல்லாம் இடப் பொருள் தரும் ஏழாம் வேற்றுமை உருபுகளாம்.*

***எ-டு:***

| | |
|---|---|
| *வீட்டின் கண்* | *தேர்த்திசை* |
| *ஊர்க்கால்* | *அவர்வயின்* |
| *வேலின் தலை* | *காதலியின்* |
| *கடல்வாய்* | *கல் அளை* |
| *விற் கடை* | *அரசன் மாடு* |
| *நல்லாரிடை* | *அவன் உழை* |
| *எயிற்புடை* | *நிழல்வழி* |
| *சுரன் முதல்* | *உறைப்பு வழி* |
| *கற்றார்முன்* | *காவுளி* |
| *கான் சார்* | *குவட்டுள்* |
| *கைவலம்* | *பல்லார் அகம்* |
| *இல் இடம்* | *உயிர்ப் புறத்து* |
| *தன்மேல்* | *ஊரில்* |
| *நிழற்கீழ்* | |

## 66. எட்டாம் வேற்றுமை

எட்டன் உருபே ஈறு இயல்பு ஆதல்
திரிதல் கெடுதல் மிகுதல் ஈற்றயல்
திரிபும் ஆம்; பொருள் படர்க்கை யோரைத்
தன்முக மாகத் தான் விளிப் பதுவே. **(நன் 303 தழுவல்)**

***(உ-ம்)*** *எட்டாம் வேற்றுமை விளிவேற்றுமை. விளி-அழைத்தல், கூப்பிடுதல். பெயர் இயல்பாதல் மாறுதல் கெடுதல் மிகுதல் ஈற்றெழுத்தின் அயல் எழுத்து மாறுதல் என வரும். இதன் பொருள் படர்க்கை இடத்து உள்ளவரைத் தன் பக்கமாகத் தான் அழைப்பது ஆகும்.*

*அழகன் - இயல்பாதல்*
*அன்னை - அன்னாய்-திரிதல்*
*அழக - கெடுதல்*
*அழகனே - மிகுதல்*
*அழகா - ஈற்றயல் திரிதல்.*

## 67. விளி ஏற்காத பெயர்கள்

நுவ்வொடு வினாச்சுட்டு ஆணை னள ர துவை
தன்மை முன்னிலை தான் தாம் விளியா.

***(நன்.314 தழுவல்)***

***(உ-ம்)*** *நுவ்வொடு வினாவையும் சுட்டையும் முறையே பொருந்திய னளரதுவை என்னும் பெயர்களும் தான் தாம் என்பனவும் விளி ஏற்க மாட்டா.*

*நுமன் நுமள் நுமர்; எவன் எவள் எவர் எது எவை;*
*யாவன் யாவள் யாவர் யாது யாவை; ஏவன் ஏவள் ஏவர் ஏது ஏவை;*
*யாவன் யாவள் யாவர் யாது யாவை; ஏவன் ஏவள் ஏவர் ஏது ஏவை;*
*அவன் அவள் அவர் அது அவை; இவன் இவள் இவர் இது இவை;*
*உவன் உவள் உவர் உது உவை; தான் தாம்; இன்னவை விளி ஏற்காத பெயர்கள்*

## 68. உருபு ஏற்கும் போது திரியும் பெயர்கள்

தான் தாம் நாம் முதல் குறுகும் யான் யாம்
என் எம் நீநீர் நின்நும் ஆமே.

***(உ-ம்)*** *தான் தாம் நாம் என்னும் பெயர்கள் முதலெழுத்துக் குறுகும். யான் யாம் என்பவை என், எம் ஆகும். நீ நீர் என்பவை நின் நும் என ஆகும்.*

*தான் - தன்; தாம்-தம்; நாம்-நம்*

## 69. உருபு மயக்கம்

ஒருபொருட் கண்வேறு உருபுஉறின் அதனை
அப்பொருள் உருபாத் திரித்தல் வேண்டும்.

***(உ-ம்)*** *ஒரு பொருளிடத்து வேறு உருபு வந்தால் அதனை வரும் அப்பொருளுக்கு உரிய உருபாக மாற்றிக் கூறுதல் வேண்டும்.*

*"கிழங்கு மணற்கு ஈன்ற முளை"*

*"கிழங்கு மணற் கண் ஈன்ற முளை"*

*நான்காம் வேற்றுமை உருபு ஏழாம் வேற்றமை உருபாக்கப் பட்டது.*

## 70. உருபு ஏற்கும்போது வரும் சாரியை

உருபிற்கும் உருபு ஏற்கும் பெயர்க்கும் இடையே
அன் இன் அ உ ன அற்றுஅத் தொடு தன்
தம் நம் நும் எனும் சாரியை வருமே.

***(உ-ம்)*** *உருபு ஏற்கும் போது உருபுக்கும் உருபு ஏற்கும் பெயர்க்கும் இடையே அன் இன் என்பவை முதலியன வரும். அவற்றைச் சாரியை என்பர். சார்ந்து இயைபது (கூடுவது) சாரியை.*

***எ-டு:*** *முருகு அன் ஐ - முருகனை*
*முருகு அன் கு - முருகற்கு*
*முருகு அன் **இன்** - முருகனின்*

*அவன் தன்னை; அவர் தம்மை எல்லீர் நும்மை*

*இன்னவாறு வருவன கொள்க.*

*அவற்றை எல்லாம்; அனைத்தையும்*

# 3. வினைஇயல்

## 71. வினைச் சொல்

வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையும் காலைக் காலமொடு தோன்றும்

*(தொல்.682)*

***(உ-ம்)*** *வினைச் சொல் என்று சொல்லப்படுவது வேற்றுமையை ஏற்காது. எண்ணிப் பார்க்கும் பொழுது அது காலத்தொடு விளங்கித் தோன்றும்.*

*படித்தான் - இறந்தகாலம்*

*படிக்கிறான் - நிகழ்காலம்*

*படிப்பான் - எதிர்காலம்*

## 72. வினை அடிச்சொல்

பெயர் வினை இடை உரி அடிவினை எழுமே.

***(உ-ம்)*** *அடிவினையின் வழியாகப் பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகிய நான்கு சொற்களும் தோன்றும்.*

*வலைஞன் - வலை*

*நடந் தான் - நட(த்தல்)*

*போன்றான் - இடைச்சொல் (போல)*

*உறுதி - உறு*

## 73. தெரிநிலை வினை

செய்பவன் கருவி நிலம் செயல் காலம்
செய் பொருள் ஆறும் தருவது வினையே **(நன்னூல். 320)**

***(உ-ம்)*** *செய்பவன் செய்யும் காரணம் செய்யும் இடம் செய்யும் செயல் செய்யும் காலம் செய்யும் பொருள் ஆகிய ஆறனையும் வெளிப்படத் தருவது வினையாகும்.*

| | | | | |
|---|---|---|---|---|
| *உழுதான்* | *- உழவன்* | *- செய்பவன்* | | |
| | *கருவி* | *- ஏர்* | *-* | *முதலியன* |
| | *நிலம்* | *- நிலம்* | | |
| | *செயல்* | *- உழவு* | | |
| | *காலம்* | *- இறந்தகாலம்* | | |
| | | | *செய்பொருள்* | *விளைவு* |

## 74. குறிப்பு வினை

பொருள் முதல் ஆறினும் தோன்றிய பெயரோர்
பெயர்க்குப் பயனிலை யாய்வரிற் குறிப்பே.

***(உ-ம்)*** *பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் என்னும் ஆறும் அடியாக அவற்றின் கண் தோன்றிச் செய்பவனை மட்டும் வெளிப்படையாகக் கூறுவது குறிப்பு வினையாகும்.*

***எ-டு:*** *குழையினன், அகத்தினன், ஆதிரையன், குறுங்காலன், செங்கண்ணன், உடையன்.*

## 75. வினை வகை

அவைதாம்,
முற்றும் பெயர் வினை எச்சமும் ஆகும்.

***(உ-ம்)*** *அவ்வினைச் சொற்கள், முற்றுவினைச் சொற்களும் பெயரெச்ச வினைச் சொற்களும் வினை எச்சவினைச் சொற்களும் ஆகும்.*

*விளக்கம் மேலே கூறுவார்.*

## 76 சொல் உறுப்புகள்

பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பன
முன்னிப் புணர்க்க முடியும்எச் சொற்களும்.

***(நன்னூல் 133; தழுவல்)***

**(உ-ம்)** முதல் நிலையும் இறுதி நிலையும் இடைநிலையும் சாரியையும் சந்தியும் விகாரமும் ஆகிய இந்த ஆறு உறுப்பு களுள்ளும் ஏற்பவை ஏற்று அமைக்க எச்சொற்களும் முடியும்.

எ-டு:

கூனி என்பது, கூன் + இ ; பகுதி, விகுதி.

உண்டான் என்பது, உண் + ட் + ஆன் ; பகுதி இடைநிலை விகுதி.

உண்டனன் என்பது, உண் + ட் + அன் + அள் ; பகுதி, இடைநிலை, சாரியை, விகுதி.

பிடித்தனன் என்பது, பிடி+த்+த்+அன்+அன்; பகுதி இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி.

நடந்தனன் என்பது, நட+த்+த்+அன்+அள்; பகுதி, விகாரம், இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி. 'ந்' என்பது 'த்' ஆனது விகாரம்.

## 77.எழுத்துப் பேறு

ஆறு உறுப்பு அலா எழுத்து எழுத்துப் பேறே

**(உ-ம்)** சொல் உறுப்புகளாகச் சொல்லப்பட்ட ஆறு உறுப்புகளும் அல்லாமல் வேறோர் எழுத்துப் பெற்று வருவது எழுத்துப் பேறு ஆகும்.

'விண்வத்துக் கொட்கும்'

விண்ணத்து என்பது விண்+வ்+அத்து ஆயது. 'வ்' அங்கு வர வேண்டும் எழுத்து அன்று. ஆதலால் எழுத்துப் பேறு எனப்பட்டது.

உண்ணாத - உண்+ண்+ஆ+த்+அ

உண்-பகுதி, ண்-சந்தி, ஆ-எதிர்மறை இடைநிலை, த் - எழுத்துப்பேறு; அ- எச்சவிகுதி.

## 78. வினைமுற்று வகை

தன்மை முன்னிலை படர்க்கை ஏவல்
வியங்கோள் ஐந்தும் வினையின் வகையே.

**(உ-ம்)** வினை முற்றின் வகை தன்மை முன்னிலை படர்க்கை ஏவல் வியங்கோள் என ஐந்து ஆகும்.

*நான் கண்டேன்; நீர் கண்டீர்; அவர் கண்டார்; சொன்னவாறு செய்வீர்; தமிழ் வாழ்க.*

## 79. தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

என் ஏன் அன் அல் தன்மை ஒருமை

***(உ-ம்)*** *என், ஏன், அன், அல் என்பன தன்மை ஒருமை விகுதிகள். கண்டனென், கண்டேன்; உண்பன்; உண்பல்.*

## 80. தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

அம் ஆம் என்பன முன்னிலை யாரையும்
எம் ஏம் ஓம் படர்க்கை யாரையும்
உம் ஊர் கட தற இருவா லாரையும்
தன்னொடு படுக்கும் தன்மைப் பன்மை

***(நன்னூல் 332)***

***(உ-ம்)*** *அம் ஆம் என்னும் இறுதியுடைய மொழிகள் முன்னிலை இடத்தாரையும் எம் ஏம் ஓம் என்னும் இறுதியுடைய மொழிகள் படர்க்கை இடத்தாரையும், கும் டும் தும் றும் என்னும் இறுதி யுடைய மொழிகள் முன்னிலை படர்க்கை என்னும் இரண்டு இடத்தார்களையும் தன்னுடன் இணைக்கும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை விளைமுற்றும் குறிப்பு முற்றுமாம்.*

*எ-டு:* *உண்டனம், உண்டாம்*
*உண்டனெம், உண்டேம், உண்டோம்*
*உண்கும் உண்டும் வந்தும் சென்றும்*

## 81. முன்னிலை ஒருமை

ஐ ஆய் இகரம் முன்னிலை ஒருமை.

***(உ-ம்)*** *ஐ, ஆய், இ என்னும் மூன்றும் மொழி இறுதியில் வரின் அவை முன்னிலை ஒருமையைக் குறிக்கும்.*

*எ-டு: உண்டனை, உண்டாய், உண்டி*

## 82. முன்னிலைப் பன்மை

இர்ஈர் என்பன படர்க்கை யாரையும்
தன்னொடு படுக்கும் முன்னிலைப் பன்மை.

**(உ-ம்)** *இர் ஈர் என்னும் இறுதியுடைய மொழிகள் படர்க்கை இடத்தாரையும் தன்னோடு இணைக்கும் முன்னிலைப் பன்மையாம்.*

**எ-டு:** *உண்டனிர்*

*உண்டீர்*

## 83. உயர்திணை முப்பால் படர்க்கை

அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம்மார்
முறையே உயர்திணை முப்பாற் படர்க்கை

**(உ-ம்)** *அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ப, மார் என்னும் இறுதியையுடைய மொழிகள் முறையே உயர்திணை முப்பால் (ஆண், பெண், பலர்) படர்க்கை முற்றுகளாம்.*

**எ-டு:** *நடந்தனன், நடந்தான்*

*நடந்தனன், நடந்தாள்*
*நடந்தனர், நடந்தார்*

*நடப்ப*
*நடமார்*

## 84. அஃறிணை இருபால் படர்க்கை

துறு ஒன் றலாகும் பலவின் படர்க்கை

**(உ-ம்)** *து,று என்பவை மொழியின் இறுதியில் வருவது ஒன்றன் பால் பலவின் பால் ஆகிய அஃறிணை இருபால் படர்க்கையாம்.*

*கூவியது*

*கூவிற்று*

*"துறுவொன் ற ஆ பலவின் படர்க்கை" என்பது முற்பதிப்பு*

## 85. ஏவல் வினை

செய் என் ஏவல் ஒருமைக்கு ஆயும்
பன்மைக் கும்ஈர் மின்னும் தோன்றும்

**(உ-ம்)** *செய் என்றும் ஏவல் ஒருமைக்கு 'ஆய்' என்னும் மொழி இறுதியும் பன்மைக்கு ஈர், மின் என்னும் இறுதிகளும் வரும்.*

*எ-டு:* (படி) படித்தாய்

படித்தனிர் படித்தீர்

## 86. வியங்கோள் வினைமுற்று

கயவொடு ரவ்வொற்று ஈற்ற வியங்கோள்;
வாழ்த்தல் வேண்டல் வைதல் விதித்தலின்
இருதிணை ஐம்பால் மூவிடத்து இயலும்

**(உ-ம்)** க,ய என்பனவும் ர் என்பதும் இறுதியாக வியங்கோள் வினைமுற்றுவரும். இது வாழ்த்துதல், வேண்டுதல், வைதல், விதித்தல் ஆகிய நான்கு பொருள்களில் வரும். இவ்வியங்கோள் இருதிணை, ஐம்பால், மூவிடத்தும் வழங்கும்.

*எ-டு:* வாழ்க

வாழிய

வாழியர்-யான், யாம், நீ, நீர், அவன், அவள், அவர், அது, அவை இது வாழ்த்துதல்

| | | |
|---|---|---|
| அருளுக | - | வேண்டல் |
| கெடுக | - | வைதல் |
| செய்க | - | விதித்தல் |

## 87. ஒரு நிலையவை

முதனிலை முதனிலைத் தொழிற்பெயர் ஏவல்
ஒருமை மூன்றும் ஒரு சொல் நிலையே.

**(உ-ம்)** முதனிலையும், முதனிலைத் தொழிற் பெயரும். ஏவல் ஒருமையும் ஆகிய மூன்றும் ஒரே சொல் நிலையின வாகும்.

எ-டு: உண்

படி

## 88. முக்கால இடைநிலைகள்

த ட ற ஒற்று இன்னே இறந்த காலமும்
ஆநின்று கின்று கிறுநிகழ் காலமும்
ப வ ஒற்று எதிர்வும் பகர்வினை இடைநிலை

***(உ-ம்)*** *த் ட் ற் இன் என்பன இறந்த காலத்தையும், ஆ நின்று, கின்று, கிறு என்பன நிகழ்காலத்தையும் ப் வ் என்பன எதிர்காலத் தையும் காட்டும் இடை நிலைகளாம்.*

***எ-டு:*** *நடந்தான், உண்டான், சென்றான், உறங்கினான் - இறந்த காலம்.*

*உண்ணாநின்றான், உண்கின்றான், உண்கிறான் - நிகழ்காலம்*

*உண்பான், செய்வான் - எதிர்காலம்*

## 89. பெயரெச்சம்

செய்த செய்கின்ற செய்யும் என் பாட்டில்
தொழிலும் காலமும் தோன்றிப் பாலொடு
பெயர் எஞ்ச நிற்பது பெயர்எச் சம்மே.

***(உ-ம்)*** *செய்த செய்கின்ற செய்யும் என்னும் வாய்பாட்டில் தொழில் காலம் பால் என்பவை விளங்கப் பெயரைத் தழுவிய எச்சமாய் (குறையாய்) நிற்பது பெயர் எச்சம் ஆகும்.*

***எ-டு:*** *படித்த*

*படிக்கின்ற*

*படிக்கும் - பையன், பெண், அவர்.*

*உண்ட*

*உண்கின்ற*

*உண்ணும் - பையன், பெண், அவர், ஆடு, புறாக்கள்.*

## 90. வினைஎச்சம்

தொழிலும் காலமும் தோன்றிப் பாலொடு
வினை எஞ்ச நிற்பது வினைஎச் சம்மே. **(நன் 342 தழுவல்)**

***(உ-ம்)*** *தொழிலும் காலமும் விளங்கி வினைமுற்றுக்கு வேண்டும் பால் ஒன்றும் தோன்றாது வினையைத் தழுவி நிற்கும் எச்சம் வினையெச்சம் ஆகும்.*

***எ-டு:*** *உண்டு வந்தான்*

*அருள் இன்றிச் செய்தான்*

## 91. வினையெச்ச வாய்பாடுகள்

செய்து செய்பு செய்யாச் செய்யூச்
செய்தெனச் செயச்செயின் செய்யிய செய்யியர்
வான்பான் பாக்கின வினைஎச் சம்பிற
ஐந்து ஒன்று ஆறுமுக் காலமும் முறைதரும். **(நன். 343)**

***(உ-ம்)*** *செய்து செய்பு செய்யா செய்யூ செய்தென செய செயின் செய்யிய செய்யியர் வான் பான் பாக்கு இவை போல்வன பிறவும் வினை எச்ச வினைகளாம். இவற்றுள் முன்னைய ஐந்தும் இறந்த காலமும் நடுநின்ற ஒன்றும் நிகழ்காலமும் பின்னைய ஆறும் எதிர்காலமும் காட்டுவனவாம்.*

***எ-டு:*** *உண்டு உண்குபு உண்ணா உண்ணூா உண்ணென வந்தான்; - இறப்பு*

*உண வந்தான் :- நிகழ்வு*

*உணின் உண்ணிய உண்ணியர் செய்வான் உண்பான் உண்பாக்கு - எதிர்வு.*

## 92. 'செய்யுள்' என்பது முற்றாதல்

செய்யும் என் எச்சம் பல்லோர் ஒழிந்த
படர்க்கைப் பயனிலை யாய்வரின் முற்றாம்

***(உ-ம்)*** *செய்யும் என்னும் வாய்பாட்டு வினைஎச்சம் பலரை நீக்கிய படர்க்கை இடத்துப் பயனிலையாகவரின் முற்றாகும்.*

***எ-டு:*** *உண்கும் வந்தோம்*

## 93. செய்யா என்னும் வாய்பாட்டு வினைஎச்சம்

பெயர்வினை தழுவியும் அஃறிணைப் பயனிலை
ஆகியும் வரூஉம் செய்யா வினையே.

***(உ-ம்)*** *செய்யா என்னும் வாய்பாட்டு வினைஎச்சம் பெயரையும் வினையையும் தழுவியும் அஃறிணையில் பயனிலை பெற்றும் வரும்.*

***எ-டு:*** *உண்ணா முருகன்*
*உண்ணா வந்தான்*
*நடவா மாடு*

## 94. எதிர்மறைப் பெயரெச்சமும் வினைஎச்சமும்

எதிர்மறை யாகார இடைநிலை யொடுவரும்
அதுமல் மே மை ஈரெதிர் மறைக்குறை.

*(உ-ம்)* எதிர்மறைப் பெயரெச்சம் ஆகார இடைநிலை யொடு வரும். வினை எச்சம் மல் மே மை என இரண்டு எதிர்மறை எச்சத் தோடும் வரும்.

*எ-டு:* ஓடா வண்டி
உண்ணாமல், உண்ணாமே,
உண்ணாமை - போனான்.

## 95. முற்றெச்சம்

வினைமுதல் தொடர் ஒரு வினைகொளல் வினைக்குறை
வினை முற்றுத் தொடர் ஒரு வினை கொளல் பெயர்க்குறை.

*(உ-ம்)* வினை முதலாக அமைந்த ஒரு தொடர் மேலும் ஒருவினை கொள்ளல் வினைக்குறை (எச்சம்) ஆகும்.

வினை முற்றுத் தொடர் மேலும் ஒரு வினை கொள்ளல் பெயர்க்குறை ஆகும்.

முற்றுவினை எச்சவினைப் பொருள் தருதலால் முற்றுஎச்சம் (முற்றெச்சம்) ஆயது.

முடிந்தது போல் தோன்றி முடியாததாய் நின்று பொருள் தருவது.

எ-டு: ஞாயிறு பட்டு வந்தான்
ஞாயிறு பட வந்தான்
கண்டனன் சென்றான்

## 96. வினைப் பிரிவு

முதனிலை முற்று பெயர்வினை எச்சம்
தொழிற்பெயர் ஐந்தும் வினையின் வகையே.

*(உ-ம்)* முதல் நிலையும் பெயரெச்சமும் வினை எச்சமும் தொழிற் பெயரும் ஆகிய ஐந்தும் ஐம்பெயர் பெறினும் அவற்றின் அடியாக விளங்குவது வினையே ஆகும்.

*எடு, எடுத்தான், எடுத்த, எடுத்து, எடுத்தல்*

*படி, படித்தாள், படித்த, படித்து, படித்தல்*

## 97. தெரிநிலை வினை வகை

தன்வினை பிறவினை உடன்பாடு எதிர்மறை
செய்வினை செயப்படு வினையே செய்பொருள்
குன்றிய வினையே குன்றா வினையென
நால் இரு வகைப்படும் மேலைய வினையே.

***(உ-ம்)*** *தன்வினை பிறவினை; உடன்பாட்டு வினை எதிர்மறை வினை; செய்வினை செயப்பாட்டு வினை; செயப்படுபொருள் குன்றிய வினை செயப்படு பொருள் குன்றா வினை என நான்கு வகைப்பட்ட இரட்டைகளைக் கொண்டது தெரிநிலை வினை வகையாம்.*

*மேல்வரும் நூற்பாக்களில் இவை கூறப்படுகின்றன.*

## 98. தன்வினை பிறவினை

விப்பி அணைந்தும் மெலிவலி யாயும்
வல் ஒற்று இரட்டியும் வன்மை ஊர் உகரம்
பெற்றும் தன்வினை பிறவினை ஆகும்.

***(உ-ம்)*** *ஒரு தன்வினை பிறவினை ஆகும்போது, வி, பி என்பவை பெற்றும், மெல்லினம் வல்லினம் ஆகியும், நின்ற வல்லின ஒற்று இரண்டாகியும் வல்லின உகரம் பெற்றும் வரும்.*

***எ-டு:*** *செய்- செய்வி, செய்விப்பி*

*உண்-உண்பி, உண்பிப்பி*

*எழும்பு, எழுப்பு*

*ஓடினான், ஓட்டினான்*

*போ, போக்கு*

## 99. உடன்பாட்டுவினை எதிர்மறைவினை

பகுதியொடு இடப்பெயர் விகுதி அல் அணைந்தும்
பகுதி விகுதிக்கு இடை அல் ஆப் பெற்றும்

இடைநிலை விகுதிக்கு இடை இல் பெற்றும்
முற்றின்பின் அல்வேறு விகுதி பெற்றும்
உடன்பாடு எதிர்மறை வினையா கும்மே.

*(உ-ம்)*

*ஓர் உடன்பாட்டு வினை எதிர்மறை வினையாக மாற அமையும் நிலைகள் பல. அவை, பகுதியொடு இடப்பெயர் விகுதிஅல்பெறுதல், பகுதி விகுதிகளுக்கு இடையே அல் ஆ என்பவைபெறுதல், இடைநிலை விகுதிகளுக்கு இடையே இல் பெறுதல், முற்றின் பின் அல் அல்லது வேறு விகுதி பெறுதல் என்பனவாம். வாரலன்.*

***எ-டு:*** *வந்திலன்*
*வருவனல்லன்,*
*வாரான்*
*வருவானல்லன்*
*வருவானிலன்*

## 100. செய்வினை செயப்பாட்டுவினை

செய்பவன் தொழிலைச் செய்பொருள் அடைந்து
செய்பொருள் எழுவாய் ஆகி, எழுவாய்
மூன்றா குவதாய்ப் படுசொற் பெற்றுச்
செய்வினை செயப்படு வினை ஆகும்மே.

*(உ-ம்)*

*ஒரு செய்வினை செயப்பாட்டு வினை ஆகும்போது, செய்தவன் தொழிலை அவன் செய் பொருள் அடைதலும், செய்பொருள் எழுவாய் ஆதலும், செய்தவன் மேல் மூன்றாம் வேற்றுமை உருபு அடைதலும் படு சொல் பெறுதலும் ஆகும்.*

***எ-டு:*** திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.
திருக்குறள் திருவள்ளுவரால்இயற்றப்பட்டது.

## 101. இதுவும் அது

உண்படு தின் இடை யும்பெயர், செய்பொருள்
குன்று ஒன் றன்வினை குன்றா வினையே
செய்வினை படு சேர் செய என் எச்சம்

ஆ போகு எனும்முற் றடைசொல் வினைக்குறை
எனும் இவை பிறவும் செயப்படு வினையாம்.

***(உ-ம்)*** *உண் படு தின் இடையேயும் செயப்படுபொருள் குன்றிய தன்வினை, குன்றாத தன்வினையேயும் செய என்னும் எச்சமும் ஆ போகு என்றும் முற்றுச் சொல் எச்சம் என்பவற்றேயும் செயப்பாட்டு வினை உண்டாகும்.*

*அடியுண்டான்*
*மிதிபட்டான்*
*வசை தின்றான்*
*வரப் பட்டது*
*புலப் பட்டது*
*ஆயிற்று*
*போகிற்று, போயிற்று*

## 102. செயப்படுபொருள்

குன்றிய வினை- குன்றாவினை

***செய்பவன் செயற்படில் செய்பொருள் இன்றே***

***(உ-ம்)*** *செய்பவன் செயல்பட்டால் செயப்படுபொருள் இல்லாதது ஆகிவிடும்.*

*கண்ணன் ஓடினான்*

*பழம் உதிர்ந்தது*

*குடை சாய்ந்தது.*

## 103. பொதுவினை

தன்பிற வினைக்கும் விதிமறை வினைக்கும்
செய்வினை செயப்படு வினைக்கும் செய்பொருள்
குன்றிய வினைக்கும் குன்றா வினைக்கும்
பொதுவாய் வருவன பொதுவினை யாகும்.

***(உ-ம்)*** *தன்வினை பிறவினை, உடன்பாட்டுவினை எதிர்மறை வினை, செய்வினை செயப்பாட்டு வினை, செயப்படு பொருள் குன்றிய வினை செயப்படுபொருள் குன்றாவினை என்பவற்றுக்குப் பொதுவாக வரும் வினை சொல்லப்படுகிறது.*

## 104. இதுவும் அது

தன்மை முன்னிலை வியங்கோள் ஏவல்
வேறு இலை உண்டு ஈர்எச்சம் செயும்முற்று
எனும் இவை பத்தும் இருதிணைப் பொதுவினை.

***(உ-ம்)*** *சொல்லப்பட்ட இப்பத்து வினைகளும் இரு திணைக்கும் பொதுவாம் வினைகளாம்.*

***எ-டு:*** *உண்டேன், உண்டாய், உண்க, உண்;*

*யான் யாம் நீர் அவன் அவள் அவர் அது அவை - வேறு, இல்லை, உண்டு*

*வந்த, வந்து, வரும்.*

# 4 இடையியல்

## 105. இடைநிலை

வேற்றுமை வினைசா ரியை ஒப்பு உருபுகள்
பொருளன இசைநிறை அசைநிலை குறிப்பினல்
பெயர்வினை அடுத்து நின்று இயலுவது இடைநிலை

***(உ-ம்)*** *ஐ, ஆல் முதலிய வேற்றுமை உருபுகளும், விகுதி இடைநிலை ஆகிய வினை உருபுகளும், அன் ஆன் முதலிய சாரியை உருபுகளும், போல, ஒப்ப முதலிய உவம உருபுகளும், பிறவாறு தத்தமக் குரிய பொருளை உணர்த்தி வருவனவும், இசை நிறைத்தலே பொருளாக வருவனவும், அசைநிலையே பொருளாக நிற்பனவும், அச்சம் விரைவு முதலியவற்றைக் குறிப்பால் உணர்த்தி வருவனவும் ஆகிப் பெயருக்கும் வினைக்கும் அடுத்து நிற்பனவாய் வருவன யாவும் இடைநிலை களாம் (இடைநிலை- இடையில் நிற்பதாம் சொல்: இடைச்சொல்)*

*பெயரும் ஆகாது வினையும் ஆகாது இடைநிகர்த்தனவாய் இருத்தலாலும், பெயர் வினைகளிடமாக வருதலாலும் இடைச் சொல்லாம் என்க.*

## 106. ஏகார இடைச் சொல்

பிரிநிலை வினாஎண் ஈற்றசை தேற்றம்
இசைநிறை விளிவியப்பு இழிவு உயர்வு இகழ்வே.

***(உ-ம்)*** *ஏகார இடைச் சொல் பிரிநிலை வினா எண் ஈற்றசை தேற்றம் இசைநிறை விளிவியப்பு இழிவு உயர்வு இகழ்வு ஆகிய பொருள்களில் வரும்.*

*அவனே கொண்டான் - ஒருவனைப் பிரித்தது*

*அவனே கொண்டான் - வினாவி நிற்பின் வினா.*

*நிலமே நீரே தீயே - எண்*

*எண்ணுதல் அரிதே - ஈற்றசை*

*யானே கள்வன் - தேற்றம் (தெளிவு)*

*ஏஏ இவள் ஒருத்தி - இசைநிறை*

*அரசே - விளி*

*ஏ என்ன சொன்னாய் - வியப்பு*

*மாடே தின்னாது - இழிவு*

*சான்றோரே ஏற்றனர்- உயர்வு*

*ஏ தள்ளி ஏறி - இகழ்வு*

## 107. ஓகார இடைச்சொல்

> தெரிநிலை வினாச்சிறப்பு எதிர்மறை பிரிநிலை
> ஒழியிசை அசைநிலை கழிவுஐயம் ஓவே.

***(உ-ம்)*** *ஓகார இடைச்சொல் தெரிநிலை வினா சிறப்பு எதிர்மறை பிரிநிலை ஒழிஇசை அசை நிலை கழிவு ஐயம் ஆகிய பொருள்களில் வரும். கழிவு - கழிவிரக்கம்*

*ஆணோ? அதுவும் அன்று*

*பெண்ணோ? அதுவும் அன்று - அத்தன்மை இன்மை தெரிவித்தது.*

*பசுவோ? காளையோ? - வினா ; ஐயமும் ஆம்.*

*ஓம்! பெரியவள் - சிறப்பு*

*யானோ அரசன் - எதிர்மறை*

*இவனோ கொண்டான் - பிரிநிலை (பலருள் ஒருவனைப் பிரித்தல்)*

*படிக்கவோ வந்தாய் - படிக்க வந்திலை, விளையாட வந்தனை - ஒழியிசை*

*காணிய வம்மினோ - ஒலியே கருதிவந்ததால்அசைநிலை.*

*ஓஒ உணராரோ - கழிவு (பிறரைக் கண்டும் அறியாரோ)*

## 108. உம்மை இடைச்சொல்

எதிர்மறை சிறப்பு எண் எச்சம் முற்று ஐயம்
தெரிநிலை ஆக்கம் கேடே உம்மை.

***(உ-ம்)*** *உம்மை இடைச்சொல் எதிர்மறை, உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு, எண், எச்சம், முற்று, ஐயம், தெரிநிலை, ஆக்கம், கேடு ஆகிய பொருளில் வரும்.*

*மறப்பினும் ஓதலாம் - மறத்தலாகாது; எதிர்மறை.*
*தலைவரும் போற்றுவர் - சிறப்பு*
*நாயும் தின்னாது - இழிவு*
*நிலமும் நீரும் வளியும் - எண்*
*ஆசிரியரும் வந்தார்-எச்சம் (மாணவரும்)*
*அனைவரும் வந்தனர் - முற்று*
*சொன்னாலும் சொல்வான் - ஐயம்*
*ஆணும் அன்று பெண்ணும் அன்று - தெரிநிலை.*
*பாலும் ஆயிற்று - ஆக்கம் (மருந்தும் ஆயிற்று)*
*சொன்னாலும் கேளான் - கேடு.*

## 109. எச்ச உம்மையும் சிறப்பு உம்மையும்

இறப்பு எதிர் தழீஇயும், இழிவு உயர் வாகியும்
எச்சமும் சிறப்பும் இருவகைப் படுமே

***(உ-ம்)*** *எச்ச உம்மை இறந்த காலமே அன்றி எதிர்காலத்தைத் தழுவியும் சிறப்பு உம்மை இழிவுப் பொருளை அன்றி உயர்வுப் பொருளையும் தருதல் உண்டு.*

*(எ-டு)* *வந்தும் சென்றான்; வந்தும் செல்வாம்*
*நாயினும் நன்றியன்.*

## 110. மற்று - என்னும் இடைச்சொல்

மற்றே வினைமாற்று அசைநிலை பிறிதே

***(உ-ம்)*** *மற்று என்னும் இடைச்சொல் வினைமாற்று அசைநிலை பிறிது ஆகிய பொருள்களில் வரும்.*

*மற்று அறிவாம் நல்வினை யாம் இளையம் - வினை மாற்று.*

*மற்றென்னை அருள்க - அசைநிலை*

*ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் - பிறிது.*

## 111. கொல் என்னும் இடைச்சொல்

*கொல்லே ஐயம் அசைநிலை வினாவே*

*(உ-ம்) கொல் என்னும் இடைச்சொல் ஐயம் அசைநிலை வினா ஆகிய பொருள்களில் வரும்.*

*அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ - ஐயம்*

*கற்றதனால் ஆய பயன் என் கொல் - அசைநிலை*

*உண்டனை கொல் - வினா (உண்டாயா, உண்டாயோ)*

## 112.தான், தாம்

*அசைநிலை தேற்றம் பிரிநிலை தான்தாம்.*

*(உ-ம்) தான் தாம் என்னும் இடைச் சொற்கள் அசைநிலை தேற்றம் பிரிநிலை ஆகிய பொருள்களில் வரும்.*

*அவன் தான் சொன்னான்*

*அவர் தாம் சொன்னார்*

*தான் தாம் அசைநிலையாகவும், அவனே அவரே எனத் தேற்றமாகவும், பலருள் இருந்து பிரித்து அவனே அவரே எனச் சுட்டியும் வருதல் அறிக.*

# 5. உரி இயல்

## 113. உரிச் சொல்

பெயர்வினைக் குணத்தை உணர்த்தி ஒருகுணம்
பலகுணம் தழுவி நிலவுவது உரிச்சொல்.

***(உ-ம்)*** *பெயர் வினை பண்பு உணர்த்துவதும் ஒரு குணத்தை உணர்த்துவதும் பலகுணங்களை உணர்த்துவதும் ஆகியது உரிச் சொல் ஆகும். பெரிதும் செய்யுட்கே உரிமை பூண்ட சொல் இது.*

*மேலே எடுத்துக்காட்டுக் கூறுவார்.*

## 114. ஒரு குணம் தழுவிய உரிச்சொல்

சால உறுதவ நனிகூர் கழிமிகல் (நன். 456)

***(உ-ம்)*** *சால உறு தவ நனி கூர் கழி என்னும் ஆறும் மிகுதிப் பொருள் தரும் உரிச் சொற்களாம். பல சொற்களும் ஒரே பொருள் தருதல் அறிக.*

*சாலவும் நன்று*

*உறுபசி*

*தவச் சிறிது*

*நனி நன்று*

*துயர் கூர்மாலை*

*கழி பேதை*

## 115. பலகுணம் தழுவிய உரிச்சொல்

கடிஎன் கிளவி காப்பே கூர்மை
ஆர்ப்பே நாற்றம் கார்ப்பின் ஆகும்.

**(உ-ம்)** கடி என்னும் உரிச்சொல் காப்பு, கூர்மை, ஆர்ப்பு, நாற்றம், கார்ப்பு ஆகிய பலகுணங்களைத் தரும்.

கடி மதில்

கடி நுனைப்பகழி (பகழி-அம்பு)

கடி முரசு

கடி மலர்

கடி மிளகு (கார்ப்பு - காரம்)

கடி என்னும் உரிச்சொல் இன்னும் பலபொருள் தரும். அது பற்றிய நூற்பா:

கடி என் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்கம் அச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை ஆர்த்தல்
விரைவே மன்றல் கரிப்பின் ஆகும்

**நன்னூல் 457.**

# 6. பொதுஇயல்

## தொடர்மொழி

### 116. தொகை நிலைத் தொடர்

வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை
அன்மொழி என அத் தொகைநிலை ஆறே.

*(உ-ம்) தொகை நிலைத் தொடர் என்பன வேற்றுமை, வினை, பண்பு, உவமை உம்மை அன்மொழி என ஆறாகும்.*

*இவற்றின் விளக்கம் மேலே வரும்.*

### 117. வேற்றுமைத் தொகை

எழுவாய் விளிகட்டு இடை ஆறு உருபும்
வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே.

*(உ-ம்)*

*வெளிப்படல் இல்லது - உருபு வெளிப்படத் தோன்றாதது தொகை.*
*எழுவாய் - முதல் வேற்றுமை; விளி - எட்டாம் வேற்றுமை.*
*இடை ஆறு - இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை முடிய*
*அமைந்த ஆறு வேற்றுமைகளும்.*

*எ-டு: நிலங்கடந்தான் (ஐ)*
*தலைவணங்கினான் (ஆல்)*
*சாத்தன் மகன் (கு)*
*ஊர் நீங்கினான் (இன்)*
*சாத்தன் பெட்டி (அது)*
*குன்றக் கூகை (கண்)*

*எழுவாய் - பெயர் (முதல் வேற்றுமை) - கண்ணன்*
*பெயர் விளியாதல் - எட்டாம் வேற்றுமை - கண்ணா*

## 118. உருபும் பயனும் உடன் தொக்க தொகை

உருபொடு பயனிலை, உடன் தொக்கு வருமே

***(உ-ம்)*** *தொக்கு-தொகுத்து, உருபு மறைதலே அன்றிப் பயனும் மறைந்து நிற்றல் உருபும் பயனும் உடன் தொக்க தொகையாம்.*

***எ-டு*** *அலை ஆழி - அலைகளையுடைய ஆழி.*

*பொற்குடம் - பொன்னால் செய்த குடம்.*

## 119. வினைத் தொகை

காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை (நன்.364)

***(உ-ம்)*** *கரந்த - மறைந்து நின்ற. இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் காலம் மறைந்து பெயரைத் தழுவி நிற்கும் எச்சம் வினைத் தொகையாம்.*

***எ-டு:*** *நனைசுவர் நனைந்த, நனைகின்ற, நனையும்*
*சுடு சோறு சுட்ட, சுடுகின்ற, சுடும்.*

## 120. பண்புத் தொகை

குணகுணிப் பெயர்க்கு இடை ஆகிய தொக்கும்
ஒரு பொருட்கு இருபெயர் வருவதும் குணத் தொகை

***(உ-ம்)*** *குணம்-பண்பு பண்புப் பெயரொடு பண்பை உடைய தாம் பெயர் அவற்றின் தொடர்பை உணர்த்தவரும் ஆகிய என்னும் உருபு மறைந்துவருவதும், ஒரு பொருளுக்குச் சிறப்புப் பெயர் பொதுப்பெயர் என்னும் இருபெயர் வருவதும் பண்புத் தொகையாம். வண்ணம் வடிவு அளவு சுவை ஆகியவை பண்பாகும்.*

***எ-டு:*** *செந்தாமரை - செம்மையாகிய தாமரை.*

*அவரைக் கொடி - அவரை சிறப்புப் பெயர்*

*கொடி பொதுப்பெயர்.*

*அவரை ஆகிய கொடி ஆகிய - உருபு.*

## 121. பண்புத்தொகைக்கு ஒரு சிறப்பு விதி

குணப்பொருள் செயப்படு பொருளோடு உருபும்
பயனும் உடன் தொக்கு வரும் அக் குணத்தொகை.

***(உ-ம்)*** *பண்புப் பொருள் செயப்படு பொருளொடு உருபும் பயனும் ஆகிய இரண்டும் மறைந்தும் அப்பண்புத் தொகை வரலுண்டு*

***எ-டு:*** *செங்கோல் - செம்மை ஆகிய தன்மையையுடைய கோல் (ஆட்சி)*

## 122. உவமைத் தொகை

உவமைக்கும் பொருட்கும் இடையினில் உருபும்
ஒப்புமை தொகலும் உவமைத் தொகையே.

***(உ-ம்)*** *உவமைக்கும் எடுத்துக் கொண்ட பொருளுக்கும் இடையே உவமை உருபு மறைந்து நிற்றலும் ஒப்புமைத் தன்மை மறைந்து நிற்றலும் உவமைத் தொகை. வினை பயன் மெய் உரு என்பவை பற்றி உவமை வரும்.*

*மழைக்கை - மழை போலும் கை*

*மழை போலக் கைம்மாறு கருதாத கொடை.*

*பவழவாய் - பவழம் போலும்வாய்.*

*பவழம் போலச் சிவந்த வாய்.*

## 123. உவம உருபுகள்

போலப் புரைய ஒப்ப உறழ
மானக் கடுப்ப இயைப ஏய்ப்ப
நேர நிகர அன்ன இன்ன
என்பவும் பிறவும் உவமத்து உருபே.

***(நன்னூல் 367)***

***(உ-ம்)*** *போல புரைய முதலியவும் பிறவாக வருவனவும் உவமையின் உருபுகளாம். நாட நளிய நந்த பொருவ என உவமை உருபுகள் பெருகிவரும்.*

## 124. உம்மைத் தொகை

எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்
எனும் நான்கு அளவையில் உம் இலது அத்தொகை. **(நன் 368)**

***(உ-ம்)*** *அளவை நால் வகையாம், அவை எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என்பவை. அளவைப் பெயர்களுள் உம்மை ஆகிய உருபு மறைந்து நிற்பன உம்மைத் தொகை.*

***எ-டு:***

*சேர சோழ பாண்டியர், பதினான்கு*

| | |
|---|---|
| *ஒன்றே கால்கிலோ*<br>*ஆறரை லிட்டர்*<br>*ஏழே முக்கால் மீட்டர்* | *இவை இக்காலத்தவை* |
| *கழஞ்சே கால்*<br>*கலனே துணி*<br>*சாண் விரலம்* | *இவை முற்காலத்தவை.* |

## 125. அன்மொழித்தொகை

ஐந்தொகைப் புறத்துப் பிறதொகல் அன்மொழி

***நன். 369***

***(உ-ம்)*** *வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத் தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்து அவை அல்லாத பிற மொழிகளாகிய உருபுகள் மறைந்து நிற்றல் அன்மொழித் தொகை ஆகும்.*

***எ-டு:*** *பூங்குழல் - பூவையுடைய குழலினை உடையாள். (வே.தொ)*

*தாழ்குழல் - தாழ்ந்த குழலினை உடையாள் (வி.தொ)*

*கருங்குழல் - கருமையான கூந்தலை உடையாள் (ப.தொ)*

*துடியிடை - துடிபோலும் இடையினையுடையாள் (உவ)*

*தகரஞாழல் - தகரமும் ஞாழலும் கலந்த சாந்து பூசியவள்* ***(உம்)*** *இவை வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை முதலியவாகக் கூறப்படும்.*

## 126. தொகாநிலைத்தொடர்

எழுவாய் விளிஈர்எச்சம் முற்று இடைஉரி
அடுக்கோடு ஆறுருபு ஆம்இவை தொகாநிலை.

*(உ-ம்)எழுவாய் விளி பெயரெச்சம் வினைஎச்சம் முற்று ஆகிய ஐவகைப் பொருளிடத்தும் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும் வேற்றுமைப் பொருளிடத்து அவற்றின் உருபாகிய இரண்டாவது முதலிய ஆறும் இடையே விரிந்து நிற்பப் பெயர் வினைகள் புணரும் புணர்ச்சியும் ஒரு சொல் அடுக்கிவரும் புணர்ச்சியும் ஆகிய ஒன்பதும் தொகாநிலைத் தொடராம்.*

*தொகா நிலை என்றதனால் காலம் கரந்த பெயரெச்சம் ஈண்டுக் கொள்க.*

*(எ-டு)*

1. *சாத்தன் வந்தான்*
2. *கொற்றா கொள்*
3. *உண்ட சாத்தன் நல்ல சாத்தன்*
4. *உண்டு வந்தான் உழுதன்றி உண்ணான்*
5. *உண்டான் சாத்தன் குழையன் கொற்றன்*
6. *அதுகொல் தோழி காமநோயே*
7. *நனிபே தையே நயனில் கூற்றம்*
8. *பாம்பு பாம்பு*
9. *குடத்தை வனைந்தான் வாளால் எறிந்தான்*
   *இரப்போர்க்கு ஈந்தான் மலையின் இழிந்தான் சாத்தனது*
   *கை மணியின் கண் ஒளி.*

### வழுவமைதி

## 127. வழுவிகற்பம்

திணையே பால் இடம் காலம் மரபு இவை
மயங்கி வரினே வழுஎனப் படுமே

*(உ-ம்) இருதிணையும் ஐம்பாலும் மூவிடமும் முக்காலமும் மரபும் ஆகிய இவை தாம் தாம் வருமாறு மாறி (மயங்கி) வருவது வழு என்று கூறப்படும்.*

**எ-டு:** *அவன் வந்தது - திணை வழு*
*அவன் வந்தாள் - பால் வழு*
*யான் வந்தான் - இடவழு*
*நாளை வந்தான் - காலவழு*

*யானை மேய்ப்பானை இடையன் என்பதும்*

*ஆடு மேய்ப்பானைப் பாகன் என்பதும் - மரபுவழு.*

*இவ்வைந்து வழுக்களோடு வினாவழு, விடைவழு என இரண்டையும் சேர்த்து வழு ஏழு என்பார் நன்னூலார்.*

"திணையே பாலிடம் பொழுது வினா இறை
மரபோம் ஏழும் மயங்கின் ஆம் வழுவே"

*என்பது அது (375) இறை - வினாவுக்கு விடையாக இறுப்பது இறை.*

## 128. திணை வழுவமைதி

இருதிணை விரவின இழிவினும் சிறப்பினும்
மிகலினும் ஒருதிணை முடிவின ஆகும்.

***(உ-ம்)*** *இருதிணையும் கலந்தனவாய் இழிவு சிறப்பு மிகல் என்பவற்றால் உயர் திணையொடு சேர்ந்து முடிக்கின் அவ்வுயர் திணையின் முடிவின ஆகும். அமைதி - ஏற்றுக் கொள்வது.*

**எ-டு:** *மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா - (இழிவு)*

*திங்களும் சான்றோரும் ஒப்பர் - (சிறப்பு)*

*மூத்தார் இளையார் பசுபத்தினிப்பெண்டீர் - (மிகுதி)*

## 129. திணை பால் வழுவமைதி

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால் திணை இழுக்கினும் இயல்பே

***(நன். 379)***

***(உ-ம்)*** *மகிழ்வு, உயர்வு, சிறப்பு, சீற்றம், இழிபு ஆகியவற்றில் பால் திணை மாறினாலும் ஏற்கப்படும். வழு எனினும் ஒப்புக் கொள்ளப்படுவது வழு அமைதி.*

*தன் புதல்வனை என் அம்மை வந்தாள் என்பது - உவப்பு*

*ஒருவனை அவர் வந்தார் என்பது - உயர்வு*

*தாதாய் மூவேழுலகுக்கும் தாயே என்பது சிறப்பு*

"எனைத்துணையர் ஆயினும் என்னாம் திணைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்" - செறல்

"நெட்டை மரமென நின்றார் பேடிப் புலம்பல்" - இழிபு.

*- இவை பால்வழு*

*ஒரு பசுவை 'என் அம்மை' என்பதும், பசுங்கிளியைப் பசுங்கிளி யார் என்பதும், 'தம்பொருள் என்ப தம் மக்கள்' என்பதும்*

"ஏவவும் செய்கலான் தான் தேரான் அவ்வுயிர் போமளவும் ஓர் நோய்"

*என்பதும், நாம் அரன் உடைமை என்பதும் முறையே திணைவழு.*

## 130. பால் இட வழுவமைதி

ஒருமையில் பன்மையும் பன்மையில் ஒருமையும்
ஓரிடம் பிற இடம் தழுவலும் உளவே (நன். 380)

***(உ-ம்)*** *ஒருமையில் பன்மையும், பன்மையில் ஒருமையும் வருதலும், ஓர் இடம் மற்றோர் இடத்தைத் தழுவி வருதலும் பால் இட வழு அமைதியாம்.*

***பால்:*** *வெயில் எல்லாம் மறைத்தது மேகம் - வெயில் - ஒருமை; எல்லாம்-பன்மை.*

*அஃதை தந்தை அண்ணல் யானை அடுபோர்ச் செழியர் - தந்தை ஒருமைப்பால்; செழியர் பன்மைப் பால்.*

*(அஃதை - திக்கற்றது; திக்கற்றவன்; செழியர் பன்மைப் பால்)*

*இரண்டு கண்ணும் சிவந்தது - இரண்டு பன்மை; சிவந்தது ஒருமை.*

***இடம்:*** *சாத்தன் தாய் இதைச் செய்வளோ?*

*-தன்மையில் படர்க்கை யாதல்*

*எம்பியை இங்குப் பெற்றேன் என்னனக்கு அரிய தாகும்?*

*-முன்னிலை படர்க்கையாதல்.*

### 131. கால வழுவமைதி

முக்காலத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழும் காலத் தானே (நன்னூல் 383)

***(உ-ம்)*** *தம் தொழில் இடையறாமல் மூன்று காலங்களிலும் ஒரு தன்மையை உடையனவாய் நிகழும் பொருள்களை நிகழும் காலத்தால் கூறுவர்.*

*மலை நிற்கிறது; தெய்வம் இருக்கின்றது.*

*ஆறு ஓடுகிறது. ஓடாதது தன் பெயரை அது கால் இழந்து விடுகிறது.*

### 132. இதுவும் காலவழுவமைதி

விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉம்முக் காலமும் ஏற்புழி (நன். 384)

***(உ-ம்)*** *விரைவினாலும் மிகுதியினாலும் தெளிவினாலும் இவையன்றி இயல்பினாலும் மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும் ஏற்ற இடத்தில்.*

***எ-டு:*** *விரைந்து செல்ல இருப்பான் உண்ணப் போவா னையும் உண்பவனையும் உண்டிலீரோ என்றால் - 'உண்டேன் உண்டேன்' என்பது, நிகழ் காலமும் எதிர்காலமும் இறந்த காலமாகச் சொல்லப் பட்டது. அக்காடு போனான் பறி கொடுத்தான் - எனல் மிகுதி பற்றி எதிர்காலம் இறந்த காலம் ஆயது. யாம் முன்பு விளையாடுவது இச் சோலை - இறந்த காலம் எதிர்காலம் ஆயது.*

### 133. மரபு

எப்பொருள் எச் சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே. (நன். 388)

***(உ-ம்)*** *எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எவ்வகையால் உயர்ந்தவர்கள் உரைத்தார்களோ அவ்வாறே அந்தப் பொருளை அந்தச் சொல்லால் அவ்வகையால் உரைப்பதே மரபு ஆகும். ஒரு மரத்தின் வித்து அதே மரத்தை வழிவழியாக வழங்குவது போன்றது ஆதலால் மரபு எனப்பட்டது.*

*எ-டு:*

| | |
|---|---|
| யாழ் மீட்டுதல் | சோறு உண்ணல், சாப்பிடுதல் |
| குழல் ஊதுதல் | நீர் குடித்தல், பருகுதல் |
| பறை அறைதல் | உலகு படைத்தல் |
| முரசு முழங்குதல் | நூல் இயற்றுதல் |
| கீரிப்பிள்ளை | பானை வனைதல் |
| முயல் குட்டி | கட்டடம் கட்டடல் |
| கோழிக் குஞ்சு | வலைபின்னல் |
| யானைக் கன்று | துணி நெய்தல் |
| மாஇலை | நாற்காலி செய்தல் |
| தென்னை ஓலை | தூண்டில் போடல். |

## 134. அடுக்குத் தொடர்

இரண்டு மூன்று நான்கு அடுக்கும் ஒருசொல்.

***(உ-ம்)*** ஒரு சொல் ஒருமுறை மும்முறை நான்குமுறை என அடுக்கி வரும். மகிழ்வு, வரவேற்பு, அச்சம் முதலிய வகையால் அடுக்குதல் இயல்பு.

வருக! வருக!

பாம்பு பாம்பு பாம்பு

ஐயோ ஐயோ ஐயையோ

செய்யுளில் ஓரடி அளவும் அடுக்கலாம். என்பதால்,

"புதுப்புது புதுப்புது புதுப்புதுப் புதுமைகளாய்"

என்று அடுக்கினார் பாரதியார். இன்னே வருக இன்னே வருக இன்னே வருக என்றான்; அதன்மேல் இலக்கணம் இன்மையால் என்றால் பெரும்பாவலர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார்.

## 135. இரட்டைக் கிளவி

இரட்டைக் கிளவி இரட்டில் பிரிந்து இசையா

***(நன். 396)***

**(உ-ம்)** கிளவி-சொல். இரட்டைச் சொல் இரட்டை இரட்டையாக அன்றி ஒற்றைப் பிரிந்து வாராது. வரின் பொருளற்றதாகிப்போகும்.

கணவன் மனைவியர் பிரியா வாழ்வினராக விளங்க வேண்டும் என்பதைப் பாவேந்தர்.

"இரட்டைக் கிளவிபோல் பிரியா வாழ்வினர்"

என்றார்.

எ-டு: குறு குறு நடந்து

சர சர, சல சல

## 136. ஒரு பொருள் பன்மொழி

ஒரு பொருள் பன்மொழி சிறப்பின்ன வழாஅ. (நன். 398)

**(உ-ம்)** ஒரு பொருளைக் குறித்துவரும் பல சொற்கள் அவ்வாறு வருதற்கோர் காரணம் இல்லை எனினும் சிறந்து நிற்பதால் அது குறைபாடு (வழு) உடையது என்று அறிவோர் நீக்கார்.

"உயர்ந் தோங்கு செல்வத்தான்"

"நாகிளங் கமுகு" நாகு - இளமை.

"மீமிசை" மீ - மேல்; மிசை - மேல்.

ஒரு பொருட் பன்மொழியை மீமிசைச் சொல் என்றும் சொல்வர். 'மீசை' வாய் இதழின் மேல் எழுந்த முடி, 'மீ மிசை' எனப்பட்டு இடையெழுத்துக் குறைந்தது.

## 137. இன இலக்கணம்

ஒரு மொழி ஒழி தன் இனம் கொளற்கு உரித்தே **(நன். 358)**

**(உ-ம்)** பெயர் வினை இடை உரி என்னும் நால்வகைச் சொற்களுள் ஒவ்வொன்று தன்னை நீங்கிநின்ற தன்தன் இனங்களைக் கொண்டு முடிதற்கு உரியதாகும்.

வெற்றிலை மென்றான் என்றால் பாக்கும் சுண்ணாம்பும் மென்றான் என்றும்

சோறு உண்டான் என்றால் விடுகறி தொடுகறி ஆகியனவும் உண்டான் என்றும்,

நஞ்சு உண்டவன் சாவான் என்றால், நஞ்சு உண்டவள், உண்டவர் உண்டது, உண்டவை சாம் என்றும் இனம் தழுவும்.

## 138. இலக்கணை

பெயர்வினை ஒன்றற்கு ஏற்றுதல் இலக்கணை

***(உ-ம்)*** *பெயர் வினை ஆகியவற்றுள் ஒரு பொருளின் இலக்கணத்தை மற்றொரு பொருளுக்குத் தந்துரைப்பது இலக்கணை ஆகும்.*

*திரு வீற்றிருந்தது அழகு சிரிக்கிறது*

*கண்ணால் உண்டான், பருகினான்.*

## 139. எதிர்மறை இலக்கணை

எதிர் பொருள் கோடல் எதிர்மறை இலக்கணை

***(உ-ம்)*** *நேர் பொருள் அன்றி எதிர்மறைப் பொருளில் வரும் இலக்கணை எதிர்மறை இலக்கணை ஆகும்.*

*அக்கறை இல்லார் அவை தரும் விருந்தை ஆர்வமாய் உண்பரோ, பருகுவரோ, உண்ணார் பருகார்.*

*தூய்மையற்ற இடத்து அழகு கோலங் கொள்ளாது; அலங்கோலமே காட்சிதரும்*

# 7 புணரியல்

## 140. புணர்ச்சியின் பொது இலக்கணம்

மெய் உயிர் முதல் ஈறு ஆகிய சொற்கள்
தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்
பொருளில் புணர்வழி நிலைவரு மொழிகள்
இயல்பொடு விகாரத்து இணைவது புணர்ப்பே

***(நன். 151 தழுவல்)***

***(உ-ம்)*** *மெய்யையும் உயிரையும் முதலும் இறுதியுமாக உடைய சொற்கள், தன்னொடு தானும் பிறிதொடு பிறிதுமாக அல்வழிப் பொருளிலாவது வேற்றுமைப் பொருளிலாவது பொருந்து மிடத்து நிலைமொழியும் வருமொழியும் இயல்போடாவது விகாரத் தோடாவது பொருந்துவது புணர்ச்சியாகும்.*

*மெய் உயிர் முதல் ஈறு; மெய் முதல் மெய் ஈறு, உயிர் முதல்*

*உயிர் ஈறு, மெய் முதல் உயிர் ஈறு, உயிர் முதல் மெய்யீறு.*

## 141. வேற்றுமையும் அல்வழியும்

வேற்றுமை ஐ முதல் ஆறாம்; அல்வழி
தொழில்பண்பு உவமை உம்மை அன்மொழி
எழுவாய் விளி ஈர்எச்சம் முற்று இடைஉரி
அடுக்குத் தொடரென அவை ஈர் ஏழே

***(நன்.152)***

***(உ-ம்)*** *வேற்றுமைப் புணர்ச்சி ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு உருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டா யினும் வரச் சொற்கள் பொருந்தும் தொடர்ச்சியாம்; அல்வழிப்புணர்ச்சி வினைத் தொகையும் பண்புத்தொகையும் உவமைத்தொகையும்*

உம்மைத் தொகையும் அன்மொழித் தொகையும் எழுவாய்த் தொடரும் விளித் தொடரும் பெயரெச்சத் தொடரும் வினை எச்சத்தொடரும் தெரிநிலை வினைமுற்றுத் தொடரும் குறிப்பு வினை முற்றுத் தொடரும் இடைச் சொற்றொடரும் உரிச் சொற்றொடரும் அடுக்குத் தொடரும் எனச் சொற்கள் பொருந்தும் தொடர்ச்சி பதினான்காம்.

| வேற்றுமைத்தொகை | | | வேற்றுமை விரி |
|---|---|---|---|
| நிலங்கடந்தான் | ஐ | (2) | நிலத்தைக் கடந்தான் |
| கல் எறிந்தான் | ஆல் | (3) | கல்லால் எறிந்தான் |
| கொற்றன் மகன் | கு | (4) | கொற்றனுக்கு மகன் |
| மலைவீழ் அருவி | இன் | (5) | மலையின் வீழருவி |
| சாத்தன் கை | அது | (6) | சாத்தனது கை |
| குன்றக் கூகை | கண் | (7) | குன்றத்தின் கண் கூகை |

அல்வழி

| | | |
|---|---|---|
| கொல்யானை | - | வினைத்தொகை |
| கருங்குதிரை | - | பண்புத் தொகை |
| சாரைப்பாம்பு | - | இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகை நிலை தொடர் ஐந்து. |
| மதிமுகம் | - | உவமைத்தொகை |
| இராப்பகல் | - | உம்மைத்தொகை |
| பொற்றொடி | - | அன்மொழித் தொகை |
| சாத்தன்வந்தான் | - | எழுவாய்த் தொடர் |
| சாத்தாவா | - | விளித்தொடர் |
| வந்த சாத்தன் | - | பெயரெச்சத் தொடர் |
| வந்து போனான் | - | வினைஎச்சத்தொடர் |
| வந்தான் சாத்தன் | - | தெரிநிலை வினைமுற்றுத் தொடர் |
| பெரியவன் சாத்தன் | - | குறிப்பு வினைமுற்றுத் தொடர் |

| | | |
|---|---|---|
| மற்று ஒன்று | - | இடைச் சொற்றொடர் |
| நனிபேதை | - | உரிச்சொற்றொடர் |
| பாம்பு பாம்பு | - | அடுக்குத் தொடர் |

## 142. இயல்பும் விகாரமும்

தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்
மூன்றும் மேவலது இயல்பு ஆகும்மே.

***(உ-ம்)*** *எழுத்தாயினும் சாரியை ஆயினும் தோன்றுதலும் வேறுபடுதலும் கெடுதலும் என்ப விகாரம் ஆகும். இம் மூன்றும் பெறாதது இயல்பு ஆகும். விகாரம் மூன்றும் நிலைமொழி வருமொழிகளுடைய முதல்இடைகடை என்னும் மூன்றிடத்தும் ஏற்றபடிவரும்.*

***எ-டு:***

| | | |
|---|---|---|
| பூ+கொடி | = | பூங்கொடி |
| பல + தலை | = | பஃறலை |
| நிலம் + வலயம் | = | நிலவலயம் |
| ஆறு+பத்து | = | அறுபது |
| பல+பொருள் | = | பல்பொருள் |
| நாழி+உரி | = | நாடுரி |
| பனை+காய் | = | பனங்காய் |

## 143. திரிதலின் வகை

நிலைமொழி ஈறும் வருமொழி முதலும்
ஆயீர் இடத்தும் உடன்திரி யும்மே.

***(உ-ம்)*** *முன்னே சொல்லிய திரிதலுடன் நிலைமொழி இறுதியும் வருமொழி முதலுமாக இரண்டு இடங்களிலும் செய்யுள் வழக்கில் திரிவதும் உண்டு.*

***எ-டு:*** ***ஓதி*** *முது போத்து - ஓந்தி*
***மரை****இதழ் - தாமரை*
***நீல்*** *உண்நுகில் - நீலம்*

## 144. செய்யுள் விகாரம்

வலித்தலும் மெலித்தலும் நீட்டலும் குறுக்கலும்
விரித்தலும் தொகுத்தலும் செய்யுளில் வருமே. (நன். 155 தழுவல்)

***(உ-ம்)*** *வலிக்கும் வழி வலித்தல், மெலிக்கும் வழி மெலித்தல், நீட்டும் வழி நீட்டல், குறுக்கும் வழி குறுக்கல், விரிக்கும் வழி விரித்தல், தொகுக்கும் வழி தொகுத்தல் என்னும் விகாரங்கள் ஆறும் செய்யுளில் வரும்.*

*குறுந்தாள் பூதம் - குறுத்தாள் பூதம்*
*தட்டையின் - தண்டையின்*
*பொத்தறார் - போத்தறார்*
*தீயேன் - தியேன்*
*விளையுமே - விளையும்மே*
*சிறிய இலை - சிறியிலை*

## 145.உடம்படுமெய்

இஈ ஐமுன் யகரமும், ஏனை
உயிர்முன் வகரமும், ஏமுன் இவ்விரண்டும்
உயிர்வரின் உடம்படு மெய்யெனத் தோன்றும்

***(உ-ம்)*** *இகர ஈகார ஐகாரங்களின் முன்வரும் யகரமும் ஏ ஒழிந்த மற்றை எட்டு உயிர்களின் முன்வரும் வகரமும், ஏகாரத்தின் முன் வரும் யகர வகரங்களும் உடம்படு மெய் எனப்படும்.*

*நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய், உடம்படுமெய்.*

***எ-டு:***

*மணி, தீ, பனை முன் அழகிது, அழகு*
*விள, பலா, கடு, பூ, நொ, கோ, கௌ முன் அழகிது, அழகு.*
*அவன்+ஏ+அழகன் = அவனே யழகன்.*
*சே+உழுதது = சேவுழுதது.*

## 146. வினாச்சுட்டின் முன் நாற்கினம்

முச்சுட்டு எகர வினாத்தனிக் குறில்முன்
உயிரும் யகரமும் எய்தின் வகரமும்
பிறவரின் அவையும், பாட்டில் சுட்டு
நீளின் யகரமும் தோன்றுதல் நெறியே.

*(உ-ம்) அ, இ, உ என்னும் மூன்று சுட்டுகளின் முன்னும் எ என்னும் வினாவின் முன்னும் உயிர் எழுத்துகளும் ய என்னும் உயிர்மெய்யும் வரின் வகரம் வருதலும், பிற எழுத்துகள் வரின் வந்த எழுத்தே வருதலும் செய்யுளில் சுட்டு நீளின் யகரமும் தோன்றும்.*

*எ-டு:*

*அ+அணி; இ+அணி; உ+அணி; எ+அணி = இவ்வணி; உவ்வணி; எவ்வணி*

*அ+ஆனை; இ+ஆனை; உ+ஆனை; எ+ ஆனை = அவ்வானை, இவ்வானை, உவ்வானை; எவ்வானை*

*எ+குதிரை, எ+படை; எ+மனை; எ+ஞாலம் = எக்குதிரை*

*எப்படை; எம்மனை; எஞ்ஞாலம்*

*ஆ+இடை = ஆயிடை.*

## 147 உகரமுன் உயிரும் யகரமும்

உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்;
யவ்வரின் இய்யாம்;முற்று மற்று ஒருசில
உயிர்வரின் உடம்படு மெய்பெறு தலுமாம்.

*(உ-ம்) குற்றியலுகரத்தின்முன் உயிர்முதன்மொழி வந்தால் உகரம் தன் மெய்யைவிட்டு விட்டு நீங்கும்; யகரம் வந்தால் இகரமாகும்; முற்றியலுகரமும் ஒரு சில அவ்வாறேயாம்; உயிர் வருமாயின் உடம்படு மெய்பெறு தலுமாம்.*

*எ-டு: நாகு, எஃகு, வரகு, கொக்கு, குரங்கு, தெள்கு + அரிது; அருமை.*

*நாகரிது, நாகருமை; எஃகரிது, எஃகருமை.*

*நாகு + யாது = நாகியாது*

*கதவு + அழகிது = கதவழகிது; அது + ஐ = அதை*

*அழைப்பது + ஏ = அழைப்பதே; அழைப்பதுவே*

## 148. உயிர் இறுதிமுன் வல்லினம்

இயல்பு விதியீற்று உயிர்முன் கசதப
சிலமிகும் சிலமிகா இருவழிக் கண்ணும்

***(உ-ம்)*** *இயல்பினாலும் விதியினாலும் இறுதியாக நின்ற உயிர்களின் முன் வரும் க, ச, த, ப - க்கள் பெரும்பாலும் மிகும்; மிகாதன சிலவும் உண்டு.*

***எ-டு:*** *நம்பிக்கொற்றன், சாத்திப்பெண், விளக்குறிது, தீப்பெரிது, ஒற்றைக்கை, வட்டக்கல் விளக்கோடு, பலாக்காய், இனிச்செய்வேன், மற்றைத்தெரு, தவப்பெரியன், நொக்கொற்றா.*

## 149. வேற்றுமைத் தொகை

இரண்டு மூன்று ஐந்து இஐ அலவொடு
நான்கு ஆறு அஃறிணைத் தொகைமிகும், பொதுப்பெயர்
உயர்திணைத் தொகைமிகா ஏழ்சில வேமிகும்
உடன்தொகு தொகைமிகும் ஒருங்கென மொழிப.

***(உ-ம்)*** *வேற்றுமைப் புணர்ச்சி ஐ ஆல் கு இன் அது கண் என்னும் ஆறு உருபுகளும் மறைந்தாயினும் வெளிப்பட்டா யினும் வரச் சொற்கள் பொருந்தும் இகர ஐகார ஈற்று அஃறிணைப் பெயர்முன் வல்லினம் அல்வழியினிடத்து வருமாயின் இயல் பாதலும் மிகுதலும் ஒன்றற்றே ஒருகால் மிக்கும் ஒருகால் மிகாதும் வரும்.*

*வினைத்தொகை பண்புத்தொகை உவமைத் தொகை உம்மைத் தொகை அன்மொழித் தொகை முதலிய ஐந்து தொகைகளும், உருபும் பயனும் உடன் தொக்க தொகையும் மிகுந்து வரும்.*

***எ-டு:***

*வேற்றுமைப் புணர்ச்சி முன்னர்க்காட்டப்பட்டது.*

*பருத்தி குறிது, யானை கரிது;*

*மாசித் திங்கள், சாரைப்பாம்பு;*

*கிளி குறிது, தினை குறிது; கிளைக்குறிது, தினைக் குறிது.*

*எரி சுடர் - எரிந்த, எரிகின்ற, எரியும் - சுடர் (வினை)*

*செம்பொருள் - செம்மைப் பொருள் (பண்பு)*

*உரல் அடி - உரல் போலும் அடி(உவமை)*

*தென்னை பனை - தென்னையும் பனையும் (உம்மை)*

*பொற்றொடி - பொன்னாலான தொடியணிந்தாள் (அன்மொழி)*

*அலை ஆழி - அலையை உடைய ஆழி (உருபும் பயனும்)*

## 150. வேற்றுமை உருபு

இரண்டு நான்கு ஏழ்உயிர் உருபு அல மிகாவே.

***(உ-ம்)*** *இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை ஆகியவை உருபுமிகுதலை அன்றிப்பயன் மிகாது. இரண்டாம் வேற்றுமையாகிய உயிர் உருபு பயன் மிகவும் பெறும்.*

***எ-டு:*** *பாலைக் கறந்தான்*

*எனக்குத் தந்தான்*

*வீட்டின் கண் சென்றான்*

*பாலை யுடைய பசு.*

*'ஐ' உருபு 'உடைய' பயன்*

## 151. அல்வழித்தொடர்

எழுவாய் குணத்தொகை பெயர்ஒப் போடு இடைச்
சொல்மிகும்; உம்மை முற்று அன்மொழி வினைத்தொகை
இ ஐ எழுவாயோடு இயல் ஆ ஊ
மிகும்; ஒருங்கு; உரிச்சொல் மிகும்; சில சிலமிகா.

***(உ-ம்)*** *எழுவாய், பண்புத்தொகை, உவமைத்தொகை, இடைச்சொல் ஆகியவற்றின் முன் வல்லெழுத்துமிகும், உம்மை, முற்று, அன்மொழி, வினைத்தொகை, இகர ஈறு, ஐகார ஈறு, எழுவாய், ஆகார ஊகார ஈறு உரிச்சொல் ஆகியவைமிகும்; சில மிகா.*

நூற்பா 149 உரைவிளக்கம் காண்க.

| | |
|---|---|
| கிளிக்குறிது, சிறிது | எழுவாய் |
| தினைக்குறிது, சிறிது | எழுவாய் |
| காவிக்கண், சாரைப்பாம்பு | பண்பு |
| ஆகுறிது, சிறிது | ஆ |
| மாகுறிது, சிறிது | மா |

கேண்மியா கொற்றா

உண்ணாக் குதிரை

புளிக் கறி, புளிங்கறி

நனி தின்றான்

சாலச் சிறந்தது

மாசித் திங்கள்

மாரி காலம், மாரிக்காலம்

கோடை காலம், கோடைக்காலம்

ஆதி பகவன், ஆதிப்பகவன்

## 152. பெயரெச்ச வினைஎச்சத்தொடர்கள்

செய்த செய்யிய செய்யியர் செய்யா
செய்யூச் செய்தெனச் செயகுறிப் பொடுமிகும்
செய்து என் எச்சம் சில மிகும் சிலமிகா

***(உ-ம்)*** இவ்வெச்சங்கள் வல்லினமுதல் மொழிவரும் போது, மிகுதலும் சில மிகாமையும் உண்டு. செய்து செய்பு செய்யா செய்யூ செய்தென என்பன சிறந்த காலம் காட்டும். செய என்பது நிகழ்காலம் காட்டும்; செயின் செய்யிய செய்யிய என்பவை எதிர்காலம் காட்டும் என்பது நன்னூல். மேலும் வான், பான், பாக்கு என்பனவும் வினை எச்சங்கள் என்று கூறும்.

அவன், செய்வான், உண்பான், உண்பாக்கு - வந்தான்

செய்த- உண்ண ; காண

செய்யிய-உண்ணிய ; காணிய

செய்யியர்-உண்ணியர் ; காணியர்

செய்யா - உண்ணா ; காணா

செய்யூ - உண்ணூஉ ; கானூஉ

செய்து - உண்டு ; கண்டு

செய்தென-உண்டென ; கண்டென

செய - உண ; காண்

## 153. அடுக்குத் தொடர்

தனிநெடில் அடுக்குத்தொடர் அலது இயல்பே

**(உ-ம்)** தனிநெடில் அடுக்குத்தொடர் (வல்லினம்) மிகும்; அஃதல்லாதது வருமொழி வல்லினம் எனினும் மிகாது.

போப் போப் போ - வல்லினம்

பேப் பேப் பே - வல்லினம்

சீச் சீச் சீ - வல்லினம்

வா வா வா - இடையினம்

ஞா ஞா ஞா - மெல்லினம்

சொல்லடுக்கு: பாம்பு பாம்பு பாம்பு

## 154. ஏவல் முன்னிலை வினை-வினா- விளிப்பெயர்கள்

ஈற்றுயா வினாவிளிப் பெயரோடு ஏவல்
முன்னிலை வினையுயிர் முன்வலி இயல்பே.

**(உ-ம்)** இறுதியில் வரும் யா வினைப்பெயர், விளிப்பெயர் ஏவல்முன்னிலை முன் வரும் வல்லினம் மிகாது இயல்பாகும்.

நீயா கொண்டாய் கண்ணனா பார்த்தான் - வினா

தம்பி போ அண்ணா படியுங்கள் - விளி

| | |
|---|---|
| படி தம்பி போ கந்தா | - ஏவல் |
| உண்க பெரியீர் உண்டி சாத்தா | - முன்னிலை |

## 155. ஓரெழுத் தொருமொழி

வினைகொள் ஐமுன்னிலைப் பெயர்ஒழி ஓரெழுத்து
ஒருமொழிப் பெயரொடு நொது மிகும் வினைமிகா.

***(உ-ம்)*** *தொழில் ஏற்கும் ஐ முன்னிலைப் பெயர் ஒழிந்த ஓரெழுத்து ஒருமொழிப் பெயரும், நொ, து என்னும் குற்றெழுத்தும் வருமொழி முதலில் வல்லினம் வரின் மிகும்; வினையாயின் மிகாது.*

*வினைகொள் ஐ. தை, நை, வை.*

*தை கொற்றா, நை கொற்றா, , வை கொற்றா.*

| | |
|---|---|
| ஆப் பெரிது | காக்குளிர்ச்சி |
| ஈச் சிறிது | சீப்போ |
| ஊக் கூறு | கூக் குரல் |
| ஐப் பெரியா | கைச் சிறகு |
| ஓப் பலகை | கோக் கண்டன் |
| நொக் கொற்றா | |
| துக் கொற்றா | |

## 156. வினைச்சுட்டு விகற்பப் பெயர்

வினாச்சுட்டு விகற்பப் பெயர்முன் வலிமிகும்.

***(உ-ம்)*** *வினாப் பெயர் , சுட்டுப் பெயர், அவற்றின் வேற்று வடிவப் பெயர்கள் ஆகியவற்றின் முன் வரும் வல்லினம் மிகும்.*

| | |
|---|---|
| எ, அ, இ | - எக்குதிரை, அக்குதிரை, இக்குதிரை |
| எந்த, அந்த, இந்த | - எந்தக் குதிரை அந்தக்குதிரை இந்தக்குதிரை |
| எங்கு, அங்கு, இங்கு | - சென்றான் |
| யாங்கு, ஆங்கு, ஈங்கு | - சென்றான் |
| யாண்டு, ஆண்டு, ஈண்டு | - சென்றான் |

### 157. பல சில

பலசில எனுமிவை தம்இன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அழிவொடு றவ்வாம்

***(உ-ம்)*** *பலசில என்னும் இவை, தமக்குமுன் தாம்வரின் இயல்பாதலும் மிகுதலும் இறுதி அழிந்து றவ்வாதலும் உண்டு.*

| | | |
|---|---|---|
| *பலபல* | - | *இயல்பு* |
| *பலப்பல*<br>*பல்லபல* | } | *மிகல்* |
| *பற்பல* | - | *றகரமாதல்* |
| *சில சில* | - | *இயல்பு* |
| *சிலச்சில*<br>*சில்லசில* | } | *மிகல்* |
| *சிற்சில* | - | *றகரமாதல்* |

### 158 உவமம்

பெயர்க்குறை உவமம் மிகா; மிகும் வினைக்குறை.

***(உ-ம்)*** *குறையாவது குறைச் சொல்லாம் எச்சச் சொல், பெயரெச்சம், வினைஎச்சம், பெயரெச்ச உவமம் மிகாது; வினை எச்ச உவமம் மிகும்.*

*புலிபோல் கொற்றன்*

*புலிபோன்ற கொற்றன்*

*புலி போலப் பாயுங் கொற்றன்*

### 159. ஆகிய ஆன ஆக

ஆகிய ஆனமுன் மிகா; ஆக முன் மிகும்

***(உ-ம்)*** *ஆகிய ஆன என்றும் இறுதிகளின் முன்வரும் வல்லினம் மிகா; ஆக என்னும் இறுதி முன் வரும் வல்லினம் மிகும்.*

| | |
|---|---|
| *விளைவாகிய கழனி* | *நிறைவாகிய கல்வி* |
| *விளைவான கழனி* | *நிறைவான கல்வி* |
| *சரியாகக் கூறு* | *செவ்வையாகச் சொல்.* |

### 160. படி- ஈறு

வினாச்சுட்டுப் படிமிகும்; வினைப்படி மிகாவே

*(உ-ம்)* வினாவொடு கூடிய படி என்பதும், சுட்டொடு கூடிய படி என்பதும் வருமொழி வல்லினமாயின் மிகும். வினையொடு வரும் படி அவ்வாறு மிகாது.

| | |
|---|---|
| எப்படிப் பார்த்தாய் | அப்படிக் கேட்டான் |
| எப்படித் தந்தான் | இப்படிச் சொன்னான் |
| வரும்படி | கேட்டான் |
| போம்படி | கூறினான் |

### 161. முற்றுகர ஈறு

எண், சுட்டு இறுதிமுற் றுகரமுன் இயல்பே

*(உ-ம்)* எண்ணின் முன்னும் சுட்டு முன்னும் வரும் முற்றி யலுரங்களின் முன்வரும் வல்லினம் மிகாமல் இயல்பாகும்.

ஒரு புத்தகம்

இரு கண்கள்

அது புத்தகம்

இது புத்தகம்

### 162. குற்றியலுகரத்தின் முன் வல்லினம்

ஏவல் வினைத்தொகை யொடுவன் தொடர் அல
இரண்டு மூன்றைந்து ஏழோடு எழுவாய்
எண் பண்பு உம்மைத் தொகையொடு வினைகொள்
உவமை அலவோடு உடன்தொகு தொகைமிகும்.

*(உ-ம்)* ஏவல், வினைத் தொகை முதலியவற்றுக் குற்றிய லுகரங்களின் முன் வரும் வல்லினம் இயல்பாதலும் மிகுதலும் ஆகும்.

ஓடு சாத்தா

தேடு பொருள்

வண்டு போகும்
மார்பு பெரிது
வயிறு பெரிது
இரண்டு காய்
மூன்று பழம்
சிவப்புக் கல்
களிறு பிடி

**163 டறவொற்று இரட்டல்**

*நெடில் உயிர்க் குற்றுக ரங்களுள் டறவொற்று*
*இரட்டும் இருவழி யினும்வலி மிகும்.*

*(உ-ம்) நெடிலொடுகூடிய உயிர்க்குற்றுகரத்தில் வரும் ட,ற ஒற்றுகள் இரட்டிக்கும். வேற்றுமை அல்வழி ஆகிய இருவழி களிலும் மிகுந்துவிடும்.*

| | | |
|---|---|---|
| ஆடு+கால் | = | ஆட்டுக்கால் |
| முயிறு+கால் | = | முயிற்றுக்கால் |
| காடு+அரண் | = | காட்டரன் |
| குருடு+கோழி | = | குருட்டுக் கோழி. |

**164 வன்தொடராதல்**

***மென்தொடர் மொழிசில வன்தொடர் ஆமே***

*(உ-ம்) மென்தொடார்க் குற்றியலுகரங்கள் சில. வன்தொடர்க் குற்றியலுகரங்கள் ஆதல் உண்டு.*

| | | |
|---|---|---|
| மருந்து + பை | = | மருத்துப் பை |
| வரம்பு + பக்கம் | = | வரப்புப்பக்கம் |
| குரங்கு +கை | = | குரங்குக்கை |

**165. மையீற்றுப் பண்புப் புணர்ச்சி**

ஈறு போதல் இடை உகரம் இய்யாதல்
ஆதி நீளல் அடி அகரம் ஐ ஆதல்
தன் ஒற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்
இனமிகல் இளையவும் பண்பிற்கு இயல்பே. (நன். 136)

*(உ-ம்)* இறுதியில் உள்ள மைவிகுதி கெடுதலும் நடுநின்ற உகரம் இகரம் ஆதலும் முதல் நின்ற குறில் நெடிலாதலும் முதல் நின்ற அகரம் கைாரம் ஆதலும் தன் மெய் மிகுதலும் முன் நின்ற மெய் வேறொரு மெய் ஆதலும வரும் எழுத்திற்கு இனஎழுத்துமிகுதலும் இவைபோல்வன பிறவும் பண்பிற்கு இயல்பாகும்.

| | | |
|---|---|---|
| நல்லன் | - | நன்மையின் மைவிகுதி கெட்டது. |
| கரியன் | - | கருமையின் மைவிகுதி கெட்டு நடுநின்ற உகரம் இகரம் ஆகியது. |
| பாசி | - | பசுமையின் மை விகுதி கெட்டு, முதல் நீண்டது. |
| பைந்தார் | - | பசுமையின் மைவிகுதியும் நடுநின்ற உயிர்மெய்யும் கெட்டு, வரும் எழுத்திற்கு இனஎழுத்து மிகுந்து முதலாவது இருந்த அகரம் ஐகாரம் ஆகியது. |
| வெற்றிலை | - | வெறுமையின் மைவிகுதி கெட்டுத் தன் ஒற்று இரட்டியது. |
| சேதாம்பல் | - | செம்மையின் மைவிகுதிபோய் ஆதி நீண்டு முன் நின்ற மகரமெய் தகராமெய்யாகத் திரிந்தது. |

## 166. மெய்ம்முன் உயிர்

உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே (நன். 204)

*(உ-ம்)* மெய்யெழுத்துகளின் முன்வரும் உயிரெழுத்துக் கூடி நிற்பது இயற்கையாகும்.

| | | |
|---|---|---|
| கல்+உளி | = | கல்லுளி |
| மாண்+அவை | = | மாணவை. |
| வாள்+எங்கே | = | வாளெங்கே. |

## 167. குற்றொற்று இரட்டல்

குற்றொற்று உயிர்வரின் இரட்டும் என்ப.

*(உ-ம்) குறில்முன் வரும் ஒற்றெழுத்துமுன் உயிர்வரின் இரட்டுதல் ஆகும்.*

| | | |
|---|---|---|
| *கல் + எறி* | = | *கல்லெறி* |
| *மண் + எடு* | = | *மண்ணெடு* |
| *தன் + ஆடை* | = | *தன்னாடை* |

## 168. மகரவீறு (கெடுதல், திரிதல்)

மவ்ஈறு அழிந்து உயிர் ஈறோடு இனமாம்

***(உ-ம்)*** *மகர ஈற்றின் முன் உயிர் வந்தால் மகர ஈறு அழிந்து வருமொழியின் இன எழுத்தாகும்.*

| | | |
|---|---|---|
| *மரம்+சிறிது* | = | *மரஞ்சிறிது* |
| *மரம்+பொந்து* | = | *மரப்பொந்து* |
| *வனம் + காடு* | = | *வனக்காடு* |

## 169. னண லள யர ஈறுகள்

னணலள யரபொது உயர்திணைப் பெயர் இரு
வழியினும் இயல்;சில விகாரமாம் உயர்திணை

***(உ-ம்)*** *ன ண ல ள யர ஈறுகளைக் கொண்ட பொதுப் பெயர் உயர்திணைப் பெயர் ஆகியவை அல்வழி வேற்றுமை ஆகிய இருவழிகளிலும் இயல்பாகும். உயர்திணையில் சில விகாரமாகும்.*

| | |
|---|---|
| *ஆண் பெரிது* | *ஆண்கை* |
| *தாய் பெரிது* | *தாய்கை* |
| *அரசன் பெரியன்* | *அரசன் கை* |
| தோன்றல் பெரியன் | தோன்றல் கை |
| வேள் பெரியன் | வேள்கை |
| *அரசர் பெரியர்* | *அரசர் கை.* |

*அரசன்+கண்டு=அரசற் கண்டு; அரசனைக்கண்டு*
*மகள்+பேறு= மகட்பேறு; மகளைப் பெறுதல்.*

### 170 யரழ ஈறு (இயல்பும் மிகுதியும்)

யரழ எழுவாய் வினைத்தொகை உம்மையொடு
ஏவல் முன்னிலை இரண்டு மூன்று ஐந்து ஏழ்
மிகா; பண்பு உவமை வினைக்குறை நான்கு
ஆறோடு உடன் தொகை மிகும்; ஒரு சில இனமிகும்.

*(உ-ம்) யரழ ஒற்றின் இறுதியுடைய எழுவாய் வினைத் தொகை உம்மைத் தொகை ஏவல் முன்னிலை இரண்டு மூன்று ஐந்து ஏழ் ஆகிய வேற்றுமை மிகா; பண்பு, உவமை, வினைஎச்சம் நான்காம் ஆறாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை ஆகியவை மிகும்; ஒரு சில இனம் மிகும்.*

*சேய் கண்டான் - ய்*

*சேரர் கண்டர் - ர்*

*ஊழ் பெரிது - ழ்*

*காய் கதிர் - வினை*

*காய் கறி - உம்மை*

*பால் குடி - இரண்டாம் வே.*

*ஊர் சேர் - ஏழாம். வே.*

*வேய்குறிது; வேர்குறிது; யாழ் பெரிது;*
*மெய்க்கீர்த்தி, கார்ப்பருவம், பூழ்ப்பறவை.*
*நாய்க்கால், தேர்த்தலை, பூழ்ச் செவி.*

### 171 ன,ண ஈறு

### (திரிதலும் இயல்பும்)

னைக்கறில் நான்காறு ஒடு உடன் தொகு தொகை
ற ட ஆம்; அலவொடு பிறனண இருவழி
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே.

*(உ-ம்) மொழியியல் உணர்ந்தோர் ன,ண என்னும் குறில் ஒற்றுடன் புணர்ந்த நான்கு ஆறாம் வேற்றுமைத் தொகையில் ற, ட என ஆகும். அல்லாத பிறவற்றோடு வரும் ன, ண அல்வழி வேற்றமை ஆகிய இருவழிகளிலும் இயல்பாகும் என்பர்.*

*பொன்+தகடு = பொற்றகடு*

*கண்+களிறு = கட்களிறு*

*பொன் ஞாற்றி; நீட்சி; மீட்சி*

*பொன் கடிது; சிறிது, தீது, பெரிது*

*மண் கடிது; சிறிது, தீது, பெரிது*

## 172 ல,ள ஈறு

லளக்குறில் உருபுடன் தொகை பண்பு உவமை
றடவாம் எழுவாய் உறழும். ஏனை
லள பண்பு உவமை வினைக்குறை நான்குஆறு
அல இயல்; மெலிவரின் இருமையும் னணவாம்.

***(உ-ம்)*** *லகர ளகரமாகிய மெய் ஈறுகள் இரண்டும் வல்லினம் முன் வந்தால் வேற்றுமையும் ற, ட ஆகும். அல்வழிக் கண் றகார டகாரங்களுடன் உறழும். அல்வழி வேற்றுமை இருவழி யிலும் மெல்லினம் வரின் னகார ணகாரம் ஆகும். இடை யினம்வரின் இயல்பாகும்.*

*கல்+குறை = கற்குறை; கல் குறிது*

*முள்+குறை = முட்குறை; முள் குறிது*

*கல்+மாண்டது = கன்மாண்டது*

*முள்+மாண்டது = முண்மாண்டது*

*கல்+யாது = கல்யாது*

*முள்+யாது = முள்யாது.*

## 173 லள, னண முன் த, நக்கள்

லளக்குறில் ஆய்தம் ஆகும்; தவ்வரின்
ஏனை லளவும் னணவும் வருமொழித்
தநவும் நவ்வும் திரிந்தபின் கெடுமே

*(உ-ம்)* தனிக்குறிலின் பின்னின்ற லகர ளகர மெய்கள், அல்வழியான் தகரம் வரின் றகர டகரங்களாகத் திரிதல் அன்றி ஆய்தம் ஆகவும் பெறும். தனிக்குறில் சாராத லகர ளகர மெய்கள் அல்வழியில் வருமொழிக்கு முதலாய் வந்த தகரம் திரியுமிடத்துக் கெடுதலும், இருவழிக் கண்ணும் வருமொழிக்கு முதலாய் வந்த நகரம் திரியுமிடத்துக் கெடுதலும் ஆகும்.

கல்+தீது = கஃறீது

முள்+தீது = முஃடீது

வேல் + தீது = வேறீது

வாள்+தீது = வாடீது

தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன்

வேள்+நல்லன் = வேணல்லன்

## 174. வருமொழித் த நக்கள் திரிதல்

னலஇன் றனவும் ணளமுன் டணவும்
ஆகும் தநக்கள் இருவழி யினுமே.

*(உ-ம்)* னகர லகரங்களின் முன் வரும் தகரம் றகரமாம்; நகரம் னகரமாம். ண கர ளகரங்களின் முன்வரும் தகர நகரங்கள் டகரமும் ணகரமும் ஆகும்.

பொன்+தீது = பொன்றீது

கல்+தீது = கற்றீது

பொன்+நன்று = பொன்னன்று

கல்+நன்று = கன்னன்று

மண்+தீது = மண்டீது

முள்+தீது = முட்டீது

மண்+நன்று = மண்ணன்று

முள்+நன்று = முண்ணன்று

## 175. புறனடை

இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பும்
பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்க ளிடத்து
விரிந்தும் தொக்கும் வரும் ஐ உருபே.

***(உ-ம்)*** *ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு, இயல்பாக விகாரப்பட்டும், பொதுப் பெயர் உயர்திணைப் பெயர்களில் விரிந்தும் தொகுத்தும் வரும்.*

*நின்புறம் காப்ப - நிற்பறம் காப்ப*

*பெண் பெற்றாள் - பெண் பெற்றாள், பெட்பெற்றாள்*

*மகன் பெற்றான் - மகன் பெற்றான், மகற் பெற்றான்.*

# வடமொழிப்புணர்ச்சி

## 176. தீர்க்க சந்தி

அ ஆ இ ஈ உ ஊ வின்முன்
அவை அவை வரின் அந் நெடில்-தோன் றும்மே.

*(உ-ம்) அ ஆ இ ஈ உ ஊ என்பவற்றின்முன் அவ்வவ் வெழுத்துகள் வந்தால் அந்த நெடிலே தோன்றும்.*

| | | |
|---|---|---|
| *பத+அம்புயம்* | = | *பதாம்புயம்* |
| *சிவ+ஆலயம்* | = | *சிவாலயம்* |
| *கிரி+இந்திரன்* | = | *கிரீந்திரன்* |
| *கிரி+ஈசன்* | = | *கிரீசன்* |
| *குரு + உபதேசம்* | = | *குரூபதேசம்* |
| *மேரு+ஊர்த்துவம்* | = | *மேரூர்த்துவம்* |

## 177. குணசந்தி

அஆ வின்முன் இஈ உஊ
முறையே வரின் ஏஓதோன் றும்மே.

*(உ-ம்) அ, ஆ என்பவற்றின் முன் இ ஈ உ ஊ என்பவை முறையே வந்தால் ஏவும் ஓவும் தோன்றும்.*

| | |
|---|---|
| *சுர+இந்திரன்* | *=சுரேந்திரன்* |
| *சுர + ஈசன்* | *=சுரேசன்* |
| *பாத+உதகம்* | *= பாதோதகம்* |
| *ஞான+ஊர்ச்சிதன்* | *= ஞானோர்ச்சிதன்.* |

## 178. விருத்தி சந்தி

***அ ஆ வின்முன் ஏ ஐ ஓ ஔ***
***முறையே வரின் ஐ ஔ தோன் றும்மே.***

**(உ-ம்)** *அகர ஆகாரங்களின் முன் ஏ ஐ, ஓ, ஔ என்பவை வரின் முறையே ஐ ஔ என்னும் சந்திகள் தோன்றும்*

| | |
|---|---|
| லோக+ஏகன் | =லோகைகன் |
| சிவ+ஐக்கியம் | =சிவைக்கியம் |
| சலச+உதனம் | =சலசௌதனம் |
| திவ்விய+ஔடதம் | = திவ்வியௌடதம். |

# 8. யாப்பியல்

## 179. பா உறுப்பு

*எழுத்து அசை சீர் தளை அடிதொடை ஆறும்*
*பா உறுப் பாமெனப் பகர்ந்தனர் புலவர்.*

***(உ-ம்)*** *யாப்பின் உறுப்புகள் ஆறு ஆகும். அவை எழுத்து அசை சீர் தளை அடி தொடை எனப் புலவர் கூறுவர். எழுத்தால் அசையும் அசையால் சீரும் சீர்கள் கட்டுறலால் தளையும் தளை இயைதலால் அடியும், இரண்டு முதல் அடிகள் தொடுத்து நடையிடலால் தொடையும் பாவுறுப்புகளாம்.*

## 180. எழுத்தும் அசையும்

குறிலே, நெடிலே, குறில் இணை, குறில்நெடில்
தனித்தும் ஒற்றொடும் வரின் நேர் நிரைஎனும்
அசையாம் அவை நாள் மலர்வாய் பாடே.

***(உ-ம்)*** *குறிலும், நெடிலும், குறில் இணையும், குறில்நெடிலும் தனித்து வந்தாலும் ஒற்றொடு வந்தாலும் அவை நேரசை நிரையசை என்னும் பெயர்களைப் பெறும். நேர் என்பது நாள் வாய்பாடு; நிரை என்பது மலர் வாய்பாடு.*

*குறில்தனித்தும், குறில் ஒற்றடுத்தும், நெடில் தனித்தும், நெடில் ஒற்றடுத்தும் வருவன நேரசை. குறில் இணைந்தும், குறில் இணைந்து ஒற்றடுத்தும், குறில் நெடில் இணைந்தும், குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்தும் வருவன நிரையசை.*

*நேர், நிரை ஓரசையால் அமைந்தது; அதுவே சீராக நிற்பின் அசைச்சீர் எனப்படும்.*

## 181. ஈரசைச் சீர்

நேர் நேர் தேமா; நிரை நேர் புளிமா;
நிரைநிரை கருவிளம்; நேர்நிரை கூவிளம்
ஈரசைச் சீர் இயற் சீர்வாய் பாடே

*(உ-ம்)*

*நேர் நேர் தேமா; நிரை நேர் புளிமா;இரண்டும் மாச்சீர். நிறை நிரை கருவிளம்; நேர் நிரை கூவிளம்இரண்டும் விளச்சீர்.*

*ஈரசைகளால் அமைந்த இச்சீர்கள் இயற்சீர்கள் எனப்படும்.*

## 182 மூவசைச்சீர்

மாவிள முன்னர்க் காய்கனி அடையின்
வெண்பா வஞ்சி உரிச்சீர் ஆமே.

***(உ-ம்)*** *தேமா, புளிமா, கருவிளம் கூவிளம் என்பவற்றின் முன் ஒரு நேரசை வந்தால், தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங் காய், கூவிளங்காய் என்றும்.*

*தேமா புளிமா கருவிளம் கூவிளம் என்பவற்றின் முன் ஒரு நிரையசைவந்தால், தேமாங்கனி, புளிமாங்கனி,கருவிளங்கனி விளங்கனி என்றும் வாய்கூபாடு கூறப்படும்.*

*காய்ச்சீர் வெண்பா உரிச்சீர் ஆகும்*
*கனிச்சீர் வஞ்சி உரிச்சீர் ஆகும்.*

*(குறிப்பு)*

*ஓரசைச் சீர் இரண்டு, நேர், நிரை*

*ஈரசைச்சீர் நான்கு, மாச்சீர் 2. வினச்சீர் 2.*

*முவசைச்சீர் எட்டு, காய்ச்சீர் 4. கனிச்சீர் 4.*

*இவற்றின் மேல் அரிதாக நான்கசைச் சீர் வருதலும் உண்டு. அவை தண்பூ நான்கு; நறும்பூ நான்கு தண்ணிழல் நான்கு; நறுநிழல் நான்கு - ஆக 16.*

## 183 தளை: இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை

மாமுன் நிரையும் விளமுன் நேரும்
வருதல் இயற்சீர் பெண்டளை; காய்முன்
நேர்வரல் வெண்சீர் வெண்டளை யாமே;

*(உ-ம்) மாச்சீர் முன் வந்தாலும் விளச்சீர்முன் நேர்வந்தாலும் அவை இயற்சீர் வெண்டனை எனப்படும்.*

*காய்ச்சீர் முன் நேர் வந்தால் வெண்சீர் வெண்டளை எனப்படும். வெண்தளை என்பது வெண்பாவுக்கு உரியதளை.*

## 184. ஐவகை அடி

இருசீர் குறளடி; முச்சீர் சிந்தடி;
நாற்சீர் அளவடி; ஐஞ்சீர் நெடிலடி
அறுசீர் முதலாக் கழிநெடில் அடியே.

*(உ-ம்)*

*இருசீர் முதலாக விரிந்து வருவது அடியாகும்.*

*இருசீரால் வருவது, குறள் அடி,*

*முச்சீரால் வருவது, சிந்து அடி,*

*நாற்சீரால் வருவது, அளவு அடி,*

*ஐஞ்சீரால் வருவது, நெடில் அடி,*

*அறுசீர் முதலாக வருவன, கழிநெடில் அடி. கழி=மிகுதி.*

## 185 தொடை வகை

மோனை எதுகை முரண் இவை தொடையே

*(உ-ம்) தொடை = தொடுக்கப்படுவது.*

*தொடை மோனை, எதுகை, முரண் முதல் பலவகைப் படும். முதற்சீரொடு தொடுத்தும், முதல் அடியொடு தொடுத்தும் அவை வரும். சீரொடு தொடுத்தால் சீர் மோனை முதலாகவும், அடியொடு தொடுத்தால் அடி மோனை முதலாகவும் பெயர் பெறும். விளக்கம் மேல்வரும்.*

### 186. மோனை

முதல் எழுத்து ஒன்றுதல் மோனை ஆகும்.

***(உ-ம்)*** *சீர்முதல் எழுத்து, பிறசீர் முதல் எழுத்தாகவும், அடி முதல் எழுத்தாகவும் வருவது மோனை (சீர்மோனை, அடிமோனை) என வழங்கும்.*

*ஒன்றுதல் - பொருந்துதல்*

### 187. மோனைக்குக் கிளை எழுத்து

அகரமொடு ஆகாரம் ஐகாரம் ஔகாரம்;
இகர மோடு ஈகாரம் 'எ' - உகர மோடு
ஊகாரம் ஒஓ ஞந மவ தச்சகரம்
தோகாய் கிளை எழுத்தாச் சொல்.

***(உ-ம்)*** *அகரமோனைக்கு ஆகாரம் ஐகாரம் ஔகாரம் கிளை எழுத்தாக வரும்.*

*இகர மோனைக்கு ஈகாரம் எகரம் ஏகாரம் கிளை எழுத்தாக வரும்.*

*உகர மோனைக்கு ஊகாரம் ஒகரம் ஓகாரம் கிளை எழுத்தாக வரும்.*

*ஞகரத்திற்கு நகரமும், மகரத்திற்கு வகரமும், தகரத்திற்குச் சகரமும் மோனையாக வரும்.*

### 188. எதுகை

இரண்டாம் எழுத்து ஒன்றுதல் எதுகை.

***(உ-ம்)*** *ஒவ்வோர் அடியிலும் இரண்டாம் எழுத்து ஒத்து வருவது எதுகையாகும். (முதல் எழுத்து மாத்திரை அளவால் ஒத்திருத்தல் வேண்டும்) அடியை அன்றிச் சீர்களிலும் எதுகை வருதல் உண்டு.*

### 189. முரண்

மொழியினும் பொருளினும் முரணுதல் முரணே (தொல்.செய்.95)

*(உ-ம்) மொழி=சொல். சொல்லிலும் பொருளிலும் மாறுபடத் தொடுப்பது முரண் ஆகும்.*

"கருந்தலையன் வெண்ணிறத்தன்"

"இனிய கனி இன்னாதகாய்"

## 190 முற்றுத் தொடை

சீர்தொறும் தொடுப்பது முற்று எனப்படுமே

***(உ-ம்)*** *எல்லாச் சீர்களிலும் மோனை எதுகை முதலியன வருதல் முற்றுத் தொடை எனப்படும்.*

**எ-டு:** "கற்க கசடற கற்பவை கற்றபின்"

"அற்றது பற்றெனில் உற்றது முற்றும்"

## 191. பாவும் பா இனமும்

வெண்பா அகவல் கிலவஞ் சிக்கு
விருத்தம் தாழிசை துறைபா இனமே.

***(உ-ம்)*** *வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நான்கு பாக்களுக்கும் விருத்தம், தாழிசை, துறை என்பன இனமாம். பா நான்கும்" இனம் பன்னிரண்டும் என்க.*

## 192. வெண்பா

இயற்சீர் வெண்சீர் இருவகை வெண்டளை
பெற்று ஈற்றடிசிந்து ஏனை நேராய்
நாள்மலர் காசு பிறப்பு எனும் வாய்பாட்டு
டினில் இறும் வெண்பா என இயம் பினரே.

***(உ-ம்)*** *இயற்சீர் வெண்சீர் ஆகிய இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை என்பவற்றைப் பெற்று இறுதியடி முச்சீர் அடியாகவும் மற்றையடிகள் நாற்சீர் அடியாகவும் அமைந்து, நாள் மலர் காசு பிறப்பு என்னும் வாய்பாடுகளுள் ஒன்றால் முடிவது வெண்பா என இலக்கணர் கூறுவர்.*

*சிந்தடி=முச்சீர் அடி.*

*நாள்-நேர்; மலர்-நிரை*

காசு-நேர்நேர்; பிறப்பு-நிரைநேர்-இவைவாய்ப்பாடுகள். இறுதிச்சீர் வெண்பாவில் இவ்வாறு அமைதல் வேண்டும். காசு, பிறப்பு உகரத்தால் முடிதலால் அவ்வாறே உகரத்தால் அவ்விருவாய் பாடுகளும் அமைய வேண்டும்.

*எ-டு:* நாடு, உலகு, மேல்வரும் நூற்பா காண்க.

### 193. உகர ஈறு

நிரையசை உகரம் பிறப்பே குறிலொழி
நேரசை உகரம் காசு எனப்படுமே

**(உ-ம்)** நிரையசையுடன் உகரம் சேர்ந்துவருவது பிறப்பு என்னும் வாய்பாடு. குறில் வாராத நெடிலுடன் உகரம் சேர்ந்து வருவது காசு என்னும் வாய்பாடு.

உலகு = உல-நிரை; கு-உகரம் (பிறப்பு)
நாடு = நா-நேர்; டு-உகரம் (காசு)

### 194. வெண்பாவின் வகைகள்

ஓரடி முச்சீர் குறள்வெண் பாவே;
ஈரடி முச்சீர் சிந்தியல் வெண்பா;
மூவடி முச்சீர் அளவியல் வெண்பா;
நாலடி முச்சீர் முதலாப் பலஅடி
பெறுவது, பஃறொடை வெண்பா ஆமே

**(உ-ம்)** முச்சீர் என்பது இறுதியடி. அதாவது முடிவடி. ஓரடியும் முச்சீர் இறுதியடியும் சேரின் ஈரடி வெண்பா; அது குறள் வெண்பா. இவ்வாறே மூவடிவெண்பா சிந்தியல்; நாலடி வெண்பா அளவியல்; நான்கடிக்குமேல் ஐயடிகளும் அதற்கு மேலும் வருவன பலதொடை களையுடைய பஃறொடை வெண்பா. பல தொடை = பஃறொடை. இவற்றின் மேல் (பன்னீரடிகளுக்குமேல்) வருவன கலிவெண்பா.

### 195. நேரிசை இன்னிசை வெண்பா

இருகுறள் இணைந்திடை தனிச் சொல் பெறுவது
நேரிசை; பெறாதது இன்னிசை வெண்பா.

***(உ-ம்)*** *ஒரு குறல் வெண்பாவொடு மற்றொரு குறள் வெண்பாவும் இணைந்து, முதற்குறள் வெண்பாவின் முடிவின்பின் அக்குறள் வெண்பாவுக்கு ஏற்ற எதுகை அமைந்ததும், அடுத்த குறளொடு பொருள் தொடர்பாக வருவதும் நேரிசை வெண்பா. அவ்வெதுகை அமைப்புப் பெறாமல் தனிச் சொல்லாக மட்டும் வந்து பொருள் தொடர்புடைய பா, இன்னிசை வெண்பா ஆகும்.*

## 196. கட்டளைக் கலித்துறை

ஐஞ்சீர் கொண்ட அடிநான்கு ஆகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடை ஒரு சீரும் விளங்காய் ஆகிய
நேர்பதி னாறே நிரைபதி னேழ் என்று
ஓதினர் கலித்துறைக்கு ஓரடிக்கு எழுத்தே.

*(உ-ம்) ஐந்து சீர்களைக் கொண்ட நான்கடியால் வருவது கட்டளைக் கலித்துறை. கட்டயைாவது அளவு: சீர் தளை எழுத்து அளவு.*

*ஐந்து சீர்களில் முதல் நான்குசீர்கள் வெண்பாவின் தளைகளாகிய இயற்சீர் வெண்டளை வெண்சீர் வெண்டளை என்பவற்றில் பிழை படாமல் அமையும். ஐந்தாம் சீர் விளங்காய்ச்சீராக அமையும். நேர் அசையில் பாடல் தொடங்கினால் ஒற்று நீக்கிய எழுத்துகள் 16 ஆகவும், நிரை அசையில் தொடங்கினால் ஒற்று நீக்கிய எழுத்துகள் 17 ஆகவும் இருக்கும். இது கட்டளைக் கலித்துறை இலக்கணம் என்று புலவர்கள் கூறினர்.*

# 9. அணிஇயல்

## 197. உவமை அணி

*பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின்*
*உவமையும் பொருளும் புணர உருபோடு*
*ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை.*

*(உ-ம்) எடுத்துக் கூற வந்தது பொருள். அதற்கு ஒப்பானது உவமை. இவ் வுவமை பண்பாலும், தொழிலாலும், பயனாலும் அமையும். பண்பு = குணம் நிலம் வடிவம் சுவை என்பனவாம்.*

*எ-டு: பவழவாய் - பவழம் போலும் வாய் (பண்பு)*

*புலிப்பாய்ச்சல் - புலிபோலும் பாய்ச்சல் (தொழில்)*

*மழைக்கை - மழை போலும் கொடைக்கை (பயன்)*

## 198 உருவக அணி

*உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து*
*ஒன்றென மாட்டின் அஃது உருவகம் ஆகும். (தண்டி. 36)*

*(உ-ம்) எடுத்துக் கொண்ட பொருளும் அதற்குப் பொருந்தும் உவமையும் வேறு வேறு இல்லாமல் ஒன்றாக இணைத்துக் கூறப்படுவதாயின் அஃது உருவகம் எனப்படும்.*

*முத்துப்பல் - முத்துப்போலும் பல் (உவமை)*

*பல் முத்து - பல்லாகிய முத்து (உருவகம்)*

*தாமரை முகம் - தாமரைபோலும் முகம் (உவமை)*

*முகத் தாமரை - முகமாகிய தாமரை (உருவகம்)*

## 199. இல் பொருள் உவமை அணி

இல்பொருள் உவமித்தல் இல்பொருள் உவமை

***(உ-ம்)*** *உலகியலில் காணுவதற்கு இல்லாத ஒன்றை உவமையாகக் கூறுவது இல் பொருள் உவமையாகும்.*

"பொற்பூ நாற்றம் உடைத்து"

"திங்களுள் தீத் தோன்றி யற்று"

*பொன்னால் செய்யப் பட்டபூவுக்கு மணம் இல்லை! மண மும் கொண்டது போன்றது என்பது இல் பொருள் உவமை.*

*திங்கள் தண்மையானது. அதில் தீத் தோன்றியது என்பது இல் பொருளாகும். "சித்திரத்தின் அலர்ந்த செந்தாமரை ஒத்திருக்கும் முகம்" என்பதும் அது*

## 200. எடுத்துக் காட்டு உவமை அணி

உவமையும் பொருளும் தனிநிறீஇ உருபை
விடுத்துமே கூறல் எடுத்துக் காட் டுவமை.

***(உ-ம்)*** *உவமையையும் பொருளையும் தனித்தனியே நிறுத்தி, உவமைக்குரிய உருபை வெளிப்படாது மறைத்துக் கூறுதல் எடுத்துக் காட்டு உவமையாகும்.*

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

*எழுத்துகள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன. (அது போல) உலகம் ஆதிபகவனை முதலாக உடையது என்பதில் உருபு மறைந்து இருப்பதை எடுத்துக் காட்டிப் பொருத்துதல் காண்க.*

## 201.ஒருபுடை உருவகம்

இரண்டனுள் ஒன்றை உருவகித்து ஒன்றை
உருவகியாவிடல் ஒருபுடை உருவகம்

***(உ-ம்)*** *ஒருபுடை - ஒருபக்கம்; ஒரு பகுதி*

*ஓர் உருவகம் செய்யும் போது ஒரு பகுதியை உருவகித்து, மற்றொரு பகுதியை உருவகம் செய்யாது கற்பவர் கண்டு கொள்ள*

விடுவது ஒருபுடை உருவகம் ஆகும். இதனை ஏகதேச உருவகம் என்றும் கூறுவர். ஒரு மருங்கு உருவகம் என்பதும் அது.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

இதில் கருமமே கட்டளைக் கல் என்ற திருவள்ளுவர் பெருமை சிறுமை என்பவை மாற்றுயர்ந்த பொன், மாற்றுக் குறைந்த மற்றை மாழை (பொன்) என்பதைக் கூறாமல், கற்பார் கண்டு கொள்ள வைத்தமை காண்க.

## 202. தன்மை அணி, உயர்வு நவிற்சி அணி

ஒன்றன் தன்மையை உள்ளவாறு உரைப்பது
தன்மை மிக்குறைப் பதுஉயர்வு நவிற்சி.

*(உ-ம்)* ஒன்றன் தன்மையை உள்ளது உள்ளவாறு கூறுவது தன்மை நவிற்சி அல்லது இயல்பு நவிற்சி; உள்ளதன்மையை உயர்த்திக் கூறுவது உயர்வு நவிற்சி.

"***அரசறிய உரைசெய்ய அப்பூதி அடிகள்தாம்***
***கரகமல மிசைகுவிய கண்ணருவி பொழிந்திழிய***
***உரைகுழறி உடம்பெல்லாம் உரோமபுள கம்பொலியத்***
***தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரணகமலம் பூண்டார்***"-

***தன்மை நவிற்சி***

"***நாகிளம் கமுகின் வாளை தாவுறும்***" ***உயர்வு நவிற்சி***

## 203. தற்குறிப்பேற்ற அணி

இயல்பாய் நிகழுமொன்று இடையே புலவன்
தன் குறிப்பு ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்

***(உ-ம்)*** இயல்பாக நடக்கும் ஒன்றைப் புலவன் தன் குறிப்புக்கு ஏற்ப ஏற்றிக் கூறுதல் தற்குறிப்பேற்றம் ஆகும்.

"கொடிகள்,
வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட"

இயல்பாகக் காற்றில் ஆடும் கொடிகள் 'வாராதே' என்று தடுப்பனவாக ஆடுதல் என்பது புலவன்குறிப்பாம்.

## 204. சிலேடை அணி

ஒரு தொடர் பலபொருள் படுவது சிலேடை

***(உ-ம்)*** *ஒரு சொற்றொடர் ஒரு பொருள் தருவதற்கு மேல் இரண்டு மூன்று முதலிய பொருள் தருவது சிலேடையாகும். இரட்டுறல் என்பதும் அது. மூன்று பொருள் தரின் மூவுறல் ஆம்.*

***எ-டு:*** *தாமரைக் கண் 1) தாமரை போலும் கண்.*

*2) தாவும் மானின் கண்போலும் கண் தாம்+மரைக்+கண்*

*3) தாம் அரைக் கண்ணால் (கண்டனர்) தாம்+அரை+கண்.*

## 205. பிறிது மொழிதல் அணி

உவமையைக் கூறிப் பொருள்பெற வைத்தல்
பிறிது மொழிதல் அணியென மொழிப

***(உ-ம்)*** *உவமைப் பொருளைக் கூறி, உண்மைப் பொருளைக் காணுமாறு செய்தல் பிறிதுமொழிதல் அணியாகும்.*

"கடல் ஓடாக் கால்வன் நெடுந்தேர் கடல் ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து"

*கடலில் தேர் ஓடாது; கப்பல் நிலத்தில் ஓடாது என்று கூறுவதால் இடமறிந்து ஒவ்வொன்றையும் பயன்படுத்துதல் வேண்டும் என்பதைக் கூறுவது பிறிதுமொழிதலாம். ஒட்டணி என்பதும் இது.*

## 206 பின்வரு நிலையணி

முன்வரு சொல்லும் பொருளும் பன்முறை
பின் வருமாயின் பின்வரு நிலையே.

*(உ-ம்) முன்னேவந்த சொல் பன்முறை பின்னே வருதலும், முன்னே வந்த பொருள் பன்முறை பின்னே வருதலும் பின்வரு நிலையணியாகும்.*

செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

*செல்வம் என்னும் சொல் பன்முறை பின்னே வந்தது.*

"மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ"

*'நீலம் ' என்னும் பொருள் பன்முறை வந்தமை காண்க.*

## 207. வேற்றுமை அணி

உவமையும் பொருள் ஒற்றுமை கொளுத்தி
வேற்றுமை கூறுதல் வேற்றுமை அணியே.

***(உ-ம்)*** *உவமையையும் பொருளையும் ஒப்புமை உண்டாகக் கூறிப் பின்னர் அவற்றின் வேற்றுமை கூறுவது வேற்றுமை அணியாகும். "திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்; திங்கள் மறுவாற்றும்; சான்றோர் அஃதாற்றார்.*

## 208. வேற்றுப் பொருள் வைப்பணி

எடுத்ததை முடிக்க உலகறி பொருளொன்று
ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப் பொருள் வைப்பே"

***(உ-ம்)*** *எடுத்துக் கொண்ட ஒன்றைத் தெளிவு செய்தற்கு, உலகத்தார் அறிந்ததாம் ஒரு பொருளை அதன்மேல் ஏற்றிவைத்துக் கூறுவது வேற்றுப் பொருள் வைப்பாகும்.*

***உரைமுடிவு காணான் இளேமையோன் என்ற***
***நரைமுது மக்கள் வியப்ப - நரை முடித்துச்***
***சொல்லால் முறை செய்தான் சோழன் குலவிச்சை***
***கல்லாமல் பாகம் படும்.***

*கரிகாற் சோழன் இளையனாக இருந்தும் முதியவர் வியக்க முறை கூறினான். இச்செயல் அரசர் குடிவழிக்கு இயல்பாக உள்ள தன்மை யாகும். முன்னே கூறியது கரிகாலன் பற்றிய சிறப்புப் பொருள். பின்னே கூறியது உலகுக்குப் பொதுவான பொருள். சிறப்புப் பொருளை வற்புறுத்திக் கூறப்பொதுப் பொருளைக் கூறினார் ஆசிரியர்.*

## 209 வஞ்சப்புகழ்ச்சி அணி

பழிப்பிற் புகழும் புகழிற் பழிப்பும்
நெஞ்சுற மொழிவது வஞ்சப் புகழ்ச்சி

***(உ-ம்)*** *பழிப்பது போலப் புகழ்வதும், புகழ்வது போலப் பழிப்பதும் வஞ்சப் புகழ்ச்சி அணியாகும்.*

"உன் படைக் கலங்கள் ஆ ஆ! எவ்வளவு அழகாக உள்ளன!"

தொண்டைமானே, அதியமான் படைக்கலங்கள் கொல்லர் உலைக்களத்தில் ஒடிந்தும் மழுங்கியும் கிடக்கின்றன. என்று கூறினார் ஔவையார்.

தொண்டைமான் படைக்கலங்கள் போர்க்களம் போக வில்லை என்றும் அதியமான் படைக்கலங்கள் போர்க் களத்திலே விளங்கு கின்றன என்றும் புகழ்வது போலப் பழித்தும், பழிப்பது போலப் புகழ்ந்தும் கூறினார்.

## 210 காட்சியணி

இயற்கை நிகழ்ச்சி வேறொன்றன் இயல்பைக்
காட்டலாய் மொழிதல் காட்சி அணியே

***(உ-ம்)*** தொன்று தொட்டு நிகழ்ந்து வரும் ஒரு செய்தி மற்றொரு பொருட்கு நன்மையோ தீமையோ எடுத்துக் காட்டி விளக்குவதற்குப் பயன்படச் செய்வது. இவ்வணி காட்சியணி நிதர்சன அணி எனவும் படும்.

நிலவில் களங்கம் (கறை) இயல்பாக உள்ளது. அது சான்றோரி டத்துள்ள பிழை சிறிதாயினும் வெளிப்பட்டுவிடும் என்னும் கருத்தை வெளிப்படுத்துகிறது என்பது காட்சியணியாம்.

***தண்டி. 85.***

***இன்னூல் உரையொடும் முற்றும்***

★ ★ ★